ன்றும், இரத்தல் பெருத்த அவமானத்துக்கிடமென்றும் உணர்ந்து ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் அங்கங்கு தருமவைத்தியசாலைகளையும் கைத்தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி அவற்றிற்காகத் தம்மாலியன்றவரையில் மாதந்தோறும்மாவது வருஷந்தோறுமாவது பொருளுதவி செய்துகொண்டுவருகிறார்கள். முதலாவது வியாதியினாலாகிலும் அங்கஹீனமாய்ப் பிறந்ததினாலாகிலும் வயோகத்தினாலாகிலும் அசத்தனாய்த் தானே மெய்வருந்திப் பொருளீட்ட முடியாமையும், இரண்டாவது வேலைசெய்யச் சக்தியிருந்தும் வேலை கொடுப்பாரில்லாமையினால் பொருளீட்ட முடியாமையுமே ஒருவன் பிட்சை யெடுப்பதற்கு முக்கியகாரணங்கள். வியாதியஸ்தர்களுக்குத் தரும வைத்திய சாலைகளையும், வயோதிகர்கள் முதலிய அசக்தர்களுக்கு தரும சத்திரங்களையும், வேலை வேண்டுமென்பவர்களுக்குக் கைதொழிற் சாலைகளையும், ஏற்படுத்தி விட்டால் எவனும் சோம்பேறியாய் யாசிப்பதற் கிடமிராதல்லவா? ஆகவே மேற்கண்ட அற்புதமான ஏற்பாடுகள் அமையப்பெற்றிருக்கிற காரணத்தினாலே இங்கிலாந்தில் பிட்சைஎடுப்பது இராஜதண்டனைக்குள்ளாகத் தக்கதோர் குற்றமாகவும் எண்ணப்படுகிறது. இந்த அற்புதமான ஏற்பாட்டினால் இங்கிலாந்தில் எவனும் சோம்பித்திரிவதற்கு இடமில்லை. பொருளுள்ளவர்கள் மேற்கண்ட சாலைகளுக்கு உதவிசெய்து வருவதே பெருத்த தருமமாகும். தங்களுடைய தேசத்தில் வறியவர்களாயிருப்பவர்கள் யாசகத்தினால் அவமானமடையாதபடிக்கும், தாங்கள் இயன்றவரையில் தருமம் செய்யும்படிக்கும் அனுகூலமான மேற்கண்ட ஏற்பாடுகளை உண்டாக்கிய ஆங்கிலேயர்களுடைய மதியே மதி! இப்படியிருந்தும், இங்கிலாந்திலே ஒருகாலத்தில் நன்றாய்வாழ்ந்து கெட்ட உயர்ந்த குடும்பத்தைச்சேர்ந்த ஆண்பாலாரும் பெண்பாலாரும் கைத்தொழிற் சாலைமுதலிய இடங்களிற் சென்று கூலிவேலை செய்வது தங்களுக்குக் கௌரவதோஷத்தை உண்டாக்குமென்று நினைப்பாராகில், பிறரையாசிப்பது அதனிலும் கோடிமடங்கு அகௌரவமெனக்கருதி நெருப்புக்குச்சு சுருட்டு, பதுமைகள் முதலிய சுவல்ப விலையுள்ள பொருள்களை விற்பனை செய்பவர்களைப்போல் நடித்து, அப்பண்டங்கள் வாஸ்தவத்தில் எவ்வளவு விலைபெறுமோ அதற்கு எழெட்டுமடங்கு அதிகமாய் விலைகூறி வைத்துக்கொண்டிருப்பார்கள். இக்குறிப்பை அறிந்துகொண்டு பிரபுக்களும் கொடையாளிகளும் அப்பண்டங்கள் வாஸ்தவத்தில் தமக்கு வேண்டியிராவிடினும் அவற்றை அவர்கள் கூறும் விலைக்கு வாங்கிக்கொள்வது வழக்கம். இங்கிலாந்தில் நடந்தேறும் தந்திரமான இவ்வர்த்தகம் விவேகிகளால் வியக்கற்பாலது. ஏற்பது இகழ்ச்சியாதலால் வாழ்ந்துகெட்ட அவ்வறியவர்கள் ஏலாமலே பிறரிடத்திலிருந்து சகாயம் பெறுவதற்கும், பிறருக்குத் தருமசிந்தை காரணமாக உதவிபுரியத் தொடங்குகையில் சோம்பலை அவர்களிடத்து வளர்க்காதிருப்பதற்கும் மேற்கண்டவர்த்தகம் அனுகூலமான வழிவகையா யிருக்கின்றது. பிக்ஷையெடுத்தே வயறுவளர்த்து வந்த ஒரு பைராகி சென்னை மாநகரத்தில் ஒரு வீட்டுவாயிற் படியண்டைநின்றுகொண்டு பெருங்கூச்சலிட்டு அரிசி பிக்ஷைகேட்டான். உள்ளேயிருந்த வீட்டுக்காரன் அதிசாந்தமாய் ஐயா! பெண்டுகள் வீட்டிலில்லை; இந்தவேளை தயவுசெய்துபோய் வாரும் என்றான். அதற்கு அதிகார பிக்ஷைகேட்ட அந்த பைராகி ஒய்! உன் பெண்டுகளைக்கொடு என்று யான் கேட்கவில்லையே; அரிசி தானே பிக்ஷைகேட்டேன்? ஏன் பெண்டுகள் இல்லை என்கிறாய்? என்று வீட்டுக்காரன் மனம் நோகச் சொன்னான். இப்படிப்பட்ட அகங்கார சொரூபிகளுக்குப் பிக்ஷைபோடுவது எவ்வளவும் தருமமாகாது. வேலைசெய்யச் சக்தியுள்ளவர்களெல்லாம். அதிகாரபிட்சை கேட்க அவர்களுக்குப் பயந்து பிக்ஷைகொடுத்துச் சோம்பலை வளர்க்கும் நம்மனோர் நம்முடைய தேசத்தில் எவ்விடங்களிலும் கைத்தொழில் சாலைகளை ஏற்படுத்துவரென்னும் பெருத்த தருமத்தை ஆங்கிலேயரைப்போல் காலதாமதமின்றிச் செய்வாராக. வறியவர் பிழைக்க வழிகாட்டுவதைவிட வேறே தருமமுண்டா? வறியவர்களுக்கு ஏராளமாய்ப் பொருள்முதலியவற்றை வழங்கி அவர்களைச் சோம்பேறிகளாக்குவதைவிட அவர்கள் பிழைப்பதற்கு வழிதேடிவைப்பதேபெருத்த தருமமாகும். பலவகையான எந்திரங்கள் நாள்தோறும் உண்டாய்க்கொண்டே வருவதனால் இப்போது இங்கிலாந்தில் கைத்தொழிற்சாலைகளெபெடலும்



பிழைக்க வகையறியாத வறியவர்கள் அனேகர் தினே தினே மரித்துக்கொண்டு வருகிறார்கள். பரிதாபம்! பரிதாபம்! வறியவர்களுக்குப் பிழைப்பில்லாமற் போகுமென்று நினைத்துத்தானோ நம்முன்னோர் இந்தியாவில் எந்திரங்களை உண்டாக்கி அவற்றைக்கொண்டு நெய்தல்-உழவு முதலிய தொழில்களைச் செய்யாமலிருந்தார்கள்? இல்லாவிடில், புத்திகோசரமும் கற்பனாசக்தியும் சால அமையப்பெற்றிருந்த நம்முன்னோர் இந்தியாவில் அந்தத் தொழில்களுக்கு எந்திரங்களை ஏன் உண்டாக்கிவைக்கவில்லை? வறியவர்கள் பிழைப்பற்றுப்போய்விடுவார்களென்று கருதியே அவர்கள் அவற்றை ஏற்படுத்த முயலவில்லையென்று தெரியவருகிறது. ஐ. வி.

## பூர்வீக இந்துக்களும் பெண்கல்வியும்.

ஒரு ஆசிரியருக்கும் வித்தியார்த்திக்கும் நடந்த சம்பாஷணை.

வித்தியார்த்தி:— சுவாமீ! வந்தனம். தங்களைக்கண்டு நெடுநாளாயிற்று. சென்றவருடம் மரக்கறி பதார்த்தம் - அந்நிய பதார்த்தம் இவற்றின் குணகுணங்களைக்குறித்துத் தாங்கள் கடல்மடைதிறந்தாற்போலும் செய்த உபந்நியாசத்தால் மிகவும் பயனடைந்தேன். இப்போது தங்களை யான் கேட்டறியவேண்டிய சங்கை யொன்றுளது. பூதலட்சண சாஸ்திரங்களிலும் மானதபதார்த்த சொரூபலட்சண சாஸ்திரங்களிலும் ரசாயன சாஸ்திரம்-வானசாஸ்திரம் முதலிய சகலசாஸ்திரங்களிலும் தமக்கு உலகத்தில் எவரும் சமானாதிகமின்றிப் பாண்டித்தியம் பெற்றிருந்தும் பூர்வீக இந்துக்கள் பெண்கல்வியை ஏன் மிகவும் அலட்சியம் செய்துவந்தார்கள்?

“ தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்பனைத்தூறு மறிவு.”

மணலினிடத்தே கேணியானது தோண்டிய அளவாகச் சுரப்பதுபோல் மாந்தர்க்கு அறிவானது கற்ற அளவாகும் என்று பொருள்படப் பொதுமறைவாக்கியம் பிறந்திருக்கிறதே. இக்குறட்பாவில் மாந்தர்க்கு என்னும் பதம் ஆண்பாலர்க்குத்தான் பொருந்துமோ? பெண்பாலார்க்கு அது பொருந்தாதோ? ஒரு தேசம் நாகரிகம்பெற்றிருக்கவேண்டுமானால் அதிலுள்ள பெண்கள் கல்வி பயில்வது அத்தியாவசியமல்லவா? முன்னொரு காலத்திலே தமக்கு நாகரிகத்தில் ஒப்புயர்வு வேறொருவரும் இல்லையென்று சொல்லும்படி சிறந்திருந்த இந்துக்கள் தம்முடைய ஸ்திரீகளைக் கேவலம் ஆண்பிள்ளைகளுக்கு முறிகளாக்கி அவர்களுடைய ஸ்வயேச்சை வாழ்க்கையைக் கெடுத்து அவர்களை அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் அழுத்திவைத்திருந்தார்களே, இது என்ன அநியாயம்? ஒவ்வொருவனும் உலகத்தில் உற்பவமானவுடனே பிரதமத்தில் தான் கற்றுக்கொள்ளும் நடையுடைபாவனை முதலிய யாவற்றிற்கும அவனுடைய மாதாவே பிரதம போதினியா யிருக்கின்றாள். அவள் நன்றாய்க் கற்றுணர்ந்தவளாயிருந்தால் மேற்கூறிய குறட்பாவின் கருத்தின்படி அவளுடைய அறிவு விசாலப்பட்டிருக்கும். அதற்கேற்றபடியே அவளுடைய நடையுடைபாவனைகளும் அமைந்திருக்கும். அவைகளெல்லாம் அவ்வன்னையின் முலைப்பாலை அருந்திக்கொண்டுவரும் குழந்தையின் மனதில் படிந்துவிடும். இளமைப்பருவத்தில் அந்தப்படி மனதிற்பதிந்த தோற்றங்களும் நடையுடைபாவனைகளும் நன்றாய் வேரூன்றிவிடும். இது மனோதத்துவ லட்சண சாஸ்திரிகள் யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதொரு சித்தாந்தம்.

ஆசிரியர்.—அப்பா! நீர் பேசிக்கொண்டு வருவதெல்லாம் எனக்குப் பெருநகைப்பை உண்டாக்குகின்றது.

வித்தியார்த்தி.—சுவாமீ! சற்றே பொறுத்திருமின். நான் சொல்லவேண்டிய யாவற்றையும் சொல்லி முடிக்கின்றேன் பிறகு தாங்கள் அவற்றை இஷ்டமிருந்தால் ஆக்ஷேபிக்கலாம்.

ஆசிரியர் —நல்லது அப்படியே ஆகட்டும்.

வித்தியார்த்தி.—உலகத்தில் குணவான்களென்று பெயரெடுத்த சீமான்களுக்குள் அநேகர் கல்விகேள்விகளிற் சிறந்து குணபூஷணிகளாயிருந்த மாதுசிரோன்மணிகளுடைய மணிவயிற்றில் உதித்தவர்களென்பதை நாம் சரித்திர பூர்வகமாக அறிந்துகொள்ளலாம். மகா அலெக்ஸாந்தர் மகா ஆல்பிரட் (A fred முதலிய கனவான்களெல்லாம் நன்றாய்க் கற்றுணர்ந்த வனிதாரத்தினங்

களின் புத்திரர்கள். இவ்வுண்மையை அறியாமலோ இந்துதேசத்து நம்முன்னோர் பெண்களைக் கல்விபயிலச் செய்யவில்லை? இதுவரையிலும் எடுத்துச்சொல்லிய விஷயங்களைக்குறித்துத் தாங்கள் சமாதானங் கூறுவீராகில் இது விஷயமாய் எனக்குள்ள ஏனைய சங்கைகளையும் பிறகு தெரிவிக்கின்றேன்.

ஆசிரியர். — அப்பா ! நீர் சொல்லிக்கொண்டு வந்த விஷயம் யாவும் என் செவிக்கு நாராசம் போன்றிருக்கின்றது. இந்துதேசத்து நம்முன்னோருடைய ஸ்திதியை நன்றாய் நீர் அறிந்துகொள்ளாமையினால் தான் இவ்வளவு அதிகமாய்ச் சொன்மாரி பொழியலாயிற்று. நாகரிகம் பெற விருப்பமுடைய ஒவ்வொரு தேசத்தவரும் முக்கியமாய்த்தங்களுடைய பெண்களைக் கல்வி பயில்விக்க வேண்டுமென்பதையும், ஒவ்வொருவனும் தான் பிரதமத்தில் கற்றுக்கொள்ள வேண்டிய யாவற்றிற்கும் அன்னையாகிய பெண்பாலே தனக்கும் போதினியாயிருக்கிறாளென்பதையும் நம்ம புராதன இந்துக்கள் உணர்ந்த அவ்வளவு நன்றாய் உலகததில் வேறு எந்தத் தேசத்தவர்களும் அறிந்திலர். இதற்கு அனேக பிரமாணங்களுள. உலகத்திலுள்ள பூதபௌதிக சம்பந்தமான யாவற்றின் இயக்கத்துக்கும் ஒவ்வொரு அதிதேவதை இருக்கிறதென்னும் சித்தாந்தத்தை நம்மனோர் பூர்வந்தொட்டு அனுஷ்டித்து வருகிறார்கள். உதாரணமாக:—ஜலத்தின் இயக்கத்துக்கு வருணபகவானும், காற்றின் இயக்கத்துக்கு வாயுபகவானும், தீயின் இயக்கத்துக்கு அக்கினிபகவானும், காமத்தின் இயக்கத்துக்கு மன்மதனும், இவ்வாறே மற்றவைகளுக்கு ஏனையோரும் அதிதேவதைகளாயிருப்பதாக நம்முன்னோர் கருதிவந்தார்கள். நாமும் அவ்வாறே எண்ணிவருகிறோம். அந்தசித்தாந்தப்படி கல்விக்கு அதிதேவதையாயிருப்பவர் இன்னாரென்பது உமக்குத்தெரியுமா?

வித்தியார்த்தி.—ஐயா! கலைமகள் அல்லது சரஸ்வதி என்றுகேள்வி.

ஆசிரியர்.— ஆம். பெண்பாலாகிய சரஸ்வதியே கல்விக்கு அதிதேவதை. ஆண்பாலாகிய எந்தத் தெய்வமும் அதற்கு அதிதேவதையல்ல. ஆகவேஉலகத்திலுள்ள மன்னுயிர்களுக்குப் பிரதமத்தில் கல்வி கற்றுக்கொடுப்பது பெண்பாலேயன்றி ஆண்பாலன்று என்னும் சித்தாந்தம் நம்முன்னோருக்கு வெகு நன்றாய்த் தெரிந்தேயிருந்ததென்றறிக. நீர் சொல்லியபடி அன்னையாகிய பெண்பாலே ஒவ்வொருவனுடைய ஆதிஞானத்துக்கும் போதினியாயிருக்கின்றாளென்பதைப் புராதன இந்துக்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்தனர். இதை அறிந்த காரணத்தினால் அவர்கள் பெண்கல்வியை அதிகமாய் விருத்தி செய்துவந்தார்கள். அது நிற்க.

" அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னியழகும்புவிப்பொறையும்-வன்னமுலை
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசிலிவையுடையாள்பெண்."

ஒருவனுக்கு அன்பில் தாயைப்போலவும், பணிவிடைசெய்வதில் அடியாளைப்போலவும், அழகில் இலட்சுமியைப்போலவும்,பொறுமையில் பூதேவியைப்போலவும், போகத்தில்வேசியைப்போலவும் புத்தியில் மந்திரியைப்போலவும் இருப்பவளே மனையாட்டி என்று பொருள்பட மேலோர் மனைவிக்கிருக்கவேண்டிய ஆறு குணங்களைக் கூறியிருக்கின்றார்கள். கணவனுக்குக் கிரகாச்சிரமதர்ம விஷயங்களில் யுக்தாயுக்தத்தைச் சொல்லுவதிலே மந்திரியைப்போன்ற புத்தியை மனையாள் பெற்றிருக்கவேண்டுமென்று மேலோர் கூறியிருப்பாரேயாயின், அவள் கல்வி தேர்ச்சியுடையவளாயிருத்தல் வேண்டுமென்றும், ஒருவனுக்கு மனையாட்டியாயிருக்கவேண்டிய ஒவ்வொரு பெண்ணும் அவசியம் கல்விபயின்றிருத்தல்வேண்டுமென்றும் நம்முன்னோராகிய மேலோர் அபிப்பிராயங்கொண்டார்களென்பதற்கு ஐயம் யாது? வடநூலாரும் குலதர்மபத்தினியின் ஷட்குணங்களைக்குறித்து " கார்யேஷு-தாஸீ கரணேஷு-மந்திரீ ரூபேசலட்சுமீ: க்ஷமயாதரித்திரீ ஸ்நேஹேசமாதா சயநேதுவேசியா ஷட்கர்மயுக்தகுலதர்மபத்னீ " என்று மேலெடுத்துரைக்கப்பட்ட வெண்பாவின் கருத்துக்கிணங்கக் கூறியுளார். கணவனுக்கு மனையாட்டி மந்திரியைப்போலிருந்து யுக்தாயுக்தங்களைச் சொல்லிவருவதானால் அவள் எவ்வளவு கல்வி பயின்றவளாயிருத்தல் வேண்டுமென்று நினைக்கின்றீர்? ஆகவே நம்முன்னோர் பெண்கல்வியை விசேஷமாகக்கொண்டு



அதைப் பாராட்டிவந்தனரென்பது பிரசித்தமாக விளங்குகிறது.

வித்தியார்த்தி. — தாங்கள் சொல்லுவது வாஸ்தவம்தான். ஆதியில் நம்முன்னோர் பெண்கல்வி கூடாதென்று அபிப்பிராயங்கொண்டிருந்தார்களென்பதற்கு நான் சில வாக்கியங்களை எடுத்துக்காட்ட வல்லேன். " பேதமை என்பது மாதர்க்கணிகலம்." என்று பிரமாணமிருக்கிறதே. பேதமையென்பது அறியாமையல்லவா? அறியாமையென்பது கல்வியின்மையின் காரியமல்லவா? பேதமை மாதர்க்கு அணிகலமாயின் கல்வி பயிலாமல் அறிவிலியாயிருத்தல் அவர்களுக்குப் பூஷணம் என்று பொருள்படும் மேலைய பிரமாணத்தைக்கொண்டே, நம்முன்னோர் பெண்கல்வியைத் திரஸ்காரஞ்செய்து வந்தனரென்று ஏன் சொல்லக்கூடாது ?

ஆசிரியர் — நன்கு வினவினாய். உத்தம ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய நால்வகைக் குணங்களாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவற்றுள் மடம் என்பது நீர் சொல்லும் பேதமையாகும். அது இயற்கை அவிவேகம் அன்று. எல்லா விஷயங்களையும் தெரிந்திருந்தும் கணவன் முன்னிலையில் மரியாதைபாராட்டி, அவன் தன்னை ஆலோசனை கேட்கும்வரையில் ஒன்றும் அறியாதவள்போல் சும்மாஇருத்தலே பதிவிரதாதருமமென்பது நம்முனோர் சித்தாந்தம். மடம் என்பதற்கு இதுவே பொருளென்பதை பரிமேலழகியார் நச்சினார்க்கினியார்முதலிய உரையாசிரியர் தத்தம் அகல உரைகளில் வெள்ளிடைமலைபோல் விளக்கிக்காட்டியுளார். சிலபுராணங்களில் " உமைகேள்விச்சருக்கம்" என்று தலைப்பெயர் சூட்டி அந்த சருக்கத்திலே மஹாதேவியார் ஈஸ்வரனைத் தமக்குத் தெரியாததுபோல் சில வினாக்கள் கேட்பதையும் அவற்றிற்கு அப்பெருமான் விடையளிப்பதையும் நீர் வாசிக்கவில்லையா ? " தங்கணையகரிற் றெய்வந் தவம்பிரிதிலவென்றெண்ணு மங்கைமார்சிந்தைபோலத் தூயது மற்றுங்கேளாய்." என்னும் கம்பர் வாக்கின்படி உத்தம ஸ்திரீக்குத் தன் பர்த்தாவே தெய்வமென்பதும், அவனை வழிபடுதலன்றி அவளுக்கு வேறு தவமுதலியவை கிடையாதென்பதும் நம்மனோர் சித்தாந்தமாகையால் கணவன் முன்னிலையில் தெரிந்தும் தெரியாதவளைப் போலிருத்தலே உத்தம மனைவியின் குணமாதலின் மஹாதேவியாரும் பகவான் முன்னிலையில் ஒன்றும் தெரியாதவரைப் போலிருப்பதாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதே யன்றிப் பிறிதன்று. அன்றியும்,

" குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சளழகு மழகல்ல-நெஞ்சத்து
நல்லம் யாமென்னுநடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

என்னும் வெண்பாவில் குஞ்சி (ஆண்மயிர்) அழகும், கொடுந்தானைக் கோட்டழகும் (கோடிய ஆடையின் கொய்சகத்தின் அழகும்) ஆண்பாலார்க்கே உரித்தாயினும், மஞ்சளழகு என்பது பெண்பாலார்க்கே சிறப்பு வகையால் உரித்தானதென்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை. இத்தியாதி பிரமாணங்களினாலும் நியாயங்களினாலும் பெண்கள் அவசியம் கல்விபயிலவேண்டுமென்பதே நம்முன்னோருடைய சித்தாந்தமாயிருந்ததென்பது கரதலாமலகம்போல் விளங்குகின்றது. இப்போது காலாதீதமாகிறது.

வித்தியார்த்தி.—இன்னும் இந்த விஷயத்தைக் குறித்து எனக்கு அனேக சங்கைகளுள. அவற்றிற்கும் தக்க சமாதானம் கூறும்படி தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். சிரமைக்காக மன்னித்தருள்வீராக.

ஆசிரியர்.—அப்படியே ஆகுக. மறுபடியும் நாம் சந்திக்க நேரிடும்போது என்னாலியன்றவரையில் நியாயங்களை எடுத்துக்காட்டுகிறேன்.

வித்தியார்த்தி.—சுவாமீ ! வந்தனம்

ஆசிரியர்.—அப்பா ! நல்லது. போய்வாரும்.

வித்தியார்த்தி.—சுவாமீ! வந்தனம். தங்களைக் காண யான் அதிக ஆவல்கொண்டிருந்தேன். பூர்வீக இந்துக்கள் பெண்கல்வியை அபிவிருத்தி செய்துவந்தனரென்பதற்கும்,ஒருதேசம் நாகரீகம் பெற்று ஓங்குவதற்குப் பெண்கல்வி அத்தியாவசியமென்பதை நம்புராதன இந்துக்கள் பூரணமாயறிந்திருந்தார்களென்பதற்கும் தாங்கள் சென்ற மாதங் கூறிய சில நியாயங்கள் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. அப்போது காலாதீதமாய்விட்டபடியினால் நம்முடைய சம்பாஷணையை நிறுத்தவேண்டியதாயிற்று. இன்

னும் அந்தவிஷயத்தைக்குறித்து ஏதேனும் கூறத் தங்களுக்கு விருப்புளதேல் தங்கள் சித்தமே என் பாக்கியமாகும்.

ஆசிரியர்.—முற்காலத்தில் பெண்கள் இந்தியாவிலே கல்விபயின்று வந்தார்களென்பதை விளக்குவதற்குச் சென்றமாதம் உதாரணங்களை எடுத்து யான் காட்டவில்லை. இப்போது சில உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறேன். கேட்பீராக. திருவள்ளுவருடன் பிறந்த உப்பை - உருவை - வள்ளி என்னும் பெண்களும் ஔவையாரும் தமிழ்க்கடலைக் கரைகண்டுணர்ந்தவர்களென்பதை அவர்களுடைய பாசுரங்களே நன்கு விளக்குகின்றன.

வித்தியார்த்தி — இவர்கள் தெய்வீகம் விளங்கப்பெற்றவர்கள். உப்பை-உருவை-வள்ளி என்பவர்கள் பிறந்தபோதே தம்பெற்றோரை நோக்கிப் பாடியதும், ஔவையார் என்னும் ஒரு பெண்பால் சில நீதிநூல்களை இயற்றியதும் ஏகதேசமேயன்றி மற்றப்படி பெண்கள் சாதாரணமாய் முற்காலத்தில் கல்வி பயின்றவர்களாயிருந்தார்களென்பதைக் காட்டமாட்டா.

ஆசிரியர்.—நியாயந்தான். பொறுமையுடன்கேளும். இன்னும் சில உதரார்ணங்களை எடுத்துக்காட்டுகிறேன். இத்தென் இந்தியாவில் சேர, சோழ, பாண்டியரென்னும் மூன்று அரசர்கள் முற்காலத்தில் அரசாண்டுவருகையில் ஏகம்பவாணரென்றொருவர் இருந்தார். அவர் வேளாண் குலத்திற் பிறந்தவர். வரையாது கொடுக்கும் வள்ளலென்னும் பெயரெடுத்து மேற்படி மூவேந்தர்களும் அதிசயிக்கும்படி பெருங்கொடையாளராயிருந்தார். அம்மூவேந்தரும் இவருடைய செல்வப்பெருக்கத்தையும் ஈகையையுங்கண்டு பொறாமைப்பட்டு அவரைப் போய்ப்பார்ப்போமென்று அவர் வீட்டுக்குச் சென்றார்கள். அத்தருணத்தில் அவர் வீட்டிலிராமையால் அவருடைய மனைவி அம்மூவேந்தரையும் நோக்கி முதலியார் கழனிக்குப்போயிருக்கிறாரென்று வினயத்துடன் சொன்னாள். அதைக் கேட்ட அம்மூவேந்தரும் அதிக இறுமாப்புடன், முதலியார் நாற்றுமுடி நடப்போனாரோ ? என்று ஏளனமாய்க் கேட்க, அதற்கு அம்மனைவி,

“ சேனைதழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானைமிதித்த வருஞ்சேற்றின் - மானபரன்
பாவேந்தர் போற்றப்பறித்து நட்டானேகம்பன்
மூவேந்தர் தங்கண்முடி.”

என்று அவர்கள் நாணும்படி கூறினாள். பிறகு ஏகம்பவாணர் வீட்டுக்கு வந்தவுடனே மூவேந்தர் தம்மைத் தேடிவந்ததையும், அவர்கள் ஏளனமாய்ப்பேசியதையும் மனையாட்டி கூற, அவருக்குக் கோபம்பிறந்து, தமக்கு நெடுநாளாய் வசியமாயிருந்த ஓர் பூதத்தைப்பார்த்து, அம்மூவேந்தரையும் தூக்கிக்கொண்டு வரும்படி உத்தரவுசெய்ய, அது சேரனையும் சோழனையும் தூக்கிக்கொண்டு, பாண்டியன் வேப்பமாலை யணிந்தவனான படியினால் அவனிடத்துப்போக அஞ்சித் திரும்பிவிட்டது. இதைக்கண்ட ஏகம்பவாணர் தம் ஊரிலிருந்த நான்கு தாசிகளை அழைத்து, அப்பாண்டியனது வேப்பமாலையைக் கொண்டுவருபவருக்குத் திரளான திரவியம் பரிசளிப்பதாகச் சொல்லவே அந்தத் தாசிகளில் ஒவ்வொருவரும் பாண்டியனிடத்துச்சென்று மாலையைப்பெறுவதற்காக அற்புதமான பாக்களைப் பாடினார்கள். அவர்களுக்குள் கடைசியாக ஒருத்தி

“ இலகுபுகழாறையேகம்பவாண
னலகைவரும்வருமென்றஞ்சி - யுலகறிய
வானவர்கோன்சென்னிமிசைவன்கைவளை
மீனவர்கோன்கைவிடான்வேம்பு.” [ யெறிந்த

என்று பாடிய வெண்பாவைக்கேட்டு அப்பாண்டியன் மாலையைத்தந்தனன். இந்தப்பாசுரங்களும் ஏகம்பவாணர் மனைவி பாடிய பாசுரமும் அக்காலத்துப் பெண்கள் அடைந்திருந்த கல்வித்தேர்ச்சியின் அளவை வெள்ளிடைமலைபோல் காட்டவல்லன.

வரதுங்க பாண்டியர் கடவுளைச்சக்ஷீகரித்த கோலமாய்ப் பாடிய பாசுரத்தைவிட ஆயிரமடங்கு அதிக சொன்னயம் பொருணயம் மிகும்படி அவர் மனைவியார் பாடிய

“ ஆக்கையெனும் புழுக்குரம்பை
யணைந்தனையாப்பொருளை
யருளொளியைப் பராபரத்துக்
கப்புறமாமறிவை
நீக்கமறமயிர் முனைக்குமிடமற
வெங்கெங்கு
நிறைந்து நின்றமுழுமுதலை
நினைவிலெழுஞ்சுடரைப்



பாக்கியங்கள் செய்தனந்தர்தவக்
குறைகண்முடிக்கும்
பழவடியார் தமக்குதவும்
பசுந்துணர்க்கற்பகத்தை
வாக்குமனவிகற்பததா
லளவுபடாவொன்றை
மாசற்ற வெறுவெளியை
மனவெளியிலடைப்பாம்.”

என்கிற பாசுரம் உலகத்தையெல்லாம் விலைமதிக்கத்தக்கதாயில்லையா ?

கொம்மி - உந்தியார் - அம்மானை முதலிய பெயர்களால் பாடப்பட்டுள்ள அனேகபாசுரங்கள் அக்காலத்துப்பெண்கள் பாடியதாகவே தெரியவருகிறது. ஆண்பாலார் வித்துவான்களென்று பெயரெடுத்துக் கிரந்தங்களை உலகத்தில் வெளிப்படுத்தியதுபோல் பெண்பாலார் விசேஷமாகக் கிரந்தங்களை இயற்றி வெளிவந்திலரென்பது மெய்யே. ஏனெனில், கணவனுக்கு முன் மரியாதை பாராட்டவேண்டியதென்கிற மரபுபற்றி அக்காலத்துப் பெண்கள் விசேஷமாகக் கல்வியில் பாண்டித்தியம் பெற்றிருந்தும் பண்டிதர்களென்று வெளிவந்திலர்.

வித்தியார்த்தி.—இதுநிற்க. ஆங்கிலேயர்கள் இப்போது தம்முடைய பெண்பாலார்க்குச் செய்துவரும் மரியாதை முதலிய நாகரீக சின்னங்கள் நம் முன்னோரிடத்திருந்தனவா ? நம்மனோர் ஸ்திரீகளைக் கேவலம் முறிகள்போலல்லவா நடத்திவருகிறார்கள் ? அவர்களுக்கு எவ்வளவும் சுவயேச்சையான வாழ்க்கை கிடையவே கிடையாதல்லவா ? இது என்ன அநியாயம், இந்தப்படியே பூர்வகாலத்தும் அவர்களுடைய நிலைமை யிருந்ததோ?

ஆசிரியர்.—ஸ்திரீகளுக்கு மரியாதை பாராட்டுவது என்றால் என்ன ?

வித்தியார்த்தி.—ஸ்திரீகளும் புருஷர்களும் ஒருங்குகூடிய மகாசபையைநோக்கிப் பேசத்தலைப்படும் ஒவ்வொருவரும் “ சீமாட்டிகளே! சீமான்களே ! ” என்று முதலில் பெண்பாலார்க்கு மரியாதை பாராட்டிப் பிறகு ஆண்பாலார்க்கு மரியாதைசெய்யும் வழக்கம் ஆங்கிலேயர்க்குள் இப்போது இருக்கிறது. மனிதர்களுக்குரியசகல சுகங்களுக்கும் பெருந்துணைவியாய் நின்று அவர்களுக்கு வாழ்க்கைத்துணைநலத்தை உண்பிக்கும் பெண்பாலாரை நமக்கு அடிமைகளாக நினைத்துத் திரஸ்காரம் செய்யாமல் அவர்களை ஆடவரைப்போலவே நன்கு மதிப்பதும், புருஷர்களைவிட அவர்கள் பெரும்பாலும் இயற்கையில் பலஹீனர்களானபடியால் அவர்களுக்கு அதிக மரியாதை பாராட்டுவதும் மானுஷீக தருமமென்று நாகரீகமடைந்த ஆங்கிலேயர் முதலிய ஒவ்வொரு தேசத்தவரும் இப்போது ஒப்பிக்கொண்டு அந்தப்படியே நடந்து வருகிறார்கள் நம்முன்னோருடைய செய்கை எப்படியிருந்தது?

ஆசிரியர்.—பெண்பாலார்க்கு நம்முன்னோர் பாராட்டிய அவ்வளவு மரியாதை வேறு எந்த தேசத்தவர்களும் பாராட்டியே யிராரென்று நினைக்கிறேன். இதை யான் விரிவாய்க்கூறவேண்டிய அவசியமில்லை சில சொற்றொடர்களைமாத்திரம் இப்போது எடுத்துக் காட்டுகிறேன் அவற்றைக் கொண்டு பூர்வீக ஹிந்துக்களின் நோக்கத்தையும் அபிப்பிராயத்தையும் தெளிவாய் உணரலாம். “ சீமாட்டிகளே ! சீமான்களே ; ” என்றுகூறி இப்போது பெண்களுக்குமுதல் மரியாதை செய்வது ஆங்கிலேயருடைய வழக்கமாயிருக்கிறதென்றல்லவோ நீர் வியந்து கூறுகின்றீர். சத்திசிவம். மாதா, பிதா, தாய்தந்தை, பெண்ணும் பிள்ளையும் பார்வதி பரமேஸ்வரர் லட்சுமி நாராயணர், சீதாராமன், அம்மை அப்பன் என்னும் சொற்றொடர்களை யோசித்துப்பார்க்கையில் பெண்பாலர்க்கே நீர் இப்போது வியந்துரைக்கும் ஆங்கிலேயரைப்போலவே நம்முன்னோர் தக்க மரியாதை நடத்திவந்தனரென்று தெரியவில்லையா ? பெண்களுக்கு ஆதியில் சுவயேச்சை கிடையாதென்று நீர் நினைப்பதும் மதிமயக்கமேயாம். சுயம்வரம் என்னும் வழக்கம் முற்காலத்து இந்தியாவிலிருந்ததென்று நைடதம் முதலிய நூல்களால் இனிது விளங்குகிறது. அநேக அரசர்கள் ஒருங்குகூடிய மஹாசபையில் தமயந்தி தனக்கு இஷ்டமான ஒருவனுக்கு மாலையிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிற விஷயமும், ஆலோசனை சபையில் பாண்டவர்களுடன் துரோபதையிருந்து தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டுக் கூறினாளென்று ஸ்ரீ மஹாபாரதத்திற் சொல்லப்பட்டவிஷயமும், கொடுப்

பாரும் கேட்பாருமின்றி ஸ்திரீயும் புருஷனும் தனியிடத்து எதிர்ப்பட்டுத்தாமே மணம் செய்து கொள்ளுவதென்னும் காந்தருவ விவாகம்முதலிய வழக்கங்களும் - பூர்வீக ஹிந்துக்கள் பெண்களுக்குச் சுவயேச்சை தந்து வந்தார்களென்பதை விதரிசனமாகக் காட்டுகின்றன. நீர் ஞாபகத்தில் வைக்கவேண்டியதொன்றுளது ஆங்கிலேயர்களுடைய நடை, உடை, பாவனை முதலியவைகள் தற்காலத்து இந்துக்களாகிய நம்மனோருடைய நடை-உடை-பாவனைகளைவிட உயர்ந்தனவென்றாவது தாழ்ந்தனவென்றாவது யான் கூறவந்தேனில்லை. இப்போது அவர்களிடத்து இருப்பதாக நீர் வியக்கும் பெண்கல்வி ஸ்திரீகளின் சுவயேச்சைவாழ்க்கை முதலியன நம்முன்னோரிடத்தும் அமையாமற் போகவில்லையென்பதை யான் காட்டி உமக்குத் திருப்தியுண்டாக்க இவ்வளவு தூரம் பேசிக்கொண்டு வந்தேனேயன்றி மற்றப்படி, இவ்விரண்டு ஜாதியாருடைய நடை - உடை பாவனையாகிய இவற்றின் யுக்தாயுக்தத்தைக் குறித்தேனும் உயர்வு தாழ்வைக்குறித்தேனும் யான் எவ்வளவும் சொல்லவந்தவனல்லன்.

வித்தியார்த்தி. — இப்போது காலாதீதமாகிறது. தாங்கள் கூறிவந்த விஷயங்கள் எனக்குத் திருப்தியுண்டாக்கின. மொத்தத்தில் பெண்கல்வி நம் தேசத்தவர்க்குத் தற்காலத்தில் நன்மையைப் பயக்குமா? பயக்காதா? என்பதைக்குறித்து இன்னும் ஒருசமயத்தில் பேசவேண்டியது நேரிடும்

ஆசிரியர். — நல்லது இன்னும் ஒருவேளை அதைப்பற்றி வசனிக்கலாம்: போய்வாரும்.

ஜ. வி.

---

உ

சிவமயம்.

## மதுரை நான்காஞ்சங்க வாழ்த்து.

இஃது.

இப்பத்திராசிரியர் விச்சூர் முத்துக்குமாரசாமி முதலியார் B. A. அவர்களால் இயற்றப்பட்டது.

---

நிலமண்டிலவாசிரியப்பா.

---

திருத்தகு முக்கட் டெய்வ சிகாமணி
கருத்தொடு கண்ணுறுங் காணுக் கடவுள்
அருவு முருவு மருவோ ருருவும்
மருவிய மருவா வள்ளலா மரனும்
சூரர னழியத் தோன்றிடு குமரனும்
காருறு வவுணன் காலனூர்க் கேகச்
சீரும் பேருந் திகழாற்றுப்படை
செப்பியதெய்வத் திறம்பெறு புலவனும்
திங்களங் கண்ணியான் திருவடி யுளத்தில்
இங்கிதமாக்கொ ளிசையமை புலவரும்
ஆய்ந்திடு மகத்துவம் வாய்ந்துள தாயும்
தாய்மொழி யாகிச் சதுர்மறைப் பொருளை
வாய்ந்துள் குறளை வாய்ந்துள தாயும்
எப்பா டைக்கு மில்லா ழகரம்
துப்பா வார்ந்து துலங்குவ தாயும்
புருடார்த் தத்தைப் புலப்படும் வண்ணம்
ஒருவா துரைக்கு முத்தம நூல்கள்
குல்வுவ தாயுங் குறைவி லிலக்கணம்
நிலவுறுந் தருக்கம் நிகமாக மப்பொருள்
வாய்ந்திடு தமிழை மாண்புறு வண்ணம்
ஏய்ந்திட வுளத்தி லெண் ணுராகி
இகழ்ந்து கிடக்கு மேழை யோரும்
உண்டிக் காக வொருவித் தமிழை
யண்டி யாங்கில மார்த் தோடு
கற்றுப் போதருங் கடையேம் போல்வரும்
நற்றமி ழினிமையை நன்குணர்ந் துய்யக்
கம்பனே கும்பனே காளியோர் கூத்தனே
உம்பனே கன்னனே வுயர்ரகு ராமனே
என்னுஞ் சீரை யேற்றே ரகுகுல
மன்னிய பாண்டித் துரையெனு மன்னன்
பாலை வநத்தம் பண்புறக் காக்கும்
ஆலைக் கரும்பனை னழகன் கருதி
நான்கோ டறுபது நல்வினை யாட்டை
நீன்யா ரென்பதி னற்பொரு ளானோன்
செய்தருள் கூடலிற் றிகழ்தன் முன்னோர்
உய்நெறி யுணர வுலைவிற் றமிழை
வளர்த்தவகைபோல் வளர்க்க வெண்ணி
வளத்தகு புலவர் மருவக் கூட்டி
அறநெறி யார்த னத்தப் பொருளைத்
திறனுறத் தந்து செல்வாக் கோங்கிச்
சதுருற நான்காஞ் சங்க மென்று
புதுவ தாப்பெயர் புனைந்து செந்தமிழ்
எங்கும் பரவ வெவரும் போற்றத்
துங்க மாகச் செந்தமிழ்ப் பத்திரம்
மாதந் தோறு மாறு தியாண்டும்
ஆதவன் போல்வர வமைத்துப் பண்புள
மன்ன ருதவியும் வாய்க்கச் செய்து
தன்னே ரின்றித் தழைக்கத் தமிழைச்



செய்தோன் சீர்த்தியைச் செப்பவுந் தரமோ
மெய்யுருவாகும் விமலனருளால்
சங்கம் பத்திரம் தமிழ்ப்பாண் டித்துரை
அங்க மானோ ரனைவரும் பெருகி
வாழ்க வாழ்க வளர்நா டெங்கும்
சூழ்க சூழ்க துயர்தீர் தமிழே.

---

## EDITORIAL NOTES:—

---

இருப்புப்பாதைகளில் மூன்றாவது வகுப்பு வண்டித்தொடர்கள்:—

இனிமேல் பல இருப்புப்பாதைகளினும் மூன்றாம் வகுப்புப்பிரயாணிகளின் சௌரியத்தைக் கருதி மலஜலோபாதைகளை யொழிக்கு மிடம் ஏற்படுத்தப்படு மெனக்கேட்டுச் சந்தோஷிக்கிறோம். மூன்றாம் வகுப்புப்பிரயாணிகள் இறுக்கும் பணத்தால் தான் இருப்புப்பாதைக் கம்பெனிகள் வேண்டிய திரவியம் சம்பாதிக்கின்றனரென்பதுண்மையாகையால் அவர்களுடைய சௌக்கியத்தைக்கருதி செய்யப்படும் எந்த சீர்திருத்தமும் ஏற்புடைத்தா மென்பது நிஸ்ஸந்தேகம். மெயில் வண்டி களில்மட்டும் கீழ்க்கண்ட சௌகரியங்கள் உடனே செய்யப்படுமாம் நாளடைவில் பிற வண்டிகளினும் இந்த உபகாரம் ரயில்வே கம்பெனியார்கள் செய்விப்பார்கள் போலும்.

காங்கிரஸ் பிரசிடெண்ட்:—

இவ்வருஷம் சென்னையில் நடக்கப்போகும் காங்கிரஸ் மஹாசபைக்கு மிஸ்டர் லால் மோஹன் கோஸ் என்ற கனவானைச்சபாநாயகராயிருக்கும் படி காங்கிரஸ் கமிடியார் கேட்கப் போகின்றனராம். இது நாம் சந்தோஷிக்கத்தக்க விஷயமே.

திருவருட்பிரகாச வள்ளலாரென்று பலகால் போற்றப்படும் ஸ்ரீமத்இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்த திருவருட்பாவைப்பற்றி ஒருசைவர் குறை கூறியதைக் கேட்டுப் பலவித்வான்கள் சென்னையிற் சிலவிடங்களில் கூட்டம் கூடி அருட்பாவின் மகிமையை நாட்டினர்.

லார்ட்கர்சன் துரை

நமது கவர்னர் ஜனரல், ராஜப்பிரதிநிதியார்கர்சன் பிரபுவை இன்னும் இரண்டு வருஷகாலம் இத்தேசத்தை யாளும்படி பிரிடிஷ் துரைத்தனத்தார் நியமித்தார்களெனக் கேள்வியுற்று மிக்க சந்துஷ்டியடைந்தோம் கர்சன்பிரபு எத்துணையோ சீர்திருத்தங்களைச்செய்ய வேண்டி எத்துணையோ கமிஷன்கள் ஏற்படுத்தி விசாரணைசெய்து வருகிறார். இவைகளெல்லாம் முடிவுபெற இன்னமும் சிலகாலமாகும். இதற்குள் இவர்இங்கிலாந்து திரும்பி விட்டால் இவர் செய்ய எண்ணங்கொண்ட சீர்திருத்தங்கள் முடிவு பெறுவது கஷ்டமாகக் கூடும்

ஆத்மரக்ஷணி:—

இப்பெயர் பூண்ட பக்ஷாந்தரப்பத்திரிகை யொன்று திருநெல்வேலியினின்றும் மெதுபார்வைக்கு வரப்பெற்றனம். இஃது பெயருக்குத் தக்கவாறு அருமையான விஷயங்களை யெடுத்தாளுகிறது. ராஜாங்க விஷயங்களிலும் பத்திராதிபரவர்கள் வெகு ஊக்கமுடையராயிருக்கின்றனர். பல சீர்திருத்தங்களும், கல்வியின் பெரும் பிரயோசனமும் பேசப்படுகின்றன. பத்திரிகை எளிய இனிய நடையில் எழுதப்பட்டிருப்பது படிப்போர் நன்மையைக் கருதியென் போம். இந்த பத்திரிகை நீடூழிவாழுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

### கடிதம்

யதார்த்த பாஸ்கரன் ஆசிரியரவர்கட்கு:—

ஐயா, ஜூலைமீ த்தில் தங்கள் பத்திரிகை துவாராயான் சில சந்தேகங்களைத் தெரிவித்திருந்தேன். அவைகட்கு இன்னும் சமாதானம் கிடைக்கவேயில்லை.

மீண்டும் சில சந்தேகங்கள் என் மனதிற் போந்தன. அவைகளையடியிற் குறித்திருக்கின்றேன். அவைகட்காவது தங்கள் அரியபத்திரிகையைவாசிக்கும் புத்திமான்கள் யாவராயினும் ஏற்ற சமாதானம் எழுதுவார்களெனக் கோருகிறேன்.

Madras. }
18-9-03 }

இங்ஙனம்
தங்கள்பா லன்புடைய

**சத்தியவாதி**

I. ஆதியில் ரிக்வேதசம்ஹிதை உண்டான காலத்தில் ஆரியர் நரமேதயாகம் செய்துவந்ததாக வேதமே கூறுவதாக கேள்விப்படுகிறோம். இது உண்மையா? உண்மையாயின் அதற்குக் காரணம் யாது? இது நாகரீகமாகுமா? தெய்வ பக்தியாகுமா?

II (a) பௌண்டரயாகம் என்றால் என்ன? அஃதேன் செய்யப்பட்டது? அதின் பிரயோசனம் என்ன?

(b) ஆதியில் மதுமாமிச பட்சணம்செய்த ரிஷிகள் பிராமணர் முதலியோர் எக்காலத்தில் மதுமாமிசங்களை யொழித்தார்கள். என் ஒழித்தார்கள். இக்காலத்தில் யாரேனும் ஆட்டையும் மாட்டையும் யாகம் செய்கிறார்களா?

(c) விக்ரஹஆராதனை வேதத்திற் பேசப்படவில்லை எனச்சிலர் கூறுகின்றனர். அஃதுண்மையா? ஆலயங்கள் எப்போது முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்டன? என் ஸ்தாபிக்கப்பட்டன. ஆலயங்களில் விக்ரஹஆராதனை செய்த பிராமணரை என் மனு கண்டித்தார்.

திரிமூர்த்தி பிரஸ்தாபம் எப்போது முதல் முதல் உண்டானதோ?

(d) தாசிகளை கோயில்களில் கொண்டுவந்தவர் முதல்யாவர்? என் கொண்டு வந்தனர்?

என் இப்போது அத்தாசிகளை ஆலயங்களைவிட்டு ஒழித்து விடப்போகாது.

III சைவசித்தாந்தமதம் என்பது முதல் முதல் எங்கே பெறப்பட்டது? அதற்கு வேதம் பிரமாணமா? பிரமாணமாயின் என் சித்தாந்திகளென்பார் பிரஸ்தானத்திரயத்தை ஒப்பவில்லை? பிரஸ்தானத்திரயத்தைப் பிரமாணமாக ஒப்பாதவர்கள் வைதிகராவரோ?

சைவசித்தாந்தம் என்பது துவைதமா?
விசிஷ்டாத்வைதமா? அத்வைதமா?
சைவசித்தாந்த பாஷ்யமொன்றுண்டோ?
உண்டாயின் யாவர் அதைச்செய்தனர்.

IV இறந்தவருக்கு நம்மவர் சிராத்தம் செய்கின்றனரே அஃதேன்.

இறந்தவர், பிறந்தாகவேண்டியிருக்கவும், அவரவர் கர்மங்கட்கிடாக சுகதுக்கங்களை யனுபவிக்கவேண்டியிருப்பவும், நாம் கொடுக்கும் பிண்டப்பிரசாதம் செத்தார்க்கென் செயும்? அல்லது, இறந்தவர் உடனே மீண்டும் பிறாவமல் சுவர்க்கத்துக்குச் செல்வதாயிருந்தால், சுவர்க்கபோக மனுபவிப்பவருக்கு நாம் கொடுக்கும் பிண்டம் லக்ஷியமாமோ?

நரகத்தில் சிலர் செல்வதாயிருக்கட்டும். இவர்கள் செய்யும் காரியங்களா நரகிற்சென்றாரை நற்கதியடையச்செய்யும். நரகவேதனையனுபவிப்பாருக்குச் சோற்றுச் சுகமுமுண்டோ?

V ஸ்ரீகைலாசம் எங்குள்ளது? வடக்கே என்பார்கள். ஹிமாசலத்துக் கருகாமையிலா. இப்பூவுலக்கத்தில் தானா—அலது, வேறண்டத்திலா? ஸ்ரீ வைகுண்டமும் இப்பூவுலகத்திற்றான் உள்ளதோ?

---

## நம்மவர்க்கான நவீன யோசனை,

---

'கல்விமுயல்' என்றது ஔவையார் மொழி. அவரே பின்னர் "நூற்பலகல்" என்றார். "கல்வி கரையில கற்பவர் நாட் சில' மெல்ல நினைக்கிற் பிணி பல—தெள்ளிதின் ஆராய்ந்தமைவுடைய கற்பவே." எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. 'எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்' என்றது பெரும்பாலும் இலக்கியமும் கணிதமும் எனப் பொருள் கொள்கின்றார்கள். ஆயினும், உற்றுநோக்குங்கால், 'எண் என்பது மனதின் செயலாக நினைத்து நோக்கப்பட்டவை யென்றும் 'எழுத்து' என்பது வாக்காதி பொறிகளின் வழிச் செயலாகக் குறிக்கப்படுவனவாகி எழுதப்படுவனவாகிய இலக்கியங்கள் கலைகள் முதலிய எனவும் கொள்வதே நியாயமெனத் தோன்றுகின்றது. எண்ணம் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவாதலும் அதன் தேர்ச்சி விபஜனையோடுங் கூடிய எழுத்து மானிடர்க்கே உரித்தாலும் காண்கின்றனவாக, அவற்றின் சீரும் செல்வமும் ஆற்றலும் அமைதியும் மென்மேலும் பெருகல் எவ்வகை கைகூடுமென்று துணிவான் சில வியாசங்கள் எழுதத் தொடங்கினோம்.

N. R.

(இன்னும் வரும்)

---


# YATHARTHA BHASKARAN

## An Anglo-Tamil Monthly

RECORD AND REVIEW.

(*Published in the second week of every Month*)

Vol. II } OCTOBER AND NOVEMBER. { Nos. 4 & 5.


CONTENTS.

(English.)


| | PAGE. |
|---|---|
| Editorial Notes ... ... ... ... | 49 |
| The Sage of Vadalur ... ... ... | 51 |
| The Editor. | |
| Zoroastrianism ... ... ... ... | 53 |
| A. S. Moodeliar. | |
| Review of books ... ... .... ... | 54 |


பொருளடக்கம்.

(தமிழ்.)


| | பக்கம். |
|---|---|
| பக்தியோகம் ... ... ... | 56 |
| பத்திராதிபர். | |
| பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 58 |
| புணர்ச்சியைப் பற்றியது ... ... | 63 |
| அ. மே. சென்னகேசவலு நாயுடு. | |
| நம்மவர்க்கான நவீனயோசனை... ... | 64 |
| N. R. | |
| ஸரஸ்வதி V. M. S.... ... ... | 66 |
| கடிதங்கள் ... ... ... | 69 |



### YATHARTHA BHASKARAN.

—:o:—

*Terms of Subscription.*

Annual subscription including postage in advance. ... ... ... Rs. 3-8-0

Superior Edition for patrons Minimum Subscription in advance ... ... Rs. 10-0-0

**Single Copy as 6.** **Old No. as. 8.**

N. B. The year begins with July, and subscriptions will not be accepted for broken periods. New subscribers joining in the course of the year will, as far as possible, be supplied with the back numbers of the Current Volume.

All literary contributions and books for Review should be addressed to the Editor, 'Yathartha Bhaskaran' Chintadripet, Madras, and all business letters to the Manager to whom all remittances should be made payable.

The *Yathartha Bhaskaran* affords a cheap Medium for advertising. Rate per page per insertion Rs. 10. Apply to the Manager, 'Yathartha Bhaskaran' Office, Madras.

### யதார்த்தபாஸ்கரன்.

சந்தா விவரம்.

வருஷசந்தா ...ரூபா 3—8—0,
பிரதிசஞ்சிகை அணா 6. பழையசஞ்சிகைஅணா 8.
முன்பணம் கட்டாயமா யனுப்பவேண்டியது.
போஷகருக்கு வருஷ சந்தா ...ரூபா 10—0—0
N. B. சிங்கப்பூர், பினாங்கு, மோரீஸ், நேடால், இங்கிலாந்து முதலிய தேசங்கட்கு வருட சந்தாரூபா. 5—4—0. அல்லது 7 Shillings in advance.
ஆபீஸ்: சென்னை சிந்தாதிரிப்பேட்டை பங்களா வீதி.

# Patrons.

1. Sreeman P. Pandithorey Devar Avergal, Zemindar of Palava Nattam and President, Madura Tamil Sangam, Madura.

2. Sreeman Rao Bahodur A. Maikanda Deva Moodaliar Avergal, Mysore Hall, Bangalore.

3. The Zemindar of Elagiri, Ponneri : near Jolarpett.

4. Sreeman N. Rathanasabapathy Pillai Avergal B. A. & B. C. E., Retired Executive Engineer P. W. D. "Sundra Vilas," Brodi's Road Mylapore, Madras.

5. Sreeman V. Ratnavelu Mudaliar Avergal, Supervisor, office of the Controller, Military Accounts, Fort St. George.

6. Sreeman P. Rajaratna Moodaliar Avergal, B.A., Presidency Magistrate, Madras.

7. Sreeman P. Krishnaswami Moodaliar Avergal, Dubash, Messrs. Alfred Young & Co., Broadway, Madras,

8. Sreeman Seeyali Krishnaswamy Chettyar Avergal, Pondichery,

9. Sreeman V. O. Chidambaram Pillai Avergal, Pleader, Tuticorin,

10. Sreeman P. Muthuswami Pillai Avergal, Madras.




# YATHARTHA BHASKARAN

FOR

## God Humanity And The Motherland.


## Editorial Notes.

### THE EDUCATION OF THE MASSES.

We are afraid that the subject of the education of the masses of our country has been almost left in the lurch by our educated men who have been working for the regeneration of the country. We cannot altogether depend upon Government alone to give the masses of our people even primary education which is quite indispensable for their well-being. Any country which is hopelessly backward in education must necessarily lack in self-help which is *the* one virtue that will help any nation to become great in any sense of the term. The boon of education alone could solve the problem of our national glory and no sacrifice would be too great on the part of the cultured in bringing that blessing to the people at large. To reclaim our people from the mire of ignorance and superstition they have been sunk in for ages together and to hold aloft the light of faith and progress to them, should be the all-absorbing duty of the leaders of our society.

* * * *

Anything done in the name of the nation, should have in our humble opinion the sanction of the nation and those who pose as its representatives and well-wishers should therefore command the full confidence of the nation. We wonder if our patriots who agitate for political reform have in any systematic manner ever tried to educate the masses in matters political. We doubt if the social reformer who has been working for our social amelioration ever appealed to the nation in the cottage for sympathy and co-operation. And have our spiritual giants we ask, who owe their all to the ignorant ryot ever attempted of late any real missionary work to redeem our peoples from the hotbed of irreligion, no-science, and bad philosophy in which they appear hopelessly to be buried in.

* * * *

Our public men have to move with the masses to improve them or educated them in anything. The well-meaning reformer has for the time being to efface his personality altogether and move on terms of perfect equality with those whom he would help. We have the examples of Christ and Krishna, Mohamad and Budha and scores of other noble souls to guide us in our work on Earth. *Selflessness* should be the motto of our patriots and they should show to the world that even in this iron age of man, Bharat-Varsha is not altogether lacking in Ramas, Harishchandras, Sibies, and others of their unrivalled nobility. We quote below the remarks made by Mr. Lal Mohun Ghose the President-designate of the approaching session of the congress in his speech at a dinner given last month in honour of the Hon. Babu Bhupendranath Bose, the newly elected representative of the Calcutta University in the Legislative Council as being particularly appropriate to the occasion :—

"It is of the utmost importance that the choice of the constituency should be such as to justify the great trust that has been reposed in them. They should vie with each other in electing the worthiest men available. We want men who, undeterred by the frowns of Government, will have the courage to lead us when we are moving in the right direction. We want men who will have the still higher courage of risking the sacrifice if necessary of some portion of their popularity in order to raise a warning voice

whenever we happen to be drifting towards sand banks or rocks (cheers). When tried men with a record in the past are opposed by others who have never before taken any part in the discussion, who have never borne the heat and burden of the day, whose sudden interest in public affairs is the mushroom growth of a single night, when such carpet knights enter the arena of politics seized with a sudden craving for personal honour and distinction —and such instances have been known both in this country and England —constituencies ought to be particularly on their guard. We want men of strong common sense and sound judgment who, when they take their seat on the council will know when to oppose and when to accept a reasonable compromise. We do not want flunkeys on the one hand or firebrands on the other. Above all we want men who will enter the council, not for any selfish object of their own, but with a fixed resolve to discharge their duties loyally, conscientiously and without fear or favour." We heartily commend these observations of our learned countryman to the notice of all public men who want an ideal to keep in view in their unselfish work for the country.

* * * *

## THE MADURA TAMIL SANGAM.

We are glad to have perused a copy of the 2nd Anniversary report of the Tamil Sangam at Madura sent to us by the secretary of this useful institution. We understand that the sangam has had a brilliant success in its work for the past two years and that it bids fair to turn even better work in the near Future.

Whatever might be said by others as to the desirability of teaching our College students Sanscrit in preferance to Tamil, we hold that Tamil is as good as Sanscrit or any other language of the Aryan stock for purposes of culture and that the Dravidian literature and civilization are as ancient as any known to humanity. Even to understand Western science, we don't need to study Sanscrit as a help, as we are sure it is far better to attain scientific knowledge through English than Sanscrit as a medium.

It is only through the Vernaculars that we would ever be able to appeal to our masses generally and our illiterate sisters in particular. What would be the use then of our trying to make our children think in Sanscrit or Latin as they wouldn't talk to each other or the people in Sanscrit or Latin. And among the Vernaculars of the country is not Tamil a precious heritage to the Tamilian who knows anything of the immense mine of wealth that his ancestors have bequeathed to him. The glory of the Tamil language, its wonderful literature, and its hallowed traditions are a matter of no small pride to the Tamilian of the modern day who studies them now in the light of history and science. Need we say then that Southern India owes a dept of deep gratitude to Sriman Pandithoray Devar, Zemindar of Palavanatham for reviving an ancient and revered institution once presided over by *Pasupathy* Himself, on lines which are especially suited to the present age and generation. Mr. Pandithoray Devar has established the Tamil sangam at Mudura and is maintaining it and working it up at a great cost of money with a patience and perseverance worthy of the great cause he has embraced, and worthy of himself and the traditions of his noble family. Such a gigantic undertaking as this one, would involve no doubt no small amount of the sacrifice of the time, energy, wealth and money of the philanthropist who happens to be the presiding genius of the whole movement. Would to God, we had a score of men of the stamp of Mr. Devar to help the regeneration of our country ! ! Would that the nobility of the land came forward to patronize the Sangam liberally and substantially !

The stolid apathy of the masses of our peoples and the inertia and indifference of most of our half-educated classes in matters relating to the well-being of the nation is simply pitiable, and we sincerely hope that institutions of the kind above referred to will have a long lease of existence and work in harmony and peace for the good of humanity through national ideals modified somewhat no doubt to suit the requirements of the present day and circumstances. May Blessed Shiva bless the fourth Sangam with a long and useful career !

* * * *



The following Resolution has been passed by the Humane Diet Committee of the Humanitarian League, 53, Chancery Lane, London, W. C.—and we are glad to publish the same in the Bhaskaran at the instance of the Humanitarian League London :—

That this Committee desires to record its protest against a certain class of pictorial advertisement, in which a jest is made of the terror and suffering of animals, and to express the opinion that the increasingly widespred exhibition of such revolting placards—offensive alike to the eye and the moral sense—is a matter which demands the attention of the public authorities.

## THE SAGE OF VADALUR.

Southern India has been the home of saints for several thousands of years. The so-called benighted Presidency gave birth to men whose thoughts are to-day agitating the minds of all India, or all the world perhaps. Sankara, Ramanuja, and Madwa were all born on this side of the country. Shaiwaite saints whose spiritual altitude is a matter of admiration to the civilized world and Vaishnava Baktas of world-wide name and fame, ideal kings whose high sense of justice and, whose wonderful spiritual life are a puzzle to the English—educated Hindu, all—all these came from Southern India. If the south had borrowed anything from the North, its own civilization should have reacted on that of the North. In their contact with each other, they quickened into life a newer one as the effect of the play of these forces, to attain a further evolution by contact with the Mohemedan and European civilizations of later times, and of a broader outlook for humanity. The present state of things in modern India is however due to the stagnation that had set in, hundreds of years ago and which to our shame continues to the present moment. There is no standing still at any point in evolution. If you don't go forward, you are bound by the laws of Nature to go backward. Stagnation sets in at the point where no attempt is made at further progress and *stagnation* means *death*. This is how we find our country approaching the brink of its moral degradation and ruin. Now-a-days, it is more or less a fashion to take things on trust as one of our contemporary remarks and to pooh-pooh the inquiring man as a sceptic or non-believer. " Quench the spirit of inquiry " is what you are taught to-day by men who pose as religions teachers. But it was otherwise with the ancient Hindu. " Quench not the spirit. Prove all things and hold fast what is true and good." This motto of life was the secret of the success of the ancient Hindu. The many philosophical systems that he built, the sciences and arts that he cultivated and the laws and regulations he framed are all attributable to his faith in himself. He had his eyes open always; he went into the reason of things and he fought for freedom of thought and spirit. He had, it is said more of questioning scepticism and more of Individuality than many could boast of even in the progressive countries of the modern world. Modern India is groaning under the tyrany of preist—craft, custom and superstition and we in our folly have given up the substance to run madly after the shadow.

That is why lot of ill-feeling has been shown by some Shaivites (worshippers of Shiva) in an unhealthy and uncharitable discussion of the splendid Tamil work Tiruvarutpa (திருவருட்பா) left as a rich heritage to the present generation by Srimat Paramahamsa Ramalinga Swamigal of Vadalur who was born in a village near Chidambaram early in the forties of the last century. No small load of abuse has been of late heaped on the noble memory of the great man who was no mean ornament to his society and country in his own time. What Swami Dayanand Saraswati is to the Arya Samaj, what Rajah Ram Mohan is to the Brama Samaj, that Swami Ramalinga is to the Shaiva Cult of Southern India. Our Swami was a contemporary of the Sri Ramakrishna Paramahamsa Deva and had he possessed a disciple with the talents of a Keshub or a Vivekananda his name and fame would have eclipsed in our opinion that of all other sages of our knowledge, in recent times. The Swami rose superior to the blind superstition and arrant ignorance of his times and his

unique individuality became a matter of no small envy and hatred to the leading scholars of his day. They had known him as a man and they would not acknowledge him a god-man. His Heavenly inspiration and commanding spirtuality had totally blinded their eyes unaccustomed as they were to such unearthly splendour. The unblemished purity of the sage's life throughout, was to some of his enemies an enigma and his poetic effusions of Grace were denounced in the most virulent terms possible. But in due time, vehement protests were entered by thinking men against the undeserved insults levelled against the swami and his work, and the matter was dropped there without further comment. For years now the book of grace (திருவருட்பா) has been the spirtual food of all classes of people in Southern India both among the literate and the illiterate. It seems to appeal to their inner most souls as it were, and we ourselves think this glorious work would do ample credit to any inspired poet of any age, or nation for that matter. In the midst of the worries of life, it has sometimes proved an anodyne to the sinking spirit and we are aware of sceptics shedding tears of joy when they were suddenly treated to a few hymns from the wonderful work of the Vadalur Saint.

At a time when other parts of the country are arranging national celebrations in honor of their own heroes and when on such occasions our countrymen in other Presidencies feel the throb of the national Heart-beat which reacts upon and stimulates that of each individual of the race, some of our fire-eating baktas of Madras are wasting all their precious energy in belittling their own great men, in sentimental laments over their shortcomings, in futile academic discussions relating to the literature they have bequeathed to posterity and empty and superficial vapourings in extraneous matters that have no direct bearing on the well-being of the community at large. In the face of such pure ingratitude of our friends and their camp-followers whose number is legion perhaps, how dare we deny that our hope of our national rehabilitation is almost in the throes of death ?

We had the pleasure of attending a counter-demonstration set up by a number of pundits in Madras strongly protesting against the proceedings of the party who were bent on persuading people to give up the study of the Vadalur Swami's works as mischievous and misleading. And there, we were much amused to see certain side-issues raised and discussed with great vehemence by our Siddanta professors. They contended that *Arutpa* could not be considered on a par with *Devaram* and *Thiroovachakam*; and they claimed for the authors of *Devara Thiroovachakam* Patihood or Divinity in the highest sense of the term. What these learned pandits meant we are however unable to understand. Do they mean that from the point of view of the Siddanta school, there are five patis (gods) in all, or do they want us to believe that the four Shaiva Achariyas were incarnations of the Great Shiva. If the latter theory were true, then the question would be :—Whether they were avataras in the sense that Rama and Krishna were the avataras of Vishnu or some other sense which we laymen cannot easily grasp.? Our friends also claim for these Shavia Achariays freedom from birth and death even on earth, and this is something which in all conscience we are unable to devour wholesale.

At all events, we were glad to hear them pronounce a decided opinion on other issues raised by the opposite party in connection with the Arutpa question. The Jafni leader of one section of the Shiavite Camp (Heaven knows how many Schisms will fail soon be created by our excellent friends there) would appear to have pronounced the Arutpa wanting in grammer, idiom, and diction. He would have it also, that the *Vadalur Swami* was full of Aham (Egoism); spoke un-Siddantic things, misled his followers and so forth.

We are sure that none of these charges would hold water even for one moment, and we sincerely hope that in the best interests of the Shiva Religion and Community, our misguided friends would give up all these unholy discussions of great men and spiritual books and do their utmost best in future to make for true progress and true spirituality. A child should not sit in judgment upon the doings of the intellectual giant, and we humbly believe that most of our Shaivite friends who are so zealous of their sectarian religion are mere children compared to the great man to villify whose fair fame they have so readily come forward. The swami was a true Shaivaite. He had no doubt realized Shiva in a manner which very few can hope to do on this side of the grave. He stood on a plane of thought which is not to be approached by the masses at large. He spoke of things which measured by the standard of the average intellect appears all to be sham perhaps, and his glory actually blinds the eyes of those who would dare look at him with their mortal eyes of flesh and blood. We would relate the history of his noble career on earth in a future issue of the Bhaskaran.

*THE EDITOR.*



## ZOROASTRIANISM.

A beautiful system of ethics and philosophy such as Zoroastrianism, cannot but fascinate a thoughtful mind. But this idol of beauty, this statue of thought, is enshrouded in the ruins of the Past, thicklaid with accretions of ages. Let us then proceed deep into the past and take out the idol with gentle hands, brush aside the excretions, and place it on a high pedestal before all men for inspiration and strength.

Long, long ago, the Aryans of old, branched off from their ancient home into different directions. Some passed westward, and eastward moved some others. Of the latter, some settled in Iran or Persia ; and others pressed on through the snowy regions of the Himalayas into India.

While living together somewhere between the freezy regions of the Polar and the banks of the Euphrates, they had one common faith and worship, one common language and custom. Time passed: Things changed. The home was broken—groups after groups began leaving for distant lands. Beliefs underwent changes. The Aryans that chose to settle themselves in Persia came to be known as Parsis. Subsequently driven out of Persia, they sought a home in Western India.

Like the ancestors of the Aryan Hindus, the fathers of the Parsis of to-day were a pastoral race. They were Nature-worshippers. Amongst these people, somewhere about Bactria, between 1000 and 1400 B. C., arose a powerful personality, known to fame as Zoroaster or Zarathushtra. The details of his life are scanty. From the meagre report of his life, we can however see in him a brave and thoughtful man. With a burning conviction, with a daring courage, he comes out to the world, to deliver his message. He meets with fierce opposition and displays the splendid courage of a hero. He rouses to enthusiasm his half-hearted followers. He braces his soul against despondency and discouragement. Firm in his faith, strong against opposition, he worked on his Mission. The two brothers, Frasaoshtra and Jamaspa, introduced him to Vishtaspa the reigning Monarch of Bactria. Jamaspa was the Minister to Vishtaspa, and therefore powerful man in the land. He gave his sister Hvovi in marriage to Zoroaster, and Zoroaster had a good number of sons and daughters. Supported by a King, Zoroaster found his work a great deal facilitated. He preached and worked. He braved and suffered ; he struggled and succeeded. The Avesta makes no mention of his death. But it is related in the Shah-Nama that he was put to death by a Turanian Conqueror. He died at the altar, it is said. Yes, at the altar of service to humanity : Thus fell a hero who had given to the world the riches of his great thought and let us now hear what Mythology has to say : he was a messenger from God : he came down on earth to exalt the Good and dethrone the Evil : he was the beloved of Ormuzd, the God : He was the first of men, according to the words of Ormuzd—" He is the best who is pure of heart." He passed through fire untouched. Even molten lead could not touch him with pain: He got the Avesta from Ormuzd to present to the world through the great king Vishtaspa.

The explanation is simple : a good man like Zoroaster must be a dear one to God : he must war against the powers of evil and

welcome good : he who is pure must be great and he who is pure and loving must be above all hate and pain. A great collection of books called the Zend-Avesta contains the doctrines of Zoroaster. Zend the " interpretation" is in Pahlavi : Avesta means " knowledge." So Zend-Avesta means knowledge interpreted or translated and commented on in Pahlavi. The Avesta is divided into : 1. The Yasna which contains Gathas or Hymns offered at sacrifices. 2. The Vendidad which contains rules of the Avesta (the term implies against demons). 3. The Yashta which contains hymns to particular and favourite gods.

Zoroaster saw the unity of God in Ahura Mazda or Hormazd or the 'Wise Lord.' He saw differentiation in Manifestation. He saw conflict between good and evil in Nature. The lord of the good was Ahura Mazda and the lord of evil, Angra-Mainyu, or Ahriman. But he was assured of the ultimate triumph of good over evil : Fire, or Star was considered the image of purity and worshipped as a sign of God. That is why even to this day, the dead are not burnt by the Parsis—for, by so doing, the pure fire is polluted—but delivered into a place, called the Tower of Silence. To proceed. Though like his ancestors and contemporaries, Zoroaster, saw gods and devils in the objects and aspects of Nature, he had a wider sweep of vision. He believed in the Unity as expressed in the Universality. And this Universality, this All, was to him a Reality,and this Reality appeared to him as nothing but Goodness. But how to account for the presence of Evil ? He brushed aside the problem by seeing Duality as a necessary condition in Manifestation and by the prospect of ultimate annihilation of Duality. How to kill Duality, how to kill the poisonous brood of Separateness ? By Purity, says Zoroaster. He wants Purity, he wants Beauty. Purity—of what ? Purity of mind. Beauty—of what ? Beauty of soul ! A great, noble soul, must Zoroaster be, to preach the philosophy of purity some three thousand years ago. To be pure in thought, word and deed,was to him the very web and woof of Godhood. And who would not pay his homage to a lovely soul such as this, to an illustrious sage, who gave to mankind these thoughts of beauty.

"All good thoughts, good words and good deeds proceed through knowledge."

" All evil thoughts, evil words, and evil deeds proceed through ignorance."

" Purity is the highest good, is the highest happiness. Happy is he who is the purest in purity."

"The man who is pure is the ruler of the world."

A. S. MUDALIAR.

## REVIEW OF BOOKS.

*Tamil Prosody* or செய்யுளிலக்கணம்; price as. 8 per copy :—

We are glad to have perused a copy of the 2nd edition of செய்யுளிலக்கணம் or Tamil prosody sent to us for review by its author Mr. Ashtavathanam Kalyanasundra Mudaliar of Madras. The contents of the brochure contains more useful matter than other booklets of the kind we have ever come across. We are of opinion that Tamil students have generally neglected this part of their grammer for want of a book which explains the principles of prosody in a clear and simple manner, and we are sure that the present treatise would supply the long-felt want to earnest students of our mother-tounge. We are at one with the late Professor Ranganada Mudaliar who observed that those who cared to enjoy the metrical beauty and harmony of Tamil poetry would do well to study this interesting manual. We trust this valuable work would be largely patronised by the Tamil public.

*Siddanta Vachana Booshanam* : by Mr. Ashtavathanam Kalyanasundra Mudaliar of Madras ; Pundithan Mitran Press, Madras 1903. Price one rupee per copy.

We have persued with pleasure the contents of this useful work throwing a great deal of light on the Siddanta School of Southern India. The Siddanta works have all been written in verse hitherto, and the ordinary student is not generally able to understand them properly. Our able friend has done well to write an excellent treatise in lucid prose so as to enable one and all to get a proper idea of this philosophy which



has been in our opinion sadly neglected by the most part of our students of Indian philosophy of the present day. We are sure his work would be welcome to all Shaivaites and would be patronised by English-educated Hindus in particular who would find it a great help in mastering the subject of Siddanta.

The Siddanta posits three padarthas or entities coexisting eternally with each other, *viz.*, Pati, Pasu, and Pasam. Pati is God, Pasu is Jiva or the finite soul, and Pasa is the essence of matter which binds the soul in all Eternity. Probably the Siddanta *Pasa* corresponds to the *Prakrite* of the Vedantin. Pati or God of His Infinite Grace performs his panchakritya or the five acts of creation, sustenance, destruction, and so forth, for the behoof of the soul. And when all the souls attain liberation or Mukti Panchakritya probably ceases once for all. We think this is the gist of this system which has been a bone of contention with other Vedic Schools of Philosophy for ages together. The book under review explains in a concise manner the whole system and also records how at various times they (the Siddantins of old) put down their opponents of other schools both Vedic and un-Vedic—in fair discussions of those other systems which at one time or another held sway over the minds of men in India. We commend the book to the notice of all earnest students of our various systems of philosophy which have been the pride of the Hindu for thousands of years and which are bound to be so in all future.

*Buddhism* by Mr. A. S. Moodeliar ; Irish Press 1903; price 4 annas.

This is a small brochure containing some thirty pages of closely printed matter which we received a few months ago for review and we owe an apology to the author for not noticing it earlier owing to pressure of various engagements which we could not have foreseen then.

Buddhism, the first missionary religion of the world is described in beautiful terms in this pamphlet and we make no doubt but that it will appeal to the head and heart of the cultured classes in India. There are few real students of Hindu Religion who are not already aware of Buddhism being a splendid offshoot from the parent tree of Hinduism and to them especially these pages teeming with so much intelligent information will be of no mean importance. A brief life of Buddha is also given by the author for the benefit of the reader and a short history of the progress of this great religion through centuries since the Maha Nirvana of the Master has been added to leave a lasting impression on students of Comparative Religion and Philosophy.

We are of opinion that there now seem to be some very bright prospects for the revival of Buddhism in India and we sincerely hope our friend will earn the gratitude of posterity for the pioneering work he has begun doing so well in the cause of the Protestantism of India which, in enforcing rational enquiry as the religion of love and thought into the nature of things, repudiates in the strongest terms all meaningless ritualism and scoffs at all invidious and man-made distinctions between man and man. We heartily commend this excellent though small work to the patronage of the educated public at large.

**Savitri**:—*A splendid Tamil romance; price as* 10. *Messrs Thompson & Co, Broadway, Madras.*

Mr. V. Mun Kumaraswami has based his romance on an oral tradition of the story and has added to the effect of the orginal. He has set for himself a high standard of literary writing which is worthy of appreciation by students of Classic Tamil—*The Madras Mail.*

# பக்தியோகம்.

ஜீவான்மாக்கள் பரமபதியை யடைதற்கேதுக்களாகிய நான்குவித யோகங்கள் நம்முன்னோரால் நிரூபிக்கப்பட்டுள்ளன. யோகம் என்பது ஜீவன் பேரறிவோடு கலத்தலாம். ஆணவத்தோடநாதி தொட்டு அத்துவிதம் பெற்றிருந்த ஆன்மா பதியுடனத்துவிதமாய் நிற்றல் எனினும் பொருந்தும். யோகம் என்ற சப்தம் கூடுதல் என்ற அர்த்தபுஷ்டியுள்ளதென்க. பிரஸ்தாப யோகங்கள், கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் என முறையேவேதாபநிடதங்களில் பேசப்படும். மனுக்களின் குணாதிசய பாகுபாட்டினிற் கேற்பஇவை உபயோகமாகும். மக்களுள் ஒருவர் முகத்தைப் பிறிதொருவர் முகம் ஒத்தில்லாமை கண்டும் மானுஷியத் தன்மையில் ஒருவரி லொருவர் வித்யாசப்படுதல் கூடாமை கண்டோமாக. அவரவர் இவ்வுலகின் கண்ணே ஸர்வேசுரனையடைய முயலுமார்க்கங்கள் பலவாய்த் தோன்றினும் அவரவர் அடையும், அடையக்கிடக்கும் பொருள் ஒன்றேயாதலை நாம் காணத்தடையுண்டோ? சரித்திர ஆராய்ச்சியுடையார் அனுபவத்தில் வைதிக சமயிகள் நீங்கலாகக்கிடந்த ஏனைய புறச்சமயிகளுள்ளும் இவ்வுண்மை சாலப் பிரகாசிப்பது ஐரோப்பிய சரித்திரத்தினுள் படிக்கப்படுகிறதென்பது பிரசித்தம். இது காரணம் பற்றியன்றோ, புறச்சமய இருளறவோட்டி வைதிக சூரியன் உதயமாம் சமயமறிந்து சிறுமத்ச் சிறு விலங்கினமெல்லாம் சண்டமாருதத்தில் பஞ்சுபட்ட பாடுபட்டொழிய லோக முழுமையும் கர்ச்சித்தஸ்ரீமத் விவேகாநந்தப் பேராளனும் ஆணிசிங்கத்தையாட்கொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ண பரமாம்ஸ தேவர் இன்று சகலஞானம் பொங்கிவழியும் ஐரோப்பா அமெரிக்காக்கண்டங்களில் ஆயிரம் பதினாயிரம் கணக்காக விவேகிகளால் பூஜிக்கப்பட்டு வருவது? இதனானே, ஆன்மாக்கள் பக்குவநோக்கியும், மக்கள் அவ்வப்போதடையும் மனோசக்தி யேற்றங்களை நோக்கியும் பகவானையடையப் பலவழிகளிருத்தல் அத்யாவசியமென்பது பிரகாசப்பட்டதென்க. எனவே, நம்மனோர்தொன்று தொட்டுப் பேசிவந்த நான்குயோகங்களையே புறச்சமயிகளும் உணர்ந்தும் உணராதும் பின்பற்றி நின்றனரென்பதே அறிவாளிகளின் சித்தாந்தம்போலும். இப்போது நாம் பக்தியோகத்தைப்பற்றி மட்டுமே பேசுவோம். மற்றொருசமயம் இதர மூன்றனையும் பற்றிப் பேசப்புகுவாம்:—

பக்தியோகம் இந்தக் கலியுகத்தில் முக்கியமாயப் பிரயோசனப்படத்தக்கப் பெருஞ்சாதனமாயுள்ளதென்றும் நம்மனோர் சாஸ்திரங்கள் கூறுநிற்கும். சர்வலோக நாயகனையடைய இஃதே சுலபசாதனம்போலும். பக்திமான்களையன்றோ அறிவுடையுலகம் பெரியரெனக்கூறியது? பெரியபுராணசிரவணமன்றோ, இந்தப்பிரதேசங்களில் ஆங்காங்கும் சர்வதா நல்லோரால் செய்யப்பட்டுவருகின்றது? அன்பர் பாமாலைக்கன்றோ ஸ்ரீசங்கரன் யாண்டும் எதிர்பார்த்து நிற்கின்றனராம்?

“அன்பர்பணிசெய்ய என்னை யாளாக்கிவிட்டுவிட்டால், இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே.” என்றார் நந்தாயுமானாரும். அன்பில்லாத ஒருவன் நிஷ்காம்ய கர்மஞ்செய்வதெங்கே? அன்பறியின் மூச்சைப்பிடித்தென்ன? சலத்திற்கிடந்தென்ன? நெருப்பிற் புகுந்தென்ன? அருளறியாப்பேதை உபநிடதம்பேசுவதேன்? கீதை படிப்பதேன்? பிரம சூத்திரம்கேட்பதேன்? அன்பைவிட்ட யோகமுமில்லை, போகமுமில்லை; அன்பே யாவற்றிற்கும் ஆதாரமென்க, அன்பிலார் உயிரற்ற உடலேயாவரென்பது உண்மை, உண்மை.

பரமேசுரனை யடைவான்கருதி முன்னர் பகிரங்க அந்தரங்க பிரதீக உபாசனைகளிற் பழகி அவனது அநந்த கலியாண குணாதிசயங்களைவியந்து உருகித் திருவருள் கடாக்ஷிக்க அவன் திருமேனியருளேயெனத் துணிந்து அன்புருவாய் நின்று அவனருட் கடல்மூழ்கிப் பற்றொழிந்து கிடப்பதேஅன்பென்க.

“அன்புசிவமு மிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவ தாருமறிந்திலார்
அன்பேசிவமாவ தாருமறிந்தபின்
அன்பேசிவமா யமர்ந்திருப்பாரே”



என்ற திருமந்திரம் சர்வமத சித்தாந்தமேயாகும். பக்தியோகம் சொன்ன நாரதர்முதலிய மகரிஷிகளெல்லாம் அன்புருவாய் நின்றவரென்பதொருதலை. மெய்யன்புடையார்க்கு யாவும் சிவச்செயலென்றே தோற்றம். இவர்கட்குத் தந்தை தாய் மகவிவைபரனேயாவர். இவர்கட்கு “நான்; எனது” என்னும் அகங்காரமமகாரங்கள் சுவப்நத்திலும் கிடையா. இன்னார் உள்ளன்புள்ள மாதரேபோல ஏகநாயகனிடத்துத் தங்கள் அன்பை வளர்த்தவர்கள். இவர்கள் திருஷ்டிக்குக் கொடும்பாவிகளும் சுற்சனராய்த் தோன்றுவர். இவர்கள் அஞ்சுவதுமில்லை; அஞ்சத் தகுந்ததுமில்லை; இவர்களை நமனு மணுகான்.

“குண்டுகட்பிறையெயிற்
றுபாசவடிவமான
வந்தகா நீயொருபகட்டாற் பகட்டுவ
தடாதடாகாசுநம்பாற்
செல்லாதடா வென்று பேசவாயதுதந்த
செல்வமே.”

என்று நம்பெரியோர் கட்டளை யிட்டுள்ளார். அன்பினருமை அன்பிலாரறியவல்லார்? மலடியறிவாளோ மக்களருமை? பிருந்தாவனத்துக் கோபிகள் கண்ணனிடம் கொண்ட மையல் கலிகாலத்துக் கால் ஞானிகளோ வறியவல்லார்? கீதையில் தீனபந்துவாம் ஸ்ரீகிருஷ்ணன் “என்னன்பனே எனக்கிடம்; யானே அவனுக்கிடம்” என்று 9-ம் அத்தியாயம் 29-ம் சுலோகத்திற் கூறியுள்ள உண்மைகாண்க உலகம்.

பக்தியென்ற பெருஞ்செல்வத்தை யடைந்தவர்க்கு சாதி மத ஆசாரமுதலிய சிறுவழக்குகளெல்லாம் முற்றிலு மொழிந்தனவாம்.

“சாதி சமயச் சழக்கை விட்டேன்
அருட்சோதியைக் கண்டேனடி.”

என்று மேதாவியர்புகழ் மேதாவியர் தொழும் நமது அருட்பிரகாசவள்ளற் பெருந்தகை லோகோபகாரமாகப் போதித்தனரே.

நிற்க: கடவுள் உண்டெனக் கொண்டதே பக்தியாகாது; கடவுளை உணர்ந்தவனேபக்தன். உணர்தற்கோ அவனின்னருளே ஏதுவாகும். “அவனருளாலே அவன் றாள்வணங்கி” என்றுகோஷிக்கின்றது தமிழ் வேதம்.

பக்தி:—அபரபக்தி, சகுணபிரமோபாசனை; பரபக்தி, நிர்க்குணபிரமோபாசனை என்றிருவகைப்படும். அபர பக்தியை பாஹ்ய அநந்ய, ஏகாந்தமென மூன்று வகையாயினதாகவும் சாஸ்திரம் பிரித்துரைக்கும்.

ராகம் விண்டு, விராகம் கொண்டு பரமேசுவரனை யடுத்தலே பாஹ்யமாம். அநந்யம் தன்னிஷ்ட தேவதையையே சகல தெய்வங்களாகக் கருதிப்பூசிப்பதாம்.

“யாதொருதெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி எங்கள் மாதொரு பாகனார்தாம் வருவர்” என்பது இங்கேபிரமாணமாகும்.

“என்னப்பன், எம்பிரான், எல்லார்க்குந் தானீசன்” என்ற ஸ்ரீமந் மணிவாசக சுவாமிகளின் திருவாக்கும் சான்றாகுமென்க.

ஏகாந்தபக்தி, நம்பெருவாழ்வாம் பிரபுவின் கருணையை வியந்து உருகி மனங்கரைதலாம்,

“புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரவேண்டு
மிவ்வையகத்தே”

என்றார் சமயகுரவரும்.

இந்த பக்தியின் பிரயோசனம் கண்ணன் வாக்கால் “சர்வதர்மான் பரித்யஜ்யமாமேகம் சரணம் விரஜ அஹம்த்வாம் சர்வ பாபேப்யோ மோக்ஷ இஷ்யாமிமாசுச:” என்று கீதையில் கேட்கப்படுகிறது.

சகுணபிரமோபாசனை முற்றுப்பெற்ற திவ்யாவஸரமே நிர்க்குணப் பிரமோபாசனைக்கூடிய சமயமாகும். முற்கூறியதில், ஜீவன் சத்துவ அஹத்தோடு விளங்குகின்றான். பிற்கூறிய உபாசனையில் அன்பன் அஹம் முற்று மொழிந்தானென்க.

சகுணப்பிரமம்வேறு, நிர்க்குணப் பிரமம் வேறு என்று யாம் சொற்றதாகக் கொள்ளற்க. சகுணமே நிர்க்குணம், நிர்க்குணமே சகுணம். குணசகிதமான கடவுளே குணரஹிதமானவர் என வேதங்கள் முரசறையும். இந்திரியங்கள்துவாரா மனம் உருவங்களைக் காணநின்றது. பிரதீக உபாசனை சாமான்ய புத்தியுடையார்க்கு அத்தியாவசியமேயாம். விரிந்தமனம் குவிதற்கு இஃதொரு பேருபாயமாகும். பகவானுடைய அருட்கோ

லத்தைக் கல்லினும் செம்பினும் காண்டல் ஓர் அதிசயமாமோ? ஐரோப்பிய தேசங்களில் ஏகேசுவரவாதிகளும், விக்ரஹ ஆராதனை செய்யாதவருமான கிறிஸ்துவர் முதலினோர் இறந்த தத்தம் தாய்தந்தையர் புகைப்படங்களைக் கண்டவிடத்து மனம் உருகிக் கண்ணீர் ஆருய்ப்புரள ஸ்தம்பாகாரமாகி அங்ஙனே அசைவற்றுச் சில நேரம் நின்று புகைப்படத்திற் கண்டார் தம்மை மனமொழிவாக்கான் பூசித்து நிற்றல் யாண்டும் சமபவமெனப் பகைாலும் கேள்வியுற்றேமே. மற்றூ,விடநாயகன் ஒருவன் தன்னருமந்த காதலியைக் காணுவிடத்து அவட்ன் படத்திடம் சென்று தனகாதலைச் சொல்லிவருந்தும் காட்சிமுதலிய சம்பவங்களும் கண் காட்சியாமே. கிறிஸ்துவை யறைந்த சிலுவைக்குறியைச் செம்பிலும் பொன்னிலும் அமைத்துப் பல்லாயிரம் கிறிஸ்துவச் சனங்கள் தங்கள் மார்பகத்தழுத்திக்களிப்பதும் சத்தியமல்லவா?

மகம்மதியர் மெக்காவில் காபா என்ற கற்சிலைக்கு செய்யும் மரியாதைமுதலியன கற்றறிவல்லார்க்குத் தெரிந்த விஷயமேயாகும். மேலும் அன்னூர் பகவானைப் பூசிக்கும் போதெல்லாம் மேற்கே தத்தம் முகங்களைத் திருப்பி நிற்றலும், கிறிஸ்துவர் கடவுளை நோக்கும்போது மேலே ஆகாயத்தை நோக்கலும் பிறவும் வியக்கற்பாலன. இந்திரியங்கள் உணராத கடவுளை மனமும் ஜடமாக, அம்மனம்தான் எப்படி யுணருமோ யாமறியவல்லோ மல்லம். மானதபூசை என்னணம் பிரதிக உபாசனையை விட மேப்பட்ட தாமோ எம்சிற்றறிவினுக்கு எட்டவில்லை. நம்மவர் வெளிவிக்ரஹங்களைப் பூசித்துக்களித்தால் ஏனையோர் உள்விக்ரஹங்களையே பூசித்துப் பூரித்தல் வெளியாகிறது. கர்மேந்திரியங்கொடு,ஒருவிக்ரஹத்தைச் செய்யுங் காலத்துள் மனம் எத்துணையோ கோடானுகோடி விக்கிரகங்களை சிருஷ்டித்து, ஸ்தித்து, அழித்தும் வருகின்றது. விக்கிரகாராதனை கூடாதெனக் கூறுங் கக்ஷியோர் தாம்பூசிக்கும் கடவுளும் தம்முடைய மனேசிருஷ்டியேயெனக்கண்டு மனம்தெளிவாராக. உள்ளபடியே, மனம் உள்ளவரையில் மக்கள் செய்யும் பூசையெல்லாம் விக்கிரக ஆராதனையேயாகுமென்பது எம்முடைய துணிபு. விக்ரஹத்தை விட்டால் விதியில்லை. ஒன்று தூலம்; ஒன்று சூக்ஷ்மம். இதுவன்றி வேறுவித்யாசம் சாதாரணபூசைக்கும் மானத பூசைக்கும் இல்லை யென்க. ஆனல் பகிரங்கப் பிரதீக உபாசனையிற் சில காலம் பழகினேர்க்கு அந்தரங்கபூசை மேன்மையைச் செய்யுமென்பதிற்றடையில்லை. மானச பூசையின் பிரயோசனம் மனம் நசித்தலாகும். மனம் நசித்தவவசரமே பொருளையுணர்தல் சாத்தியமாகும். "அதுவானல், அது வாவர், அதுவே சொல்லும்." என்ற ஆன்றோர் அமுதவுரையை இங்கே சிந்திப்போமாக.

அருவம்வேறு, உருவம்வேறு எனச் சிலர் சாதிப்பர். இது முற்றும்தவறு. அருவமே உருவம்; உருவமே அருவம், அருவம் ஓர் அவசரம்; உருவம் ஓர் அவசரம். அருவத்துக்கப்பால், உருவத்துக்கப்பால், அப்பாலுக்கப்பால் யாண்டும் நின்றஎன் பெரிய பெருமான், அவன் அடியார் உய்தற்பொருட்டு அருள்மேனி தாங்கிவருவதில் இயற்கையின் சம்பவத்திற்கு விரோதமொன்றுங் காணேம். அவனுடைய லீலாவிபூதியை யாருணரவல்லார்? அவன் கொண்ட திருவுருவங்களைப் பூசித்தல் யாங்ஙனம் அநுசிதமாகும்? இதுவே இந்துக்களின் பிரதீ கோபாசனையின் இரகசியமாகும். நம்மனோர் எக்காலத்தும் பக்தியோகம் பழகி, பக்தியோகம் பேசி, பக்தியோகம் ஓங்க, பக்தியோகம் உலகமெங்கும் ஓங்கிவளரக் கண்டுகளித்து வாழ்வாராக !!

பத்திராதிபர்.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

### மாடின்றி உழும் கலப்பை.

பிரிடிஷ் இந்தியாவின் இராஜதானியாகிய கல்கத்தா நகரம் பல்லாண்டுசெய்த பெருந்தவமே உருதரித்துப் போந்ததென்ன உற்பவித்த சாஸ்திரவிற்பன்ன சிரோமணி புரொபசர் போஸ் (Professor Bose) என்னும் சுதேசகனவான் இப்போது மாடின்றி (குண்டையின்றி) உழவுக் குதவத்தக்க கலப்பை யொன்று கண்டுபிடித்தனராம். இந்தக் கலப்பையை இரண்டு ஆள் கொண்டு உழுவித்தால்



மூன்று குண்டை (ஆறு மாடுகள்) பூட்டிய மூன்று ஏர் செய்யக் கூடிய உழவுத்தொழில் வெகு சுலபமாகவும், குறைந்த பணச்செலவிலும் செய்யக் கூடுமெனத் தெரியவருகிறது. பங்காள தேசத்துக் குடிகள் இப்போதே இந்த நவீனக்கலப்பையை ஏராளமாக வாங்கிப் பிரயோசனப்படுத்தி வருகின்றனரென்றறியலானேம். இஃதன்றோ கல்வியின் பிரயோசனமாகும். பெரும்படிப்பைப் படித்துப் பட்டம் பெற்ற கனவான்கள் நமது சுதேச கனவானைப் பின்பற்றி நாட்டுக் குபகாரம்செய்து மேல் வருங்காலத்தேனும் பெரும்புகழடைந்து வாழுமுயல்வாராக !

### தற்கால ஹிந்துக்களின் மதாபிமானம்.

பூர்வீகஹிந்துக்கள் அடைந்திருந்த மகோந்நதநிலையை யறியாதாரில்லை. கடவுள் ஞானம் அவர்கள் உலகத்தாருக்குப் போதித்து வந்த நேர்மை இற்றை நாளும் யாவரானும் வியக்கற் பாலதாகும். ஏனைய பிறநாட்டாரும் இத்தேசம் சேர்ந்து மேதாவியர் பலரிடம் தத்துவ ஞானம் ஓதினரென்ப. கிறிஸ்துவர் தெய்வமான ஏசுவும் இப்பாத கண்டம் அடைந்து தமதிளம்பருவத்தில் புத்ததருமமும் வைதீக தருமமும் ஓதினரென்றும் சிலர் அப்பிராயப் படுகின்றனர். புத்தமுனிவருக்குப்பின் வெகுகாலம் ஹிந்துக்களும் பௌத்தர்களும் எத்துணை ஒருமை மனதுடன் வாழ்ந்துவந்தனரென்ற அரிய விஷயம் சரித்திரங்களிற் பேசப்படுகிறது. இஃதன்றியும் ஹிந்துராஜாக்கள் புராதனகாலத்திற் பிறமதஸ்தர்களுக்கு அபயம்கொடுத்து ரக்ஷித்த விஷயமும், அம்மதஸ்தர்கள் குறைவின்றி அந்தந்த ராஜ்யங்களில் தத்தம் மதாபிமானம் கெடாமல் வாழ்ந்திருந்த விஷயமும் மஹான்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

இக்காலத்திலோ, பொருளைவிட்டுப்பொருளல்லா தவற்றையேநம்மனோர் பெரும்பாலார் பற்றிக்கிடக்கின்றனர். பாகவத புண்ணியர் அனேகர் சீதைக்கும் ராமருக்கும் வாரத்துக்கொருமுறையேனும் கலியாணம் செய்யாது விடவில்லை. கண்ணனுக்கும் ருக்மணிக்கும் ப[illegible]துக்கொருமுறையேனும் பக்ஷமுடன் விவாகம் முடிக்கின்றனர். கதாகாலக்ஷேபங்கள் எங்கும் மலிந்துகிடக்கின்றன. இடிஇடியென்று சிரித்துச் சிரித்து வீங்குகின்றனர் பிரஜைகள். பாகவதர் பெறும் சம்மானம் அவருண்டாக்கும் சிரிப்பையும் கேலியார்த்தைகளையுமே பொறுத்திருக்கிறது. நடிப்பதிலும்இன்னூர் மஹாசமர்த்தரென்றே சொல்லவேண்டும். அபிநயப்பெருமையைப் புகழக் காளிதாசனே பூவுலகம் மீண்டும்வரவேண்டும்போலும். சிருங்காரரசத்துக்கே நம்மனோர் ஏராளமாய்ப் பொருள் செலவிடுகின்றனர். இவ்வளவிருந்தும் நம்மனோர் அடைந்த பிரயோசனம் யாதோவறியேம்.

சைவருள் அனேகர் புராணம் சொல்லும் பிழைப்பை மேற்கொண்டு அடிக்கடி கண்ணப்ப நாயனர் சரித்திரமும் சிறுத்தொண்டர் திவ்விய கதையுமே ஓதிவருகின்றனர். வளையலிட்ட படலம் பரக்கப்பிரசங்கம் செய்கின்றனர். விருத்தகுமாரபாலரான திருவிளையாடலை யாண்டும் பெரியர் பேசாநின்றனர். ஓதியும், பிரசங்கித்தும், பேசியும் என்ன? சைவவுலகம் அவ்வளவாக சிவசம்பந்தத்தைக் காட்டவில்லையே. சைவர்கள் பலர் சைவரல்லாதாரையிழித்துப் பேசியும் பழித்துக்கூறியும் கிடத்தலே கண்கூடாய்க் கண்டோம். சிலர்பெரியரேற்றும் பெரியரைத் தூஷித்துப் பேசியும்எழுதியும் கிடக்கின்றனர். சிவனடியாரையே சிவனடியார் ஒரு சிலர் ஏசிப் பேசுகின்றனர். அருட்பா மருட்பா வெனக் கூசாதுரைக் கின்றனர். ஏனைய ஹிந்துமதஸ்தரும் இன்னோரன்ன விஷயங்களில் காலத்தைக்கழித்துவருதல்பரிதாபம். இதுநிற்க,வேதாந்திகளென்பார்பலர், கணக்கிலர், இக்காலத்தில் முழுமக்களாயொழிந்து திரிகின்றனர். போலிவேதாந்தம் பொலிவுற்றுள்ளது பாவம், பாவம்.

உலகம் போய் போய், யெனக் கூறிக் கூறி மகிழ்வது யாண்டும் ஆசாரமாய்விட்டது. பொய்யின் சப்தார்த்தம் நனவினும் கனவினும் கண்டிரார் இந்தச் சாப்பாட்டு சாமிகள், தாசி தாசத்வம்செய்ய நின்றனர் கலிகால அத்வைதசீலர் சிலரெனக்கேள்வியுற்றேம். நன்று நன்று! இவர்கள் சுவாநுபூதி கிடந்தவாறுநன்று. தாசியையும் பிரமமாகக் கருதியஇப்பேதையர் புலியையும்அன்னணம்கருதிப் புலிக்கூட்டில் நுழையாததிசயமேயாம். மாடமாளிகைகளும்கூடகோபுர[illegible]ம்,பெண்டுபிள்ளை பண்டபதார்த்தங்[illegible]ம் சிலபிரமா

நுபூதிச்செல்வருக்குச்சத்தியபதார்த்தங்களாயுள்ளன. ஏனைய பிரபஞ்சபதார்த்தங்களெல்லாம் பொய்பபதார்த்தங்களாய் முடிகின்றன. ஜீவகாருண்யம் இக்கலிகாலத்து பிரமவாதிகள் பலரைவிட்டுப் பறந்து போயிற்றென்று நாம்கண்ட பரதேசியொருவர் கூறியிசழ்ந்தார்; நாமும்இதுவிஷயமாய் இரங்கலானோம். எல்லாம்பிரமமென்ற புண்ணியர் ஜீவனையொவ்வாரா தலான் ஜீவகாருண்யத்துக்கிவரிடம் அவகாசமில்லை யென்க. அவதியுறும் ஜீவரிருந்தாலன்றோ, பணத்தைப் பூசிக்கும் ஏகான்மவாதிக்கு அவர்பால் காருண்யம் நிகழுதலமையும்.

பாமரசனங்கட்கோ மதாபிமானமேயில்லை. அநாகரீகமான ஆசாரங்களில்அவர்கள் காலம் கடத்துகின்றனர். ஈசுவர ஞானம் பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் வெகு சிலரே. மடாதிபதிகளும் இதைக்கவனித்து உழைத்துவரக் காண்பது துர்லபமாயிற்று. பிறமதஸ்தர் பிறநாட்டார் போன்று நந்தேசத்தார் கோடிக்கணக்காய்ப்பொருள்முதல் வைத்து அதன் வருவாயைக்கொண்டு நம்மதபோதனைசெய்ய சிறந்த மதபோதகாசிரியரை என்றேற்படுத்தி க்ஷேமமடைவார்களோ பகவானே யுணர்வார்.

---

## செங்கற்பட்டுஜில்லா சபையாரும், கவர்ன்மெண்டாரும்.

செங்கற்பட்டு ஜில்லாவில் பலவிடங்களில்அடிக்கடி தீவர்த்திக்கொள்ளைகள் சிலகாலமாய் நேரிட்டதென்ற விஷயம் வர்த்தமான பத்திரிகைகள் வாங்குவோர்க்குத் தெரிந்தவிஷயமே. இதுவிஷயமாக செங்கற்பட்டு ஜில்லாசபையார் கவர்ன்மெண்டாருக்கு ஒரு மனுசெய்திருந்தார்களென்பதும் பிரசித்தமானவிஷயம். அதைக்குறித்து சென்னை ராஜதானிக் கவர்ன்மெண்டார் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்கள். அந்த உத்தரவில் ஆலோசனை சபையிலுள்ள மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்கள் கிராமக்குடிகளைப்போலீசாருக்கு உதவியாயிருந்து உழைக்கும்படி கோருகிறார்கள். இதற்கென்றே ஒரு போலீஸ்சைன்யம் ஏற்பாடுசெய்தும், குடிகள் உதவியில்லாவிட்டால் அதிகாரிகள் விசேஷ நன்மைசெய்விப்பது கஷ்ட சாத்தியமென்பது கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயம். செங்கற்பட்டுஜில்லாவில் ஏழுகிராமங்கள் ஒன்றுசேர்ந்து செய்துகொண்ட ஒரு மனுவில் கொள்ளைக்காரர் கூட்டத்தைக் கண்டவுடனேகிராமத்தார் ஓடியொளிப்பதே ஆசாரமாயிருக்கிறதெனத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி இவர்கள் செய்வது மிகவும் அநுசிதமான காரியமென்றும், போலீசார் கஷ்டங்களை அதிகப்படுத்துமென்றும் நமது கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகின்றனர். இதுஉண்மையேயாம். தற்காப்பு விஷயத்தில் நம்மனோர் இத்துணை அசிரத்தை காண்பித்தால் குற்றவாளிகள் மலிந்துகிடப்பதற்குத்தடையென்ன?

---

## எண்ணங்களின் சக்தி.

எண்ணத்தின் சக்தியைக் குறித்து சாஸ்திரயுக்தமாக ஐரோப்பாவில் அனேக விற்பன்ன சாஸ்திரிகள் பலவித பரீக்ஷைகள் செய்துவருகின்றனர். சங்கற்பத்தின் பயனாக ஒரு கனவான் வெகுதூரத்திலிருக்கும் தமது சிநேகிதரின் புகைப்படத்தையெடுத்தனராம். மற்றும்பலர் அனேகாயிரம் மைல் தூரத்திலுள்ள தங்கள் சிநேகிதர்களின் அவ்வக் காலத்து எண்ணங்களை அக்கணமே இருந்த விடத்திலிருந்து தெரிந்துகொள்ளும் சக்தியையுடையரா யிருக்கின்றனராம். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன்னும் என்னென்ன அற்புதங்கள் ஏற்படுமோ வறியோம். பகவான் திருவருளிருந்தவாறென்னே!என்னே!

---

## ஆசார சீர்திருத்தம்.

‘ இதுவிஷயமாய் சின்னாண்முன் ராஜபூஜித பரோடா மஹாராஜாவவர்கள் வடதேசத்தில் ஆரிய சமாஜத்தாருக்குச் சொன்ன விஷயத்தை ஹிந்துஜனசமூக வாசார சீர்திருத்தச் சபையினரும் பிறரும் கவனிக்கவேண்டிய தின்றியமையாத விஷயமாகும். மகாராஜாவவர்கள் ஆசார சீர் திருத்தம் அவசியமேயென வொப்புக்கொண்டு, சீர் திருத்தக்காரரை மேற்சென்றிடித்து, சில



புத்திமதி கூறுகின்றார்கள். சீர் திருத்தம் பேச்சோடு நின்றுவிடப்போகாது. அற்றையின் சீர்திருத்தம் உண்டாதற்கு எத்துணையோகாலம் செல்லும். சீர்திருத்தம் பேசவருவார் சீர்திருத்தம் தம்மளவிலேனும்செய்துகாட்டல்வேண்டும். அஃதியலாதார்பேசிப் பயனில்லை. சீர்திருத்த விஷயமாய்ப் பெருங்கூட்டம் கூடுதல் பிரதமத்தில் கஷ்டசாத்தியமேயாம். சிலர் சொல்வதுபோல நடப்பாராயின், பாமரஜனங்களும் இறுதியில் இவர்களைப் பின்பற்றத் தடையிராது.

மஹாராஜாவவர்கட்கு நாம் எந்நாளும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இன்னோரன்ன விஷயங்களில் உன்னதஸ்திதியிலிருக்கும் கனவான்கள் முன்வந்து பிரசங்கித்தாற்றான் பிரஜாகோடிகள் ஒருவாறு மனந்திரும்பி நல்வழி நடந்து க்ஷேமமடைதல் சாத்தியமாகுமென நாம் அபிப்பிராயப் படுகின்றோம்.

* * * * * *

## ஞானவல்லி.

இப்பெயர் பூண்ட வாராந்தரப் பத்திரிகையின் பிரதியொன்று எமது பார்வைக்கு வரப் பெற்றனம். சைவசித்தாந்திகளாற் பேசப்பெறும் திரிபதார்த்த விசாரணை மேற்கொண்டு, அதன்பயனாய் உண்மை ஞானத்தைப் பெறுதல் அத்யாவசியகமென்றும், இவ்வாத்ம ஞானத்தைப்பெறற்கு சரீரஞானம் சாதனமாய முடிவதால் அச்சரீரஞானமும் மக்கட்கு இன்றியமையாததென்றும் கொண்ட இப்பத்திராதிபர் “ஒருதலையாகி வேண்டற்பாலனவாகிய விவ்விருவகை ஞானங்களையே சுவையாகவும், மணமாகவும் உடைய பல விஷயவாராய்ச்சிகளாய பலங்களையும் மலர்களையும் தன்னகத்தே பலவிடத்தும் தாங்கி நிற்றலாகிய காரணத்தினாற்றான், ஞானமே தமது திருவுருவாய் விளங்கும் ஞானானந்தவல்லியாது திருவடிகளிற்றோன்றி நின்று நிலவவெளிவருவதாற்றான், ஞானானுபவத்லைத் தன்னையவாவும் அன்பர் யாவர்க்கும் உதவுமாறு அவ்வன்பரது மனமெனும் புனத்துப்படரும் கொடியாதலாற்றான் இப்பத்திரிகாரத்தினம் ‘ஞானவல்லி’ யெனப்பெயரெய்தினள்” என்று லோகோபகாரமாகக் கூறியிருக்கின்றனர். இந்தப்பிரதியிற்போந்துள்ள விஷயங்கள் சைவர்கட்குப் பெரும்பிரயோசனத்தைத் தரத்தக்கனவாகும். சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தைப்பற்றிய வியாசமொன்று இதனிரண்டாம் பக்கத்திலெழுதப்பட்டுள்ளது. அதைக்கண்ணுற்றுத் தமிழ்ப் பாஷாபிவிருத்தியும் சமயாபிமானமும் ஒற்றுமையுங் குன்றி சைவசமயபரிபாலனஞ் செய்யக் கூடியவர்களுட் பெரும்பாலார் காலத்திற்குத் தக்க கோலமாயிருக்கு மிச்சமையத்தில், இச்சபை தோன்றி இதுவரையில பிறரால் செய்யப்படாத இவ்வரியகாரியங்களைத் திருவருட்சகாயத்தால் இடைவிடாத ஊக்கத்தோடும் மெய்யன்போடும் ஒற்றுமையோடும் செய்துவருவதாகக்கண்டு அடங்கா அகமகிழ்ச்சி பூக்கின்றோம். நவராத்திரி விரதம், இன்னகாரணத்தினால் அப்பெயர்த்தாயிற்றெனக்கூறி, இத்துணைச் சிறந்ததினத்திற் றமது ஞானவல்லியைத் தொடங்கினதாய் எழுதியுள்ள நேர்மைக்கும் மிக்க மனமகிழ்கின்றோம்.

இப்பத்திராதிபர் தமது பத்திரிகா நேயர்களுக்குச் செய்துகொண்ட ஒரு விண்ணப்பம் கண்டு, இப்பத்திரத்தினொருபாகம் சிலபெருங்காப்பியங்களாகிய புராண ஹிதிகாசங்கள் சிறிது சிறிதாக அச்சுவாகனமேறி வெளிவந்துலாவுதற்கே இடந்தருமென வறியலானோம். அதாஅன்றியும் பலவிடங்களில் அவ்வப்போது தோன்றி சின்னாளே வாழ்ந்தொழிந்த பல பத்திரிகைகள் போலல்லாது இந்த ‘ஞானவல்லி’ யாண்டும் விக்கினமின்றி யுலாவிவருவளென ஆசிரியர் வற்புறுத்திக் கூறலாயினர். பத்திரிகைகள் பட்டுப்போதற்குக் காரணம் இந்நாட்டில் பிரஜைகட்குப் பத்திரிகாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம் இல்லாமையேயாமென யாம்துணிந்து கூறுவோம். Ed:

(இன்னும்வரும்)

---

## ஒரு ஜர்மன் இருப்புப்பாதை.

இப்போது ஜெர்மனி தேசத்தில் மின்சார இருப்புப்பாதை வண்டித்தொடரொன்று மணிக்கு 125 மைல்தூரம் ஓடும்படியமைக்கப்பட்டுள்ளதென்றறியலானோம். மின்னலெனத்தோன்றி மறையும் இந்த வண்டித்தொ

டரைச் செய்து முடித்த கனவான்களின் புத்திரட்பத்தைச்சிந்தித்து நந்தம்நிலைமையைக் குறித்து இரங்கி வருந்தலானேம். பூர்வகாலத்தில் பறக்கும் குதிரையைக் கண்டதாகக் கதைகள்கூறுகின்றன. சித்தர் அனேகர்குளிகைகொண்டு தேச தேசங்களில் நொடிப்போதில் சஞ்சரித்ததாகப் பிரஜைகள்கூறி மகிழ்வர். சில வரசர்களும் பல ரிஷிகளும் இந்திரலோகம் போய்வந்ததாக அனேகர் சொல்லிக்கொள்வர். இக்காலத்தில் அன்னணம் செய்யும் ஆற்றலடைந்தார் யாவரே யறியேம். மேற்புலத்துப் புத்திமான்களை நாம் பின்பற்றிப் பெருமையுடன் வாழ்தலென்றே? மதச்சண்டையும், சாதிச்சண்டையும், ஆசாரச்சண்டையும் சார்வதாநம்மனோர் தொழிலாய்விடும் பக்ஷத்தில் சிலகாலத்தில் ஒற்றுமையின் வாசனையுமின்றி வேற்றுமைப்பட்டு, தேயவிர்த்தியைக் கருதாதாராகிப்பிறநாட்டாருக்கு செல்வத்தை யோங்கச்செய்யும் மார்க்கங்களை ஒப்பித்துவிட்டு, கூலிவேலை செய்தற்கன்றி வேறொன்றுக்கும் உதவமாட்டாதவராய் நம்மனோர் பெரும்பாலார் ஒழியத் தடையுண்டோ? இனியேனும் நலலெண்ணம்பிறந்து நந்தேசத்தார் லௌகீக விர்த்தியை யுத்தேசித்துப் பலநவீன வர்த்தகமுறைகள், கைத்தொழில் யந்திரத்தொழில் அருமைகள் முதலியவற்றினில் பழகிவருவாராக.

* * *

## இந்து பாலிகாகலாசாலை, காசிப்பட்டணம்.

காசிப்பட்டணத்தில் பிரமஞான சங்கத்தார் பெரு முயற்சியால் சின்னாண்முன் ஹிந்து மதகலாசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டு நடந்தேறிவரும் விஷயம் யாவரு முணர்வரன்றே! ஹிந்துமத சித்தாந்தத்தை உள்ளபடியே உணர்ந்து நஞ்சிறுவர் தேசநன்மைக் குழைத்து சேதனராய் வாழ்வதற்கென்றே இந்தக்கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது போலவேநஞ்சிறுமியரும் ஹிந்துமதஆராய்ச்சி செய்வான்கருதி மிஸஸ் பேசன்ட் அம்மையார் ஒரு புதியகலாசாலை ஏற்படுத்த முயன்று வருகின்றனரெனக் கேள்வியுற்று அகமிகமகிழ்ந்தாம்! இவ்வரிய விஷயத்தைபூர்த்திசெய்ய பூமி, கட்டிடமுதலிய செலவன்றியில் பத்துலக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும் என மதிக்கப்படுகிறதாம். இதில் பாதிதொகையை முன்னமே ஷை அம்மை சம்பாதித்துள்ளாராம்! அம்மைக்கு நந்தேசம் யாண்டும் நன்றி யறிவைப்பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது.

* * *

## ராவ்பகதூர் அ. சபாபதிமுதலியார் அவர்கள் பல்லாரி.

இவர் பல்லாரியில் சிறந்த வர்த்தகராயிருந்து பொதுநன்மைக்காக எப்போதும் உழைத்து வந்ததும், பலதர்மங்களைச் செய்து வரையாது வழங்கும் வள்ளலெனப் பெயர் பெற்றிருந்ததும இந்தப்பிரதேசங்களில் யாவருமறிந்தவிஷயம். இவர் இப்போது சென்னையில் தேகசௌக்கியத்துக்காக வந்திருந்து காலஞ்சென்றதைக்கேட்கப் பெருந்துக்கத்தலாழ்ந்தனம். இவர் சிலகாலம் சென்னைமாகாணத்து கவர்னர் அவர்களின் ஆலோசனை சபையிலொருவராகவிருந்தவர். பல்லாரி முனிசிபாலிடியில்கவுன்சிலராகப்பலவருஷமும் சேர்மெனுகச்சிலவருஷமும்இருந்து அனேக நன்மைகளைச் செய்துவர்தார். உன்னத பதவியிலிருந்த உத்தியோகஸ்தர்களின் நன்கு மதிப்பைப்பெற்றிருந்ததுமன்றி, ஹிந்துக்கள் மகம்மதியர் கிறிஸ்துவர் முதலியபல வகைச்சாதியாராலும்போற்றப்பட்டார். ஆசாரசீர்திருத்த விஷயமாய் யாண்டும் உழைத்துவந்தார். இவர் மறைந்ததையுன்னி யிரங்காதாரில்லை.

* * *

## ஓர் அற்புதமான சிறுயந்திரம்.

சின்னாண்முன ஐரோப்பாவில் பிரான்சு தேசத்தில் ஒரு சாஸ்திரியார் ஓர் அற்புதமான யந்திர மொன்றைக் கண்டுபிடித்தனராம். அதனைக்கொண்டு கண்ணிழந்த குருடர் யாவும் காணவல்லராகின்றனராம்! இடையிலே கண்ணிழந்தாரன்றிப பிறவிக்குருடரும் கண் பெறுகின்றனராம். ஓர் இருட்டறையில் இந்த யந்திர வுதவியால் யாவும் காணக்கூடியதாயுள்ளனவாம். இந்த யந்திரம் மின்சாரவிசையால் செய்யப்பட்டிருக்கிறதென்றும், பேசும் யந்திரம்(Telephone) போல் பார்வைக்குக்காணப்படுகிறதென்றும் வதந்தி. என்ன அருமை! என்னபுத்திவிசேஷம்! நம்மவர் இன்னோரன்ன சாஸ்திர அருமைகளைச் சிந்திக்கவும் எத்துணைக்காலம் கடக்கவேண்டுமோ யாவரறிவார்?

---



## இரங்கல்.

காலஞ்சென்ற பிரயஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியவர்களின்மீது, இப்பத்திராசிரியரவர்களாலியற்றப் பட்ட

நிலமண்டிலவாசிரியப்பா.

சீரார் திங்கட் செழுமுடிதரித்த
பேராயிரத்தான் பெம்மானெம்மான்
கருத்துயரொழிக்குங் கமலப்பாதன்
வருத்துறுமலத்தை மாய்க்கக்குருபரன்
வடிவங்கொண்டு வருபவன்வடிவம்
வடிவமற்றிட மனத்துளிருத்துவோய்
அந்தணகுலத்திற் கணியெனவந்தோய்
மந்தமிலாமதி வதியப்பெற்றோய்
ஆங்கிலபாடையி னுழமுஞ்சீரிதா
யோங்கியதமிழி னுட்கருத்தினையும்
தாழ்வறுமாரியஞ் சாற்றிடுவகையையும்
கேழறக்கண்டு கேடில்விழுச்சீர்
எலுறநாடக வியலையியற்றினேய்
மாலுறுமனத்தர் மயக்கமகற்றினேய்
தமிழ்வரலா[illegible]திருறத்தந்தோய்
அமிதமாய்க்[illegible]தைகளார்வமாயியற்றினேய்
உத்தமவடிவ வுயர்தமிழ்மொழியை
நத்திவந்தவர்க்கு நலமுறப்புகல்வோய்
போலிப்பட்டம் பெற்றுடையோரைக்
கேலியில்விடுக்கும் கிளர்நலமுடையோய்
என்னிருகண்ணே யென்னிருதோளே
மன்னியவுன்னை மறப்பதெவ்வாறே
சீரியகுணமெலாஞ் சேர்ந்தொருவடிவாஞ்
சூரியநாராயண சாஸ்திரியே
உன்றாய்த்தமிழ்மக ளுருகியழுதிட
வன்றாட்பகவனை மருவிடறகுமோ
கிறுத்துவசாலைக் கிளர்மாணவர்கள்
கறுத்தமுகத்தொடு கலங்கத்தமிழர்
கண்ணீருகுக்கக் கமைமார்தேவியை
மண்ணிலிருத்திவான் மன்னுதன்முறையோ
என்மனங்கலங்க வென்னைவிட்டகன்
றுன்னுதனெறியோ சொற்றிடுவாயே.

* * *

## வடிவேலுசெட்டியார் என்றெழுதுதல்கூடாதோ?

[புணர்ச்சியைப் பற்றியது.]

நன்னூல்முதலிய சின்னூலுணர்ச்சியுமடையப்பெறுத வொருவர் "சென்னைச்சைவசித்தாந்த சஞ்சீவினி சபையாருள் ஒருவர்" என்றோர் கற்பனைப் பெயரைவைத்துக்கொண்டு, நிகழும் ஹீ அக்டோபர்மீ 30உ வெளியாய "பூலோக நண்பன்" என்னும் பத்திரிகையிற் காரணமின்றிக் "கீழ்களைச், செய்தொழிலாற் காணப்படும்" என்று பெரியார் கூறியுள்ளதை யுறுதிப்படுத்துமாறு, ஸ்ரீமான், சென்னை, இந்து தியலாஜிகலேஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் கோ. வடிவேலுசெட்டியாரவர்களைக் "கோமளீசுரன் பேட்டை வடிவேல் செட்டி என்பார் வித்வான் என்றும், தமிழ்ப் புலவர் எனவும் வைத்துக்கொண்டனர். வடிவேலு செட்டியார் என எழுதிவருகின்றார். இங்ஙனம் உகரச்சாரியை பெற்றுவருதற்கு விதியில்லையே. வழக்கெனினும், வலிமிக்கன்றோ முடியவேண்டும்?" என்று பழித்துக் கூறுகின்றார்.

வாக்கிய வகையறியாதும் புணர்ச்சிவகையறியாதும் பேசுமிவருடன் பேசுதல் தக்கதன்றெனினும், வடிவேலுசெட்டியார் என்று வலிமிகாவா றெழுதுதல் தவற்றிற்பட்டதோவென்றையப்பாடுடையார்பொருட் டிஃதெழுதுகின்றாம். 'வித்வான் என்றும்' என்றெழுதினதற் கிசையத்தமிழ்ப்புலவர் என்றும் என்றெழுத வகையறியாது 'தமிழ்ப்புலவர் எனவும்' என்றெழுதுமிவரா இலக்கணப்பிழைகாணும் வல்லுநர்? "அ ஆ முன் இ ஈ வரினிரண்டுங் கெட்டேயாம்" என்றகத்தியங் கூறுமாறு கோமள+ஈசுவரன் எனற்பாலது கோமளேசுவரன் என்று புணருமென்பதறியாதும், கோமளேசுவரன் பேட்டையென்று சாதாரண ஜனங்கள் பேசிக்கொள்ளுவ துணராதும் 'கோமளீசுரன்பேட்டை' என்றெழுதுமிவர் இலக்கணக்கடலாயும், தருக்கப்புலியாயும், வேதாந்த வித்வசிரோன்மணியாயுமுள்ள வொரு பெரியவித்துவானிடத்துக் குற்றங் கற்பிக்கப்புகுதல் "கற்றதூஉமின்றிக் கணக்காயர்பாடத்தால், பெற்றதாம் பேதையோர்சூத்திரம், மற்றதனை, நல்லாரிடைப்புக்கு நாணுதுசொலலித்தன், புல்லறிவு காட்டிவிடும்" என்பதற் கிணமன்றி வேறென்னை? இவர் உகாச்சாரியை பெறுதல் வழக்கென்றொப்பியதினாலேயே வலிமிகாது வருதலும் வழக்காமென்பது பெறப்படுவதாக, 'வலிமிக்கன்றோ முடியவேண்டும்' என்பது வழக்கறியாமையேயாம். வலிமிக்கேவால் வேண்டுமென்பது நியதியன்றென்ப திவரு

னார்சிலர்போலும்! உயர்திணைப்பெயருட்சிலகாறகணத்தோடும் புணருமிடத்துநிலைமொழிவருமொழிகள் விகாரப்பட்டுப் புணருமென்பதையிவர்கேட்டேனுமறிந்திருந்தால், வலிமிக்கன்றோ முடியவேண்டும்’என்று கூறார்! கூறார்!! “உயிரீறாகிய வுயர்திணைப் பெயரும், புள்ளியிறுதி யுயர்திணைப்பெயரும், எல்லாவழியு மியல்பென மொழிப” என்று தொல்காப்பியர் கூறுவதாலும், “சிலவிகாரமாமுயர்திணை” என்று நன்னூல் கூறுவதாலும் வடிவேலுசெட்டியார் என்றாவது வடிவேலுச்செட்டியார் என்றாவது எழுதலாமென்பது வச்சிரலேபமாகப் பெறப்படுவதாக, இவர் கொன்னே ‘வலிமிக்கன்றோ முடியவேண்டும்’ என்று கூறியது அஞ்ஞானமென்னும் தோல்வித்தானமாமென்க. அன்றி, நிரஜயோஜ்யானுயோகம் என்னுந் தோல்வித்தானமுமாம்.

ஆறுமுகநாவலர் மாணாக்கரின் மாணாக்கரென்று சொல்லிக்கொள்ளு மொருவர்க்குத் “தம்பையாபிள்ளை” என்றிருத்தலையு மிவருணரக்கடவர். அடுத்தமுறை, திருக்குறள் சைவசித்தாந்த நூலா என்பது பற்றி யெழுதப்படும்.

இங்ஙனம்:
சிந்தாத்திரிப்பேட்டை
வித்யாபிவிர்த்தி சங்கத்தினருள் ஒருவராகிய
ஆ. மே. சென்னகேசவலு நாயுடு.

---

## நம்மவர்க்கான நவீனயோசனை.

‘கேள்விமுயல்’ என்றது ஔவையார் மொழி. அவரேபின்னர் ‘நூற்பலகல்’ என்றார். “கல்வி கரையில; கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கிற்பிணிபல - தெள்ளிதின்-ஆராய்ந்தமைவுடைய கற்பவே” எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. “எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்” என்றதுபெரும்பாலும் இலக்கியமும் கணிதமும் எனப் பொருள் கொள்கின்றார்கள். ஆயினும், உற்றுநோக்குங்கால் ‘எண்’ என்பது மனதின் செயலாகநினைத்து நோக்கப்பட்டவை யென்றும், ‘எழுத்து’ என்பது வாக்கின்வழிச் செயலாகக் குறிக்கப் படுவனவாகி எழுதப்படுவனவாகிய இலக்கியங்கள் கலைகள் முதலிய எனவும் கொள்வதே நியாய மெனத்தோன்றுகின்றது. எண்ணும் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவாதலும் அதன் தேர்ச்சி விபஜன யோடுங் கூடிய எழுத்து மானிடர்க்கே உரித்தாதலும் காண்கின்றனவாக, அவற்றின் சீரும் செல்வமும் ஆற்றலும் அமைதியும் மேன்மேலும் பெருகல் எவ்வகை கைகூடுமென்று துணிவான் சிலவியாசங்கள் எழுதத் தொடங்கினோம்.

உயிர்கள் துணைபடவியங்கல் விலங்கு புள் முதலிய ஜீவராசிகளுள்ளும் புலப்படுகின்றது. இவ்வாறு ஒருமித்து நடத்தற்குச் சாதனமாக, அவைகள் சமயோசிதமான பலசத்தங்களும் சைகைகளும் செய்துவரும்; போதிய அறிவில்லாத குறையால் பெரிதும் விருத்தியாகவில்லை, விருத்தியாகவு மிடமில்லை. மானிடருள் மாக்களாகி வனங்களில் திரிந்துழல்பவருக்கும் விலங்குகட்கும் விசேஷ பேதம் கிடையாது. இதனாலன்றோ, “மாவுமாக்களு மையறிவினவே” என்று கூறினர் தொல்லாசிரியர். விவேக முதிர்ச்சியால் சிற்சிலசாதியார் தான் நடை யுடை பாவனைகள் சீர்படப்பட, மிருகத்தன்மை நீங்குவாராகின்றார்கள். துணைப்பாடும்கூடிவாழ்தலும் மேன்மைதருகின்றதென்றுணர்ந்து, அக்குணங்களைப்போற்ற ஆரம்பித்ததே நாகரீகமாகிற நந்தன வனத்திற்பூத்த முழுமணமுடைய முதன் மலராகும். பின்னர், தங்களனுபவங்களை மறைந்துபோக விடாது மற்றையோர்க்கும் அவைகள் பயன்படுமாறு பாஷைகளையும், அப்புறம் எழுத்துக்களையும் சிருஷ்டித்துக் கொண்டார்கள். கற்பனை செய்த எழுத்துக்களை முதலில் பனையோலைகளிலும் செப்பேடுகளிலும் கற்களிலும் செதுக்கியும், பின்பு தோல்களிலும் துணிகளிலும் மைகொண்டெழுதியும் வரைந்துவந்து, கடைசியாக இப்பொழுது கடுதாசிகளும் அச்சுகளும் ஏற்படுத்திப் பதிப்பித்து வருகிறார்கள்.

‘கல்வி’ யென்பதற்குக்கல்லப்படுவது அதாவது சோதிக்கப்படுவது என்பது பொருள். சோதிக்கப்படும்பொருள்கள் பலவாதலின், கல்வியும் பலவகைத் தாயிற்று. பொருள்கள் பலவேறு வகைப்பட்டும் ஓயாது மாறும் தன்மையைப் பூண்டுமிருப்பதுபற்றி, முமபுகாணாது கல்விகரையில வென்றதாயிற்று. அறிவின் போக்கத்தில் உணர உணர ஒருதன்மையவாய விஷயங்களை யெல்லாம் பிரித்துத் தொகுத்துக் கோத்தது கலை யென்றும், சாஸ்திரம் என்றும், நூல் என்றும் சொல்லப்படும்.

இப்பூமண்டலத்துள் கடல்நீர் கவர்ந்துள்ளது மூன்றுபங்கு; நிலமாயுள்ளது மற்றைய நான்காம் பங்கு எனக் கணிக்கப்பட்டிருக்கின்றது. கடற்பாகம் கப்பல்களிற்சென்று ஜீவனம் செய்பவர்க்குத் தவிர, மற்றையோர்க்குக் குடிபுகவியலாது. அவர்களுமப்போதைக்கப்போது கரைசேர்ந்துநிற்பதிலேயே கருத்துடையவராக விருக்கின்றார்கள். நீராவியந்திரங்களும், வானசாஸ்திரம் முதலிய பரந்தகலைகளும் முதிர்ந்தஇக்காலத்தும் கடல்யாத்திரை கடுமைதருவதனால், கட்டுமரங்களும் பலகைகளுமே படகுகளாகக்கொண்டு எவ்வளவுதூரம் செல்லச்



சாத்தியப்பட்டிருந்திருக்கும்? கடல்களல்லாமலும் மலைகளும், நீரில்லாத பெரும்பாலை வனங்களும் ஜனங்களொருவர்க்கொருவர் அடிக்கடி சந்திக்கவும் ஒருமித்து வாழவும் இடையூறுகளாகவிருந்தன. ஜனங்களும் சுயகாரிய லக்ஷ்யம் தடிக்கவும், குரோதாதி லோபங்களுக் குட்படவும் இவ்விடையூறுகளையே தங்களைக்காக்கும் அரண்களாக மதிப்பாராயினர். தனித்த ஜாதியார் தமக்கு இன்றியமையாத் துணைக் கருவியாயுள்ள பாஷையை விருத்தி செய்து வருகையில், வார்த்தைகளும் குறிகளும் மற்றையசாதியாரதிலும் வேறாயமையுமென்பது எதிர்பார்க்க வேண்டியதே. காரணப்பெயர்களாகக் குறியிடுங்கால் சிற்சில ஒன்றுபோலமைதலுமமையும்.

இவ்வகையாக பூமியில் சனங்கள் பற்பல கண்டங்களில் சேர்ந்து பலவேறு வகைப்பட்ட பாஷைகளைப்பயின்று வந்திருக்கிறார்கள். இவற்றுள், சம்பந்தங்களும் போக்குவரத்தும் நேரிட்டுள்ள சாதியாரது பாஷைகள் அற்பவேறுபாடுகள் மாத்திரம் உள்ளனவாகி, ஒரு தொகுதியுட் படுத்தப்படுவனவாகும். சம்பந்தமேயில்லாது பிரிந்தேயிருந்த சாதியாரது பாஷைகள் வெவ்வேறாக நின்றிலங்கும்.

பாஷைகள் அவற்றினைப் பயிலும் சாதியாரது ஊக்கம், முயற்சி, வீரம், துணிபு முதலிய குணங்களின் பெருமை சிறுமைகளுக்கேற்பப் புஷ்டியடைவனவாகும்.

நாகரீக முதிர்ச்சியாலும் கல்விப்பெருக்கத்தாலும் நாம் முன் கூறிய இடையூறுகளின் வன்மை குன்றியது. இன்று உலகில் எல்லாச்சாதியாரும் எல்லாப்பாஷைகளையும் பயில அவசரமும் நேர்ந்திருக்கின்றது. உலகில் பரவியுள்ள பாஷைகள் ஆர்ய, ஸெமிடிக், துரானிய வென்று மூன்று பெருந்தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. (vide Maxmuller's Science of Language Vol. I)

பூமண்டலத்துள் மகாகண்டங்களாக விருப்பனவற்றுள் ஆசியாகண்டமே பெரிதும் நாகரீக முயற்சிக்கு ஆதியிடந்தந்ததாக விருக்கின்றது. பூதத்துவசாஸ்திர ஆராய்ச்சியில் பூமியினுடைய மாறுதல்களும் காலஸ்திதிகளும் நிரூபிக்கப்படுகின்றன. பலவிடங்களிலும் பூகம்பங்களாலும், ககனகோள ஆகர்ஷணங்களாலும் ஜலத்தின் கீழுள்ளது மேலெழுந்து பூமியாகப்பெருகுவதும், மலைகளாக வளர்வதும், தரைகளாக நின்றவை பள்ளங்களாகி நீர்பரவிக்கடலில் மறைவதும் அப்போதைக்கப்போது நேரிட்டிருக்கிறதாக மேற்கூறியசாஸ்திரத்தால் வெளிப்படுகின்றது. இத்தகைய மாறுதல்கள் ஏற்பட நெடுங்காலமாயினும், உண்டாகியிருக்கின்றன வென்பது சித்தம். நம்மை யாண்டுவரும் ஆங்கிலேயரிருப்பிடமாகிய ஐரோப்பியகண்டம் பெரும்பாகமும் கடலின் கீழிருந்து கிளம்பிவந்திருக்கிறதென்று மதிக்கப்படுகிறது. இஃதும் ஆசியாகண்டத்துக்குப்பிந்தி யெழுந்துள்ளதென்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தும் இக்காலத்தில் ஐரோப்பா கண்டத்திற்றான் நாகரீகமேற்றமடைந்திருக்கின்றது. ஐரோப்பியர்தான் பூலோகமுழுதும் பரவி, ராஜாங்கங்களையுங் கைக்கொண்டு முக்கியர்களாகி விளங்குகின்றார்கள்; அமெரிக்காகண்டங்கள்(தெற்கு வடக்கு)இரண்டையும் ஆவரித்துக்கொண்டு கைவசமாக்கிக்கொண்டனர்; ஆஸ்திரலேஷியா தீபங்கள் யாவற்றையும் இவ்வகையே சுகவாசஸ்தலங்களாக்கிக்கொண்டனர்; ஆபிரிகா கண்டத்திலும் விசேஷ பிரவர்த்திக்குப் புகுந்துகொண்டார்கள். இவர்களுடைய பாஷைகளோ முன்சொன்ன ஆரியபாஷா தொகுதிக்குள்ளடங்கி சுமார் 50-கோடி ஜனங்களால் பேசப்பட்டுவருகின்றன. இவர்களே சமுத்திரமீதும் செங்கோலோச்சத்துணிந்தார்கள். எழுதப்படாததும் சீர்படாததுமான பாஷைகளைப்பேசும் “காட்டுப்பூச்சிகள்” தவிர மற்றெல்லாரும் ஆசியாகண்டத்தில் ஜெருசல நகரில் யூதஜன ஜன்மியான ஜீஸஸ் கிறிஸ்துநாதர் ஆரோபித்த கிறிஸ்து மதாபிமானிகள். (1)ஐரோப்பாகண்டத்தின் ஆக்கினேயபாகத்திலுள்ள துர்க்கியும், ஆசியாகண்டத்தின் மத்தியில் உள்ள துர்க்கிஸ்தானமும், (2) ஆபிரிகா கண்டத்தின் உத்தர ஈசான்ய பாகங்களும் ஆசியாவின் பச்சிம பாகமாகிய அரபியாவும், (3)ஆசியாவில் பாரசீகம் ஆப்கானிஸ்தானமும் முறையே (1) துரானியன் (2)செமிடிக் (3) ஆரியம் என்னும் தொகுதிகளி லடங்கிய பாஷைகளைப்பேசிவரும் சுமார் 20 கோடி ஜனங்களுடைய வாசஸ்தலங்களாக விருக்கின்றன. இவர்கள் ஜீஸஸ் மதத்தின் கோட்பாடுகளைப் பெரும்பாலும் ஒப்புக்கொண்டு சில அம்சங்களில் மாத்திரம் பேதநடை கொண்டவரும், ஆசியாகண்டத்திலேயே ஜெருசலநாட்டின் தென்பால் அரபிதேசத்தில் மக்காநகரத்திலுதித்தவருமான முகம்மது நபி அவலம்பித்த இஸ்லாம் மதத்தார். இனி ஆசியாகண்டத்தின் மத்தியத்திலும், கீழ்த்திசையிலும், ஆக்கினேயத்திலும் பரவிய சீனத்தார், ஜபானியர், பர்மர் சுமார் 40-கோடி ஜனங்களும் சீன முதலிய பாஷைகளைப் பயின்றவர். இவர்கள் ஹிந்து மதத்தினின்றும் பிரிந்த பௌத்த மதத்தின் அபிமானிகள். இவர்கள் கொல்லா விரதத்தை மேற்கொண்டோராயினும் மாம்சபக்ஷணிகளாகவே யிருக்கின்றார்கள். இம்மதத்தை யாரோபித்தவர் ஹிந்துதேசத்தில் போத கயா ஜன்மியான கௌதம புத்தர். இன்னோரல்லாது ஒரு பதினைந்து கோடி எண்ணினர் இங்குமங்கும் சிதறி எழுதின பாஷைகளில்லாமல், திருந்திய மதக் கோட்பாடுகள் அவலம்பியாது பலவிதமாக சஞ்சரிக்கின்றனர்.

உலகத்திலுள்ள சிதோஷ்ண பேதா பேதங்கள், ஸ்தாவர ஜங்கமாதி லோகபேதங்கள் ஜீவபேதங்கள் மிகுத்து விளங்குகின்றதும், எல்லா விரதத்தி

லும் கொல்லாவிரதமே அதியுன்னத பதவியைத்தருவது என்னும் கோட்பாட்டையேபற்றுக்கோடாக் கொண்ட ஹிந்துமதாபிமானிகள் வசிப்பதும், இமயமலை கடல் சூழத் தனித்து அமர்ந்ததும் பரதகண்டமெனப் பெயர்பெற்றதும்இவ்விந்துதேசம். இதில்விந்தியமலைக்கு வடக்குற்றதுஆரியாவர்த்தமென்றும், தெற்குள்ளது திராவிடாவர்த்த மென்றும் சொல்லப்படும். ஆரியாவர்த்தத்தில் ஆரியத்தொகுதியிற் சேர்ந்த சம்ஸ்க்ருதத்தின் சாகைகளான (1) பங்காளி (2) பேகாரி (3) ஹிந்தி (4) குஜராதி (5) மராதி (6) நேபாளி (7) காஷ்மீரி பாஷைகள் விளங்குகின்றன. திராவிடாவர்த்தத்தில்,துரானியத்தொகுதியிற்சேர்ந்த திராவிட சாகைகளான (1) தெலுங்கு (2) தமிழ் (3)கன்னட (4)மலையாள (5) துளுவ பாஷைகள் நடைபெறுகின்றன. ஆரிய சாகைகளைப் பேசுகின்றவர்கள் சுமார் 22-கோடியென்றும், திராவிட சாகைகளைப் பேசுகின்றவர்கள் 5-கோடியென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதிலும் நம்முடைய பாஷையாகிய தமிழ் மாத்திரம்பேசுவோர் சுமார் ஒருகோடியே எழுபது லக்ஷம் ஜனங்கள் உலகத்துள்ள ஜனங்களுள் நூற்றிலொரு பங்கினருமாக ஏற்படுகின்றது.

ஆரியாவர்த்தமும் திராவிடாவர்த்தமும் அடுத்த நாடுகளாகியும் அவைகட்குமத்தியிலுள்ள விந்தியமும் காண்டவவனமும போக்குவரத்துக்குவிசேஷ இடையூறுகளாகாமலுமிருந்ததுபற்றி, இப்பன்னிருபாஷையாரும் இவ்விந்தியா நாட்டைத் தங்கள் ஏகதேசமாக மதித்தார்கள்;கலந்து வாழத்தலைப்பட்டார்கள். சம்ஸ்க்ருதத்தில் தத்துவ ஆராய்ச்சிகளும் கம்பீரமும் விசேஷமாகவும், திராவிடத்தில் இனிமை மேன்மை பண்ணுடைமைமுதலிய அன்புபெருக்கும் தன்மை விசேஷமாகவும் அமைந்தேறியிருந்ததால், பரஸ்பர அந்நியோந்யம் நேரிட நேரிட நாகரீகம் முதிரமுதிர இவ்விந்துதேசம் சர்வ தேசங்கட்கும் முந்திக்கொண்டிருந்தது. ஆயின் தற்காலஸ்திதியோ பரிதபிக்கத் தக்கதாக விருக்கின்றது.

இதற்குக் காரணம் எளிதிற்புலப்படும். குரோதாதி லோபங்களால் தற்சுகத்தைக் கோருதலும், அப்புன்மைபால் ஐக்கியமத்ய மழிகையும்,மன்னுயிரைத் தன்னுயிரைப்போற்காக்க வென்றதை மறத்தலுமே முக்கிய மூலங்களாகத் தெரிகிறது. இஃதன்றியும், பூலோகத்தில் நாகரீக ஏற்றத்தாழ்வும், சண்டை சச்சரவுகளும்,சமாதான வாழ்வும் பாஷாபிவிர்த்திக்கும் குறைவுக்கும் இடந்தரும் ஆதாரங்களாக சிலபாஷைகள் உயர்ச்சியடைவதும் சிலதாழ்ந்து இழிவுறலும் புலப்படும். அஃதெவ்வாறாயினும் நம்பாஷை யபிவிர்த்தி யடைவதற்கும், அதனால் நம்காலத்துள்ள நம்மனோர்மாத்திரமேயன்றி நம் உத்தரசந்ததியாரும் பலன் துய்ப்பதற்கும்,நம் இலக்கியத்தை நானாவழிகளிலும் விர்த்திசெய்வது நம்கடமையாகிறது.எழுத்தை விருத்திசெய்வாரே மற்றையாரின் மிகுவரென்பது இதனால்சொல்லாமலே யமைகிறதன்றோ? பாஷை பலவென்று முன்னமே விரித்தோம். அப்பாஷைகளெல்லாம் ஒன்றாக உலகமெல்லாம் ஒருவீடாக இயங்குங்காலம் வருமென உலக சுபாவத்தை நோக்கி எதிர்பார்க்க விடமில்லை ஆனாலும்,எண்ணங்களும்நடையுடைபாவனைகளும்ஒன்றுபடாவிடினும் சத்தியத்திலும் தர்மத்திலும் ஒன்றுபட்ட மனமுடையராகி ஓர் ஊரில் பலகுடும்பங்களும் வாசம்செய்து சுகிப்பது போல், தம் தமிழையும் வேண்டுமளவும் சீர்படுத்தி இதுகாறுமில்லாதவற்றைச்சேர்த்து இருப்பனவற்றையேறச்செய்து மேம்பாடுகொள்ள முயலுதல் யாவர்க்கும் இனிய கடனாகும்:

ஆரியமே தந்தையா யந்தமிழே நற்றாயாய்ச்
சேரப் பிறந்தமொழி சீர்மைத்தாம்—ஓரின்
அழகுறினுஞ் செந்தமிழி லாவன்மைகுன்றித் தோ
எழு மொழியோ வேற்றமுறாச் சொல். [ன்றும்

N. R.

## ஸரஸ்வதி.

### ஒரு தமிழ்க்கதை

#### முதல் அத்யாயம்—உத்யானவனம்.

சூரியனைத் தம்பெரியராஜ்யத்தில்அஸ்தமிக்காது நடக்க ஆஞ்ஞாபிக்கும் ஆற்றலுடையவரான விக்டோரியா ” சக்கிரவர்த்தினிப் பெருமாட்டியாரின் ராஜஸ்தான நகரமாகியும், பூமிதேவிக்குஒரு திலகமெனவிளங்கியும் அஷ்டலக்ஷ்மிகளும் சேவை செய்து கிடக்கும் பெரும் பாக்கியம் பெற்ற தாயும், தேவர்கோனும் பொறாமையடையத்தக்கபோக பாக்கியங்களையுடையதாயும் பிரகாசித்து, சீர்மை யென்றுந் திருத்திவரும் லண்டன் நகரின் தென்பாரிசத்தில் கற்பகத்தையொத்த விருக்ஷங்களாலும், பாரிசாதத்தை நிகர்த்த திவ்விய மலர்களைப்புட்பிக்கும்விநோதக்காட்சியுள்ள செடிகளாலும், பசுமை பூத்த பலவகைப்புல்பூண்டுகளாலும் கீழ்த்திசைத்தேசங்களறியாத சுந்தரவடிவெய்திய பலசாதிப் பறவைகளும் கண்டவர் மனதைக்கவரும் அழகிய காட்சி யெய்திய அத்புதாலங்கிருத உத்தியானவனத்தின் சாலையினொருபுறம்காமனோ தேவனோ யாவனோ வென்று நின்றவர் மலைத்து நோக்கிய தேகத்தைத்தாங்கிய வாலைப்பருவமடைந்துள்ள சிறுவனொருவன் தன்னந்தனியனாத் தன்னையேகானாது துலாவிக்கொண்டி



ருந்தான். இருந்தாற்போலிருந்து இளைஞன் தன்னை மறந்தன்மை யொழிந்து தன்னை யுணர்ந்து,கைக்கடிகாரத்தைப் பாக்கட்டினின்றுமெடுத்துப்பார்த்து, “அடடா! என்ன? 6 மணி ஆய்விட்டதே! காலம் என்னைவஞ்சித்துச்சென்றது. நான் இன்றுபார்ப்பதாகச் சொல்லியிருந்த நண்பர்களை இனி சந்திப்பதருமை. பொய்யாவிரதம்பூண்ட என்னன்மொழியும் புன்மொழியாய் முடிந்தது. ஞானம் என்னைக்குறித்து என்ன நினைக்கும்? போசும் கோசும், டட்டும் வுட்டும் வகைகொட்டி சிரியாதொழிவரோ? என்தேசம் இங்கும் என்மனம் இந்தியாவினும் இருந்தாற்போற் காண்கிற இரண்டுமணிநேரமாய்—இம்மாதம் என்தாயிடமிருந்து கடிதம் ஒன்றும் வாராமைக்குக்காரணம்யாதோ” வென்றுதனக்குத்தானே பேசிக்கொண்டு கடிகாரத்தை யிருப்பிடம்சேர்த்து முகத்தைத்தூக்கிக் கிழக்குமுகமாய்ப் பார்த்தான்.

அப்போது அந்தத்திசையில் கொஞ்சம்காலத்தில் ராஜஸ்திரீபோன்ற ஒருகன்னிகை எதிர்நோக்கி காலடிப்பாதையில் வருவதைப் பார்த்துப்பின்வருமாறு சிந்திக்கலாயினன். “இவளென்ன தேவஸ்திரீயோ! அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை என்னும் சுவர்க்கலோகவாசிகளில் ஒருவளோ? அல்லது சலைமாதோ! இவளழகைச்சித்திரிக்கப் பிரமன் என்ன தவஞ்செய்தானோ? சந்திரனைப்பழித்த முகமும் சுவர்னத்தைப் பழித்த மேனியும், அன்னத்தைப் பழித்த நடையும் இம்மின்னாளடைந்தது என்மனதைக் கொள்ளை கொள்ளவோ! என் ஜன்மாந்தர தவம் பலித்ததோ? நேத்திரோற்சவம் அடைந்த நான் சுரோத்திரானந்தமடையப்பெறுவேனோ”வென் றெண்ணியெண்ணி மரம்போல் மரமீது நம் மன்மதமேனியான் சாய்ந்தபோது ஒருபுறம்புல்மேய்ந்திருந்த ரிஷபமொன்று, எமனுடையவாகனம்போன்ற ஆகாரமுடையது. நெருங்கிவரும் ரதி நாணும் அழகியைக் கண்டு, அவளுடுத்திய ஆடையின் ரோஜாநிறத்தைப் பொறாது வெருண்டு மானைக்கண்ட புலிபோல் அவளைப்பொங்கிப் பாயக்கிளம்பியது.

இதைக்கண்ணுற்ற சிறுவன் தன்தேகம் நிலைகொள்ளாதவனாய்ச் சீறி மனங்கலங்காது தன்தேகத்தையேனும் பலியிடுவது சித்தமென்று முடிவுசெய்தவனாய், ஒரு க்ஷணத்திற்குள் ஆண்சிங்கமென இடையிற்பாய்ந்து மறலியையொத்த கொடிய மிருகத்தின் கொம்புகளுக்கிலக்காய் நின்றான். தற்செயலாய் அவன் கையிலிருந்தகுடையொன்றுவிரியவே, மூர்க்கமிருகம் சிம்ஹசொப்பனம் கண்டாற்போல் ஒதுங்கிப் பின்னோடியது. குடையில்லாதிருந்திருந்தால் அனேகமாய்எருது இளம் பிரபுவை எமலோகமே சேர்ப்பித்திருக்கும் இவையாவையும்நடுங்கியதேகியாய்ப்படபடத்த நெஞ்சுடன் கண்டவச்சுந்தரமாது பீதியடைந்து மூர்ச்சித்து விழுந்தாள். இளைஞன் தான் விழுந்த இடத்தை விட்டு உடனே பெயர்ந்து, எருதைப்பின்தொடர்வதனவசியமெனக்கண்டு பின் சென்று அத்தியந்த விசுவாசத்துடன் பெண்மானைக்கிட்டி நெருங்கி அவளிந்நிலையைக் கண்டச்சமடைந்து அவளழகிய கையைத்தொட்டு நாடிமெதுவாய்ப் பேசுவதையறிந்துசந்துஷ்டியடைந்து,நவரத்தினங்கள் நிறைந்த பொற்றட்டை ஏந்திச் செல்லும் லோபியினுடைய பக்தி சிரத்தையுடன் மதிப்பிலாப் பெண்மணியைக்கைகள் நோற்ற நோன்பின் பயனாக மெல்லெனவேந்திச்சென்று தாயைநோக்கிபோகும் கன்றைப்போல் தெம்ஸ்நதியைக் கலக்கவோடும் ஒரு சிறிய அருவியின் தீரத்தில் கிடைக்கப்பெற்றால் வாழ்நாள் முழுமையும் பூரண அன்புடன் சுமக்கத்தக்க தன்கைப்பளுவை சர்வசாக்கிரதையாயிறக்கி, கைக்குட்டையில் அருவி நீரைமுகந்து அவள் திருமுகத்தில் புரோக்ஷித்து சயித்தியோபசாரங்கள் செய்தபோது, மேகங்களால் மறைக்கப்பட்டுக்கிடந்தபூரணச்சந்திரன் வெளிப்பட்டதுபோல் அவள்பிரஞ்ஞையடைந்து கண்விழித்துத் துள்ளியெழுந்துட்கார்ந்து தானணிந்த வுடை சீர்குலையாமலிருந்ததைக்கண்டு மனமடி வொழிந்து, சிறுவன் உயர்குல ஒழுக்க விசுவாசத்துடன்

தன்விஷயமாய் நடந்து கொண்டவிஷயத்தை மனத்தான் வியந்து மருண்ட பார்வையாக அன்பனை நாணவிசுவாசத்துடன் உற்றுநோக்கினாள். இருவர் நேத்திரங்களும் பரஸ்பர சம்பந்தம் கலந்தன. அவர்கள் சுத்தாந்தக்கரணங்களில் ஜனித்த அன்பு இருவர்கண்ணொளியினும் பிரதிபலித்தது. தேகதத்துவ ஞானமொழிந்து ஏகான்மபாவமாய்ச் சிறிது நேரம் சுகித்தார்கள். உடனே யொடுங்கிய மனம் விரிந்து வெளிப்பட, நம்பொன்மணி வாகீச்சிரியமடைந்து "ஐய, உமது பிராணனையே பலியாய்த்தந்து எனக்குப் பிராணப்பிரதிஷ்டை செய்விக்கத்துணிந்த உமதுதர்மோபகாரத்திற்கு யான் என் ஆயுள்முழுமையும் நன்றியறிந்தவளாயிருக்கக் கடவேன். எனக்குப்பத்து பிராணனிருந்து, அவைபாவையும் சமயம் வாய்த்தபோது தனித்தனி உமதுயிரைரக்ஷிக்க செலவழித்தாலும் நீர் செய்தநன்றிக்கு அவைபிரதியாக மாட்டா. என்மனோபிப்பிராயத்தைப்பூரணமாய்மனுஷபாஷையால் வெளிப்படுத்த அசக்தளாயிருக்கின்றேன். பரமேசுவரன் உமக்குச் சகலவாழ்வையும்அனுக்கிரகிப்பாராக" வென்று குயிலைப்பழித்த இன்னிசையமைந்த இளங்குரலோடுடுக்கலுற்ற மொழிகளாலாசிமொழிந்து தலைகுனிந்தாள். வேளாளர் குலஞ்செய்த தவப்பயனாய் வந்தசிறுவன் மனம் கரைந்து "அம்மணி, நீர் என்னை இவ்வளவு சிலாகித்துப் பேச நான் செய்த பாக்கியமே பாக்கியம். ஆயினும் என்கடமையை ஒருவாறு செலுத்தினேனே யொழிய மற்றொன்றும் செய்திலேன். புருஷலக்ஷணமடைந்த புருஷர் நடந்து கொள்ளவேண்டிய முறைமையை ஒருவாறு அனுசரித்தேன். இதைக்குறித்து நீர் விசேஷமாகச்சொல்லவேண்டாம். உம்மிட அனுமதியின் பேரில் உமக்கு வழித்துணையாகி உம்மை யிருப்பிடம் சேர்ப்பித்து என் ஜாகைக்கேகுகிறே" னென்றுகூறி உத்தமஸ்திரீயாவாளைக் கைலாகுகொடுத்து எழுப்பி, நகரையடுத்து அழைத்துச்செல்லுமார்க்கத்தில் "மாதுசிரோமணி, உம்மை முதற்பார்த்தபோதே நீர் ஐரோப்பிய ஸ்திரீ அல்லவென்று தெளிந்தேன். பரதகண்ட நிவாசியாகத்தானிருக்கவேண்டுமென்று யூகித்தேன். நீர் எந்ததேசம்? என்ன அந்தஸ்துடையவரென்பதைதயைசெய்து தெரிவிக்கவேண்டும்" என்றுதமிழ்நாட்டான் இரந்துகேட்கவடநாட்டுப்பெண்ணரசி "ஐய, என்குற்றத்தை க்ஷமிக்கவேண்டுகிறேன். பிராணபிக்ஷை கொடுத்த உமக்கு மறைக்கத்தக்க தொன்றில்லை. யானடைந்த மனக்கலக்கத்தால் என்வரலாற்றை உமக்குத்தெரிவிக்கக்காலந்தாழ்த்தேன். யான்பங்காளதேசத்துப்பிரபுவொருவர்குமாரத்தி. என்னை ஆங்கிலேயநண்பர்கள் மிஸ் முடலியார் என்றழைப்பார்கள். என் சொந்தபெயர் சரஸ்வதி. மூன்றுதலைமுறையாக என்தந்தையின் பாட்டன் காலந்தொடங்கி நாங்கள் பங்காளத்தில் வாழ்ந்து வருகிறோம். யான் இவிடம் ஐரோப்பிய வயித்தியசாஸ்திரங்களில் பாண்டித்திய மடைவா னனுப்பப்பட்டுள்ளேன். நீர்இப்போது எனக்குச் சோதரஸ்தானத்தில் நிற்பதால் என்னை சரஸ்வதியென்றே இனி அழைக்கும்படிபிரார்த்திக்கின்றேன்" என்று மறுமொழிகூறி, "நான் பகவத்பிரார்த்தனை செய்யும்போதெல்லாம் உம்மைக் குறித்து அவரிடம் விண்ணப்பிக்கும்பொருட்டு உமதுதிவ்யநாமத்தைத்தெரிவிப்பீ"ரென்று அன்புடன் உசாவினாள். அன்பன் தேகபுளகாங்கிதமடைந்து "சரஸ்வதி புகழும் சரஸ்வதி, என்வந்தனம் அங்கீகரிக்க வேண்டும். யான் தமிழ்நாட்டுப்பிரபுவும் இரங்கோன் பட்டணத்துபாரியவர்த்தகருமாகும் சுந்தரேச முதலியார் என்பாரொருவரின் ஏகபுத்திரன். என்னை பாஸ்கரஸ்வாமி என்று நாமகரணஞ்செய்வித்தார்கள். யான் சீமைக்குநியாயவாதசாஸ்திரப்பயிற்சிசெய்து பாரிஸ்டர் பட்டம் பெற்று சுதேசம் திரும்பிப்போகவந்துற்றே" னென்று முடிக்கும்போது சரஸ்வதி தங்கியிருந்த மாளிகையினின்றும் புறம்போந்த ஐரோப்பிய சீமாட்டி ஒருவள் இவர்களைக்கண்டாச்சரியமடைந்து நெருங்கி சரஸ்வதியைத் தழுவி, 'குழந்தாய் எங்கே சென்றிருந்தாய்? என்னவிசேஷம் நிகழ்ந்தது? யார் இந்த இளம்பிரபு?" என்று பிரசினையின்மேல் பிரசினைசெய்து, பிற்பட்டு நடந்த சங்கதிகளெல்லாம் கேள்வியுற்று, உள்நுழைந்து தன்காதலரிடம் அவர்களைக்கூட்டிச்சென்று முதலியாருறவு சரஸ்வதிக்கு நேரிடுவதற்குக்காரணமாய் நின்ற மிருகத்தின் வரலாற்றை சவிஸ்தாரமாய் எடுத்தோதி முதலியாரைஸ்துதிக்க ஆரம்பித்தவள் காலாந்தரத்தும் அவர்புகழைப் பாடிமுடியாள்போற்றோன்றிற்று. ஜான்சன்துரையவர்கள் தன்காதற்கிழத்தியைக் கையமர்த்தித் தென்இந்தியப்பிரபுவைப் பார்த்து, "ஐயா, உம்முடையநட்பு தெய்விகமாய் எமக்குக்கிடைக்கப்பெற்று விஷயம் நிரம்பவும் நமக்கு சந்தோஷத்தைக் கொடுத்து சத்தியமும், தயையும், ஞானமும் குடிகொண்ட உமது திருமுகதெரிசனமாத்திரத்தில் எங்கள் சரஸ்வதி கிருதார்த்தையாயினாளென்பதிற்றடையில்லை. நீர் இன்று இவிடம் போசனமருந்தி சிரமபரிகாரமடைந்து நாளை உம்மிருப்பிடம் செல்லும்படி பிரார்த்திக்கின்றேன். மிஸ்முதலியார் அம்மாளிற்கு நேர்ந்த கொடியவிபத்தை விலக்கியவிஷயம் வெகுசாய் வியக்கத்தக்கதே. எம்முடைய வந்தனங்களும் அதுவிஷயமாய்உமக்குச்செலுத்துகின்றோம். இயல்பாகவே நாங்கள் சொந்த பெண்போல் பாதுகாத்துவரும் குழந்தையை நீர் மறுபடியும் காண இச்சிப்பீரென்பது சித்தம். ஆயின் எனக்கு உங்களுடைய சிநேகபரிபாலனஞ் செய்விக்க அதிகாரமில்லை. மிஸ்டர் முதலியார் அவர்கட்குக்கடிதமெழுதியாவும் தெரிவித்து அவர் அனுமதியின்பேரில் நீர் மறுபடியும் எங்களைவந்து காண உத்திரவளிக்கப்படும். அதுகாறும் நீர் ஏகதேசமாய் இந்த அம்மாளை இம்மாநகரிலெங்கு கண்டாலும், அறிமுகமில்லாத பெரிய குடும்பத்துக் கன்னிகையைக்கண்டா லெவ்விதம் ஒழுகவேண்டிய துமதுகடமையாகுமோ, அவ்விதமே இவள் விஷயத்திலும் நடந்து கொள்வீரென்று பூரணமாய் நம்புகிறேன்" என்றுசொல்லிமுடித்தார். பொழுதும் முடிந்தது. அம்மாளிகையின் உன்னதஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த கடிகாரமொன்று 8 மணி அடித்தது இடையிடையில் செய்தவார்த்தியமும் முடிந்தது.

பாஸ்கரஸ்வாமி முதலியார் சிநேகரொருவர் வீட்டில் முற்பட்டே சாப்பாட்டுக்கொப்புக்கொண்டிருந்தபடியால், துரைக்கு உபசாரவந்தனம் சொல்லி முதலியாரிடமும் உத்திரவு பெற்றுக்கொண்டு, ஆத்மதத்துவத்தை ஸரஸ்வதி சந்நிதியில் விட்டுவிட்டு ஆங்கிலேயர்ஆசாரஅனுட்டானம் தவராதவராய் வாடகைவண்டி ஒன்றிலேறி வெஸ்ட் என்டு என்னும் நகரத்தின் மேற்பாகையில் போசனவேளைக்கு சரியாய் சேர்ந்தார்.

N.B.—This was written towards the close of the last century during the life-time of her late lamented Imperial Majesty the Queen Empress Victoria. The plot of the story is laid in the Victorian era.



## கடிதங்கள்.

குறிப்பு:—விஷயதானஞ்செய்வோர் கடிதக்காரர் முதலிய ஏனையோர் எழுதும் அபிப்பிராயங்கட்கு யாம் உத்தரவாதி யாக மாட்டோம்.

பத்திராதிபர்.

## தமிழ் சாதி.

இப்பாதகண்டபண்டைக்காலப்பாடையாகும் பரதம், அருணம், துளுவம், சாவகம், கொங்கணம், சீனம், மகதம், கோசலம், மாராடம், திரவிடம், கலிங்கம், கௌசிகம், அங்கம், வங்கம், காம்போஜம், சிங்களம், சோனம் என்பவற்றுள் திராவிடமென்னும் பாடையை நந்தேயத்தார் தற்காலம் தமிழ்ப்பாடையென வழங்கி வருகின்றது மிக்க சிறப்பேயாம்.

அங்ஙனமப்பாடைக்குத்தமிழென்றும் அத்தமிழ்ப்பாடையை சாதிப்பவர்களைத்தமிழரென்றும் பெயர்கொள்ளுவதில், தமிழ் எனும் வார்த்தைக்கு இனிமை என்றும் தமிழரென்னும் வார்த்தைக்குஇனியவரென்றும் பொருட்படுகின்றது.

இங்ஙனம் இனியவரென்றழைக்கும்படியானயாம் வாக்கினலினியவர்களாகத் தோன்றுகின்றோமன்றி, செய்கையில் திராவிடமாகிய நஞ்சகம் பூண்டொழுகுகின்றோம்.

அதாவதுதமிழ்ப்பாடையுள்,மகரக்குறுக்கம் ஆய்தக் குறுக்கமென்னும் நஞ்செழுத்து தோன்றி திராவிடமென்னும்பெயர்பெற்றது

போல, இனியவரென வழங்கிக் கொள்ளும் நமக்குள் மகாக்குறுக்கமென்னும் மதவைராக்கியமும் ஆய்தக் குறுக்கமென்னும் சாதி வைராக்கியமுந்தோன்றி உமதுசாதி தாழ்ந்த சாதி எமதுசாதி உயர்ந்த சாதியென்றும், உமதுசுவாமி சின்னசாமி எமதுசுவாமி பெரியசாமி என்றும், உமதுபுராணம் பொய்ப்புராணம் எமதுபுராணம் மெய்ப்புராணமென்றும்மாறு வழக்கிட்டு மதோன்மதத்தம் மேலிட்டு நாளுக்குநாள் நாம் சீர் கெட்டுவருவது அநுபவக் காட்சியே யாம்.

நமது மூதாதைகள் இவ்வகைப் போராட்டங்களின்றித் தங்களறிவை விருத்திசெய்து முற்காலங்களிற் கண்டுபிடித்த சர்பக்குடைக்குமேற் செம்மைக்குடை செய்ய நமக்கு அறிவில்லை. எலிக்கத்தரிக்குமேற் புலிக்கத்திரிசெய்ய அறிவில்லை. பஞ்சலோக பாத்திரமன்றி, அஞ்சாலோக பாத்திரஞ்செய்ய அறிவில்லை. ஓலையேட்டில் எழுதுவதன்றி, சிலையேட்டை உண்டுசெய்ய அறிவில்லை. நஞ்சைப்பயிரன்றி, புஞ்சைப்பயிர் விருத்திசெய்ய அறிவில்லை. மூன்று பெயரிறைக்கும் ஏற்றங்களன்றி, ஒருவனிறைக்கும் ஊற்றமைய அறிவிலாது, பழையமண்கிண்ணியே மண்கிண்ணி; பத்திரமடி என்கண்மணியென்பதுபோல, நமதுமுன்னோர்கள் கண்டளித்த வித்தைகளையும் விருத்திசெய்யாது விடுத்து யாவற்றையும் அன்னியர் கையில் கொடுத்து அவர்கொடுப்பதை உண்டுடுத்து யாங்கள் பெரியசாதி பெரியமதமென்று படுத்து உறங்குவதில் யாதுபயன்?

வித்தையும் புத்தியும் ஈகையும் சன்மார்க்கமுங் குறுகி வஞ்சமுங் கள்ளமும் ஓம்பலும் சோம்பலும்பெருகுவதேயாம். இவ்வகைப் பெருக்கத்தினால் நாமும்நமதுகும்பமும் நந்தேயத்தோரும் நாளுக்கு நாள் சீர்குலைந்து ஏழைகள் மலிந்து சாதியுங்கலைந்து மதமுந்தொலைந்து மருளுங்கால் மல்லாந்து படுத்து மார்க்கம் உசாவுவது கண்ணிழந்தபின் கதிரவனைக்காணலொக்கும்.

(இன்னும்வரும்)

C. I. P.

## ஒருசந்தேகம், விடையளிப்பீராக.

பிரமக்ஷத்திரிய வைசியசூத்திரரென நான்கு சாதியாருள் சைவாள் என்பவர் எச்சாதியினர்? வைணவாள் எச்சாதியினர்? ஸ்மார்த்தாள் எச்சாதியினர்? எக்காலந்தொடங்கி யிப்பிரிவுகள் ஏற்பட்டன? யாதுநிமித்தம் உட்பிரிவுகள் வற்பட்டன? உட்பிரிவுகளால் யாது பிரயோசனம் என்பதும் தீர்க்காலோசனை செய்து விடையளிக்கக் கோருகின்றேன் என்பதுடன்:

தொண்டை மண்டலத்து வேளாளர், சோண்டைகட்டி வேளாளர்; காரைக்காட்டு வேளாளர், சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர், சேர வேளாளர், துளுவ வேளாளர், அகம்படிய வேளாளர், கொங்கு வேளாளர், சேனைகட்டி வேளாளர், பூந்தமல்லி வேளாளர் என்றும் இன்னும் அனேக வேளாளரிருப்பதாகத் தெரியவருகிறது. இவர்கள் எல்லாம் ஒரு ஜாதியாரா? அனேக ஜாதியாரா என்று யோசிக்குங்கால் வேளாளர்என்ற வாசகத்துக்குப் பின்னிருக்கிற மகுடமெல்லாம் தேசத்தின் பேரும் காரணப்பெயருமா யிருப்பதால், அதை நீக்கிப்பார்க்க எல்லாரும் வேளாளரா யிருக்கிறார்களல்லவா? ஆனதுபற்றி ஒரு சாதியென்றே நிரூபிக்கப் படுகிறதுடன் இவர்கள் எல்லாம் சைவநடை யுடையவராயும், பந்திபோசனமுதலானதும் ஒற்றுமையாயுமிருக்கிறதுபெரும்பான்மை. சிலர்மாத்திரம் பந்திபோசனமொழிந்திருக்கலாம். ஆனால்இவ்வளவு வேளாளக்கூட்டத்தில் சிலர் சைவநடை விட்டவராயிருக்கலாம். தற்காலத்தில் சைவநடை மேல்பார்வையாகவே அனேகரிருப்பார்கள். உண்மை சைவநடையிலொன்றாகக் கூடியவர் சிலராகவே யிருப்பார்கள். தற்கால் நடை சைவமென்றால், மாம்ச பக்ஷணமில்லாதிருப்பதொன்றே யென்பார்கள். ஸ்நான அநுஷ்டான ஜெபதப ஆராதனை முதலானதுகளை அனேகர் சரிவர நடத்திவருவார்கள் என்பதை நினைக்கிறதேயில்லை, யில்லை. அவசியமான காரியத்தைவிட்டால் அவர்கள் சைவராளென்று யாரும்யோசிக்கிறதில்லை. இப்படியாகத் தற்காலம் சைவம் கெட்டுப்போய் வரு



கிறது. இன்னமும் எப்படியாகக் கெட்டுவருமோ தெரியவில்லை. ஆனால் ஆழ்ந்த அறிவாளிகளின்புத்தியில் சிலகாலத்துக்குள் வியாசரால் சாதிப்பிரிவுண்டாகாதகாலத்துக்கு முன்னிருந்த நிலைமைகருவந்துவிடுமென்று நன்றாகத்தெரியும். ஆகையால் மேற்சொல்லிய எல்லா வேளாளருமொன்றாகக்கலந்து சாப்பாடு சம்பந்தம் முதலானதுகள் செய்துகொண்டும், ஒற்றுமை யென்கின்ற வித்தை மனமென்கிற பூமியில விதைத்துக் காருண்யமென்கிற நீரைவார்த்து விர்த்தியடைவீராக. அப்படியில்லாமல் வேளாளர்க்குள் ஆயிரக்கணக்கான சாதியாக நினைத்து சாதிக்கு 10-20-50-100 குடியிருப்பதாகவும் அவரவர்கள்தான் சாப்பாடு சம்பந்தம் செய்வதாயும் தற்காலம் நடக்கிறதல்லவா? அதில் கணக்கில்லாத கஷ்டத்துக் காளாகி ஒவ்வொருவரும் அடையும் துன்பத்துக்கு அளவில்லை என்றாலும், சிலதுமாத்திரம் சொல்கின்றேன்.

சொற்ப எண்ணுக்காளாகி யிருக்கும் அனேக சாதியாராகியவர்களுக்குள் ஆதிசேடன்போன்ற அறிவாளி வரனுக்குக் கூனிபோன்ற வதுவை சம்பந்தம் ஏற்பட்டு வதுவரர் எக்மனதாய்ப் பிழைக்க முடியாமல் இருவரும் துன்புற்று இருவரும் தன் தன் அகதஸ்துபோல விபசாரத்திற் றலையிட்டுக் கெடுகிறார்கள். சிலவரர் சரியான வதுவை யில்லாமலே விபசாரத்திற் றலையிட்டுக் காலஞ் சென்று விடுகிறது. சில வதுவரன்கள் தன் தனக்குச் சரியான வதூவரன் இருப்பதாகப் பெற்றோரிடம் தெரிவித்தால் அவாள் நம்மைப் போன்ற வேளாளரல்ல, அவர்கள் வேறு வேளாளர்; நமக்கும் அவாளுக்கும் பந்திபோசனமாத்திரமேயல்லது வேறுவித சம்பந்தமில்லை என்று சொல்வார்கள். அதற்குமேல் பிள்ளைகள் பெண்கள் பேசினால் பெற்றோர் கோபித்துக் கொள்வார்கள் என்று பயப்பட்டு துக்கப்பட்டு அவாளிஷ்டப்படி அதாவது பெற்றோரிஷ்டப்படி நடந்து துக்கப்படுவார்கள். சில பெண்கள் ஆற்றாது துர்மாணமடைகிறார்கள். சிலபிள்ளைகள் பினாங்கு சிங்கப்பூர் மோரீசு முதலான தீவாந்திரம் போய்விடுகிறார்கள். இன்னும் அனேக விபத்துகளும்நேரிடுகின்றன. அநேகரும்அறிந்த விஷயமே. ஆகையால், பொதுநோக்கமாக யோசித்து வேளாளர் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமைபட்டு வாழ்வதால் என்னவிதமான குறைவுகள் நேரிடுமென்பதாக இதைக் கண்ணுறும் வேளாளர்களுக்குத் தோற்றும்பக்ஷத்தில் பதில் எழுதுக.

கோமுட்டி சாதியாரைப் பாருங்கள்! எந்த தேசத்தாரானாலும் சரியே, கொள்ளவும் கொடுக்கவும் சாப்பிடவும் செய்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்குஎவ்வளவுசாதிஅபிமானம், எவ்வளவு ஒற்றுமை!! பிராமணாளைப் பாருங்கள்! காசி ராமேசுரமானாலும் குலம் கோத்திரம் கேட்டுக்கொண்டு பெண் கொடுக்கக் கொள்ள நடக்கிறார்கள். சாதி அபிமானம் ஒற்றுமை யென்பதில் கொஞ்சமும் தாழ்வு கிடையாது. ஆகையால் நன்றாகக்கவனித்துப் பார்த்து எந்த விதத்திலும் எல்லா வேளாளரும் ஒன்று சேரும் தினம் நோக்குக.

இங்ஙனம்:

ஒருவேளாளன்.

---

## ஒரு ஜாதிக் கூட்டுறவு.

'இணக்கமறிந்திணங்கு' என்ற ஆப்தவாக்கியப்படி வெள்ளாண் செட்டி யென்கிற ஒரு வகுப்பினராகிய சாதியார் திருப்பூர் கோயமுத்தூர் திருவாரூர் திருவாரூரைச் சார்ந்த விசையபுரம் அலிவலம் நாகப்பட்டணம் நாகூர்பரங்கிப்பேட்டை காரைக்கால் மாயவரம் குத்தாலம் சிதம்பரம் மதுரை திண்டுக்கல் திரிசிராப்பள்ளி முதலான இடங்களி லிருப்பதாகத் தெரியவருகிறது. மேற்சொல்லிய ஊர்களில் சுமார் 400 - குடிகளிருக்கிறதாக கேள்விப்படுகிறேன். இவர்களை ஏகதேசத்தில் விசாரிக்கும்போது ஆசாரம் நடைஉடை பாவனைகள் எல்லாம் சற்றேறக்குறைய ஒன்றாயிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒரு பெயரைக்கைக்கொண்ட சாதியாராகவும் சைவநடை யுடையவராகவு மிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒன்றாகக்கலந்து சாப்பாடுசம்பந்த முதலானதுகள் செய்வதால் நிரம்ப

நன்மை யுண்டாகும். ஒவ்வொருவரும் இது விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனை செய்து ‘சேரிடமறிந்து சேர்’ என்ற ஆப்தவாக்கி யப்படி பார்க்கவும்.

தற்காலம் இந்த ஜாதியாராகிய வெள்ளாண் செட்டிகள் அனேகமாய் சிலர் சிலரே சாப் பிடவும் சம்பந்தம்செய்யவுமா யிருக்கிறதில் சொற்ப குடிப்பரடான சாதியாரென்றும் சொல்லக்கூடியதுடன்,பெண்ணுக்குத்தகுந்த மாப்பிள்ளையும் மாப்பிள்ளைக்குத் தகுந்த பெண்ணும் இல்லாமல் தகாத மாப்பிள்ளைக் குத்தகுந்தபெண்ணும் அறிவுள்ளமாப்பிள்ளை க்கு அறிவில்லாத பெண்ணுமாகவும், சில பெண்ணுக்கு சிலகாலம் வரை மாப்பிள்ளை கி டையாமல் கிணற்றில் தள்ளியதுபோல முட் டாளுக்குக் கொடுத்து வாழாமல் தகப்பன் வீடுசேர்ந்து துக்கப்படப் பார்க்கிறோம். சில மாப்பிள்ளை பெண் சரியானது கிடைக்காமல் விபசாரம் செய்து கெட்டுப்போய் அரைவ ரிசை கௌமாரதிசை வந்ததன்மேல் சிறு பெ ண்கிடைத்துக் கல்யாணஞ்செய்து பெண்சரி யாக வாழமுடியாமல் பெண்துக்கப்பட்டு,சில பெண்விபசாரஞ்செய்து போகும்படி நேரிட் டும் பார்த்திருக்கிறீர்களல்லவா ? இதுவெல் லாம் பெருங் கூட்டமான பந்துக்கள் இருந் தால் பலவிபத்துக்கள் நேரிட இடமில்லாமல் யாராருக்கு எந்தெந்த இடங்கள் சரியாக நே ரிடுமோ அந்தந்தஇடங்களில் சம்பந்தம் சாப் பாடுசெய்ய நன்றாயிருக்குமே. இதுவிஷயத் தைப்பற்றி இதைப்பார்க்கும் வெள்ளாண் செட்டிகள் யாவரும் யோசனை செய்து ஆ க்ஷேபமிருந்தாலும் சரியானதா யிருந்தாலு ம் பதில் எழுதினால் இஷ்டப்படி நடந்துகொ ள்ள ஏற்பாடுசெய்யலாம்.

இங்ஙனம்:

ஒரு வெள்ளாண் செட்டி.

## விசேஷ அறிக்கை.

இம்முறை நமது பாஸ்கரனை வேறச்சுக்கூடத்தில் பதிப்பிக்கும்படி யேற்பாடுசெ ய்துகொண்டதில் கால தாமதமானதைப்பற்றி நேயர்கள்மன்னிக்கும்படி கோருகின்றனம். இனி கிரமமாய்க்காலந்தவறாது வெளிவரும்.

பத்திராதிபர்.



# YATHARTHA BHASKARAN

FOR

## God, Humanity and The Motherland.

### THE NEVER-ENDING MYSTERY.

Human knowledge, vast as it is already and wonderful as it is likey to become ere long, seems to sink into utter insignificance side by side with the grand mystery of the Unknown into which *man* is as impotent to penetrate his vision now as he was some thousands of years ago when he first attempted to unravell its depths. He feels he knows as little of the finite as of the Infinite. His Knowledge is but of the relative world and his solution ofthe problem of the Absolute has by no means satisfied his higher reason. Ontology is almost a sealed book to him do what he may, and he hopes against hope itself in trying to translate himself to regions where his *reason* cannot soar on its humble pinions. He does not despair altogether, as he hears a voice from within which guides him in his daring flight across the known into the ethereal sphere of unspeakable blessedness where *thought* is not and *seperateness* impossible. Silence is worship, and selflessness its realisation where existence, intelligence and blessedness are one. Man may attain it on earth if he wills it, and it is this hope that sustains him in the midst of all his doubts and fears. This hope again is hazy with the many and takes shape and form in the case of a few, and these few are in their times and generation looked up to as the hope of humanity. It is their thoughts that are agitating the minds of millions of thinking men and women of our own times and it is our rare privilege to enjoy as our precious heritage all that succeeding generations of cultured humanity throughout the world have bequeathed to us in the shape of mental and spiritual food. We should only tak e care not to stomach too much ata time for fearof impairingour digestive system. We should also not famish ours lves by unhealthy and unnatural fastings fostered by time-honored superstition born of self-seeking ignorance.

God, or no God ?—Soul, or no Soul ?—these questions have been over and over again asked for ages together,and there have been various answers forthcoming. Chance or Law ? Chaos or Cosmos ? Freedom or Destiny ? Life or Death ? Hope or Despair ? Substance or Shadow ? Light or Darknes Truth or Untruth ? One or Many ?—these have been the side-issues raised and discussed with equal vehemence by men of all creeds and castes, and conflicting solutions have been put forward to explain them or explain them away. The God-question has no doubt been invariably the pivot upon which the rest turn and the God-question has always remained an unfathomable puzzle to all ages and climes. And those who of old ventured to deny God-consciousness in man were denounced as heretics and burnt to death at the stake or flayed alive to satisfy the cousicience of the Godly. Fanaticism and sectarianism were then the order of the day and men who had the courage of their convictions fell victims in numbers to human demons who strode the earth in all their dark glory. “ My god shall rule the world and your god shall bend his knees to mine,”—“ Accept my god, and you live, deny him and you die,”—“ My god is God, yours is the Devil,”—“ I shall go to Heaven; you must go to Hell”—this was the sortof *cant* that pre-vailed in the middle ages on all hands, and “ might is right ” was the principle that was preached in a thundering voice to helplesshumanity. The anthropomorphic idea of a ruler of the world was no doubt distasteful to a few, and these were called blasphemers and Atheists. The Athiests never denied in our opinion the finger of Design

in the order of the Universe. They saw as well as others that law was nowhere absent in creation and that law implied the existence of an Intelligence which was apparent in the conduct of the world of sentient and insentient being. But they doubted if they did not deny that that Intelligence could be a big man seated somewhere outside the world and guiding its Destiny as conceived by men who believe in a Divine Revelation. The materialist does not deny the mind in toto: he thinks that the mind is the outcome of primordial matter, or its one important aspect in a later stage of evolution. The Agnostic again does not ignore the unknown altogether, but he relegates it to the region of the absolutely unknown and would not enter on useless speculation in that direction. All these sceptics with the exception of some of our contemptible school-boy atheists who pose as men of superior wisdom, have been very sincere men who felt for humanity as a mother feels for her dear ones and who readily sacrificed themselves and their all for truth whenever necessary. On the other hand from the beginning of history it was, we find, the illiterate many that committed a great deal of havoc and bled each other in the name of Religion, God, and Morality. History, repeats itself, it is said and what is true of Europe is also true of India and other countries in Asia. The weaker race had to go to the walls and the stronger one always held the field as its own for a time. But *truth* is never killed outright. Dozens of times you may put it down, but again and again it revives into new life and activity whenever the opportunity is fit.

Virtue is bound to conquer in the long run Vice which stood its ground for a time. The daring few at all times have held aloft the lamp of light for the behoof of humanity groping in utter darkness. Every now and then the ideas of the Fatherhood of God and the Brotherhood of *Man* were properly emphasized and brought home to the innermost recesses of the heart of humanity. 'My God' and 'Your God' merged in the One; and it was realised vividly that 'variety in unity' is the plan of the Universe. 'Love' was the last word spoken of *the One*, and in 'Love' men realised their intimate relationship to one another and all creation animate and inanimate. Still the mystery had not been solved and we own, is not likely to be solved for all Eternity. The Divine Mystery seems to be almost necessary and we must rest content with the partial light that has been so sweetly now and again shed on it by the teachers of humanity.

For, what is the truth about our knowledge of things to day? Highly evolved in intelligence as we are, we still find ourselves face to face with the old old unsolved and eternally unsolvable problems about everything, so much so, that we hardly possess any absolutely correct knowledge of what constitutes our own outer and inner life. And yet like Goethe our cry is, as it should always be—Light, more Light! Philosophy in inciting a love of impartiality and truth, inspires us with a desire to dedicate our days to the good of our race, so that in the fading light of life's evening we may not on looking back, be forced to acknowledge how unsubstantial and useless are the objects that we have pursued.

It has been given no doubt to Man "to fill the heavens with commerce, to rift the hills, to roll the waters, flash the lightnings and weigh the Sun," and yet the Ultimate Reality of things call it Law, call it Nature, call it Karma, call it anything you like, remains a deep mystery. From the tiniest worm that lazily crawls on the surface of our little planet to the wonderful systems of worlds that hang out in Space and unceasingly roll within their proper limits in it, in response to the Indomitable Will of the Eternal Circumambient Unknown that hems us in on all sides, we see this Sublime Mystery overhanging everything known and unknown.

The last word with our forefathers was as it shall always be:—

"We do not think that we know God,
We do not think that we do not know
Him."

God is with us therefore both known and unknown. For this indeed is our credential—this our birth-certificate—that though grovelling in ignorance we are still children of the light,—partakers of



the very substance of God's life and being and hence have the whole of eternity within ourselves. It is thus that we bring ourselves to believe both in freedom and necessity. In a sense we are bound, but in truth we are free. Though by nature free we inhabit a body living in the domain of law. And but for a sense of this freedom of the soul, no worship, no love, no hope, no joy, no aspiration, nothing that appertains to our higher, our truer, our spiritual life would ever be possible. No reason then to complain that our inner experiences are hemmed in by a permanent cordon of the Unknown. We are dreaming and naturally the mystery thickens. Nature appears red in tooth and claws and a horrible nightmare sits heavily on us. We awake in time to find our dream and all its paraphernalia vanish at once into that very mystery which we now enjoy and don't know we so enjoy being in it, and having become one with it in the end. Our theories of a Satan, two Gods; one good and the other bad—a Maya, Karma all, all these fall to the ground at this stage as unsatisfactory to explain in full the problems of life and death that had confronted us at every step in the preliminary stage of our enquiry. We quote below an excellent passage from the Awakened India piloted by no less a man than the late lamented Rajam Iyer in support of what we have said above of the true God-experiences of Humanity:—

"What is really required of man is that he should know what the real 'I' means and realise its boundless glory, in which, suns and spheres, constellations and milky ways are like drops which nature's mighty heart drives through thinnest veins. A very feeble echo of such realisation which nevertheless serves to show that such realisation is nothing 'uncanny' mystic, or fanciful, is uttered by the poet when he says.

"The All-embracing all-sustaining one,
Say, doth He not embrace;
sustain, include
Thee? Me? Himself? Bends not
the sky above,
And earth on which we are,
is it not firm?

* *

And does not All—that is,
Seen and unseen, mysterious All—
Around thee and within,
Untiring agency,
Press on thy heart and mind?
Fill thy whole heart with it—and
when thou art

Lost in the consciousness of happiness—
Then call it what thou wilt,
Happiness! heart! Love! God!
I have no name for it!

A similar experience is described by Tennyson from a slightly different standpoint in the following lines:—

"For more than once when I
Sat all alone, revolving in myself
The word that is the symbol of myself,
The mortal limit of the self was loosed,
And passed into the nameless, as a cloud
Melts into heaven. I touched my limbs
—the limbs,

Were strange, not mine—and yet no
shade of doubt,
But utter clearness; and thro' loss
of self
The gain of such large life as matched
with ours
Were Sun to spark—unshadowable
in words,
Themselves but shadows of a shadow
world."

If these experiences of Goethe and Tennyson which after all are mere unguided, intuitional and chance-glimpses of the truth, be mysterious, then we take no objection to Vedanta also being called by that name. Certainly why should not the Vedanta be mysticism, when love, poetry and happiness or so —happiness of which the great sage of Geneva said "To be happy, to possess eternal life, to be in God, to be saved" all these are the same. All alike mean the solution of the problem, the aim of existence. Happiness has no limit because God has neither bottom nor bounds and because happiness is nothing but the conquest of God through love." Finiteness, narrowness of vision, littleness of understanding brought about by our constantly taking things to be just what

they seem without pausing to inquire how they arise and where they rest, have become so much the habit with us that we raise an uproar and cry halt when the least endeavour is made to overthrow the limits of finiteness and realize the infinite. The prisoner of Chillon who fell in love with the chains which bound him, is a typical representation of man who so dearly cherishes his littleness and loves his finiteness, which after all is but a habitual fancy. The utmost which our limited vision could bear without getting dizzy is the poet's flight into the boundless world of space with the joyous sky lark which 'souring sings and singing sours' or with the west wind which drives away loose clouds like decayed leaves claiming kinship with earth, air and ocean, a noble brotherhood, a spirit all disembodied and immortal though apparently bound in mortal coils But in the very course of such flight the mind turns inward, where time and space are as zero and its finiteness vanishes for the moment an experience beautifully recorded as follows :—

He looked—
Ocean and earth the solid frame of earth
And Ocean's liquid mass, beneath him lay
In gladness and deep joy. The clouds were touched
And in their silent faces did he read
Unutterable love. Sound needed none
nor any voice of joy: his spirit drank
The Spectacle: sensation soul and form.
Allmelted into him : they swallowed up.
His animal being : in them did he live,
And by them did he live : they were his life.

In such access of mind, in such high hour,
Of Visitation from the living God,
Thought was not, in enjoyment it expired,
No thanks he breathed, he proffered no request;

Rapt into still communion that transcends,
The imperfect offices of prayer and praise,
His mind was a thanksgiving to the power,
That made him; it was blessedness and love !

THE EDITOR.

## THE PLACE OF SANKARA IN HISTORY.

The actual date of the birth of Sankara is uncertain ; but it was probably about 788 A.D. None the less uncertain is the actual place of his birth ; but *Kaladi* may be taken most safely as the place where Sankara was born. He comes of a Nambudri Brahmin class of Malabar. And the origin of Sankara is none the less disputed. Dismissing every fantastical explanation about his origin, we take with the calm and serenity of an historical inquiry that Sankara was an illegitimate child born of a Brahmin Widow. In the absence of a known and recognised father, the child cannot but be of a dubious parentage. To say that Madhava did not touch the scandal, and therefore the scandal is untrue, does not explain much. The scandal which has come down to us through tradition, could have been present when Madhava was living. And if he, who explained away all the clouds that hovered about Sankara, should observe silence on this point it shows that he could *not well explain away* the scandal or that the scandal was too true. And silence was thought to be the best that could be done in the circumstances. And then that Sankara would have disowned an unchaste mother and would not have suffered persecution for her at her funeral—is a mere surmise, and nothing more. No child is yet known to have disowned a mother who begot *him or her* by an illegitimate intercourse. Well, Sankara need not on this account, look small in the eyes of thoughtful men. You cannot whip the child for a parent's guilt. Casting aside the exaggerated reports of Sankara's early years, we will concede, considering the future of the boy, that the boy Sankara was naturally acute and intelligent and that he managed to learn a good lot compared with others of his age. Having finished his scholastic career he expresses a desire to go out as a Sannyasin : his mother objects to it. More than anything else, the mother could not let the son go, lest she should die without her son performing her funeral rites : for if Sankara should become a Sannyasin he cannot consistently observe any ceremonial rites. The story goes on to say that while mother and the son were having their bath in a river, the son found himself being pulled by the foot by a crocodile, which, strange to say, promises to leave him safe and sound if he should promise to give up home and take up the order of Sannyasa. And the mother, of course, had



to give in. And Sankara goes out leaving his mother behind to be taken care of by others. The fact is that Sankara promising his mother that he would attend to her funeral rites, even though he became a Sannyasin, left her in search of a Guru. The crocodile story is the invention of a prolific writer. If the story has any meaning, it appears to me, that Sankara should have pleaded with his mother that Samsara, family life, would devour him like a crocodile, i.e., that his spiritual aspiration would be drowned in worldliness, and begged her to save him from the crocodile, and added that the crocodile of Samsara would give him up only when she would give him her consent. Sankara goes out: reaches a hermitage on the banks of the Narmada. becomes a disciple of the presiding Sanyasin Govinda, evidently the successor of Gaudapada : remains there for a time : starts on his tours: goes to Benares and sets himself up there as a teacher and gathers a few pupils about him : begins writing his works and corrects the original writings in the light of subsequent criticisms. Chiefs, here and there, who began to admire him for his Scholarship, supplied him with all the pomp and show of a Hindu Guru. And Sankara moved on from place to place with his disciples, with all the circumstances of a modern Mahant. In the course of his tours he comes upon Mandana Mitra, a follower of Bhatter the fanatic to whom ritualism was everything. This Mandana was at Mahishmati enjoying all the sweets of Papal aristocracy. He was the upholder of Karma-Mimamsa and as such he looked upon Sankara with great contempt. The two red-hot controversialists: had a very fiery dialogue at their first meeting the dialogue would have ended in an appeal to arms. but the spectators intervened and prevented the would-have-been catastrophe. Omitting all the idle stories about an ever-advancing debate between Mandana and Sankara, we take up the fact that Sankara by a clever compromise won over Mandana to his side. Mandana had a wife called Bharati who challenges Sankara to a debate; the *story* says that she puts some questions to Sankara about Kama Sastra: Sankara asks for time; time is granted : he shuffles off his mortal coil and enters into the dead body of a neighbouring *king* Amaruka, the dead body revives, the queens of the late king own Sankara as their husband and Sankara is revelling in all sensual pleasures: forgets his promise to his immediate disciples that he would return soon: the disciples go to the king Shankara and sing to him songs which remind him of his original position: Sankara departs from the new body: seeks to enter his original body which the servants of the King Sankar at the instance of his queens, are about burning Sankara prays to Narasimha who pours down heavy torrents of rain to extinguish the fire: Sankara safely enters his fleshy tenement: goes to Bharati and answers her questions and achieves victory over her. But History holds this story as a huge concoction of a clever *admirer of* Sankara. If the strory means any thing, it means that Bharati doubting the omniscience of Sankara puts him questions on Kama Sastra, believing that he, as a bachelor would *know* nothing of it, and seeing that he was a babe, there she schooled him in that particular science. But this does not look seemly. The only charitable construction that can be placed on this episode in Sankara's life is that by a clever compromise he managed to win over to his side both Mandana and Barati his wife. Mandana becomes Suresvara Acharya of the Sringeri Mutt, and Bharati gets a temple dedicated to her after her death, under the instructions of Sankara.

(*To be continued.*)

A. S. MUDALIAR.

## THE MODERN JOURNALIST.

(BY HIMSELF)

I sometimes wonder at the prodigious powers of our race—the modern journalists. What miraculous gifts do we possess, both of creation and destruction, what mass of matters and how varied,—do we bring forth from day to day, how immense the range of our mind, how profound the depth of our insight, what wonderful powers of telepathy clairvoyance and clairaudience,—the whole thing seems, when one reflects upon these, to be inexpressibly wonderful. I am seriously inclined to believe that we are a special Dispensation of Providence, sent out for the good of modern humanity.

I oftentimes really wonder at our own work. We may have never been to school but still the moment any problem of education, whether of principle or of methods, crops up, we have simply to see the announcement of it to be at once illumined with an

expert knowledge of all educational matters, from the methods of the flogging village school master, whose sum total of learning never goes beyond the range of the R's, to those of the most scientific authorities on modern Pedagogy. We may have never crossed the threshold of a chemical or physical laboratary, but that does not prevent our knowing, by the force of our native intuitions, every detail of these sciences, both in their theoretic and practical aspects, and in the light of this knowledge, to praise or condemn the fruits of life-long research in these domains. Without knowing a line of Sanskrit, We are able to pass most accurate judgements on abstruse questions of Hindu philosophy and Scripture and discuss and decide the compartive worth of eminent scholars. We are not biologists butWe know everything of life. We are not physicists but We know and understand everything of magnetism and electricity including J. C. Bose's latest experiments on elecric response. We are not chemists, but we know all about ancient and modern chemistry, to praise or damn, the results of the laborious researches of acknowledged savants. We need not know the story of Sanskrit Literature or the methods of the Mimansakas to lay down the law in regard to sastric authority' or the character and chronology of the ancient books. I may not be able to expain all this, but they are all true, and when I reflect on our own prodigiousness, I find it impossible to resist the conviction that We *are* a special Dispensation of Providence.

We are all—the race of modern journalists—most miraculously made,—more wondrous than the mythical mermaid, in our actual composition. The mermaid is a mere diad, a combination of a fish and a woman. But we are almost *infinitiad*, if I may coin this word. We are poets, philosophers, priests, politicians, lawyers, doctors, engineers, traders, capitalists, labourers,—all the arts and professions of modern life, rolled into one. We create like poets; we talk like philosophers; we curse like priests—and sometimes we bless also those that are of our set;—we lie like politicians: we argue like lawyers, we amputate—people's reputation and sometimes heal up that of our friends and patrons as well,—like doctors; in short, we play the best part of every man, just as it suits our whims, or our interests, or as is needed by the requirements of current events and topics. There is absolutely nones so versatile like us—the modern journalists.

You ask,—how I explain this mystery. Well, I explain nothing. I can explain nothing. I do not know myself from myself how shall I explain myself to others? The highest creations are all inexplicable. Who can explain the Master? Who can analyse Genius. The terrible cataclysms of nature, who shall explain? They are not meant to be probed and cut up and weighed and spanned. You have to look at these,—and simply tremble, and be convinced of your verminosity and nothingness. The most beautiful objects also are equally inexplicable. The sunset glories of the evening sky or the awful loveliness of the thunder-charged clouds wresling with roaring winds on starless heavens; or the tender and chastening beauty of true womanhood whose very flesh and colour and contour seem to reveal the purity and harmony of the soul within all these, who shall analyse, who essay to explain? they are either the terrible or the lovely mysteries of creation. So are we too the race of modern journalists,—royalties without purple, kings without crown, bishops without mitre, generals without armies,—the essence of everything without their substance; the sublimest mysteries of modern life and civilisation. We are born to write and all the world to read what we write, and receive the highest law and wisdom from us, on every conceivable subject, from higher mathimatics, to Vedic Mimansas. We ourselves know nothing of our own natures, except only this, that it is our supreme and divinely-given prerogative to teach without learning, to judge without knowing, to critcise without reading, to writ without thinking, and to turn good into evil and evil into good, for the benefit of ourselves and our friends, and the eternal confusion of our enemies.

*From the New India.*



# ராஜயோகம்.

இப்போழ்தத்து யாம் ராஜயோகம் பேசப் புகுவாம். இந்த யோகம் பூர்வகாலத்தில் வெகு பலரால் தழுவப் பட்டிருந்ததெனத் தெரியவருகிறது. ஆயினும் இதைப் பழகுவான் கருதிய அநேகர் தக்க ஆசானைப் பெறாமல் மூடமதிகள் போதனையைப் பின்பற்றி நாசமுற்றொழிந்தனர் என்றுங்கூறுப. குருவன்றி யிந்தயோகம் கைகூடுதல் சாத்தியமன்று. மக்களுள் சிலரே யிந்த யோகம் செய்து முடிக்கும் யோக்கியதையுடையாரென நம்பவேண்டியிருக்கிறது. மற்றையோருள் பெரும்பாலார் பக்திமார்க்கத்தையும், சிறுபான்மையோர் ஞானமார்க்கத்தையும் பற்றி பொழுகுதலே நற்புத்தியாகுமென்க.

இந்திரிய வாயிலாக வெளிப்பட்டு ஓடாத வியாபாரம் செய்யும் மனதை ஒரு வழிப்பட நிறுத்தி அதைத் தன்னைத்தானே படிக்கச் செய்து, அந்தக்கரணாதிகளின் பாகுபாட்டினையுணர்ந்து, அவைகட் காதாரமாய் நின்ற விகார ரஹிதமான அறிவைத் தரிசித்து அவ்வறிவின்கண் அனாவசியபந்தியான ஜீவன் கரைந்து மறைந்து, இந்திரியாதீதவானந்தமயமாய் அஹம் (தான்) பிரகாசித்தற்கு உதவும் சாதன சாத்திய முறைகளைக் கற்பிப்பதே ராஜயோகம் என்று மேலோர் பேசாநின்றார்.

அடயோகம் சித்திகளைப் பெறச்செய்யும். ராஜயோகமே முத்தியைக்கோரிச் செய்யத்தக்கதாம். அபிமானத்தினாற் செய்யும் அட்டமா சித்திகளே யல்ல; கோடிசித்திகளைச் செய்வதாயினும் ஆன்ம லாபம் நேரிடாது. பிறவித் துன்பம் விடாது.

ராஜயோகம் அனுட்டிப்பதற்கு எட்டு விதப் படிகளுண்டு. அவை தம்முள்,

1. இயமம் :—அஹிம்சை, சத்தியமுடைமை, கள்ளாமை, ராக நிவிர்த்தி, கொடையேற்காமை இவை முதலியன பழகுதல்.

2. நியமம் :—ஆசாரம், திருப்தியுடைமை, தேகாபிமானம் ஒழிதல், ஆத்மநாத்ம விசாரணை செய்தல், பரமேஸ்வரனுக்கு மீளாவடிமையாதல் முதலியன பயிறலாம்.

3. ஆசனம் :—யோகாப்பியாசம் செய்ய உட்காரும் விதம் ஆசனவகைகள் நவவிதமென்ப. ஆயினும் அவரவர்கட்கு எவ்வெவ் விதமாயிருத்தல் சுகத்தைத் தருமோ அவையே விசேஷ வாசனங்களாமென்றும் கூறுவர் நல்லோர். சுகாசனம் என்ற சொற்றொடர் யோக நூல்களில் பிரயோகிக்கப் பட்டுள்ளமைகாண்க. இதைக் குறித்து வேறு நிர்ணயம் கிடையாது. இங்கேகவனிக்க வேண்டுவதொன்றே, தேகம் வளைவுறாமல் சிரசு பரியந்தம் நிமிர்ந்திருக்கவே வேண்டுமென சாஸ்திரம் கூறும். ஆசனம், தத்தம் மனம்போலமைந்த பிறகு, அப்பியாசி பிராதக்காலத்தும், உச்சிக்காலத்தும், சந்திகாலத்தும், அர்த்தராத்திரி சமீபித்த சமயத்தும், ஒருமாதம்வரை பிராணவாயு சந்தானம் செய்தவழி நாடிகளைச் சுத்தம்செய்தல் இன்றியமையாததென்று யோகநூல் பிரஸ்தாபிக்கின்றது.

4. பிராணாயாமம்:—கீழேபேசப்பட்ட ஆசனத்தைத் தலைக்கட்டிய பின்னர், பிராணாயாமம் சாதித்தல் ஒழுங் கென்பர் நூல்வல்லார். பிராணாயாமம் என்பது பிராணவாயுவை யடக்கியாள்வதாம். பிராணன் என்ற பெருஞ்சக்தி பிரபஞ்சோற்பத்திக்காலத்திலும் ஆகாச பூதத்தினூடே சரித்து, அதையதிட்டித்து சிருட்டியைச் செய்கின்றதென்று நம்மனோர் கிரந்தங்களில் பேசப்பட்டிருக்கிறது. இதுவிஷயம் குருமுகமாய்க் கண்டுதெளிக.

5. பிரத்தியாஹாரம்-மனதை இந்திரியங்களோடு சம்பந்தம்படாதிருக்கச் செய்தல். வேண்டும்போது, மனதைப் புலன்வழிச் செலுத்தியும், வேண்டும்போது அதைப்புறம்பே நழுகவிடாது உள்ளுக் கிழுத்தும்அடக்கியாளுதலே பிரத்யாஹார மெனக் கேட்கப்படுகிறது. பிரதமத்தில் ஓர் ஆசனத்திருந்து மனதை யதன்வழியே செல்ல சிலநேரம் விடவேண்டும். அம்மனமோ? பேய்கொண்டு சொள்ளித்தேள் கொட்டுண்டு குதித் தாடும் கள்ளுண்ட கண்ணில்லாக்குரங்கை யொத்திரு

த்தவால், அபூர்வமான்பல நடனோற்சவங்க
ளைச் செய்யாநிற்கும்.“வனக்குரங்கு வியப்ப
ஏன் மனக்குரங்கு நடித்ததுடிப்படிக்கி யூட்
கொண்டதுவையே” எனக் கட்டளையிட்டுள்
ளார் நமதருட் பிரகாசவள்ளற் பெருந்தகை
யும். இந்தக்குரங்காட்டத்தை அப்பியாசி
அன்னியனுயிருந்தும், சாட்சி மாத்திரமா யி
ருந்தும் அனுபவித்தல் அவசியமென்க, இன்
னோரன்ன பழக்கங்களால் இறுதியில், நன்
மகன் மனோவாகனத்தைத்தன்வயப் படுத்து
தும் ஆற்றலையடைகுவன் என்பதொரு
தலை.

6. தாரணை:—மனமுழுமையும் ஒருவழி
ப்பட்டு ஒருவழிசேறல், மனநாட்ட மெல்
லாம் ஓரிடத்தை யாசிரயித்துக் கிடத்தல்,
ஓரேபதார்த்தத்தையிடையறுதுமனம் அபே
க்ஷித்து நிற்றல், ப்ருமத்யத்தைப்பார்த்தபோ
து வேறுசிந்தனை யற்றிருத்தலொன்று. நாசி
நுனியை நோக்கிய விடத்து இதரதேக வுறு
ப்புக்களின் எண்ணம் உதியாதிருத்தல் மற்
றொன்று.

7. தியானம்:—மனதை தாரணையால்
ஒருபொருளிடம் சேர்ப்பித்த பிறகு, அந்த
ப்பொருளினிடமே கிரமமாக நாழிகைக்கணக்
காய், அம்மனம் தனது கிரணங்களைச் செலு
த்திக்கிடக்குமோர் அரிய சக்தி யதனிடம்
வெளிப்படுகின்ற தென்ப. அஃதேதியானம்
போலும்.

8. சமாதி:—தியானம் முதிரமுதிர, சூழ்ந்
துள்ள பல பதார்த்தங்களின் சப்தமொழிந்
துபோம். அங்கிலையில் மனம், சப்தமறியா
து, அர்த்தம் மட்டுமேயுணரற்பாலதாம்.
அஃதே சமாதியை யடுத்தநிலை யென்றுகூறு
ப. சமாதியையுள்ளபடியே யின்னதன்மைத்
தென்றுகூற மக்கட்டாமன்று. சமாதியில்
தற்போத சம்பந்தமுடைய பிரக்ஞையில்லை
பொறி யறிவை யதீதித்து நின்றபோறிவாய்.
மனம்மாறியதே சமாதி சுகமாகும் போலும்
சர்வான்மாக்களும் உணர்ந்தும் உணராதும்
அந்நன்னிலையையே யடைந்துசுகிக்க முயலா
நின்றன.

# ஞானயோகம்.

சிருட்டிகர்த்தாவாம் பிரும்ஹப் பிரஜாபதி
யவர்தம் மூத்தகுமாரனும் அதர்வ ரிஷிபு
ங்கவருக்கு ஆதியில் பிரும்ஹ வித்தையைக்
கற்பித்தாரென்று கூறுப. மனுக்களின் பிர
யோஜனார்த்தமாய் பிதாமகனே, இருக்கு,
யஜுர், சாமம் என்னும் மூன்று வேதங்களை
யும், முறையே, அக்நி, வாயு, சூரியன்; இ
மைதம் கர்ப்பத்தினிடமிருந்தும உயிர்ப்பித்
தனரென்றும் வைதிகர் சிலர்பிரசங்கியாநிற்
பர்.

ஆயின், இக்காலத்தில் மேற்புல விஞ்ஞான
சாஸ்திரம் வல்லுநர்பலர் வேதோற்பத்தி
யைப்பற்றியும் பிரும்ஹவித்தியா வுண்டான
காலத்தைக்குறித்தும் வேறபிப்பிராயம் கொ
ண்டுள்ளாரெனத் தெரியவருகிறது, இன்னார்
இருக்கே முதலுண்டானதென்றும், அஃதோ
ர்காலத்தே செய்யப்பட்ட தல்லவென்றம்,
ரிக்வேதசம்ஹிதாகாலத்தில் ஆரியர் பிரும
வித்தை யுணர்ந்தாரில்லையென்றும், கங்கா
நதி தீரத்தேயுள்ள பிரதேசங்களில் ஆரியர்
பரவியிருந்த காலங்களிற்றும் பிரும்ஹவித்
தை பேசப்பட்டதென்றும்.

பிரும்ஹவிதத்தையை முதற்போதித்தவர்
க்ஷித்திரியரே யென்றும் அவரிடமே பிரா
ம்ஹணரிஷிகள் பிரமோப தேசம்பெற்று
உண்மை யுணர்ந்தாரென்றும், புத்தர்காலத்
துக்கு வெகுநாட்பிறகுத்தான் ஆரியருள்திரி
மூர்த்தி ஞானம் உண்டாயிற்றென்றும், மனு
ப்பிரஜர்பதி தாம் செய்த சூத்திரங்களிலா
வது தர்மசாஸ்த்திரத்திலாவது திரிமூர்த்தி
பிரஸ்தாபம் செய்திலரென்றும், மனு புரா
ணமதத்தை யொப்பாராகி, ஆலயங்களில்
விக்ரஹாராதனை செய்யத்துணிந்த பிராம்ஹ
ணரை அவைதிகரென்று, பலவிதமாய் நிந்தி
த்தனரென்றும் ஆய்ந்தெழுதியுள்ளார். இது
சம்பந்தமாய் யாமிப் போதியற்றி யச்சிட்டு
வரும் வைதிகஹிந்துமதம், பௌராணிக
ஹிந்துமதம் என்னும் அரிய கிரந்தங்களில்,
சாங்கோபாங்கமாய்எழுதியிருக்கிக்கின்றோம்



உண்மை யுணர ஆர்வமுள்ளார், பிறவற்றை
யாண்டுக்கண்டுதெளிக.

நிற்க:—

மந்திரம், பிராம்ஹணம், என்ற விருபகுதிக
ளுடைய வேதம், கர்மம். உபாசனை, ஞான
ம், என்ற மூன்று விஷயங்களை யோதாநிற்கு
ம். கர்மகாண்டம், சத்கர்மங்களைமுடித்து ஸ்
வர்க்காதிபோக போக்கியங்களை யடைதலைக்
குறித்தேபேசும்,

உபாசனாகாண்டம்; பக்தவத்ஸலனாகியபெரு
ந்தெய்வத்தைச் சகுணமார்க்க மாய்த்தியா
னித்தலைப்பேசும்.

ஞானகாண்டம் மலம் விக்ஷேபம் என்ற
குற்றங்களான்மாத்திரம் மூடப்பட்ட
வுநகாரிக்கேசற்குருவால் சொல்லாமற்
சொல்லப்படும்ஆன்ம தரிசனத்தையே
மெய்வீடெனப்புகழ்ந்துரைக்கும்.

எனவே, அறிவான தெய்வத்தை அறிவாய்
நின்று, அறிவாலடைந்துய்தலே ஞான யோ
கத்தின் பிரயோசனம் என்க.

சராசர சேதனு சேதன விசாரணை முடித்
து, பிண்டத்தை யறிந்து பிரும்ஹாண்ட
முணர்ந்து, அகம்புறமற்ற அறிவினுக்கு
அகத்துலகும் புறத்துலகும் ஆபாசமாமென
நிர்ணயம் செய்து, தேகத்தை நானென்றும்,
தத்துவங்களினது செயலை, எனதென்றும்,
அபிமானமுண்டாக்கும் மாயாபிராந்தி யொ
ழித்து, தத்துவநியதிகளைந்து, எஞ்சி நின்ற
தன்னைத்தரிசித்து, அவ்வாறு நேர்ந்த தற்
றெரிசனை யான் மகா வாக்யங்களின் லக்ஷி
யார்த்தம் வெளிப்பட, இன்பதுன்ப சுகதுக்
காதி துவித பதார்த்தங்களின் அர்த்த புஷ்
டியில் மயங்கிக்கிடந்த அஹம்பாவம் பெருங்
கனவாயொழிய, உண்மையறிவாநந்தவடி
வாம் பரிபூரணத்தலைவனே தானாக விளங்
கப்பெற்று, ஸஜாதி, விஜாதி, ஸ்வகத பே
தங்களற்று, மங்கல மயமாய் விளங்கிய சிவ
த்தில் இரண்டறக் கலந்து சிவோக மென்
றிருந்திடல் ஞானத்தின் வரம்பாகு மோன
மாம்.

இந்த யோகம் சித்திப்பதற்கு:
ஆத்மனாத்மவிசாரணை
2. இகமுத்கிரார்த்தபல யோகவிராகம்
3. சமாதிஷட்கசம்பத்தி
4. முமுட்சுத்துவம்,
என நான்குவித சாதனங்கள் அதிகாரியா
வான் அடையப் பெறல் இன்றியமையாத
தென்ப. இந்த சாதனங்களைக்குறித்து வட
மொழியினும், தென்மொழியினும் பலபெரி
யோர் ஏராளமாயெழுதியுள்ள கிரந்தங்களு
ளொன்றைச்சித்த சுத்தியோடு பாராயணஞ்
செய்து உண்மை ஞானம் அடைக.

பக்குவம் பழுத்த உத்தமரே குருதரிசனை
யடையப்பெற்று அவரான் சட்சு,பரிசம்,வா
சகம் என்னும் முத்தீக்ஷைகளானனுக்கிர
ஹிக்கப்பெற்று,பிருமஹோபதேசம் அடை
ந்து தாங்களே அது வென்ற (அநந்த நித்தி
யப் பரப்பிரும்ஹமென்ற) உண்மை விளங்
கப் பெற்று வாழ்வர். பத்திராதிபர்.

# போர்க்கப்பல்களின் பொலிவு.

முற்காலத்திலே ரதகஜதுரகபதாதிகளென
சதுரங்க சேனைகளைக்கொண்டு அரசர்
போர் நடத்தி வந்தனர். இப்போதோ முத
லாவது ரதமே கிடையாது. இரண்டாவதா
கிய யானையுங்கிடையாது. மற்றைத் துரக
பதாதிகள் மாத்திரமே முனனம் மற்றை
யோரினும் பலவீனமாயிருந்து தற்காலம மற்
றெல்லோரினும் வலிமிகுந்து பராக்கிரமசாலி
களாய்நடத்திவருமபோர்ப்படையிலுள்ளன.
ஆயினும் பீரங்கிவண்டிகளே இப்போது ரதங்
களாகும். வனாந்தரப் போர்க்களங்களிலே
யானைக்குப்பதிலாக ஒட்டகங்கள் பிரயோக
னப்படுகின்றன. இக்காலத்துப் போர்க்களத்
திலே ரதிகர்கள் காணப்படுவதில்லை. முற்கா
லத்துப் பதாதியர் சஸ்திரப்படையாகிய வா
ட்போரிட்டனர். தற்காலப் பதாதியர் துபாக்
கி ரவை யஸ்திரப்பிரயோகம் செய்கின்ற
னர். படைத்தலைவர் தண்டத்தலைவர் வியூகத்
தலைவரென்னும் சம்ரதர் மகாரதர் அதிரத
ரென்பவர்கள் (முன்னர் வேற்படையை வில்
லால் விடுத்து வந்த) அஸ்திரப் பிரயோகம்
செய்து வந்ததற்கு மாறாக, இப்போது அவ்

ரதிகர்கள்போன்ற போர்த்தலைவர்களாகிய காப்டென், கர்னல், ஜெனரல்கள் அஸ்திரப்பிரயோகம் செய்வதின்றித் தற்காப்புச் சஸ்திரபாணிகளாக மட்டு மிருந்து பதாதியரை அணிவகுத்துச் செலுத்தும் யூகையே ஆதாரவாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே முற்காலத்துப் போர் முறைக்கும் எதிர்மாறான வித்தியாசமாவது முற்காலத்துப் போர்வீரர் பதாதியின் முதன்மையாய் நின்றேற்றுக்கொண்டது போலல்லாமல், இக்காலத்துப் போர்வீரர் தமது முயற்சியால் உசாவிப் பின்னின்று பதாதியரையேவுதலாயிருப்பதில், வெற்றிதோல் விப்பொறுப்பானது முற்காலத்துவீரர் மேலும இக்காலத்து சேவகர் மேலும் நிற்பதாகும். தவிர குதிரைப்படைபாசர் அக்காலத்திலிருந்ததுபோல இக்காலத்துமுள்ளனர் இவர்களுக்கு ஈட்டிப்படையே அப்போதும் இப்போதுமுள்ளது. பின்னையிக்காலத்து யானைப்படையாதோவெனின், அதுபோர்க்கப்பற்றிரளேயாகும். லக்ஷம்யானைகள் கூடிஅவ்வளவு இருப்புலக்கைகளாலே யெவ்வளவுஹதம் செய்யுமோ அவ்வளவையும் ஒருபோர்க்கப்பல் செய்துவிடும். ஒரு பெரு நகரை இருந்த இடந்தெரியாதிருக்க அவ்வொன்றழித்துவிடும். அக்காலத்திலே மந்திரபூர்வமாய் அஸ்திரப்பிரயோகவினோதங்கள் பலவாறுப் புராணங்கள்கூறக்கேட்டிருப்பினும், பீரங்கிப் பிரயோகமானது இடிசத்தத்திலும் பயங்கரமானதென்னக்கூடும். வண்டி பீரங்கியினும் கொடியது கப்பல் பீரங்கியாம். இவ்வண்டி பீரங்கியினும் பம்பாமென்ற பீரங்கியுங் கொடியதென சமீபத்தில் நடந்த "போயர்" யுத்தத்தினாலறிந்தோம். மதியூகியான விதுரனைப் போன்ற ராபர்ட்ஸோடு சமயோசித சாமார்த்திய பானுகிய அர்ச்சுனன் போன்ற லார்டு கிச்சனரிருவருமே மதிமயங்கிக் காணநின்ற துரோணனை போன்றபோதாவும், கர்ணனைப்போன்ற டிவெட்டும், சல்லியனைப்போன்ற டிலாரியும், விஷமனைப்போன்ற கிரான்ஜெயும் அசுமத்தாமனைப்போன்ற கிரிஆஜிவகரும் அதுவரையில் யுத்தகோல செருக்குற்றிருந்து பீரங்கிப் போரிற் சிறந்த ஐரோப்பாவும் அச்சமுற்றிடும் படியாக ஆற்றலைக்காட்டி வெற்றிக்கொடிநாட்டியும், முடிவில் அவர்கள் ஆங்கிலேயருக்கடங்கிடந்து கொள்ள நேர்ந்த தன் காரணமாவது அத்திரான்ஸ்வால் அரசுக்குக் கரைதுறையும் கப்பற்படையும் கைகூடாதிருந்ததேயாமென்பது யாவருமறிந்ததாகும்.

பிரிட்டிஷ் மஹாஜனங்கள் சமாதானிகளானாலும் தற்காப்புக்கு ஆயத்தமான யுத்தசேகரத்திலும் மிக்க ஆவல் கொண்டவர்களாகவேயிருப் பதுபற்றி,கப்பற்படைத்திரட்சியிலேயே கண்ணோக்கயாயிருந்து வருகிறார்கள். ஆகவேபிரிடிஷாரின் ஐசுவரியவிருத்தியிற்பொறுமைகொள்ளாதவேற்றரசின்றாகத்தமக்குப்பலம் சேர்க்கூடுமென்று திருகாஷ்டிபோன்றதுருசர்நம்பிக்கிளம்பிகரடியானது சிங்கத்தை யெதிர்க்கத்துணிந்தது போலப்போரறை கூவிக்கொண்டே வேற்றரசுதுணைகேட்டபோது ஒவ்வொன்றாகக் கைவிடநேர்ந்துவிடவேபோயர் வீரர்கள்சேர்ந்து சரண்புகுந்தனர், போயருடைய போர்வீரத்தை வேற்றரசுகள் மெச்சினவென்றாலும், பிரிடிஷாரையெதிர்க் காமைக்குக் காரணம் பிரிடிஷ் கப்பாற் படைத்திரட்சியே யாம், பிரிடிஷாருக்குக் கப்பற்படைத்திரட்சியுள்ளதெனாலும் நிலப் படைத்திரட்சியில்லையே யென்ற ஆசங்கைக்கு கப்பற் படையாலே நிலப்படையினெளிமையும் வலிமைபெற்று விடுமென்னப்படுகிறது, பெரும்போர்க்காலத்திலே பிரிட்டிஷாருக்குப் பண்ட இறக்குமதிக்கும், சரக்கு ஏற்றுமதிக்கும் தடையுண்டாகும் சங்கடநிவிர்த்திக்காகவும், பிரிட்டானியா ஒரு தீபானதுபற்றி சுற்றிலும் சததுருக்கள் சூழவிருக்கும்துன் பநிவர்த்திக்காவும்,தற்காப்புக்காவே கப்பற்படை வலிமைமிக்க அவசியமாயுள்ளது-இதனாலேதான் பிரிட்டிஷார் நோக்கமெல்லாம் கப்பற்படைமேலிருக்கும்.

முதல் தரமான போர்க்கப்பல்களிலே பிரிட்டனுக்கு 40-ம், பிரான் சுக்கு 20-ம், ருஷியாஜேர் மனி இட்டலி அமேரிக்க ஐக்கிய மாகாணம் இவை ஒவ்வொன்றிற்கும் 10-ம், ஜபானுக்கு 5-ம், உள்ளன, தவிரஜெர்மனிக்கு மூன்றுந்தரமான போர்க்கப்பல்கள் 10-



உள்ளன, கரைக்காவற்கப்பல்களிலே அமெரிக ஐக்கிய மாகாணத்துக்கு 15-ம், பிரான்சுக்கு 14-ம், ருஷியாவுக்கு 13-ம், ஜெர்மனிக்கு 12-ம், உள்ளன. ஆயுதரக்ஷணையுள்ள பாய்ச்சற்கப்பல்களில் பிரிட்டனுக்கு 18-ம், பிரான்சுக்கு 9-ம், ருஷியாவுக்கு 8-ம், ஜபானுக்கு 6-ம், இட்டலிக்கு 5-ம், உள்ளன, காப்புப்படைக்கப்பல்களில் பிரிட்டனுக்கு 100-ம், பிரான் சுக்கு 40-ம், ஜெர்மனிக்கு 20-ம், ஜபானுக்கு 20-ம், இட்டலிக்கு 15-ம் அமேரிக்கஐக்கியமாகாணத்துக்கு15-ம் உள்ளன. காபபில்லாக்கப்பல்களில் ஜெர்மனிக்கு 20-ம், பிரிட்டன் ஜப்பான் அமேரிக்க ஐக்கியமாகாணம் இவை யொவ்வொன்றிற்கும் 10-ம், உள்ளன. தவிர கப்பல் முழுக்குப்படவுகளில் பிரிட்டனுக்கு 200-ம், பிரான்சுக்கு 275-ம், ருஷியாவுக்கு 175-ம், ஜெர்மனிக்கு 125-ம், இட்டலிக்கு 150-ம், அமேரிக்க ஐக்கிய மாகாணத்துக்கு 40-ம, ஜபானுக்கு 80-ம், உள்ளன முழுக்குக்கபபல்களில் பிரிட்டனுக்கு 34-ம், பிரான்சுக்கு 15-ம், இட்டலிக்கு 15-ம், ருஷியாவுக்கு 10-ம், உள்ளன. கடற்படைவிகிதமிவ்வாறாக நிலப்படையிலே பிரிட்டனுக்குள்ளதொகை சுமார் $7\frac{3}{4}$ லக்ஷம். இதற்கு மூன்று மடங்குகொண்டது ருஷியாவுக்கும் இருமடங்குகொண்டதுபிரான்சி ஜெர்மனிக்கும், அதி சமமாய் ஆஸ்ட்ரியாவுக்கும், மூன்றி லிரண்டு பங்கு இட்டலிக்கும் பாதிக்கு மேற்பட ஜப்பானுக்கு, மூன்றிலொருபங்கு அமேரிக்கா ஐக்கிய மாகாணத்துக்கும் உள்ளன.

மேற்கூறிய படைவலிமைக்குறிப்பால் தற்காலம் இவ்வுலகில் உன்னதஸ்திதியிலுள்ளவுழுவல்லரசுகளுள் முதன்மையானது பிரிட்டனும் கடைப்பட்டது ஜபானுமாயுள்ளதென்றறியலாம். பிரிட்டனுக்கிரண்டாவதாயுள்ள பிரான்சுக்கு பிரிட்டனிலும் இரட்டிப்பான முழுக்குப்படவுகளுளவெனினும் அவற்றில் பிரான்சுக்குள்ளதாக்குப்படவுகள் 14-க்குப் பிரிட்டனிடம் புதியனவாய் 112 உள்ளதென்பதை கவனிக்குமிடத்து பிரான்சிலும் பிரிட்டன் அவ்வகையிலும் வலிமை மிகுந்ததேயாம். தவிர பிரான்சும் பிரிட்டனும் தத்தம்கப்பற்படையை இப்போதுள்ளதற்கு இன்னும் மூன்றி லொருபகுதியளவு விருத்திபடுத்திக்கொள்ள நிச்சயித்திருக்கிறார்கள். பிரான்சியர்மிக்க அநேகடதிமான முழுக்குப்படவுகளை விருத்திசெய்வதிலேயே பிரியமாயிருக்கிறார்கள் பிரிபடானியரோ முழுக்குப்படவுகள் உடையவருக்கே மோசமுடியுமென்று கருதுகிறார்கள். பிரிட்டன் கப்பல்கள்கொள்ளும் எடையளவு 130 ஆயிரம் டன்னாக, பிரான்சியக்கப்பல்களது 497 ஆயிரம் டன்னாகிறது. கடற்படையிலும் நிலப்படையிலும்குறைந்துள்ளதானாலும் பிரஜைகளின் தேசாபிமான கட்டுபாட்டினால்செல்லாக்கோங்கியுள்ள அமேரிக்கஐக்கியமாகாணமும் தன்காப்பற்படையை விருத்திசெய்து வரும் நோக்கத்திலிருக்கிறதாம் ஜபான விருத்தியில் பொறுமைகொள்ள வல்லரசில்லை. ஜெர்மனி முழுக்குப் படவுகளை தமக்கு உபயோகமற்றவையாகக் கொண்டிருக்கிறார்களாம். கப்பற்படைச்செலவுக்கு பிரிட்டானியர் பின்னிடுவதில்லை யென்றாலும், அவ்வோரள செலவுக்கேற்ற வருவாய்க்கிடம் யாதென்ற கேள்வியும் அவர்களுக்குள் விவாதப்பட்டு வருகிறது.

(Sd) வில்வபதிசெட்டியார்.

யதார்த்தபாஸ்கரன்.

---

இஃது இப்பாதகண்டத்தின் வைதிகசிறப்பு உலகெங்கும் விளங்கும்படி அமேரிக்க ஐக்கிய மாகாணமா நாட்டு சிக்காகோ நகரிற் கூடிய சருவத விசாரணைக் கூட்டத்தில் அக்கிரகண்ணியப் பிரசங்கம் செய்து மகாத்வை தமதேத் தாரணரென்னின்று, பின்னர் ஆங்கிலாந்தி நாடுகளிலும் தம் வைதிக ஆங்கிலத்தை வியக்கப் பிரசங்கித்து ஐரோப்பியவித்வசிரோமணிகளாயும், ஹிந்து வைதிக ஞானிகளாயு மிருந்தவரும் இருக்கின்றவராயுமுள்ளமாக்ஸ் முல்லர், மானியர் வில்லியம்ஸ், டேஸர்ட் முதலியோராலும் உபசரித்தனுப்பப்பட்டவராய் நம்மிந்தியாவுக்குத் திரும்பிவந்து, ஆங்கிலேயக் கற்பனையால் அகந்தடித்திருந்த இந்தியமாணவர் மனங்கலங்கிய

டங்குமாறு வைதிக ரகசிய சதுஷ்டயமாகிய சரியை (பக்தி) கிரியை (கர்மம்) யோக ஞான மார்க்கங்கள் நான்குக்கும் நான்கு பெருநூல்களைப் பிரசுரப்படுத்தி, அவற்றின் குறிப்புகள் எளிதில் விளங்குமாறு இந்தியாவெங்கும் சுற்றி எத்தகைய வித்வஜ்ஜனரும் ஏங்கிக்கேட்குமாறு பலமகுடங்கொண்ட விஷயங்களை ஆங்காங்குப்பிரசிங்கித்த ஆண்சிங்கக்குட்டியாகிய ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகளை குருமூர்த்தமாகக் கொண்டவரும், "அத்வைத சண்டமாருதம்" என்றபட்டம் பெற்றவரும், மதுரைத் தமிழ்க்கல்விச்சங்கத் தொருவருமாகிய ஸ்ரீமான் விச்சூர் முத்துக் குமாரசாமி முதலியார் B-A அவர்களால்சென்னையில் தற்காலமொரு ல்வித்தாங்காணும் நன்னயத்தமிழ்ப் பத்திரிகையில்லாக் குறையை நிவர்த்திக்கக்கருதி நடாத்திவருவதாகிய மாதாந்தரப் பத்திரிகை. இதன்முற்பகுதி ஆங்கிலமாயிருப்பதுமொரு விசேக்தான். தற்காலம் ஆங்கிலத்தைக் கொண்ட அபிப்பிராயங்களே யெங்கும்பரவி சுலபமாய்ப் பயனையளிக்க வல்லனவா மென்பது பலருமறிந்ததே.

சென்ற அக்டோபர் நவம்பர் பாஸ்கரன் சஞ்சிகையின் ஆங்கிலப் பகுதியிலே "வடலூர் சுவாமிகள்" என்ற மகுட விஷயமானது மிகமெச்சத்தக்கதென விளங்குகின்றதாயினும், அப்பத்திராசிரியர் அபிப்பிராயங்களைப்பற்றிய எமதபிப்பிராயங்களையும் ஈண்டுக் கூறுவாம். பல்லாயிரமாண்டுகளாய்த் தென்னிந்தியாவானது வட இந்தியாவினும் சமயாசாரங்களிலே தலைப்பட்டுள்ளபடியே, வடகலைகளின் வண்ணமறிந்து ஜகப்பிரசித்த வைதிகாற்புத வியாக்கியாதாக்களாய் விளங்கிய நீலகண்ட சங்கர ராமானுஜ மத்துவாசாரியர் நால்வரும், அவர்களுக்கும் மேலாய் வடகலை மடுத்துத் தென்கலை விடுத்துவைதிகாற்புத செல்வர்களாய் விளங்கிய ஞானசம்பந்த சிங்வாராஜ ஆலால சுந்தரமாணிக்கவாசகசமயாசாரியர் நால்வரும் விகசித்திருந்த பகுதி ஆரியகௌடநாடல்லாது துரானியதிரவிடத் தென்னாடேயாம். ஒருவிளக்கினது நிழலை அவ்விளக்குக் கெதிராயுள்ள மற்றொரு பளிங்கமானது தன்கிரணத்தை வீசியொழிக்குமா போலத் தென்கலையாண்மையானது வடகலைப்பெண்மையின் மாண்புற்று நாகரிகத்தினலம் பெறுவிக்கின்றதாய் நிற்கின்றதென்பது வடகலையார் சாக்தேயத்தையும் தென்கலையார்சைவத்தையுங்கைக்கொண்டிருப்பதேசான்றாகி விளங்கும். சைவமென்னும் தலைசமயமானது தென்னிந்தியாவிலேமுதிர்ந்துள்ள தென்ன வீரசைவமெனறிங்கேற்பட்டிருப்பதும், வட இந்தியாவிலே யேறபடாமையுங் காண்க. (வரும்.

*Extract from Gnanavally.*

"ஞானவல்லி"ப் பத்திராதிபரின் அபிப்பிராயத்தைக் கீழேபதிப்பிக்கின்றோம். Ed.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

### "ஞானவல்லி."

(தொடர்ச்சி.)

ஐரோப்பிய நாடுகளில் புதிதாய்ப் பிரசுரிக்கப்படும் பலபுத்தகங்களும், கணக்கின்றி வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரங்களும் ஆயிரமல்ல பதினாயிரம், லக்ஷம், கோடிக்கணக்காய்ச் செலவாதல் பிரசித்தம். இந்நாட்டிலோஇவ்வபிமானம கனவினும் சிந்திக்கத்தகுந்தல்ல எனினும், சிவகடாக்ஷத்தால் "ஞானவல்லி" நீடூழிவாழ யாம் சந்தோஷசாகரத்தில் மூழ்கினும். தமிழ்ச்"சித்தாந்த தீபிகை" யை சிலவருடங்கட்கு முன் அதனாசிரியர் வெகு அருமையாக நடத்திவந்தும், அன்னணம் நடத்தியதால் அவருக்குளத்தனையோபொருள் நஷ்டம்நேரிடும்படி சைவாபிமானிகள் வெகுபலர் அதையாதரியாது விட்ட விஷயம் அறியாதார் இல்லை. சித்தாந்த தீபிகை சைவத்துக்கே உழைக்கவும், சிவனையேபாடவும், திரிபதார்த்த மெய்ஞ்ஞானத்தையே வளர்க்கவும், ஆதிசைவர் முதலிய சைவப்பெரியாரையே கனப்படுத்தவும் வெளிவந்தஉண்மை யுணராதாருண்டோ?சாமான்யபடிப்பினரா அதற்கு ஒருவருஷம் விஷயதானம் செய்து வந்தவர்? சாமான்ய விவேகியா அதை யொருவருஷம் நடத்திவந்தகனவான்? மகத்தானவறிவுடைத்தோர் சேர்ந்து பிரசுரித்தஅப்பத்திரிகை அற்ப ஆயுசாய் முடிந்ததென்னே? அக்காலத்துச் சைவவுலகம்அப்படி யிருந்த தேனும், இக்காலத்தில்ஒற்றுமையோடும் இடைவிடாத ஊக்கத்தோடும்மெய்யன்போடும் சைவப்பயிர் வளர்த்து மகிழும் சைவாபிமானசீலர்கள் இவ்வரிய சைவப்பத்திரத்தை யாண்டும்அனுதாவுசெய்யாமல் உள்ளன்போடு தாங்கித்தழுவி மகிழ்வரெனயாமும் திருவருளைச் சிந்திக்கின்றனம். பத்திரிகையின்நடை யாவரு மறியத்தக்க எளிய இனியநடை யாதலின் இருபாலார்க்கும்பயன்படல் நிஸ்ஸந்தேகம். ஏணியேற்றம் புலந்திரன்தூது.பவழக்கொடிமாலை முதலிய வோதிக்களிக்கும் நமது சிறுமிகள் அவைதமையறவேயொழித்து இதன்கண்வெளியாகும் புராணேதிகாசங்களைப் படித்தல் அத்யாவசிய மெனக்காண்பார் யாவரும் தத்தம்பெண்மக்கட்குஇப்பத்திரிகையை வாங்கிவழங்குதல் அவர்தம்இன்றியமையாப்பெருங் கடப்பாடாகுமென்க. இதன்கண் இதனாசிரியர் இக்காலத்தின் நோக்கத்திற்கேற்ப சிலராஜாங்கவிஷயங்களையும், சிலஆசாரசீர்திருத்த விஷயங்களையும், மேற்புலத்தாரது விஞ்ஞானசாஸ்திரவிஷயங்களையும் நம்நாட்டின் பிரயோசனம் கருதி யெழுதிவருவாரெனக் கோருகின்றனம்.

## காங்கிரஸ் மகாசபை.

இந்தமகாசபை யித்தனை வருஷகாலமாய்க் கூடிவருவதால் யாது பிரயோசனம்? நம்மனோர் அடைந்தனரெனப்பலகால் பலர் கேட்பாராயினர். இந்தசபையார் நம்நாட்டுச்சனங்களின் குறைகளை ராஜாங்கத்தினர்க்கு அடிக்கடி எடுத்தோதி ராஜாங்க நடவடிக்கைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்வித்தனரென்பது நிராக்ஷேபம். பிரிடிஷ் மகாசனங்கட்கு நம் நாட்டின் உண்மை நிலைமையைச் சரிவர வெடுத்துச் சொல்லிவரவும் இங்கிலாந்தில் இந்த சபையிற் சம்பந்தப்பட்டார் சிலர்வேண்டிய சாதனங்களை யேற்படுத்தி வுழைத்து வருகின்றனர். ராஜாங்க சம்பந்தமான சாஸ்திர வுணர்ச்சி யித்தேசத்தார் அடைவதற்கும், தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் ஒருவாறு உணர்ந்து நன்மை பெறுதற்கும் இந்தமகா சபை பெரும் பிரயோசனமாயுள்ளது. இவையல்லாமலும், இந்தியநாட்டில் பல்வேறிடங்களில் வசிக்கும் பலவகைச் சாதிப்பிரிவினரை ஒரேயிடத்தில் ஒருகாலத்தில் கொண்டுசேர்த்து அவர் தம்மை ஒருவரோ டொருவர் மருவச்செய்து, தாங்கள் யாவரும் ஒரேசாதியார் என்ற ஞானம் அவர் தமுள் உண்டாக்கி சோதர விசுவாசம் வளர்த்து வருதற்கும் காங்கிரஸ் இன்றியமையாததாகும். இவ்வருஷம் இந்தச் சபை சென்னையில் கூடப்போகிறபடியால், சென்னைமாகாணத்து வாசிகள் தங்கள் தேசாபிமானத்தைப் பிரகாசமாய் வெளிப்படுத்தி பிறமாகாணத்துக் கனவான்களை கௌரவப்படுத்து வார்களென நம்புகிறோம்.

## ஆங்கிலமோதும் பிள்ளைகள்.

நம்மவருள் பெரும்பாலார் ஏழைகளாயிருக்கட்டும் செல்வயான்களா யிருக்கட்டும் தங்கள் பிள்ளைகள் ஆங்கில மோதக்காண்டலே பெரும்பி ரயோசனமாகக் கருதி சிற்கின்றனர். பல்லாயிரம் சிறுபிள்ளைகள் தங்கட்குப் பிற்காலத்தில் பிரயோசனப்படாதபுத்தகங்களைக்குருட்டுப்பாடம்செய்துமூன்று ரூபாபரீக்ஷை முடித்து உத்தியோகம் தேடிகாலங்கழிக்கின்றனர். மற்றும் சிலர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை (சர்வகலாசாலைப் பிரவேசபரீக்ஷை)கொடுத்தேனும் கொடாமலேனும் படிப்புக்கு விடைகொடுத்து விடுகின்றனர். பிரதமகலா பரீக்ஷை, பீ. ஏ. பரீக்ஷை,முதலிய சிறந்த பரீக்ஷைகளை நாடி நிற்பார் நூற்றுக்கணக்கின ரென்னலாம். லாயர் பரீக்ஷை, டாக்டர் பரீக்ஷை,இஞ்சினீர் பரீக்ஷை முதலிய தொழிற் பரீக்ஷைகளையும் பலர் வருஷாவருஷம் சீர்பெற முடிக்கின்றன ரென்றதுண்மை. தொழிற் பரீக்ஷை கொடுப்பாருள்ளும் பலர் உடனே தத்தம்தொழில் செய்து திரவியம் தேடவியலாது வாடிநிற்கின்றன ரென்றால்

எப் .எ. பீ. எ. பரீக்ஷைகளைக் கொடுத்து வயிற்றை வளர்க்க முயல்வார் நிலையை என்னென்று சொல்வேம். வருஷாவருஷம் இந்த பரீக்ஷைகளிற் றேறும் மாணவருக்குக் கவர்ண்மெண்டார் எப்படி உத்தியோகம் கொடுப்பது சாத்தியமாகும்.

உத்தியோகமில்லாமல் சோற்றிற்கு வருவாயின்றி அவதியுறும் பட்டதாரிகளின் கதியையுன்னி யிரங்காத தேசாபிமானிகளில்லை. இது இங்ஙனமிருக்க; பட்டம் பெறுமல் நிற்கும் சில்லறைப் படிப்பாளிகள் விஷயமாய் நம்மனோர் பெருங்கவலை யடையவேண்டியிருக்கிறது. இன்னோர், அரைக்கால் படிப்பாளிகள்—தங்கள் முன்னோர் செய்து வந்த கைத்தொழில் செய்ய வியலாதாராயிருப்பதுமன்றி தக்க உத்தியோகங்களைப் பெற்று வாழவும் அநர்ஹராயிருக்கின்றனர். மேனாட்டார்போல் உண்ணவும் உடுக்கவும் ஆசைப்படுகின்றனர். மொத்தத்தில் இவர்களால் தேசத்துக்கு ஒரு நன்மையும் கிடையாது. இவர்கட்கெல்லாம் ரயிடர்வேலை எங்கிருந்து கிடைக்கும்? கைத்தொழிற் பயிற்சிச் சாலைகள் ஏராளமாய் நம்மவர் ஏற்படுத்தினாற்றான் சிறு படிப்பாளிகள் விர்த்தியடையலாம். நாடும் செல்வம் ஓங்கி சீரடையும், பயிர்த்தொழிலும் படிப்பாளிகளே இனி செய்யமுயலுதலும் இன்றியமையாததாகும். நிற்க; நம்மவருள் தனவான்கள் பலர் சேர்ந்துபொது நன்மைக்காக அவ்வவ்விடங்களில் ஒவ்வொருகூட்டம் சேர்ப்பித்து சிலபிள்ளைகளை யேனும் ஐரோப்பாவில் பெருங்கல்விபெறும்படி பணவுதவிசெய்து அனுப்பித்தல் அவசியமாகும். இத்தகைய கூட்டத்தார் அனுப்பும் மாணவரின் ஜீவதசையைக் குறித்து யோசிக்க அவசியமேயில்லை. இப்போது எங்கும் மலிந்துள்ள ஜீவாந்தர சம்ரக்ஷண நிதிகளு ளொன்றில் அவர் தம் ஜீவாந்தர சம்சரக்ஷணநிர்ணயம் செல்யலாம். அவர்களிறப்பின், இங்கே இந்தகூட்டத்தார் அவர்விஷயமாகச் செலவுசெய்த பொருளைப் பெறுவர். அவர்கள் திரும்பிஇத்தேசம் வந்து கௌரவ அந்தஸ்தை வகிப்பின் தங்கட்காக செலவழிந்த பொருளைத் திருப்பிக்கொடுத்து விடுவர். அதைக்கொண்டு மற்றும் சிலரை ஐரோப்பா அமெரிக்கா ஜபான் முதலிய நாடுகட்கு உயர்தர கல்விபெறுவான் அனுப்பித்தல் சுலபசாத்தியமாம். அது செய்தான்மாத்திரமே நம்வறுமையும், நம் ஏழ்மையும், நம் அஞ்ஞானமு மொழியும். இதைக்கவனிப்பாரைக் காணேமே! இது செய்தற்கும் நம்தேசத்தில் பொருளில்லாமற் போயிற்று? ஐயகோ! பொருளுற்பத்திமார்க்கங்களையும், வாணிபத்துறைகளையும் பிறநாட்டார் கைக்கொள்ள விட்டுவிட்டு நாம் சேவகத்தொழிலேயே யெதிர்ப்பார்த்துக் கிடந்தால் நமக்கும் செல்வத்துக்கும் எவ்வளவு தூரமாகும். தரித்திரமே நம்மை விடாத் தோழமைகொள்ளும். பணத்தைப் பெட்டியிற் பூட்டித் தூங்க வைப்பாரை யிங்கேதான் கண்டோம். அரைக்கால் வட்டிக்கேனும் அழியாமல் பாங்கிகளிலேயே வைப்பார் நம்மவரேயாம், பூமியிற் புதைத்து ஓரோ ஒருகாலத்தில்வெளிப்படுத்தி உலர்த்திக் களிப்பாரும் இப்பாதகண்டவாசிகளென்ப. என்னபரிதாம்! என்னபேதைமை! நம்மவர் சாதிச்சண்டைக்கும், மதச்சண்டைக்கும், ஆசாரச்சண்டைக்கும் முந்துகின்றனரே யொழிய தேசநன்மையைக் கருதி பாடுபட வகையறியாதொழிகின்றனரே, பிறஜாதியார், பிறநாட்டார், பிறமதஸ்தர் ஏராளமான செல்வத்தைத் தினேதினேயடைந்து வரவும் நம்தேசம் நாளுக்குநாள் வறுமை யடைந்து வருந்தவும் காலம் நேரிட்டதோ! வறுமையை யொழிக்க வகை தேடவும் இயலாது நம்மவர் கிடக்கின்றனரே! இதுவும் சிவன் செயலோ!

## ஆசார சீர்திருத்தச் சபை.

இவ்வருஷம் சென்னையிற் சேரப்போகும் ஆசார சீர்திருத்தச் சபை யெத்துணைச் சிறப்பாய் நடக்கு மென்பதைக் குறித்து இந்த சபாபிமானிகள் அநேகர் கவர்ச்சி யுறுகின்றனர். சென்னையில் இருகட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு கட்சியார்பழமையை யனுசரித்தே நாம் ஒழுகவேண்டுமென்கின்றனர். விதவாவிவாகம் முதலிய விஷயங்களில்இந்த



சபையார் தலையிடக்கூடா தென்கின்றனர். ஏனையோர் முற்கூறியவரின் அபிப்பிராயங்களோடு முரண்கின்றனர். சீர்திருத்த விஷயமாய் இத்துணைக் காலம் பேசிவந்த பல அரியவிஷயங்களையும் வற்புறுத்திக்கூறல் நந்தம் கடப்பாடெனக் கொண்டாரோ பெரும்பாலாரென்னலாம், வடநாட்டுக் கனவான்க ளெல்லோரும் இப்படியே யபிப்பிராயப் படுகின்றனர். சீர்திருத்தச் சபையினர் இவ்வருஷம் கனம் ஜட்ஜிரானடேயவர்களை இழந்தாராயினும், கனம் ஜட்ஜி சந்தாவர்க்கர் என்னும் மகானுதவியைப் பெறுவாராதலான் அவர் தம் சபை சீர்பெற நடந்தேறுமென்றே நம்புகிறேம். இவ்வருஷம் பல சுதேசியோட்டிகளும் இப்பெருஞ்சபைக்கு விஜயம்செய்வரென்றும், சிலரேனும் சீர்திருத்தவிஷயமாய்ச் சபாமேடையேறிப்பேசக்கூடுமென்றும் தெரியவருகிறது, இந்தசபையின் நோக்கங்களை உம்மவர் நன்குணர்ந்து உழைத்தாற்றான் எவ்வழியினும் உள்ளபடியே நன்மை யடைவரென்பது உண்மை. இயன்றவரையில் சபையைச் சார்ந்த அங்கத்தினரும் பிறரும் சீர்திருத்தம் நடவடிக்கையில் செய்துகாட்டமுயலுவார்களென்றும் கோருகின்றேம்,

## பொருட்காட்சிச் சந்தை.

காய்கிரஸ்ஸபை சம்பந்தமாய் பொருட்காட்சிச்சந்தை யொன்று சென்னையில் இவ்வருடம் கூடப்படும். இந்த சந்தைக்குக் கவர்ண்மெண்டாரும் சுதேசராஜாக்களும், சுதேச கனவான்களும் பொருளுதவிசெய்திருக்கின்றனர். கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் இந்த சந்தை விஷயமாய்த் தங்களாலியன்றஉதவியைச் செய்வதில் யாவரானும் தடுக்கப்படமாட்டார்கள். ராஜாங்கத்தார் இந்தசந்தையால் தேசத்துக்கு நன்மை விளைவதில் தடையில்லையென்றே நம்பியிருக்கின்றனர். நந்தேசத்துத் தொழின்முறைகளைச் சனங்கள் உணர்ந்து கைத்தொழில் விர்த்தியை நாடியுழைத்தற்கு இதுவொருபெருஞ்சாதனமாவதிற்றடையில்லை. சந்தையை நம்மவர்கள் படிப்பாளிகள் படிப்பில்லாத பாமரர் யாவருமே சென்று பார்த்தல் முக்கியமென்போம். நாட்டுச் சாமான்களும், நாட்டு வேலைப்பாடும், நாட்டுக் கைத்தொழில் வன்மையும் இதனால் பிரகாசமாய் வெளிப்படக்கூடுமாக இவைதமை ஏற்றவாறு காலத்துக்கேற்பத்திருத்தியும்,பெருக்கியும, ஊர்ஜ்ஜிதப்படுத்துவது சுதேசாபிமானிகட்கு ஒருவாறு சாத்தியமாகும். மோட்டுத்தட்டுமுட்டுகளையும் துணிமணிகளையும் உபயோகிக்கும் நம்மமவர் அனேகர் நம்நாட்டுச் சாமான்களின் வன்மையை யுணர்ந்தும் தேசாபிமானம்கருதியும பிறகூறியவைகளை ஆதரிப்பதற்கும் இடனுண்டாகும். கடவுள் கிருபையால இந்த சந்தை சிறப்பாய்நடக்குமாக,

## பிறப்பிறப்பு:—

பிறப்பிறப்பைப் பற்றி ஒரு வாசகம் நிகழ்ந்துள்ளது. நம்நண்பரொருவர் இதைக் குறித்து நம்மை யுசாவினர். நம்மனோர் மதசாஸ்திரங்கள்யாவும் பிறப்பிறப்பை வென்றார் தம்பெருமையைப் பேசுமன்றே!

“பிறவாமை வேண்டும், பிறக்கினும் இறவாமை வேண்டும்” என்று மேலோர் கூறுகின்றார். பிறவாமையைப் பெறாது பிராரப்தம் காரணமாக பிறந்தோம். பிராரப்தம் காரணமாக, நாம் இறத்தலும் நிஸ்ஸந்தேகம். அஃதங்ஙனமாக, “இறவாமை வேண்டும்” என்றதன் அர்த்தம் யாதோ? பிறந்த தேகம் இறந்தே தீரவேண்டும். ஆதலான் இறவாமை தேகத்தைப் பொறுத்த தொன்றன்று. ஆன்மா பிறவாது. இறவாது. இறவாததொன்றற்கு இறவாமை தேடுதல் அனாவசியம். மற்று“இறவாமை வேண்டும்” என்ற கூற்று எதைக் கருதியோ? புராணேதிகாசங்களில் சிற்சிலர் தேகத்தோடு முத்தி பெற்றதாகவும் வேறண்டம் சென்றதாகவும், இவ்வண்டத்தேயே சிரஞ்சீவிகளாய் வாழ்வதாகவும் கூறியிருக்கிறது: இதை நம்புவதற்கு மேற்புலவிஞ்ஞான சாஸ்திரம் இடங்கொடுக்கக்காணேம்! ஆயின், அன்ன சாஸ்திரங்கள் உணரப்பெறாத ரகஸ்யங்கள் நம்முன்னோர் உணர்ந்தனரோ என்னவோ அறிந்தோர் தெரிவிப்பா

ராக. பொந்தியோடு கைலைபுகுவதும் வைகுண்டம் சேறலும் சாத்தியமா அல்லவா? இதைக்குறித்து பாஸ்கரனைப் படிப்போர் யாவரேனும் சமாதானம் எழுதுவரென நம்புகின்றேம்.

## தற்காலத்து இந்தியர் யாவர்?

இவ்விந்தியநாட்டில் வசிக்கும் பிரஜாகோடிகள் யாவரும் இந்தியராகக் கருதப்படுகின்றனர். இவர்தமுள், ஆங்கில இந்தியரென்பார் இங்கிலாந்து தேசத்தினின்றும் இங்கு உத்தியோகஸ்தர்களாகவும், வர்த்தகர்களாகவும், காபி தேயிலை, முதலிய தோட்டப்பயிர்செய்யுநராகவும், பெருங்கண்டிராக்டர்களாகவும் ஜீவனம் செய்துவருகின்றனர். இன்னோருள் பெரும்பாலார் உத்தியோக ஜீவனோபாயத்தை யுத்தேசித்து இத்தேசத்திற்றங்கியுள்ளவர்கள் இந்நாட்டைத் தங்கள் சொந்த நாடாகக் கருதுவது கூடாமையாயுள்ளதென்ப. இவர்கள் உபகார சம்பளம் பெற்றவுடனே தங்கள் ஜன்மதேசம் திரும்பிச் சென்று தாங்கள் சேகரித்த பொருளை அங்கே செலவிடுகிறார்கள். இவர்கள் அடைந்த புத்தியின் மேன்மையும் ராஜாங்க திறமையும் உலகானுபவமும் நம்நாட்டுக்குப் பயன் படாமல் போய்விடுகிறது. எனவே, இவர்கள் இந்தியாவிலிருக்கும் காலத்திலும் கூட இவர்களை இந்தியரென்று பேசுவாரைக்காணேம். மற்று இந்தியாவில் எப்போதும் வசிக்கும் பலஜாதியாரைப் பற்றிப்பேசுவாம்.

மகம்மதியர் வெகுகாலமாய் இந்நாட்டைச் சுதேசமாய்க் கருதி நீண்டுநிலைத்திருக்கின்றனர். இடையிற் சில கொடுங் கோன்மன்னர் காலத்தினில் இந்துக்களும் மகம்மதியரும் பரஸ்பர விசுவாசமற்றுக் கிடந்தாரென்பதொருவாறுண்மையேனும், பல மகம்மதியவரசர்களால் இரு திறத்தினரும் அவதியுற்றனரென்றும், சில ராஜாக்கள், சக்கரவர்த்திகள் காலத்தில் உபயத்திறாரும் பெருநன்மைபெற்று சோதர விசுவாசம் பாராட்டி வாழ்ந்து வந்தனரென்றுஞ் சரித்திரவாராய்ச்சியான் தெரியவருகிறது. இதற்குத்திருட்டாந்தமாக வங்காளத்திலும், திராவிடதேசத்து வடபாகத்திலும் தென்பாகத்திலும் அரசு செலுத்தின சில மகம்மதிய வரசர்களை அவ்வவ்விடத்து ஹிந்து வித்வான்கள் மிகப் புகழ்ந்து பாடியுள்ளதே எடுத்தோதற்பாலதென்ப அக்பர் பாதுஷாகாலத்திலும், ஏனைய சில மகம்மதிய சக்ரவர்த்திகள் காலத்திலும் இந்தியர் மகம்மதிய மாதரைமணந்து கலந்ததும் மகம்மதியர் இந்தியமாதராரை வசித்த மகிழ்ந்ததூஉம் நாம் எடுத்த விஷயத்தை யூர்ஜ்ஜிதப்படுத்துமென்க. இப்போதுள்ள மகம்மதியர்களுள் எத்தனை ஜனங்களோ ஆதியில் ஹிந்துக்களாயிருந்து பின்னர் மகம்மதியரான மாக்களின்வம்சபரம்பரையில் வந்தவர் என்றெண்ணப் படுகின்றனர், எனவே, மகம்மதியரும் இந்துக்களும் இனியேனும் பூரண ஒற்றுமையுடன் வாழவேண்டிய தின்றி யமையாததாகும்.

பாரசீகர் என்ற ஒருசாதியார் ஐரான் நாட்டினின்றும் போந்தவர். அக்நியைப் பூசிப்பார். நடைநொடிபாவனைகளிலும், வாணிபமுயற்சியிலும் ஐரோப்பியரை யொத்தவர்.

ஒருதனிச்சாதியாராக நிலைபெற்றிருக்கின்றனர். ஆனால் இவர்களும் 'ஆரியவகுப்பினரேயாவர். ஒருகாலத்தில் நம் தேயத்தாரியருடன் இவர்களும் சேர்ந்திருந்தவர் என்றும் பேசப்படுகின்றனர். மதவிஷயங்களிலும் நம்மவரை யொருபுடையொத்து வர்த்திக்கின்றனர். இந்த சாதியார் செய்தபுண்ணியமாகத் தோன்றி இங்கிலாந்தில் நிலைத்து இத்தேசத்துக்கு என்றும் உழைத்துவரும் மிஸ்டர் டாடாபாய் நௌரோஜி என்ற மஹானுக்கு நந்தேசம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. இந்தச்சாதியாரும் இந்துக்களும் இத்தேசத்தைத் தம் சொந்த தேசமெனக் கருதிவெகு பொறுமையுடன் வாழ்ந்து சுகிக் கக்கடவர்.

இனி சுதேசகிறிஸ்தவர் என்பவர் ஒருவகையினருண்டு. இவர்கள் மதத்தால் இந்துக்களினின்றும் பிறரினின்றும் வேறு பட்டவராயினும், பொது நன்மையைக் கருதிப்பிறருடன் நேசவிசுவாசத்துடன் வாழவேண்டிய



தத்யாவசியமாகும், எல்லாமதமும் சர்வேஸ்வரனையே பன்னிக்கிடக்கும். உண்மையுணராமாக்களே பிறரைப்பழித்துக் கூறுவர். தேசப்பொது நன்மைக் குழைக்கும்போது மதவித்யாஸங்களையெவரும் கவனிக்கப்படாது. இனி யூரேஷியர் என்ற வகுப்பினரைப்பற்றி யொருவார்த்தை சொல்லிமுடிப்போம். இவர்கள் அனேகமாய் இந்நாட்டினிற் பிறந்து இந்நாட்டினில் வளர்ந்து இந்நாட்டிற் சீவனந்தேடி இந்நாட்டிலேயே உபகாரச் சம்பளம் பெற்றுக் காலங்கடத்துகின்றனராதலான். இவர்கள் இந்துக்களினும் மகம்மதியரினும் மேம்பட்டவர்களென்று எண்ணிக்கொண்டு இருந்துவிடாமல் சுதேசிகளோடு கலந்துற வாடி ராஜாங்க விஷயங்களில் இந்தியருடனிருந்து உழைத்துவந்தாற்றான் இந்தியநாடு சீர்படையும். கிழ்ப்பேசிய யாவரும் தாங்கள் இந்தியர், என்ற ஒரே சாதியார் என்னும் ஞானமடைந்து இந்திய நாட்டைத் தங்கள் சொந்த நாடாக உண்மையிற் கருதி, அவ்விந்திய நாட்டின் க்ஷேமத்தை யுத்தேசித்து ஒழுகுவது உண்மை நாகரீகமாகும், மதச்சண்டையும், சில்லறைச்சாதிச்சண்டையும், கட்சிபிரதிகட்சிப் போரும், ஆசாரப்போராட்டமும், இனியேனும் நாளடைவில் இந்தியாவில் ஒழிந்தே வரவேண்டும், கீழேபேசிய வித்தனைச் சனங்களின் பிரதிநிதிகள் ஒருமைமனதுடன் சேர்ந்துழைத்தால் காங்கிரஸ் முதலிய மகாசபைகளும் மிக்க பலம் பெறும். நம்நாட்டார் இவைதமைக் கவனிப்பாராக—

## Tit Bits: II.

### அதி மதுரம் II.

நம்மவர்கட்குள் ஒற்றுமை யென்பதே கிடையாது. அல்லும் பகலும் அனவரதமும் அவர்கள் பிரிவு என்பதிற் பரிவுகாட்டுகின்றனரே யன்றிஒற்றுமை யென்பதிற்பற்றுவைப்பதேயில்லை. இலக்கணத்திலும் சண்டை, இலக்கியத்திலும் சண்டை, மதத்திலும் சண்டை, குலத்திலும் சண்டை மாளாச் சண்டையாய் மாண்டொழிவதே அவர்தம் இயற்கை. பிறநாட்டோர் சண்டையிட்டு மண்டபமேறி அண்டமுழுதும் ஆள்கிறார்கள்: நம்மனோர் சண்டையிட்டு மண்டையுடைந்து மாள்வோர் சிலரும் மானங் கெட்டு ஈனமடைந்து மதிகெட்டுப் போவோர் சிலரும், கூக்குற லிட்டுக் குடியைக் கெடுப்போர் சிலரும், நஞ்சம்போன்று வஞ்சம்பேசி நாசமுறுவோர் சிலருமாகப் பற்பலர் வாணாளை வீணாய்க் கழிக்கின்றார்கள். வைணவமும் சைவமும் வாய்ப்போரிட்டு வகைகெட்டுப் போவதும், வடகலையும் தென்கலையும் மடிபிடித்திழுத்து அடியுண்டுபடுவதும், ஐயையோ, பரிதாபம்! பரிதாபம்!! நல்லதைவிடுத்து அல்லதிற் படிந்து அனர்த்தப்படுவதே இவைகளின் காரிய மாகிறது. இவ்வாறாயின், நாம் எக்காலத்திற் றொல்லையகற்றி அல்லலறுத்து வானந்தமாகிய நல்லானந்த மடைவதோ அறிகிலேம்.

*
* *

'அரங்கேற்றல்! அரங்கேற்றல்', 'அரங்கேற்றல்' என்பதை யாம் பன்முறையும் கேட்டிருக்கின்றோம். அதைக் கேட்குந்தோறும் நமக்குச் சிறிது நகை யுண்டாவது வழக்கம். எங்கு மில்லாத இன்பந்தரும்இதன் இயல்பு யாதென அன்பரொருவர் பன்முறை யெம்மைக்கேட்க அதைப்பற்றிச் சிறிது இவண் பேசலானோம். 'அச்சு வாகனம்' என்று அடிக்கடி பற்பலர் அலங்காரப் படுத்திய அரும்பொருள் நமக்குக் கிடைப்பதன் முன் ஆங்காங்கு தோன்றிப் பாங்குபெற் றுயர்ந்த நூல்கள் பலவும் மேலடைந் துறுவதோடும், அனைவரும் அதனை அறிவிற்கொண்டும் நினைவிலிருத்தியும் ஆனந்தப் படுவதெப்படி? நல்லதென்றுங் கெட்ட தென்றும் பகுத்தறிவதெப்படி? உத்தமக் கொள்கைகளையும் உன்னதப் பாக்களையும் அழகிய அணிகளையும் பழகிய மொழிகளையும், தேனோ, கற்கண்டோ செழும் பாகோ, புத்தமுதோ வென மெத்தப் புகழ்ந்து கற்றவர் வியப்பதெப்படி? இத்தகைய காரணங்களை முன்னிட்டு அங்கங்கே அரங்கங்கள் கூட்டுவதும், அரசரும் அமை

ச்சரும் புலவோரும் அனைவோரும் ஆங்கே அமர்ந்திருப்பதும் அன்னோர் முன்னர் பண்டிதர் நூற்ற பாக்களை யேற்றஞ் செய்விப்பதும் அவசியமா யிருந்தது. அன்ன வாகனமேறிய அந்தணவாகன மகற்றிய கலைமகள் அச்சுவாகனமேறி நச்சென்பதே யின்றி ஆயிரம் பதினாயிரமாய், லக்ஷமும் கோடியுமாய் உலகத்திற் பரவும் உயர்ந்த காலத்திலும் அவசரத்தோடு அரங்கங் கூட்டி அர்த்தங்கூறி அனர்த்தப்படுவது, புகைவண்டி போகுமிடத்திற்குக் கட்டைவண்டியேறி முட்டுப் படுவது போல்வதன்றோ என்று எம்மனம் புகுந்து அடக்க முடியா இடக்கர் விளைந்ததேயன்றி வேறன்று.

* * *

நம் நாட்டில் உடம்பில் காணும் வாதமும் மனச்சாட்சியோடு உள்ளத்தில் காணும் வாதமும் போதாவென்று அரங்கச் சாலைகளிலும் வீட்டின் மூலைகளிலும் விண்வாத மதிகரித்தன. போருக்கென்றே கங்கணம் பூண்டனர், கூச்சலிட்டனர், கொக்கரித்தனர், வீரச் சிலம்பையிருவோருந் தாங்கினர். இஃதென்ன விநோதம்! தண்டிற்சேர்ந்தா லிரண்டிலொன்று என்பதும் பொய்த்துப் போயதே! சிவன் எட்டடி யுயரன், விஷ்ணு பத்தடி யுயரம் என்பது ஒருசண்டை! தீங்கனி பிழிந்து திப்பிய அமுதங் கொடுக்கினும், அது பாலோ அன்றி நஞ்சோ என்பது மற்றொரு சண்டை! யானைமுறம் போன்றதா, உலக்கை போன்றதா? அன்றித் துடைப்பக்கட்டு போன்றதா என்று வேறோர் வாதம் விரைவில் நிகழும் போலும்! அவரவர் அபிப்பிராயங்களையும் அவரவர் கோட்பாடுகளையும் என்றும் பொன்றவிடாது நன்றே நிலைத்திருக்கப் புத்தகரூபமாய் வெளியிடலாகும் காலத்திலும் கும்பு கூட்டி வம்பு விளைப்பது அநுசிதமே! கோர்ட்டில் வக்கீல்கள் வாதஞ் செய்யவும் ஜட்ஜிகள் முடிவு கூறவும், ஒரு விவகாரம் ஒருகால வரையறைக்குள் தீர்ந்து போகவேண்டிய அவசியம் இங்குத் தோன்றக் கண்டிலமே! ஆத்திரத்துடனும் அவசரத்துடனும் ஆகிற காரியங்கள் வழிதுறையற்று வன்மையுமிலாது உண்மையுமிலாது வாளா வொழிந்து போகுமென்பதில் யாது தடை?

* * *

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக' என்றார், தெவிட்டாத தேனையென்னத் தட்டாத மொழிமாரி பொழிந்த திருவருட் பிரகாச வள்ளலாராகும் ஸ்ரீராமலிங்கஸ்வாமிகள். கல்லுங் கரையப் புல்லும் புலம்பக் கவிபாடிய கற்பகம், கவிரசமே அவர்தம் கவிரசம்! சமயச் சழக்கின் சங்கடம் விட்டகன்று, அமலனன்பையும் 'அருளையும் இமையளவேனும் நீங்காது எஞ்ஞான்றும் பருகிப் பருகி, கருணை ததும்பிப் பொங்கிச் சாசினியெங்கும் கவிமாரி பொழிந்து அதனோடு மேதக்க நோக்கமும் கோதற்ற கொள்கையு முபசரித்த பெருந்தகைப் பெருமைபேச யாவரால் தகும்! அன்னோர் மேற்கூறி யாங்குச்சென்றனராக, நன்னூலாகும் தொன்னூலியற்றிய பவணந்தியார், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்றார். ஆயினும், வழக்கம்' என்பதும் 'பழக்கம்' என்பதும் உலகெங்கணும் பரவியலக்கண் செய்யினும்,, நந்தேசத்தின் மீதே அவைதம் ஆசையையும் பாசத்தையும் அமர்த்தி விஸ்வாஸம் விளைக்கின்றது. கண்மூடி வழக்கத்திலேயே காலத்தைச் செலுத்தாது இடம் பொருளேவல்கள் மாறுபடுந்தோறும் நமது வழக்கங்களை மாற்றிச் செல்வதே நல்லறிவுச்சுடர் கொளுத்துவதாகும். முற்காலத்தில் ஜனங்கள் ஒருங்கு சேர்வதற்கும் ஒரு விவகாரத்தை ஊக்கத்துடனும் உறுதியுடனும் சாதித்து முடிப்பதற்கும் வெகு கட்டுடன் கூடிய சட்டங்களும் இப்போது அளவுகடந்து செல்வதாய்த் தோன்றும் திட்டங்களும் அவசியம் வேண்டியிருந்தன. அந்த அவசியமும் காரணமும் நீங்கி விட்ட பின்னர் அவ்வழக்கங்களைக் கூடிய வரைக்கு மொழித்துக் கொண்டு மேனோக்கிச் செல்வோரே நாகரீக முறுவோரென்றும்



அவ்வழக்கங்களையே உடும்புப் பிடியெனப் பிடித்துக் காலந்தாழ்த்துக் கட்டுண்டு கிடப்பவரே நாகரீகம் குறைபட்டுக் கிடப்போரென்று பேக்ஹாட் (Bagehot) என்பவர் அபிப்பிராயப்படுகிறார் (Vide Physics & politics)

* * *

காலத்திற் கிசைந்த நூல்கள் வேண்டுமென்று முன்னொருகாற் கூறினோமாக, எந்நூற்கு மிசைந்த பொருளையே கூடிய வரையிலுங் கூறவேண்டுமென்று இப்போது வற்புறுத்துகிறோம். பதங்களைப் பலவகை பிரித்து அதப்படுத்தி யல்லற் படுத்தி வலித்தலை மெலித்தலும், மெலித்தலை வலித்தலு மாக்கி நீட்டலைக் குறுக்கியும் குறுக்குவதை நீட்டியும் விரித்தும் தொகுத்தும் தொகுத்தும் விரித்தும் விளையாடிப் பொருள்கூறுவது குஸ்திபிடித்தலையும் சதுரங்க மாடுதலையும் போன்று இலக்கண இலக்கிய அகராதி விற்பத்தித் தன்மையை விளக்குமேயன்றி உண்மையையும காட்டாது, கிரந்த சர்த்தாவின் அபிப்பிராயத்தையுங் கொடுக்காது. மண்ணுண்ணி மாப்பிளையே, காவிறையே, கூவிறையே உங்களப்பன், கோவிற் பெருச்சாளி கன்னா பின்னா மன்னா தென்னா" என்பதற்கு உண்மைப் பொருள் யாதெனின், அர்த்தமில்லாமல் அகப்பட்ட சொற்களை யொன்று சேர்த்ததென்பதே. இவ்வெளிப்படைப் பொருள் அனைவர்க்குந் தெரிந்திருப்பினும் மண்ணையுண்ட விஷ்ணு என்றும்' லக்ஷ்மிபுத்ரன்' என்றும் கம்பர் விளையாட்டாயப்பொருள் கூறியதே வலிந்து பொருள்கோடலாகும், அவ்வாறு விளையாட்டாகவே கூறாமல் அஃது உண்மையென்று தானும் நம்பி மற்றையோர்க்கும் உபதேசஞ்செய்யப்புகின் எத்தனை யாபாசமென்று நாம் சொல்ல வேண்டியதே யில்லை.

* * *

அரசாங்கச் சட்ட விஷயங்களில் ஒருவகைக்கட்டுக்கதை (Legal fictions) யுண்டு. கடலில் நடந்ததைப் பூமியில் நடந்ததென்றும் ஒருவர் செய்ததை மற்றொருவர் செய்தது என்றும் பாவித்தல் போன்றன இவை பொய்யென்று தெரிந்தும் நியாயம் பெறுதற் பொருட்டு அனுட்டிப்பவை; இவையும் பழைய வழக்கத்தை யொட்டியே வந்தவைபோலும் இனியும் நீதிக்கட்டுக்கதைகளை யுண்டாக்குவது அறிவின் அபிவிர்த்திக்கு ஒத்ததன்று என்று மெயின் (Maine) அபிப்பிராயப்படுகிறார் (Vide Ancient Law) இஃதெவ்வாறாயினும் நம்மவர்க்குள் ஒன்றை மற்றொன்றாய் மறைத்துப் பேசுவதும் இல்லாத பொருளை உள்ளதென்று நிரூபித்து ஆதிமுதலந்தம் வரைக்கும் கட்டுக்கதைகளிலேயே காலங்கழிப்பதுமாக நேரிட்டிருக்கிறது. புது உண்மையொன்று புலப்படின், அஃது முதுமையேயென்று நாட்டுவதற்கு யாதாயினு மோர் பாட்டெடுத்து இலக்கணத்தைக் கொண்டு ஆட்டம் போடப் பிரசங்கம் நம்மனோர் நீட்டி விடுவார்கள். ஒருபதமே புலியுமாகும் பூனையுமாகும் நரியுமாகும் நாயுமாகும் இஃதே வழக்கமாய் விடு தந்திக்கம்பி பிரமாண்ட புராணத்திலுள்ளதென்றும், ஆகாய வாகனம் வாயு புராணத்திற் கூறியிருக்கிறதென்றும், பரக்கப் பொருள் கூறின் நம்மவர்க்கு வெகு பிரியம். பலங்குன்றிய காலத்தில் அதிககாற்றிற் போனால் காட்டேரி யறைந்து விடுமென்றால் தான் நம்மவர்கள் வீட்டுள் ளிருப்பார்கள், அகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிப் பத்தன்' என்று முன்சொன்ன வகைபொருள் கூறுவோர்கள் தம் அறியாமையைக் காட்டுவதாய் நேரின் அறியார்க்கென்றே யவ்வகை கூறியதென்று சமாளித்துக் கொள்வார்கள் எட்டினாற் குடுமி எட்டாவிடின் கால் என்னும் பழமொழியிவர்கட்கே போலும்! குருடன் குருடனுக்கு வழிகாட்ட இருவரும் சேர்ந்து இடறி விழுந்த கதையாகுமிஃது.

* * * * *

அதிகமாய் வடமொழியிலும் சிறிது தென்மொழியிலும், எண்கடந்த பொருள் கூறின் விண்கடந்த வித்துவானென்று கொள்வது வழக்கம். எடுத்த ஒரு பாட்டிற்கு அடுத்து ஆயிரம் அர்த்தம் கூறின் ஆதிசேஷனுக்கும் அப்பனென்று அனைவரும் வியப்பார்கள்.

உண்மை யாதென்றும் உரைப்பது யாதென்றும் ஆசிரியர் அபிப்பிராயம் யாதென்றும் பொருத்தமாவென்றும் அன்று வென்றும் சிறிதுங்கவனியார். இப்படிப் பலபடியாலும் பல பொருள் கூறிய வடமொழிப் பண்டிதரொருவர், தாம் மீமாம்சைக்குக் கட்டுப்பட்டு அதற்கிணங்கப் பொருள் கூறுவதாய்ச் சமாளித்தார். "அந்தோ! இவர் இலக்கண வன்மை சாலப்பெரிதே! ஆயினும், இவ்வகை அளவிறந்த பொருள் கூறியுளங்களிக்கு மிவர், தன்னைக் கட்டுப் படுத்துவதாய்க் கூறும் மீமாம்சைக்கு எத்தனைப் பொருள்களை ஒத்துக் கொள்வாரோ!" என்று உண்ணினைந்து தியங்கினோம்.

முடிவாகக் கூறுமிடத்து அநாவசியமாய் அசாதாரணப் பொருள்களைக்கொண்டுவந்து பொருத்துபவர்கள் வியாகரண விகடகவிகளே யாவர் அநேகமாய் பொருத்தமுள்ளதும் அசாதாரணமாய்த் தோன்றாததுமான பொருளே உண்மைப் பொருளாயிருத்தல் கூடுமானமையின் உண்மையையேயெவ்வொருவரும் கண்டறிய வேண்டி' யொழுகுதல் நல்லொழுக்கமாகும். இவ்விஷயத்தைப் பற்றிப் பின்னொருகால் இன்னும் விவரிப்போம்.

T. பக்தவத்ஸலம், பி. ஏ.

---

## வருணபேதங்களை மாற்றுவ தேப்படி?

ஒரு சிசுவைப் போஷிக்கும் ஆகாரம் அந்த சிசுவுக் குதவுமேயன்றி மழலை மொழியும் ஓர்குழவிக் குதவா தென்பதுசொல்லவும் வேண்டுமோ? குழந்தைப் பருவத்திலூட்டும் உணவு வாலைப் பருவத்தில் பிரயோசனப்படுமோ? ஒருசிறுவனுக்குப் படைக்கும் அன்னம் ஒருவிடலை யுண்ணப் போதுமானதாமோ?

யுவதிப் பருவமடைந்த மாதராளன்று காமச் சுவையின் செவ்வியை யனுபவிக்கத்தக்கவள், கணவனைப் பெறும் பருவமடையாத யாதொரு பேதையின் சம்சர்க்கத்தை எந்த நாயகன் இச்சிப்பான்? மற்று:— விவாகமாகாத பெண்களை நம்மனோர் பிறர்கண்படாது மறைத்து வைப்பதும், கல்யாண மாயினபின் மகளிரைப் பலர்காண உள்வீட்டிலேனும் உலாவச்செய்வதும் கண்ணுடையார் காணத் தடையில்லையே.

மேலே எடுத்துக்காட்டிய திருஷ்டாந்தங்களால் ஒன்று ஏற்படுகிறது, மக்கள் தத்தம் சுகவாழ்வைக் கோரி சமயோசிதமாய் அவ்வப்போது தத்தமக்கு அநுகூலமான விஷயங்களைச் செய்துக் கொள்ளல் வேண்டும். பிடிவாதம் கூடாது. ஒருகாலத்தில் தொழில் வேறுபாட்டினை யுத்தேசித்து இத்தேசத்தில் சாதி வித்யாஸங்கள் ஏற்பட்டன; அக்காலத்தில் அது அத்தியாவசியமாகவே யிருந்திருக்கலாம். நஞ்சாதியாரின் அப்போதைய வளர்ச்சிக்கு அஃதநுகுணமாகவே யிருந்திருக்கலாம். ஆயின், அன்று நன்மை செய்ததின்றும் நன்மை செய்யுமெனக் கோடல் நேரிதாமோ? இப்போது நம்மனோர் அடைந்துள்ள சரித்திர ஆராய்ச்சி ஞானத்தால் சாதிப் பிரிவுகள் தேசத்திற்குக் கெடுதியை விளைக்கக் கூடியனவன்றி நன்மை பயவாவென முடித்துள்ளார். ஆயினும், பன்னெடுங்காலமாய் உயிர்த்திருந்த இந்த பெரும் விருக்ஷத்தை யடியோடு களைந்தெறிதல் சாத்தியமா? பிராமணன் வைசியனோடும், வைசியன் சூத்திரனோடும், சூத்திரன் பஞ்சமனோடும் சமபந்தம் செய்தல் கூடுமானதா? ஐயர், ஐய்யங்கார், செட்டியார் முதலியார், நாயகர், பிள்ளை என வழங்கும் பட்டங்களைத் தரித்த பலர் ஒன்றுகூடி சிற்றுண வுண்டு களித்தல் கண்கூடாமா? சாதியாலிழிந்தவன் செய்த வன்னத்தை சாதியாலுயர்ந்தவன் முழுமனதுடன் வாங்கித்தின்ன வொப்புவானா? இத்தகைய வினாக்கள் பல நிகழும். இவைகட்கு விடையளிப்பது சுலப சாத்திய மல்ல. சென்ற முப்பது வருஷகாலமாய் இந்தப் பிரதேசங்களில் பிரஜைகள் அடைந்து வந்த நாகரீக சீர்திருத்தங்களைக் கவனித்துவந்தார் கீழ்க்கண்ட வாசங்கைகட்கு சமாதானம் தேடுவரென நம்புகின்றோம்.



எதுவும் உடனே ஆவதும் அல்லது அழிவதும் கூடாமை. சிறுக சிறுகச் பழைய நிர்ப்பந்தங்களைச் சனங்கள் உணர்ந்தேனும் உணராமலேனும், இரகசியமாயும் பகிரங்கமாயும் ஒழித்து வருகின்றன ரெனநம்பவேண்டியிருக்கிறது, சாதிவித்யாஸங்களும் இன்னுஞ்சிலகாலம் கழிந்த பின்னைமுற்றும் ஒழிந்து போகக் கூடுமென நாம் நம்புகின்றோம். சாதியுட்பிரிவுகளையேனும் உடனேயொழிக்க முயலுதல் விவேகிகளின் கடப்பாடாகும். ஒரு பிரிவைச் சார்ந்த பார்ப்பனன் வீட்டில் பிறிதோர் பிரிவினனும மற்றொரு வந்தணன் பெண்ணைக் கொடுத்தலும் ஒரு முதலியார் பெற்றசிறுமியைப்பிறிதொருபிரிவினனாயவொரு முதலியார் நாயகியாக வரித்தலும், அவ்வவ்வுட்பிரிவினர் வித்தியாசமின்றி பங்திபோசனஞ்செய்துக் களித்தலும் இக்காலத்திலும் இன்றியமையாததே. நூற்றுக் கணக்கான சாதியுட்பிரிவுகள் ஏற்பட்டனவாக, பெண்ணுக்கேற்ற வரனும், பிள்ளைக்கேற்ற மகளும் கிடைப்பது வெகு அருமையாய்ப் போயிற்று. ஒவ்வொரு சாதியாருள் இது காரணம் பற்றியே ஒருவனுக்கு இரண்டு பெண்கள் மூன்று பெண்கள் சில சமயம் வலிந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனாலே விதவைகள் அதிகமாவதும் பிரசித்தமென்க. நம்மனோர் பெண்மக்களை விவாகமின்றி வைத்திருத்தல் கூடாமையன்றே? தக்க மணாளன் தக்க காலத்தில் கிடைப்பதருமையானால் பெற்றோர் சாதியாசாரங்கட்குப் பயந்து தத்தம் பெண்மக்களை சிலவேளை மூடனுக்கும், முடவனுக்கும், மூர்க்கனுக்கும், முதியோனுக்கும் தொலைத்துவிட்டுத் தங்கள் பளுவைக் கழித்துக் கொள்ளுகின்றனர். இன்னும் விரிக்கிற் பெருகுமென்றஞ்சி இம்மட்டில் விடுத்தனம். இனி நாம் செய்யக்கூடிய தென்னையோ? பேசுவதொன்று நடப்பதொன்றிலக்ஷணமல்ல சமயம் வந்தபோது இடித்துக் கூறவேண்டும். சொல்வதுபோலச் செய்துகாட்டவேண்டும். அவ்வவ் வுட்பிரிவுகளில் கல்விமான்களாயிருப்பவர் தமதபிப்பிராயங்களைப் பலருக்குப் பிரசங்கித்தல் வேண்டும். இடையறாது எழுதியும் வரவேண்டும். முன்வந்து பிறவுட்பிரிவினருடன் சம்பந்தம் செய்தலும் வேண்டும். ஒருவர், இருவர், மூவர் ஒரு காரியத்தைச் செய்து முடித்தாராமாயின் பல்லோர் அவர்களைப் பின்பற்றத் தடையிராது. ஆயின் ஒன்று. உயர்குலத்தோர் இழிகுலத்தாருடன் சம்பந்தம் போசனம் செய்தலுசிதமென்று யாம் சொற்றதாகக் கொள்ளற்க. குலமகன் குலமகளையே வரித்தலழகே. வேசை யொருத்தி பொருள்காரணமாக குலமகளாக நடிக்கலாம். பொருளும் அந்தஸ்தும் காரணமாக அவளைத்தலைவியாகக்கொண்ட வாண்மகன் முதலி, பிள்ளை, நாயிடு முதலிய சாதிப்பட்டங்களிலொன்றை மனம் போனபடி மேற்கொள்ளலாம். அதைத் தடுப்பார் யாவர்? அப்படிப்பட்ட கீழ்மக்களுடன் மேன் மக்கள் போஜன சம்பந்தம் முதலிய செய்தலடாதென்றே யாமும் வலியுறுத்துகின்றோம். குலமக்களாயுள்ள முதலிமாரெல்லாம ஒன்று சேர்வதும், குலமக்களாயுள்ள நாயுடுமாரும், செட்டிமாரும், பிள்ளைகளும்பிறரும் முறையே தத்தம் உட்பிரிவுகளை யொழித்து மருவிவாழ்ந்து சுகித்தல் பெரு நன்மை விளைக்கும். உட்பிரிவுகளொழிந்து போனால் சாதிக்கஷ்டங்கள் அனேகமாய் மாய்ந்துபோம். சாதிப் பெரும் பிரிவுகள் சிலகாலம் சென்று இயற்கையில் மறைந்து போகும்படியான ஒரு காலம் வருமென்பது நிஸ்ஸந்தேகம்.

துஞ்சிதபாதன்.

---

## மெய்யுணர்வு—கடமை.

காமம், வெகுளி, மயக்கமென்னு முக்குற்றங்களும்நீங்கிவிடத்து அடைதற்பாலது மெய்யுணர்வு. ஆசிரமதரும ஒழுங்கின்வகையறிந்து நடப்பது கடமை. இவ்விரண்டன் திறங்களை நன்கு புலப்படும் வண்ணம் விளக்கும் சரிதங்கள் பலவுள, அவற்றுள் ஒன்றனையீண்டுக் காட்டுவாம்.

முன்னொரு காலத்துப் பேர்ஷியா தேசத்தில் மன்சூர் என்னுந் திருநாமம் பூண்ட

ந்த முக்தபுருஷர் ஒருவரிருந்தனர். அத்தேயத்தரசன் அவர்மீது மிக்க பக்தியுடையவனுயிருந்தான், அவரது பரிசுத்தத் தன்மையும், அன்பின் திறமும் அங்குள்ளாரியாவருக்கும் நன்குசத் தெரிந்த விஷயமே. இவ்வாறுள்ள இவரது சன்மார்க்க வொழுக்கத்தைக் கேள்வியுற்றஜனங்கள் அவரை அடிக்கடித் தரிசிக்கப்போவது வழக்கமாயிருந்தது. இவரெப்போதும் ஓர் குகையில் நிஷ்டைசெய்திருப்பர் அவர் புருஷாளும் விரும்பக் கூடியதேக பொலிவினை யுடையராயிருந்ததோடு சாந்த சீலராயும், கருணைவழியும் நோக்க முடையராயுமிருந்தார். அவர்சுவாநுபவ நிலையுற்றிருந்து விழிக்குங்கால் "நான் பிரமம்" "நான்பிரமம்" என்று அடிக்கடிச் சொல்வதுண்டு இவரது மகிமையை யுணரவகையில்லாதார் இவர்தெய்வ விரோதி என்றும், ஆபாசமான வார்த்தைகளைச் சொல்லுகிறார் என்றும் அரசனிடத்திற்சென்று முறையிட்டார்கள். நிற்க, அத்தேசத்தின் சட்டமோ யாரேனுமொருவர் நான் பிரமம் என்று சொல்லுவாராயின் அவரைக் கல்லாலடித்துக் கொன்றுவிடவேண்டுமென்றோர் நிபந்தனை சட்டமாயிருந்தது. இவ்விதியை அநுசரித்து மேற்படி பெரியாரைத் தண்டிக்கவேண்டுமென்று அரசனைக்கேட்டுக்கொண்டார்கள். இதனைக் கேட்ட அரசன் அப்பெரியார்மீது தான் வைத்துள்ள குருபக்தி விசேஷத்தால் வியாகூலமடைந்தனனாயினும் ஜனங்களது குறையையொழிப்பதாகக் கூறினன். அதன் பின்னர் அரசன் அப்பெரியாரிடத்து இரகசியமாகச் சென்று அவரதடிபணிந்து இனிமேல், "நான் பிரமம்" என்னும் வார்த்தையைத் தேவரீர் சொல்லாமலிருக்க வேண்டுமென்று வேண்டினன் இதனைச் செவியுற்ற ஆத்மஞானி தன்மீது அன்புள்ள அரசனைத் தழுவிக்கொண்டு என் இராஜநேசனே! நான் வேண்டுமென்று ஜனங்களை என்மீது வெறுப்புக்கொள்ளுமாறு செய்வதாக நீ நினைக்கின்றனையா? சுவாநுபவப் பிரத்தியக்ஷத்தில் ததாகாரமாய் விளங்குவதால் அந்நிலைக் கண்காணியாது சொல்லுகிறேனே அதற்கு நான் உத்திரவாதியன்று. எவ்வளவுகாலம் என்னை நான் மன்சூரென்னும் பெயரையுடைய சந்நியாசியென்றும், ஆத்மா-ஏகம்; அது நானென்னும் சொல்லுக்கு எதார்த்தப் பொருளாயுள்ளது என்றறிந்திருந்தும், ஜீவபேத முற்றிருக்கின்றேனோ அதுவரைக்கும் நான்கடவுளை எனக்கு அந்நியமாகப் பார்ப்பதும், சாமினிய ஜனங்களைப் போலே பகவந் நாம சங்கீர்த்தனம் செய்வதுமா யிருக்கிறேன். தேகாபிமானமற்று ஜீவபேதங்கழன்ற அவசரத்துத் ததாகாரமாய் நிற்றலால், அந்நிலைக் கண்ணையுடைய மெய்யநுபவம் என்னை யறியாமலே வெளியாகின்றது. என்று சொல்லினர்.

இவையாவுங் கவனமாகக் கேட்டிருந்த அரசன் கண்களினின்றுந் தாரை தாரையாகக் கண்ணீர்பெருக மீண்டும் தன் குருவைப் பார்த்துச் சொல்லுகின்றுன் அது "மன்சூர் என்தெய்வமே! ஜனங்கள் என்னைச் சின்னபின்னமாக்க உடன்படினும் பரிசுத்தமான உம்மை அணுவளவேனுந் துன்பஞ் செய்யச் சகியேன்!! ஆனதுபற்றி அடியேனும்மீதுள்ள பக்தியை நோக்கியேனும், இந்நாட்டின்கண் கொடுமைவாய்ந்துள்ள சட்டத்தை நிருபணம் பண்ணுமாறு என்னை ஏவும் கோபாவேசங் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு முன் உமது சுவாநுபவ நிலையை வெளிக்குக் காட்டாது என்னை இரட்சிப்பீராக!! சட்டப்பிரகாரம் பிரஜைகள் உம்மைத் தண்டனை செய்யச் சொன்னாலும் நான் என் மனசாட்சிக்கு விரோதமாக எவ்வாறு நடப்பேன் என்பது." இதனைக் கவனமாய்க் கேட்ட கருணைத்தடங்கடல் அரசனை நோக்கி கேளாய் அரசனே நீ அழவேண்டாம். உன்னுடைய கடமையைச் செலுத்து; அதனால் உனக்குயாதொரு பாபமுமின்று. உண்மை நெறியானது சட்டத்திற்கு அப்பாற் பட்டது, தண்டனைநிதமானது, வெவ்வொருவன் தான் தேகவிலக்ஷணமென்றும், தான் அகங்கார பாவ ஜீவனன்றென்னும் நிச்சய புத்தி வகித்திருக்கிறனோ அவன் தனது யதார்த்த நிலைசச் சிதானந்த சொரூபமென்று ஐயந்திரிபற உணர்ந்தவனுவன். அவன் தேகத்திற்குண்டாம்



துன்பங்கள் தன்னைச் சாராவென்றும் அறிவன். ஆனதினால் நீ என்னை நேசித்தது உண்மையானால் உனதுடைய கடமையைச் செலுத்தி அதனால நானடைந்திருக்கும் உண்மைநெறியைச் சகலருமறியுமாறு நிலை பெறச் செய்வாய் இதுவே நீ எனக்குச் செய்யுங் கைம்மாறு. என் சரீரத்தைத் தண்டிப்பதனாலுண்டாகுந் துனபத்தை விளைவிக்க நீ அஞ்சவேண்டாம் அவ்வாறு செய்யாது சட்டப் பிரகாரம் நீதி நெறிசெலுத்தத் தவறின் நீ உண்மையைச் செலுத்தாததினாலுண்டாகும் பாபத்திற் கிலக்காவாய் அரசனே! உன்னுடைய கடமையினின்றும் வழுவாது நீதிமார்க்கத்தினின்று நீ உண்மைநெறி மேன்மேல் ஓங்குமென்றும், எவலாவற்றிற்கும் மேலாகிய உண்மைநெறி உலகவழக்கின் மேம்பட்டிருப்பதோடு கடமைப் பாட்டிற்கு ஒற்றுமைச் சம்பந்த முடையதேயன்றி வேற்றுமைச் சம்பந்தமுடையதன்றென்றும்' உலகத்தாரியாவர்க்கும் போதிப்பாயாக..எனது சுவாநுபவ நிலையில் என்னையறியாதெழுமவற்றிற்கு யான் எப்படி உத்திரவாதியல்லனே அவ்வாறே நீயும் அரசநீதிக் கிணங்க உன கடமையைச் செலுத்துவதினாலுண்டாஞ் செயல்களுக்கு நீ உத்திரவாதி யல்லவென்றறி," என்றனர்.

இவ்வாறு அம்மகானால் ஆசீர்வதிக்கப் பெற்று அரசன் தன் அரண்மனைக்கேகினன், ஆனால் பிரஜைகள் இப்பெரியாரை அவசியந் தண்டிக்கவேண்டுமென்று அரசனைப் பலகால் தூண்டினதினால் அரசன் அவரைச் சிறைச்சாலையில் வைக்குமாறு ஆக்யாபித்தனன். அவர்சிறைச் சாலையில் இருக்குங் கால் அவரை இரகசியமாய்ப் போய்த் தரிசித்து வந்தனைவழிபாடுகள் செய்து, இன்னுமொருமுறை அவர் சரீரத்திற்குத் தான் யாதோர் தீங்குஞ் செய்யாதிருக்கும்படி நடக்கவேண்டுமென்று அவரை இரந்து கேட்டுக்கொள்ள அபிப்ராயப் பட்டவனுய் அப்பெரியாரிருக்குமிடத்தேகினன், ஆனால் சிறைச்சாலையையும் அவரையுங் காணுது திரும்பி விட்டனன். இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதென்று மறுநாளும் அவ்விடம் போகவே, சிறைச் சாலையை மாத்திரங் கண்டனனேயன்றி அதில் அப்பெரியாரைக் கண்டானில்லை, மூன்றுநாளும் அவ்விடத்திற்குப் போகவே அங்குச் சிறைச்சாலையையும் அதில் அவரையுங் கண்டு தான் இரண்டு நாள் வரைக்கும் அவரைக்காணுது திகைப் புற்றமைக்குக் காரணம் யாதென்று வினவலும் அதற்கு அம்மகான் அரசனை நோக்கி "முதல்நாள் எனக்கு பக்திப்பிரேமை மீதூரக் கடவுளானவர் என்னைச் சுவீகரித்துக் கொண்டதோடு இச்சிறைச் சாலையையும் தமதிடமாக்கிக் கொண்டனர். ஆனதுபற்றி அருளே திருமேனியாயிருந்த நானும் இச்சிறைச் சாலையும் ஊனக்கண்ணுடைய உனக்குப் புலப்படவில்லை. இரண்டாம் நாளோவெனின் நான் பரிசுத்த ஆவி (சங்கற்ப விகற்ப ரகித ஆத்மா) யோடு ஏகீபாவமாயிருந்ததனால் அரசனே! நீ என்னைக் காணுது, சிறைச்சாலையை மாத்திரங் கண்டனை. இன்று நான் சமாதியினின்றும் நீங்கிச் சீவபாவமுற்று உன்னைப் போன்ற ஓர் மனிதனாயிருப்பதால் நீ என்னையும் இச்சிறைச் சாலையையுங் காண்கின்றனை" என்றனர். அரசன் இப்பெரியரது மகிமையை நன்குணர்ந்ததுமன்றி, பாமர ஜனங்களிவருக்குத் தீங்கு விளைவிக்க வேண்டுமென்கிற மாயாமயக்கத்தையும அறிந்தவனுய், இம்முக்த புருஷரைப்பொது விடத்துள்ள ஓர் தூணிற் கட்டும்படி ஆக்யாபித்தனன். அவ்வூர் வழக்கப் படி அவ்வழியாய்ப்போகும் ஒவ்வொருவரும் அவர் உடலின்மீது கற்களை எறிந்து போயினர். யாவராவது அப்படிச் செய்யாதொழியின் அவர்க்கும் அவ்விதமான தண்டனையுண்டு அதற்கஞ்சியே, ஒவ்வொருவரும் அப்பெரியார்மீது கல்லெறிந்து போயினர். அப்பெரியார் உடம்பின்மீதுபட்ட ஒவ்வொருகல்லும் அவ்வுடலினின்றும் இரத்தத்தைப் பீரிட்டுவரும்படிச் செய்வதும் அவர் அடங்கா மகிழ்ச்சியுடன் ஆடியும் பாடியும் கல்லெறிந்தவர்களையெல்லாம் ஆசீர்வதித்துக்கொண்டு மிருந்தனர். அந்நாட்டார் அவருக்குப் பல நாளுந் துன்பஞ்செய்து வருங்காலத்து, ஒருநாள்

அவ்வழியாக ஓர் சாந்தசீலர் வந்தனர். இவரும் அப்பெரியாரது உண்மை நெறிவழித்தாக ஒழுகுபவராயிருந்தனர்! ஆயினும் அவர் அவ்வூரேற்பாட்டின்படித் தாமும் அப்பெரியார்மீது கல்லெறிவது அத்யாவசியமாயிருப்பதுபற்றி அவ்வாறு செய்யமனம் பதைத்தவராய் அரசாக் கினைக்கஞ்சி தாமும் ஓர் மிருதுவான பூவைக்கொண்டு மிக்க விசனத்துடன் அப்பெரியார் தேகத்தின் மீதெறிந்தனர். அது அவருடம்பின்மீது பட்டமாத்திரத்தில் அவர் கூக்குரலிட்டு வெளிவிலகப்பட்ட புழு தத்தளிக்கும் வகைபோன்று தேகம் பதைபதைத்து நிலத்தில் வீழ்ந்தனர். இதனைக்கண்ணுற்ற வழிப்போக்கரான சாந்தசீலர் அப்பெரியாரை நோக்கி, "தோழரே! நான் அன்போடெறிந்த புஷ்பமானது பலகைவராலெறியப்பட்ட கற்களினும் தம்தேகத்தை மிககவருத்தியதோ!" என்று கேட்டனர். அதற்கு அப்பெரியார் "ஓ நண்பனே! பிறருண்டுபண்ணுந் துன்பம் யானாகிய ஆத்மாவுக்கு யாதொரு தீங்குஞ் செய்யவில்லை. ஏனெனில், அறியாமையாற் செய்தனவாகலான். ஆனால் நீயோ உண்மை நெறியிலொழுகுதலையறிந்து நடப்பவனும், இந்நாட்டாரெறியுங் கற்களியாவும் என்னைத் துன்புறச் செய்யாதென்று நன்குணர்ந்திருந்தும் அப்புஷ்பத்தை என்மீது எறிந்தது எற்றிற்கு? என்னைத் தொந்தரை செய்யுமென்கிற பயங்கொண்டன்று ஆனால், பயமும், புகழுங் கீர்த்தியும் பெறவேண்டுமென்கிற அவாவும், உண்மை நெறியில் ஸ்திர நம்பிக்கையில்லாமையும், என்னைப்போன்ற நீயுமொரு பாபியென்று ஜனங்கள் உன்னையும் தண்டிப்பாரென் றச்சங் கொண்டல்லவா இவ்வாறு செய்தனை. நீ என்மீதெறிந்தது புட்பமேயாயினும் அது எனது நிலையைப் பிறழச் செய்வதாயிற்று. ஆனதினால் நீ என்முன் நிற்காதே, தமது சுவாநுபவத்தில் நிலைத்திருக்க வலியில்லாத மாயாமயக்கமுள்ளவர்கள் தமது கடமையைச் செலுத்துவதற் கஞ்சுவதினால் பாமரஜனங்களைவிட மிக்க மதியீனர்களாய் விளங்குகின்றார்கள், என்றனர். சிலகாலங்களுக்குப் பிறகு ஓர் சாதுவினுடைய சரீரம்கல்லடியினால்மிகுதியும் சின்னபின்னமாய் பிரேத மாம்வரைக்கும் அவர் "நான் பிரமம்" "நான் பிரமம்" என்கிற மெய்யுணர்ச்சி வாக்கையே கைப்பற்றியிருந்து தேகவியோக மாகுந் தருணத்துக் கடவுள் விரோதி (ஆத்ம நிலையிலிருப்பதற்கு விரோதஞ் செய்வதாமாமாயையான சைதானனது (Satan) இப்பெரியாரைக் கட்டித் தழுவிக்கொண்டு சொன்னதாவது "நான் உம்மைக்கட்டித் தழுவிக் கொள்ள எவ்வளவு பாக்கியம் பெற்றேன். நான் பிரமம் என்று சொன்னதனால் சிரமமடைந்தவன் நானொருவனே யென்று மேலாசித்திருந்தேன் நீரும் என்னைப்போலடைந்தமையால் உம்மை என் அரியசினேகராகக் கருதி உம்முடைய தற்கால நிலைமைக்குப் பரிதாபப் படுகிறேன்" என்றது.

இவையாவையுங் கேட்டிருந்த மகான் சைத்தானைப்பார்த்து நம்மிருவர்கொள்கையும் முற்றிலுந் தப்புவிரோத முடையனவா யிருத்தலால் நீ என்னைச் சினேகிதனென்று சொல்லுதல் கூடாது. நீ பேதபுத்தியால் அகங்காரவடிவ ஜீவனைக்கடவுளாக எண்ணினை? மேலும், நீ தேகமே ஆத்மாவெனவும் அஞ்ஞான வசத்தனாயிருந்தபடியால் உன்தேகத்திற்கும் மனதிற்கும் நேரிட்ட தீங்கினால் வருத்தமுற்றனை. ஒரு நிமிஷமாவது நான் தேகாத்மபாவனை கொண்டதேயில்லை; ஆனால் என்னைச் சச்சிதானந்த சொரூபியாகக் கருதியிருந்தனன். அதனால் விபரீத புத்தியுள்ள ஜனங்கள் என் சரீரத்திற்குண்டாக்கின தீங்கினால் நான் துன்பப் படவில்லை. ஆனால் கழுகு பருந்துகளுக் குணவாகு மிந்த சரீரத்தின்மேல் பட்ட ஒவ்வோர் கல்லும் என்னைச் சந்துஷ்டிசெய்தது மன்றிச்சுவானுபவத்தில் என்னை நிலைத்திருக்கவுஞ் செய்தது. நான் நித்தியன், பரிபூரணன், என் தைர்த்த சொரூபம் காரண காரிய, அவஸ்த்தாத்திரயாதீத மெய்யுணர்ச்சி நிலை நீயோ தேகாத்மபாவனை பூண்டவன். நீ அகங்காரி, நான் இச்சட சரீரத்தை விட்டு நீங்கின வுடன், தேகத்தின் மீது அதி விருப்புள்ள நீ இத்தேகத்தைத் தழுவிக்கொள்வாயாக." (இன்னும்வரும்.)



# YATHARTHA BHASKARAN

FOR

## God, Humanity and The Motherland.

### THE FOREST GREETING.

BY PAUL LAWRENCE DUNBAR.

GOOD hunting!—aye, good hunting,
Wherever the forest call;
But ever a heart beats hot with fear,
And what of the birds that fall?

Good hunting!—aye, good hunting,
Wherever the north winds blow;
But what of the stag that calls for his mate
And what of the wounded doe?

Good hunting!—aye, good hunting
And ah! we are bold and strong;
But our triumph call through the forest hall
Is a brother's funeral song.

For we are brothers ever,
Panther and bird and bear;
Man and the weakest that fear his face,
Born to the nest or lair.

Yes, brothers, and who shall judge us
Hunters and game are we;
But who gave the right for me to smite?
Who boasts when he smiteth me?

Good hunting!—aye, good hunting,
And dim is the forest track;
But the sportsman Death comes striding on:
Brothers, the way is black.

*These verses, which we take from "The Century," have an additional interest when we hear that Mr. Dunbar, well known in America as a poet, is a pure Negro.

*From the Animals' Friend, Jan. 1904.*

### BIRD PROTECTION IN INDIA.

The action of the Indian Government in prohibiting the export of birds' plumage has not unnaturally raised a considerable amount of discontent amongst the European dealers. They are making efforts to get the law repealed or altered, on the ground that an intolerable hardship is being inflicted on the poorer Hindus who, it is said, make money by the snaring of birds — a kind of argument which might be used to defend every abuse which ever existed, since it would never exist unless it was to someone's advantage that it should.

*From the Animal's Friend, Jan, 1904.*

### THE CRUEL TREATMENT OF FISH.

PERHAPS there is no sort of cruelty more overlooked and neglected than that of which fish are the victims. From time immemorial they have been subjected to various forms of torture in the process of catching and killing, whether for "sport" or for the market. Let us briefly consider a few instances of the numerous cruelties inflicted in "the trade." With angling, that "gentle craft" of dubious character, we are not at present concerned.

It may be true that the smaller fishes netted in the open seas suffer little and die very quickly; but as regards ling, cod, skate, and other large fishes, the netting can seldom be devoid of cruelty. It is a well-known fact that netted fish do not keep so well as fish caught in other ways, and this is due to the injuries received in their

having been trawled over rough grounds, together with the prolonged squeezing and banging about which they undergo in the nets.

What sort of things are done on board the fishing boats may be surmised from the following account of the photographic illustrations given at a lantern lecture :—

"We saw the fish drawn out of the water tightly packed in a net; the net was opened, and the contents allowed to fall in a mass on the deck; heavily-booted men then walked on the unfortunate creatures, and picking them up, *began the gutting at once ; the live fish could be seen wriggling in* the men's hands as they did their horrible work. For a *little diversion evidently*, the men occasionally pelted each other with the live fish. To make quite sure that I had made no mistake, I went, to the lecturer at the close of the entertainment and asked him if the fish in his picture were actually being gutted alive. His answer was simply 'Yes'."

Much suffering is occasioned by the long detention of fish in the deep-sea trawlers or the hold of a herring or mackerel boat. Cod, for example, on first being caught are transferred to welled coasting or fishing smacks. In this confinement—which may last for several days—the fish become savage with hunger, and there is the danger of their eating one another ; to prevent which they are sometimes tied up by their tails, and thus reduced to semi-starvation. On arriving in port, they are further confined and starved, crammed tightly together by scores in a foul fish-chest, which is sunk in the dock.* They manage *to support life for a* short time by consuming the substance of their own livers, and those that do not succumb to this barbarous and insanitary treatment are stunned with a blow from a mallet, and then, *while they are insensible(?)* they are "crimped" (*i. e.*, slashed with a knife), which is supposed to demonstrate that the fish are in prime condition and so enhance their market value. We have good authority for stating that the term "live cod" is an intentional misrepresentation, for the "crimp" is as a rule simply a show of muscular contraction, and the same observation holds good in regard to so-called "live skinned" catfish, halibut, plaice, skate etc.

The live "red" mullet is scaled immediately before death, to induce permanent contraction of its superficial pigment-cells. This causes the fish to become the intense red colour so attractive to the buyer. Mr. F. G. Aflalo describes this practice as "another horrible tribute to a barbarous tradition" (*Morning Leader*, September 29th, 1902). Unfortunately these mullet are tortured in the sea-boats and out of reach of either magistrate or witnesses.

Under the delusion that their flesh will keep better for the market, halibuts are hung up by their tails, and so held until the pressure cuts through the soft parts and the bone is exposed.

The hated dogfish is fiendishly treated. The fishermen so hate him for ruining the fisheries and destroying the netted and hooked fish, that to crimp him alive is considered as much favour as he deserves : indeed, when there is only a market for his liver, that is cut out and the *mutilated fish is thrown back into the sea* to die a lingering death.

In fishing for mackerel it is a custom with certain fishermen to use as a bait a *strip of* skin cut from the belly, near the tail, of a captured fish, which is then thrown into the bass to writhe in agony.

The skinning and gutting of live eels is not at all uncommon; it is a cruel pratice which can be witnessed daily in the streets of London. Vendors should be obliged to put their victims out of pain before selling them, which can be done by breaking the spine. Of course everybody knows that

*A writer in *The Boston Evening Transcript* says: "In Rhode Island alone there are about 150 pounds, where fish caught are kept confined. before they are sent to market. The effect on the fish of keeping them so confined is something to take away the appetite. The fish grow poor; often their gall bladders burst, and the flesh becomes discoloured. Then their noses become almost raw from constant rubbing against the net in their efforts to find escape; their tails break off from the same cause, and many die from the effects of over-crowding and starvation. Fishermen do not like to eat 'pounded' fish, neither do the fish-market men."



eels are cut up while still alive, and the sections continue to move for a considerable time ; but the spine having been severed here can be no pain.

A writer in the *Evening Standard* says: that it is still a very common thing in sea port towns for house wives to fling certain varieties of flat-fish on the frying-pan before the life has gone out of them. Like eels, they die hard, and a hasty cook will not wait until their tails have ceased to flap.

Fishmongers also are either ignorant or wilfully cruel in their manner of dealing with lobsters and crabs. Some put them into saucepans containing cold water and place them on the fire for the purpose of being slowly boiled—a diabolical practice. Crustacea are not insensitive to pain, and to avoid torturing them in cooking they should be pithed with a bradawl, ice-piercer, or stileto before being placed in the boiling-pot. In the case of lobsters this is done by puncturing the brain which ought to be done quickly and the instrument wriggled about so as to break up the brain material. A narrow bladed knife should also be inserted into the third joint of the tail, and spinal cord severed. Crabs should be killed by putting a stiletto into the mouth, and making a cut cross-wise at the back—a method which is preferable to any other. In the hands of a skilled person either operation may be performed in an instant.

காதம்பரீயைக்கண்ட சந்திரா பீடன் ஐயோ மற்ற என் இந்திரியங்கள் யாவற்றையும்! கண்மயமாக்கவே, கடவுள் செய்யாமல் போனாரே" என வருத்தமுற்றான்; அவளுடைய கண்களும் அவன்மீது விழுந்து அசையாமல் நின்றன. அவனும், அவளைக்கண்டது முதல், கல்லாய் நின்றான், அவளுடம்பும் நடுநடுங்கிற்று, நடுக்கத்தினால் நடக்கவும் முடியவில்லை; தன் இருதயத்தில் புகுந்த சந்திராபீடனை தொடுவோமென்ற ஆசையாற் போல் இருதயத்தின் மீதுகையை வைத்து நின்றாள்; இருவரும் சந்திக்கபோது காதம்பரீயின்மனதில் மன்மதனும்! அதேசமயத்தில் மற்றொரு மன்மதன் சந்திராபீடன் மனதிலும் பிரவேசித்தான் போலும் வெகுநாளாய்க்காணாத மகாசுவேதையை காதம்பரீ கண்டுகட்டிக்கொண்டாள். அவளும்இவளைக் கெட்டியாய் கட்டிக்கொண்டு சந்திராபீடன் இன்னானென்று சொன்னாள். என்னைப்போல் நீயும்இவனது ரூபத்தையும் அழகிய குணங்களையும் கண்டு மகிழ்வா யென்று அழைத்து வந்தேனென்று சொன்னாள். "என்னிடத்திலிருப்பது போலவே நீ அவனிடத்திலும்இருக்கவேண்டும் இவன் உன்மித்திரன். பந்து, பரிஜனம் என்று கொள்" என்றுசொல்லவே சந்திராபீடன் நமஸ்கரித்தான். மூவரும்; உட்காரவே மற்றெவரும் சப்தம் செய்யக்கூடாதென்று காதம்பரீ கட்டளையிட்டாள். காதம்பரீ தான் ஸ்வயமாய் எழுந்து மகாசுவேதையின்பாதங்களைக் கழுவி தன் உத்தரீயத்தினால் துடைத்தாள் அவள் உயிர்த்தோழியான மதலேகை, என்பவள் சந்திராபீடனுக்கு பாதப்ரக்ஷாலநம் செய்தாள். காதம்பரீயை மகா சுவேதை க்ஷேமம் விசாரிக்க தன்தோழி காட்டிலிருக்க தான் வீட்டிலிருப்பதே அபராதம் என்று நினைத்து காதம்பரீ கஷ்டத்தின்மேல வெகு வெட்கத்துடன் சௌக்கியமென்று உரைத்தாள். காதம்பரீ தனக்கு தாம்பூலம் எடுத்துவர யத்தனப்படைக் கண்டு மகாசுவேதை புதிதாய் வந்திருக்கும் அதிதிக்கு நீயே முந்தி தாம்பூலம் கொடுப்பது சிதம்பனமென்று அடிக்கொருதரம் சொல்லவே மகாசுவேதையின் பக்கமே பார்த்துக்கொண்டு, உடல்நடுங்க கண் கலங்க முச்சுவாங்க இனிநிற்க வல்லமையில்லை. என்காதத்தைப்பற்றிக்கொள்ளும் என்பவள் போலும் மன்மதனால்அளிக்கப்பட்ட ஊழியனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பவளைபோலும் என்பிராணனை இன்று முதல் உங்கள் கையில் ஒப்புவித்தேன என்றாள்போலும் தாம்பூலத்தை



சந்திராபீடனுக்கு அளித்தாள் பிறகு மகாசுவேதைக்கும் தாம்பூலம் கொடுத்தாள். இப்படியிருக்கையில் காளிந்தி, பரிஹாசம் என்ற இருபட்சிகள் ஒன்றையொன்று விரட்டிக்கொண்டு அவர்கள் இருக்கும் இடத்திற்கு ஓடிவந்தன. காளிந்திவெகு கோபத்தோடு "பிராணனைவிட்டுவிடுவேன் என்னைக் காப்பாற்றலாகாதா" எனமுறையிட்டது! மகாசுவேதை இதென்ன சங்கதியென்று கேட்க மதலேகை "இவ்விரண்டு பட்சிகளுக்கு காதம்பரீ மணம்செய்வித்தாள். இன்றுகாலமே பரிஹாஸனென்ற தன்கணவன் வெற்றிலைப்பெட்டி மடுத்துவரும் தமாலிகை என்பவளோடு ஏகாந்தமாய் பேசிக்கொண்டிருந்ததை காளிந்தி பார்த்து விட்டது. அன்று முதல் அதைத்திரும்பிப்பார்ப்பதில்லை. நாங்கள் என்னசமாதானம் பண்ணியும் அதன் கோபம் தணியவில்லை என்று சொன்னாள்; இதைக்கேட்ட சந்திராபீடன் தான் அதற்கு முன்னமே இந்த விருத்தாந்தத்தை கேட்டிருந்தவன் போல் சொல்லி காதம்பரியைப் பார்த்து பரிஹாஸன் என்ற போக்கிரியைக் கண்டிக்கலாகாதா என்று உரைத்தான். ஆனாலும் பெண்டிற்களுக்கு வெகு கோபத்துக்கு இடமான இந்த அவமானம் நேரிட்டும ஆசைபற்று, விசனமுற்று காளிந்தி என்ற பட்சி விஷமுண்டதாயாவது அக்கினி பிரவேசம் செய்ததாயாவது, உபவாசம் செய்ததாயாவது தெரியவில்லை. இதற்கு என்ன நெஞ்சழுத்தம்! இதை மாத்திரம் இனி எவர் முநாலோசனம் செய்வார்? என்று பரிகாசமாய்ச் சந்திராபீடன் பேச அனைவரும் நகைத்தார்கள்.

ஒரு வேலைக்காரன் வந்து அரசனும், ராணியும், உங்களைப் பார்க்க விரும்புகிறார் என்று மகாசுவேதையை அழைத்தான். அவள் அரசனிடம் போகும்போது சந்திராபீடன் எங்கே இருக்கலாம் என்று காதம்பரியைக்கேட்க, அவரைப்பார்த்த நிமிஷம் முதல் என் ஜீவன் அவரது ஆனால், என் வீடு வாசல விஷயமாய் என்னைக்கேட்கவும் வேண்டுமோ என்று காதம்பரி சொன்னாள். காரிதபம் அரசனுக்கடுத்த உத்தியான வனத்துக்கு போயிருக்கும்படி சந்திராபீடனோடு மகாசுவேதை சொன்னாள். காதம்பரீயும் உப்பரிகையில் ஏறி என்ன இவ்வளவு சுலுவாய் என்மனதை இந்த புருஷன் வென்றுவிட்டானே என தன்மீது குற்றங்கூறிக் கொண்டிருந்தாள். என்னை அவமானப்படுத்தவந்த இவரையோ இது வரையில் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை, சிந்தித்ததுமில்லை. கண்டமாத்திரத்தில் இவரது குணமென்ற பணத்தைப் பெற்று என் மனம் என்னை அவருக்கு விற்றுவிட்டதுபோலும். அன்பே அடிமையாக்கினதுபோலும்,' என உரைத்தாள். சந்திராபீடனிருக்கும்பர்வதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண் நிரம்ப ஆனந்த பாஷ்பம் ததும்ப, மனதினால் அவன் உருவத்தைப் பார்ப்பாள். கைவிரல் நுனிகளெல்லாம் வேர்வைவிட சிந்தையால் அவன் சித்திரம் எழுதுவாள். மற்றெவரையும் அனுப்பித்தால் அவனிடம் செல்வது தாமசமாகும் என தன் மனதையே அவனிடம அனுப்புவாள்.

சந்திராபீடன் மனதும் ஊஞ்சல் போல் ஆடிற்று 'மனிதற்கு சுபாவமான அற்பதனமாவது இல்லாத ஆயிரம் ஆசைகளை உண்டாக்கி, மோசம் செய்யும இளையவர் இருண்ட கண்ணுக்கு சிறிய துன்பமும் அற்ப சிநேகமும் பெரிதாய்க்காட்டும், அவர் சிந்தை கவியின் புத்திபோல் இல்லாததைக் கண்டு களிக்கும மன்மதன் ஆள்கொண்ட இளைஞர் ஹிருதயம் சித்திரகாசனைப்போல் எதையும எழுதும்" என்று இவ்வாறு காதம்பரீ தன்னிடத்தில் பிரீதி இருக்கிறதோ இல்லையோ என்று பார்க்குமாறு யோசித்துக் கொண்டிருந்தான். இருவரும் மேல்மாடியில் ஏறி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே அந்நாள் முழுதும் சென்றதை அறிந்தார்களல்லர். அஸ்தமித்ததும் ஆகாயத்தில் ஓர் புதுமையான வெண்மைகாணப்பட்டது. இன்னதென்று தெரியாமல் பால் சமுத்திரம் பொங்கி எங்கும் பரவிய ஓர் அமிர்தமே ஆகாயமுழுதும் வெள்ளமாய் மிவந்ததோ! ஆயிரம் ஜல யந்திரங்களும் ஒரே தட

வையில் விடப்பட்டனவோ அல்லது சந்திரனே உதித்தானோ என நினைத்தான்.

மதலேகை, யென்பவள் தாளிகை யோடும் கேயூரகனோடும் ஓர் முத்துமாலையை எடுத்துக்கொண்டு வர சந்திராபீடன் கண்டான்.

சமீபத்தில் வரவே சந்திராபீடனும் எதிர்கொண்டு அழைத்தான். மதலேகையும் சற்றும் வழியில் ஓர் மரகத ஆசனத்தில் உட்கார்ந்து, பிறகு தானே எழுந்து, சந்திராபீடனுக்கு சந்தனம்பூசி புது பட்டு வஸ்திரங்களை உடுக்கச் செய்து புஷ்பங்களால் அவன் சிரசை அலங்கரித்து முத்து ஹாரத்தைக் கையி லேந்திக்கொண்டு சொல்ல தொடங்கினாள். நிர்ஹேதுமான உன்னுடைய வாத்ஸல்யா, ஸ்வபாவ மதுரமான உனனடத்தை அதிஸுகுமாசமான உன்குணங்கள் எவரையும்தான் உன் பந்துவென்றும தோழனென்றும் நினைக்கும்படி செய்கிறது. உன்குணாதிசயங்களுக்கு நாங்கள் என்ன உபசாரஞ் செய்தால் தான் போதும்? உன்னைப் பார்த்தாலே எவர்களுக்கு விச்வாஸமும் நம்பிக்கையும் உண்டாகிவிடுகிறது. இல்லாவிடில், உன்னோடு நாங்கள் பேச முயலுவதே உனக்குத் தாழ்ச்சியாகும். ஆதரிப்போமென்றால், பிரபுவென்று நாங்கள் கர்வத்தை வெளியிடும். துதிப்போமென்றால், எங்கள் அசதியே குறிக்கும். தனக்கு உபசாரம் செய்வதும், உனக்கு ஊழியம் செய்வதும அநுசிதமாகும். எங்கள் சினேகத்தைக் காட்டுவது,எங்கள் யோக்கியதை இன்னதென்று அறியாமையை விளக்கும். "என்னவேண்டும் என விசாரித்து கொள்வது மொறட்டு தைரியமாகும். உனக்கு ஏதாவது கொடுப்போமென்றாலோ உன்னை அவமானம் செய்ய எத்தனித்ததாகும். மனதை ஆட்கொண்ட உனக்கு கொடுப்பதற்கு இன்னைப் என்னதானிருக்கிறது; பிராணேசுவரனுக்கு கொடுப்பது என்ன? எல்லாம்அவரனுதல்லவோ? இந்தஹாரத்தை கொடுக்க வந்தது, அவன் செல்வச் செருக்கை காட்டும் பொருட்டல்ல. நல்லோர்கள் திரவியம் பிறர் பொருளென எடுத்துரைக்கவும் வேண்டுமோ? உன்னிடத்தில்ஊழியம் செய்வதற்கும்ஒப்புவான். பிராணனை உன்னிடம் ஒப்பித்து சிறிதும் சிந்தியான். பிரியமுடையாரிடத்து தாயையும் சாட்சிணியமும் இருப்பதே நல்லோர் பெருமை. கொடுப்பவர்களுக்கு எவ்வளவு வெட்கமிருக்கிறதோ யாசிப்பவர்களுக்கும அவ்வளவுஇராது. இந்த வஸ்துவை உனக்குக்கொடுக்கத் துணிந்ததினால் குற்றம் செய்தவளாய் காதம்பரீ நினைத்துக்கொண்டிருக்கிறாள்.

இந்த முத்துமாலைச முத்திரத்தைக் கடைந்த காலத்தில் கிடைத்த சமுத்திராஜன் வருணனுக்கு கொடுத்தான். அவனிடத்திலிருந்து காதம்பரீ மாலையைப் பெற்றாள். இந்தமாலையை நீர் போட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறாள். விஷ்ணு அணிந்ததால் கௌஸ்துபமணிக்கும் ஓர் அதிகஅழகல்லவோ? என சொல்லி மாலையைசந்திராபீடனுக்கு கொடுத்தாள். அவனும் சந்தோஷமாய்ப் பெற்றுக் கொண்டு காதம்பரீயைப் பற்றி விசாரித்தான் பிறகு தானும் மாடி ஏறினான். காதம்பரீயும் உப்பரிகை ஏறினாள். அஸ்தமித்தது. இருவரும் மாடியை விட்டு இறங்கினார்கள். நட்சத்திரங்கள் எட்டிப் பார்த்தன சந்திரனும உதித்தான். கேயூரகன் சந்திராபீடனிடம் வந்து காதம்பரீ தரிசிக்க வருகிறாளென தெரிவித்தான். அவளும் பரிஜனமில்லாமல் முத்துமாலை ஒன்று மாத்திரம் அணிந்து காதில் ஒரு புஷ்பமும், உடம்பில் சந்தனப்பொடியும், அரையில் வெண்மையான வஸ்திரமுமாய் வந்தாள். சந்திராபீடன் அவளை எதிர்கொண்டழைத்தான். அவன் அழகாய்ச் சிரித்துக்கொண்டு கீழே உட்கார்ந்தான். அவளும் மதலேகை என்னசொல்லியும் கேட்காமல் கீழே உட்கார்ந்தாள். உபசார வார்த்தையால் அவள் மனதில் சந்தேகம் உண்டாகிறதே அவள் மனம் ஊஞ்சலாடுகிறதே என்றுமதலேகை சொல்லியும் உபசாரவார்த்தை மாத்திரம் சொன்னான். சற்றுநேரத்திற்கு பிறகு காதம்பரீ படுக்கையறைக்குச் சென்றாள். சந்திராபீடன் மறுநாளும் காதம்பரீயை தரிசனம் செய்துவரப் போனான். அப்போது வாத்தியம் வாசிக்க, நாரதன் பெண்மதுரமான குரலோடுஸர்வ மங்களத்திற்கு இடமானமஹாபாரதத்தைவாசித்துகொண்டிருக்க அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். 'தாமரைக்குச் சூரியனுக்கும், ஆம்பலுக்கு சந்திரனுக்கும்போல் உங்கள் இருவருக்கும் சினேகம் சமீபிப்பதை அபேட்சியாது, பிராயணம் பிரலயம்வரைக்கும்இருக்கலாதா'என்னசந்திராபீடன்தன் வீட்டிற்கு போகவேண்டுமென்கிறான்போய் வரட்டும் அம்மா, காதம்பரீ" என்றுமகாசுவேதை சொன்னாள்.

சந்திராபீடனும் விடை பெற்றுக் கொண்டு தன் மனிதர்கள் மகாசுவேதை ஆச்சிரம மண்டையில் இருக்க அவ்விடம் சேர்ந்தான். அன்றிரவு சந்திராபீடனுக்கு நித்திரை வரவில்லை. பொழுது விடிந்ததும் சந்திராபீடன் மறந்து பின்விட்டுவந்த முத்துமாலையை எடுத்துக்கொண்டு கேயுரகன் வந்தான். காதமபரீக்கு உடம்பு அசௌக்கியமாயிருப்பதால், திரும்பி பார்த்துப்போகும்படி மகாசுவேதை கேட்டுக்கொண்டாள் என கேயுரகன்சொன்னான் அவனிடத்திலிருந்து, தன் மேலுண்டான காதலால் காதம்பரீ படும் துயரங்களை கண்டறிந்து களித்து வைசம்பாயனனை, பின் விட்டு விட்டு, பத்திரலேகையும் தானும், இந்திரன் ரதத்தின் மேல் ஏறி, ஹேமகூடம் சென்றான்; அங்கு ஏரிக்கரையில் ஓர் தோட்டத்தில் காதம்பரீ மதனவேதையை ஆற்றிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவள் மனதை அறியும் பொருட்டு, இரண்டு அர்த்தம் கொள்ளும்படியாய் பாதலேகையை கேட்க: அவளும், அம்மாதிரியே சொன்னதால்,சந்திராபீடனுடைய சந்தேகம் முன்னிருந்த ஸ்திதியிலே யிருந்தது; பத்திரலேகையை காதம்பரீ யிடம் விட்டான். சந்திராபீடன் தன்னிருப்பிடம் வரவே, தன் தந்தையிடத்திலிருந்து உடனே வீட்டுக்கு வரும்படி கடிதம் வந்திருந்தது; குதிரைவிட்டு இறங்காமலே உஜ்ஜயினிக்குச் சென்றான். மேகநாதனிடத்தில் காதம்பரீக்கு ஓர் கடிதம் ஒப்பிவித்து, அந்தக் கடிதத்தை, பத்திரலேகையோடுவரும், கேயூரகனுக்கு கொடுக்கும்படி கட்டளை யிட்டு, வைசம்பாயனனை பின் கொஞ்சம் மெதுவாய் வரும்படி சொல்லி உஜ்ஜயினிக்குப் புறப்பட்டான். அவன் உஜ்ஜயினி பட்டணம் சேர்ந்ததும் அனைவரும் சந்தோஷித்தார்கள். ஆனாலும், வீடும் அவந்தீ பட்டணமும், உலகம் முழுதும்,காதம்பரீ இல்லாமல் சூன்யமென்று நினைத்தான்.

மேகநாதனும் பத்திரலேகையும் வருவதை எதிர்பார்துகொண்டிருந்தான். அவர்கள் வரவே, பத்திரலேகையைத் தனியாக கூப்பிட்டு காதம்பரீ விஷயமாய் நுட்பமாய் விசாரித்து வந்தான். சந்திராபீடனை அழைத்து வர வேண்டுமென்ற காதம்பரீ வெகுதரம் கேட்டுக்கொண்டாள் என பத்திரலேகை சொன்னாள். இங்ஙனம் பாணகவி

எழுதிய கதை முற்றிற்று.

அவர் புத்திரன் எழுதிய இந்தக் கதை தொடர்ச்சி பின்னும் வரும்.

---

## கர்ம யோகம்.

கர்மயோகம், என்னும் சொற்றொடர் கர்மம் யோகம் என்னும் பாகுபாடுடையது. கர்மம், என்ற சொல்லின் சாமான்ய அர்த்தம் செயல் என்று சொல்லலாம். விசேட அர்த்தம் கொள்ளுமிடத்து யாவத் காரணங்களாலுண்டாகும் காரியங்களையே குறிப்பிக்கும். காயத்தைக் கொண்டு செய்யும் செய்கைகள் மாத்திரமே கர்மமன்று, மனத்தானும் வாக்கானும் கூட மக்கள் கர்மம் செய்யா நின்றார் என்பது நிஸ்ஸந்தேகம். எனவே, ஒருவனை அடிப்பதும் அணைப்பதும் தேகத்தை பொறுத்த செயல்களாக அவைகள் மாத்திரமே கர்மமென்று சொல்லப்போகாது. ஒருவனைப் பூஷிப்பதும் கர்மம்; ஒருவனைத் தூஷிப்பதும் கர்மம்; இம்மட்டோ?— மனதால் ஒருவனுக்குநன்மை நினைப்பதும் கர்மமாகும் தீங்கு நினைத்தலும் கர்மமே யாம். ஆகையால் மனமொழிவாக்கான் யாவரும் எப்போதும் கர்மம் செய்த லுண்மை யென்க. சூரிய சந்திர நட்சத்திராதி கிருஹங்கட்கும் மண்டலங்கட்கும்காரணமாய் நின்றஅணுக்கள் சரிப்பதும்

கர்மமே. நிமுணரப்பெறுத பரமாணுக் கூட்டப் பிரபஞ்சங்களும் கர்மம் செய்யாது நிற்றல் இயற்கையின் ஆட்சிக்கு முற்றும் விரோதமாமென்ருல் ஆறறிவுடைய மக்கள் கர்மம் புரியா தொழுதலுண்டுகொலோ? கர்மமே நம்மைக் கர்மம் செய்விக்கின்றதாம்.

திரிகுண வடிவானபிரகிருதி வயப்பட்ட ஜீவர், அவனனுக்கிரகம் பெற்றே அப்பாற் சேரல் சாத்தியமாகும். யாதொரு பெருநகர்ச்சனக்காட்டினிடையில் நின்றபோது மனம் சலனமற்றும், நிர்மானுஷியக் காடாரண்ணியத்துத்தனித்து நின்ற போது ராஜஸத்தை வென்ற சாத்விக மனம் பொருந்தியும் நிற்போர் தம்மையே கர்மயோகிகள் என அறிவுடையுலகம் பேசாநிற்கும். கர்மயோகிகள் கோருவதாவது:—கர்மத்தை வென்று பிரகாசிக்கும் முத்திநிலையென்று கூறுப. உலகத்தோடொத்து வாழ்தலைக் கடைப் பிடித்து ஈஸ்வர உபாசனை செய்து காண்பிப்பார் தாமே கர்மயோகிகளாகக் கூடுமென்ற நிபந்தனை யில்லையென்றறிய வருகிறேம். கடவுள் ஞான அடையப் பெருதார் பலரும் கர்மயோகிகளாய் வாழ்ந்தனரென்ப. இதற்குத் திருஷ்டாந்தமாக மகாபிநிஷ்கிரமணம், பெருந்துறவைத் தலைக் கட்டிய மஹான் பௌத்தமுனிவரையே சிலர் கடவுளறிவைப் பெருத கர்மயோகியாவர் எனக்கூறுவர். அது எமக்குடன்பாடன்று. சிறுமதச் சிறுவர் பலர்கூறும் சிறுதெய்வங்களைப் புத்த முனிவர் பொருட்படுத்தாது விட்டாரென்ப துண்மையாயினும் அவர் பரம்பொருளை யறியாது, அல்லது பேசாது வாழ்நாள் கழித்தனர் என்றகூற்று எமக்கு எட்டுணையும் பயன்படத்தக்கதன்று. மற்று: கர்மயோகம் சாதித்தற்கு கடவுள் ஞானம் இன்றியமையாத தென்றும் யாம் சொல்லத் துணியவில்லை. நங்குருமணியாய்ப் போந்த புனிதமூர்த்தம் ஸ்ரீமத்விவேகாநந்தப் பெருந்தகையார் சிற்சில அவசரங்களில்எமதபிப்பிராயத்தையே வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்:— கர்மயோகி ஈஸ்வரவாதியா யிருக்க வேண்டிய அவசியமில்லை. இருப்பின் அந்தயோகம் சுலபமாய்ச் சித்திக்கும்: அவ்வளவன்றி, கர்மயோகிக்கு ஈஸ்வரஞானம் அவசியமன்று. நம்சுவாமிகளும், மற்றும் புத்திமான்கள்பிறரும், அவ்வாபோதும் பரக்கக் கூறியுள்ளார்கள்.—

அடையும் பிரயோசனத்தைக் கருதாமற் செய்யும் கர்மமே கர்மமாமென்று கர்மயோகங்கூறும். பலாபலவினை, லாபாலாபத்தை, ஜெயாஜெயத்தைக் குறித்துச் சிந்தனையின்றி ஒன்றைத் தத்தம் கடமையைக் கருதி செய்து முடித்தல் கர்ம யோகத்தின் பிரயோஜனம்போலும். பிரகிருதத்தில் இந்தயோகம் மகத்தான அருமையாய்ச் சோன்றினுலும் சாதனையால் கைகூடுமென்பதிற் சந்தேகமில்லை.

ராஜசகுணம். விசேஷ மாகவுடையார்க்கே நம்பெரியோர் இந்தயோகம் சொன்னார்கள் என்க, இந்தயோகம் பழகப்பழக ராஜஸம் ஒழிந்து மனம் சத்துவமடையுமென்றுங்கூறுவர். அபிமானம் விட்டபோது தமசுக்கும் ராஜஸத்துக்கும் இடமில்லை யல்லவோ? பரலோக சிந்தனையும், பரம்பொருள் திருவருள் ஞானமும் ஆரம்பத்தில் இல்லாவிடினும் பிற்பட்டு மனம் சத்துவ விசேஷ மடைந்தவுடனே கர்மயோகி சுலபமாய்ப்பெற்று சிறப்புற்று நிற்பானெனவும் சொல்லப் படுகின்றது.

இந்தயோகம் தலைக்கட்டும் ஆற்றலைப் பெற்றபின்னர், யாதொரு கிருஹஸ்தனுக்கும் ஸந்நியாசிக்கும் பேதம் வெளிப்படலருமை. விருந்தைத் தெய்வமாகக்கருதிப்பூஜித்துஜீவகாருண்யந்துண்டதன் தேகத்தையுமேவிடசித்தமாயிருப்பவனே கிருஹஸ்தன் அந்தமீ காணத் துறவு மடைந்து காடே வீடாய்க் கொண்டுதேவகன்னி கையாயினும், குபேரசம்பத்தாயினும்பொருட்படுத்தாது, தான்கொண்ட விரதத்தை யனுஷ்டதித்து முடிப்பானே பரமஹம்ஸன்: இவர்தமுள் பேதா பேதம் ஏற்படுத லொரு போதுமில்லை. இதுவிஷயமாய் ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகள் இயற்றியுள்ள "கர்மயோகம்" என்றஅரியபெரியநன்னூலின் கண்ணேஒருவிநோதமான கதை காணப்படுகிறது. ஆர்வமுள்ளார் அந்தகதை யையாண்டுக்கண்டுந் தெளிக.

"கர்மயோக" மென்பது வேதத்தின் கர்மகாண்டத்தினில் விதித்துள்ள பல கர்மயாகமங்களைச் செய்துமுடிப்பதன்று. என்ருல், சுவர்க்காதி போகபோக்கியங்களை யுன்னிச் செய்யும் (கர்ம காண்டிகளின் யாகாதிகளாய காம்ய) கர்மங்கள் முத்தியைத் தாலா. அப்படியிருக்கும்பட்சத்தில்ஆரியர் செய்த அஜமேதம், கோமேதம், அஸ்வமேதம் பௌண்டாமுதலிய யாகங்கள் பக்ஷாத்து ஒருமுத்தி தந்திருந்தால் ஒருகாலத்தில் ஆரியர் செய்துவந்தாகப் பேசப் படும் நரமேதம் எத்துணை முத்திகளைத் தந்திருக்குமு: எனவே, நிஷ காம்ய கர்மயோகத்துக்கும் காம்ய கர்மங்களுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை யெனப்பேசுவர் பெரியர். 'நான்' 'எனது' என்ற அபிமானங்களோடு கர்மயோகிகள் ஒன்றும் செய்யார்கள். தங்கடங்கள் நிலைமைக் கேற்ற கடனை பகவத சங்கற்ப மென்று கருதிமுடித்து பிரார்த்தவ கர்மம் தூண்டதாங்கள் செய்யா நின்ற சத்கர்மங்களின் பிரயோஜனத் தைச்சுரார்ப்பணம் செய்து தாமரையி னின்ற ஜலம்போல் உலகத்தாரோடு பொருந்தியும் பொருந்தாமலும் வாழ்வார்கள். அவர்களிருக்கப் பெற்ற வுலகம் அவர்களிலொது ஓடம் ஜலத்திலிருப்பினும் ஜலம் ஓடத்திலிருக்கப் போகாதெனரீர். ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸதேவர். கர்மம் மாயையிலகப்பட்டயாதொரு பதார்த்தத்தையும் விட்டதில்லை. சிருட்டியில் ஒரு சிறிது நிமிஷமேனும் யாதொரு சாமானிய பரமாணுவும் செயலற்று (சரிப்பதின்றி) நிற்றல் கூடாமை யன்ரே? மேற்புல சாஸ்திர விஞ்சாநிகள் இதைவற்புறுத்தி ஏராளமான கிரந்தங்க ளியற்றி யுள்ளார். எனவே, இவ்வுலக நாடகத்தில் ஒவ்வொரு ஜீவனும் அதனதன் வேடம்சாட்டிய யாடித்தீர வேண்டும். வேடத்தான் வரும் சுபா சுகங்களை யிச்சையநிச்சை யின்றி புசித் தொழித்தலே கர்மயோகமாம்.

இனி, இந்த நான்குவிதயோகங்களைக்குறித்து ஒன்று கூறிமுடிப்பாம். கர்மயோகத்தில் பக்தியோகமும், ராஜயோகத்தில் ஞானயோகமும் சேராமற் போகவில்லை. அந்தந்தயோகத்தில் அந்தந்த தருமம் விசேடமாகக் காணப்படுமேவொழிய, இவையெலாம் ஒன்றையொன்று கிஞ்சிற்றும் அபேக்ஷியாத நான்கு விதமார்க்கங்களல்ல. கர்மயோகத்தையே பிரருசயோகம் என்றுசொல்லலாம். இதை யடுத்தது பக்தியோகம்என்றும் சிலர் கொள்வர். பரபக்தியை யொருபடையொத்தும் பர ஞானத்தை யடுத்தும்நிற்பது ராஜயோகமென்ப. 'யோகியர்கே ஞானமெழுங்காம் பராபரமே' என்றார் நந்தாயுமானப் பெருவள்ளலும். இவை யாவற்றின் இறுதியிற் பிரகாசிப்பது ஞானயோகம். ஞானம் அடைதற்குத்தாம் இத்துணைவழிகளும்பேசப்படுகின்ற. நந்தேசத்தார் பிராசீன காலங்களினும் ஞான தானம் லோகத்தாருக்குச் செய்துவந்தனர். பிறநாட்டுப் புத்திமான்கள் ஆதியில் நம்தேசஞ்சேர்ந்துபலகாலமிவணிருந்து நம்மனோரிடம் ஞானோபதேசம் பெற்றுதத்தம் நாடு திரும்பிச் சென்று விருதார்த்த ராயினர் என்று சரித்திர நூல்கள்கூறும். இந்நாளிலும் இனியென்னுளுமே நம்மனோர்பலருக்கும் ஞான தானம் செய்யும் ஆற்றலைப் பெற்று விளங்குவ ரென்னத் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

பத்திராதிபர்.

—o—

## பத்திராதிபர்க் குறிப்புகள் (தொடர்ச்சி)

———

ராஜா பாஸ்கரசேதுபதியவர்கள் அகாலமரணம்: இந்த கனவான் திடீரென சிவகதியடைந்தனரெனக்கேட்டு ஆற்ருணுத் துயரமடைந்தனம். இவர் வரையாது வழங்கிய வற்றலென்பது யோகப் பிரசித்தம். தமிழ்பிமானிகளுள் இவர் தலைமை பெற்றிருந்தவர். சைவசமயத்தைப் போற்றிப் பாதுகாத்துவந்தவர். ஸ்ரீமத் விவாகாநந்த சுவாமிகள் முதலிய பெரியோர்கள் வந்தித்தாதரித்தவர். காங்கிரஸ் மகாசபைக்குள் பொருளுதவிசெய்து தேசாபிமானம் காட்டியவர். இவருடைய பிரசங்கமாரியைக் கண்டார் இவரை எவ்வகையினும் பெரியரெனத் துதித்துக் கொண்டாடாநிற்பர். இவர் இளம்பிராயத்தில் சிவனடி தேடிக்கொண்டதைக் குறித்து மனம் வருந்தாதாரில்லை.

* * * *

காங்கிரஸ்சபை: இவ்வருஷம்சென்னையிற் கூடியஇம்மகா சபைக்குத்தலைவருகத் தெரிந்தெடுக்கப் பட்டவர் மிஸ்டர் லால்மோஹன்

கோஸ் என்ற பங்காளநாட்டுக்கனவான். இவர் ராஜாங்க நடவடிக்கை விஷயங்களில்மிக்க தேர்ச்சியடைந்தார். காங்கிரஸ் மகாசபை முதன் முதல் கூடுவதற்கு முன்பாகவே பொதுவிஷயங்களில் வெகு ஊக்கத்தோடுழைத்து வந்தவர். சுமார் 25 வருஷங் கட்கு முன்பே இங்கிலாந்து சென்று, ஆண்டுள்ள பாராளுமன்றில் மெம்பராக முயன்றவர். அக்காலந்தொட்டு இந்நாள் வரைக்கும் ஆங்கில கனவான்கள் பலரான் நன்குமதிப்புப்பெற்றவர். இவர் இவ்வருஷம் காங்கிரஸ்சபைக்குத் தலைவராகக் கிடைத்தது யாவராலும் புகழத் தக்கவிஷயமாம். இவர் சென்னைக்கு வந்திறங்கியநாள் இவர்விஷயமாய் இந்நகரத்தார் செய்த மரியாதைச் சிறப்புகள் அன்னாருக்கு கௌரவத்தைத் தருமென்பதில் நிராக்ஷேபம்.

* * *

பிற்றை நாள் மிஸ்டர் நார்டன் துரையவர்கள்—சிலவருஷகாலமாய்க் காங்கிரஸ் ஸபைக்கும் போகாமலிருந்தவர் சென்னைச் சபைக்கு விஜயஞ்செய்து ஆண்டு தாமும் பேசிப் பலர்மனதையுங்களிப்பித்தமைக்கு அவர்பால் யாமும் நன்றிப் பாராட்டுகின்றோம் வழக்கம்போல் முதல்நாள் முக்கியமாய் நடந்தவிஷயம் சபாநாயகரின் பிரகிருத உபந்யாஸமே. அதைத் தினசரிப் பத்திரங்களில் பலரும் கண்டு வியந்துபேசியிருப்பரென்பது திண்ணம். இரண்டாம்நாளும் மூன்றாம்நாளும் மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி—மண்டிட் மாடன் மோஹன் மால்வயா—மிஸ்டர் பி ஆர். சுந்தரம்ஐயர் முதலிய கனவான்கள் பல தீர்மானங்கள் பிரேரிபித்தும் தழுவிப்பேசியும் சபையைச் சிறப்பித்தனர். ஆயின், இரண்டாம்நாளும் மூன்றாம் நாளும் மழையதிகமாய் பொழிந்ததால் பலபிரபுக்கள்பேசிய விஷயங்கள் ஜனங்களுக்கு நன்றாய்க் கேளாமற்போயிற்று. மூன்றாம்நாள் காங்கிரஸ் ஸபை காங்கிரஸ் பந்தலில் நடத்தப்படவில்லை. அடுத்தசிறுகட்டடத்தில் இம்மகாசபை நடந்தது. பணங்கொடுத்து டிக்கட்டு வாங்கினோர் அனேகர் இடம் கிடைக்காமல் மழையில் நனைந்து துக்கப்பட்டுக்கொண்டிருந்தனர். அந்நாளிலும் சபை பந்தலிலேயே நடத்தியிருந்தால் நலமாயிருந்திருக்கலாமெனப் பலர்சொற்றனர். யாமும் அப்படியே அபிப்பிராயப்பட்டோம். மற்று:—காங்கிரஸின் நோக்கங்கள் ஜனங்களுக்கு ஒருவாறாகத் தெளிவாய்த் தெரியும் வரையில் காங்கிரஸ் தலைவர்களின் உழைப்பு மிக்க பிரயோசனம் தராதென யாம் அபிப்பிராயப் படுகின்றோம். ஜனங்களைப் படிப்பிப்பதும் முக்கியமாய் இராஜாங்க உரிமை கடமை விஷயமாய் அன்னார் படிக்கும்படி செய்யாதும் ஜனத் தலைவர்கட்கு இன்றியமையாததாகும். அத்தலைவர்கள் அடிக்கடி ஜனங்களோடு சேர்ந்து பழகவேண்டும். சாதாரண ஜனங்களைக் குறைவாக வெண்ணி இத்தலைவர்கள் அவர்களோடு சேர்ந்து பேசுதலுக்கு வெறுக்கப்படாது.

* * *

ஆசார சீர்திருத்தச் சபை:—

இந்தச் சபை இவ்வருஷம் காங்கிரஸ்பந்தலிற் கூடவில்லை. மழையின் கொடுமையே யிதற்குக் காரணம். சென்னை எஸ்பிளனேட் ஆண்டர்சன் ஹாலில் சென்ற டிசம்பர்மீ 31உ இந்தச்சபை கூடிற்று. நூற்றுக் கணக்கான பிரதிநிதிகளும் ஆயிரக்கணக்கான இதர கல்விமான்களும் சேர்ந்திருந்தனர். சபாநாயகர் ஹானரபில் மிஸ்டர் வெங்கடராயர் பிரகிருத உபந்யாஸம் மெச்சத்தகுந்ததே. பெண் கல்வி விஷயமான தீர்மானத்தை யாமோதித்தும் தழுவியும் நான்கு சுதேசஸ்திரீகள் இவ்வருஷம் சபாமேடையேறிப் பேசின விஷயம் படிப்பாளிகள் பலருக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது.

* *

விதவாவிவாக விஷயமாய் மிஸ்டர் பிஜாகர் என்னும் கனவான் வெகு அருமையாக உபந்யாஸித்தார். சென்னையிற் சிலகனவான்கள் விதவாவிவாகம் முதலிய சில சீர்திருத்தங்களை நம்மனோர் செய்யக்கூடாதென்றபிப்பிராயப் படுகின்றனர். கப்பல் யாத்திரை விஷயத்தை மட்டும் யாவரும் அவசியமென்றேயொப்புக்கொள்கின்றனர். குழந்தைக் கலியாணம் கூடாதென்றே யாவரும் பேசுகின்றனர். பஞ்சமர் முதலிய விழிந்த சாதியாரை யாதரித்து அவர்தம்மை முன்னுக்குக் கொண்டுவரும்படி எவ்வித பிரயத்தனமுஞ் செய்த லவசியமென்பது நம்மனோர் கட்சி. இது முக்கியமானதே. நம்மிற் றாழ்ந்தாரை நாம் நல்லெண்ணத்துடன் கவனிக்கு மட்டும் பிறசாதியார் நம்மைக் கனப்படுத்துதலருமையேயாம்.




# YATHARTHA BHASKARAN.

FOR

## God Humanity And The Motherland

(Published by the 15th of every month.


# Editorial

## Picturesque Rangoon.

The first experiences of our present visit to Rangoon are of such a uniquely pleasurable nature that we hardly know where to begin and where to end our present article. We arrived here on the 13th of March accompanied by a few fri-nds from Madras, one of whom Dr. A. M. Krishna is new on a tour in Upper Burma. The Burman metropolis seems to have a thousand attractions to the new comer and for a time he is never tired of going round and round the city. You come cross so many nationalities here, the Europ-ans of all races, The various Indian communities, the Burmese, the Chinese, the Japanese, the Mohemedans from so many countries that you feel you are in a totally strange land which has nothing in common with your own country. But this feeling wears away gradually when familiar faces greet you and you are welcomed by long-forgotton friends and acquaintances who wish to do every thing in their power to make you feel quite at home in their midst.

The other day we paid a visit to one of the Pya (Budhistic temples) in Rangoon and stood there in reverential admiration before the beautiful image of Lord Budha whose life was a standing protest against the superstition and ignorance of his times in India.

We were also deeply impressed with the homage paid to this great Avatar of God by the Burmese in these parts.

We were engaged for the last week or so in a round of visits to the native gentry in Rangoon and we understand that Rai Bahadur P. M. Madurai Pillai Avergal Hony. Magistrate, Rangoon, has been for years the patron of literature and all healthy movements making towards real progress in the city. Mr. Pillai's charities are of world-wide renown and we are happy to learn that he is always the pioneer of all public movements in Rangoon brought about for the good of the people at large. There are others now who are following in the footsteps of Mr. Pillai and we hope that many more would soon follow their example.

We have not seen much of public life as yet here, but we hear thereare several Associations Hindu and Budhistic which are working in different directions for the good of humanity. There is a Hindu Social Club, but we are as yet unware of its scope, nature and functions. We had the pleasure of presiding at a meeting of the Literary Society, East Rangoon and we were somewhat surprised to see that some of the Brahman members were openly declaring themselves against all social reform. But as to this, more hereafter in a future issue. We are only sorry that our Madras friends have carried with them to Burma their old prejudices and party feelings.

*(To be continued.)*

*THE EDITOR*

## The Madras University Convocation Address.

(*P. Parthasarathy Nayagar B.A. L.T.*)

The time-honoured tradition of the Convocation Address is not without a serious feature about it. It may be said that academic precepts do not go far in moulding character; but it will be admitted that the happy nature of the occasion when a whole host of trained minds are met together for the reward of many years' hard and strenuous intellectual labour, the excellence and representative character of that body which authorizes the whole proceedings headed as it is by the representative of our ruling emperor, the high educational attainments and experience of the speaker and the ruling hand that makes the selection are circumstances favourable for all exhortations then urged on being listened to with an impression that will not be easily effaced.

This traditionary honour was this year bestowed on Rev. Canon Sell a missionary of Southern India, an educationist of many years' experience and one who has taken a life-lang interest in the welfare of the Muhammadan Community and their education.

The Reverend's address sets a high idea of character and duty. After congratulating the graduates on their successes, he proceeds to give them a few words of advice which, though simple at first sight, are the result of many years of worldly experience and observation and are of a practical and guiding nature. He exhorts the young graduates to stive diligently to fulfil the promises made by them—that is—to set actively about conducting themselves in daily life and conversation as become members of the University, supporting and promoting to the utmost of their opportunity and ability the cause of morality and sound learning, upholding and advancing as far as it lies in their power social order and the well-being of their fellowmen, and faithfully and carefully fulfilling the duties of the several professions and maintaining on all occasions their purity and reputation without ever making knowledge subservient to unworthy ends——a piece of advice which, when fully respond to, is calculated to raise the individuals responding to a high sphere of morality and usefulness. The importance of courteous manner, moderation of speech and propriety of action is next urged on. These qualities though seemingly simple are of the highest social value and are sure ways of success. The next advice is to abhor at all times all that is low and mean and to stive after what is high and noble——an advice which will prove of immense value at times of temptation when "in position of comparative isolation without the restraining influence of an enlightened public opinion." "Be slow to take offence or to resent an injury" is not a trivial precept but one which is beneficial to social order and the happiness of mankind. The value of patience, moderation and modesty under all circumstances and of labour inspired by the desire for the well-being of the community is next touched on. Graduates are next exhorted to cherish the life of culture and keep it vigorous—a thing but rarely practised amongst our Indian brethern and which, if practised, will lead to happiness and usefulness. The correct meaning of promoting the cause of sound learning is given as taking an interest in the education of the people, cultivating the taste for literary work, studying the vernacular languages and making a diligent use of them, doing original work when that is possible or when this is not possible doing a humbler yet useful work—that of collecting facts, rescuing old social institutions, describing the social institutions of the country, bringing to light the folklore of the people and thus providing the basis for future scholarly work which may fall to the lot of better men. Here are given various occupations for academic intelligence of varying merit and if only our graduates take the hint, they may well be classed as men promoting the cause of sound lening.

The remaining part of the address, we may say, nearly half of it, is taken up in giving "special exhortation" to the Mohummadan graduates asking them to promote "sound learning" amongst their community by "striving to enlighten the dull intellects of the majority of their people and advocate those liberal views which tend to promote sound learning." This special exhortation to the muslim graduates is only natural from one whose educational experience and interest has been mainly in connection with the Mussulmans. The subject of mahammadan education has, of late, found favour with Government who are trying their best to do what they can towards its advancement. The Madrasa-i-Azam has been reorganized and a European head master appointed; and what more will be done, we do not know. But if the education of the community is to improve, the remedy lies not in government doing everything for it but, as pointed out by Rev. Sell, in the people themselves.

Speaking about the future of India, the Reverend says that "for its perfect development the co-ordinate progress of all sections of its people is needed." This is only but true and the full measure of educated influence "can only be attained by the harmonious development of the special gifts of each race."

Here ends the address; but there are certain points whish it might have profitably included. The whole address relates to the moral and intellectual side; but the material progress of the country is left out of account. It is now well-known that "Government Service is regarded by the educated classes as the most assured, the most dignified and the most attractive of all careers." This is an erroneous idea and till a satisfactory result is achieved, this feeling should be shewn to be erroneous to the graduate body year after year if necessary and this cannot be better done than in convocation addresses. They should be made to understand that there is a vast field of honourable career open to them outside the pale of government service such as commerce, Agriculture, the development of Indian industries and the like. This preaching should not be given a rare piece of advice but should continue to be given for some time repeatedly until a successful impression is made and a satisfactory number sufficient enough to become examples to others take to pursuits other than goverument service—pursuits which will lead to the material progress of the country and make India richer and happier than what it is at the present day.



## The earliest age at which a child has been able to read and write.

(*By M. S. Mudaliar.*)

"One of the most wonderful instances of precocity on record was that of J. P. Baratier, the gifted German Philologist. Baratier was born at Schwabach, in 1721, and when only four years of age he spoke the French, Latin, and German languages; at five he had added Greek, and at six years of age he could translate Greek into Latin. He afterwards studied Hebrew, and at nine years of age this extraordinary boy compiled a dictionaryof the most difficult words in the Hebrew language. At the age of fourteen Baratier was admitted as a member of the Academy of Science, Berlin. A brilliant career was predicted for him, but he died in 1740 at the age of twenty."

The above historical fact amply exemplifies the popular notion that Sankara, Thirugnana Sumbanthar, Ramalinga Swamygal and other celebrities India gave birth to from time to time, exhibited even in their boyhood extraordinary intelligence. Such bright intellects are produced in all countries but rarely. In the absence of anything like a chronology with the Hindus actual facts are often treated by sceptics as traditions if not exaggerated versions. These people totally ignore the fact that the Hindus as a rule cared and still care more for their spiritual welfare than for their material well-being with the result that though they as a nation are materially degenerating day by day they are at all times looked up to by the other nations of the world for guidance in the domain of spirituality. Thus it will be seen

that their whole endeavour was solely directed in the attainment of the Namendu (Atman) rather in the enjoyment of the fleeting pleasures of the phenomenal world.

Sankara was one of such noble souls who renounced the unsatiating and evanescent pleasures of the world and straight way entered into the Kindom of God. The ideals set before the disciple for the attainment of this oneness are so noble and the logic so subtle that only a few can understand the theory and still few follow the ideal. Ordinary run of mankind are slow to grasp even the first principles and no wonder complain that the system is faulty and unscientific. Only to a very few is given the choice to seek the highest truth. No doubt every human being s trying to solve the problem of life but in his attempt at so doing he looks at things with a biassed mind and the result very often is a complete failure to realize the object in view. As the sun is not made defective by every defect in the eye the examplary life of Sankara and his invaluable teachings cannot be rendered ignoble by the wanton misrepresentations of those who are steeped in the mire of selfishness, who cannot rise above their surroundings and who regard woman and wealth as the summumbonum of all happiness such persons deserve to be called wifites and mammonites rather than Sivites Vaishnavites &c.

## THE VOICE OF ANANDA.

1. Do good and be good.
2. Heaven helps those who help them selves.
3. Fools live to eat, whereas the wise eat to live.
4. Think not of the morrow, let the morrow think of itself.
5. Who desires *Svarga*, let him sacrifice.
6. Who desires freedom, let him meditate on the Brahman.
7. He works best who works without any motive power.
8. Attachment to wordly things is productive of evil. The silk-worm is finally destroyed by the cocoon that itself weaves.
9. A wise man on earth is a man fallen among wild beasts.
10. Body is the boat by which we must cross the river of life. Forgiveness is the car by which it is to be propelled. Truth is the ballast that is to steady it. The practice of righteousness is the rope for dragging it along difficult waters and the wind to urge its sail onwards is charity.
11. Renounce gold and lust and religion will dawn of itself.
12. It is better and nobler if you can make yourself a eunuch for the Kingdom of God.
13. In the quiet of the mind, the higher thought asserts itself.
14. Polish a diamond and the brightness cometh of itself: in a similar way, make pure thy mind and God will shine there of his own accord.
15. The Kingdom of Heaven is within you.
16. He who knows the Supreme Being attains Supreme Bliss.
17. Arise, awake and stop not till the goa is reached.

## Manager's Notice.

In consequence of the departure from Madras of the Editor of the "YatharthaBhaskaran," the Manager is obliged to include the issues of March and April in one volume He assures to the subsribers that from the month of May forward, the Journal will be regularly published month after month. As the second year is drawing to a close by the end of June 1904, such of those gentlemen as are in arrears of subscriptions



and to whom reminders were sent last month, are kindly requested to pay in their subsriptions at their earliest convenience.

T. SIVAPATHA MUDALIAR,
1st April 1904. *Manager.*

## JAINISM

*(by A. S. Mudaliar.)*

JAINISM ia a faint form of protest against Brahmanism. It arose just before or just about the advent of Buddhism. Possibly, it must have come into existence long after Buddhism. It connot be gainsaid that its origin is lost in the mist of obscurity. Its internal evidence clearly shows that it has borrowed its feathers pretty much freely from both Brahmanism and Buddhism. It must be the net result of the contact between Brahmanism and Buddhism. I am not unaware of the existence of writers who plead so vehemently and with so much verbosity for the priority of Jainism to Buddhism, as though priority was a demonstration of the truth of a statement. There are ancient lies as there are modern truths. But why waste time over the specious reasonings and special pleadings of those who are blinded by prejudice and passion ? To proceed. The reputed founder of Jainism, Parsvanath, is said to have lived some two hundred years before Buddha. But this is not a settled point. About the founder's life there are not enough materials for us to dwell upon. But somewhere between the fifth and sixth centuries B. C a certain person, Vardhamana, known in the Buddhist books as Nataputta, but generally known and revered among the Jains as Mahavira, is for all purposes considered as the great founder of Jainism. His life reads in the general outline something like that of the Great Buddha. Strangely enough he was said to be the contemporary of Buddha. According to the Kalpa Sutra of the Jains (and they are said to have 45 sacred books called Agamas) Mahavira was a younger son of Siddhartha, a chieftain of Kundagrama, a village about Vesali. His mother, Trisala, was sister of Ketaka of Vesali. Mahavira lived in Magadha. He went up to Sravasti, and even to the Himalayas. And Mahavira was a Kshatriya. He becomes an ascetic at the age of twenty-eight: spends twelve years in self-mortification: comes out subsequently as a prophet : spends 30 years of his life in preaching, wandering, and organ ising orders of asceticism : and dies in the 72nd year of his life. This in short is the life of the founder of Jainism. With legends, with the ghosts of imagination, I have no concern. *Well, what is Jainism ?* In brief Jainism knows no personal creator but believes in 24 Jinas or those who have crossed " the troubled river of constant births or *transmigrations* to the Elysium of Nirvana" and hence the term Jains. Jainism belives in the existence and the indestructibility of soul or Atma. Jainism discards the Vedas and the gods of the Vedas in theory, but owns and pays them homage in practice. Jainism *knows no caste only* in theory but observes it in practice as rigorously as Brahmanism. Jainism belives in the transmigration of souls, in the karma spoken of in the Vedas. So put an end to the weary round of births and deaths, to attain Nirwana, the deliverance *of the* soul *into* a supreme state of blessedness, the extinction of the body. Jainism proposes Three Truths—which reminds one of *Buddhism—: Right Intuition*, Right Knowledge, Right Conduct. This is Jainism in outline. Let go the lies that commingle with it. There are two principal sects among the Jains : The Digambaras, the *sky-clad*, the naked—and the other the Svetambaras, clothed in white garments. And there is another division : the Yatis. those who belong to the *religious order*—and the *Sravakas*, those who are lay members of the order The Jains have their own stately temples made of marbles. In them we see images of *Mahavira's* feet. They have their own sacred spots such as Mt. Abu, in Rajaputana, Palitana, in Kathiawar, and Parsnath, in Bengal. The Jains have had been scattered all over India The Jains, especially of the south, contributed not a little to the riches of Tamil Literature. The Jains, some of whom are known as great grammarians, *sirco* graphers logicians, and poets. To conclude. the the mind of a Rationalist Jainism will

appear as nothing more nor nothing less than a clever piece of compromise between Brahmanism and Buddhism. Jainism is at best as Prof. Jacobi says, "merely a sum of opinions on various subject.' It is bereft of ideas of its own. And no juster estimate can be had of Mahavira than that which is furnished by Prof. Jacobi, that" he possessed not the genius which Buddha undoubtedly had;" he was at best a good preacher and a clever, organiser.

## The City of Rangoon.

### இரங்கோன் நகரம்.

யாம் எமது நண்பர் சிலரின் வேண்டுகோளை வேண்டி இற்றைக்குப் பதினைந்து நாட்களுக்கு முன் இங்ஙனம் அடைந்தனம். பலபந்து மித்திரர்களால் உபசரிக்கப் பெற்ருேம். இரங்கோன் நகரின் ஹானரரி மாஜிஸ்திரேட்டும் முனிசிபால் கமிஷனரும் நாலாய் களினேஜண்டுமான ஸ்ரீமான் ருயபகதூர் பெ. மா. மதுரைப்பிள்ளை யவர்களால் ஆதரிக்கப் பெற்றேம். மற்றும் பலபிரபுக்களினுடைய பெருநடப்பையு மடைந்தேம். இரங்கோன் நகரின் பலவேடிக்கை விநோதங்களைக் கண்டு களித்தேம். அடுத்த ஐந்துமயில் தூரத்திலுள்ள கம்பையென்றக்ஷேத்திரத்தில் ஸ்ரீமாங்கண்டி ராக்கட்கட்டி வெங்கிடசாமி நாயகரவர்கள் சென்றஞாயிற்றுக்கிழமை தாம்நூதனமாகப் பிரதிஷ்டைசெய்த விஷ்ணுவாலயத்தில் லக்ஷ்மிநாயகனுக்கு மண்டலாபிஷேகம் செய்து மகிழ்ந்தனர். யாமும் ஆண்டுச் சென்றிருந்தோம். போஜனமுடிந்தபின் பக்தியோகத்தைப்பற்றி உபந்யாசம் செய்தோம். ஆண்டுக்குழீயிருந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் உட்பட்ட பலரும் சந்தோஷித்தனர். செட்டிகள் தருமம் வியக்கற்பாலதே. இன்ஞான்ருே பலசிவாலயங்களையும் புதிப்பித்து வருகின்றனர். இவர்கள் அன்பின்றிறம் இருந்தவாறு! என்னே! என்னே!

இத்தேசத்தில் அளவிறந்த நந்தேசத்து மனிதர் வந்து ஜீவிக்கின்றனர் வர்த்தகமுறை மையிற் பொருள் தேடும் ஜனங்கட்கு அளவில்லை. நம்மனோர் பிறநாடு சென்று பொருளீட்டாவிடின் இவர்கள் கதிஎன்ஞம்.

இங்கே சிலர் ஜாதிவித்யாசம் கருதாமல் பர்மாதேசத்து ஸ்திரீகளை மணந்து செல்வவான்களாய் வாழ்ந்துவருகின்றனர். இருந்தாலும்இங்கும் ஜாதிவித்யாசங்கள் ஒழிந்தனவல்ல. நம்மவர் பெண்மக்கட்குத் தக்ககல்வியைக் கொடுத்தாலன்றி நம்ஜாதியார் மேன்மையடையார் அடையார்.

இன்னும்வரும்.
பத்திராதிபர்.

## The World its cause and effect.

### காரண காரிய வாதம்,

### (உலகம்)

உலகம் காரணமா? அன்றிக் காரியமா? காரணகாரியத்திற்கு இலட்சணமாவது நிரவயவங் காரணத்திற்கு இலட்சணமும்சடமாய் அவயவத்தோடுகூடியது காரியத்திற்கு இலட்சணமுமாம் இவற்றுள் உலகைக்காரண பதார்த்த மென்னலாமா? அன்றிக் காரிய பதார்த்த மென்னலாமா? காரண பதார்த்த மென்ருல், சடத்தன்மை யற்று அவயவ மென்னு முறுப் பின்றி நிகழவேண்டும். அங்ஙன மின்மை யால் உலகங் காரியமே. எதுபோலெனின், சடம்போலாம். அஃதெங்ஙனமெனின் அவயவமென்னு முறுப்போடு கூடியிருப்பது மன்றி முன்பின்னின்மைக்கு எதிர்மறையாயுமிருக்கின்றமையால், முன்னின்மைக் கெதிர்மறையாவது நிமித்த காரணமாகின்ற குலாலன் துணைக் காரணங்களாகின்ற தண்ட சக்கரங்களால் முதற் காரணமாகின்ற மண்ணைக்கடவடிவாக வனைவதற்குமுன் ஞான்றும், கடஅழிவுபாட்டிற்குப் பின் ஞான்றுமின்றென்பது துணிவு. கடமிருகாலத்துமின்மையாயினும் வனையப் பட்ட பின்ஞான்றும்அழிவுபாட்டிற்கு முன்ஞான்றும்இன்மைக் கெதிர்மறையென்னும் உண்மையாய்(உள்ளதாய்) இருக்கின்றமையால் காரியமாம்.

காரணம் நிரவயவமா யிருப்பதோடு காரியத்திற்குநியதமாய்முன்னிற்பதாம். நியதமென்பது இன்



றியமை யாமை. அவயவத்தொடு கூடிய கடமாகிற காரியம் முன்பின் னின்மைக் கெதிர்மறை யென்னு முண்மையாகஇடைக்காலத்துத் தோன்றினும் அக்கட மென்னுந் தோற்றத்திற்குச் சமவாயி (அஃதாவதுஉபாதான)காரணமாகின்ற மண்ணைத்தவிரக்கடம் உண்டெனப்படுமா? அன்றி யின்றெனப்படுமா? உண்டென்ருல் யாது உண்மையோ அது முன்பின்னிடையென்னு முக்காலத்தும்நிகழ வேண்டும்.கடமென்னுந் தோற்றமோவென்ருல் முன் பின்னில்லாதது. யாதுஇல்லாததோ அஃது எவ்வறெரு காலத்துள்ளதாயிருக்கும்?ஒருகாலத்தில்லாதது மற்றொரு காலத்துள்ள தாயிருக்குமென்ருல்,இல்லாமையாகின்ற மலடிமகனும், ஆகாயத்தாமரையும் ஓர் காலத்துண்மை யாயிருக்கக் கூடுமாஞல் முன் பின்னில்லாக்கடத் தோற்றமும்இடைக்காலத்திருக்கக் கூடும். அங்ஙன மின்மையானும் "இல்லது வாராது உள்ளதுபோகாது"என்னும் நியாயத்தானும் கடமாகிற காரியந்தோன்று மிடைக் காலத்துஞ் சமவாயி காரணமென்னும் மண்ணைத்தவி வின்றென்பதே துணிவாம்.

இலட்சியமாறு பவத்திற் கியையக் கடமில்லை யென எங்ஙனங் கூறலாமெனின்: இலட்சிய மென்பது பிரத்தி யட்சமாம். பிரத்தியட்சமென்பது இந்திரிய விஷய சம்பந்தத்தா லுண்டாகும்ஞானமாம். பிரத்தியட்சமென்பது மூன்றுவகைத்தாம். அம்மூன்றுவ தெவை யென்ருல், அவை யதார்த்தம், சந்தேகம்,விபரீதமாம். இம்மூன்றிற்கு முதாரணமுறையே இதுபழுதை(அஃதாவது கயிறு)என்பதும், பழுதையோ பாம்போ வென்பதும், பழுதையன்று பாம்பே யென்பதுவுமாம். இவைபோன்று கடவடிவம் பிரத்தியட்ச மென்ருல் யதார்த்த பிரத்தியட்சமா? சந்தேகப் பிரத்தியக்ஷமா? அன்றி விபரீத பிரத்தியட்சமா? எதார்த்த மென்பது பொருள் பொருளாகத் தோன்றலும் பொருளைப் பொருளாக அறிதலுமாம். அங்ஙனமே யெனின், கடவடிவம் அதன் சமவாயிகாரணமென்னு மண்ணை யன்றி யிருத்தல்வேண்டும் மண்ணையன்றி யின்மையால் கடம் அசத்தே. அசத்தாகின்ற கடத்தை யோர்முதலாக வுணருவதும் உணர்ந்த வாறு கடஞ்சத்தாகத் தோன்றுவதும் மருளெனப் படுமேயொழிய தெருளெனப்படாது. ஆகவே தனக்கெனக் கிஞ்சித்துஞ் சொரூபமில்லாத அசத்தென்னுங் கடஞ் சத்தாகத் தோன்றுவதும் அங்ஙனமே யுணருவதும் விபரீதப்பிரத்தியக்ஷமாம். விபரீதப்பிரத்தியக்ஷமாவது இல்லாதது உள்ளதாகத் தோன்றலும் இல்லாததை யுள்ளதாக வுணருதலுமாம். இதனையே ஆன்ருேர்கள் ஆரோபமென்றும் அத்தியாச மென்றுங் கற்பனையென்றுங் கூறுவர். ஆகையால் விபரீதப் பிரத்தியக்ஷத்தைக் கொண்டு பொருளுண்டென்பது மலடிக்குப் புத்திரனுண்டென்பது போலாம். மலடிபுத்திரனுண்டென்பது எவ்வளவு நியாய விரோதமோ அவ்வளவு நியாய விரோதமாம். அசத்தாகின்றகடத்தைச் சத்தெனக் கூறுவது தகாது. இதனுல் யதார்த்தப் பிரத்தியக்ஷத்திற்கே பொருள் சித்திக்குமெனவும் கடவடிவங்காரிய மெனவும், காரியமசத்தெனவும்,கடவடிவிற்கு முக்காலத்து முள்ள மண் சமவாயிகாரண மெனவும், ஷை காரணமே முக்காலத்து முள்ளசத்தெனவும் பெற்ரும்.

இதுபோல் அவயவ மென்னும் உறுப்போடு கூடியது உலகானமையால் உலகங் காரியமெனவும் அசத்தெனவும் பொருள்படுமென்க. இஃதெங்ஙனம் பொருந்தும்? உலகினின்றும் பற்பல பொருள்கள் காரியப்பட்டுப் பின்ஞான்று காரணமாவதைக் கண்டிருக்கின்ருேமே யன்றி உலகங் காரியப்படுவதை நாமேனும் நம்முன்னேரேனுங் கண்டதுமின்று கேட்டது மின்றென்ருல், உலகமென்னுஞ் சொல் அர்த்தச்சொல்லெனப்படுமா? அன்றி அனர்த்தச் சொல்லெனப்படுமா? அர்த்தச்சொல்லுக்கு உதாரணம் மலடியும், அனர்த்தச் சொல்லுக்கு உதாரணம் மலடி மைந்தனுமாம். உலகம் அர்த்தச் சொல்லென்ருல், அர்த்தம் (பொருள்) சுயம்பென்றும் விகாரமென்று மிருவகைத்தா யிருக்கின்றமையால் உலகம் சுயம்புப் பொருளெனப் படுமா? அன்றி விகாரப் பொருளெனப்படுமா? உற்பத்தி நாசமுடைமை விகாரமும், அவையின்மைச் சுயம்புமாம். உலகஞ் சுயம்புப் பொருளென்ருல், விகாரப் பொருள் எத்தன்மைத்தா யிருக்கின்றதென வினவப்படும்? அஃது ஒன்றன் கூட்டமாகவும் பலவின் ஈட்டமாகவும், திரிபின் ஆக்கமாகவு மிருக்கின்றதெனின், இவற்றிற்கு உதாரணமாவது ஓரினப்பொருள்கள் ஒன்ருேடொன்று சையோகித்து ஓர் முதற்போற்ருேன்றும் நெல்லம்பாரம் முதலியன ஒன்றன் கூட்டவிகாரமும், இரதகஜதுரகபதாதிகளாகின்ற பல இனப் பொருள்கள் ஒருங்கு

ற்று ஓர் முதல்போற் றோன்றும் சைன்னிய முதலியன பலவினீட்ட விகாரமும், ஓர்முதல்கெட்டு மற்றொன்றாகத் தோன்றும் (பாலின் விகாரமான) தயிர் முதலியன திரிதல் விகாரமுமாம். உலகம் இம்மூவித விகாரத்திற்கு முடன்படாதிருக்குமே யாகில் உலகைச் சயம்புப் பொருளென்னலாம். அங்ஙன மின்மையால்; உலகம் விகாரப் பொருளாம். அஃதெப்படியெனில், எதுஉலகு எது உலகென காரண காரியமுதலிய ஐந்து அபேதவாதத்தாலு மாராயுங்கால் அவ்வாராய்ச்சி வாயிலாக வெளிப்படுவது மண் முதலிய பஞ்சபூதங்களும் அவற்றின் காரியமாகிய அண்டபிண்டங்களுமன்றோ? இவற்றுள் எது உலகென்னுஞ் சொல்லை யேற்கும்பொருள்? அதுவு மததற்குரிய சிறப்புப் பெயரை யேற்றுக் கட, பட, பணி முதலியனவாக நிகழுகின்றதே யொழிய உலகென்னும் பெயரை யேற்கும் பொருள் எதுவுமல்லவாம். ஆகையால் உலகென்னும் பெயரை யேற்கக் கூடிய முதல் யாதெனப் படும்? கட படாதி முதலிய பல நாமரூபங்கள் ஒன்றோடொன்று சையோகித்த சையோகமே யுலகாமெனில்; இச்சையோகம் ஒன்றன் கூட்டச் சையோகமா? அன்றிப் பலவின் கூட்டச் சையோகமா? ஓரினப் பொருள்கள் ஒன்றோடொன்று சையோகித்துத் தோன்றுங் காட்சியன்றாகலின் ஒன்றன் கூட்டச் சையோக மன்று. கடம் பட மெனவும் படம் கடமெனவும் இவ் விரண்டும் பணி யெனவும் இவ்வாறேஒன்று மற்றொன் றெனப்படாத பல வினைப் பொருள்கள் ஒருங்குற்று ஓர்முதல் போற்றோன்றுங் காட்சியாதலின் சைன்னியம் போல் உலகம் பலவினீட்ட விகார மென்பதே திண்ணமாமென்க.

இவ்விகாரமோ முன் பின் னின்மைக் கெதிர்மறையாயிருக்கின்றமையால்காரியமாம். எங்ஙனமெனின்பல வினப் பொருள்கள் ஒருங்கு கூடுவதற்கு முன்னொன்றும் உலகமெனும் விகாரத்தோற்றமில்லை. அப்பலவின பொருள்களைத் தனித்தனி ஆராய்ச்சிகாரணமாகப் பிரித்த பின்னொன்றும் உலகமெனும்விகாரத் தோற்றமில்லை. ஆகையால் உலகம் யதாரிமும் அசத்துமாம்.

உலகமென்பது அசத்தானால் உலகம் தோற்றமிம்மையா யிருக்க வேண்டுமே? தோன்றுவதா லெங்ஙன மின்மை யெனலா மெனின், இங்ஙனங் கூறுவது ஆராய்ச்சி யற்றவர்களது கூற்றாம். எங்ஙனமெனின், தோற்றத்தால் பொருள் சித்திக்கும் பட்சத்தில் கயிற்றரவுதோற்ற முடைமையின் அவ்வரவிற்கும் பொருளிருக்க வேண்டும்? இன்மையால் தோற்றம் ஓர் முதலாகாது. உலகிற்குக் கயிற்றரவு திருட்டாந்த மெங்ஙனமொவ்வும்? கயிறு அரவாகத்தோன்ற வேண்டு மாகுல் முன்பு நாம் அரவையுங் கயிற்றையும் பார்த்தஅனுபவ வேண்டியதாமெனின், இச்சங்கை தருக்க வாசனையே அறியாதார் சங்கிக்குஞ் சங்கையாம். எப்படியெனின், பிரத்தியக்ஷஞானம் இருவகை. ஒன்று அபிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமும், மற்றொன்று பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமுமாம். இவற்றுள் இந்திரிய சம்பந்தத்தாலுண்டாகும் ஞானம் அபிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷ மென்னப்படும். 'இது கடம்' 'இதுபடம்' என்று நேத்திர சம்பந்தத்தாலுண்டாகும் கடத்தின்ஞானமும், படத்தின்ஞானமும் அபிஞ்ஞாரூபப்பிரத்தியக்ஷம். பிரத்தியக்ஷ ஞானத்தின் சாமக்கிரியையோடு கூடியசமஸ்காரஜந்திய ஞானம் பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமாம். (சாமக்கிரியை-சாதனம்) முன்பார்த்தகட படாதிகள் மீண்டு மெதிரில் காணப்படும்போது அந்தக்கடபடாதிகள் இவைதாமென்று உண்டாகும் அறிவு பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமாம். இவ்விடத்தில் முன்பார்த்த கடபடாதிகளின் ஞானத்தின்சமஸ்காரமும் கடபடாதிகளுடன் நேத்திரசம்பந்தமும் பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷத்திற்கு ஏதுக்களா யிருக்கின்றன. இதுபோல் கயிறுஅரவாகத்தோன்றுங்கால் கயிற்றை அரவாக உணருகிறநாம், 'இது அரவு' என்றுணர்ந்து பயகம்பனாதிகளை யடைகின்றோமா? அன்றி 'அந்தஅரவுதானிது' என் றுணருகின்றோமா? 'இது அரவு' என்றுணர்ந்துபயகம்பனாதிகளை யனுபவிக்கின்றமையால் அபிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமென்னப்படுமே யொழிய முந்திய ஞானத்தின் சமஸ்காரத்தினாலும்இந்திரிய சம்பந்தத்தினாலுமுண்டாகும் பிரத்திய பிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷமெனப்படாது. ஆகையால் கயிற்றையும் அரவையும் முன்பு பார்த்த பழக்கத்தால் கயிறு அரவாகத் தோன்றுகின்றதென்பது தருக்கவாசனைகிஞ்சித்தேனுமறியாதார் கூறும் மருள்வாக்கிய மென்பதோடு அலங்கார இலக்கணந் தெரியாதார் கூறுங் கூற்றாமா?

எப்படியென்றால் நீலோற்பலம்போல் கண்ணென்றால் நீலநிறம் வரையில் உவமானமே யன்றி மற்றப்படியல்லவே. இப்படியிருக்க நீலோற்பலந்தரிக்கப்படுகின்றதே அவ்வாறு கண் தரிக்கப்படுகின்றதாவென்றும், நீலோற்பலத்திற் வாசனையுங் காம்பும் இருக்கின்றனவே அவை கண்ணுக்கிருக்கின்றனவா வென்றுங் கேட்பது இலக்கணங் கற்றோர்க் கழகல்லவே! இதுபோல்கயிற்றரவு திருட்டாந்தம்ஏக்தவிசேஷத் திற்காகச் சொன்னதென்றால் தோற்றம்பொருளல்ல வென்பதுமட்டாம். ஆகையால்நாமே நமதிஷ்டம்போல் மனோசங்கற்பஞ் செய்து கொண்டு ஆக்ஷேபித்தல் கல்லாதார்க் கழகேனுங் கற்றோரென வெளிவந்தவர்க் கழகன்றாம். அன்றாகவே, உலகிற்குச் சமவாயி காரணமாகின்ற பல நாமரூபங்கள் சத்தென்பதும், உலகங் காரிய மென்பதும் பெறுதும். ஆயினும் யாது காரணமோ அது காரணமாகவே யிராது வேறொன்றனுக்குக் காரியப்பட்டு அசத்தாக முடிகின்றது. எங்ஙனமெனின், பல நாமரூபங்கள் உலகத் தோற்றத்திற்குக் காரணமாயினும் அவற்றுள் ஓர் நாமரூபத்தை யெடுத்துக் கருவியினாலேனுங் கருத்தினாலேனு மாராய்ச்சிசெய்யுழி அவை, காரணமெனப்படாது காரியமாய்முடிகின்றன. எதுகாரியமோ அஃதுஅசத்தென்பது நியமமாதலின், அவையசத்தாம். கடம்ஒரு முதலாயிருப்பினும் மண்ணின் காரியமாகையாலும் மண்ணையன்றி முக்காலத்து மின்மையினாலும் காரியமாயும்அசத்தாயுந் தேறுகின்றது. மண்காரணமாகவும் சத்தாகவு மிருக்கினும் அதனையும் ஆராயுங்கால் மகத் வடிவாயுள்ள மண் அணுக்களின் சையோகத்தையன்றி யின்றாம். எங்ஙனமெனின், இம்மகத்துருவங் கலையுங்கால் எத்துணை யெத்துணையாக வெனப்படும்? அணுத்துணை அணுத்துணையாக வெனின், அவ்வவ்வணுவு மெத்துணை யெத்துணை யெனப்படும்? சாளரத்தின் வழியுட்புகும் கதிரொளியிற்காணப்படும் நுட்பமானதுகள்பிரமாணமெனின், அத்துணைத்தான பலநுட்பஅணுக்கள்ஒன்றோடொன்று சையோகித்த சையோகமன்றோ மகத் பரிமாணமாகக் காணப்படுகின்றது. இங்ஙனங்காணப்படு மகத்துருவங்காரணமெனப்படுமா? அன்றிக் காரியமெனப்படுமோ? காரணமெனப்படுமெனின், இக்காரணம் ஷை அணுக்களின் சையோகத்திற்கு முன்னும், ஷை சையோகத்திற்குப் பின்னும் உண்டெனப் படுமா? அன்றி யின்றெனப் படுமா? இன்றெனப் படுமெனின், பின்னர் எஞ்ஞான்று உண்டெனப் படுகின்றது? இடைஞான்றெனின், முன் பின் னின்மைக் கெதிர்மறை காரியத்தின் இலக்ஷணமானமையால் மகத்துருவங் காரணமென வெங்ஙனங் கூறலாம். இது மாறுகொளக் கூறலென்னுங் குற்றமானதால் இம்மகத்துருவங்காரணமெனப்படாது ஷை அணுக்களே காரணமாயும் மகத்துருவங் காரியமாயும் ஷை அணுக்களைத்தவிர மகத்துருவம் முக்காலத்து மின்மையால் காரியமென்னு மகத்துருவம்அசத்தாயுங் காரணமாகிய அணுக்களோவெனின் முக்காலத்து முள்ள சத்பதார்த்தமாயுந் தேர்ந்தன.

உலகத் தோற்றத்தை நோக்கக் கடங் காரணமெனப்படினும் மண்ணை நோக்கக் கடங்காரிய மாயும், இம்மண்ணும் ஸ்தூல அணுக்களை நோக்கக் காரியமாயும் முடிகின்றது.

இங்ஙனம்,
அத்துவிதாநந்தம்.

---

## All are manifestations of God.

## சர்வமும் பிரமஸ்வரூபமே.

---

சில நூற்றாண்டுகளுக்கு முன் "இராமதாசர்" என்னுந் திருநாமம் பூண்டிருந்த வைஷ்ணவ பத்தர் ஒருவரிருந்தனர். அவருக்குக் கடவுளைத் தரிசிக்கவேண்டு மென்கிற ஆவல் மிகுதியு மிருந்தது. அவர் ஓர் நாள்பிராமண சந்தர்ப்பனை செய்து அடியார்களுடன் ஓர் சோலையில் தியானபரராயிருக்குஞ் சமயத்தில், அருகாமையில் பகவத்குணானு பவங்களைப் புற்றிப்பாடிக் கொண்டிருந்த ஓசையைச் செவியுறலும் அத்திசைநோக்கிச் சென்று ஆங்கு கானஞ்செய்துக் கொண்டிருந்த பரம பாகவதரான கபீர்தாசரைக் கண்ணுற்றனர். உடனே அவரடி பணிந்து அஞ்சலி யஸ்த்தராகி

யோகமார்க்கத்தினைக் கிரமப்படிக்குத் தமக்கு உபதேசிக்கும்படி வேண்டினர். கபீர்தாசர் அதற்கிசைந்து இராம தாசருக்கு அவ்யோகமார்க்கத்தின் நுட்பங்களை யெல்லாம் செவ்வனே போதித்தனர். சிலநாட்களின் பின்னர் இராமதாசர் கபீர்தாசரைத் தேடிச் சென்று தமக்குக் கடவுளைத்தரிசிக்கும் படி அதிவினய மாகவேண்டிக் கொண்டனர். அவர் வேண்டுகோளுக்கு இரங்கினவராய் ஓர் நாள்நியமித்து அன்று பிராமண சந்தர்ப்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கடவுள் வருகையை யெதிர் பார்த்திருக்கும் படி ஆக்யாபித்தனர். அவ்வண்ணமே செய்ததன்றி இராமதாசர் வசித்திருந்த பத்திராசலமென்னும் நகரமுழுமையும் அலங்காரஞ் செய்யப்பட்டது. இவ்வரியக் காக்ஷியைக் கண்டு பிறவிப் பெரும்பய னெய்துமாறு எங்கிருந்தும் சனங்கள் கூட்டங் கூட்டமாக அவ்விடம் வந்து சேர்ந்தனர். குறிப்பிட்டிருந்த மத்தியயாமம் வந்தெய்துதலும் யாவரும் இமைகொட்டாது சிந்தையும் மனதும் ஒருவழித்தாகி வெகு ஜாக்கிறதையாகயிருந்தனர். ஆயினும், ஒன்று, இரண்டு மூன்று மணியாகியும் கடவுள்வந்து தோன்றாமையால் பிராமணர்களுக்குப் பசிமேலிடலும் பெருங் கோஷ்டமுண்டானது. ஒருபக்கம் பிராமணர்கள் போஜன காலங்கடந்ததைப் பற்றி கடவுளைத்தூஷித்தனர். இராமதாசரும் கபீர்தாசர்தம்மை வஞ்சகம் செய்தனரோவென்று ஐயமுறுவாராயினர். இவ்வாறு குழப்பங்கொண்டிருந்த ஜனங்களது ஐயப்பாடு ஸ்திரமாகுஞ்சமயத்தில்உடம்பு முழுமையும்சேறால் மூடப்பட்டிருந்த ஓர் காட்டெருமை யானது திடீரென்றுவந்து அச்சோலைக்குள் நுழைந்துஅங்கு சந்தர்ப்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அன்னக்குவியல்களின்மேல் வீழ்ந்து புரண்டு அவைகளையெல்லாம் அசுத்தமாக்கினதன்றி உண்டிக்கு வைத்திருந்த பல கறி வகையராக்களையும் சின்ன பின்னமாக்கியது.

இதனைக் கண்ணுற்றிருந்த பிராமணர்களும் இராமதாசரும் கோபாவேசமுற்றவராகி அவ்வெருமையைச் சூழ்ந்துகொண்டு அதனை நையப் புடைத்ததன்றி அதன் திரேகத்தில் சூடும் போட்டு அதனைவிரட்டி விட்டனர். இராமதாசர் அடிசில்பாவும் அசுத்தமானமை யைக்கண்டு வேறு சமயல் செய்து பிராமண போஜனம் செய்வித்தனர். ஆயினும் விருந்து முன்னர் செய்திருந்தது போன்று அவ்வளவு சிறப்பாகவில்லாமைக்கும், தம்மைப் பசியால் வருத்தியதற்கும் இராமதாசரைப் பலவாறு தூஷித்துப்போயினர் பிராமணர். இதனால் இராமதாசரும் தாம்ஓர்பக்கிரியினால் மோசம்போனமைக்கு அவமான முற்றிருந்தனர். இஃது இவ்வாறாக எருமையானது கபீர்தாசரிடஞ் சென்றது. சேறலும் தாசரானவர் அதன்அலங்கோலத்தையும் அதன் தேகமாத்திரந்தமும் அடியுண்டு இரத்தமயமாயிருக்கும் நிலைமையைக் கண்ணுற்று வெகு பரிதாபத்துடன் என்னுயிருனும் எனக்கினியரே! இத்தகையதா நீரடைந்த மரியாதை என்றுஇரக்கமுற்று காயங்களுக்கு மருந்து போடஆரம்பித்தனர். "கடவுள்தான் எருமைரூபமாக இராமதாசனிடஞ் சென்றார். ஆனால் இராமதாசன் எனக்கு இவ்வளவுமரியாதை செய்தனன். ஆயினும் இராவணனுடைய யுத்தத்தில் இத்தேகம் பட்டசிரமத்திற்கு இது பெரிதல்லவாதலால் நீவருந்தாதே" என்று சொல்லிப் போயிற்று. நிற்க, அன்று மாலைப்போது இராமதாசர் வெகுகோபக்குறியுடன் கபீர்தாசரிடஞ்சென்றனர். கடவுள்வந்ததும் அவரடைந்த மரியாதையும் கபீர் தாசர்சொல்லக் கேட்டு தாம்வந்த கோபமாறி துக்க சாகரத்தி லாழ்ந்தனர் இராமதாசர். கருணையே திருமேனியாக வுடைய பரமபாகவத சிரோன்மணியாகிய கபீர்தாசர் இவரது அறியாமைக்கு இரக்கமுற்றவராகி பின்வருமாறு போதிப்பாராயினர். உலகின்கண்ணுள்ள சமஸ்த்தமும் பிரமஸ்வரூபமே. பக்தனானவன் கடவுளைக் கோயில்களில் மாத்திரம் காண்பதன்றி தான் கண்ணுறும் எல்லாவற்றிலும் காண வேண்டுவது அத்தியாவசியமாம்; இப்பூவுலகில் கடவுளுக்கு அன்னியமாக வேறொன்றுமின்மையால். இவ்வபிப்பிராயங்கொண்ட ஓர் சுருதி யஞ்ஞவல்கிய உபநிஷத்திலும் இருக்கின்றது. அதாவது. கடவுள் பிபிலிகமீருய வற்றிலுமிருக்கின்றனவென்று ஒவ்வொருவரும் அறிவதுடன் குதிரை, சண்டாளன், பசு, கழுதை முதலியவற்றையும், பூமியில்தறிபோல்வீழ்ந்து நமஸ்கரிக்கவேண்டும். இதனைமிகுந்த பயபக்தியுடன் சிரவணஞ் செய்த இராமதாசர் அன்றுமுதல் தமது குரு சந்நிதானத்தில் நிஷ்டை கூடியிருந்து பரமானந்தப் பிராப்தி அடைந்தனர்.



இதனால் நாமறிவது யாதெனில் சித்சடப் பிரபஞ்சங்களெல்லா வற்றையும் பிரமசுவரூபமாகவே பாவிக்க வேண்டும். அப்படி யின்றேல் நாமெடுத்த ஜன்மம் வீணாகுமென்பதில் ஐயமென்னை. "பார்த்தவிட மெல்லாம் பரமன் காணம்மானை பாராதே என்றென்றும் பாழ்பட்டேன்" என்று பெரியார் கூறுவதும் இங்கறியத்தக்கதாம். நாம் தினந்தோறும் பார்த்து வரும் ஆன்மகோடிக ளிடத்திலே நமக்கு அன்பில்லாவிடின், நாம் எப்போதும் பார்த்திராத கடவுள்மீது எங்ஙனம் அன்பு செலுத்தக் கூடும். பலமதக் கோட்பட்டு, வீண்விவாதஞ் செய்யும் சமயவான்கள் உண்மை யறியாது மதிமயங்கித் தத்தமையே குருவாக வெண்ணி பிறரை நிந்தித்துழல்பவர் எங்ஙனம் கடவுளைப் பூசித்தற் குறியவராவர். உலகின்கண் சகலரும் சகோதர ஒற்றுமை பூண்டு வாழ்வதற் கியையாது ஜாண்வயிறு வளர்க்கைக்குத் தம்மையே சிலாகித்தும் பிறரை வஞ்சித்தும் பெரியாரை நிந்தித்தும் வசைமொழி பேசியும் திரிபுமவர் பகட்டொழுக்க முடையவரே யாவரன்றி ஒருகாலும் கடவுள் மாட்டு அன்பு பூண்டவராகார். கடவுள் ஒவ்வொருவர் இருதயத்திலும் குடி கொண்டிருப் பதால், நம் பிறரை வஞ்சித்தலும், வசைமொழி பேசுதலும், கடவுளையே வஞ்சித்தலும், நிந்தித்தலுமாமென்று என் எண்ணவில்லை. அவ்வாறன்றிக் கடவுள் ஒருவரிருக்கிறாரென்ற நம்பிக்கை நமக்கு ஸ்திரமாக விருக்கும் பக்ஷத்தில், போதிப்ப தொன்றும், நடவடிக்கை அதற்கு மாறாகவு மிருப்பதற்கு இடனின்றே. ஆனதினால், சகோதரர்களே! நாம் கடைத் தேறுவதற்கான மார்க்க மொன்றுண்டு அதனைக் கடைப் பிடித்தொழுகுவோமாயின் பிறவியாகிய பெரியகடலை நீந்துவது சுலபமாம். அது "பிரமாதிஸ்தம் பரியந்தமுள்ளவையனைத்தையும் பிரமசுவ ரூபமாகப் பார்க்க வேண்டும் என்பதேயாம் "யானெனல் காணேன் பூரணநிறைவில்" என்றனர் தாயுமான சுவாமிகளும்.

M. S. MUDALIAR.

---

# SOBHAMANI.

## ஸ்ரீ
## சோபாமணி

கடலாடை சூழ்ந்த நிலமாமகட்கு வதனம்போல் விளங்கும் இந்துநாடாகிய இந்த நாட்டுக்கு மேல்பால் நெடுந்தூரத்திற் பன்னூறு யோசனை கடந்து பரஸேநம் எனுமொரு நாடுண்டு. கல்வி செல்வம் முதலியவற்றாற் குறைவின்றி நிறைந்த அந்நாட்டிற்குப் பல்வகையானுஞ் சிறப்புற்ற பரலீநம் என்பது தலைநகராயது. எந்நாட்டினுள்ளும் முன்னாட்டுந் தகைமை வாய்ந்த அந்நாட்டினை ஆட்சி செய்து வந்தவன் பிரதாபன் எனுமொரு தோன்றல். அவ்வேந்தன், ஸகஸேந நாட்டைப் படையெடுத்து வென்றபின், அதன்தலை நகராகிய தரசேநநகரத்துக் கைத்தொழிலாளிகளைப் பரஸேந நாட்டுப் பிரதானபுரியாகிய பரலீந நகரத்திற் குடியேறப் பலாத்கரித்தான். தம்நாடு நகரங்களையும், வீடுவாயில்களையும், உறவினர் நண்பினரையும் துறந்த இந்நிர்ப்பாக்ய ப்ராணிகள், தம்நாடொழிந்து பிறநாடடைந்தும், தம்மைச் சிறை கொண்ட வேந்தனது சிறிற்கும் செல்வத்திற்குமே உழைக்கக் கடமைப் பட்டனரே யன்றித் தமக்கென இன்பமேனும் இலாபமேனும் ஏதுங்கண்டாரில்லை. இவ்வடிமைத் தொழிலாளிகளுட் சோபாமணி என்றொரு பெண்மணியுண்டு. அவளுடைய இளமையும், ரூபலாவண்ய சௌந்தரியமும், அறிவும், அடக்கமும், அச்சம் முதலிய மற்றை நற்குணங்களும் கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவரத் தக்கவையாயிருந்தமையான் அவளிடத்து அனைவரும் அன்பும் ஆசையுமுடையராயினர், பெண்களுக்

கு 'மெல்லியல்' என்றபெயர் அவளுக்கே அமையும் எனலாம் கள்ளங்கவடற்ற உள்ளமுடையவள். 'வெளுத்ததெல்லாம் பால்கறுத்ததெல்லாம் நீர்' என்றெண்ணும் தன்மையள். அச்சிறுமி மெய்ம்மைக்கு அணிகலம். பொய்ம்மைக்குப் பெரும்பகை. பொறுமைக்கு உறைவிடம். புகழுக்கு நல்வாழ்வு. "அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்" என்னும் முதுமொழிக்கு இலக்கியமாய், பெற்றோரைத் தெய்வமெனப்பேணும் இயல்புடையள். பலசொல்லியென்? எல்லா நற்குணங்களும் அவளை யடைந்த நலமுற்றன என்பது பொருந்தும்.

இதுநிற்க. பிரதாபன், ஸகஸேந நாட்டிலுள்ள மகஸேநம் என்னும் பட்டணத்துக் கைத்தொழிற் சாலையைப் பார்க்கவந்த காலையில் அம்மாது தனது சொந்த யுக்திபுத்தியாற்செய்த சிலபுதுமையான வண்ண மட்கலங்களைக் கண்ணுற்றான். கண்ணுறலும், அவற்றின் அழகுக்கும் தொழிற் பாட்டுக்கும் வியப்புற்று, அப்பெண்ணை அந்நகரினின்று தன்னகர்க்குக் கொண்டு போகத் தீர்மானித்தான். ஆயினும், அவள் பரலீநம் போந்தநாள் தொட்டு முன்போல உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் யுக்தியோடும் வேலைகள்செய்திலள், ஆண்டுச்சீனமண்ணில் பல்வகைப் பண்ணமைந்த புதுக்கலங்களியற்றுவதும், அவற்றிற்கு வருணந் தீட்டுவதுமே அவளுக்கு அமைந்தபணி. அப்பணியை முன்போல அத்துணைச் செவ்விதாகச் செய்யத் திறமைதானில்லையோ, சிந்தைதானில்லையோ, யாதுகாரணத்தாலோ இயற்றிலள். அவள் அமைத்த உருக்கள் அந்தக் கேடாயும் இருந்தன அச்சித்திரத் தொழிற்சாலை விசாரணைத்தலைவன் தன்னால் இயன்றவரை அவளை உற்சாகமூட்டவும், ஊக்கமுண்டாக்கவும் புரிந்த பன்முயற்சியும் பயன்படாவாயின. அச்சிறுமியும், விசனமும் விசாரமும்உள்ள உள்ளத்தளாய், கடனீரைக் கையாலிறப்பார்போல நாண்முழுதும் ஏதேதோ எண்ணாதுமெண்ணி ஏக்கமுற்றிருப்பாள். அதுகண்டு, அவ்விசாரணைத் தலைவன் அப்பெண்பால் அன்பால் வேந்தன் மறுமுறை தொழிற் சாலையை நோக்கவருங்கால் அவளுடைய பிடிவாதத்தையும் சோம்பலையுங் குறித்து அவனுக்கு அறிக்கை செய்வதாக அவளை அச்சுறுத்தினன்.

இங்ஙனம் சிலநாள் செல்லாநிற்க, ஒரு நாட்காவலன் கைத்தொழிற் சாலையைக் காணவந்தான். அவன் கருத்தைத் தொழில் கொள்ளத் தக்ககாரியங்கள் பலவுளவேனும் பரலீநத்திற் சீனா மட்கலத்தொழிலைச் சீர்நிலைக்குக் கொணரச் சிந்தையிற் றீரா விருப்பங் கொண்டிருந்தமையான் அவன் அத்தொழிற் சாலையைத் தான் பன்முறை நேரிற் கண்ணாணியிட்டுப் பார்த்து வந்தான். அவன் தன்னொட்டு யூதரை ஒருங்குசேர்த்து அவர்களைக் கைத்தொழிலிற் பயிற்றவேண்டுமென ஒரு நகைக் கேதுவான எண்ணங்கொண்டான். அவர்களது கைத்தொழில் அவலக்ஷணமாயிருந்தமையின், அக்காட்சி காண்போர்க்கு விநோதமாய்த் தோன்றினும், அரசன் அதனைப் பொறுக்கலாற்றாது மனங்குன்றிக் குணமாறி, வந்தகாரிய முடிந்தஅக்கணமே தனது மாளிகைக் கேகி, அற்றைப்பகல் முற்றும் புறப்படா திருந்தான். அதற்கு முன்னாள், சீனாமட்கல வேலையிற் சில்திறஞ்செய்து பார்க்கக் கருதி, கௌந்தலஹாரன் என்பவனிடம் சில நாட்டங்கி, அதனைப்பற்றி விஜயவித்தன் என்பவன்பாற்பலசங்கதிகள் கற்றுணர்ந்த ஓராங்கிலயாத்திரிகன் பிரதாப ராஜனைக் கண்டிருந்தமையான் அம்மன்னன் யூதர் கைத்தொழிற்காட்சியை அற்றைக்காலை தன்னுடனிருந்து கண்டு களிக்குமாறு அவனை அழைத்திருந்தான். அங்ஙனமே ஆங்கிலனும் ஆண்டைச் சென்றிருந்தனன். தறேயத்தவர் பெருமை யொன்றனையே பெரிதுநாடிய ஆ



ங்கிலப் பிரயாணி பரஸேந நாட்டுச் சீனாத்தொழிற்சாலையிற் றன்னைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்த சில, சனவான்கட்குத் தன்னிடமுள்ள ஆங்கில வேலைப்பாடுகளைக் காண்பிக்கச் சென்றான்,

அக்குழாத்துட் சற்றேறத்தாழப் பதினேழாட்டைப் பருவத்தன் அஹஸ் கலாவான் என்பானொரு வாலிபன் இருந்தனன். அவன் புலந்தரநாட்டிற் பிறந்தவனாயினும் பரஸேந பாஷையிற் படித்துத் தேறினவன். அவ்விளைஞன் கற்றுத் தேர்ந்தது போதஸேந பட்டணத்து இராணுவபாடசாலையில். பிரதாபராஜன் அப்பிள்ளையை மகாமேதாவி யென நன்கு மதித்திருந்தனன். அச்சிறுவன் பிரதாப ராஜனுடைய சற்குணங்களையும் துர்க்குணங்களையும் உள்ளவாறு தெள்ளத் தெளியத் தெரிந்திருந்ததுமன்றி அவற்றைப் பிள்ளைமதியால் கள்ளங்கவடின்றிப் பல்லோரறியப் பகர்ந்தும் வந்தனன். அவன் அரசனைச் சுட்டி ஆங்கிலப் பிரயாணியோடு உரையாடி வருங்கால் "தன்னரசியற்றும் மன்னவன் குடிகட்குச் சௌக்கியமில்லை" என்றுரைத்து வந்தான்.

"தன்னரசியற்றும் மன்னவன்! அன்னவொரு மன்னவனைக் கொடுங்கோலான் எனக் கூற வொண்ணாதோ? 'கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங் காடுநன்றே' என்றுங் கூறினாரன்றே" என்று அஹஸ்கலாவானோடு ஆங்கிலன் சொல்லிக்கொண்டே பரலீந சீனாவேலைச்சாலைக்குள் நுழைந்தான். நுழைதலும், அதனைப்பார்த்து, 'இத்தொழிற் சாலை நன்னிலைக்கு வருமென்பதில் ஐயமில்லை. இதுகாறும் தரஸேந சீனா! தரஸேந சீனா!! என்றதெல்லாம் இனிச் சிலநாட்களிற் பரலீந சீனா! பரலீநசீனா!! என யாவரும் புகழ்ந்துகொண்டாடிப் புகலும்படியாகும். அன்றியும், இஃது உலகிற்குமிக்கபயன் செய்யத் தக்கதென்றே தோன்றுகின்றது. இதுநிற்க, இங்கேபார்! போரிற் பிடிபட்ட நிற்பாக்கியப் பிராணிகளின் முகத்தை நோக்கும்போதே உங்களரசன் சரிதம் நன்கு விளங்குகின்றதே!" என்று அவ்வாங்கிலன் அஹஸ்கலாவானோடு அதிரப்பேசினான்.

உள்ளவாறே அத்தொழிலாளிகளின் முகங்களில் மிக்க விசனமும் விசாரமுங் காணப்பட்டன. "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்-கடுத்தது காட்டு முகம்" என்பது பொய்யாமொழியன்றோ? அவ்வாங்கிலன் சோபாமணியைச் சுட்டிக் காட்டிப் பின்னுஞ் சொன்னதாவது. "துயரே வடிவெடுத்தது போற்றோன்றும், அப்பெண்பாவையைப் பார்த்தையா! விசாரணைத் தலைவன் அருகில் நிற்கும்போதும் எவ்வளவு வெறுப்போடு வேலை செய்கிறாள்பார். இப்படித்தான் உங்களடிமைகளெல்லாம் உறுதுயர் நசர்ந்துஉழைக்கின்றனர். எங்கள் ஆங்கிலக்கைத்தொழிலாளிகள் (நீ அவர்களைப்பார்த்தால் தெரியும்) வேலை செய்யும் விதமேவேறு. என்னெனில், அவர்கட்கு இவ்வித நிர்ப்பந்தமில்லை. எல்லாரும் சுதந்திரர்கள்."

இதனைச் செவியுற்ற கலாவான், "சுதந்திரான ஆடவரும் மகளிரும் பிணியுறுவ தில்லையோ? அல்லது ஆங்கிலராகிய நீங்கள் எப்பொழுதேனும் உடலம் நோயுற்றால், கொற்றவன்மேற் குற்றங் கூறுதல் இயல்போ? இப்பொழுது நீகாணும் இப்பெண்மணி ஏதோ உடல் நோயுற்றாளேயன்றி உள்ளநோயுற்றாளல்லள். அவளுக்குற்றநோய் இன்னதென விசாரணைத் தலைவனைக் கேட்டறிகின்றேன்" என்றான்.

பின்னர், கலாவான் விசாரணைத் தலைவனை நோக்கி, ஆங்கிலனறியா மொழியிற் பலவினவி, அவற்றிற்கு, அவன் விடுத்தவற்றை ஆங்கிலனுக்கு அறிவியாது மறைத்துவிட்டான்.

ஏனெனில்; அரசனுக்கு வசையாகும் செய்திகள் எதையும் பிறர்அறிவதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே, அவன்முன்னம் அவ்வாங்கிலனோடு உரையாடி வந்த சங்கதிகளைவிட்டு மற்றொன்றைத் தொட்டுப் பேசலுற்றான். பரீக்ஷார்த்தம் ஆங்கிலன் செய்யும் வேலைகளைப் பார்த்துக்கொண்டு மற்றவரெல்லாம் அங்குள்ள உலைக்களத்தைச் சூழ்ந்திருக்கையில் நம் கலாவான் சோபாமணி தொழில்செய்துகொண்டிருந்த கூடத்திற் புகுந்து, "பெண்ணே! உனக்கு உடம்பு என்னை? நீ இங்கு வந்த நாள்முதல் பார்த்து மகிழத்தக்க வேலையாதும் செய்திலை யென்று விசாரணைத்தலைவன் குறைகூறு கின்றான். ஆயினும், இவ்வழகிய வேலை (அவள்செய்து ஸகஸேனத்தினின்று கொணர்ந்துவைத்திருந்த ஒரு கிண்ணத்தைச்சுட்டி) நினது புத்திசாதுர்யத்தாற் செய்யப்பட்ட தன்றோ!" எனக் கேட்டனன். அதற்குஅவள் சொன்னது: "ஆம்ஐயா! யான் செய்ததே; இந்தப் பாழ்ங்கிண்ணந்தான் என் துயருக்கு மூலம். இதனை அரசன் பார்த்திரானாயின் அல்லது இதன்கண் அவன்விருப்பங்கொண்டானாயின்,டிரானாயின் யான் இப்பொழுது கவலையின்றி—" இதனைக் கூறிமுடிப்பதன்முன் அவளுக்குத்தனது வீட்டின் ஞாபகம்தோன்றி அதனால் பனங்கொள்ளாத் துயரத்தால் வாய் தடுமாறி வார்த்தை சொல்லவல்ல ளல்லளாய் மெய்மறந்து மயக்கமுற்றனள்—. உடனே அஹஸ்கலாவான், "நீஇப்பொழுது ஸகஸேநத்திலிருப்பாயன்றோ" என்றுகூறி, "ஸகஸேநத்தை மறந்தொழிவாய். நினக்கு இப்பரலீநத்தில் யாதுகுறை?" என்றான்.

அதற்கு அச்சிறுமி மிக்க வணக்கத்தோடு, "யான் ஸகஸேநத்தை மறந்தொழியேன்; யான்மிக்க பாசங்கொண்டுள்ள என்தாய் தந்தையரை எப்படிமறப்பேன்! எவ்வாறு துறப்பேன்! அவர்களோ முதிர்ந்தவயதும் தளர்ந்த நிலையுமுடையவர்கள், 'தந்தைதாய்ப்பேண்' என்னும் சத்தியவசனத்தைச் சிந்தையிற் கொண்ட யான் அதனை எங்ஙனஞ் சிதறவிடுவேன்! அவர்கள் என் கையைப் பார்த்துக் காலந்தள்ளுபவர். ஆகவே, எனது அன்பிற்குரிய எதனையும்—எனது ஆசைக்கு விஷயமான எவரையும் மறவேன். மறப்போமெனினும்என்னால் இயலவில்லையே," என்றுஉறுதியாக உத்தரங் கூறினாள்.

இன்னணம்அவள் சொன்னவுடனே, அயல்நின்றஒரு பரஸேநப்பணியாள், "ஐயா! இவளுக்குத் தரஸேநத்தில் ஒரு நண்பனுண்டு. அவனை மணஞ்செய்துகொள்ள நிற்குந்தருணத்தில் இவளை இவ்விடத்திற்குக் கொணர்ந்துவிட்டனர்" என்று மறைவாய் அஹஸ்கலாவானதுகாதிலோதினான். அதற்கு அவன் "அந்நண்பன் இவளோடு இங்குவாராமையென்னை?" எனவேலையாள், "அவன் பரலீநச்சிறைச்சாலையிலிருக்கின்றான். அவனைக் காட்டிவிடமாட்டீர் என நம்புகின்றேன்" என்றான்?

கலாவான்:— யான் எவரையும் காட்டிக்கொடுத்தது மில்லை; காட்டிக்கொடுப்பது மில்லை. இங்ஙனமாக, அபாக்கியரும் துணையற்றவருமான எளியரையோ காட்டிக் கொடுப்பேன் ஒருகாலும் அது செய்யேன். அஃதிருக்க; இவளுடைய துணைவன் ஏன் சிறை யிருக்கின்றான்.

பரஸேநன்:—இவள் இனி அவனைத் தனதாசைக்கிசைந்த அன்பனென்று சிந்தையிலுங் கருதலாகா தென்பது அரசனாணை. ப்ரபுசித்தம் கனசித்தமன்றோ! அன்றியும், இந்தஸகஸேநப் பெண்களெல்லாம் பரலீநம் போந்தநாள் தொடங்கிப் பரசேநமைந்தரையே மணக்கவேண்டுமென்ற கட்டுப்பாடுண்மையை நீங்கள் அறிவீர்களே. அவ்வாறே இச்சோபாமணி யென்னும்பெண்மணியும் ஒரு



பரஸேநனுக்குமணம் புகவேண்டுமென்று ஏற்பாடாகி யுளது. அவனோ, இவள் கலியாணத்திற் குடன்படாது இனிக்காலந் தாழ்ப்பளாயின் இவளது பிடிவாதத்தைப் பிரதாப ராஜனுக்கு அறிவிப்பதாக உறுதிகொண்டு நிற்கின்றான். போதாக்குறைக்கு வேலைச்சாலை விசாரணைத் தலைவனும் இவள்ஒழுங்காய் வேலை செய்வதில்லையென்று அரசன்பாற் குற்றங்கூற ஆயத்தனாகி யிருக்கின்றான் இந்நிலையில் இவள் இன்னும்இவ்வாறே இருப்பாளாயின் இவள்கதியாதாகுமோ! அது நீங்களே அறிவீர்கள். யாமும் இவளுக்கு இதனைப் பன்முறையெடுத்துரைத்தும் பயனொன்றுமில்லை இவளோ பித்துக்கொண்டவள் போலிருக்கின்றாள் எவ்வாராயினும் அரசனாணைக்கு அமைந்துநடத்தலே தகுதி; "வேந்தன்சீறினாந்துணையில்லை."

கலாவான்:—(மிகுந்தகோபத்தோடு) அடா பஞ்சை! நீ கொடுங்கோன் மன்னன் கீழ்த்தான் வாழற்குரியை. அரசனாணைக்குஅமைந்துநடத்தலே தகுதியென்கிறாய்-என்ன! அவனது கட்டளை காரணமற்றதும், நீதியற்றதும், தயையற்றது மாயிருக்க, அரசன் ஆணைக்குஅமைந்து நடத்தலாவது! துஷ்டா! என்னவார்த்தைசொன்னாய்!

இன்னும்வரும்.
கா. ஸ்ரீ. கோபாலாசாரியன்,

---

## எனது தந்தையார்.

### சுங்கக்காரர் வமிசம்.

கொங்கு நாடாதிய எண்ணிலா நாடுகள் கருணாடர் கைப்பட்டிருந்த காலத்திலே காளமாபுரி சிறந்து விளங்கிற்று. கருணாடரைச்சிறைப்படுத்திய மகமதியர் ஆளுகையிலே அதன் வெளிச்சம் மங்குவதாயிற்று. வரவர அதனைக் கவனிப்பதையும்ஒழித்தார்கள். காளமாபுரி வட்டத்தையேஅவர்கள்நீத்தார்கள். அவ்வூரை முக்கிய மானதாகக் கொண்டார்கள் அல்லர்; மேலும் அவர்களுக்கு அங்குமிங்கும்போய்ச் சண்டை சச்சரவிட்டுக் கொள்ளையடித்துக் கொலைபுரிவதற்கே காலம்போதாமல் இருந்தது. ஆகையால்காளமாபுரியில் வாழ்ந்தவர்கள்எல்லோரும் சுல்தான் கொடுமைகளுக்கு அஞ்சி ஓடி ஒளித்தார்கள். ஊர்ப்பெரியதனக்கவுண்டன் வமிசத்தவர்களும்ஊரைவிட்டு அகலவே கம்மவார் நாய்க்கர்கள்முன்னிலும் அதிகமாகக் குடிபுகுந்தார்கள். என்றாலும்பிரபலமானார்கள் கருணாடர் அரசர்களாற் பெருமை மலிந்த சுங்கக்காரர் வமிசத்தார்கள் மட்டும்காளமா புரியைவிட்டுப்பிரியாது பட்டணம்சீரும் சிறப்போடு இருந்துழிச் சீர்சிறப்புற்றும் கலவரப்பட்டுழி மனங்கலங்கியும் ஊர்மத்தியில் விளங்கும் ஸ்ரீசத்தரிஷி லிங்கர்கோவிலுக் கடுத்தாற்போல்வாழ்ந்தார்கள். ஊருக்குப்புரி என்னும்பட்டம்பிபோய்ப்பட்டியெனமாறிற்று. இங்கிலீஷ்க்காரர்கள் ஆளுகையிலும் அவ்வாறே அழைக்கப்படுகின்றது. நீண்டுவளர்ந்து பூனைக்கண்ணோடு விளங்கும் செந்நிறமேனியர் ஒருவர்நெற்றியில் விபூதிப்பூச்சுக்குமேல் சந்தனத் திலகமிட்டு உருமாலைகொண்ட தலையராய்க்காளப்பட்டியின் ஊர்மந்தையில்ஒருகாலைஒருபனைப்போழ்தில் உலாவிக் கொண்டிருந்தார். இவருடன்ஒருசிறுவன்சிறுமூட்டைகையில் வைத்திருந்தான். இவரிடம்மற்றொருவர் 'ஓடிவந்துஐயா, அருணசலம்பிள்ளையவர்களே! என்மகளுக்கு வயற்றுவலிமருந்துகொடுக்கவேண்டும்' என்றவரைவைத்தியர்நமஸ்கரித்து 'ஐயரே!இந்தாரும்மருந்துகொண்டுபோய்ஜலத்தில்,உரைத்துக்கொடும்உடனே வயற்றுவலி ஓடிப்போகும்" என்று ஒருசிறு குளிகையைக்கொடுத்துப் போகச்சொல்லினர். வேறொருவன்வந்து "ஐயா! என்வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது; சாதகம் கணிக்கத்தயவு பண்ணுங்கோ' என்றவனுடன் கூடவேபோய்ச் சாதகம் எழுதித்தந்து, தாம்பூலம் பெற்றுத் திரும்புகிறவர் அவ்வீட்டானைப்பார்த்து "நாய்க்கரே! குழந்தை இன்றைக்கு மூன்றாவது வருஷம் இந்தநாளில்பரமபதம் அடையும்' என்னமொழிந்து வருகிறவரை, அயலானொருவன் எதிர்த்துப் 'பெரியவரே தமதுவீட்டில்போய்த்தேடிக்காணாமல் அலைந்துவருகிறேன். என்தமக்கைக்குஊரில் குழந்தைபிறந்ததாய் ஓலைபெற்றேன்குழந்தையும்தாயும்சுகமா?' எனவினவியவனுக்கு "அடே உடனேபோ தாமதியாதே. அவள்குழந்தை

யைத் தொட்டிலில் தாலாட்டவிட்டுப் பரலோகம் போய்விடுவாள்' எனவிடை பகர்ந்துஅடியெடுத்து வைத்ததும், இன்னும் ஒருவன் சந்தித்து "சாமி ஐயா; என் அப்பனுக்குசுர சந்நிபிறந்து சிலேத்துமம்கழுத்தில் கர்கர்என்றுஅடைகின்றது. பெரியமனசுபண்ணிவரவேண்டும்; மாத்திரை இழைத்துத்தரவேண்டும்" என்றவன்மனதையாற்றும் பேரெண்ணத்தவராய் அருணாசலம் பிள்ளை வேகமாய்ச் சென்று சுரசத்தில் மாத்திரை இழைத்துக்கொடுத்துப்பேசவைத்தார். குடும்பத்தார்களுக்கு வேண்டியவற்றைப் பிணியாளி சொல்லிவரும்போது ஜனங்கள் சவுக்கிய மானதாக எண்ணுவதை அறிந்தவர் தாம்பூலம்பெற்று எழுந்து வருகிறபோது தம்மைத்தொடர்பவனுடன்' இவன் மாத்திரை வீரியத்தால் பேசுகிறான். இன்னும் மூன்றேமுக்கால் நாழிகையில் உயிர்விடுவான். அதற்குவேண்டியவைகளை ஜாக்கிறதையாய்ச் செய்யச்சொல்' எனக்கூறித் தமது வீடணுகினர். வீட்டினுள் நுழையும்போது காததூரமுள்ளவர்களின் காதடைக்கும் படியாய் உரத்தசப்தத்துடன் கம்பராமாயணத்தை வியாசபீடத்தின் மீதிருத்தி

"சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்கும் கீர்தியான்."

என்றுமுடியும்பாடலைப்படித்துக்கொண்டிருந்தவரை அருணாசலம் பார்த்து 'தம்பி, மகாமுனி! நீஎன்னடா கம்பன்பாட்டைப்படிக்கிறாய். அதுவம்பன்றோ. அவன் பாட்டெல்லாம் மறைபொருள் அடங்கியவை. அவைகளில்தலையை யிட்டுப்பாடுபடுவானேன். அவனோ நமது நாட்டைப்பழித்தவன். நமது நாட்டிற்கு எப்பொழுதோவந்து யாரோஒருவனைப்பார்க்க அவன் சன்மானம் செய்யாததற்கு நாட்டையே தூஷித்துச் சென்றானே. அவன்என்னகவி? 'நீரெல்லாஞ்சேற்று நாற்றங்கலமெலாங் கல்லு முள்ளும்—ஊரெலாம் பட்டிதொட்டி யுண்பதோ கம்பஞ் சோறு—பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும் பேயும்—காருலாங் கொங்கு நாட்டைக் கனவினு நினைக்கொணாதே' என்றகம்பன் இவன் அல்லவா? இவன்பலிசு கம்பங்காடு காத்ததை யார் அறியார். இதைப்பாடியதால்அல்லவா நமது ஊரும் பாட்டன்காலத்தில் பிரபலமாய் இருந்தது நமதுநாளில் பட்டியெனத் திரிந்தது. அந்தக் கவிபாட்டைப் படிக்கிறாயே, பாரதம்படி பாகவதம்படி படிக்க வாய்மணக்கும். சிந்திக்கசிந்தைமணக்கும்' என்றார். இதற்குவிடையாக மகாமுனி "அண்ணா! இதென்ன சிறுமைக்கேடு. கம்பன்பாட்டுப் பிரசங்கத்திற்குக் கிராக்கிஅதிகம். அங்குமிங்கும் தாம்பூலம்வைத்தும் ன்றும் அழைக்கிறார்கள். மேலும் புலவர்தொழில்என்ன? கொடுத்தவனைப் புகழ்வதும் கொடாதவனை இகழ்வதுந்தானே இதைத்தாமஅறியீரோ? இவ்விதம் செலவு கொடுக்கிறீர்களே பாண்டியனும் புலவர்களைக்குறித்துப் 'போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடிற்—றூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை —மாற்றினு மாற்றுவர் வன்கணாளர்கள் - கூற்றினும் பாவலர் கொடிய ராவரே" எனக் கூறியதில்லையா? ஓரிடம் அவன் கொங்கை எளனமாகக் கூறினனே யாயினும் மற்றோரிடத்தில் விசேடித்துக் கூறிய தில்லையா?' என்றனர். அண்ணன் செவியாரக் கேட்டுஉடம்பு குலுங்க நகைத்துத் "தம்பி! செட்டிசெட்டி நீ யேசமர்த்தன். புலவன் என்றபோதும் அதற்கேற்றபடி எல்லாம் வந்து அமைகின்றன. கவியெனப் பேர் மாத்திரம் வாங்காதே' நீ இசை மட்டும் பாடு, வசை எவர் மீதும் பாடாதே; அதை மட்டும் உயிர் போமளவும் ஒழி" என்றனர். சிந்தித்துத் தம்பி "அண்ணா! தாங்கள் அப்படி எண்ணாதீர்கள். நான் கனவிலும் வசைபாடக் கருதேன். வசைபாடவும் இலக்கணமுண்டு. அவ்விலக்கணம் எனக்கேன் பயன்படும்? நமக்கென்ன சொத்தில்லையா? தாங்கள் இல்லையா தமையனார் என்னைக் காப்பதற்கு? இன்னும் துணைவர்கள் இருவர் இருக்கிறார்களே, இவ்வாறு என்சொல்லுகிறீர்கள்? இருக்கட்டும்; நம்ம ஊர் நய்ர்க்கன் வீட்டிற்கு யாரோ ஒருபுலவன் வந்திருப்பதாய் அறிகிறேன் எனக்கூறிப்பல்லைக்கரக்ரவென்று கடித்தார். அண்ணன் உடனே 'இதன்னடா அதிசயம். அவரென்ன யானையா? சிங்கமா? நானும்காலையிற் பார்த்தேன், இன்றைக்கு அவர் நாய்க்கர் மீது ஓர் பாமாலை பாடியிருப்பதை அரங்கேற்றுகிறார் கம்பன் இராமாயணமும் அவருக்குத்தெரியும்" என்றனர். கேட்ட மகாமுனி பிள்ளைக்குக் கண் சிவந்தது, முன்னிலும் அதிகமாகபற்கரித்தார், உதட்டைக்கடித்தார். மூக்குநுனிமேல் விரல் வைத்து "அண்ணா! இதென்ன? என்னைப் பாராமலே அந்தப்பயல் பாமாலையை இங்கே அரங்கேற்றுகிறானா! அவனை அவமானப்படுத்தியே தீர்க்கிறேன்" என்று உரத்துக்கூறும் போது, நாய்க்கர் தம்பி வந்து மகாமுனிபி



ள்ளையை அரங்கேற்றத்திற்கு வருந்தியழைத்தனன். மகாமுனி பிள்ளையுங்குறித்த நேரத்திற்குப் போயினர். நாய்க்கர் விசுப்பலகை மீது வீற்றிருந்தவர் எழுந்து உபசரித்து அருகில் இருத்திக் கொண்டனர். அரங்கேற்றும் புலவர் இவரைக் கவனிக்கவில்லை. காரம் மனதில் பிள்ளைக்கு ஓங்கியது. அரங்கேற்றுவோர் பீடத்தில் கம்பீரமாய் இருந்து கையேட்டுக் காரன்பாடல் படிக்க ஆதிமுதல் அர்த்தம் சொல்லி முடித்தார். கவியைப் புலவர் நாயக்கர் கரத்திலேற்று விக்கும்போது, மகாமுனி பிள்ளை புதுப்புலவரைப் பார்த்து "ஐயா புலவர்திலகரே. நன்றாய்த்திருவாய் மலர-ளி-னீர். கெட்டிக்காரர். முன்னோர் பாடல்களை வெகு ஒய்யாரமாய் எடுத்துத் தலையுந்திருகாமல் பெயரை மட்டும் மாற்றிப் பாடிவிட்டீரே, என்னையா சமர்த்து?" என்றனர். இச்சப்தம் காதிலேறிய உடனே புலவருக்குக் கோபம் பொங்கியது. 'அடே! இந்தப் பாடல்கள் முன்னோருடையவையா? நான் பாடியவையல்லவா? பொய் என்சொல்லுகிறாய்? இவைபழையவையாய் இருந்தால் நான் காதையறுத்துக் கொள்ளுகிறேன். இவை பழையபாடல்என்கிறாயே, கொண்டுவா. பார்ப்போம்" எனத் தாறுமாறாய் ஏக வசனம் பிரயோகித்தார். மகாமுனி பிள்ளையும் சாமானியரா. கடலோதையும், சங்கநாதமும் இவர் வார்த்தைக்குப் பின்னிட்டோட வேண்டாமா. மகாமுனி ஐயா! நீர் தட்டிப் பேச ஆள் இல்லையென நினைத்தீர் போலும்! காதறுப்ப தொங்கனம்?" குட்டுதற்கே பிள்ளைப் பாண்டியனிங் கில்லைக் குறும்பியளவாக்காதைக் குடைந்து தோண்டி எட்டின மட்டறுப்பதற் கோவில்லியில்லை—இரண்டொன்றா முடிந்து தலையிறங்கப் போட்டு வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தன் இல்லை" என நினைத்துக்காளப்பட்டியில் பெயர்மாற்றின பாட்டுப் பாட வந்தீரோ? உமது கெட்டிக்காரத்தனம் வெளிப்பட்டது. சட்டும் சபையை, நான் உமது பாடலைப் பழைய பாடல்என்று உறுதிப் படுத்தினால் நீர்கட்குட மெடுத்துப் போகிறீரா?" என்றதற்குப் புதுப் புலவர் சம்மதித்தார். மகாமுனிபிள்ளை புலவர் பாடிய பாடல் அனைத்தையும் சாங்கோபாங்கமாய் ஒப்பித்தனர். மன்னன்செய்திருந்த பாடல்களைக் கேட்டதும் புலவர்கட்குடம் தலைமீதேற்று ஊரை விட்டுப் பொழுதே அகன்றார். மகாமுனி பிள்ளை வாகைபுனைந்து அகம்போனவர் அண்ணாவிடம்நடந்ததை எல்லாம்சொல்லினர். இதைக்கேள்வியுற்றஅண்ணன் "தம்பி! உன்னுடைய ஞாபக சக்தியைஅவரிடத்தில்தானாகாட்டவேண்டும். ஏதே யாசகத்திற்கு வந்தவன்தலையில் கட்குடம் சுமர்த்தலாமா" என்றனர். இதற்கு "அண்ணா! அவன் வீராப்பென்ன! வீம்பென்ன! என்னை மதிக்கவேயில்லை. அவன்வெண்பாமலை பாடிவந்தான். 'வெண்பாவிருகாலிற் கல்லானை' என்னவான்? அவன் சொல்லிவந்ததைக் கேட்டு உடனே திருப்பிச்சொன்னேன்" என வீரம்பேசினர். இச்சம்பவங்கேட்டு மனம்நொந்த தமையனாரிடம் ஒருபெண்வந்து "அண்ணா அடுத்தவீட்டுக்காரர் பெண்ஒருத்தி கழுத்தில் சிந்தாக்கிட்டு விளையாட வந்திருக்கிறாள் என்சிந்தாக்கைஎடுத்து தாருங்கோ' என்றவளைக் கூட்டிக்கொண்டு வீட்டினுள்ளே போய் பெட்டியைத் திறந்து நகையை எடுத்துக் கழுத்திலணிந்து 'மகளே! பெருந்திருவாம்பிகை சரி போ விளையாடு" என்றனர். இதற்குள் மற்றொருத்தி வந்து "அண்ணா! நான்சாதம் வடித்தேன்' பானையை அண்ணிவந்து இறக்கிவைத்தாள். சாதம் கெட்டுப் போயிருக்கும். அப்படிஇருந்தால் வீணாய் என்னைக்கேட்கக்கூடாது" என்ற தங்கையைப் பார்த்துச் சிரித்தார். மற்றொருவன் ஓடிவந்து கும்பிட்டு "ஐயா! தங்கள் தம்பி வெங்கடாசலம் பிள்ளை ஒருபெண்பிள்ளையைத் தூக்கினார். அவள் சுற்றத்தார்கண்டு துரத்தி யடிக்கவந்தார்கள். அவர் அவளை கட்டகத்தில் வைத்துத்துப்பட்டியால் மூடிக்கொண்டு வலதுகையால் அருகிலிருந்த பாச்சாமரத்தை இழுத்துவேரோடுங் கிளையோடும் பிடுங்கித் தூக்கிக்கொண்டு அடிக்க ஓடிவந்தவரைக்கண்டு அஞ்சி அவர்கள் போய்வீட்டி னுள்ளே கதவுதாழ்ப்பாளிட்டு ஒளித்துக் கொண்டார்கள்" என்று சொன்னான். இதைக்கேட்டு அண்ணன் 'விபசாரத்தைத் தம்பி இன்னும் ஒழிக்காதிருக்கிறானே. அதுகொடிதல்லவா தன்தாரம் இருக்கும்போது வேறொருத்தியைப்பார்ப்பதுபாவமல்லவா? இதையவன்அறியவில்லையே' எனத்துக்கித்தார் இதற்குள்வேறொருவர் ஒருத்தி தலையில் எழுஎட்டு வள்ளக் (சென்னைஇரண்டுபடி) கட்டித் தயிர்ப்பானையைப் பெரிய கூடையில் வைத்துக்கூட்டிவந்து "அண்ணா நல்லதயிர். ஒருகூடைநிறைய வந்திருக்கிறது. நான்ஒருத்தனுக்குப் பேதிக்கு மருந்துகொடுத்தேன். அவனுக்கு வாந்தி விடாமலாயிற்று. காய்ச்சல் உடனே நின்றது. அ

திலே யவனுக்குச் சந்தோஷ மூண்டது. பணம் கொடுத்ததை வேண்டாமென்றதற்கு இந்தத்தயிர்க்கூடையை யனுப்பினன். அங்கேயே எனக்கு ஒருவள்ளத் தயிருக்கு வெல்லச்சருக்கரை போட்டுக்கொடுத்ததைக் குடித்தேன்" என்றவரது முகத்தை ஏறிட்டுப்பார்த்து "லிங்கண்ணு! எனக்குக்கடைசித் தம்பியாகப்பிறந்தாயே! நீபேதிக்குக் கொடுத்த மருந்து வாந்தியாயிற்றே கெட்டிக்காரன் உன்னுடைய மாத்திரை அவனுக்கு வைகுந்த மாத்திரையாக வில்லையே' என்றிவ்வாறு குடும்பத்தார்களுடன் பேசிக்கொண்டிருந்த போது தொட்டிலில் கண்ணுறங்கும் குழந்தையை எடுத்து [illegible] ஆட்டித் தாலாட்டினர். மனைவியாருடன் [illegible] எத்தனை தொல்லைகள்! [illegible],,மனஞ்சலியார் அத்தோர்மீது [illegible] இவ்வாறிருந்துழி ஒருநாட்காலை எங்கேயோ போற அருணாசலம்பிள்ளை இரண்டு பிள்ளைகள் ஓலையொன்றைக் கொண்டுவந்து பிரித்து எறிந்து விளையாடிக் கொண்டிருந்தன அதைக்கண்டவர் "அடே வேதமுனி! இதுராமாயணமல்லவா' என்றதற்குள் மற்றொருபையன் ஓடிவந்துகூடியதும் "சந்திர சேகரம்! உங்கள்இருவருக்கும் இந்த ஏடுவிளையாட உபயோகமாயிற்று? இதோ சக்கிரமாதிரி கட்டிக்கொடுக்கிறேன். விளையாடுகிறேன், என்றுக் கூறிச் சக்கரமாகக்கட்டிக்கொடுத்தார் காற்றில்விட்டார் காற்றாடிகட்டிக்கொடுத்தார். விளையாடிப்போனர். பிள்ளைகள் விலையுயர்ந்தபுத்தகத்தைக் கிழித்துவிளையாடியதற்குஞ்சினந்தார் இல்லை என்றால் இவரது பொறைக்குப்புவியோ இணையாகும்?

கா. ச. துரைசாமி.

---

## NEWS AND NOTES,

### மானேஜர்அறிக்கை

இப்போது பலசினேகரின் அபிப்பிராயத்தை முன்னிட்டு பர்மாவிலே ஹிந்துமதபோதனை செய்யும்பொருட்டு நமது பத்திராதிபரவர்கள் இரங்கோன் சென்றிருக்கின்றனர். அவர்வருகிற வரைக்கும் அவருக்கு அனுப்பவேண்டி யிருக்கும் புத்தகங்கள் பத்திரிகைகள் முதலிய வைகளை இந்த ஆபிசுக்கே அனுப்பி வைக்கும்படி கோருகிறோம். விஷய தானம் செய்வோரும் விஷய மடங்கிய கடிதங்களை யனுப்பிவர எமக்கே வேண்டுமாய் வுபிரார்த்திக்கின்றோம் இன்னும் சந்தாசெலுத்தாத கனவான்களை உடனேசெலுத்தும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

த. சிவபாதமுதலியார்.
மானேஜர்.

---

### மங்கபட்டணம் ரெயில்வே விபத்துசம்பந்தமானவழக்கு.

இந்தவழக்கு சென்னை உயர்தரக் கோர்ட்டில் வெகுநாளாய் விசாரிக்கப்பட்டு சென்ற 24 தேதியன்று தான் முடிவுபெற்றது. ஜஸ்டிஸ்மூர் துரையவர்கள் இவ்விபத்து ரெயில்வே அதிகாரிகள் செய்யவேண்டிய ஏற்பாடுகளின் குறைவால் உண்டானதாக அபிப்பிராயம் கொண்டவரானார். மாரிகாலத்தில் ஆங்காங்குள்ள ஏரிகளும்,நதிகளும்வெள்ளப் பெருக்கடைவது இயல்பாதலாலும் இவ்வுண்மை யாவருக்கும் தெரிந்ததாதலாலும் ரெயிலவேமார்க்கத்திலுள்ள வாராவதிகளைக் காக்கும் வண்ணம் தகுந்த ஆட்களை வேண்டிய இடத்தில்வைப்பது அவசியம் என்றும்; இவ்விபத்து நடந்த இடத்தில் அப்படிப்பட்ட ஒருஆளை வைத்திருக்கும்பட்சத்தில் அவன் வெள்ளப் பெருக்கைப்பற்றிமுன்னதாக அறிக்கையிட்டு இந்தவிபத்தைத் தடுத்திருப்பானென்றும் அவர்எண்ணுகிறார் இவ்விபத்து நடந்த சிலநாட்கு முந்திதான் இங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு ஆறுரூபாய்ச் சம்பளக் காரனை ரெயில்வேயார் தள்ளிவிட்ட தாகக் கேள்வி. பரிதாபம் மாதம் மாதம் ஆறுரூபாயை மிகுதியாகச் செய்ய எண்ணி, இப்போது முப்பத்து மூன்றாயிரம் ரூபாயை ஒரே தடவையாய் கொட்டிக் கொடுக்கவேண்டியவர்களானார்கள்.

---



### ரேவரண்டு டாக்டர் மில்லர் துரையவர்களுக்கு கோடுத்த வந்தனோபசாரம்.

தென்னிந்தியச் சிறுவர்களின் கல்வியின் அபிவிருத்தியின் பொருட்டு தன்வாழ் நாள் முழுவதையும் கழித்துதற்போது மூப்பின் கொடுமையால் தன்சுய தேசம் செல்லும் இச்சீமானுக்கு சென்ற 26உ யன்று கிறிஸ்துலக்கலா சாலைக் கமிட்டியார் ஓர் வந்தனோபசாரம் தந்தார்கள். எழும்பூரை யடுத்த பூவிருந்தமல்லி ரோட்டில் "வெஸ்லோர்கு மந்திரம்" என்று வழங்கும் கிரகத்தில் இது அதிகவிமரிசையாக நடந்தேறியது, இச்சாலை முழுவதும் அன்றிரவு சீனு விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அக்காலத்தில் மில்லர் துரையார்களிடம் கல்வி கற்ற அனேக மாணாக்கர்களும், அவருடைய சினேகிதர்கள் அனேகரும் விஜயஞ்செய்தார்கள். டாக்டர் மில்லர் துரையவர்கள் இவ்வந்தனோபசாரத்தை களிப்புடன் பெற்று தனக்கு பலமும் தேக சௌக்கியமும் கடவுள் அனுக்கிரகிக்கும் விஷயத்தில் தான் மறபடியும் இந்தியாவுக்குத் திரும்ப மனமுண்டென்றும் அல்லாது பலபெறுவது நிட்சயமல்ல வென்றும் கூறினர்.

---

### சென்னைப் போதுஜனத்தோட்ட வேடிக்கை.

எவ்வளவோ கஷ்டத்துடன் கமிட்டியார் இவ்வருஷம் இந்த வேடிக்கையை வழக்கம்போல் நடத்த உத்தரவு பெற்றார்கள். சென்ற டிசம்பர்மீத்திறுதியில் மழை யிந்த வேடிக்கைக்கு சனீஸ்வரனாய் நேரிட்டதாக அதைப் பொங்கற் பண்டிகையோடு சேர்த்து நடத்தும்படி நேரிட்டது. நிற்க:- இந்த வேடிக்கையை மூன்று நாள் நாம் சென்று பார்த்தும் அடைந்த லாபம் இன்னதென விளங்கவில்லை. ஜனவேடிக்கையன்றி வேறு வேடிக்கையைக் கண்டிலம். நம்முடைய பெண்மக்கள் பலநாளும் வீட்டிலடைந்து கிடப்பவர் வீட்டை விட்டுவெளிப்பட்டு ஒரு நாழிகையேனும் உலகத்தைக் காண்பதற்கு இந்த வேடிக்கை காரணமா யிருந்ததன்றி வேறொன்றைக் காணோம். ஆதலால், இது காரணம்பற்றியே இதை நடத்தவேண்டியதத்யவசியமெனச் சிலர் கருதினாலும், இந்த வேடிக்கை சம்பந்தமாய்ப் பொது ஜனங்கட்குப் பிரயோசனமாகத் தக்க பிரதேச பொருட்காட்சிச் சிறுசந்தையமைத்தல் நலம். இதை கமிட்டியார் மேல்வருங்காலத்தேனும் கவனிப்பார்களென நம்புகின்றோம்

---

உ

### சென்னைக் கணித்தாகக் கொள்ளைநோய்.

பம்பாயில் நமது சகோதரர்களைக் கொள்ளைநோய் சூறையாடிய ஞான்றும் பின்னர் மைசூர் பெங்களூர் வேலூர் முதலிய பட்டணங்களில் அந்நோய் பரவி நமது ஆரிய நேயர் அநேகர் ஆருயிரைக் கவர்ந்துண்டுழியும் சென்னைமாநகர வாசிகளாகிற நாம் அதன் உக்கிரத்தைப் பற்றியும் அது புகுந்த விடங்களிலெல்லாம் விளைத்த கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும், பலவாறுகக் கேள்வியுற்றும் பத்திரிகைகளில் வாசித்தும் உள்ளோம். நம்மிற் சிலர் செய்துவரும் அறிவறப்பயனாலோ அன்றேல் நமது மூதாதை களீழைத்த முதிர்தவப் பயனாலோ இதுகாறும் அத்தகைய நோயொன்றும் நஞ் சென்னைக்கு வந்திலது சென்ற மார்ச்சு மாதம் 19-ஆம் தெய்தி பிரம்பூருக்கு அடுத்த செம்பியம் என்றும் கிராமத்தில் ஒருவர் ஒருவகைக் கொள்ளைநோய் கண்டிறந்தனர். அன்று தொட்டு இன்று வரையில் இந்நோயால் பீடிக்கப்பட்ட அறுவரும் எமபுரஞ் சார்ந்தனர். ஒருவராயினும் உய்ந்தாரில்லை. நடுச்சென்னையில் ஒரு மகட்குக் கண்டதாகவும் அவள் எழும்பூர் தரும வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டதாகவும் அங்கு புதன்கிழமை இறந்ததாகவும் நாளது ஏப்பிரல் மாதம் 8 தெய்தி யன்று அறிந்தனம். ஆகவே இது சென்னைக்கு வந்து இரங்கிவிட்

ட்டதாகவும், பரவுகிறதாகவுந் தெரிந்து முனிசிபல் பிரசிடெண்ட்டு முதலியோர் அது இந்நகரத்திற் புகுந்தவகையும் விருத்தியடையும் விதைத்தையும் ஆராய்ந்து பார்க்கின்றனர்.

இந்நோய் விசேஷமாய்ப் பரவுதற்கு முன்னரே அணைபோடுவான் எண்ணி மிஸ்டர் முனிசிபல் கமிஷனர் யம். கே. இலட்சுமணாச்சாரியார் அவர்கள் 6, 7, 8, ஆகிய இம்மூன்று டிவிஷன் குடிகளையும் திரட்டி ஒருமகாசபை சேர்க்கச் சடிதமெழுகிவிட்டிருக்கின்றனர். டவர் 1898-வது வருடம் ஏற்படுத்தப்பட்டஇ கொள்ளை நோய்த் தருமவைத்திய சாலைக்கு காரியதரிசி மிஸ்டர் எர்ட்லி, நார்ட்டன் துரை அவர்கள் அச்சபைக்குத் தலைவராவர். அவசியமின்மையால் வாளாவிருந்த இச்சபையார் இண்டு இந்நோய் பரவாதிருக்கவேண்டிய முயர்ச்சிகளைச் செய்ய ஆரம்பித்து விட்டனர்,

---

## சமாசாரங்கள்.

---

மைசூர் மஹாராஜனின் அருமைச் சகோதர கல்வி கருதிச் சென்ற ஆஜ்மீர் நகரத்தில் கொடுஞ் சுரத்தால் பீடிக்ககப்பட்டு அத்தியாவஸ்தைப் படுவதாக தந்திவர, மைசூர் தர்பார் வைத்தியர்களும் பரிசனங்களும் தீவிரமாக முன்செல்ல அரசனும் அவர் அன்னையும் பின்சென்றனர். பின்னர் இராஜ குமாரன் அபாயந் தப்பி சவுக்கியமடைந்தானென செய்திவர அவர் தேசத்தவர் மிகச் சந்தோஷங் கொண்டாடினர். யாமும் சந்தோஷிக்கிறோம்.

---

நமது இராஜாங்கத்தார் நந்தேசத்து கைத்தொழிற் முயற்சிகளைக் கணப்படுத்துகிறதில்லை யென்றும் அவைகளைக் கைநாடுகிறதில்லை யென்றும், நமது சுதேசாபிமானிகளி லனேகர் பலமுறை முறையிட்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் பொய்த்துப் போகும்படியாகத் தானோ நமது சென்னை இராஜாங்கத்தார் தமக்கு இவ்வருஷத்திற்கு வேண்டிய 1000 டன் கடுதாசிக்குக்கையை பங்காளத்திலும் சித்தாகிரியிலுமுள்ள இரண்டு காகித சாலைகளுக்குக் கொடுத்தனர்! இவ்விதம் நமது இந்திய கவர்ண்மெண்டார் தம்மால் கூடியவரையில் சுதேச முயற்சிகளுக்கு அனுகூலம் செய்யும் பட்சத்தில் நந்தேயத்தில் பொருள்குன்றுவ தொழிந்து செல்வம் பெருகுவதிற் சந்தேகமில்லை.

---

பம்பாயிற் சென்ற முஹரம் பண்டிகை வேறு விதமான பண்டிகையையும் விளைவித்தது. மகமதியரின் பிரிவினராகிய சூனியருக்கும் போராக்களும் பெருயுத்தமூண்டு, இருபக்கங்களிலுங் கொஞ்ச பிராணசேதமுமுண்டாயின. படையாளர்களும் போலீசார்களும் மகமதிய தெருக்களை இரவும்பகலும் அரண்செய்யவேண்டியிருந்தது. கலகம் எளிதில் தீராதெனயுணர்ந்த போலீஸ் கமிஷணர் வெகுபுத்சாதுரியமாக இருதறப் பெரியவர்களை யொருங்கு தருவித்து அவர்கட்கு புத்திபுகட்டி சினேகமாகும்படி செய்வித்து, கலகத்தை முடித்தார்.

---

பம்பாயில் முதற்றோன்றி பலபாடு படுத்தி பலவூர்களைப் பாழ்செய்த பிளேக் என்னும் படுநோய் நமது சென்னையையும் ஒரு முகம்பார்க்க திடங்கொண்டாற் போல் தோன்றுகிறது. பிரமபூருக்கருகிய செம்பியத்தில் தோன்றி சிலரைப் பலிகொண்டதாகவும், சென்னையிலும் நாலைந்துபேரைப் பிடித்ததாகவும் வதந்தி. நமது முனிசிபல் தலைவர், கவர்மென்டுசானிடேரிகமிஷனர் முதலிய உத்தியோகஸ்தர்கள் விளையுந் தீமையை முளையிலே கிள்ள பெருமுயற்சி செய்துவருகிறார்கள். அவர் முயற்சி சித்தியாகுமெனக் கோறுகிறோம். ஆயினும் நம் சனங்களுடைய முயற்சி யுதவியின்றி அவர்கள் முயற்சி பயனைத் தராது. செம்பியத்தை யணுகலும் அங்குள்ளோரோடு உறவாடலும் நாம் ஒழிக்கவேண்டும். நம்முள் சந்தேகத்திற் கிடமான வியாதி தோன்றில் சற்கார் வைத்தியருக்குத் தெரியப்படுத்த வேண்டும். நமதில்லம், பானபோஜனம் முதலியவற்றில் அதிக சுத்தத்தை நாடவேண்டும்.

---

சர் ஹிராம் மாக்ஸீம் (Sir Hiram Maxim) என்னும் சாஸ்திர நிபுணர் பரக்கும் யந்திரம் பூர்த்தி செய்து சில தினங்களுக்குமுன் லண்டன் நகரத்தில் அனேக கனவான்களுக்குக் காண்பித்தனர் இதிலுள்ள ஆசனங்கள் மச்சவடிவாயுள்ளன வாம். அது ஆகாயத்தில் மணிக்கு 35 மைல் முதல் 65 மைல்வரை போகக் கூடும். சில துணிந்த சீமான்களும் சீமாட்டிகளும்பலை யந்திரத்தின் மேலேறிப் பரீட்சை செய்து பார்த்து திருப்தி யடைந்தார்கள். இன்னும் சில வருஷங்களில் இவ்விதப் பிரயாணமும் சாதாரணமாய்விடுமென்பதிற் சந்தேகமில்லை.



---

இவ் வருஷத்திய லண்டன் நகரத்து புஷ்பக் காட்சியில் அற்புதமான வோர் புஷ்பம் காண்பிக்கப்பட்டது. அதற்குடையவர் அதின் செடியை 1000 கினி அல்லது 15750 ரூபாய்க்கு வாங்கினராம்! சிலருக்கு பணம் ஒரு பொருட்டல்ல!

---

மாட்சிமை தங்கிய கவர்னர் ஜெனரலவர்களாகிய லார்ட் கர்ஜன் (Lord Curzon) அவர்கள் இம்மாதம் இங்கிலாந்துக்கு திரேக சவுக்கிய நிமித்தம் ஆறுமாத ரஜாவில் போகிற படியால், நமது சென்னை கவர்னராகிய லார்ட் ஆம்ப்டில் (Lord Ampthill) அவர்கள் மேற்படி உத்தியோகத்தைப் பதில் பார்த்துவருவார்கள். இவர் திரும்பிவரும்வரையும் தாம்ப்சன் துரையவர்கள் இவ்விடம் கவர்னருக்குப் பதிலிருந்து வருவார்கள்.

---

நமது வித்யா கலாசாலைகளைப் பற்றிய சட்டமானது கவர்னர்ஜெனரலவர்களுடைய சட்ட நிர்ணய சபையில் யோசிக்கப்பட்டு சட்டமாக உத்திபெற்றது. அதின்பிரகாரம் நம்முடைய கலாசாலைகளில் தற்காலம் நடந்து வரும் ஏற்பாடுகளின ேகம் மாறுபட்டு புதியவை யுற்பத்தியாகும். அனேக சுதேசிகள் இது நமக் கனுகூலமோ வென யோசிக்கிறார்கள். இந்தசட்டத்தின் சாரம்சங்களை சந்தேமறமுறையிவ்விடம் எடுத்துக் காட்டுவோம்.

---

## THE PANDYA COUNTRY.

---

## பாண்டிய நாடு.

---

இந்நாடு தமிழ் நாடனைத்தினுக்கு மோரணிகலமாய்ச் சிறப்புற்றுச் செழித்தோங்கி, முல்லை குறிஞ்சல் பாலை நெய்தல் மருதமுதலிய ஐவகை நிலங்களமையப் பெற்று, மேருவுக்கு நிகர் பர்வதங்களுஞ் நறுமணமுள்ள சந்தனமகில் வானளாவிய வேங்கை தேக்கு முதலியவிருக்கங் களடர்ந்த காக்களுங், கான் யாற்றடைகறையூர்களு மமையப்பெற்றும், ஐவகையரண்களுள்ள வான்றோய் சிகரங்களமையப் பெற்றநகர்கள் தொன்றுதொட்டு பருதியின் குலத்தமைந்த வரையர்வாழப்பெற்ற வருநிதிச்செல்வம் பெற்றது. இன்னுமிந்நாடு வாருணம் சூழப்பெற்று வஙரிகர்மாக்காலங்கொண்டு குணதிசை குடதிசைகளிலுள்ள புறநாட்டோடு வணிகஞ் செய்தவர் யூததேசத்துச்சக்கிரவர்த்தியாய சாலமன்ஞானியார் தேவாலயங்கட்டியகாலத் தவரதாலயத்துக் கணியாக நறுமணவிருக்கங்களாய சந்தனமகிலும் வனப்புவாய்ந்த தோகைமயில்களு மவருக்குத் தமிழ் நாடாகிய பாண்டிய னரிபனிடமவ்வரசுக்கு நன்கொடையாய்ச் சேர்த்ததாக சரித்திரவாயிலில் சத்தியவேதவாராய்ச்சிப்புலவர்கூற்றா லறியக்கிடக்கிறது. இதுநிற்க விந்நாடு பண்டை யிராமாயணம் பாரத முதலிய காவியாசிரியர் கூற்றால் சுமார் நாலாயிர மாண்டுகளுக்கு முந்தியதென வெளியாகிறது. இன்னும் கிறிஸ்து பிறந்த பின்னர் முதனூற்றாண்டிலும் ரோமாபுரியி லரசாண்ட அகஸ்டஸ் சக்கிர

வர்த்தி மகுடாபிஷேகம் புனைந்த காலத்து அரசர்க்கரசராய பாண்டியனது தூதர் சென்றவ்விறைக்கு வந்தனை வழிபாடுகள் செய்ததாக வத்தேசத்துச் சரித்திரம் வரைந்த மிகச்சிறப்புற்றோங்கிய எரடாட்டஸென்னு மாசிரியர் கூற்றால் பாண்டி நாட்டின் பெருமை நாற்றிசை யுலகுதனில் சீர்த்திபெற்ற மேற்றிசையிலும் பரவியதற்கோரொப்பற்ற சாட்சியமாயிருக்கிறது. இன்னும் பிற்காலத் தாராய்சியால் சில சாதனங்களையும் பொன் முதலிய நாணயங்களிற்காட்டிலகப்பட்டவைகளையுங் கொண்டு புலவ ரிந்நாட்டுத்தலைநகராய மதுரைமாநகரிலு ரோமாபுரியினின்று வணிகர் வந்து வசித்ததாகவு மூகத்தாலுய்த்துணர்கிறார்கள். இந்நகர் முதலிடை கடையெனு மூவகைச் சங்கங்களமையப்பெற்றுத் தமிழ்மொழிச் செல்வருறைவிடமாயும் தமிழணங்கு மிகக் களிகூர்ந்து தங்குமிடமாயு முள்ளது. இந்நாட்டரசராய பாண்டியர் தமிழ்மொழி வாழமற்றை நாட்டில் வருமையாற்றுன்புற்ற மாண்புடைப்புலவர் தம்கழகத்தழைத்து பொன்மணி முதலியவைகளை நன்களித்து அரும்பெரும் நூற்களை அமைப்பித்தார். இவ்வரசரது சிறப்பை கவிகள் தம்நூற்களாகிய சங்கமருவிய முதனூற்களாலும் வழிநூற்களிலும் பத்துப்பாட்டுப் புறநானூறு நாலடியார் முதலிய பதினெண் கீழ்க்கணக்குகளிலு மாங்கவர் பெருமையையும் வள்ளன்மையும் புகழ்ந்திருத்த லுள்ளங்கை நெல்லிக் கனிபோ லுசிதமாய் விளங்குகிறது. சைவசமைய மாருகத மதமாய சமணமதத்தை தலையெடுக்க வொட்டாது செய்தது இந்நாட்டிலே சற்றேறக்குறைய கி. பி. ஆறாவது நூற்றாண்டில் சைவசமைய குரவராகிய திருஞானசம்பந்தரவர்து சைவ சமையத்தாலுஞ் செய்வவருளாலும் சமணமதச் சார்பினராய வழுதியை சைவராய்ச் செய்து தமது வலியாலச்சமணரையும் கழுவேற்றி யிந்நகரதாய வாலவாயில் பாண்டியனாற் பூசிக்கப்பெற்று பொலிவுற்றிருந்தனர். இப்பாண்டியின் கண் மூவராற் றுதித்துப் பாடப்பெற்ற சைவாலயங்கள் பலவுள. முக்கியமானவை சோமசுந்தரக் கடவு ளெழுந்தருளிய வாலவாயாய மதுரை, திருவாடானை, கானப்பேராகிய காளையார்கோவில், திருப்புவணம். இராமர் பூசித்த சேது முதலியவையே. இன்றும் மலங்கெடுத்து மனங்கரைக்கும் வாசகமாய திருவாசகத்தாராகிய மாணிக்க வாசகரையமைச்சாயடைந்த திப்பாண்டிநாடே. நீண்டதமிழா லுலகை நேமியிலளந்தாறுய வகத்தியன் வாழ் பொதியமாமலை இப்பாண்டிநாட்டதே. இந்நாட்டின் பெருமை யுலகனைத்து வியாபிப்பினு மிதனெல்லை மிகச்சொற்பமானது தான். காலத்துக்குக்கேல மிவ்வெல்லை மாறிமாறியிருக்கப் பெற்றதாயிருக்கிறது. ஓர்காலத்தி லங்கைத்தீவுஞ் சேரநாடுஞ் சோழநாடும் பாண்டியர் கீழிருந்ததாக வெளியாகிறது. இப்போதித னெல்லை சேரநாடாகிய கோயம்புத்தூருக்கு கிழக்கும் சிதம்பரத்துக்குத் தெறகும் குமரிக்கு வடக்கேயும் கடலுக்கு மேற்கிலுமுள்ளது.

டி. யஸ். பிள்ளை, பி. ஏ.



# YATHARTHA BHASKARAN

FOR

## God, Humanity and The Motherland.

## Editorial Notes.

### CASTE IN RANGOON.

Before inscriptions on stone and tablets, and writings on papyri were possible in India, it would appear that the ancient history of the Aryas had been invariably recorded in Vedic Hymns which were handed down orally from generation to generation. Eminent scholars are of opinion that these hymns contain not a word to show that caste existed in any form in the Vedic Age. But we are most disagreeably surprised to see some men even in the metropolis of Burma who wish to enter the arena equipped with doubtful materials to fight the social reformer and maintain the prestige of the Caste institution as something whose destruction would entail that of Hinduism itself. Our Caste-ridden friends forget that the system arose in the second period of ancient Hindu History out of weakness and lifelessness among the people and that it has perpetuated that weakness ever after. Even the Hindu gentlemen who have married Burman ladies would, we hear, appear to be anxious to keep their caste. It is a wonder that the high-caste man who has crossed the Bay to improve his prospects in a foreign country should encourage isolation and exclusiveness among his caste-men though he realises as fully as others the rottenness of the whole system crumbling to atoms today. The Vaidic Brahman who was a rare phenomenon in Rangoon a decade ago, has now followed in the wake of the official Brahman in exploring these parts of the country and we learn that he is reaping a richer harvest in Burma than he could ever do in India. Priestcraft, is, we are afraid, gaining ground here in spite of the opposition that is shown to it now and then by the cultured classes, so much so, that we should not be surprised to see in a few years' time Brahmans officiating as Archakas and Acharyas in all the Hindu temples already built or now being built in Burma. The fusion of sub-castes is, we are sorry, not even thought of by the elite of the native community of Rangoon, though on occasions they interdine with each other putting down their caste scruples for the time being. This is a sorry state of affairs no doubt and Heaven alone knows when the miracle would be performed to weld the Hindu races and communities into a Nation even in Burma.

### Social Reform.

#### EMANICIPATION OF WOMEN.

People are averse generally to all social reform, though in practice many of them have, we understand, gone, far ahead of their Hindu friends in Madras or Bombay. Most of our people have no belief in imparting higher education to women. They say

they dare not copy the social institutions of the West. Our women are perfectly contented with their lot and to think of removing the purda, with a view to better their social intercourse, would prove most mischievous in the long run. What would suit the West would not suit the East is the argument that is generally put forward by opponents of reform. But we have observed during our, as yet short stay in Rangoon the large amount of freedom which the Burman ladies enjoy and we are led to understand that the moral atmosphere they breathe does by no means compare unfavourably with that of their neighbours, be they Hindus or be they members of other nationalities. The Burman women are very enterprising, unlike their Hindu sisters and contribute in no small measure to the welfare of the nation. They are generally well-educated and well-conducted and, we are glad to say, a real blessing to their husbands and children. The sooner our people copy their virtues in Burma the better for them. We trust that it is high time now we came out of our old narrow grooves and helped ourselves and the nation at large, by translating our ideas and convictions into action.

---

**Hindu Religion in Rangoon.**

---

We generally become more academic than practical whenever we are tempted to enlarge on the beauty and sublimity of Hindu Religion and most of us easily take offence at the hollowness and unreality of our public life being shown up, by the few amongst us who dare to be true to their conscience and the best interests of their community. There is no use in mincing matters and it would not do any longer to sugar the pill with meaningless professions. Irreligion should not obtain in place of Religion. Milk-and-water pronouncements of interested persons should be treated with the contempt they so richly deserve; and we are in duty bound to sound a different note and strike a new key in Religion, though people will put us down to stand for only a Neo-Hinduism of the twentieth century. At the time Buddha was born on earth we hear Hinduism was all chaos. The country was then in the throes of a religious revolution. Its expounders were more confusing than convincing. But it is worse to-day. Shaivate ranged against Shaivaite, Tengalai pitched against Vadagalai—a lot of bad blood is being daily created among us and our fire-eating Baktas and Bagavatas are fighting for the supremacy of their pet-gods and goddesses. And Rangoon does not seem to be free from all this religious excitement too. There are however one or two institutions such as the Hindu Social Club and the Samarasa Gnana Sabah which are trying to stem the tide of orthodoxy and superstition. We were received with open arms by these bodies on our arrival and we have since presided over meetings and lectured to large and intelligent audiences from the platforms of these associations. Some of those connected with them as members or sympathisers, we are led to believe, are men who have been brought up in the lap of luxury. Some of them, we were told, were highly condescending to their brethren in inferior stations of life. A few of them, we are proud to assert, are the pink of courtesy and the mirror of politeness. But for these, we could hardly hope to make a sufficiently impassioned appeal to the Hindu masses as regards the vital importance of educating both the sexes in matters which deeply concern their national regeneration and their national glory.



**Shaivaite and Vaishnavaite temples in Rangoon.**

---

Since we came to Rangoon about the middle of last month, we have had to make time to pay a visit or two to several Hindu temples in the city and suburbs. We noticed that these are as compared to Madras temples wanting in one *element* of *of no small importance in the opinion of the masses.* Somehow or other the services of the *dancing-girl* to the temple-gods has not as yet been thought of by those responsible for the conduct of Religion and its paraphernalia in these temples. Temple-worship was unknown to Hindus before the time of Buddha and it would appear that Hindus latterly borrowed their popular worship from later Budhism in India which had become essentially idolatrous. Be that as it may, we owe the existence of temples to the Brahman priesthood who for this innovation were condemned as UnAryan, selfish irreligious and so forth by Manu himself. At the time that Image worship was first taught in India, the wily priesthood bethought themselves of some wonderfully telling feature of this *neoworship* which would prove no ordinary attraction to the ignorant masses at large. And the cons-cration of temple-nuns became possible. The Gods in Swerga had their eternally-enduring enjoyments in the sweet society of Ramba, Menaka, Urvasi and other *Apsaras* and quite naturally the gods on earth copied the ways and principles of their celestial gods and eventually began to outdo them as their lease of existence was but ephemeral on Earth. If the dancing-girl element were not there, we are really afraid that the temple celebrations in our mother country would become awfully dull and insipid to the temple-going public. Any how, the dancing-girl is conspicuous in Rangoon by her absence though prostitutes of various nationalities are plying their trade in some of the *bastis* of the town. Brahman priests are now being imported into this country, and several of them have already suggested, we understand, to temple authorities the idea of perfecting Hindu temples by the introduction of the dancing-girl element in the near future. We have not sounded public opinion as yet in the matter, and we shall be glad to take up this subject again in a future issue of the Bhaskaran.

*THE EDITOR.*

---

**Gleams of spirit**

---

Man is made up of convictions or beliefs. His every word, act, or gesture opens his heart, and reveals the secret. Each is a straw that shows the direction and the nature of the wind—thought. He cannot but be emitting his inner nature with every breath of his, nor can he live without being impressed every moment by the suggestions from without. His convictions are nothing but the deep-impressed suggestions from within and without. The suggestions received or accepted without the sanction of reason make, no doubt, a deep impression on the mind, but those with the sanction of reason make a deeper impression which can neither be removed nor changed by any counter-impression. The reason with which man sways over nature plays an important part in his spiritual development, and is just an X ray to lay the secrets of nature—Unity and Divinity-open to the soul-eye. Man once raised to the level of reason obtains a clearer insight into the whole Universe and is

made a monarch of all he surveys. Free and blessed is he who is admitted to the privilege of reason, for he realising the unity in diversity, enjoys "the happiness that passeth all words and understanding." Every man, nay every atom feels restless, thereby indicating their inner aim towards that happiness. Man has not as yet fully understood the presence of life in matter. He is so led away by the senses that he cares not for the truth, but is satisfied with the fleeting pleasures appearing on the surface. He says, 'matter is dead' as if he knows what constitutes life. Life is manifested in different degrees throughout the universe. In animals we see it expressed through different organs; in plants, through growth, development, and decay alone. We cannot say there is no life in them, because we do not see them speaking or hearing. Want of materials gives them the *appearance* of no life. Atoms too are not without appealing to man that they are but his fellow creatures without hands and feet. To see life in matter, man should first understand what life is.

Now we shall try to understand Life and then define as accurately as possible what it is. Let us take an illustration. Suppose a man walking along a road finds an animal lying motionless and wants to ascertain if there is life in it. What does he do? He observes it a few minutes, and if it makes no move at all, he thinks it dead, but, on the other hand, if he sees it wave its ears or wag its tail, he comes to the conclusion that it is full of life. What is it that makes him so conclude? Is it not motion? Yes, it is motion, motion alone. If motion alone indicates the presence of life, does man accept life wherever he sees motion? No, no. He sees a stone rising in the air or rolling on the road, he is not inclined to believe that there is life in it. Even though he sees motion in both, he sees life in one alone, and not in the other. Why? There should be some reason for it. Is there any difference between the two motions? Yes there is. The one proceed from within; the other from without. This must, then, be the test which every man uses unconsciously to find out the presence of life. It is therefore why a man sees life wherever there is motion from within, and the opposite where there is not such motion. It becomes evident, then, that *life is motion from within.* If this definition can be accepted, there is no other go than to admit that atoms too are full of life; for, it is a well-known fact among the Physicists that two forces known as attraction and repulsion are ever present in atoms by which they move towards, or away from, each other, of their own accord. What are these but motions *from within*? Despite their inability to make use of intelligible sound, they—the atoms—seem to utter in a low whisper "Ye, men! You think us inanimate! We have the same qualities as you have-love and hate, or in other words, attraction and repulsion; you feel restless, we also feel the same. We standing on a lower level than yours do not possess the necessary organs to give vent to our emotions, but one day or other it is certain that we will grow to be you, and shake hands with you. Be sure we both never attain to complete rest or perfect happiness unless and until we get rid of those two qualities which both of us have in common." It is plain now that life is manifesting itself in matter also through attraction and repulsion.

So we see one Life manifesting itself in multifarious forms ever progressing on and on towards perfect freedom or happiness. Deep under the surface of differentiation, the iron string of unity vibrates and binds the



Universe as one whole. Each is living for the good of the whole, and the whole or Nature never cares for selfish interests. There is a Law governing the Universe from which even the falling of a leaf is not exempt. Every thing yields to that Law and all that violate or resist it, cannot but at last yield to it, suffering excruciating pain in the interval as a consequence of their attempt to go against it. Self consciousness as a separate being, is the great and only enemy that stands on the way to happiness and retards the progress of soul-nature. The tiny spark in the human frame is in essence the same as the self-refulgent Light that pervades the Universe and as such, it has every claim to health, strength and happiness. But it must understand the Universal Law lest it should go against it and suffer in consequence. An honest and humble citizen who desires to lead a happy and peaceful life has to acquaint himself with, and act in obedience to the laws that are observing in the kingdom. We need hardly say, then, that man being a citizen of the Universe cannot enjoy happiness without understanding and abiding by the Universal Law. To the seeing eyes "every chemical substance every plant, every animal in its growth teaches the unity of cause the variety of appearance." The Universal Law is not a thing that has intelligence but is intelligence itself. It operates throughout the earth and heaven as one whole for the good of the whole, changing every now and then, as necessity demands, the forms and conditions of the parts. The multitude are in the infant stage knowing not its existence in and out of them. They do not realize that it operates everywhere and at all times. They don't see that "God speaketh through facts".

Who ever dares to take care of and to make convenience for himself at the cost of others' interests finds all going against him and his own interests smashed. What is this but a sign warning him not to resist the Law? Those who heed it not need to be taught by the great teacher—Experience. Sufferings are the best lessons ever taught for the welfare of humanity. Men get themselves purified through them just as gold is purified through fire. It is only after a long struggle against Nature man comes to understand that his failures and sufferings are due to his combative attitude, and that beatitude is ever his who acts in conformity with the Law. The Universe is a beautiful home constructed by the Father, God, for the enjoyment of his children. We not knowing that all things belong to Him, put forth our claim to some, and regard them as our own. No doubt one child has no right over a thing that belongs to another according to the law of the child. But the Father who is the real owner and possessor of all things, can, when necessity occurs, take away anything from any child—for the good of the family. So He does. But the child in its ignorance and selfishness mourns for it. Is there any remedy for it, unless it be a thorough understanding of the will of the Father and acting in pursuance of the same.

When man leaves behind his separate interests and concentrated love on finites, he has a clearer perception of the Father's will, and treads not the winding path that leads to the world of gloom. In times of calmness—in the moments when man finds himself free from desire, passion, malice, anger, etc., this Universal will whispers in his ears, and awakens the soul to higher consciousness. There is no man, who has not felt it consciously or unconsciously, but those who have yielded to It are very few, for they are ignorant and lack development. We

have no voice against their ignorance and consequent inability to understand things aright, nor have we to sympathise with them. "Every mind is an inlet to the Universal mind and to all of the same." Each is moving onward for perfection. Though we see diverse manisfestations of mental states, high and low, broad and narrow, each has its particular way of advancement-unknown to all but the perfect—to one and the same goal. Men stand, as it were, in different classes of a school, each studying his own lesson. The lower class students are not capable of understanding the higher class lessons first. And it is not wise on the part of those of higher education to thrust into the heads of the lowers, their own. It is neither mistake nor stupidity on the part of the latter to refuse it, or to ignore it. Sympathy towards them also indicates only a wrong understanding of the Universal Law. Omnipotence and Omniscience lie coiled in every man, nay, in every atom, to be unfolded in due course.

"Trust thyself" and "Resist not" are the teachings of a great teacher. Another said, "Owe no conformity to any custom against your private judgment" There is no going backward in the universe. Every thing is turning from good to better only. Each and all advance forward and forward alone; so, man has simply to obey the Law. It is *development*, it is *courage*, it is *success*, it is *happiness*. Man controls steam, electricity, etc., only by understanding and obeying their laws. Else they turn out as formidable enemies. Man does not feel happy so long as he disobeys the Nature *within* and *without*. Obedience is the fulfilment of the Law. He who respects the Law soon finds himself out growing doubt, fear and ignorance. The universe is the *Kinder-garten* man the child student; experience, the teacher, failures and sufferings are the lessons. Such is the Law. What comes to one is his own, and for what does not come to him let him not desire. There is nothing as chance in the Universe, and therefore let none fear. Fear is the only thing to be feared. Let all strive to aim at the Universal good; each will see his own there So, go on brothers go on, grieve not your duty is a humble one. Do it with joy. Each is right and of importance in its own place. You who are doubtful of your success, fear not that you will fail; failures make up success; do your duty with iron will; concentrate your energy on the work in hand; failure, then, will be a dream. Concentration is the secret of success. Obey the Universal Law and lo! there is the gleaming of the spirit. Listen to the inner voice, you can never go wrong; be just and true you find yourself in the presence of God.

SWAMI VALLINAYAKAM.

---

## Indian Educational Policy.

The policy of government with regard to the all important subject of education in India in its various branches is embodied in a recent resolution which is full and comprehensive and deserves the attention of all interested in educational matters and of the public in general. An attempt is made here to give a brief sketch of the essential points of this important resolution.

It begins with a brief survey of the history of Indian Education up to 1854 and gives a brief account of the principles and measures prescribed in the memorable Despatch of that year and the successful carrying out of these measures since 1854 by the establishment of a department of public



instruction, by the foundation of Universities at the Presidency towns, by the increase of Colleges and schools, by increased attention to vernacular schools and by the systematic encouragement of private effort with grants-in-aid.

The present system is criticized and its merits and defects mentioned. The merits are, as universally admitted, great spread of knowledge, opening of new avenues of employment in many directions and a marked improvement in the character of public servants now chosen from the ranks of educated natives.

The defects are *firstly* as admitted by government in point of quantity, as "four villages out of five are without a school, three boys out of four grow up without education and only one girl in forty attends any kind of school" and *secondly* in point of quality where the main charges are :—

1. pursuit of higher education with too exclusive a view to Goverment service.

2. excessive prominence given to examinations.

3. the too purely literary character of the courses of study.

4. the memory of the students in schools and colleges being trained too much and the intelligence little.

5. the cultivation of the vernaculars being neglected in the pursuit of English education.

The resolution then prescribes remedies for those defects requiring correction. The suggestion that selection for Government service should not be based on school or university attainments of applicants but should be on separate examinations for public service under a special board organized on the model of the English Civil Service Commission is dismissed as unnecessary. Government think that *Competitive examinations for Government service* are useless and that the experience gained during the probationary service of candidates is enough to fit them for appointments in a department and the standards quaifying for appointments shouldbe primary; secondary and university education.

The Government is of opinion that the system of *too many examinations* is disastrous in its influence on Education and that in future only two examinations should precede the University course the Primary Examination which is to be hereafter conducted bp the inspecting officer in the school itself and the school final examination at the close of the secondary course.

As regards the *withdrawal of Government from Competition with private enterprise* which was advised by the Education Commission in 1883, Government is of opinion that while this is to be accepted, there should be a limited number of model institutions in each branch of education maintained by Government and Government should have a general control over all public educational institutions by efficient inspection.

With regard to *Primary Education*, Government recognize the active extension of this education as one of the most important duties of the state. The extent and progress of this education have not been satisfactory the main reason being the difficulty of finding the requisite funds. Hence Primary Education should be made a leading charge upon provincial revenues and should have a predominant claim upon the expenditure of District or Municipal boards. The Govern-

ment look with favour upon the extension of the *teaching of object Lessons and the Kindergarten* as there by exclusive reliance on the memory will be discouraged and a capacity for reasoning from observed facts will be developed. The Government think that physical exercises should be made universal in primary schools.

With regard to *Rural Primary Schools*, the resolution says that the aim of these schools should be, not to give definite agricultural teaching, but to train the children to observe, think and experiment and make them inteligent cultivators. The reading books should be simple dealing with topis connected with rural life; grammar elementary and arithmetic taught by the native system. The village map and the intricacies of the village account should be thoroughly understood. "This and other reforms in primary schools will involve some revision of the pay of primary teachers which varies greatly and in some provinces is too small to attract or to retain a satisfactory class of men."

It is the duty of Government, says the resolution, to see that the education provided in *Secondary Schools* is sound; that they comply with the conditions of recognition and that no institution which fails to comform to the elementary principles of sound education should be permitted to present pupils for the University Examinations.

The *School Final Examination* is to take the place of the University Entrance test which would no longer be accepted as qualifying for Government service—its value being that it would not dominate the courses of study in a school but be adapted to them.

Government is not to interfere with *religious education* given in aided schools but the influence of carefully selected and trained teachers, the maintenance of a high standard of discipline, the institution of well-managed hostels, the proper selection of text books, the association of teachers and pupils in the common interests of their daily life are recommended by Government as remedies against the growth of a spirit of irreverence in the rising generation.

With regard to the teaching of *Vernacular languages*, the Government says that English should have no place in a scheme of primary education and "as a general rule a child should not be allowed to learn English as a language until he has made some progress in the primary stages of the institution and has received a thorough grounding in his mother tongue." "It is equally important that when the teaching of English has begun it should not be prematurely employed as the medium of instruction in other subjects."

*Female Education* is remarked to be slow in progress and advancement is hoped by the establishment of model primary schools, increase of training schools and the strengthening of Inspectresses and encouragement of Zenana-teaching by grants-in aid.

All the necessary reforms in connection with *University Education* are said to be contained in the Universities' act and the resolution says that the Government is prepared to give liberal aid not only to the Universities but to the affiliated Colleges also, so that they may carry out the necessary improvements.

The Government hope to remedy the unsatisfactory condition of *Schools for Europeans and Eurasians in India* by the revision of grants-in-aid and scholarships on a more liberal basis and by the institution of measures to secure the proper administration of endowments and enforcing sound methods of financial control in those schools which depend upon Government for assistance.



In behalf of the *Chiefs Colleges* for the sons of nobles and chiefs of India, the government proposes to increase the number of highly-qualified teachers and to so regulate the studies and discipline of the college as to prepare the students for the duties awaiting them "on lines which will combine the advantage of western knowledge with loyalty to the traditions and usage of their families or states the interest of the aristocratic classes in the scheme being kept alive by the institution of the Imperial Cadet corps which will be mainly recruited from these colleges.

Regarding *Technical Education*, the resolution says that "the first call for fresh eflort is towards the development of Indian Industries and especially of those in which native capital may be invested" and as a step towards providing men qualified to take a leading part in the improvement of Indian industries, the Government of India have determined to give assistance in the form of scholarships to selected students to enable them to pursue a course of technical education under supervision in Europe or America.

With regard to the *Schools of Art* the Government are of opinion that Indian art industries should be encouraged and of them only those of local importance should be taught.

The Government remark that the existing *Industrial Schools* have not succeeded in promoting the growth of industries; that pupils use these schools to gain the general education given there and take up clerical and other employments after their course, that the teaching is not sufficiently high to enable the pupils to compete with bazaar artisans and the selected industries are of little local importance. These defects are to be remedied by careful admission of only those boys whose caste occupation is the handicraft taught, by arranging the courses of study to make artisans and not clerks and by fixing the nature of the Industrial schools according as the places are large centres of industry or places where hand industries prevail.

Speaking of *Commercial Schools* the resolution says that increased attention will be given to the extension of commercial teaching in large centres of commerce and population that the teaching should be adapted to Indian needs, that commercial courses are now being placed on a level with literary courses as a qualification for Government service and that endeavours will be made to find employment for trained pupils.

*Agricultural Education* is remarked to be meagre and defective in two ways in that the existing schools and colleges have not produced scientific experts or attracted members of the land-holding classes to qualify themselves as practical agriculturists and the Government hope to remedy the defects by the establishment of an Imperial Agricultural College in connection with an Experimental Farm and Research Laboratory to be carried on under the general direction of the Inspector General of Agriculture.

Regarding *Training Colleges* the resolution says that the efficient training of teachers will remedy the defect of secondary school teaching and such training must be improved with an adequate staff of well-trained members of the Indian Educational service. To prevent the trained teacher from falling into line with mechanical methods the trained students should be occasionaly brought together and the

Inspectors should see that the influence of the College makes itself felt in the schools. The period of training should be increased to 2 years in the case of those other than graduates.

Regarding *Training Schools for primary teachers*, the Govrnment says that steps are being taken to supply courses of training specially suited for teachers of rural schools.

The growth of *Hostels* in India is noted with pleasure and their moral value appreciated.

The reduction in the number of examinations and the general raising of educational standards contemplated require the strengthening of the Inspecting staff and "the Inspectors should be much more than mere examiners." They should guide and advise as to the methods of teaching.

The remaining paras of the resolution refer to Administrative Reform and the conclusion expresses a hope that the resolution will command the support of all interested in Education

P. PARTHASARATHY NAYAGAR B.A. L.T.

## INTERESTING NOTES.

**An exceedingly ingenious novel drawing instrument called the *Perspectartigraph*** is a new invention with which any one can draw accurately in perspective landscapes buildings or objects of any sort. The operation of the instrument is simple and easily learnt. The inventor—a gentleman of Geneva—is at present in America introducing it. The instrument can be used by architects for readily making a perspective view of a house from the plan and elevation drawing of a house. The inventor believes the instrument will be useful to artists in enabling them to obtain true perspective in all their works and serve to teach children how to draw in perspective.

* * * *

The "**Mikasa** is the largest and most effective Cattleship in the Japanese navy and is said to contain the very latest improvements in guns, armour and ship—contruction. Itis the largest catt'eship in commission in the world and carries a maximum coal supply of 1500tons, and is manned by 730 officers and men.

* * *

Mr. H. Dharmapala gave an address on Thursday March 3 on the "**Training and Teaching of the Neglected Children in India**" with Mr. Herbert Birdwood, C. I. E. L.L.D. in the chair. Mr. Dharmapala fee's much for the village child of India and intends to found an Industrial School where Agriculture and the several industries as improved by scientific methods will be taught. This school is only a model for others which will be started later on.

Mr. Dharmapala intends to found this model school near Benares and is anxious to obtain help from English friends.

* * * *

**University of Oxford** has accepted the liberal offer by Mr. Shyamaji Krishna Varna of £1000 to found a Herbert Spencer Lectureship.

* * * *

**Cannibalism in Snakes.**

The hamadryad, the cobra, the common krait of India and the Pythons are reported to be cannibals of their species. In the case of the first and the third, cannibalism may be a usual trait. But other snakes also have been observed to swallow their kind.

JOURNAL OF THE BOMBAY NATURAL HISTORY SOCIETY

* * * *

**Two interesting Animals** have been recently added to the Newyork Zoological Park. One is a long tailed Snow Leopard which lives only amid snow and ice. The other is a large eland the giant species of antelope about the ox in size and nearly six feet high. This animal has the peculiarity of going for a long time without water.

P. P.



## TAMIL EDITORIAL

### தேவலோகம் பர்மாவோ?

நம்மனோர் ஸ்ரீகைலாசத்துக்கு இடம் பூலோகத்தில் ஹிமோத்கிரியை யடுத்தபிரதேசத்தில் கற்பிப்ப துண்மையாயின் இக்காலத்து ரிஷீஸ்வரர் சிலர்தங்கள் தவபலத்தினால் கைலாசம்சென்று வருவது அசாத்தியமாகுமோ? கைலாசம்போய் பார்த்து வந்த சாமியாரொருவர் சின்னாள்முன் இரங்கோனுக்கும் வந்திருந்தனர் எனக்கேள்விப் படுகிறோம்: அதுகிடக்க: கைலாசம் பூலோகத்தி லிருப்பதுகூடுமானால், ஆதியில்ஹிந்துக்கள் சுவர்க்கலோகத்தையும் பூமியின்கண்ணே இருப்பதாக வெண்ணினார்களென்று நினைப்பதற்கு இடமுண்டாகிறது. இத்தேசம் நாம்போந்த பின்னர் சிலவிஷயங்களை யுணரப்பெற்றோம், அவைதமைக்கொண்டு இந்த பர்மா தேசத்தையே நம்மவர் தேவலோக மென்று சிந்தித் திருப்பார்களென்றே ஒருவிதமான சித்தாந்தம்செய்யலாம் போலும். பாலிஇதிகாசத்திலே, இந்ததேசம்சொர்ணபூமி யென்றே பேசப்படுகிறது.

இரங்கோன் ஆதியில் ரத்னபுரம் என்றுவழங்கப்பட்டதாம். இப்போதுள்ள, மாந்தலே (Mandalay) நாட்டையடுத்த பிரதேசத்தில் பூர்விகவரசர்கள் செங்கோல் செலுத்தினார்களாம். அவர்தம் நகரம், அமராபுரம் என்றுகேட்கப் படுகிறது (Vide Burma Gazetter Vol 1) அயிராவதம் (வெள்ளையானையும்) சமீபகாலம் வரையிலும் இருந்ததென்ப, ஐராவதி என்னும் நதியின்னும் நாம்கொள்ளும் அபிப்பிராயத்துக்குச் சான்றுபகராநின்றது. ஆதியில் இந்தியாவினின்றும் கடற்கரைமார்க்கமாய்பர்மாவையடைய வேண்டின் பிரஜைகள் மணிபுரம் (Manipur) மார்க்கமாயும், நாகலோகமார்க்கமாயும்(The Naga Hill tracts) தாம்செல்லவேண்டியிருந்தது. இந்நாகலோக வாசிகள் இன்னும் அநாகரீக முடையவர்களாகவும் அரைநிர்வாணிகளாகவு மிருக்கின்றனர் என்றுகூறுப, இவர்தாமே ஆதி அசுரர் போலும் எங்கும்பொன் மயமான மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் நண்ணடக் காணப் படுகின்றன. நவமணிகளழுத்திய ஆபங்களும் விசேஷமாய்க் காணக்கிடைப்பன. மேகங்கள் இதரதேசங்களைவிட இங்கே விசேஷமாய்ச்சரிக்கின்றன. இங்குள்ளமழை வேறெங்கும் கிடையாது: ஆதலால் அமராபுரியரசனையே மேகராஜனாக (இந்திரன்) நம்மனோர் மதித்தனர்போலும், பர்மஸ்திரீகளைப் பார்த்தால் தேவமாதர்களென்றே சொல்லலாம். அவ்வளவு தேஜஸ் உடையவர்களிவர். மாதர்கள் நடனம் செய்வதும் அற்புதமாக விருக்குமென நம்நண்பர் ஒருவர் கூறலுற்றனர். துந்துபி யென்ற தேவவாத்யமும் இவ்விடத்துண்டு. இவ்விடத்து புருஷர்கள் மன்மதாகாரமாக விளங்குகின்றனர். ஸ்திரீகள் பதினாயிரம் ரதிகள் பிரகாசிப்பதுபோன்று விளங்குகின்றனர், செல்வம் ஓங்கி வளர்கின்றது. இவ்விடத்து பர்மஸ்திரீகள் சாதிவித்யாசம் பாராட்டாமல் எத்தேசத்தாரையும் எந்த மதஸ்தரையும்கடிமணம்புரிந்துகொண்டுஉத்தமிகளாய் வாழ்ந்துவருகின்றனரெனவும்தெரியவருகிறது. இவர்களது ஆசாரம் சிலசமயம் தேவமாதரார்சிலர் நரர்களைத்தழுவிக்கொஞ்சியிருந்ததை யொத்திருக்கின்றதென்றும் கொள்ளலாம். இந்திரன், பலர்! இந்தத் தேசத்திலே பர்மஸ்திரீகளை மணந்து, சுகத்தை யடைந்தார்களென்பது நிஸ்சந்தேகம். பர்மஸ்திரீகள் பதிவிரதாதர் மத்தில் வெகுசிரேஷ்டத்தை யடைந்தவரென்றும்சொல்லப் படுகிறார்கள், இத்யாதி நியாயங்களால், இந்தத்தேசத்தைத்தான் சுவர்க்கபூமியென்று நம்மவர் நினைத்திருந்தார்களெனச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

பத்திராதிபர்

### Duty; or, what we have to do.

கடமை;—செய்யவேண்டுவது யாது என்பது

திருவள்ளுவர், பொருட்பாலில், அரசாட்சிக்குரிய அங்கங்கள் ஆறு, அவை, அரசு, அமைச்சு, நாடு, அரண், படை, பொருள் எனப் பகுபடும் என்றனர். கேவலம் விலங்கொத்துத் திரிதரும் மானிட உருவர் சிற்சிலரே இன்னும் இக்கலியுக நாகரீகத்திற்குத் தப்பி ஒழிந்து நிற்கின்றார்கள், மற்றையோர்

படிப்படியே, நாகரீகத் தேர்ச்சியடைந்து வருவதில், கூட்டுற வென்னும் பிணைக்கயிற்றைத் திடப்பட முறுக்கி, குடும்பங்களாகிய தனியர்களை நாட்டாராக்கி ஜீவனத்துக்கு அத்தியாவசியமாக விருக்கும் உண்டி, உடை, இல்லம் முதலிய பொருள்களை விர்த்திசெய்வதற்கும், மிகுத்துச் சேமிப்பதற்கும், குறைவுற்றவர்க்குப் பகிர்ந்துதரற்கும் தங்களுக்குக் கிடையாத வற்றிற்கு மாற்றிக்கொள்ளுதற்கும் விதிமுறைகளும் கற்பித்துக் கட்டுப்பட்டு, இதன்மேலீடாயமரும் பரஸ்பர ஒற்றுமை குன்றாது நடந்தேறிவர, மாறுபாடுள்ளாரைத் தண்டிக்க அரசரும், அவர்களும் நெறி பிறழாவண்ணம் ஆலோசனை யுதவ அமைச்சரும், இவர்களுக்குப் பின்னும் வலிமை தருவதாகிய அரணும் படையும், நாட்டாருதவும் பொருளை ஜீவனத்துக்கு வைத்துக்கொண்டு அவர் அப்பொருளைப் பெருக்கும் உபாயங்களையும் வேண்டிய காவல்களையும் தந்து பரஸ்பரோபகாரிகளா யிருக்க அமைந்தன.

செம்மையாகக் கவனித்து யோசிக்க யோசிக்க, சக்கரவர்த்திகளரசாட்சி முதல் தனியர்களாகிய குடும்பங்களி லியற்றிவரும் சிற்றாட்சி வரையில், சீர்மையாக நடந்தேறிவர இவ்வங்கங்களில் எவ்வங்கம் குறைந்தாலும், சரிவராதென்றே விளக்கமாகின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் தந்தையே அரசன், அவன் தம்பிமார் மனைவியர்கள் அமைச்சர்; பந்துக்களும் அயல்வீட்டாரும் நாடு, இவர்களெல்லார்க்கும் அயலார் பகையாக, அவர்களி னின்றும் காத்துக்கொள்ள அரணாகிய வீடுகளும், படையாகிய ஆயுதம் முதலியனவும் தானியம், நிலம், ஆடை, பணி, பணம் இவை முதலிய பொருள்களும் வேண்டியிருக்கின்றன.

ஆனதால், பொருளைப் பெருக்கற்கும், சேமிப்பதற்கும் அரசாட்சியும் நாகரீகமுள்ள மானிட வியக்கமும் ஓங்கிவளர்வது இன்றியமையாததென்று ஒப்புக்கொள்ளுவீர்கள். ஆனால் இராமனாண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன வென்றும், கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேனென்றும், இரும்படிக்கு மிடத்தில் நாய்க்கு என்ன வேலையென்றும் சொல்லிக்கொண்டு அரசாட்சிக் குரிய வளப்பக் குறைவுகளைக் கவனியாமலே, தன்மலங் கழுவிக்கொண்டா லதுவே போதுமென நினைத்து பெரும்பாலாரும் தாங்கள் தாங்கள் செலுத்தவேண்டிய கடமைகளைச் சற்றுங் கவனியாது விடுத்து தற்சுகத்தை மாத்திரம் மனதில் பதித்து, மற்றையார் தூக்கம் தமதுயர் ஆக்கமென மதித்து நாம் நடத்திவரும் குடித்தனம் நமக்குத் தகுதியாகுமா? நித்தியப்படி காலங்கழிப்பதற்கே நமக்குப் போதிய இயல்பும் திறனும் கைகூடாதிருக்கையில், ஊர்ப் பேச்சுப் பேசுவதிலும் ஊர் சமாசாரம் அறிவதிலும் செலுத்துவது வீண்பொழுதே யாகுமல்லவோ வெனக் கழித்தலும் யுக்தமாகாது. சிறு குடிகளின் செழுமையே ஊரின் செழுமைக்கும், ஊர்களின் செழுமையே நாட்டின் செழுமைக்கும் அரசாட்சியின் மாட்சிமைக்கும் மூலவாதாரங்களாகும். "நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லையென்றும்," காசி யிராமேஸ்வர யாத்திரை செய்து வந்த புருடர் கிரகஸ் தாஸ்ரம தருமம் நடத்த அருகராதலால் அப்படிப் பிரயாசை யெடுத்துக்கொண்டு ஊர்களின் அருமை பெருமை யோர்ந்தவர்களே கன்னிகைகளை மணத்தற்குரிய ரெனறும் நம் கல்யாணச் சடங்குகளால் ஏற்படுகின்றதென்றும் யார் தான் கேட்டுணராதவர்கள்? ஊராருடைய வளம் தெரியாவிட்டால் எமக்கு உதவுவது இது, உதவாதது இது என்று எப்படி தெரியும்? கூடிப் பேசாவிட்டால், அனுகூலமான தின்னதென்றும் பிரதிகூலமான தின்னதென்றும் தேறுவதெப்படி? ஒவ்வொருவனும் தானே யோசித்து செய்யவேண்டிய வினைகளைச் செய்வதாயினும், எல்லாக்காரியங்களையும் தானேசெய்ய வியலுமா? தன்னோடுடவு செய்பவன் தன்னிலும் கூர்ந்தஅறிவினனாகில் தன் காரியங்களை யின்னுஞ் சீர்பெற விசைக்கக் கைகூடுமல்லவோ? ஆதலால் கூடிப்பேசுதல் வீண்காலம் போக்குதலென நினைப்பது குற்றமாகும். ஊரில் பெருந்தன்மை யுள்ளவர்கள் பலரும் சதா ஒன்றுகூடுவதும் தங்களுடைய க்ஷேமத்திற்கும் இராஜாங்க சட்ட திட்டங்களின் அமைதி சௌகரியங்களைப் பொறுத்து தங்களுக்கு நேரிடக் கூடிய ஏற்றத் தாழ்வுகளை நன்கு ஆராய்ந் துணர்ந்து வியவகாரங்களை நல்லரசாட்சிக்கமைய நடத்தி வருவதற்கும் ஊக்கமுடையவர்களாவது ஆவசியகமெனத் தோன்றுகின்றது. இவற்றுக்குத் துணைக்கருவிகளாக அப்போதைக் கப்போது நடக்கும் வர்த்தமானங்களை சீரே தெரிவிக்கும பத்திரிகைகளையும், பக்ஷங்கள் தோறும், மாதங்கள் தோறும், இருதுக்கள் தோறும், அயநங்கள் தோறும் பல



தேசங்களிலும் பல விஷயங்களைப் பற்றியும்அருமையானவை யென்றும் அறியத்தக்கன வென்றும் ஆலோசிக்கத் தக்கனவென்றும் தொடுத்துப் பிரசுரித்துவரும் விஷய மஞ்சரிகளை வரவழைத்து வாசித்தும் சிந்தித்தும் வருவதில் கல்வியின் பயனாக அனேக விஷயங்களிலும் ஞானமுண்டாகுமாதலால் அதற்குத் தகுந்தபடி நடத்தல் வேண்டும். வாசக கூடங்களும் அமைத்துக்கொள்ளுவது இதற்குப் பேருதவியாகுமென்பது சொல்லாமலே யமையும். அங்கு பல விஷயங்களைப் பற்றி விஸ்தரித்து எழுதியிருக்கும் நூல்களடங்கிய புஸ்தக சாலைகளும் சேகரிக்கப்பட்டு வேண்டுவோரிருந்து வாசித்துத் தெரிந்துரை இயல்புகளு மமைத்து எல்லாருக்கு முபயோகப்படும்படியாக பரோபகார சாலைகளாகவும் சபைகளாகவும் விளங்கிவரவேண்டும். ஐரோப்பிய நாடுகளில், அதிலும், நம்மையாண்டுவரும் ஆங்கிலநாட்டில் எந்த சிறு குக்கிராமத்தில் இவ்வாறு திருந்திய விதரணைகட்கு அனுகூலமாகிய கூடங்களில்லாதிருக்கின்றது? 'கல்விமுயல்' என்று ஔவையார் சொல்லியதையும், 'அக்குடியிற் கற்றோரை வருகென்பர், என்று அதிவீரபாண்டியனார் விரித்ததையும் கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு என்று நம்முன்னோரறைந்ததையும் மேற்புலத்தார் அனுபவிக்கும் மேன்மையையும் உணராமல், குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ள வெள்ளெழுத்து வந்ததென்ற கதைப் பிரகாரம், நாம் முயற்சி துறந்து தளர்ச்சி மாத்திரமடைந்தேங்குவது நகைத்தற்கே யிடுகுறியாகு மன்றோ? சேலம்-இராமசுவாமி முதலியார் ஆங்கில நாட்டுக்குத் தேசாடனமாகச் சென்றிருந்த காலம் ஓர்நாள் காலையில் சௌரம் செய்துகொள்ள ஓர் நாவிதன் கடையிற் புகுந்தனராம்; தனக்குவேலை செய்தவன் பேசவாரம்பித்து ராத்திரி பத்திரிகையில் நேற்று சாயந்திரம் பார்லிமெண்டார் சபையில் நாட்டாரவையில் நடந்த பேச்சுகளைத் தாறுமாறாகத் தெரிவித்திருக்கிறானே பார்த்தீர்களா வென்றனனாம். கல்வியிலாசையுண்டானால் எந்த வேலை செய்தாலென்ன? படித்தே தீருவான்; அதற்கு அவகாசம் கிடைக்கவே கிடைக்கும். நம் தமிழ் நாட்டிலும் புகழேந்திப் புலவர் புண்ணியத்தினால் ஓரம்பட்டன் கவிஞனானானென்றும் ஒரு கதையுளது.

இஃதெல்லாம் செவ்விதி னுணர்ந்ததாலன்றோ, நமது சக்கரவர்த்தினியாரின் பிரதிநிதியாகிய கர்ஸன் பிரபுவும் குடிகளுக்கு கல்விப் பயிற்சியில், ஊக்கமுண்டாகு நிமித்தம், கிராம கிராமத்திற்கும், பள்ளிக்கூடங்கள் பிரதம சாகைவரையிலாவது ஏற்படுத்த வேண்டுமென்றும் இதற்காக பணமதிகமே செலவிடவேண்டுமென்றும் ஆஞ்ஞாபித்தார், எனக்குத் தோன்றியவளவிற் சிறிது உங்களுடைய ஆலோசனைக்குத் தெரிவித்தனன். இனி கல்விக்குச் சாதகங்களா யுள்ள பற்பல இன்றியமையாதன வென்று யான் கூறியவற்றை நிர்மிப்பதற்கும் செய்தற்கும் ஆவசியகம்தான், ஆவசியகந்தான், என்று வாய்பேச்சோடேயே முடித்துவிடாது செயலாலும் முடிப்பேமெனத் துணிவார்க்கு,

குடி செய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும் என்றும்
தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி
மெய் வருந்தக் கூலிதரும் என்றும்
கருமஞ்செய் வொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில் என்றும்

சொல்லிய மெய்யுரைகளை வற்புறுத்தி நானும் முடிப்பேனுக.

N. R.

## THE LIGHT OF NATURE.

## இயற்கை விளக்கம்.

### ஓர் நள்ளிர வாலோசனை.

### A midnight miditation.

உலகெலாந் துஞ்ச நள்ளிரு ளோங்கி
யுயர்பெறு முன்னத விரவி
லலகிலாப் பெருமை யையன தாடல்
காண்குவான் பெரும்விருப் புற்று
நிலையிலே நின்றே னீள்விசும் பதனை
நோக்கினேன் பூத்தொளிர் மீனம்
மலர்கதிர் பரப்பி மாயவ னனந்த
விழிகளாய் மறைகளைக் காட்டும்.

வேறு.

ஓடி யாடும் லோக வேலை
யாவு மோயு மொழி விலே
நீடு மோசை மேவி யாரும்
வாரி யீசன் பெருமையைப்
பாட மானு நீல வானு

நீல மேனி பகருமால்
தேட லாகும் பாத சேவை
வேறி யாது தெளிவமே.

வேறு.

சிந்தை யாலாக் குடிகொண்டு
தினமே யிருப்பான் வெளிதன்னி
லெந்தை யெம்மா னுறைகின்ற
திங்கு மங்கு மெங்காகும்
விந்தை யுணர்வார் தென்வளிதான்
வீசக் குழைவர் நேசமிலார்
முந்தைப் பயனால் முடக்குண்டே
யிருளைக் கண்டு மருளுவரால்,

வேறு

அறிவரி யானை யுலனில வென்னல்
பொறியுணர் வில்லாப் பொருளில தென்னல்
நிரைநிரை காட்சி நிலையுள தாதல்
புரையில பெம்மான் புகழ்புரி வாதல்

SEA VIEW.

கடற்றோற்றம்.

வருடமே முதலாஞ் சித்திரை மாத
முழுமதி வார்புகழ் நாளி
லுருசெழு தோற்றத் துவரிநீர்ப் பரவைக்
கண்டனனுளந்தடு மாறிப்
பொருவருந் தன்மை மரக்கலத் தனங்கல்
போரெழு நிலைமையின் மானு
மருமையா மதன்றன் கொடிகளும் புகையுங்
கலக்கமும் விளக்கமுநோக்கின்

வேறு

மாறு மதியைக் கண்டொளிர்
பரவை குரை தோற்றம்
கூறப் பெரியோ ரெதிர் வசை
பேசுங் குறையாமால்
ஆறுத் தார்த்த ரணிபொருள்
சிந்தி யழுவார்போல்
வேறே ரொப்பின் மணியுடன்
முத்துக் கரையுந்தும்

வேறு

காரார் நிறமே யாயினு
மாங்கே கரை மீறிப்
போராப் பெருமைபெரிதுள
தன்றிப் பெரியோர்போல்
நீரா ரேக ஙிகழ்ந்தொளிர்
செல்வ நிலையோங்க
வேரார் வணிக வெழின்மிக
வாக்கு மிருங்கடலுன்

வேறு

என்றிவை யினையன வெண்ணி மீண்டனன்
நன்றவை யுலகினி னுளுந் தீமையோ
டொன்றினு மதுதனை யுணர்வு றுமலே
நன்றதை நாடிடி னன்றெனுஞ் சிந்தையேன்

டி-பக்தவத்ஸலம், பி. ஏ.

## (நன்னூலராய்ச்சி.)

16, ஐ ஔ இ உச்செறிய.

இவர் இனமில்லாத ஐகார ஔகாரங்கட்கினங் கூறுகின்றுழி இகரவுகரங்களை முறையேகிறீஇ யினுற்போல, இனமில்லாத யரவ வழளக்களாகிய இடையின மாறனையுமுடனெண்ணி 'ஐ ஔ இ உச்செறிய முதலெழுத்—திவ்விரண்டோரின யாய்வான் முறை' என்றார்.

அற்றேல் யால வழளக்களாகிய இடையினமாறு மிடம்பெறுமையானும், அவற்றினையு முடனெண்ணிக் கூறுதல் மிகைபடக் கூறுதலா மாகலானும் முறையாவது யாங்ஙன மென்றெழிக.

17, தானமுயற்சி

பிறப்புக்கூறுவான் றொடங்கி முயற்சி முதலிய வற்றினையு முடனெண்ணிக் கூறினர்.

வடநூலாரும் பிறப்பொத்த லொன்றனையே இனமென்றாராகலானும், இடப் பிறப்பொத்த விடையினமாறுக்கும் பொதுவன்றி இவ்விரண்டற்குமே சிறந்த தன்மையானும், இப்பெற்றிநோக்கியே ஆசிரியர் தொல்காப்பியரும் பிறப்பியலை வேறு கூறினமையானும் இனமல்லன இனமாகாவெனக் கூறி மறுக்க.

18. சிறத்தினுமினத்தும்.

குறிலினது விகாரமே நெடிலாதலால் குறின் முன்னிற்றல் பற்றிச் சிறப்பினென்றும், நெடிலினமாய் அதன் பின்னிற்றலி னினத்தினென்றுங் கூறினுரெனவு முரைத்தார்.

அற்றேல் நன்னூலார் 'உயிருமுடம்புமாமுப்பது முதலே' எனச் சூத்திரித்ததற்கேற்ப அவ்



வெழுத்துக் கணின்ற முறைக்கேதுவு மிச்சூத்திரத்தாற் கூறவந்தாராகலின், உயிர்மாத்திரைக்கே யெழுத்தெனக்கொள்ளின் மாறுகொளக் கூறலாய் முடியுமாகலான் அது பொருந்தாமை யுணர்க.

இனி 'வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின்வைத்தல் மரபாகலிற் சிறப்பினென்றும், மெலியார் அதன்பின்னிற்றல்மரபாகலின் இனத்தினென்றும்,இடையெழுத்தாறும்இடப்பிறப்பா னொத்தலும் முயற்சிப் பிறப்பான் வேறுதலு முடைமையான் அவையோரினமாயின வென்றும் உரைத்துக்கொள்க' என்பது.

அம்முத லென்றார் ஆசிரியர் தொல்காப்பியர் 'மெய்யினியக்க மகரமொடு சிவணும்' என்பது நோக்கி யென்க.

34. உயிர்மெய்.

உயிர் மெய் யெழுத்தோன்றில்லையா மாறுசூத்திர விருத்தியினன்குவிரித்தலின் யாம்விரித்தில மென்க.

35. குறியதன் முன்னர்.

இது ஆசிரியவசனமாகிய மேற்கோளாதலானும், உரையாசிரியரை யுள்ளிட்டோரும் குறியதன் முன்னரும் வல்லெழுத்து மிசையுமென்றாரல்லது புள்ளிமயங்கியலுட்டிரிபுக்கிடங்கூறினும் அவ்வவ்வாறிடத் தொன்றிலடங்கலானும் பொருந்தாமை யுணர்க.

36. இசைகெடின்.

ஆசிரியர் தொல்காப்பியர் வல்லெழுத்துவரும்வழிக் குற்றியலுகரந் தன்னரைமாத்திரையிற் குறுகுதலை யோரெழுத்தாக வைத்தெண்ணுமையானும், உரைகாரரும் எழுத்துப் பலவாயின ஒலி வேற்றுமையாமென்ப வாகலின் நெடிலது விகாரமாய்த் தத்தமாத்திரை மிக்கொலிப்பதே யளபெடை யென்றமையான் வேறோரெழுத்தென்றல் பொருந்தாமையானும்,சிவஞானமுனிவருஞ்சூத்திரவிருத்தியில் "அளபெடைஅந்நெட்டெழுத்தோடுகுற்றெழுத்தொத்து நின்று நீண்டிசைப்ப தொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறுபொருள் தாராது இசைநிறைத்தன்மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின் வேறோரெழுத்தென வைத்தெண்ணப் படாதாயிற்றென்பது நுண்ணுணர்வா னோர்ந்துணர்க" என்றமையானும், பொருந்துமா றில்லையென்க; ஆகலான் ஆசிரியர் எழுத்தெனடையென்னுது அளபெடையென்றலே வேறோரெழுத்தன்மைக்குச் சான்றுமாதலறிக.

இது பற்றியே எழுத்துவகையா னென்னுது 'மாத்திரை வகையாற்றனை தமகெடாநிலை—யாப்பழியாமையென்றளபெடை வேண்டும்' என்றமையான் 'எழுத்திற்கு மாத்திரைகோடலும் அசைத்தலும் சீர்செய்தலும் தளை யறுத்தலும் ஓசைபற்றியல்ல தெழுத்துப்பற்றியல்ல' எனச் சிவ ஞானமுனிவர் கூறுதலானு முணர்க. இதனுனே ஒற்றளபெடையு மொற்றின் வேறுகாமை யுணர்க. இனி அவ்வொற்றள பெடையின்கண் ஒற்றினையேயன்றி ஆய்தத்தினையு முடன்கூறியது ஆய்தத்திற்கினமில்லாமையி னென்க.

38 நெடிலோடாய்தம்

'தனிநெடிலேழுடனே ஆய்தமொன்றும் மொழியிடையீறுகளில் வரப்பெறுத ஔகாரமொழித்தொழிந்த உயிர் பதினொன்றும், வல்லெழுத்தாறும், மெல்லெழுத்தாறும், வல்லெழுத்துக்களோடு தொடரப்பெறுத இடையெழுத்தைந்துமாகிய முப்பத்தா றெழுத்தினுள், யாதானு மொன்று ஈற்றுக்கயலெழுத்தாய்த் தொடரப்பட்டு மொழியிறுதிக்கண் வல்லெழுத்துக்களுள் யாதானு மொன்று பற்றுக்கோடாக அதனை யூர்ந்துவரின் அவ்வுகரந் தன்னரைமாத்திரையிற் குறுகு'மென விரித்தார்.

அஃதேல் தனிநெடி லேழனுள் ஔகாரமும், உயிர்பதினொன்றனுள் ஈகாரம், எகரம், ஏகாரம், ஒகரம் என்பனவை ஈற்றுக்கயலெழுத்தாய் வரச்சொற்கள் தோன்றுமையானும், குசுடுதுபுறுக்கள் ஈற்றி னிற்பனவாகலான் தனிநெடின் முதலாய அறுதொடரென நலிந்து பொருள் கொண்டார் கூற்றும் பொருந்தாமையானும், பிறுண்டும் முப்பத்தாறனையு மெடுத்தாளாது தொடரறனையுமே எடுத் தாளுதலானும், இன்னோரன்னவைபோலியுரையென்க. இனிக்குற்றியலிகரக்குற்றிய லுகரங்கள் இடமும் பற்றுக்கோடும் பற்றிக்குறுகியசைத்தல் வேண்டுமாலெனின்; தாது, எது முதலிய வடமொழிகளும் அவ்வாறு குறுகவேண்டும்; அவ்வாறன்மையின் குற்றியலிகரக் குற்றியலுகரங்கள் நிற்றற்கு அவைகாரணமாகாவென் றொழிக. இது வேசிவஞானமுனிவர்க்கு முடன்பாடென்பதனைச் சூத்திரவிருத்தியிற் காண்க.

3. யகரம்வர.

உயிர்திரிந்ததென்றல் யாண்டும் பொருந்தாமையானும்; யகரம் வருவழியாண்டிகரங்குறுகி உகரக்கிளவி துவரத் தோன்றாமையானும், திரிதல் மெய்க்கே இயல்பாதலானும் பொருந்தாமையறிக. அற்றாகலினன்றே ஆசிரியர் தொல்காப்பியரும், 'யகரம் வருவழி இகரங் குறுகும்-உகரக்கிளவி துவரத்தோன்றாது' என்றதூஉ மென்க. ஈண்டுக் குறுகுதலணுகுதலென்பதனைத் 'தீவினை முதிர்வலைச் சென்றுபட்டிருந்த—கோவலன் றன்னைக் குறுகினனாகி' என்புழியுங் காண்க.

40. தற்சுட்டளபொழி

ஐகாரந்தன்னைக் கருதித் தன் பெயர் கூறுமளவிற் குறுகா தொழிந்த மொழியிடை கடையென்னு மூன்றிடத்து முன்னும் பின்னு மிருமருங்குமாய எழுத்தின் றொடர்பால்தன் மாத்திரை மாத்திரையிற் குறுகு மென்றார்.

அற்றேல் ஐகார முதற்கட் குறுகாமைசெவிகருவியாக வுணரப் படுதலானும், 'வைகலும் வைகல்' என் புழிமுதற் கட்குறுகுமாயின் குறிலிணையொற்றா யசைக்கப்பட்டு வெண்டளை சிதைந் திடர்ப்படுதலானும், உரையாசிரியரும் 'ஓரளபாகு மிடனுமாறுண்டே' என்னுஞ் சூத்திரத்து ஐகாரமொழிமுதற்கட் குறுகாதென்பதன்றி, இடனென்றதனான் இக்குறுக்கஞ் சிறபான்மை யெனவும் விரித்தமையானும் ஐகார மொழிதற்கட் குறுகாதென்பது தெற்றென்றுணர்க.

ஔவிய நெஞ்சம்' என்றாற்போலவன முதற்கட் குறுகாமையானும், காரிகை நூலுடையாரும் 'குறுகிய ஔவுயி' ரென்றே யொழிந்தமையானும்; சிவஞான முனிவரும் சூத்திரவிருத்தியில் இதனையே யுடன்பாடாகக் கொண்டமையானும், ஔகார மொழிமுதற்கண்குறுகினமை யாண்டைய தென்றொழிக.

இனி உரைகாரரும் 'தற்சுட்டள பொழிஐ' என்புழித்தன்னைக் குறித்துத் தன் பெயர்சொல்லு மளவிற் குறுகாதெனவே பொருள்விரித்தாராலெனின், அஃது அளபெடையினுங் குறுகுமெனப் படுவதனானும், அஃதங்ஙனமாயின் நன்னூலாரும் 'தற்சுட்டல்லுழி' யென்றே கூறுவாராகலானும்; ஈண்டளபெனற் களவெனின் 'உயிரளபு' 'ஒற்றளபு' என்புழி அளபெனற் கியாது பொருளென்பார்க் கிழுக்காய் முடிவதனானும், இங்ஙன முன்னொடு பின்மலைவாகக் கூறுதலரியற்கை யென்க.

42 லானவிற்றியைபின்.

உரைகாரர் 'ஆய்தந்தன்னரை மாத்திரையிற் குறுகுமென்பதன்றி ஆய்தங்குறுகாதெனக்காண்டல் விரோர்தங் கூறுவாருமுளர்' என்றார்.

அற்றேலஃதாக; இவர் ஆய்தமரை மாத்திரையென வகுத்ததற்கேற்ப அஃது அலகுபெற்றும் பெறாதும் வருமெனக்கூறி அலகுபெறுதற்கு 'அற்றாலளவறிந்துண்கவஃதுடம்பு'' எனவும், அலகு பெறாமைக்குத் ''தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்-'' எனவுங் காட்டுரைத்தாராலெனின், இவர் கொண்டவாறு ஆய்தவெழுத்துப் போன்றலகு பெறுதிருத்தல் வேண்டும்; அற்றேல்'உண்க வஃதுடம்பு' என்புழி ஆய்தம் ஒருகுற்றெழுத்தே போல் அசைக்குறுப்பாய்நிரையசைச் சீரென நிற்பதாகலானும், அல்வுழி ஆய்தமளபெடுத்தல் வேண்டுமோகலானும், இஃதுங் கடைச்சங்கமரீஇயநூலாகலானும், உரைகாரரும்ஒற்றொடுமொத்து வருதலின் ஈண்டுத் தந்துரைத்தாரென்றமையான் குற்றெழுத்தே போல மாத்திரையொன்று பெற்றுவருமென்பதுதானே போதருதலானும், 'உரையினு மிசையினு மருகித்தோன்றும்' என்னுஞ் சூத்திரத்து உரையாசிரியரும் அவ்வாய்தம் தன்னரைமாத்திரையிற் சுருங்கி நில்லாதென்றமையான் ஒருமாத்திரைபெறுமென்றூஉம் அருத்தாபத்தியான் அமைவதனானும், ஆய்தக்குறுக்கமொன்றில்லை யென்பது காண்க.

44 மூன்றுயிரளபு

நெடிலிரண்டு மாத்திரையெனக் கூறியவதனான் அஃது குறுகியவழி ஒருமாத்திரை பெறவேண்டுமென்பதே மரபாகலானும், உரையாசிரியரையுள்ளிட்டோர் ஐகாரம் மொழிமுதற் கட்குறுகாதென்றமையானும், ஐகாரம் மொழிமுதற் கட்குறுகினமை யாண்டையதென்றொழிக.

இனிஉரைகாரர் ஔகாரக்குறுக்க முமொழிதற்கண் ஒன்றரை மாத்திரைபெறு மென்றே கூறினார்; அஃதேல் அது 'ஒன்றே குறிலோடையெனக்குறுக்க மொற்றளபு' என்றநன்னூலாரோடு முரணுதலானும், ஔகாரம் குறுகாதென்பதனை



யாம்விளக்கிக் காட்டினமையானும்பொருந்தாமையுணர்க.

தி. சண்முகம் பிள்ளை,

---

## TIT-BITS III

### அதிமதுரம்-111

---

ஒவ்வொருவர்க்கும் ஆலோசனை யென்பது அதிகம் வேண்டும். ஆலோசனை யின்றேல் அழகும் தோன்றாது, அமைதியும் காணாது. உலக நடவடிக்கைகளி லாயினும்சரி, அல்லது, உன்னத பதவி நாட ஊக்கஞ் செலுத்துதலி லாயினுஞ் சரி, எதிலாயினும், ஆலோசனை யின்றேல் அஃது அடியோடே நாச மாகு மென்பதில் யாதும் தடை யிலது. முக்தி யளிக்கும் பக்தி நெறிக்கும் அஃது அவசியமே; பொருள் வளங்கொண்டு பூமியில் வாழ்தற்கும் அஃது அவசியமே; நல்லற மென்று நானிலம் புகழும் இல்லற நடாத்தும் இயல்பிற்கும் அஃது அவசியமே. கொடியரைக்கொன்றுகுடிகளைக்காக்கும் மணிமுடி மன்னர் மாட்சி பெறுதற்கும் அஃது அவசியமே;—இவ்வாறாக ஒவ்வொன்றிற்கும் வேண்டி யிருத்தலின் அது எங்கும் தங்கி இன்றி யமையாது இருத்தல் வேண்டு மென்பதும், அதை நாம் விட்டால் நம்மை அது விடும் என்பதும் கண் கூடாக நாம் காண்கின்றோ மல்லவா? இத்தகைய ஆலோசனை யென்பது தனித்தனி மனிதர்க்கே யன்றி மஹா ஜனங்களுக்கும் அவசியம் வேண்டும். பொதுவாக மேதக்க ஆலோசனை கூறுவோரும், வியக்கத் தகும் உபதேசங்கள் செய்வோரும், அரிய கிரந்தங்க ளியற்றும் பெரியர்களே யாவர். அவர்கள் நுண்ணிய அறிவே அகில மெங்கும் கண்ணியம் விளக்கும். இலக்கியம் இல்லாத ஊரார் புத்தி உலக்கைக் கொழுந்தேயாகும். கோயிலில்லாவூரில் குடியிருக்கக் கூடா தென்றார் மூதறிஞர்: அது போன்றே படியாத குடித்தனம் விடியாது விடியாதென்று பலமுறையாம் பகர்கின்றோம். இக்காலத்தில் அனேகர் பொருளையே விரும்பாது பணப் பொருளையே விரும்பி தீஞ்சுவை பொருந்திய மாங்கனி விடுத்து வேப்பங்கனியை விருந்தாக்கிடுவது போல் உபயோக மற்றதும் அவலக்ஷண முற்றதுமான அற்பச் சுவடிகளை அரை ரூபாய்க்கு விற்று விடுகிறார்கள் நோயைத் தீர்க்கும் தூய்மை நீங்கி வாயைக் சைப்பிக்கும் வன்மை மாத்திர முற்ற இப்புத்தக வேம்பை 'முதுகாட்டிற் காக்கை யுகக்கும் பிணம்' என்கிற படி நம்மனோர் பொழுது போக்குக்காக மிகப் பெரிதும் விரும்பி உள்ள அறிவையும் ஒழித்துக் கொண்டு பல்லை யிளித்து நகைத்துக் கொண்டு பாழாய்ப் போகிறார்கள்.

* * *

கதை கதை யென்கிற கோஷ்டம் காதடைத்துப் போகிறது ஆங்கிலக்கதைகள் பாங்கு பெற்றதைக் கண்டு நம்மனோரனேகர் நாவல் (novel) எழுதத் தலைப்பட்டனர். உள்ளத்தின் நிலையை விளக்கியும் முகத்தின் குறிப்பை மெய்ப்பித்தும் பலவகையாய் அறிவு அபிவிர்த்தி யாகும் வண்ணம் அற்புதமாய் பொற்புடையதாய் அந்த சந்தத்துடன் சிந்தை மயக்கறுக்க வல்லவர் வெகு சிலரே. ஏனையோர், புலியைப்பார்த்துச் சூடிக்கொண்ட பூனையோர் காலத்திற் கியையாததும் கற்பனாசக்தி குன்றியதும் வாக்ய லக்ஷணம் வழுவழுப்பாகவும் சொல்லணி யென்பது சொல்ரமலே மறைந்தும் பாட்டியம்மாள் கதை பரபரப்பாய்க் கூறினது போல் ஒரு ஊரில் ஒரு ராசன் கதை களாகிற கட்டுக்கதைகளை எட்டிடத்தில் முட்டிக் கொள்ளும் வகை இயற்றி விடுகிறார்கள். இதைக் கண்ட நம் ஏழை மாக்கள் கஷ்டப்பட்டுக் கிடைக்கும் கனகத்தைப் பார்க்கினும் சோம்பலுற்றுச் சாம்புதலே சாஸ்வத மென்று நம்பி அறிவை அபிவிர்த்தி யாக்கா விடினும் மனதிற்கு மாத்திரம் கஷ்டங் கொடாத மகிமையுள்ள நூல்களை வெகு இனிமையாய்ப் படித்து விடுகிறார்கள். விஸ்வாஸக் காரனுக்கு வெந்நீருஞ்சோறும் தாட்டோட்டி மணியக்காரனுக்கு தயிரும் சாதமும் என்னும் பழமொழி இவர்களிடத்தே காணலாகும். இன்னோர்க்குப் பெய்கிறமழையும் பழுதாகி, கையிற் போட்ட சோறும் புழுவாகி, காலங்கடக்கினும் கவலை கடவாத மனத்தினராய் தலையை உடைத்துக் கொண்டும் தாசில் தார்கச்சேரி யேறிக் கொண்டும் தாறுமாறாய்ப் போகக் கேட்பானேன்?.

* * *

அந்தந்தோ! இன்னோர் கதி யிவ்வண்ணமாக ஆங்கிலம் பயின்ற நம்மனோர் மதியும் சதி-செ

ய்வதே யாகும். ஆங்கிலத்தால் உண்டான பங்குகள் அனேகம். ரோஜா விடத்தில் முட்களும் செவ்விய குண்டுமணியைக் கவ்வி யுள்ள கருமையும் போன்றே அதன் அலங்காரத்தோடு அலங்கோலமும் பலவுள. வேடம் பூண்டு நாடகமாடுவோர் போன்றும், ஆண்டாண்டு தோறும் மாண்டார்க் கழுவார் போன்றும், காங்கிரஸ் மேடை யேறியும் சீர் திருத்தம் பற்பல கூறியும் இவர்கள் தோன்றித் தோன்றி மறைந்து போவதில்யாதும் பயனில்லை. இவர்கள் ஆங்கில பாஷாப் பிரசங்கத்தில் நிபுணர்கள் தான்; அதிகவரும்படி யுள்ளவர்களென்பதும் வாஸ்தவமே; சுயலாபத்தைக் கருதினோர் பலரென்பதும் பொது நலங் கோரினோர் சிலரினுஞ் சிலரே யென்பதும் இவர்களுக்குப் பொருந்தியதே; மேலும் இப்பெருந்தகையாளார் சுதேசிகள் நன்மையை நாடுவதாய்க் கூறினும் சுயபாஷையை விரும்புதல் இவர்களியற்கை யன்று. இக்காரணத்தால் எந்த முடிவும் வந்து விடியாது, தோசை விற்போர் துட்டையுஞ் செலவழித்து, பந்தல்களும் மண்டபங்களும் பலவகை பரப்பி, சிலர் பேசுந்திறமையில் பிரகஸ்பதி யென்ற பெயர் பெற்றும், வேறு சிலர் பொது நன்மை பொது நன்மை யெனப் புகன்று புகன்று அதையே உடும்பு வாலென அடத்துடன் பிடித்து உத்யோக மதிலேறி சத்தியாய்க் காலங்கழித்தும், நன்மையே நாடுவோர் வன்மையே சிறிதுமின்மையா யொழிந்து ஊக்கம் நீங்கி ஏக்கந்தாங்கவும், பற்பல விந்தை உற்பவிக்கின்றது. ஒரு விதத்தில் இன்னோர் நம் ஸ்ரீக்குத் தீமை விளைக்கும் தூமகேதுக்களே யாவர்.

* * *

ஹிந்துக்கள் தத்தம் சுய பாஷையை அபிவிர்த்திசெய்வது அத்யாவசிய மென்று இவ்வருடம் காங்கிரஸ் மாஹா சபையின் அக்ராசனாதிபதியாய் அமர்ந் திருந்த லால் மோஹன கோஸ் என்பாரும் சர்வகலாசங்கத்தின் கான்வொகேஷன் உபந்யாசம் புரிந்த ஸெல் என்னும் பாதிரியாரும், நம் இந்தியாவின் கவர்னர் ஜனரலாகிய கர்ஸன் பிரபுவும் பலவிதம் வற்புறுத்திப் பேசினார்கள். அவர்கள் உண்மை யுரைத்த வுத்தமர்களாதலின் யாம் வண்மை யுடன் அன்னோர்க்கு வந்தனம் புரிகின்றோம். ஆயினும் நம் நிலைமையை நோக்குங்கால் இஃது எவ்வாறு நடக்கும் மென்பது நம்மனத்தை வருத்துகின்றது. நம்மனோரில் ஆங்கிலம் பயின்றோர்க்கும் ஏனையோர்க்கும் பொருத்தமென்பது அணுத்துணையும் கிடையாது. சுத்தத்தமிழ்ப் பண்டிதரும் நாட்டுப்புறத்தோரும் ஆங்கிலம் படித்தோனை யவமதித்து "ஏபிஸிடி படிததானும், ஏற்ற வழக்கங்களை விடுத்தானும், கோணெழுத்தைப் படித்தானே, கொடிய வழியைப்பிடித்தானே "என்று மோனை தவறாத படியழுவார்கள்: ஆங்கிலம் படித்து அனைத்தும் மறந்து அரைவரிசை யுயர்ந்த துரைப்பிள்ளைகள், சடாம் நான்ஸென்ஸ், டர்டி வெர்னகுலர்ஸ் அன்ட்டல் ஹெடெட் வில்லேஜெர்ஸ்' என்று வாயாடி தலைகால் தெரியாது துள்ளித் தொப்பென்று விழுவார்கள் இவர்கள், கடைத் தேங்காயையெடுத்து வழிப் பிள்ளையார்க்கு உடைக்கும் கர்ண மஹாப் பிரபுபோன்று, தம் சகோதரர்களுக்கு அஞ்ஞானம் போகவும் விஞ்ஞானம் விளங்கவும் யாதொன்றுஞ் செய்யாது அரசாங்கத்தாரை நாடி அவரிடமிருந்து அடுக்கடுக்காய்ப் பெற ஆத்திரம் படுவதும்; அங்கிலம் பயிலாத சுதேசிகள், 'படிக்கவே மாட்டோம், பட்டு சொக்காய் வேணும், பலகாரம் வேணும்' என்று பரதவிக்கும் பையல்கள் போன்று பிடிவாதம் செய்வதும் அடியோடே நாசமாவதும் நகையை விளைத்து அழுகையையு மெழுப்புகின்றது,

* * *

இக்கஷ்டங்களைப் போக்கி நாளுக்குநாள் நம்மவர் மேன்மை யுற்று மிடி தீர விரும்புவார்களா? விரும்புவாராயின் தங்களுடன் பலநாளாய் இங்கிதம் புரிந்து கொண்டிருக்கும் பிடிவாத மென்னும் முட்வாத நோயும், வழக்கம் வழக்கம் என்னும் இழுப்பிழவு நோயும் இன்றே நம்மை விட்டகன்றோட வேண்டும். நம்மைக்கவிந்து நாலு பக்கங்களிலும் நாசம் விளைக்கும்அவிவேகம் வெகு வேகமாய்ப் பறக்க வேண்டிய தாயின், ஒளியைக் கண்டு களியுற்றும், இருளை நோக்கி மருளென நினைத்தும் ஒருவர்க்கொருவர் நேசமுற்றொழுகுதல் வேண்டும்.

சூத்திரர் என்று வம்பு வழக்கிட்டு வாது விளைத்தலும் சூது புரிதலும் அடாது: ஆங்கிலப் பட்டம் பெற்றோர், தாமுணர்ந்த நூற்பொருள்களை அன்போடும் ஆதரத்தோடும் சுயபாஷை வழியாகத் தம்சனங்களுக்குப் பல்வகை போதி



த்து ஒற்றுமை பாராட்டி வித்தியாசம் போக்கியும், மற்றைச் சுதேசிகள்! தாய்ப்பால் [கண்டசேய்போல அறிவை ஆர்வத்துடன் சிறக்கச் செய்தும் படிப்படியாய் மேன்மை யுறுவது சான்ற குணமாகும். மூடவன் கொம்புத் தேனுக் காசைப்பட அதனை யெடுத்துக் கொடுக்க அன்பனொருவன் தோன்றினும், வாங்கிக் குடிக்க வகையறியாது ஓங்கியெறிந்தால், ஆங்கவன் வறுமை கூற யாவரால் தரம்? அல்லாமலும், நித்திய தரித்திரத்தால் மொத்துண்டு கிடப்பவனுக்கு ஆணிப்பொன்னும் மாணிக்க ராசியும் அடுக்கடுக்காய்த் தந்தாலும் வைத்துப் படைக்க வழியில்லாது காக்கைப் பொன்னும் கண்மூடிக் கல்லுமே நிலையென்று மலைவுறுவது அவன்செய்த துர்ப்பாக்கியமே!

நாம் கூறிய சிலவற்றால், பாட்டால் பலனொன்றுமில்லை யென்றும் தத்துவ விசாரணை செய்தலால்பித்த மேறுமே யன்றி மற்ற நன்மை யெதுவுமில்லை யென்று கொள்ளலாகாது. இருப்புப்பாதைகள் நெருங்கியும், தந்திக்கம்பிகள் அந்தமுற விளங்குகிற தேசமாயினும் தத்துவ விசாரணை யில்லாத நாடு முற்றவும்பாழான தென்று மேஸன்பண்டிதர் (Professor Masson) முடிவுறவரைந்திருக்கிறார் (videRecentBritish Philosophy) அங்கமுழுவதும் பங்கமுறு திருப்பினன்றே அழகுமுழுவதும் செழுமை யுற்றதென்ன லாகும்? அன்றியும் நாற்புறமும்பதினாறு கலைபரப்பி எற்புடைத்தாயினன்றே, பூரணச்சந்திரோதயம் பொலிவுற்றதென்னலாகும்? இதற்கிசைய, கைகள் நீண்டும் கால்கள் குறுகியும் மார்பு சுருங்கியும் வயிறு பெருத்தும் தீண்டி மிகுத்தும் அறிவு வெளுத்தும் போகவேண்டு மென்பது நமது கொள்கையன்று. ஆயின் பாட்டுகள் என்பன எவை, எத்தகைய என்று கேட்கு மிடத்து! அழகுண்டாண விடத்தெல்லாம் பாட்டுண்டென்று வரைந்தார் எமதன்பர் பண்டிதர்—வேதாசலம்பிள்ளை யென்பார். ஆங்கில மூந்தமிழும் அழகுறக் கற்ற நம் நண்பர் தமிழ் மாதுக்குத் தக்க புதுப்பணி செய்யப் புகுந்திருப்பது நம்மவர்க்குப் பெருமகிழ்வு விளைப்பதாகும்: இயற்கை உயர்வையும் உன்னதத்தையும் அச்சத்தையும் அருமையையும் சொல்லழகோடு பொருத்துதலே சுவையுடைய பாட்டாகும் என்பது எம்முடைய துணிபும்.

'பாட்டு' என்பதை நாம் எவ்வகை கொள்ளவேண்டியது? சீர்சான்ற, கார்சான்ற, தார்சான்ற, பார்சான்ற என்னும் எதுகைகளை மாத்திரம் பொருத்தி; சொற்றுற னின்றி, சொல்லழகின்றி-பாநயமின்றி பாவிலக்கண மின்றி, பாவிற் கவசியமாய் மேவிய கற்பனையின்றி, பற்களின் நடுவில் கற்களையுடைக்கும் பண்பினை யடைந்து பகட்டு செய்வதெல்லாம் பாட்டாகாது. பாட்டியிற்றும் பான்மை யுறாது பறைமாத்திரமடிக்கும் பண்டிதப் போலிகளைப் பற்றி முன்னொருக்கால் நாம் வேடிக்கையாய் வரைந்த விளையாட்டுப் பாட்டை யிங்கு குறிக்கின்றோம்.

உலகமெலா மொருபிடியாய் விழுங்கிடுவே
    முரையுடனே நன்னூ லாதி
பலகலையு மிகவல்லேம் பாணினியே
    நாமென்னப் பகரும் பான்மை
நிலவியசீர் மெய்ப் புகழேம் நினைக்குமுனே
    நெடுங்கணக்கு நிமிரப் பாடும்
புலவர் சிங்கப் பூச்சியப்ப னென்றனக்குப்
    போனகந்தா னளித்தி டாயே

உலகமுண்டு உளம் பூரித்த பூச்சியப்ப ஞதி பெரும் புலவர்கட்கு அன்னப் பிடியும் கன்னற் பிடியாயினதோ, எதிரொன்றில்லாக் குதிரைக் கொம் பாயினதோ அறிகிலேம். சருணையே வடிவாய்க் கருணையே மொழியாய்க் கருணைததும்பி அருண்மெய்ப்பாடலளித்த அற்புதப் பெருந்தகை எம்-ராமலிங்கப்பெருமானுக்கும் பின்னர் எவரே உண்மைப்பெரும்பாவலர் உளராயினர்?.

உபயோக மில்லாத பொருள் உலகத்திற் கிடையாது. உள்ளத்தை யுயர்த்தியும் கள்ளத்தை விலக்கியும் நாணயம் விளைக்கும் நல்லிசைப் பாட்டால் எல்லாச் சீருந் தோன்றுமே யன்றிப் பயனற்றுப் போவது யாங்ஙனம்? நாட்டோர் புகழும் பாட்டரசே! உன் நளினத் திருவழகை நாவெடுத்துரைக்கலாகாது. திருவாய் மொழிப் பண்டிதன் கண்ட ஒருவாய் மொழிவிளக்கே! நாவரசன் விரும்பிய பாவரசே! கம்பன் விரும்பிய செம்பொன்னே! உன் அற்புதத் தகைமையும் பொற்பின் பெருமையும் யாவர் கூறத்தரம்! நீ நின்ற நிலையிலிருந்தே, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து விண்மீன்களிலுண் மீனென விளங்கி அவைகளுடன் அளவளா

வி முகமன் பேசியும், ஆங்கிருந்து மிழிந்து பாதாளத்தின் பண்பினை யறிந்து, பூமியிற் றங்கிப் புத்தமுதுண்டாலென மெத்த மகிழ்ந்து, மெல்லிய பூக்களில் உல்லாசமாய் படிந்தும், கடுகிய காற்றில் மூடுகி நடந்தும் ஆற்றிலுங் குளத்திலும், அருவியிலும் கடலிலும், மலையிலும் குகையிலும், காட்டிலும் மேட்டிலும் அங்கு மிங்கு மெங்கும் பரவிக் காணும் பொருளைக் கண்டுபிடித்து, அனைவரும் உள்ளங் குளிர உரோமஞ் சிலிர்ப்ப மெய்மறந்து மேன்மையே நோக்கச்செய்த நினது வன்மை செப்பவுங் கூடுமோ, நினது எழிலை இசைக்கவும் ஆகுமோ! எழுத்தெண்ணி, சீர்பிரித்துத்தளையறுத்து எதுகை மோனையும் கடின பதங்களும் சேர்வதா லேயேநேர்வதின்றி, கற்பனையும் சொற்சுவையும் கலந்த விடத்தே யிலங்கி நின்று காதல் விளைத்துக் கருணைபுரியும் கற்பகமே, பொற்புகழே!—ஓரோவேளை, வீராவேசத்துடன் வீறுகாண்ப் பேசியும், மற்றோர் வேளை, மெல்லிய வீணையிற் சில்லெனவொலித்தும், இங்குழலதனிற் பாங்குறப் பயின்றும், காம்பீரந் தோன்றக் கண்டத்தான் மிழற்றியும், பற்பல வகையால் அற்புதம் புரிந்து சங்கீதந் தன்னி லிங்கிதம் காட்டிய சிங்காரப் புலவன்நீ

* * *

ஆனந்தம் காட்டி வானந்தம் விளக்கிய அரும் பெரும் புலவ! உன்மன தாழங் கண்டு பிடிக்கமணிதரா லாகாது. கடலின் கருமையுங் காலத்தொடர்ச்சியும், எவ்வாறு, கங்குகரை யின்றி, தங்குதடையின்றி, நோக்க நோக்கப் பின்னும் பின்னும் வளர்ந்துசெல் கின்றனவோ, அவ்வாறே, உன்மனமாட்சியும் கணிப்பருங் காட்சியும் மனோகரமாயும் மனோதீதமாயும் விளங்குகின்றன. நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்ப்போர் சிலர்கூறிய அறிவும் தெள்ளியவுணர்வு மின்றி, கட்டின வீட்டிற்குக் கருத்து சொல்லு கிறார்கள் அந்தந்தோ! ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியரே எல்லாக் காலத்திற்கும் இலக் கணம் கூறலாகுமா? நன்னூலாரே பின்னும் பின்னும் புதியன புகும் என்றாரன்றோ? கால மேறவும் அறிவு பெருகு மென் பதறியாது அறிவு பெருகவும் இலக்கியம் விரியு மென்பதுணராது இலக்கியம் விரியவும் அறிவு பெருகவும் அபிப்பிராயங்கள் மாறியும் மறைந்தும் தோன்றியும் துலங்கியும் போதருமென்ப தோராது, இவை யெல்லா மிப்படியாக, இலக்கணம் மாறிமாறித் தேரு மென்பது காணாது; சின்மதிப் புலவர் சில்லோர், எங்கள் வீட்டுக்குட்டிச் சுவர், குட்டிச் சுவராகவே, எட்டடியும் யாத்த தாகவே எப்போது மிருக்க, வேண்டு மென்றழைப் பேச்சுப் பேசுவார் போன்று, அகத்தியர் தமிழே அகத்தியம் வேண்டு மென்று அச்சொல் கூறிஅனர்த்தம் விளைக்கிறார்கள். நேற்றுக் கண்ட பூதத்துவ ஆராய்ச்சி முடிபுகளும் சிற்றகத்தியத்திற் காணுவிடினும் பேரகத்தியத்திற் கண்டோம் கண்டோம் என்று அண்டம் வெடிக்கப் பேசி அலமந்து போகிறார்கள். பழைய இலக்கணத்தைக் கொண்டு புது இலக்கியத்தில் தப்பு காணுவது, கட்டை வண்டியின் கட்டைக் கொண்டு புகை வண்டியின் மீது புகார் செய்வதையொக்கும். ஆங்கிலம் பயின்ற அறிவினரே! நீவிரும் இனிஇவர்கள் மதம்மேற் கொண்டு, இப்போது நடைபெறும் ஆங்கிலத்தை யிகழ்ந்து சாஸர், (Chaucer) பாஷையைச் சார்ந்தெழுது வீராயின் எல்லாப் புகழும் இனிதின் அடைவீர்கள்.

T. பக்தவத்ஸலம், பி ஏ.

---

## MY FATHER.

## எனது தந்தையார் தந்தைசெய்நன்றி

---

### சோமவார விரதம்.

கார்காத்த வேளாண் மரபினருக்குச்சிறந்தது. இதன் சிறப்பைத் திருவிளையாடற் புராணத்தில் விசேடமாய்க் காணலாம். பிரதிசோமவாரத்திலும் சுங்கக்காரர் வீட்டிலே சிறியவர்களைத் தவிர்த்துஏனையவர்கள் எல்லோரும் விரதம் அனுட்டிப்பார்கள். ஒருபொழுதுச் சாப்பாடும், இரவிற்பலகாரமும் செய்வார்கள். ஆதலால் அன்று இரவிற்கு மூன்று வள்ள அரிசியும் அதற்குத் தேவையான உழுந்தும் ஊறவைத்துக் கலந்து அரைத்துத் தோசை சுட்டார்கள். இரவு இரண்டு நாழிகையாயிற்று. தலைவர் அருணாசலம் பிள்ளை வீடுவந்து சேர்ந்தார். தம்பிமார்கள் மூவரும் முந்தியே வீட்டில் இருந்தார்கள். மற்றவர்களும் வீட்டு நாயகர் முன்னிலையை அடைந்தார்கள்.



இவர்களைப் பார்த்துக் கலந்து வார்த்தையாடிக் கொண்டு அனுட்டான முடித்து அங்கிருந்தவர்களை நோக்கி அருணாசலம்பிள்ளை குட்டியம்மாள் தங்கம்! சின்னச்சாமி! நீங்கள் மூவரும் இதோ அந்தத் தாம்பாளத்தில் தோசைகளை நிறக்க எடுத்து வைத்துப் புளியமரத்துச் சாமிக்கு நைவேதித்துக் கொண்டுவாருங்கள்'' என்று சொன்னபடியே நைவேதித்து வந்தார்கள். உடனே இலைபோட்டுப் பரிமாறியதும் எல்லோரும் பந்தி பந்தியாய் வீற்றுப் பலகாரஞ் செய்தார்கள். கலகலெனப் பேசினார்கள்; களித்தார்கள். இவ்வீட்டின் அதிசயமான ஒரு வழக்க மென்னவென்றால், எது செய்தாலும் சாமிக்குக்கொண்டுபோய்ப் படைத்தபின்பே சாப்பிடுவார்கள். இதனால் அநேக லாபங்கள் விளையும். எதுவும் சுடச்சுடப் பணியார மாகாது இவர்களதுகுல தெய்வம் சத்தரிஷி லிங்கர் எனப் பெயர் பெற்றாலும் முனியப்ப னென்றும், புளியமரச் சாமியென்றும் கூறப் பெறும். உண்டு களித்து எல்லோரும் படுத்துறங்கியதும், தலைவர் ஆலோசிப்பதாயினர். பெண்பிள்ளைகளுக்குக் கலியாணமுடிக்க எண்ணினர். இவ்வாறாக அநேகநாள் எண்ணிக் கடைசியாகத் தமது இரு பெண் மணிகளுக்கும் தக்க இடத்தில் இரு செல்வங்களும் அமையப்பெற்றவரன்களெனப் போளுவாம்பட்டிக் கருணீகர் இராமசாமி பிள்ளை, அவர் சகோதரர் ஆறுமுகம்பிள்ளை இவ்விருவர்களைத் தெரிந்து, இவர்களுக்குக் கன்னிகாதானம் செய்தனர். இவர்களில் முந்தியவர் கல்வியுஞ் செல்வமும் பூத்துக் கீர்த்தியுடன் வாழ்ந்தவர். அடுத்தவர் சோதிடக் கடல் பருகியவர். பருவமடைந்த பெண்மணிகளுக்குத் தக்க கண்களைக் கணவர்களாகக் கட்டியமைத்த பிறகு, பிறந்தமுதல் சாத்திரப்படி சடங்குகள் அனைத்தையும் செய்து வந்த மூத்த குமாரன் வேதமாமுனிக்குப் பாரபத்தியக் காரர் வமிசத்திலே அந்தியூரார் கூட்டத்திலே சிதம்பரம் பிள்ளை மக்களிலே இனியவளான இலக்குமியம்மாளைத் தேர்ந்து காம்பற்றிவைத்து உள்ளமபூரித்தார். இவரது தங்கையை அதேவமிசத்தில் சீரும் சிறப்புமுற்றவாறும் தியாகராஜபிள்ளைக்குக் கலியாணஞ்செய்தனர். இவ்விதமாகத் தமது பெண் மணிகளுக்குக் கல்விச் செல்வம்பூத்து நன்னடைக் கையை ஆபரணமாகப் பூண்டுள்ளவர்களைப் பர்த்தாக்களாக்கிக் கண்குளிரக்கண்டார் இவ் வைபவங்களுக்கு முன்னரே தமது இளைய குமாரனை சந்திர சேகரனைப் பள்ளியில் வைத்தார். இவன் நெடுங் கணக்காதியவைகளைஇளமையில் கற்றனன். நிகண்டோதினன். அந்தாதி, பிள்ளைத்தமிழ், அரிச்சந்திர புராணம் படிப்படியாய்ப் படித்தனன். கடிதம் எழுதத் தேர்ந்தனன். அக்காலத்தில் ஓலை யெழுதத் தெரிவதே இக்காலத்தார் பி. ஏ, பரீக்ஷை கொடுப்பதற்குச் சமானம். ஓலையின் தலைப்பின் வக்கணைகள், அதிகம் எழுதுவார்கள். அவைகளை நன்கறிந்து மணிபோன்ற யெழுத்தெழுதுவான். ஓலை யெழுதும் தேர்ச்சி அடைந்தானெனத்தகப்பனார் தமது இளையமகனுக்கு இலக்கியப்பிரீதி யதிகமூட்டக்கருதி, ஓழியா ஞாகபசாலியும் வைணவ புராண நிபுணருமாகிய திருமலைக் கொண்ட நாயகர் பால் அனுப்பினர். அவரிடம் இளையவன் பாகவதம், பாரதம் ஐயந்திரிபறக் கற்றனன். இந்நாய்க்கர் இலக்கியக் கடல் கண்டவரே யல்லாது இலக்கண மென்றும் சொல்லுமறியார். இவர் சந்திர சேகரத்தைத் தம்மைப் போலவே பாடல்களை மனனஞ் செய்யத் தூண்டிய வண்ணம், பாரத பாகவதராமாயணங்களை முற்றும் மனனஞ் செய்தனன். இக்காலத்தார் படிப் பிற்கும் அக்காலத்தார் படிப்பிற்கும் சாலவித்தியாசம் உண்டு. அக்காலத்தார் ஒரு முறையாகக் கம்ப நாட்டாழ்வார் காலத்திலிருந்து வந்த ஒண்பொருளை யறிய முயலுவார்கள்; கேட்பார்கள்; சிந்தித்துப் பிரசங்கிப்பார்கள். இக்காலத்தார்களோ அவ்விதம் அல்ல. மனம் போனபோக்கெல்லாம் பொருள் கூறிக்கலகம் விளைத்துத்திருப்தி கொள்ளுகிறார்கள். கம்பராமாயண பாரதமாதிய இலக்கியங்கள் முந்தியவர்கள்முறையைச் சிறப்பாகக் கொள்ளு வதையும், இக்காலத்தார் சதுப்பொருள்களைக் கொள்ளாமையையும் கூற வேண்டுமோ? எல்லாருக்கும் இலேசில் பொருள் விளங்குவது போலத் தோன்றும் கந்த புராணத்திலும் அநேக பாக்கள் அருமையாய் இருக்கின்றன. அவைகளுக்குப் பொருள் வெளிப்படையாகத்தோன்றும். ஆனால் உரைப்போன் மனந்தடுமாறுவான். பெரிய புராணமும் சாமானியமல்ல. இதிலுள்ள ஒவ்வொரு பாவின் பொருளின் எல்லையை ''உலகெலா முணர்ந்தோதற்கரியவனே'' அறிவன். சேக்கிழார் திறத்தைச் சிவனே சாலாது மற்றியார்! அறிவார் திருவிளையாடலின் சி

ரைத் தெரியாதவருண்டா? இக்காலத்தார்கள் இவைகளை எல்லாம் தங்களது யுக்திர்யாத்தத்திற்கு ஒள்ளாக்கி எடுகளைக் கெடுத்து வருகிறார்கள். இவைகளுக்கு வரன்முறையான அர்த்தம் திருவாவடுதுறை யாதீனத்திலும், தருமபுர வாதீனத்திலும் கூறிவருவதாய் அறிகிறோம். நமதுமுன்னோர் இயற்றிய கிரந்தங்களிலுள்ள பொருளை அவர்களன்றோ கூறும் பொறுப்புக்கொண்டவர்கள்! சந்திரசேகரம் பல கிரந்தங்களைக் கற்று நன்னடைக் கையையும் தழுவினன். இவர்க்குக் கல்வி தொடங்குங்கால் இன்பமாயும், தமிழ் மாதுக்குத் துன்பமாயும் முடிந்தது. எவ்விதம் எனில் இவர் இலேசில் கல்வியறிந்தார், தமிழ்மாதின் நலத்தைக் காண்பதையெல்லாம் பருகியதால் அவ் வணங்கினட்குத் துன்பமுண்டாயிற்று, கடைசியாக வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் சரச்சுவதி சந்திர சேகரத்தின் நாவேறினள்; கற்றாரைக் கற்றார் காமுறுவது வழக்கந்தானே! பிறகு பாடல் பாடும் வன்மைபெற்றான். குலதெய்வக் குளிர்மலர்ச் சேவடிக்குப் பூமாலை சூட்டியதைத் தந்தையார் அறிந்து சிந்தைமீதிருத்தி மைந்தனை மெச்சினர். தாயோகவியாடுந் தன் அருமந்த குழந்தையைக் கண்டு மடிமீதிருத்தி ஈன்றபொழுதினும் அதிக வார்வங்கொண்டு முத்தமிட்டுவந்தாள். ஆனந்தக்கடல் படிந்தான்.

இவ்வகை யொழுகும் ஓர் நாளிலே, கோழிசகூவும் சமயத்திலே, எல்லோரும் அயர்ந்து தூங்கும் போதிலே வீட்டுத் தலைவரான அருணாசலம்பிள்ளை எழுந்து படுக்கைமீது வீற்று உரத்த சப்தத்துடன் "ஐயோ! எனது காலமும்இப்படி யாயிற்றே. இன்னும் மூன்றுமக்கள் இருப்பவர்களுக்கு விவாகம் செய்யவில்லையே, மேலும் அநேககாரியங்கள் செய்ய நினைத்திருந்தேனே, என் எண்ணமெல்லாம், நிஷ்ப பயனுயிற்றே, என்னை நம்பி இருப்பவர்களைச் சதிக்குங்காலம் வந்ததே; மக்களோ இளையவர்கள்; பெண்மக்கள் மூவரைத் தவிர மற்றவர்களுக்கு என்ன தெரியும்? எல்லாரும் சின்னஞ்சிறு குழந்தைகளாச்சுதே, சந்தரிஷி லிங்கேசா! உனது அருளும் இதவா?" என்று கண்ணீர் பெருக்கிக் கதறி அழுதனர். வீட்டாரெல்லாரும் விழித்துப் பயந்து தலைவரைச் சூழ்ந்தார்கள். காரணம் விசாரித்தார்கள். அதற்குத் தந்தையார் விடையாகத் தாம் மூன்றுவது மாதம் இன்னநாளில் இன்ன நேத்தில் இவ்வுலகைத் துறந்து வானுலகேறுவதாய்ச் செப்பினர். இதைக்கேட்ட இளைய சகோதரன் லிங்கண்ணன், நாடியைப் பரீக்ஷித்து "அண்ணாயிதென்ன பயித்தியம், குறுநாடி நன்றாய்ப்பேசுகிறது" என்றார். செவியுற்றதும், தமையனார் அழுதவர் சிரித்தார்; எல்லோரும் களித்தார்கள். உடனே தலைவர் தமது சகோதரர் லிங்கண்ணன் கூறியது பொய்யென்று புகன்று, சாவது மெய்யெனச் செப்பினர். இதைக்கேட்டவர்கள் மறுபடியும் நொந்தார்கள். தகப்பனை இழக்கும் துர்ப்பாக்கியம் துரிதத்தில் அடுத்ததைக் குறித்து மக்கள் விசனித்தார்கள். மருகர்கள் "இனி எக்காலம் இத்தகைத்தான மாமனைப் பெறுவோ,, மென்று அலறினார்கள். ஊரார்களோ வைத்தியம், சோதிடம், ஆருடம், பொறுமை குணத்திடமானரை இழக்கும் கதியைக் கடிந்தார்கள். நாள்கள் கழிந்தன; இரண்டு மாதம் ஒழிந்தன. மேலும்மூன்றுவாரம் போயிற்று, தேகம் வாடவில்லை. நிறம்மாறவில்லை. சுரம் ஈனமாகவில்லை. சுற்றத்தார்கள் துக்கத்தைத் துறந்தார்கள். களிப்போடிருந்தார்கள். போளுவாம் பட்டியில் தமது மூத்தமகள் சீமந்தத்திற்குப் புறப்பட்டுப் போய்ச் சீரைச் சீராக நடத்திக்கொடுத்துத் திரும்பிவந்த அருணாசலம் பிள்ளை குறித்தநாளில் குறித்தநேரத்தில் இடைவழியிலே சிவன்பாதார விந்தத்தை அடைந்தார். வானோர் அவரை எத்தி அணைந்தார்கள் காளப்பட்டியில் உத்திரக்கிரியைகள் நிறைவேறின.

## அதிகாரம்-14-இளவயல்.

தந்தையார்க்குச் சாத்திரப்படிச் செய்யுங் கருமங்கள் அனைத்தையும் பிரதி மாதங்களினும் இடையிடையினும் புத்திரர்கள் செய்து முடித்தார்கள். இவ்விதம் செய்யும் காலத்தில் தகப்பன் இனத்தாருள் லிங்கண்ணன் தவிர ஏனையவர்கள் சிவலோகம் அடைந்தார்கள். சிற்றப்பன்மக்கள் அநேககாரணங்களை முன்னிட்டுக் காளப்பட்டியை நீத்துப் பலவிடங்களிற் குடியேறினார்கள். வேதமாமுனிபிள்ளை தமது பத்தினியார் காளப்பட்டியிலே வாழ மறுத்ததினிமித்தம் பூர்வவிடத்தைவிட மனஸ்தாபங் கொண்டார். சந்திர சேகரனோ வென்றால் தனது அறிவு, கல்வி, அபிவிருத்தியடையவும் பிரபலப்படவும் காளப்பட்டி உசிதமான விடமல்லவென்று நினைத்தான். தாயார் அழகம்மாள்: இவளோ மேனியில் அழகு, குணத்தில் அழகு, கணவன்சொற்றிரம்பாது நடத்தலில் அழகு, அடுத்தோரை உபசரிப்பதில் அழகு, சுற்றந் தழுவிக் குடும்பத்தை நலமுறக் காப்பதில் அழகு, பெண்பாலார்க்குப் பொருந்திய குணங்கள் பூத்திருப்பதில் அழகு, நல்ல பிள்ளைகளைப்பெற்று நல்லவழிகளிற் காப்பாற்றி நடக்கவிட்டு வாழவைத்ததில் அழகு; இத்தியாதி வெவ்வேறான அழகுகள் சகலமும ஒன்றுகூடித்திரண்டனைய சிவந்தமேனியளாய் உட்பகையாறு மில்லாதவளாய், சாந்தம் பொறுமைக்கிடமாய்க் கபடற்றசொல்லாளாய் வாயு நெஞ்சம் மொத்து நடக்கும் சீரினள். சீலமிக்குடையவள் ஸ்ரீகங்கதரன் பாதாரவிந்தமே தஞ்சமெனக்கொண்டவள். இவள் பெண்மக்கள் மூவரும் வருந்தியழைப்பதைத் தடுக்காது ஒவ்வொருவர் வீட்டிற்கும் போவாள். வருவாள்; உண்பாள்; உடுப்பாள். இவ்வாறு இரண்டு மூன்று வருஷங் கழிந்தன. சொத்தெல்லாம் முந்தியே சிறுகச் சிறுக ஒழிந்தன. இது எவருக்கும் கூடாமடியை வீட்டிமிடியை ஓட்டி மக்கள் வாழுவான் உலகில் முன்வரக் காரணமாயிற்று. ஆயினும் மிடிமேவிநம். வறுமையை அகன்று வாழ்ந்தவர்கள் யார்? ஒருவருமில்லை. அதனிலும் தமிழ்ப் பாவலர்களுக்கு வறுமையே உடன்பிறப்பு. வறுமையிலே பிறந்து வறுமையிலே வளர்ந்து வறுமையிலே இறுதியடைந்த தமிழ்ப்புலவர்கள் எத்துணைபேர்? அனந்தம்பெயர் உள்ர். கம்பனை வறுமைவிட்டதா? ஒட்டக் கூத்தனை நீத்து அகன்றதா? இல்லை. இன்னும் எத்தனை புலவர்கள் வறுமைக்குட் பட்டுமேனி வாடி அழுதவர்கள். காளமேகம் பட்டை சோற்றுக்குச் சிங்கி அடித்துத் திரிந்த கதையைப் பன்னவும் வேண்டுமோ? தெய்வீகம் பொருந்திய ஔவையார் அடுக்கோர்பாடல், கூழுக்கோர் பாடல் பாடியது அவள் வறுமையை இக்காலத்தினும் காட்டுகின்றதே, புகழேந்தி சிறைவாயாகப் பட்டுச் சோற்றுக்குத் தாளம் போடவில்லையா? படிக்காசுத் தம்பிரான் பெற்ற பிள்ளைக்குப் பால் இல்லாது உலகில் அலைந்து காளத்தியார்க் கற்புதமென்றதும் பாழ்த்ததோ? ஒப்பிலாமணிப் புலவர் வீட்டடுப்பில் ஆம்பி பூத்தசரிதை உலகில் வழங்குகின்றதே. சத்திமுத்தப் புலவர் ஆகாயத்தில் பறக்கும் நாரைகளைக் கூவி ஆடையின்றி வாடையின் மெலிந்து கையது கொண்டு மெய்யது மொத்திக்-காலது கொண்டுமேலே தழீ இப் பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்த்த ஏழைத் தன்மையை வெளிப்படுத்தியதை தமது நாமறியபோமோ? இவ்வாறு இன்னும் எத்தனை புலவர்கள் மிடியால் வருந்திக் கலங்கினார்கள். வறுமையே புலவர்களுக்குத் தொட்டில். வறுமையே தொடக்கு; வறுமையே பாழ்ம்பிணி. நந்தமிழ்ப்புலவர் செய்திமட்டுமல்ல; வேறெந்தப் பாஷைப் புலவர்களையெடுத்தாலும் வறுமை நீங்கியவர்களைப்பார்ப்பது துர்லபமே. ஆங்கிலேய வித்துவான் களில் ஆலிவர் கோல்குஸ்மித் தென்பவர் அநேக அற்புதநூல்கருத்தாராயிருந்தும், பாரிஸ்டர் என்னும் நியாயவாதி பரீக்ஷை தேறியும், வைத்திய பரீக்ஷை கொடுத்தும் வறுமைப் பிணியால் வருந்தி நாளும் மேனிவாடி தரிக்கும் சட்டையை அடைமானம் வைத்துப் பிழைத்தவர் அல்லவா? ஷேக்ஸ்பியர் என்னசீமானா? ஆந்திர பாஷைப்புலவர்கள் வறுமைக்கடலா ழாதவர்களா? கன்னடபாஷைப்புலவர்களது வறுமை காதையைக் கூறில் ஓர் பாரதமாகமுடியும். வடமொழியைத் திட்டமுடனே கற்ற பாவலர் அநேகர் வறுமைவலைக் குட்கட்டுண்டு மீளாது வருந்ினவர்களே. இவ்வறுமை புலவர்களைப் பிணிக்கும் வன்மையால், அன்றோ பிணி தொடக்கு, மாயையாதிய எண்ணிலா அடைமொழி களைப் பெற்றது. காராட்டை வெள்ளா, டென்பதுபோல் இதனை 'நல்குர'வென்கிறார்கள். சந்திர சேகரத்தை நாமகள் தழுவினாள், நல்குரவளைந்தது, பொன்மகள் புல்லத்தலையை மெல்ல நீட்டிப் பார்ப்பதாயினள். அருட்பெருந் திருவாம்பிகையார் கருணை கடாக்ஷ வீக்ஷண்ணியபோதமுமுண்டாயிற்று. காளப்படியை நீத்து அடுத்தாப்போல் பெருமையொடு விருத்தியடைந்துவந்த கோயமுத்தூருக்குக் குடிபோகத் துணைவரோடு மாலோசித்துத் தாயழகின் பாதாம்புயஞ் சிரத்தணிந்து விண்ணப்பித்து உத்திரவு பெற்றபின், குடும்பத்தார் எல்லோருமாய்க் கோயமுத்தூர் வந்தடைந்தார்கள் கோட்டையில் வசித்தார்கள் குடியிருந்த வீடோமகள் விலாசமாய் விளங்கியது எண்ணிறந்தோர் சந்திர சேகரத்தின் முகத்தேஜசையும், அவர் லக்ஷணத்தையும், அறிவு முதிர்ச்சிகையையும் கண்டுவியப்பட்டார்கள்

க-ச-துரைசாமி.

## SPECIAL NOTICE.

Subscribers who are still in arrears for the second volume will please remit their subscriptions at once, as otherwise the next issue will be sent to them per V. P.

## முக்கியமான அறிக்கை.

யதார்த்த பாஸ்கரன் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத் தொகைகளை மணி ஆர்டர் மூலமாய் அனுப்பிவைக்கச் சகவாசமில்லாதவர்களாயிருக்கிறபடியால், அடியில் கையொப்பமிட்டிருப்பவர் வருகிற பாஸ்கரன் பிரதியை வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்பி ஒவ்வொரு சந்தாதாரரும் செலுத்தவேண்டிய பாக்கியை வசூல் செய்ய யோசித்திருப்பதால், அப்படிச் செய்வதற்கு சந்தாதாரர்கள் அனுமதி கொடுக்கக் கேட்டுக்கொள்ளுகிறார்.

### புதிய பத்திரிகைகள்:—

பாலம் கோட்டையில் வாரம் இருமுறை பிரசுரமாகும் சர்வஜனமித்திரன் என்னும் பத்திரிகையை பத்திராதிபர் நமக்கு அன்புடன் அனுப்ப அதைப் பார்க்க அதிக சந்தோஷமாயினோம்.

இதில் ஒவ்வொருவருக்கும் தெரியவேண்டிய அனேக வர்த்தமானங்கள் அடங்கியிருப்பதுடன் பொது நன்மைக்கேற்ற பிரதம கல்வி, ஸ்திரீகள் பத்தி முதலிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இப்பத்திரிகை நன்று நடந்தேறி வருமென்று நம்புகிறோம்.

திருநெல்வேலியில் மாதமிருமுறை பிரசுரஞ் செய்யப்படும் ஆத்மசம்ரக்ஷிணி என்னும் பத்திரிகையும் நமக்கு அனுப்பப்பட்டது. இது அனேகமாய் பக்தி விஷயங்களைப் பற்றிப் பேசுவதுடன், கல்வி, இராஜாங்க சுதந்தரம், சமாச்சார குறிப்புகள் முதலிய விஷயங்களைப் பற்றியும் பேசுகின்றது. பக்தி மார்க்கமான பத்திரிகைகள் அதிகம் இல்லையாதலால் இந்துக்கள் இதைக் கைவிடாது ஆதரிப்பார்களென சர்வேசுரனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருச்சிநாப்பள்ளியில் மாதாந்த தமிழ்ப் பத்திரிகையாய் பிரசுரமாகும் பிரஜானுகூலன் என்னும் பத்திரிகையையும் நாம் பார்த்து சந்தோஷிக்கிறோம். பக்தி, நல்லுரை, சன்மார்க்க சரிதைகள் முதலிய விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. பத்திராதிபர் பிரஜானுகூலனை கண்ணுக்குத் தெரியாத பொடியச்செழுத்துக்களினின்றும் நெருக்கமான வரிகளினின்றும் கூடிய சீக்கிரத்தில் விடுதலை செய்வாராயில் பிரஜானுகூலன் நெடுநாள் உலாவி வருவான் என்று நம்புகிறோம்.

### ஓர் நவீன சங்கம்.

சென்னை வித்தியாசங்கம் எனப்பெயர் வாய்ந்த ஓர் அரிய சபை தற்போது சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. டிவான் பஹதூர் கனம் ஜஸ்டிஸ் ஸர் சுப்பிரமணிய ஐயர், டிவான் பஹதூர் இராஜரத்தின முதலியாரவர்கள், திருவாங்கூர் சமஸ்தானத்தில் நியாதிபதியாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ, வேதகிரி சுந்தரேச முதலியாரவர்கள் முதலாயினோர் ஆதரித்து வருகிறார்கள். இதில் அனேக இலாக்காக்கள் உண்டு. அச்சுவேலை புத்தக பரிசோதனை மொழிபெயர்ப்பு வர்த்தமானப் பத்திரிகைகளைப் பதிப்பித்தல், பத்திரிகைகளுக்கு அனேக விஷயங்களைப்பற்றி எழுதுதல், பழைய நூல்களின் பிரதிகளிலிருந்து எழுதித்தரல் முதலிய வித்தியா விஷயமான வேலைகளை இச்சங்கம் நடத்திவரும். இவைகள் செம்மையாக நடந்தேறும் பொருட்டு அனேக இடங்களிலுள்ள கல்விமான்களின் உதவியை இச்சங்கம் பெறும் திராவிட பாஷைகளின் அபிவிருத்தியே இச்சங்கத்தின் எண்ணமாதலால் கல்வியின்பால் நோக்கமுள்ள எல்லாரும் இவ்வரிய சங்கம் நன்று ஈடேறும் வண்ணம் தங்களாலியன்ற எவ்வித சகாயத்தையும் தருவார்களென மிகவும் நம்புகின்றோம்.



# YATHARTHA BHASKARAN

FOR

## God, Humanity and The Motherland.

### Retrospection.

Naturally sharing in the Civic aspirations of our educated countrymen who ardently desire to consecrate their life-work to the good of their country and nation, we latterly sought a walk of life that was conjenial to our taste and nature. It ought to be a matter of no small pride and pleasure to an Indian to serve his country to the best of his ability; and nothing could be more glorious to him than to be able in some, measure to voice the opinions of the educated classes to the masses, in matters of vital importance to their well-being and progress. History teaches us that opinion always percolates from the higher to the lower strata of society: and it is the duty of our educated men to so shape their policy as to bring the masses always into line with them. What light our graduates have received from their *Alma Mater*, they are bound to reflect to those who have been less fortunate in life. But we are constrained to observe, though much reluctant, that for the most part, very many of the so-called educated products of our Universities have not been able to redeem the high expectations that their education and character had already raised in the public mind. Our young men who are constantly knocking their heads against the doors of the already overcrowded public-offices would appear to have neither the inclination nor the time to bestow a thought on the progress of their community or society; and this is a state of things to be deeply deplored by one and all, who have the interest of their nation at heart. In matters of public interest, the youth of our country display some enthusiasm off and on no doubt; but it often evaporates too quickly and we dare say that the native inertia of their natures persuades them to believe in anything that will save them from action and movement. As regards pressing social and religious reforms the majority of our thinking people take a purely indifferent attitude and by a process of self-hypnotisation seem to have brought themselves to believe probably, that though moving back, they are really advancing forward.

It is now full two years since the *Yathartha Bhaskaran* was first launched on the notice of the public, and all along, we have been trying to find a remedy to the crying evils of our society. We conducted the *Bhaskaran* the first year, as a purely *Tamil* journal and it is only when we began the *second volume*, that the idea of putting in some matter in English, was suggested to us by a few earnest friends and sympathisers; and we readily and cheerfully complied with their request. It is a thousand pities that our English-educated friends should more often than not, ignore altogether the

claims of their mother-toungue on their attention and patronise journals published in a foreign toungue in preference to those conducted in the vernaculars of the Presidency.

However, what cannot be cured, must it seems, be endured, and we made up our mind to devote some of the columns of our journal for well-written articles in the *Lingua Franca* of the Modern Civilized world.

Though for the most part we chiefly discussed subjects of interest bearing on Religion, Philosophy, Science and Literature, now and then, we ventured to have our say on the political and economical questions of the hour. Our impression, is that unless we first solve the problem of our *Social Reform* we shall never realize our ideals of greatness and progress in other directions. We have not the least desire to belittle or do any sort of injustice to the admittedly capable and brilliant men who are identified with the *Congress* and other political movements in the country. Many of them are actuated no doubt by a sincere desire to further the interests of the "dumb millions," but to attempt to work for the masses, by going as far away from them as possible in manners, sympathy, language and dress, will bear no fruit in the near Future. The other day, our esteemed contemporary of "New India" observed as follows :—

"Year after year a good many resolutions, too many, in fact, to be considered with any degree of thoroughness, are presented to the Congress and obtain its assent. But the passing of all these resolutions serves only to bring about the dissolution of the *Congress*, and they hang fire till, the next year, when with another turn of the wheel, the old history repeats itself. But these resolutions had literally commanded the highest respect both here and in England, if the Congress had really the voice of the people of India behind its back. And as long as the Congress does not devote itself to the task of imparting political education to the people and winning them over to its side, it is bound to, if not down-right failure, at best, partial, infinitisemally partial, success." The declared ideal of the old school of Indian Politics, say, the congress school in the words of Mr. Dadabhai Novroji has been "Self-Government under British Paramountcy."

But we now begin to hear of another and a new ideal in Indian Politics and that is not "Self-Government under British Paramountcy, but National Autonomy in a scheme of Imperial Federation, wherein, India shall stand not in subordination, to but in absolute coordination with all the other parts of the British Empire, Great Britain herself included." But are these dreams possible of realization? We know full well that India under the British Government enjoys far greater freedom of speech than Germany under her own Kaisor or even France under her Republic and we feel deeply and eternally greatful to the Paternal Government but for whose liberal Policy the Native Press would have been nowhere in India. It is not also unlikely that in course of time the British Government will confer even greater blessings on India. In spite of all that may be said to the contrary, we think and believe and we have always said so—that India is not ripe for the realization at present or in the Immediate Future of impossible ideals in politics of the microscopic few who pose as the leaders of the people. To the query raised above, we accordingly regret to record an



emphatic reply in the negative. In our humble opinion it will be many many dacades if not several centuries before India will deserve these things and until then, we shall have enough work to do in creating a nation where there is none in India now, out of so many races and Communities—widely separated from each other by religion, color and custom that are now inhabiting this vast continent. Where is the nation today we humbly ask, for us to think of our national reforms, national reconstruction national progress and so forth. There is not we are afraid even a shadow of nationality about us to day in India. Again, the India of to-day is not the India of a thousand years ago, and you cannot therefore now regard the various Hindu races alone as constituting the Indian Nation of modern times. Indian Musulmans and Hindus and Indian Christians and Domiciled Anglo-Indians as well, are in the same boat and why should they not pull together to further their common interests passes our comprehension too. Each of these races forms as much a vital part of the organism of Indian society as the Hindus themselves, and how could the body be whole when its indispensable members refuse to act in unison? We have invariably pressed this new national idea on the attention of our friends and we shall never cease to do so, until the day dawns when we shall realize our hopes in this direction.

The Economical question has of late we are glad to see engaged a large part of the attention of our rulers as well as leaders. It is said and with a great amount of truth that our education so long has been almost exclusively literary; and that it has naturally resulted in over crowding those walks of life, for a due discharge of the duties of which a literary equipment is most essential. Our young men are accustomed to think of nothing but the public service and the learned professions. But who does not know to-day that a people whose best brains are exclusively devoted to the literary professions can never improve its economic staying power, not at any rate, in the present state of international commerce and competition. Literature surely cannot flourish on an empty stomach. Unless and until we solve the Industrial problum first, we will never either mentally, physically or morally rise to be a nation. In a country, whose great industry is, and must always be *agriculture*, the man who has been scientifically trained in that branch of industry has chances of wealth and usefulness which others cannot hope to have. Our economic decline and decay are not due to one single cause. The competition of foreign manufacturers, pressure of land assessment to a certain extent, and the defects in our own social, religious and spiritual ideals have been some of the causes of our economic and industrial decline.

We heartily welcome therefore the proposal in Bengal to start a Four-anna-Fund for the promotion of scientific and Industrial education to our youth, and we fully endorse the opinion of our esteemed contemporary of Calcutta that it was a happy inspiration of Mr. Jogendra Chandra Ghosh to start this Fund and that he deserves the gratitude of his people for it.

We will now take a brief survey of our present religious situation and then pass on to a study of the burning questions of Social Reform that demand our early and urgent attention at this moment.

The chief defect in the system of Popular Hinduism is its mystic aspect. "*Not this, but*

*the other world*" is no doubt an excellent ideal that should be taught Humanity in every stage of its evolution. But yet, the ideal should not be "*The other world at the sacrifice of this.*" Few of us generally realise how essential a healthy condition of the nerves is for the pleasures of life, and the due enjoyment of the good and lovely things which a kind Providence has filled this earth with. To condemn wholesale all earthly enjoyments therefore, is out of the question, and we should always make it our duty to discourage self-deluded men from giving vent in season and out of season to things which in the long run would only work the destruction and demoralisation of Hindu society. In this connection, we will refer particularly to the pernicious habit of many illiterate men posing as pandits crying down *Womanhood* as such, in no uncertain and dignifying terms and that too from the platforms of religious sabas. In the opinion of these old-school men with whom it is a fashion and a burning passion to denounce everything new—and what is new under the Sun we wonder,—, there is probably nothing more sacred to do than to talk of the fall of *Arundati* or to expatiate on the illicit amour of Tara with Chandra. To be born a woman is a sin, to love her is a greater sin, to enjoy the sweets of such love is a still worse sin-to treat her as more than a chattel or a plaything is a sin magnified a thousand times, and for a man to die in her love is the worst sin conceivable. "Give up woman and you get salvation then and there", is the cant of these silly men, though most of them will never dream of applying their wonderful teachings to their own individual cases. We have always raised our voice against these men, and we warn our friends to beware of their miserable literature. The Bramo Samaj has done much to initiate new ideas of social life in India, and we trust that the day will not be far when our educated men will full soon be awakened to the necessity of creating around them a social atmosphere, morally elevating, intellectually enlightening, and religiously healthful, that will give due exercise to the emotions, instincts and feelings of the Indian mind in a stage of transition and progress. We know that the due development of these possibilities will spell the salvation not only of any particular community in Bengal but of the whole of Humanity in Modern India.

We are aware of the glory of Hinduism, and we are proud to be a Hindu to the very core of our heart. We are told that the Hindu ascends to mystic heights and descends to mystic depths. The religion of the Hindu is to be alone with God. His most precious and enraptured moments are those in which all externalisims turn into the vain shows of things, and he becomes absorbed in the Infinite spirit. But, what about the countless masses who, steeped in ignorance are wallowing in a hot-bed of superstition? Has young India put forth a frank and an honest effort to free Hinduism from its accumulated mass of corruptions and superstitions. We are afraid not. It has not only not done so, but ever and anon it has been making unconscionable compromises with *Hinduism as it is*, and preaching a tolerance of its proved evils and adulterations. We are sure that many a half-hearted movement started in the country of late has proved a set-back and not a stimulus to the highest life of India.

A lot of bad blood is being created off and on, by some of our pandits especially in Southern India over legends establishing the supremacy of their pet-gods and goddesses and some of these legends are no doubt made precious articles of commerce by our Bhagavaturs who in these days of religious revival turn a decent penny by performing almost every week in the year, the marriage of *Krishna* with *Rukmani* and *Sita* with *Rama*. Again the temple authorities find it a profitable trade to sell away Divine favours for a score of cocoanuts accompanied by a four-anna piece and ananna worth of camphor.

You may cover a hundred thousand sins by endowing a temple; you may become a *thatha* by building one; your virtue is pronounced unique for arranging the bedroom and the nuptial ceremonies of temple-gods and you are transformed into a veritable avatar by feeding on occasions of festival thousands of the priesthood who are the physical representatives on Earth of your Angles in Heaven. The dancing-girl is an all-important factor in all noisy festivals got up for purposes of pleasure and prayer, and the *D. G.* attracts the masses by the thousand on all these occasions. Neither the gods in Heaven nor those on Earth could easily afford to dispense with her charms and services and it is nothing surprising for us to come across many an young man, the hope of his country and family, courting her smiles and favours and his utter degradation at once, within the very precincts of a so-called sacred shrine.

(*To be continued*).

THE EDITOR.



## TAMIL EDITORIAL

### ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி சுவாமிகள்.

யாம் மதுரைக்குச் சென்று திரும்பு மார்க்கத்தில் திருவிடைமருதூரடைந்து திருவாவடுதுறை மடத்துத் தலைவராம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி சுவாமிகளைக் கண்கள்செய்த தவப்பயனைத் தெரிசித்தோம். யாம்ஆண்டுச் சென்றநாட் சில உத்தியோகஸ்தரும் மடத்தில் விஜயம் செய்திருந்தனர். சுவாமிகளது திருவுருவப் பொலிவினை யொருமுறை கண்டார் தம்மைக் காணாராயினர் அவரதுவசனாம்ருதத்தை வாய்மடுத்துண்டார் அவரது சல்லாப விசேஷணங் களை எக்காலத்தும் மறத்தலரிது. தமது சந்நிதியிற் போந்தார் யாவரையும் அருள் நோக்கம் செய்துபசரித்த அந்தம் பெருந்தகையின் புகழை வாயாரப் பேசா தொழிந்தார் தமை யாண்டுங் காணேம். அவரவர் தஸ்துக் கேற்ப வமைந்திருந்த பலவிடுதிகளி லிறங் கியிருந்த பல கனவான்கள் சிவாநுபூதி மான்கள் புகழும் சிவாநுபூதிமான் சிவபூஜை செய்தசமயம் மதிமுடி யண்ணல் கோயில் புக்குசிவ தரிசனம் செய்தனர். ஆயிடை யிருப்புழி சிவசாரூபம்பெற்றே விளங்கினர் எனக்கோடலமைவுடைத் தெனக் கண்டேம்.

நங்குருமணிச்செல்வம்—ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள்—பரசிவமே யிக்கலியில் பலரறியவருட் கோலங் கொண்டு மெய்ம்மை யாண்டருளப் போந்ததென விளங்கினர். இளஞ்சூரிய னென்னப் பிரகாசித்த அந்தம் பெருந்தகையார் சிவார்ச்சனை செய்வான் சிவனிடஞ்செல்வுழி அவரது வெழிலி லீடுபட்டவடியர்குழாம் இவரே சுந்தரம் பூத்தநந்தம் சுந்தரர், இவரே, ஞானசம்பந்தம் பெற்ற ஆளு

டையபிள்ளை யார்என வயிர்த்து அடிகளார் அடிக்கமலம் பணிந்து போற்றினர். பூஜையிறுதியில் பூதிப்பிரசாதம் பெற்றுசிவகடாக்ஷம் பெற்று, விடைபெற்று விடுதியடைந்தேம். எம்மவர்க்கு ராஜபோஜனம் படைக்கப்பட்டது. பிற்பகல், சந்நிதியாஞ்ஞாபிக்க சந்நதியடைந்தோம். சுவாமிகளுடன் சிலநேரம் அளவளாவியிருந்தோம்; தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் அவரடைந்துள்ள பாஷாஞானத்தைக் கண்டு வியந்தேம். சித்தாந்த வேதாந்த சாஸ்த்திரங்களில் அவரடைந்துள்ளதேர்ச்சியளவிட்டுச்சொற்றலரிது. பலவைதிக சாஸ்திரதுறைகளினும் அபாரமான கல்வித்திறமையை யார்ஜ்ஜித்த நமது புண்யமூர்த்தம், காலதேச வர்த்தமானங்களைத்தழுவி மேனாட்டாரது விஞ்ஞானசாஸ்திரவுணர்ச்சியும், மேற்புல கலைஞான வறிவும், பன்னாட்டுத் தத்வஞான முதிர்ச்சியுமுடையராய்வாழ்தலைக் கண்டிறும்பூதடைந்தனம். இம்மட்டோ? ராஜாங்க சீர்திருத்தமென்ன, ஆசார சீர்திருத்தமென்ன, பொருள் விருத்திச்சாத்திரமென்ன, பொருட்காட்சிச் சபா விஷயங்களென்ன, நம் நாட்டு பிறர்நாட்டுச் சரித்திரவாராய்ச்சியென்ன, பிறமத விசாரணையென்ன,—இன்னோரன்ன பலவரிய பெரிய விஷயங்களினும் அவகாசம் நேர்ந்துழி சுவாமிகள் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளாரென்றும் உணர்ந்து ஆனந்தம் பூத்தேம். இவர் தமிழ்மாதை கௌரவிப்பான், தமிழ்ப்பண்டிதரை யாதரித்தும், தம்மையடுத்தோர்க்கு வேண்டுவ உதவியும் யோக்கியதை யுடையார்க்கு அவ்வப்போதும் யோக்கியதை யறிந்து சன்மானித்தும் வரையாது வழங்கும் வள்ளலென பலரும் வாழ்த்த வாழ்வரென்ப. குறிப்பறிந்தியும் இவரது கொடையை யாமும் நேரேகண்டு மனுபவித்தும் சிறப்புற்று நின்றேம். ஜீவர்களிடத் திவரது கருணைத்திறமிருந்தவாறென்னே என்னே !!

அற்றை நாண் மாலையேயாம் சிதம்பரமடைந்து சிற்சபேசனையடைய, வேண்டினமையான் சுவாமிகளை யாம் நாடியடைந்த விஷயத்தைப் பணிவுடன் விஞ்ஞாபித்தோம் ஸ்ரீ சந்நிதானம் எமது பத்திரம்——யதார்த்தபாஸ்கரனுக்கு——முக்கிய போஷகராயிருந்து அதை போஷித்தவராத் திருவுளம் கனிந்தனர். யாமும் எமது பத்திரமும் இழைத்த தவமே போலும். மீண்டும்எம்மானைப்பணிந்து போற்றிப் பிரியாது பிரிந்து சிற்சபை யடைந்தேம்.

பத்திராதிபர்.

---

## மதுரைத்தமிழ்ச் சங்கம்.

சென்ற மே௴ 24, 25, 26-தெய்திகளில் மதுரையம்பதியில் நடந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மூன்றும் வருஷ உத்ஸவத்தைக் காண்பான் ஆண்டுச்சென்றிருந்தேம். சென்னையினின்று ஸ்ரீமத் கோபாலாசாரிய சுவாமிகளும், கிறித்துவ கலாசாலை பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, நா. வேதாசலம் பிள்ளையும், ம-ா-ா-ஸ்ரீ, அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரும், கோயம்பத்தூரிலிருந்து எமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ, திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களும் பிறரும், திரிசிரபுரத்திருந்து பிரும்ஹஸ்ரீ குருராயர் முதலிய பலரும், தஞ்சை, திருநெல்வேலி, யாழ்ப்பாண முதலிய பல விடங்களிலிருந்து பல வித்வான்களும் குழீ இருந்தனர். முதல் நாள் கூடிய சபையில் சங்கத்தலைவர் ஸ்ரீமத் பா. பண்டித்துரை தேவரவர்கள் சங்கத்துக்கு வந்த வித்வ ஜனங்களை நேரிலுபசரித்து நல்வரவு கூறினர். அற்றை மாலை சேதுபதி



கலாசாலையின் பிரசங்க கூடத்தில் ஒருமகாசபைகூட, சங்கத்தலைவர் சங்கத்து நோக்கங்களை முன்னிட்டு அரியதோர் உபந்யாசம் செய்து அந்தசபையை நடத்த பிரம்ஹஸ்ரீ சுப்ரமணிய அய்யர் அவர்களை அக்கிராசனாதிபதியாய் வீற்றிருக்கப் பிரேரேபித்தனர், அதைச் சபையோர் தழுவியாமோதிக்க சபாநாயகர் சபையை நடத்துவாராயினர். அவரது பிரகிருத உபந்யாஸம் முடிந்தபின்னர் ஸ்ரீமத் உ. வே, கா. ஸ்ரீ கோபாலாசாரிய சுவாமிகள் சங்கத்தைக் குறித்து ஓர் பிரசங்கம் செய்தனர், சுவாமிகளுடைய பிரசங்கம் நிரம்ப வியக்கற்பாலது. பலசபா மண்டபங்களில் பலகால் சுவாமிகள் பிரசங்கிக்கக் கேட்டிருந்தோமாயினும், சுவாமிகள் அன்று பொழிந்த பிரசங்கமாரியைக் கண்டு உடலு முயிரும் குளிர்ந்தேம். சுவாமிகளது சமதா புத்தியையும், சமயோசித ஞானத்தையும்சமயப் பொறுமையையும், தேனினுமினியகானரசஞ் சேர்சொற்சுவையையும் அறியாதாருண்டோ?

சுவாமிகளையடுத்து மிஸ்டர் வேதாசலம் பிள்ளை யோருபந்யாசம் செய்தனர். இவர் பேசிய விஷயங்களான் இவருக்குத் தமிழ்ப் பாஷா ஞானமேயன்றி ஆங்கில பாஷாஞானமும் நிரம்பவிருப்பதாகவேற்பட்டது. இவர் தமதுபிரசங்கத்தில்அடிக்கடி ஷேக்ஸ்பியர், மில்டன், சாஸர், வொர்ட்ஸ்வொர்த், டிரைடன் கார்லைல், முதலியஐரோப்பிய நாட்டுப்புலவர்கள்பேரை யோராளமாய்ப் படித்தனர். அவர் தம் பாக்களில் மிகவும் ஆராய்ச்சி யுடையராகவும் காணப்பட்டனர். அம்மட்டோ? பிள்ளையவர்கட்கு பலசாஸ்திர ஞானமும் உண்டென்பதும் அன்று வெள்ளிடைமலையென வெளியானது. பிள்ளையவர்கள் மேற்புலத்தாரது Logic (தர்க்கசாஸ்திரம்) Philosophy (தத்வஞானம்) Biology (உயிர்ச்சாஸ்திரம் Physiology (உடற்சாத்திரம் Physics (பௌதிக சாஸ்திரம்) Chemistry (ரசாயன சாஸ்திரம்) முதலிய பலவும் விசாரித்துள்ளதாக அவர் பிரசங்கம் காட்டியது. தமிழ்ப் பயிரை வளர்க்கவந்த விவருக்கு சாதாரண பீ. ஏக்களுக்கு மமையாத இத்துணை யரிய பாஷா ஞானம், சாஸ்திர ஞானம், ஆங்கிலப் பாஷையினும் அமைந்தமைக்கு யாவரும் சந்தோஷித்தனர்.

பிற்பட்டு ம-ா-ா-ஸ்ரீ, விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள் B. A. ஆங்கில பாஷையில் ஆண்டுச் சேர்ந்திருந்தபலர் பிரயோசனம் கருதி சங்கத்தைப் பற்றி யுபந்நியசிப்பான சபாநாயகரால் வேண்டப்பட்டனர். முதலியாரவர்களது பிரசங்கம் முடிய சபையும் அன்று முடிந்தது.

மறுநாள் சபை கூடிற்று. சங்கத்தலைவரே சங்கத்தினர் வேண்டுகோளை வேண்டி சபாநாயகராக வீற்றிருந்தனர். சங்கத்தின் வளர்ச்சியைக் குறித்தவும், சங்கத்தின் அங்கத்தினரைக் குறித்தவும், சங்கப் பரீக்ஷைகளுக்கு வரும் மாணவர் திறத்தைக் குறித்தவும், சங்கத்து இவ்வருடத்து காரிய நிர்வாக சபையாரைக்குறித்தவுமான பலதீர்மானங்கள் அங்கத்தினரால் அன்று முடிவுசெய்யப்பட்டன. அன்று சாயுங்காலம், சங்கத்தின் அங்கத்தினர்—சங்கத்தலைவரை யிருமருங்கும் புடைசூழவிருக்க—புகைப்பட மொன்றெடுக்கப்பட்டது. பின்னர் அங்கத்தினர் சிற்றுணவுண்டு களித்து துரையவர்களிடம் விடைபெற்று அவரவர் விடுதிக்கேகி விஸ்ராந்தியடைந்தனர். மூன்றாம்நாள் சங்கவருஷோத்ஸவம் நடந்தேறிய மண்டபத்திலேயே ஒரு மகாசபை கூடிற்று ஸ்ரீமத் பாண்டித்துரை தேவரவர்கள் முமந

தப்ரம் குமாரராஜா அவர்கள் சஹிதம் எழுந்தருளினர். பல ஜமீன்தார்களும், அனேக கனவான்களும் விஜயம் செய்தனர்.

மதுரைக்கலாசாலை மாணவர் அனேகர் கூடியிருந்தனர். அந்தசபைக்கு ம-ா-ா-ஸ்ரீ நல்லசாமிப் பிள்ளையவர்கள் B. A. B. L, சபாநாயகராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். பிள்ளையவர்கள் தமது பிரகிருத உபந்யாசத்தில் சங்கத்தைப்பற்றிப் பலகூறி ம-ா-ா-ஸ்ரீ விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்களை மதசம்பந்தமானதோர் பிரசங்கம் ஆங்கில பாஷையில் செய்யும்படி வேண்டினர். முதலியாரவர்கள் பெருங் கரகோஷ மத்தியில் சபாமேடையேறி ஆரியவைதிக மதக்கொள்கைகளும் பிறமதக் கோட்பாடுகளுக் ஒருபுடை யொத்திருக்கின்றன வென்றெடுத்துக் காட்டி நம்மனோர் சமயப் பொறுமை வளர்த்து தம்மில் வேற்றுமையின்றி வாழ்ச்சியடைதல் இன்றியமையாத தொன்றெனப் பிரசங்கித்தனர். மதச்சண்டைகள் மாய வேண்டிய தத்தியாவசியமென வற்புறுத்திக் கூறினர். பெரியரேற்றும் பெரியாரை யிழித்துப் பழித்துக் கூறத் துணிவுறல் பெருமதம் பிடித்துழலும் மதஸ்தர் வியாபாரமென வெடுத்தோதினர். இந்த சங்கம் மதத்துவேஷம் கருதாமல் சைவர் வைணவர், துவைதி, விசிட்டாத்வைதி, அத்வைதிமுதலியோரை யங்கத்தினராகக் கொண்டதுடனமையாது, கிறித்துவ,முகம்மதிய வித்வான்களையும் அங்கத்தினராகத் தெரிந்தெடுத்துக்கொண்ட விஷயமாய்ப் பெரும்புகழடைந்து விளங்குகிறதெனப் போற்றினர். இன்னும் பல கிறித்துவ, மகம்மதியவித்வான்கள் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்வதன்றி சிலபௌத்தமத,ஜைனமதப் பண்டிதரும் சங்கத்திலிருந் துழைக்தல் அழகுசெய்யுமென் றபிப்பிராயப் பட்டனர். இனிமேல் வரும்காலத்து நந்தேசத்துள்ளார் தேசாபிமானம் பூத்து வாழ்வரென்பதற்கு இந்த அருட்சபையே நிதர்சனமாயுள்ளதென்றுமோதினர். ஸ்ரீமத் ராஜா பாஸ்கர சேதுபதியை யிழந்த பெருந்துக்கமொன்றே நமது சந்தோஷத்துக்கு இவ்வருஷம் பிரதிபந்தமாயுள்ளதெனக் கூறி உபந்யாசகர் பெருங்கரகோஷத் திடையில் தமது ஆங்கில பாஷாப் பிரசங்கத்தை முடித்தனர்.

உடனே, கோயமுத்தூர் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் தமிழைப்பற்றிய உபந்யாசம் ஒன்று செய்யப்புக்கனர். பிள்ளையவர்கள் பிரசங்கங்களையாம் கோயமுத்தூரில் பலகால் கேட்டுக் களித்ததுண்டு. இந்த பிரசங்கம் வெகுசுந்தரமாக விருந்தது. அத்யந்த பொறுமை யுடனும் அமைதியுடனும் பிள்ளையவர்கள்பேசிமுடித்தார். தமிழ்மாதின் குறைகளைத்தெரிந்தெடுத்துச்சொல்லஇவரேயுரியரெனப்பலரும் கூறிமகிழ்ந்தனர். இவரதுநடைமிகவும்இனிமை வாய்ந்திருந்தது (style not laboured) இவர் பேசிய விஷயங்களில் ஆழ்ந்தகருத்தும் சிறந்த ஊக்கமுமுடையாரென்பது வெளிப்படையாய்ப் பிரகாச மாயிற்று. தமிழ் அபிவிருத்திக்கு ஆங்கில பாஷாஞானமின்றி யமையாததென்பதிவர் கருத்து. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல வென்று பல திருஷ்டாந்த முகத்தான்நமது பிள்ளையவர்கள் விளக்கிக்காட்டினார். மேற்புல விஞ்ஞான சாஸ்திரங்களை நம்மவர்கள் கூடுமானவரையில் தமிழ்ப்படுத்தவேண்டுமென்றுங்கூறினர்.

தமிழொன்றை யுணர்ந்தோரே பிறமஞானம் உணர்தல சர்த்தியமென் றறிவுறுத்தினர். ஐரோப்பிய சரித்திரஞானம் தமிழ்ப்ப



ண்டிதர் அடைந்தால் மாத்திரமே அவர் தமக்கு சமயப் பொறுமை யுண்டாமென்றும் நமது பிள்ளை பரக்கப் பிரசங்கித்தார். நவீன பாஷைகளினின்றும் வார்த்தைகளை நம்மனோர் அபேக்ஷித்து ஸ்வீகரிக்கும்போது சில சொற்களை அவையின் பழைய ஸ்வரூபத்தை மாற்றாது கோடலே நலமெனப் பிரசங்கித்தார் உதாரணமாக Parliament என்ற மொழியை பாராளுமன்று என மொழிபெயர்த்தலும் Max Muller மோக்ஷமூலர் எனத் தமிழ்ப்படுத்தலும் Oxford கோதீர்த்த புரி என்று எழுதலும் பொருந்தாவென நிரூபித்தார். தமிழ்நாடு செழித்தோங்குதற்கு அனுகுணமான விஷயங்களை அறிவுடன் செய்துபாமரர்க்கு அறிவுச்சுடர் கொளுத்தி நந்தம் பண்டிதர் பெரும் புகழடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து உபந்யாசகர் பிரசங்கத்தை முடித்தார்.

இக்காலத்துத் தமிழ்ப்பண்டிதராவார் நம் பிள்ளையவர்களின் நோக்கங்களைப் பின்பற்றி வாழ்வாராக. மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவரும் பிள்ளையவர்கள் தமிழ்விருத்தி விஷயமாய்ச் சொற்ற பல அரிய விஷயங்களை சங்கப்பத்திர மூலமாய்ப் பலருக்கும் விநியோகப்படுத்தும்படி செந்தமிழ்ப்பத்திராசிரியரைத் தூண்டுவரெனப் பன்முறையும் பிராத்திக்கின்றேம்.

---

இனி, சங்கத்தலைவராம் ஸ்ரீமத் பாண்டித்துரைத் தேவரவர்கள் லோகோபகாரமாகச் செய்து வரும் சத்கர்மங்களைப் பற்றிச் சில கூறி யிதை முடிப்போமாக.

நமது துரையவர்களை முத்தமிழ் வல்ல மூர்த்தமென்றே யாவரும் புகழாநின்றனர். அவரது தமிழ்ப்பிரசங்கங்களைக் கேட்டு இவர் சமுகத்தில் யாரே தமிழ்பேசவல்லார் எனச் சங்கையடையாரிலர். சபைக்கு நாயகராயிருந்து பிரசங்கிக்கும்போதும் வெகுதாழ்மையுடன் பேசிவந்தனர். சிவம்பழுத்து, நிறம்பழுத்துத் தவம்பழுத்தஇவரது திருவுருவின் பொலிவினைக்கண்டுகளித்தார் நந்தம்பாண்டிப் பெருவாழ்வே மீண்டும் தமிழ்ச் சங்கத்தை உயிர்ப்பித்து வளர்க்கஇத்தொல்லுலகம் போந்தனரோ வெனப் பலர் ஆசங்கித்தனர், காமனைச் சுட்டமாமனே யென்றார் வைணவ பிராமணரொருவர். அற்றன்று: கண்ணனும் முக்கண்ணனும் ஒன்றாய்ப் போந்த கோலமே யென்றார் எமது சைவநண்பர் ஒருவர். துரையவர்கள் சம்ஸ்கிருத பாஷையினின்றும் சுலோகங்களை யவ்வப் போதும் மேற்கோளாகவெடுத்தாண்டவமையம் எம்மை யறியாத குதூஹலம் எமதுடல் உயிர்முழுமையும் ஊடுருவிச் சென்றது. யாழினுமினிய அவர்தம் வாக்யாமிர்தத்தை வாய்மடுத்துண்ண யாமிழைத்த தவமென்சொலோ! இறந்தபாஷையன்றேயுயிர்த்ததாக வெண்ணினர் எம்மவர் சிலர். நந்தப்பாண்டிப் பெருந்தகையார் ஆங்கில பாஷையைப் பேசியபோது ஆங்கிலத் துரைகளே பேசியதாக வெண்ணி மகிழ்ந்தோம். நிற்க:—வித்வான்களுக்கு இவர்செய்த உபசாரவந்தனங்கள் மிகவும் வியக்கத்தக்கன வென்பேம்.

பிராம்ஹண பண்டிதர் சிலரும் நந்தம் பாண்டிவள்ளலை ஹே! மகாபுருஷ! நுந்தம்பெரும் புகழைச்சொல்ல யாவர் திறம் என வாயார வாழ்த்தி ஏற்றினர். பாண்டிப் பெருந்தகையின் கொடையைக்கூற கம்பனே மீண்டும் பூவுலகடையவேண்டும். குறிப்பறிந்தீயும் அவரது கொடையையாமும் கண்டு மனுபவித்திருக்கின்றேம். வரையாது வழங்கும்வள்ளலென அறிவுடைத் தமிழுலகம் கூறுமாயின் யாமோ இவரது கலியாண குணதிசயங்களை யெடுத்தோத வல்லேம். தமிழணங்கை சிற

ப்பிப்பான் நந்துரைச்செல்வம் மேற்கொண்ட சிரமத்துக்குத்தமிழ்நாடு முழுமையும் அவர்பால் என்றும் நன்றியறிவைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. இந்தநான்காம் சங்கம் நீடூழிவாழ்கவென மனமொழிமெய்களான் முழுமுதலை முப்போது மிறைஞ்சுகின்றோம்.

பத்திராதிபர்.

---

## TAMIL EDITORIAL,

---

### நமது பத்திரிகை.

இற்றைக்கு இரண்டு வருடமுன்பாக எமதாப்தர் பலர் வேண்டுகோளை வேண்டியாம், யதார்த்தபாஸ்கரனைப் பிரசுரிக்கத் தொடங்கினோம்: அற்றைநாட்டொட்டு இதுகாறும் எமது பத்திரத்துக்கு விஷயதானம் செய்து வந்து எமக்கு ஊக்கத்தையும் மனக்கிளர்ச்சியையும் உடனின்று பகரித்த கனவான்களுக்கு.

1- Rai Bahadur N. Ratnasabapathy Pillai Avl. B.A and B. C. E

Messrs.

2. A. Sreenivvasa Iyer Avl. B.A. and B.L.
3. S Anavarada Vinayakam Pillai Avl. M.A. and L.T
4. T- Baktavatsalam Pillai Avl. B.A
5. K. Kuppuswami Mualiar Avl. B.A
6. Pandit K. S Gopalachariar Avl.
7. P. Parthasarathy Nayagar Avl. B.A and L.T;
8. Pandit Vadivelu Chettiar Avl.
10. K. C. Duraisawmy Pillai Avl.
11. M. S. Mudaliar Avl. and others

என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

நந்தேசத்தார்க்கு எத்துணைப் பத்திரிகாபிமானம் உள்ளதென்று யாவரும் அறிவார்கள். தேசாபிமானம், நிரம்பப்பூத்து விளங்கும் எங்கிலாந்து ஜெர்மனி, அமெரிக்கா ஜபான் முதலிய தேசங்களில் கூலிவேலைசெய்வோரும், கைவண்டியிழுத்து ஜீவிப்போரும் பிறஏழைகளும் அந்தந்த தேசத்துப் பத்திரிகைகளை யாதரித்து வருகிறார்களென்பதுண்மை. பத்திரிகைகள் ஆண்டு, ஆயிரம், பதினாயிரம் நூறாயிரக் கணக்காய் செல்லாதல் விவேகிகளுணர்ந்த விஷயமே. நந்தேசத்திலோ, பற்பலபாகங்களில் தேசாபிமானம் மருந்துக்கும் கிடைப்பதருமையென்றால் பத்திரிகாபிமானத்தைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? பாஸ்கரனை யுயிர்பித்தநாட்டொட்டு நாம் அடைந்த கஷ்டநஷ்டங்கட்கு அளவில்லை. ஐயகோ! பொது நன்மைக்குழைக்க வெண்ணங்கொண்டு வெளிவந்தார். நொந்து படுதல், நம்மவர்க் கழகாமோ? அழகோ, அழகன்றோ, பத்திராசிரியர் பலர் உள்ளதைத்தோற்று நொந்து பட்டன ரென்பது பலரறிந்த விஷயமே இக்காலத்தில் பாமரரேயன்றிப் பலபடிப்பாளிகளும்கூட நந்தேசத்தில் பத்திரிகைகளின் பிரயோசனமுணராது காலங் கடத்துகின்றனர். ஆதலான் எமதுபத்திர விஷயமாய் நன்கொடை யளித்து எம்மை யாதரித்துவந்த ஸ்ரீமான்-ருய பகதூர் ஆ. மெய்கண்ட தேவமுதலியார் அவர்கள்.

,, பா. பாண்டித்துரை தேவ அவர்கள்.

,, ஏலகிரி ஜமீன்தாரர் அவர்கள்.

வித்வான் டி. முத்துகிருஷ்ண பிள்ளையவர்கள், இரங்கோன்.

ஸ்ரீமான் தி. பொன்னுசாமிப் பிள்ளையவர்கள், இரங்கோன்.

முதலிய பல கனவான்களுக்கும், இதுகாறும் காலமறிந்து எமக்குச் சந்தாவைக் கொடுத்துச் சந்தோஷிப்பித்த சந்தாதாரர்கட்கும் இந்த சந்தர்ப்பத்தில் எமது மனப்பூர்த்தியான வந்தனங்களைச் செலுத்துகின்றோம். இனி, யாம் இதுகாறும் எழுதிவந்த விஷயங்களைச் சிறிதாராய்வாம்.

இராஜாங்க விஷயங்களை (கவர்ன்மெண்டாரின் நடவடிக்கைகளை) ப்பற்றிச் சனங்களுக்குப் போதித்தலும், சனங்களுடைய குறைகளைப்பற்றி அரசாங்கத்தினர்க்கு உண்மையைத் தெரிவித்தலும் படிப்பாளிகள் கடமையாகும். முக்கியமாய்ப் பத்திரிகைகளை நடத்துவோர் இது விஷயமாய்க் கவனம் செலுத்த வேண்டியவர்களே. நம்மனோர் நமதுரிமைகளையும், கடமைகளையும் உணரவேண்டியதவசியமே. ஆயினும், இந்த விஷயத்தில் நம்மவர் ஆழ்ந்த சிந்தனையும், மிக்க பொறுமையும், உடையராயிருத்தல் வேண்டும். அவசர சித்தாந்தம் அவசர புத்தியால் செய்யப்போகாது. பல தேச சரித்திரங்களை நன்குணர்ந்தாரே இராஜாங்க சாத்திர விசாரணையி லிறங்கக்கூடும். எல்லோருமே, Politics பேசப்புகுதலடாது. சில சுதேசப்பத்திரிகைகள் (ஆங்கிலத்தி லெழுதப்படுவன) கவர்ண்மெண்டாரைக் குறைகூறுதலையும், கவர்ண்மெண்டு உத்தியோகஸ்தரிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பதையும் தாம் முக்கிய கருமமாக மேற்கொண்டுள்ளனவென்ப. அவைகளைப் பின்பற்றி பல சுதேச பாஷா பத்திரிகைகள் அடிக்கடி அத்துமீறி வாய்க்குவந்தபடி பேசிவருகின்றனவென்றும் கூறுப. இதனால் துரைத்தனத்தாருக்கு வீண்மனஸ்தாபம் உண்டுபண்ணுவதொன்றொழிய அடைந்த லாபமொன்று மின்று. நமது உண்மையான குறைகளையும் ஏனைய குறைகளையும் பத்திரிகைத்துவாரவும், இதரமூலமாகவும் பலரறிய வெடுத்துச்சொல்லவும் நமக்குக் கற்பித்தவர் நந்தம் கருணைநிறைந்த ஆங்கில துரைத்தனத்தார் தாமேயென நாம் எண்ண வேண்டாவோ? ஐரோப்பாவில் ஜெர்மனி, பிரான்சு தேசங்களில் குடிகள் அனுபவிக்கும் உரிமைகளை நோக்க எத்துணையோ விசேஷமான உரிமைகளை நாம் அனுபவித்து வருகின்றோமே. மகம்மதிய ராஜாங்கத்தினும், ஆதி ஹிந்து ராஜாங்கங்களினும், நம்மனோர் இப்போதனுபவிக்கும் சுதந்தரங்களைக் கனவினும் கண்டிருப்பாரோ வறியோம். ஆங்கிலநாட்டுச் சனங்களடைந்த சுதந்திரங்கள் எத்துணைக்காலம் சென்று அவர்கட்கு கிடைத்தனவென்றும், அவைகளை நாம் இன்றே பெற அர்ஹரா அல்லராவென்றும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது அத்யாவசியம். அதைவிட்டு, பூர்வசரித்திர வாராய்ச்சியின்றி வீண் கூப்பாடிட்டு மனப்பால் குடித்துக் கிடத்தல் மரபன்றாம். நாம் ராஜாங்க சீர் திருத்தங்களைப்பற்றிப் பேசவேண்டிய தவசியமே. ஆனால், பணிவுடன் சொல்லவேண்டியது மவசியமாகும், உதாரணமாக ஒன்றுகூறுவோம். தில்லிதர்பார் விஷயமாய் நம்மனோர் ஏதேதோ பேசியும் எழுதியும் வந்தார்கள். தர்பார் நின்றுவிட்டதா? தென்னாப்பிரிக்காவில் குடியேறிய நமதேழைமாக்கள் விஷயமாய்த் தங்கள்



*Cogito ergo sum.* I think, therefore I exist. Yes, but the *I think* is merely the expression of the feeling of my existence, and I know by it only that I am, not what I am, and therefore not that I am soul itself thinking. What is originally given is not one's *self*-consciousness, but merely one's consciousness. Again, the experience *I am* is not simple. In becoming conscious of myself I at the same time become conscious of something not myself. No inner perception is apprehended as such without distinguishing it from a simultaneous outer perception and setting it in antithesis to this. No inner experience is possible without the simultaneous construction of outer experience. Neither inner experience nor outer experience is directly given, but only the consciousness which includes inner and outer experience in constant inter-dependence. It is this reciprocity of ego and not-ego that is originally given. The ego and not-ego mutually condition each other; the one is not even thinkable without the other, for their special features lie in the feeling of contrast between them. When the not-ego is completely effaced, as in narcosis or *samadhi*, the ego also disappears. Only a philosopher who preferred the absence of consciousness to consciousness would imagine the self as perceiving itself in dreamless sleep.

Those that see something inscrutable in psychical processes often compare the soul to a piano. "Ideas," says Herbert Spencer, "are like the successive chords and cadences brought out from a piano, which successively die away as other ones are sounded. And it would be as proper to say that these passing chords and cadences thereafter exist in the piano as it is proper to say that passing ideas thereafter exist in the brain. In the one case, as in the other, the actual existence is the structure which, under like conditions, evolves like combinations." But the inappropriateness of this analogy has been pointed out by Dr. H. Maudsley. Says the latter in his *Physiology of Mind*: "This analogy, when we look into it, seems more captivating than it is complete. What about the performer in the case of the piano and in the case of the brain, respectively. Is not the performer a not unimportant element, and necessary to the completeness of the analogy? The passing chords and cadences would have small chance of being brought out by the piano if they were not previously in his mind. Where, then, in the brain is the equivalent of the harmonic conceptions in the performer's mind. If Mr. Spencer supposes that the individual's mind, his spiritual entity, is detached from the brain, and plays upon its nervous plexuses, as the performer plays upon the piano, his analogy is complete; but if not, then he has furnished an analogy which those who do take that view may well thank him for. There is this difference between the passing chords and cadences in the brain—and it is of the essence of the matter—that, in the former case, the chords and cadences do pass and leave no trace of themselves behind in the structure of the piano; while in the latter case they do not pass or die away without leaving most important after-effects in the structure of the brain; whence does arrive in due time a considerable difference between a cultivated piano and a cultivated human brain, and whence, probably, have arisen, in the progress of development through the ages, the differences between the brain of a primeval savage and the brain of Mr. Spencer... With the brain function makes faculty, not so with the piano."



The existence of an *atman* or soul independent of the body is an unfounded assumption. The soul, as a substantial something behind the stream of conscious states (*alaya vignana pravaha* and *pravritti-vignana pravaha*), is a superficiality, and is utterly needless for expressing the phenomena of consciousness as they appear. A stream of conscious states, each substantially different from the rest, but cognitive of the rest and appropriative of each other's content, is enough to formulate and describe all the facts of experience. There is no reason for supposing the existence of an experiencing self outside this series altogether. The mental unity called conscious selfhood needs for its growth no absolutely permanent elements in mental life. It only needs the presence in psychical life of some relatively permanent elements which change at a much less rapid rate than others. And such relatively permanent elements we find in the "organic" sensations and the habitual

emotional tone which characterises them and in the predispositions which have been inherited or acquired in the earliest period of psychic life. Strictly speaking, none of these can be said to be really permanent and unchanging. The organic sensations of a man in the prime of lift are not the same as those of childhood or of dotage. No psychical element, whether it be organic sensation or feeling tone, remains permanently the same from the beginning to the end of life. But, as compared with the sensations and ideas which from time to time occupy the centre of consciousness, the changes in the organic sensations and the emotional tone are so slow within long periods of life that this relative permanency gives rise to the growth of a distinction between the permanent self and its incessantly changing sensations and ideas, an illusion, so to say, which it is the purpose of the science of psychology to dispel. Hence an eternal self or soul which remains the same without modification can have no psychological value. Instead of explaining the simple facts which it is invoked to explain, it can be rendered intelligible only by their aid. We may, therefore, say with Shadworth Hodgson that the substantial soul is an outbirth of that sort of ratiocination whose guiding principle is: Whatever you are ignorant of is the explanation of what you know.

The Dharma accordingly looks upon the self of which there is so much talk as an error, an illusion, a dream. Attachment to it can only produce egotism, and egotism is a craving for happiness here on earth and then beyond in heaven. Therefore the discernment of self cannot be the condition of emancipation from sorrow. The very search for atman is wrong, and like every other wrong start it must lead in a false direction. "All false doctrines," says Asvagosha in his *Mahayana Sraddhotpada Sutra*, * "invariably come out of the *atman* conception. If we were liberated from it, the existence of false doctrines would be impossible. The truth, it may once more be stated, is that there is not a soul that thinks the thoughts and shapes the character, but the thoughts themselves constitute the thinker, and the character of a person is itself the very nature of his self. To quote the words of a modern psychologist, "if the passing thought be the directly verifiable existent which no school has hitherto doubted it to be, then that thought is itself the thinker." The personality of a man is not constituted by the matter of which his body consists, but by the forms of the body, by the sensations, by the thoughts, by the actions. The personality of a man is the combination of all these. To quote Prof. James † once again, "the consciousness of self involves a stream of thought, each part of which as



'I' can remember those which went before and know the things they knew; and emphasise and care paramountly for certain ones among them as '*me*', and *appropriate to these* the rest. The nucleus of the '*me*' is always the bodily existence felt to be present at the time. Whatever remembered past feelings *resemble* this present feeling are deemed to belong to the same *me* with it. Whatever other things are perceived to be associated with this feeling are deemed to form part of that me's *experience*; and of them certain ones (which fluctuate more or less) are reckoned to be themselves constituents of the *me* in a larger sense,—such are the clothes, the material possessions, the friends, the honors and esteem which the person receives or may receive. This *me* is an empirical aggregate of things objectively known. The I which knows them cannot itself be an aggregate, neither for psychological purposes need it be considered to be an unchanging metaphysical entity like the soul, or a principle like the pure Ego viewed as 'out of time.' It is a thought, at each moment different from that of the last moment, but appropriative of the latter called its own. All the experiential facts find their place in this description, unencumbered with any hypothesis save that of the existence of passing thoughts or states of mind." Similarly, says Buddhagosha in his *Visuddhi Margha*: "The words 'living entity' and 'atman' are but a mode of expression for the presence of the five attachment groups, but when we come to examine the elements of being one by one, we discover that in the absolute sense there is no living entity there to form a basis for such figments as 'I am' or 'I'; in other words, that in the absolute sense there is only *nama* (name) and *rupa* (form). The insight of him who perceives this is called the knowledge of the truth." In another place in the same book it is said: "Strictly speaking, the duration of the life of a conscious being is exceedingly brief, lasting only while a thought lasts. Just as a chariot wheel in rolling rolls only at one point of the tire, and in resting rests only at one point; in exactly the same way, the life of a living being lasts only for the period of one thought. As soon as the thought has ceased the being is said to have ceased. As it has been said:—

"The being of a past moment of thought has lived, but does not live, nor will it live.

"The being of a future moment of thought will live, but has not lived, nor does it live.

* Suzuki's translation, p. 106.

† Principles of Psychology, Vol. I.

"The being of the present moment of thought does live, but has not lived, nor will it live."

Just as fire, though not lying hidden in the two sticks rubbed against each other, originates through fiction, in the same way consciousness, though it is no result of mechanical effects, appears under certain conditions and disappears when the conditions cease to exist. When the wood is burnt, the fire disappears. Just so, when the conditions of consciousness cease, consciousness disappears. Consciousness is known to us only as a phenomenon of life connected with an organism. Psychical states are only known to us as dependent on organic states. Changes in the brain are essential conditions for all our states of consciousness. Nor is the connection between psychic states and organic states as great as the connection between purely organic states. Organic states are permanent as long as there is life, but psychic states are intermittent even during life. While organic life has no break in an individual's existence, conscious life performs its functions only from time to time, needs the refreshment of sleep, and varies in activity even when awake. Life does not exist for consciousness, but consciousness for the sake of life. All this proves that consciousness can have no existence independent of the organism. This conclusion of normal psychology is strongly supported by mental pathology. Within the life-history of a single individual various selves appear and disappear in a manner which shows that they cannot be regarded as connected by any felt continuity of interest with the rest of life. Cases of multiple personality and alternating personality prove that a plurality of selves might alternate regularly or even co-exist in connection with the same body. Such abnormal psychic phenomena force on us the conclusion that the origination and the disappearance of selves in the course of psychical events is a fact of constant occurrence.

There are no known facts that imply a soul separable from the body. The phenomena of telepathy may be real, but they do not prove the existence of consciousness independent of the organism. The endeavours of the Psychic Research Society and of the innumerable spiritualistic and theosophical bodies have not brought to light any scrap of scientific proof of the continuance of human personality beyond the grave. Can any proof be expected from "a method inquiry which is not repelled by the grotesquerie of the 'spirits', and which accepts balderdash as the poetry of Shakespeare, twaddle as the philosophy of Bacon, and the medium's thinly disguised person as the reincarnation of Socrates, the Virgin Mary, or the repentant pirate John King?" "Facts, I think," says Professor W. James in his *Varieties of Religious Experience*, "are yet lacking to prove 'spirit return', though I have the highest respect for the patient labours of Messrs. Myers, Hodgson and Hyslop." Professor J. H. Leuba concludes his searching analysis of the report of Professor Hyslop's seances with Mrs. Piper, the famous medium, with the following remarks: "Professor Hyslop's careful investigation may have at least one good result: the moderation of the disturbing wish of a certain class of people for a future life. They may learn to face the actual present more resolutely and wisely. For although its purpose was not to discover the condition of the "departed," what comes through is sufficiently significant to make the heart of the believer sink. Three score and ten will appear long enough to every one for that kind of life. However that may be, Professor Hyslop is certainly right in his contention that the condition of life in another world cannot be made an argument against its possibility. For the rest, if the worse comes to the worse, humanity will have a chance of showing its stoutness of heart in facing this hopeless, repulsive metampsychosis. And as to the Christian religion, forswearing its stupendous mistake regarding the future life, it would, let us hope, have grace enough to turn around and, instead of leading men to immortality, endeavour to deliver them from it, even as Buddhism does."



Science affords no evidence of the continuance of the conscious person after death, but on the whole it suggests that the conscious person has ended too. The only conscious life of which we have any experience or which is possible to imagine, is embodied conscious life. In his complete nature man is a compound. We can separate him into body and mind only in thought. Language reveals the true nature of personality. A person speaks not only of *his* body but also of *his* soul. Who then is the possessor of both body and soul if it is not the complete man, the compound? Just as we are in the habit of saying 'the wind blows', as if there were the wind performing the act of blowing, so also do we say, by a license of speech, that a person owns body and soul, performs actions, directs the emotions, controls impulses and so forth. But in reality the totality of all these constitute the person. Whatsoever a man does with his body, with his voice, with his mind, it is that that constitutes his person. Once the Blessed One was asked by some disciples: "What are old age and death? and what is it that has old age and death?" The Blessed One replied: "The question is not rightly put. To say: 'What are old age and death? and what is it has old age and death?' and to say: 'Old age and death are one thing, but it is another thing that has old age and death,' is to say the same thing in different ways. If the

161656

dogma obtain that soul and body are identical, then there is no religious life (for the soul would perish with the body), or if the dogma obtain that the soul is one thing and the body another, then also there is no religious life (for if the soul were a distinct entity, an immutable atman, it would not be influenced by conduct and become better, and there would be no use in leading a holy life). Both these extremes have been avoided by the Tathagata, and it is a middle doctrine he teaches: 'On birth depend old age and death'."

The denial of a separate self, an atman, does not obliterate the personality of a man, but liberates the individual from an error that is liable to stunt his intellectual and ethical development and his attainment of perfection. The Dharma removes from life the vanity of self, which is the result of an erroneous belief in the existence of atman and karma as separate entities. As what constitutes a man's personality is his own deeds and aspirations,* he that holds his person dear should keep himself free from wickedness, and do good in every possible way. The Blessed One has said:

"Let any one who holds self dear,
That self keep free from wickedness;
For happiness can never be found
By any one of evil deeds.

"Assailed by death, in life's last throes,
At quitting of this human state,
What is it one can call his own?
What with him take as he goes hence?
What is it follows after him,
And like a shadow ne'er departs?

"His good deeds and his wickedness,
Whate'er a mortal does while here;
'Tis this that he can call his own,
This with him take as he goes hence.
This is what follows after him
And like a shadow ne'er departs.

"Let all, then, noble deeds perform,
A treasure store for future weal;
For merit gained this life within
Will yield a blessing in the next."

P. LAKSHMI NARASU.

* "I am what on the whole I am conscious of having done, and what I propose to do"—Josiah Royce.

# THIRUVARUTPA.

அருட்பிரகாச வள்ளலாரென்னும்

## ஸ்ரீமத் வடலூர் இராமலிங்கசுவாமிகள்

அருளிச்செய்த

# திருவருட்பா.

ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளை யறியாத குக்கிராமம் ஒன்றனை யிந்தப்பிரதேசங்களில் யாரே கண்டார்? தமிழ்நாட்டில், சிறு குழந்தைகளும் கூட 'இராமலிங்கம்' என்ற திவ்ய நாமம் கேட்டபோதெல்லாம் உளமுருகி மனமொன்றுபட்டுச் சுகத்திலழுந்திக் கிடப்பர். சுத்தநிரட்சரகுட்சிகளான பாமரருமே சுவாமிகள் திவ்யசரிதத்தைப் பேசிப்பேசிப் பண்டிதராவர். அசேதன பிரபஞ்சமும் நந்தம் பெருந்தகையாரது தெவிட்டாது தித்திக்கும் பாக்களைச் சிரவணஞ்செய்தவழியே பிரமாநந்தம் அடைந்து பிரம்மகாரமாய் விளங்குமென்றுங் கூறுப. பாம்பும், புலியும், பேயும், கழுகும், யாவுமே அருட்பா ஒருவர் ஓத அருளடைந்து சிவாகாரமெய்தாநிற்குமெனப் பலகாலும் நல்லோர் பலர் அருட்பா மான்மியம் சொற்றனர். அஃதெங்ஙனமாயினு மாகுக. எம்முடைய அனுபவத்தில் வந்த விஷயமொன்றைப் [illegible]பிரயோசனார்த்தமாக ஈண்டெடுத்துக் கூறி மகிழ்வேம். [illegible]ப்பாஷையை யென்றும் அநாதரவுசெய்து, வயிற்றை வளர்ப்பான் ஆங்கிலபாஷா ஞானத்துக்கே வாணாளெல்லாம் ஆர்வத்தோடுழைத்த எமது நண்பரொருவர் பன்னெடுநாள் தவக்குறையால் நிரீசுவரவாதியாய்க் காலங்கடத்தினவர், ஒருதினம் அவர் முன்னிலையில் யாம் அருட்பாவோதினபோது, தாமும் களிப்புற்று, மனமற்று அறிவேயாகி ஆனந்தம்பூத்து அருட்கோலமாய் நின்றார். அன்று தொட்டு நிரீசுவரவாதத்துக்கு விடைகொடுத்துவிட்டுச் சேதனர் சமூகத்தையடைந்து சேதனராய் வாழ்வடைந்தின்புற்றார். சர்வதா சிவநாம சங்கீர்த்தனம் செய்யாநின்றார். ஈசுவரவாதியாகமாறிப் பலநாத்திகரை நல்வழிப்படுத்தினார். எல்லாம் சிவமென்றியார்க்கும் சொல்வார். சிவனடியே சிந்திக்கும் சிந்தையார். அவனருளே துதித்தேத்தும் அருநாவார். சமரஸஞானம் தேக்கப் பிரசங்கிப்பார். சமயச்சண்டை யுணரார். சாதிச்சண்டையறியார். ஆசாரச்சண்டைக் காசைப்படார். முக்கண்ணனைக் கண்

ணனுக்கண்டு களிப்புறுவார். 'அண்ண, கண்ண, மைவண்ண' என்பார். 'சோகம், சிவோகம், சிவகேவலோகம்' என்றே கூறுக உலகே யென்பார். அவர்தம் பெருமை யோத லரிதினுமரிதே.

சின்னாளாய்ச் சிலர் இச்சென்னைமாநகரில் மதக்கலகம் செய்யப்புக்குக் கலக்கம் விளைத்துளார். சைவ, வைணவ சண்டை ஒழிந்தது. தென்கலை, வடகலைச் சண்டையு மடங்கிற்று. வேதாந்த, சித்தாந்தச் சண்டையு மொடுங்கிற்று. இப்போது அருட்பா, மருட்பாவெனக் கூப்பாடிட்டுக்கிடக்கின்றனர் சிலர். ஸ்ரீ இராமலிங்கசுவாமிகளை வாய்க்குவந்தபடி வைவதே இவர்கட்கு பாலும் பழமுமா யிருக்கிறது. இவர் கொடுமை யென்னே என்னே! இவர்தம் கூற்றைக்கண்டும் பலபேதைமாக்கள் கலங்கலாயினரே. அம்மம்ம! கைகூசாமல் கண்டதைக் கிறுக்கிவிடுகின்றனர்; வாய்கூசாமல் வாய்க்கு வந்ததைப் பிதற்றுகின்றனர்; மனம்கூசாமல் மனப்பாலருந்தித் திரிகின்றனர். இதுவே கலியுகம்! இதுவே கலியுகம்!

"நாதமுடிமேலிருக்கும் வெண்ணிலாவே" என்றபாடத்தை மாற்றி "நாதர்முடிமேலிருக்கும்" என்று படிக்கின்றனர். அடியைத் தேடாமல் முடியையோ தேடுவதென்றுசங்கித்து அவதியுறுகின்றனர். அடிமுடியற்றபரம் பொருளுக்கு அடியையும் முடியையும் கற்பியாநின்றனர். நாதன் முடிக்கும் அடிக்கும் ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கப்புக்கனர்.

ஹரி பிரமர் காணாத வடிமுடியை இவர் பேசத்துணிந்ததொன்றே, எமக்குப் பெருவியப்பைத் தாராநின்றது.

"யதோவாசா நிவர்த்தந்தே அப்ராப்ய மனசாசஹ"
என்று வேதமும் கோஷியாநின்றது.

"அவிஜாதம் விஜானதாம் விஞ்ஞாதமவிஜா—தாம்"
என்று உபநிடதம் முழங்குகின்றது.

"சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க"
என்றும்

"ஒன்றுநீ யல்லை, யன்றியோன் றில்லை"
என்றும்

"அவன் இப்படியன், இவ்வுருவன், இவ்வண்ணத்தன்
என்றெழுதிக் காட்டொணாதே"
என்றும்

"ஆனாலும் இதன்பெருமை யெவர்க்கார் சொல்வார்
அதுவானால், அதுவாவர், அதுவேசொல்லும்"
என்றும்

"சிவனுரு மருவுமல்லன், சித்தினோடு சித்துமல்லன்"
என்றும்



"நீ என்னானாய் என்னானாய் என்னினல்லால் என்சொல்லி
ஏத்துகே னேழையேனே"
என்றும்

தமிழ்வேதம் கோஷிப்பதை அறிந்தடங்குவதாக பாமரவுலகம்.

புல்லறிவாளர் திருவருட்பிரகாச வள்ளலாரை நொந்துகூறிக்கிடப்பா, ரேனும், நல்லறிவாளர் நந்தம் குருமணியை யாண்டும் பூஷித்துப் பூசியாநின்றனரென்ப தொருதலை.

இக்கலிகாலத்தில் ஆங்கிலபாஷா ஞானமுள்ள பண்டிதர் கூற்றே யாவர்க்கும் பெரும்பிரயோசனம் செய்யாநின்றது. ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த பாஷஞானத்தை யார்ஜித்த பலருள் ஒருவர் "சைதன்ய" சரித்திராசிரியர் நம் நண்பர் ஸ்ரீமத் = தி. பக்தவத்ஸலம்பிள்ளை யவர்கள் B. A. இவர்கள் தமிழிற்செய்த நூலொன்றை இவ்வருடம் பி. ஏ. பரீட்சைக்குப்பாடமாக வமைத்துளார் நந்தம் சர்வகலாசாலைப் பண்டிதர். இவரது தமிழ்ப்பாண்டித்வத்தைப்பற்றி யாம் விசேஷமாகச் சொல்லவும் வேண்டுமோ? இவ்விளங்கனவான் ஆங்கிலபாஷையிலும் சிறந்த ஞானமடைந்து நங்குலத்தார்க் கோராபரணமாகவும் சிறந்து விளங்குகின்றனர். இவர் சுவாமிகள்பால் வளர்த்துவரும் அன்புக்கு அடியிற்பொறித்த வற்புத வசனங்களே சான்றுபகரும்.

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிவழக்கமெலாம் மண்மூடிப்போக' என்றார் தெவிட்டாத தேனே யென்னத் தட்டாத மொழிமாரி பொழிந்ததிருவருட்பிரகாசவள்ளலாராகும் ஸ்ரீராமலிங்கஸ்வாமிகள். கல்லுங்கரையப் புல்லும்புலம்பக் கவிபாடிய கற்பகம். கனிரசமே அவர்தம் கவிரசம். சமயச்சழக்கின் சங்கடம்விட்டகன்று, அமலனன்பையும் அருளையும் இமையளவேனும் நீங்காது எஞ்ஞான்றும் பருகிப்பருகி, கருணைத் ததும்பிப் பொங்கிக் காசினியெங்கும் கவிமாரிபொழிந்து அதனோடு மேதக்கநோக்கமும் கோதற்றகொள்கையு முபகரித்த பெருந்தகை பெருமைபேச யாவரால் தரம்"

கீழே உதகரித்த மெய்ம்மொழிகளைத் தரிசித்தார்க்கு அசாதுக்களின் புன்மொழிகள் பேய்க்கூச்சலா யொழியுமன்றி வேறன்று. தீங்கனி பிழிந்து திப்பிய அமுதங்கொடுக்கினும் அது பாலோ அன்றி நஞ்சோவென வயிர்த்து அலமந்துகிடப்பார்க்கு யாரே நன்மைசெய்யவல்லார்!

"தேவார திருவாசகங்களே அருட்பா
ஏனைய நூல்கள் யாவும் மருட்பாவே"

எனப்பொங்கி வழிந்து "சிவன் எட்டடியுயரன், விஷ்ணு பத்தடியுயரன்" என்று வீண் கூப்பாடிட்டு, ஸ்ரீ கைலாசம் நால்வருக்கே காணி

யாட்சியாமென்று நால்வர் பரத்வம் கூறக் கங்கணம்கட்டி, தேவார திருவாசகங்கட்குத் திருவருட்பா சமத்துவமாமா என்று கொக்கரித்துக் கிடக்குமவர்க்கு சிவனேபோந்து உண்மை யுரைப்பினும் பிரயோசனமிராதென்றே யாம் துணிந்து கூறுவோம்.

பிரமானு பூதிச்செல்வராகிய நந்தம் பிரபுவருளிய அருட்பாடல்கள் எமக்கு ஓர் தெவிட்டாத திவ்ய தேஜோமயாநந்தத் திருப்பாற்கடலாயுள்ளன. அவற்றை யாம் மெய்ஞ்ஞானக் களஞ்சியம் என்றும், பேரின்ப நிமல ஊற்றென்றும் போற்றிப் புகழ்ந்து சிறப்படைவோம்.

யாம் இன்பமடைந்திருக்கும் காலத்தில் அமிர்தமயமான சந்திரிகையுடன் பரவசப்படுத்தும் கானரசமும் சேர்ந்தால் எப்படியோ அப்படியும், துன்பம்வந்தகாலத்தில் எரிகின்றகோடைப் பருவத்திற்கு தென்றல் எப்படியோ அப்படியும் உதவும். அப்பாடல்கள் எமக்குச் சிறந்த ஓர் உயிர்த்துணையாய் விளங்காநின்றன. எம்மான்மீது ஈஷத்தாயினும் தோஷமுரைக்க அவை யொருநாளுமிடங்கொடா. யாம் அக்காலத்தில் உயிர்த்திருந்து, அவரது அழகைக் கண்குளிரப் பாராமலும் அவரது வாக்யாமிர்தத்தைக் கர்ணபுடத்தாலருந்தி ஆனந்திக்காமலும்போனோம் என்று பன்முறையும் சிந்தை நைந்துநொந்து வருந்துகின்றோம். இக்கலிகாலப் பேயர் சிலர் சொல்லும் ஒவ்வொருகொடுமொழியும் நாராசம்போலன்றே எமதுகாதில் விழுகின்றது. அப்பெருமானது பெயரைச்சொன்னால் வருமிடையூறுகளெல்லாம் ஊழிக்காற்றிற் பூழிப்பஞ்சுபோலாகுமே! பெரியரேற்றும் இப்பெரியாரைத்தூஷித்து அகங்கரித்துச் சிரிக்கத்துணிந்த காரியமானது ஒருவனை மதங்கொண்டயானை பின்னே துரத்த; முன்னே ஒரு பதினாறடி வேங்கைப்புலி வந்துபாய, அவன் அந்த ஆபத்துக்குப்பயந்து, பூரணமாய் பிரவஹித்து எதிரிலிருக்கும் ஓராற்றில் குதிக்க, அதில் ஜலவேகத்தால் அடித்துக்கொண்டு போகும்பொழுது ஒரு பயங்கரமான முதலை யவனது காலைப்பிடித்து விழுங்க, அதற்குள் அவன் தாகசாந்தி செய்வதற்காக அங்குள்ள நீரைக்கொஞ்சம் அள்ளிக்குடித்துச் சந்தோஷிப்பது போலல்லவோ இருக்கிறது.

சுவாமிகள் செத்தாரெழுவாரென்று கூறினார் எனக் கண்ணீருகுக்கின்றார் சிலர். "இறந்தனபிறக்கும், பிறந்தன விறக்கும்" எனப்பட்டினத்தடிகளும் கூறுகின்றனரே. தேகம் செத்துச்செத்துப் பிறப்பது சகஜந்தானே. ஆன்மாசாகாதென்று வேதபாஹ்ய மதத்தினரும் கூறுகிற்பரே. "நஜாயதே, மிருயதேவா, கதாசிந்நாயம்பூத்வா, பவிதாவா, நபூயஹ: அஜோ, நித்தியஸ்ஸாஸ்வதோயம் &c." என்று கீதையிற் பேசப்படுகிறதே. இறவாதிறந்த ஜீவர் பிறவாதுபிறத்தல் சம்பவமாகுமா? ஜீவர் இறப்



பதில்லை. அவர்தம் தேகங்களே நொந்து படுகின்றன; எனவே, இறந்தார் பலரென்றுகருதற்க என்று சுவாமிகள் கூறினாரென்றுகொள்வதி லென்ன தடை. அல்லது,

"பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே"

என்று கோடலமைவுடைத்தாம். ஈசனைப் பஜியாதொழிந்தநாளே செத்தநாளென்றால், இருந்தும் செத்தமாக்கள் இனி ஞானமடைந்து உயிர்த்தெழுவர் என்று சுவாமிகள்கூறியதாக நாம் ஏனோகொள்ளப்போகாது. அல்லது,

ஞானசம்பந்தர், வாகீசர் முதலிய பெரியார்போன்ற நந்தம் புண்ணியவடிவினரும் அவர்தம் அருளுக்குப் பாத்திரரானோரை எமனிடத்திருந்தும் விடுவித்தாரென்றே கோடலும் அசாத்தியமாகுமோ? ஞானசம்பந்தாதியோர் இங்கும், கிறிஸ்துமுதலினோர் பிறதேசங்களிலும்செய்த அற்புதத்தை இராமலிங்கபரமஹம்சர் ஏனோசெய்தலடாது? சிவனருள் நால்வருக்கேதான் கிடைத்ததோ? நால்வர்காலத்துக்கு முன்னிருந்தோரும், அவர்காலத்துக்குப் பின்வந்தோரும் சிவனருள்பெறுமலே யொழிந்தனரோ? ஸ்ரீகைலாசத்தில் நால்வருக்கன்றிப் பிறருக்கு இடமேகிடையாதோ? அந்நால்வரே மீண்டும் பூவுலகடைதல் அமையாதோ? நந்தம் புனிதமூர்த்தம் காருண்யமேலீட்டால் அற்புதம் செய்திருந்தால் அதை நால்வருக்குக் காண்பித்து அவரால் பதிவுசெய்து உலகத்துக் கன்னுரை சாட்சி தேடவேண்டுமோ? செத்த பிணங்களையெல்லாம் எழுப்பிக்கிடத்தலே அவர்தம் தொழிலாகவேண்டுமோ? ஞானசம்பந்தராதியோர் பிணங்களை ஆயிரக்கணக்காய் எழுப்பினரோ? ஏகதேசமாகத்தானே அவர்களும் அற்புதம்செய்தனர். இவரும் ஏகதேசமாயதைச் செய்திருத்தல் கூடாதோ? இவர் செய்தாரென்றது பொய்யென்றால், அவர்கள் அற்புதம் செய்தாரென்பதுமாத்திரம் யாங்ஙனம் மெய்யாகும்? அவர்களே கூறினார்களென்றால் இவரும் கூறியுள்ளாரே. அவர்கள் அருளைப்பெற்றவர்கள் என்றால், இவரையும் அங்ஙனம் சொல்லத்தடையென்னை? அவர்தம் பாக்களைக்கேட்டு உலகம் உருகுமென்றால், இவர் பாக்களைக்கேட்டு மண்ணுருகும், மாமுருகும், கல்லுருகும், பொன்னுருகும், முள்ளுருகும், புள்ளுருகும், மண்ணுங்கட்டி மனமுருகும் என்றே சாறுக்கள் கூறிமகிழ்கின்றனரே. தேவார திருவாசகங்கள் தமிழ்வேதமென்றால், திருவருட்பாவைத் தமிழுபநிடதம் என்றே கொள்ளத்தடையென்னை?

இறுதியில் ஒன்றுகூறி இதை முடிப்போமாக.

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள், பங்காளத்திலேனும், பம்பாயிலேனும், பிறமாகாணங்களிலேனும் உற்பவித்திருந்தால் அவர் புகழ் இன்று இவ்வுலக முழுமையும் பரந்திருக்கும். இது சிராக்ஷேபம். சென்னை மாகாணத்தில் அவர் தோன்றியது அவர்தம் அபார ஆற்றலுக்கும், பக்திக்கும், ஞானத்துக்கும் குறைவென்றே சிலர் கூறுகின்றனர். ஆயினும் சேற்றிற்றானே செந்தாமரை பூத்தல் இயற்கை.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்குக்கிடைத்த சிடர்குழாம் இவருக்குக் கிடைத்திருப்பின் இவரை யின்று அமெரிக்கா, ஐரோப்பா, முதலியகண்டங்கள் கடவுளே யென்றுபூஜைசெய்யும். அதிற்றடையில்லை. இந்தப்பிரதேசங்களில் பிரஜைகள் பெரும்பான்மையோருக்கு எந்த அபிமானமும் கிடையவேகிடையாது. சொந்த அபிமானம்தான் உள்ளதோவெனின் அதுவும் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பணத்தைப்பூசைசெய்யும் இவர்கட்கு தேசாபிமானமேது, சாதியபிமானமேது, பெரியோரபிமானமேது, சமயாபிமானம்தான் ஏது? தேகத்தைப்போஷிக்க அறிவார்களேயொழியப் பொதுநலத்துக் குழைக்க வறியார்கள் நம்மவருள் பெரும்பாலார். அருட்பாவைவிட அருமையான நூலேயில்லை. பக்தி ஞானமடைய அருட்பா ஒன்றேபோதும். வேறொன்றை நாம் கோரவேண்டாம். தேவார திருவாசகங்களைப் போலவே அருட்பாவும் தமிழ்வேதமாகும். தமிழுணர்ந்த ஐரோப்பியரும், மகம்மதியரும், பௌத்தமதஸ்தரும், ஜைனசமயத்தவரும், நாத்திகவாதிகளும், ஏகேசுவரவாதிகளும், பிறரும் அருட்பாவைப் போற்றுகின்றனரென்ப. படிப்பறியாப் பெண்மணிகளும், நூலுணராநஞ்சிறார், சிறுமியரும், குணமில்லாக் குடியரும், வெறியரும், யாவரும், அருட்பாவைக் கருவிகளோடமைத்துப் புத்திமான்கள் ஓதிக்களிப்புறும் போதெல்லாம் தத்தமைமறந்து, ததாகாரமாயெற்புதமற்புதமெனக்கூறிச் சந்தோஷ சாகரத்தழுந்துவர். இனிமேல் வருங்காலத்தில் திருவருட்பாவைத் தமிழுலகமுழுமையும் போற்றிப் பூசித்துப் பூரித்துப் பாரிக்குமாக.

V. MUTHUCOOMARASAWMY MOODALIAR.

---



# KADAMBARI.

## காதம்பரி சாரம்.

பத்திரலேகையினிடத்தில் காதம்பரி பின் வருமாறு சொன்னாள். "நீ போய்க்கூப்பிட்டால்மாத்திரம் சந்திராபீடன் வருவானா? என் இவ்விரண்டு கண்களும், அவரை இதுவரையில் பார்த்தவையல்லவோ? இந்த மண்ணில் அவர் பிரவேசித்தும் சுவீகரித்தவரல்லவே. இச்சரீரத்தினண்டையில் அவர் உதாசீனமாய் நிற்கவில்லையோ? அவர் கரம்பெரியோர்களின் சம்மதியை வீணாய் எதிர்பார்த்து, என்னைச்சுவீகரிக்காமல் போகவில்லையோ? பிறர் துன்பம் விரும்பாத சந்திராபீடரும் இருதரம் என்னிடம்வந்து, திரும்பவில்லையோ? மன்மதன் என்மேல் பாணங்கள்யாவையும் எய்து எய்ய இனிப்பாணமில்லாமல், சந்திராபீடனிடம் சும்மாவிருக்கின்றான்போலும்.

அன்றியும் மகாசுவேதையினிடத்தில் நான் அவள் துயரம்தீருமளவும், பாணிக்கிரகணம் செய்துகொள்வதில்லையென்று சபதம்செய்திருக்கிறேன்; "அம்மா, அப்படிச்செய்யாதே, மன்மதன் வெகுதுஷ்டன். காதலன் கண்ணாற்கண்டால், உண்டாகும் அன்பால் மன்மதன் பிராணனையும் அபகரிப்பான்" என்று என் தோழி எச்சரித்தாள்.

ஆனால் மனதில் உதிக்கும் என்காதலன் பிறர் இருப்பதை கவனியாது எனக்கு எப்பொழுதும் தரிசனம் அளிப்பான்; ஒருகாரணமின்றி என்னைக் கைவிட்டு விடுவானல்லன்; என்னைவிட்டுப் பிரியான். இரவும் பகலும் நான் உட்கார்ந்திருக்கும்போதும், எழுந்திருக்கும்போதும், திரியும்போதும், படுத்திருக்கும்போதும், விழித்திருக்கும்போதும், உறங்கும்போதும், நதியண்டையிலும், விளையாட்டுஓடையிலும், உத்தியானங்களிலும், கலியாணமண்டபங்களிலும் எளியாளை ஏமாற்றிக் களிக்கும் என்காதலனைக்காண்கிறேன்; இதுவரையில் உன்னிடம் சொல்லியிருக்கிறேன். சந்திராபீடனை அழைத்துவரும் பேச்சை விட்டுவிடு." எனச்சொல்லி அவள் அறியாமல் பெருமூச்சுவிட, மூடினகண்களின் இமையோரத்தினின்று நீர்த்துளிகள் ததும்ப, தாமரைத்தண்டுபோன்ற தன்கரத்தில் ஜலத்தினாலடிபட்ட தாமரையொத்த தன் முகத்தை வைத்துக்கொண்டு நின்றாள்.

இதையெல்லாம் பார்த்துநின்ற பத்திரலேகை "குலஸ்திரீகளுக்கும், கன்னிகைகளுக்கும், தம்கணவனையும், காதலனையும் விட்டுப்பிரிந்து இருக்குங்காலத்தில் தம் மனதில் உதிக்கும் அவரது பிம்பமே

ஜீவநாதாரமும், ஆறுதலும் ஆகும்; கும்பிருட்டும் அவரது முகத்தை மறைக்காது. அடைமழையும் அவரைவராது தடுக்காது. பனிமழையும் அவரை ஒளிக்காது என நினைத்தாள். இப்படியிருக்கையில் அன்பு ஆட்கொண்ட காதம்பரியின் உள்ளத்தைக்கண்டு சூரியனும் ஓடிவிட்டான்போலும். இரவும் இவளிடத்தில் பட்சபாதம்கொண்டு துளிர்ப்படுக்கைபோல் செம்மானத்தை செய்வித்தாள். இவள் உறங்கும்பொருட்டு சந்திரகாந்தமணிப்படுக்கையும் வேலைக்காரிபோல் ராத்திரிதேவதைபரப்பினாள். இவள்பொருட்டு ஆயிரம்தாசிகள் சிறுதீபங்கள் தூரத்தில்பிடித்து நின்றவர்கள்போல் நட்சத்திரங்களும் உதித்தன. காதம்பரியின் அவஸ்தையைக்கண்டு பத்திரலேகை ''அம்மா, உன்னைப்போல் சுகத்துக்கு உரித்தானவர்கள் இவ்வாறு துயரப்படுவது நியாயமன்று. நான் சந்திராபீடனைக் கூப்பிட்டுவருகிறேன்'' என்று சொல்லவே விஷம்தீண்டி மூர்ச்சையடைந்தவர் மந்திரம் உச்சரித்ததும் பிரஞை அடைவதுபோல், உன்பேரை கேட்டமாத்திரத்தில் கண்திறந்து பரிஜனங்களைக்கூப்பிட்டு எனக்கு தாம்பூலம் கொடுத்து ''எனக்குப்பிரியம் என்று சொல்லவில்லை. உன்னைபார்த்துக்கொண்டிருந்தாலொழிய என்ஜீவனை எப்படிகாப்பாற்றுவேன். ஆனாலும் போயழைத்துவர உனக்கு மனமிருந்தால் அப்படியேசெய்,'' என்று அனுப்பினதாக பத்திரலேகை சந்திராபீடனுக்குச் சொன்னாள். பத்திரலேகை தலைகுனிந்து காதம்பரியின் அவஸ்தையைகண்டு உதாசீனமாயிருப்பது உமக்கழகல்லவென்று பரிஹாஸமாயும், பரிதாபமாயும் சந்திராபீடனுடைய மனதில்தைக்கும்படி சொன்னாள்.

சந்திராபீடன் காதம்பரியின் அபிப்பிராயத்தை அறியாமல் போனேனென்று தன் புத்திக்குறைவைத் திட்டிக்கொண்டான். அந்தச்சமயத்தில் தன் தாயார் ஓர் வேலைக்காரியை அனுப்பித்து ''நீவந்தசங்கதி தெரிந்தது. வெகுகாலம் பார்க்காமலிருந்துவிட்டாய். உன்முகத்தைப் பார்க்க வேண்டுமென்று வெகு ஆசையாயிருக்கிறேன்'' என்றுசொல்லி அழைத்துவரும்படி கட்டளையிட்டாள். தாயினிடத்தன்போ ஜன்மமெடுத்தநாள் முதல் வளர்ந்துவந்திருக்கிறது. தந்தையின் பாதங்களண்டை அவருக்குப் பணிவிடைசெய்யும் சுகத்தை விடுவார்களா? பெரியோரால் தழுவப்படுவது ஆநந்தகரமல்லவா? புதிதான சினேகமும் குதூகலத்தை உண்டாக்குகிறது. காதலியைகண்டுகளிப்பது ஜன்மமெடுத்ததின் பயனல்லவோ! ஜன்மபூமியைவிட்டுப்போவது கஷ்டமாயினும் காதம்பரியை கைகொள்வது அவசியமல்லவா? ஐயோ காலம் வீணாய்ப்போகிறதே! விந்தியமலைக்கும் ஹிமயமலைக்கும் இவ்வளவுதூரமிருக்கிறதே!'' என்று ஆலோசித்து, சந்திரனால் வெகுதூரம் உல்லாசப்படுத்தப்பட்டும் எல்லையைமீறாது சமுத்



திராஜன் அடக்கிக்கொள்வதுபோல் சந்திராபீடனும் தாய்தந்தையின் நிர்ப்பந்தத்தாலும், ஸ்நேகத்தாலும் கட்டுண்டு ஒன்றுந்தோன்றாமல் நின்றான். அவன் மனது ஊஞ்சலாடிற்று. தன் தாயின் அரண்மனைக்கு சென்று அன்று முழுதும் அங்கிருந்தான். இரவில் நித்திரை வரவில்லை. எப்படி உஜ்ஜியினை விட்டுபோவது என்று வழி ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு இருக்கையில், ஒருநாள் உஜ்ஜியினியை விட்டு சிப்பிராநதிக் கரையிலிருக்கும் சுப்பிரமணியஸ்வாமி கோவில் பக்கமாய் நடந்துகொண்டிருந்தான். அக்கரையில் குதிரை வீரர்கள் சிலர் வருவதைக் கண்டான். அவர்களின் தலைவன் கேயூரகன் என்று தெரிந்தது. அவனை வரவழைத்து காதம்பரி மகாசரிவதை இவர்களிடத்திலிருந்து என்ன சமாசாரம் கொண்டுவந்தாயென்று ஆசையாய் கேட்டான்.

என்னிடத்தில் சமாசாரம் ஒன்றும் சொல்லவில்லை என்றுஉரைத்து காதம்பரி இருக்கும் ஸ்திதியைத் தெரிவித்தான். தாமரையிலிருக்கும் நீர்த்துளிபோல் அவள் தேகம் தத்தளிக்கிறது. ஸ்படிகத்தரையில் காணும் பிரதிபிம்பம்போல் நடுங்குகிறது. உன்னை நாள்தோறும் அவள் தரிசித்துக்கொண்டே இருந்தபோதிலும் நீ அவளைப்பார்ப்பதில்லை. ஸ்வப்நத்தில் காணப்படுகிற மனிதர்கட்கு விசாரம் அதிகரிக்குமல்லவா? உஷாதேவியைபோல் சுவப்நத்தில் உன்னைக்கண்டு களிக்கிறாள். உன்பேரே அவளுக்குள்ளதோழி. பேச்சுஎல்லாம் உன்னைப்பற்றியே. பாடும்பாடெல்லாம் உன்னைப்பற்றியதே என்றான். இதை கேட்ட சந்திராபீடன் இனிக் கேட்க சக்தியற்று நிறுத்தும்படிசொன்னான். என்னை யுவராஜனாக்கி என்மீது ராஜ்ஜியபாரம் யாவத்தையும் தகப்பனார் வைத்துவிட்டார்.

தாய்தந்தையர்களை நமஸ்கரிக்காது அவர்கள் உச்சிமுகர்ந்து அவர்கள் ஆசீர்வாதம்பெறாது அவர்களிடம் தான் போகும்சங்கதி சொல்லாது எவ்வாறுவீட்டைவிட்டுப்போவேன்? என்பின்னர் தாயுந்தந்தையும் வருவார்களானால் 18தீவுகளையும் மாலையாயணிந்த பூதேவியின் தோடராளா? சினேகிதனால் ஆகவேண்டியகாரியத்தில் எனக்குத் துணை ஒருவரும் இல்லையே? மற்றெவனோடு சுகதுக்கம் பங்கிட்டுக் கொள்வேன்? மற்றெவன் நான் துக்கிக்கும்போது துக்கத்தையும், நான் சுகிக்கும்போது சுகத்தையும்அடைவான்? மற்றெவன்மீது, செய்யவேண்டியயாவையும் ஒப்புவித்து கவலையற்று இருப்பேன்? என் காரியத்தில் மற்றெவருக்கு சிரத்தையும் கவலையும் இருக்கிறது? எனச் சிந்தித்துக்கொண்டு துக்கத்தினால் தீர்க்கமான இரவைப்போக்கினான். மறுநாள் சைந்நியம் தசபுரம் வந்த

*

தாக கேள்விப்பட்டான். இனி இரண்டாவது உள்ளம்போன்ற வைசம்பாயனன் வந்துவிட்டானென்று சந்தோஷித்து, மேகநாதனை வரவழைத்து பத்திரலேகையையும், கேயூரகனையும், காதம்பரி யண்டையிலிருந்து பத்திரலேகையை கேயூரகன் அழைத்துவந்தஇடத்துக்கு கொண்டுவிடும்படி கட்டளையிட்டான்; கேயூரகன்மாத்திரம், "தங்கள் மனது முன்னமே, தேவி அண்டை புறப்பட்டுப்போய் விட்டது. தாங்களும் புறப்பட்டு விட்டீர்கள், இனி நான்மாத்திரம் இங்கே இருப்பானேன்" என்றுவிடைபெற்றுக்கொண்டான். அவனிடத்திலும் பத்திரலேகையினிடத்திலும், காதம்பரிக்கு பிரியமான செய்தி சொல்லியனுப்பித்து உடனே தான் வருவதாக தெரிவிக்கவேண்டுமென்று சொல்லி வைசம்பாயனனை சந்திக்க, தகப்பனண்டை விடைபெற்றுக் கொள்ளும்பொருட்டுச் சென்றான். தன் தந்தையைத் தூரத்திலேயே வணங்கி நமஸ்கரித்தான்; தாங்கமுடியாத சினேகிதத்தால் அவர் குரல் நீர்கொண்ட மேகத்தின் தொனியையடைய "வா! வா!" எனக் கம்பீரமாய்ப் பிள்ளையை அழைத்தான். பக்கத்தில் உட்கார்ந்த மகனை பலவந்தமாய் பிடித்திழுத்து தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டு புத்திரனுடைய அங்கம் யாவத்தையும் உச்சி முதல் உள்ளங்கால்வரையில் பார்த்துக்கொண்டும் திருப்தியடையாது தன் கரங்களால் தழுவிக்கொண்டும் அக்காவலனைப் பார்த்து பையனுக்கு கலியாணம் பண்ணிக்கொள்ளும் பருவம் வந்துவிட்டது, தகுந்தபெண் தேடவேண்டுமென்றார். மந்திரியும் "படிப்பு எல்லாம் வந்துவிட்டது; சாஸ்திரங்களையும் கற்றுவிட்டான். இனி இணைந்த உயிர்தோழி சம்பாதித்துக் கொடுக்கவேண்டியதே" எனச்சொன்னார். அரசனும் வணங்கிநின்ற இளையவன் தோளில் தன்கையை வைத்துக்கொண்டு தன் மனைவி வீட்டிற்குச் செல்ல, சந்திரனைக்கண்ட அலைபோல் மனைவியார் எழுந்திருக்க; கலியாண மங்களத்திற்கு அறிகுறியாயும் உள்ளத்தில் பிரகாசிக்கும் பிரதாபாக்கினியின் புகைபோலுமிருக்கும் குமாரனது இளம் மீசையைக்காட்டி சந்தோஷித்தான்; உனக்கு நாட்டுப்பெண் வரப்போகிறாளடி என்று பரிகாசமாயும் உல்லாசமாயும் பேசினார். "இருட்டில் பிரயாணம் செய்பவனுக்கு வெளிச்சம்போலும், நடுக்காட்டில் வழி தெரியாது முழிப்போனுக்கு வழிக்காட்டுபவர்போலும், சமுத்திரத்தில் விழுந்தவனுக்கு ஓடம்போலும், இறந்தவனுக்கு அமிருதம்போலும்" இருக்கும் இந்த மொழிகளைக் கேட்டு சந்திராபீடன் களித்தான். தன்னிச்சைநிறைவேறுவதற்கு வைசம்பாயனனைக் காணுவதால் தான் இடையூறென்று தீர்மானித்து அன்றிரவு பூரணச்சந்திரன் நிலாவில் சைந்நியம் இறங்கி இருக்குமிடத்துக்குச் சென்றான்.

**A. Srínivasa Iyer.**

# ARUNAGIRI NATHAR.

## அருணகிரிநாதர்.

(முதற்சம்புடம் 187=ம் பக்கத்தொடர்ச்சி.)

### வில்லிபுத்தூராழ்வார் கலகம்.

பலவகையானுங் கீர்த்திபெற்றுத் தேவருலகிலும் மிக்கபெருமையுடைத்தாய் விளங்கும் பாண்டிநாட்டில், சதுரகிரிச் சாரலையடுத்து ஸ்ரீவில்லிபுத்தூரென்னும் திவ்யவைணவக்ஷேத்திர மொன்றுண்டு. அவ்வூரில் நாற்குலத்தினும் மேம்பட்ட மறையவர் குலத்துப்பிறந்து மால்பதம் பணிவோராகியும் கொங்கு தேசத்தரசன் வேண்டுகோட் கிணங்கிப் பாரதகாவியஞ் செய்தவராகியும் சார்வபௌமரெனு மறுபெயர்பூண்டவராகியுமுள்ள ஒருபுலவர் சிகாமணி விளங்கினார். மேகம்போற்கவிமழைபொழியும் வித்வானாயிருந்த சகோதரனு மவர்க் கொருவருண்டு. சந்தக்கவி தொடுப்பதில் தன்னையொத்த ஸமர்த்தரெவரும் யாங்கணுமில்லையென மதித்தவராய் தன்னோடு வாதுக்குவந்த நாவலர் அளவில்லாரை வென்று, தன்னையாதரித்த அக்கொங்குமன்னவன் கொடுத்திருந்தவாட்படையால் அன்னாரது இருசெவிகளையும் மடலோடறுத்து அதனால் எங்கும்பரவிய புகழ்படைத்தவர். அனந்தன் என்னுமொரு பாவலனைவென்று அவன் செவியினையறுக்க வாளினை யுறைநின்றும் இவர் நீக்கியபொழுது அவன் *"என்பெயரையுடைய ஆதிசேஷனுக்குஇல்லை, அதனால்,மனந்தளரேன்" (பாம்பு=கட்செவி) என்று கூறுதலும், இவர் மனமுவந்து அவன் சொன்னயம்பேணி அவனை விடுவித்தனர். தன் செய்யுட்கு ஒருநயம் வருமாயின் சமயவாதிகள் விரோதம் எவ்வளவு வருமாயினும் அதனை ஒரு பொருட்படுத்தாதவர் இப்புலவர் பெருமான். இவர் வைணவராயிருந்தும் "ஓரேனந்தனைத்தேட வொளித்தருளுமிருபாதத் தொரு வனந்தப் போரேனந்தனைத்தேடிப் புறப்பட்டான்" எனப்பாரதத்து உரைத்தது இவர் கொள்கையை நன்கு விளக்குகின்றது. வேதியன் தமிழ் விழவழ என்று கூறுவார் நடுக்கங்கொள்ளும்படி தானியற்றிய தமிழ்நூல்களாலிசைபரப்பி பகவான் ஸ்ரீமந்நாராயண னடியவர்க்கடிமைசெய்து அவ்வூரரசனு மெச்சும்படி வாழ்ந்துகொண்டிருந்தார்.

---

* 'என்செவியை யறுத்துவிட்டால் யானும் ஆதிசேஷனும் பேதமிலமாவோம்' என்றபடி.

அக்காலத்து, காஞ்சீபுரவாசியாகிய ஒரு வைணவர் வைஷ்ணவ திருப்பதிகளில் சிலவற்றைத் தரிசித்த பின்னர், சூடிக்கொடுத்த நாச்சியாரை விரும்பி விஷ்ணுபெருமான் கோயில் கொண்டருளிய ஸ்ரீவில்லிபுத்தூர்ப்பதியையடைந்தார். அவர் ஸ்நானஞ்செய்து துவாதசநாமவகைகளுஞ்சாத்தி விஷ்ணு பெருமானை யவர்க்குரிய ஆயிரநாமங்களுஞ் சொல்லியேத்தி வைதிகச் சடங்குகளுமியற்றி ஆனந்த பாஷ்பம்நிறைந்தகண்களோடுகூப்பியகையினராய்த் திருவாலயத்துட்புகுந்து மேலோர்நெறிப்படி வழிபாடாற்றி அரவணை முதலியசித்ரான்ன வகைகளும்பக்ஷணவகைகளுமுட்கொண்டுபின்னர் வாயிலிற் சிலநேரந்தங்கினர். அவ்வூர் மாந்தர் வில்லிபுத்தூராரை மெச்சிக்கூறுமொழிகள் அவர்காதில் விழுந்தன. அச்சார்வபௌமரைக்காணவிரும்பியவரகத்திற்குச் சென்றபோது வாளுமவருமாய் விளங்குவதைக் கண்டார். கண்டு இதென்ன இவ்வாளெதற்கு என்று வினவினர். அதற்குத்தரமாக "எதிர்த்த சந்தப்புலவர் செவியை யறுக்குமிவ்வாள்" என்று அவர் மொழிந்ததையுங் கேட்டார். கேட்டவர் "எங்கள் நாட்டில் சுதரிசனுசல மென்றொன்றுண்டு. அங்கொரு நாவலன் சுப்பிரமணியக்கடவுள் பெருமாளெனச் சந்தம் அளவின்றிப் பொழிகின்றனென யாவருஞ் சொல்வர். அன்றியும் அவன் எங்களூராகிய கச்சியிற் குமரகோட்டத்தில் வந்தானும். அங்குச்சென்றோர் சிலர் வந்து சொல்லினர். தேகமுழுதும் வெண்பொடி பூசிக் கோவணந் தரித்துத் திருவோடு கையேந்தி யிரந்துண்டு வாழுந்தன்மையார் அப்பெரியோன். அவனிடஞ்சென்றுவாதுசெய்து அவனை வெல்லவல்லிரோ" என்று வில்லிபுத்தூராரிடத்து அருணகிரிநாதர் கதையை யுரைத்தனர். வில்லிபுத்தூரார்க்கோ வீரமிகுந்தது. அவ்வைணவரை நோக்கி "என்னோடு வந்தூடு காட்டுவா" என்றனர். அவரோ திருக்குருகூர் திருக்குறுங்குடி முதலிய க்ஷேத்திரங்களைத்தரிசிக்க ஆவல்கொண்டிருந்தவராதலின் இவரோடு வரக்கூடாதிருந்ததற்காக க்ஷமிக்கவேண்டினர். தாமெப்படியாவது சென்று அருணகிரிநாதரை வெல்லவேண்டுமென்று நிச்சயித்த வில்லிபுத்தூரார் சுபதினங்குறித்துப் புறப்படச் சித்தமாயினர். அவரைச்சேர்ந்தார் யாவரும் நன்றுநன்றெனச் சம்மதித்திருந்தனர். வில்லிபுத்தூராரும் எவனோ ஒரு அரசன் செல்கின்றான் என்று கண்டோர் வியக்கும்படி ஸர்வாடம்பரத்தோடும் வடதிசைக்கேகினர். ஏகும்பொழுது சிவிகை தாங்குவோரிற் சிலர் மட்டுமே நற்சகுனம் வாய்க்காத விதத்தைநினைத்து "இவர் வெல்லுவாரென்றுதோன்றவில்லை" யெனத்தம்முள் மெல்லப்பேசிக் கொண்டனர். பகலுமிரவுமாகப் பிரயாணஞ்செய்து வழி எல்லாங்கடந்து அருணை நகரெல்லையை யடுத்தார். நால்வகையங்கங்களோடு மிவர் வருதலைக்கண்ட பிரபுடதேவரா



ஜன் சேனை 'இது மாற்றலர் சேனைகொல்' என ஆர்ப்பரித்தது. ராஜனாலனுப்பப்பட்ட ஒற்றர் வந்து விசாரித்து உண்மை செப்பியதின்பேரில் அரசனும் மற்றுமுள்ளோரும் ஆயாசந்தீர்ந்தனர். அன்றுதான் அவ்வரசனும் சிகரியருகிற் கோயில்கொண்ட குமாரப்பெருமானது அடிமை புகழ்விளங்குதற்கும் அவனை வெல்லவந்த புலவர் தோல்வியுற்று அதனாற் றன்னார்க்குப் பெருமையுண்டாவதற்குங் காலம்வந்ததுபோலு மெனக்களித்துக்கொண்டிருந்தான். அதனிடையில் வில்லிபுத்தூராரும் வந்துவிட்டனர்.

*S. Anavarata Vinayakam Pillai.*

---

## நன்னூலாராய்ச்சி (தொடர்ச்சி.)

49. அ, ஆ, உ.—ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய 'ஆவோடல்லது யகரமுதலாது' என்னுஞ் சூத்திரத்து யவனர், யுகம், யூகம், யோகம், யௌவன மென்றாற்போல்வனவிலக்கினவும் வருமாலெனின் 'அவை யழிவழக்கென்று மறுக்க' என உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறியதுணராது தாம்பிடித்ததே சாதிப்பேமென்னும் கருத்தான் மொழிக்கு முதலாகாத எழுத்துக்களையு முடனெண்ணிக்கூறுதல் பொருந்தாமை யுணர்க.

51. சுட்டியாஎகர.—நனமென்பது சுட்டையும், எகர வினாவையும், யாவினாவையு மொட்டிவருமென்றார். அது தனிமொழியாக வருதல் யாண்டுமின்மையிற் பொருந்தாமை யுணர்க. இதனை 'ஙவ்வொற்றும் ஙகர வகரமும் பயன்படுவதன்றி மற்றைப் பதினோரெழுத்தும் தமிழ்மொழியில் நின்று பயனின்மை யென்னுங் குற்றந்தங்க வருமென்று விளங்கக்கூறாது மொழிக்கு முதலெழுத்துக் கூறுவார்போல இச்சூத்திரஞ்செய்து நன்னூலார் காட்டிய உதாரணத்தால் ஙவ்வரியிற்பதினோரெழுத்தும் பயன்படாமை யொக்கும்' எனப்பிரயோக விவேகநூலார் கூறியதனானுமுணர்க.

70. அம்முனிகரம் —வடநூலாரும் சந்தியக்கர மென்பதுபற்றி 'அகரவிகர மைகாரமாகும்,' 'அகர வுகர மௌகாரமாகும்' 'அகரத்திம்பர் யகரப்புள்ளியும்=ஐயெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்' என்னுஞ்சூத்திரங்கட்குத் தமிழ்நூலொன்றேயல்ல உரையாசிரியரை யுள்ளிட்டோர் ஐந்திரநிறைந்த ஆசிரியர்தொல்காப்பியர் கருத்துணராது கூறியதேதந்துணிபாகக்கொண்டுநன்னூலாரும் போலியெழுத்தொன்றுளதெனக்கொண்டார்.

அற்றேல் சிவஞானமுனிவரும், வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர் 'எழுத்ததிகாரத்திற் குரைசெய்தாராயின் இன்னோரன்ன பொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந் துரைப்பர். அவர் சொல்லதிகாரம்போலப் பயன்படாமை கருதி எழுத்ததிகாரத்திற் குரை செய்யாமையான் உரையாசிரியரை யுள்ளிட்டோர் மயங்குவாராயினர்' என்று கூறினமையானும், 'போலி யெழுத்தைப் போற்றுதல் கடனே' என்னுஞ்சூத்திரத்து இலக்கணக்கொத்தாரும் 'வடநூலார் இவ்விலக்கணத்தைத் தள்ளாது சமானாக்ஷரமென்று பெயரிட்டு இவ்விரண்டனையுந் தழுவினர். அதுபற்றித் தமிழ் நூலார் இணையெழுத்தென்று மொழிபெயர்க்க மறந்து, போலியெழுத்தென மொழிபெயர்த்தனர்.' என்று கூறுதலானும் போலியெழுத்தென்ப தொன்றில்லை யென்பது காண்க.

எழுத்தியல் முடிந்தது.

T. SHUNMUGAM PILLAI.

---

# NEWS & NOTES.

## வர்த்தமானக்குறிப்புகள்.

### சென்னை ராஜதானியின் புதிய டிஸ்டிரிக்டுகள்.

மத்தியமாகாணத்தைச் சேர்ந்த சாண்டா டிஸ்டிரிக்டிலுள்ள சிரோன்கா தாசிலின் கீழ்ப்பட்ட நாகார், அல்பகூர், சேர்லா தாலூக்காக்களை சென்னைராஜதானியில் சேர்க்கும்படியாகவும், இப்போதுள்ள கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர் கலக்டரேட்டுகளை கோதாவரி, மசூலிப்பட்டணம், குண்டூர், நெல்லூர் டிஸ்டிரிக்டென நான்காகப் பிரிக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அப்போது ஓங்கோல் தாலூக்கா குண்டூர் டிஸ்டிரிக்டுக்கு மாறும்; இப்போது ஓங்கோலிலுள்ள டிவிஷனல் ஆபீசர், போலீஸ் அசிஸ்டண்டு சூபரின்டெண்டு ஆகிய இவர்களது ஹெட்குவார்டர்கள் குண்டூருக்கு மாறிவிடும்.

### ஓர் புதிய பள்ளிக்கூடம்.

தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்தரக்கல்விச்சாலைக்கு தலைமை உபாத்தியாயராயிருந்த ம-௱-௱-ஸ்ரீ, தெய்வசிகாமணிமுதலியாரவர்கள் இந்துமிஷன் பள்ளிக்கூடமென்று ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவ பாடசாலைகளில் பைபில் எப்படிப் பாடமோ, அப்படியே இதில் இந்துமத சம்பந்தமான விஷயங்கள் பாடமாய் நடத்தப்பட்டுவருகின்றன.



### ஆஸ்டிரேலியாகண்டத்தில் ரவைகள்.

புதிதாய் காணப்பட்டு வெட்டியெடுக்கப் படுகின்றன.

### பிளேக்வியாதிக்கு ஓர் மருந்து.

ஹோங்காங்கில் பிளேக் வியாதியைப்பற்றி எழுதியுள்ள ரிப்போர்ட்டில், அவ்விடத்து வைத்தியத்தலைவர் கார்பாலிக் ஆசிட் என்னும் மருந்தை உட்கொள்ளுவதினால் மரணத்தொகை நூற்றுக்கு $85\frac{1}{2}$ யிலிருந்து $36\frac{1}{2}$ ஆகக் குறைந்ததாகக் கூறுகிறார். 24 மணிக்கொருதரம் 144 கிரெயின் இடைகொடுப்பது முறையாம். முதலில் இந்த மருந்தைக் கையாடினபோது குறைந்த அளவாய்க் கொடுக்கப்பட்டு பயனற்றுப் போயிற்றாம். அதிக அளவு கொடுக்க ஆரம்பித்ததும், மரணத்தொகை குறைய ஆரம்பித்தது. சாதாரணகாலத்தில் சாப்பிட விஷமாயுள்ள இம்மருந்து, பிளேக் வியாதியஸ்தன் சாப்பிடுங்கால் ஓர்வித கெடுதியும் செய்கிறதில்லையாம்.

### பாம்புக்கடியும் சீமைக்காடியும்.

விஷப்பாம்பின் கடிகளுக்கு சீமைக்காடி ஓர் திவ்வியமான ஔஷதமாவதாக அநேகர் இம்மாதத்தில் பத்திரிகை மூலமாக தெரிவித்திருக்கின்றார்கள். கடியுண்டபாகத்தின் மேற்பக்கத்தில் கயிற்றினால் நன்றாய் இறுக்கிக்கட்டிவிட்டு, காயத்தை ஒருஅங்குல நீளமும் கால்அங்குல ஆழமுமிருப்பதாய்க் கீறிவிட்டு, இரத்தத்தை அழுத்தி வெளிப்படுத்திப் பின்பு சீமைக்காடியை காயத்தில் ஊற்றியும், காயத்தைச்சுற்றித் தேய்த்தும் கடியுண்டவன் உயிர்பிழைத்துக் கொண்டதாக பத்திரிகைகள் கூறுகின்றன.

### காலஞ்சென்ற ஆனரபில் பிரகாசமுதலியார்.

சென்னை முனிசிபல் கமிஷனராயும், சென்னை ஆலோசனைச் சபையில் ஒரு மெம்பராயுமிருந்து நாட்டிற்கு எப்போதும் நன்மையையே நாடிய ம-௱-௱-ஸ்ரீ, பிரகாசமுதலியாரார்கள் ஜூலைமாதம் 7உ மரணமடைந்தைப்பற்றிக் கேட்க அவருடைய சிநேகிதர் எல்லோரும் வருத்தமடைவார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

### குஷ்டரோகத்திற்குக் கைகண்டமருந்து.

ரங்கூன் ஜெனரல் ஆஸ்பத்திரியைச்சார்ந்த ஓர் வயித்திய நிபுணர் (காப்டின் ராஸ்ட்) குஷ்டரோகத்திற்கு ஓர் கைகண்டமருந்தைக்கண்டு பிடித்திருக்கிறாராம். இதினால் 29 பேரை சொஸ்தமாக்கி யிருப்பதாகக் கேள்வி. காப்டின் ராஸ்ட் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் இம்மருந்தைப் பரவச்செய்வாரென்று பிரார்த்திக்கின்றோம்.

-P. P. N.

OFFICE OF ... REGISTERED 30 SEP 1904 MADRAS

# Yathartha Bhaskaran

FOR

God, Humanity and The Motherland.

Vol. III.] AUGUST, 1904. [No. 1.

## Impersonation.

### CONFORMITY-MAN.

LADIES AND GENTLEMEN,

I appear before you this day as a distinct personality to lay my grievances before you and to get myself redressed. Most of you are well acquainted with me, for I have lived in you for a very long time, but I am sure you have never seen me standing out as a separate individual and talking to you like this. Hitherto I was so imbedded in, and united with, your consciousness that you might not form any idea of my being and distinguish me as a different personage. I have been ruling the world, I may say, from the very beginning without anybody's encroaching upon my dignity and prestige, but now I am surprised to see that some one is intruding upon my rights by gaining ground in the minds of you all. In days long gone by my power was absolute all over the world. Then, the virtue in most request was myself—Conformity. Nobody loved realities but names and customs. In matters of opinion all men were looking anxiously how the wind was blowing. No man ventured to give his individual opinion in case the public resolution was against his. Be the subject what it may—social, political, religious—nobody dared think on it for himself. Such was the state of affairs when my power was in its meridian splendour—when the people loved me most. There was perfect agreement then among men. No discord, no enmity to all appearance. All minds tended to entertain me and me alone. When I was enjoying such a blissful state, all gathering under my sole flag, I do not know whence, there appeared a fellow bold and resolute, considerate and intelligent, whose name I don't recollect well. Yet I think he is *Originality*. This fellow—Ah! My body shudders when I think of him. He is a shrewd fellow, always impertinent, and sticking to his own reason. He is that daring sot who risks even his own life to carry out the dictates of his

conscience. He is of such a strong-minded nature that he never cares for the opinion of others, then most when they all cry on the other side. One day when I heard that dolt cry aloud "whoso would be a man must be a non-conformist," I was thunderstruck and thought that he had come not for anything else but to strike a blow at my heart. This fellow succeeded in getting into the soul of one or two and by degrees extended his dominion to a vast extent in Europe and America. In other continents, too, he has not been without making his appearance here and there, now and then. You all know that I am so weakly constituted that I cannot stand for a minute against his fiery features without being reduced to ashes. So I left all those places where all he got a permanent footing. If I compare the vastness of dominion over which I had paramount power once with what my power is now predominant in, I cannot but be ashamed of my present state and even doubt of my peaceful reign in future. But I am glad to inform you that I have some consolation—some hope which that deadly monster cannot deprive me of in the near future. He has not as yet entered into the feminine kingdom, notwithstanding a few exceptions. I foresee with much accuracy that he cannot gain ground there for at least half a century. In the masculine world, too, where alone he is concentrating all his efforts to enlarge his dominion, I am not without masquerading under some form or other. The safe disguise I put on to approach him is *policy*. He has not as yet learnt to find me out under that color. If I go under the name of *policy*, he has no objection to my rule even at present. Think not that I am telling you this on guess. I have experienced it so often that I can assure you that he identifies himself with me when I go in that disguise. Even though he boasts of himself as a direct descendant from the Divine Spirit and as such, he will not leave humanity without raising it up to the level of ideal freedom and perfection, I will not let him go on his way undisturbed nor will the humanity yield to his cruel sceptre so long as I leave not my hold on kings and emperors, nobles and dignitaries, preachers and reformers. Don't you see that he is a desperate fellow? He infuses among men the idea of independence. Is it not dangerous always to rely on one's own self? What do you think? Why is it you all laugh? Do my words seem ridiculous to you? From the beginning of my speech I am observing some one to look askance on me, some to draw back their lips and some to show their silvery teeth as a mark of scorn. Perhaps they all have burst into laughing now. Very seldom do I meet with such contempt. Nevertheless, I shall go on with my speech in the hope that you all will listen to me in earnest and crown me with



success in my attempt. I have been telling you of all these only to convince you of the danger there is in entertaining my enemy in your hearts. Now, when I see you laugh at my words I am certain that he should have invaded these parts also, though he has not gained a complete victory over you all. Doubtless it is that you have made him the ruler in your mind, though you do not make bold to profess the same in my presence. Yet I will not finish my speech without trying my level best to enable you to escape safely from his clutches.

As I told you before, he is bent upon making the populace stand erect, be straightforward, do things calmly without fear of public censure and be independent in thought, word and deed. He even goes on to say that these are the first necessary requirements to every man for the attainment of perfection of mind and body that leads to happiness in one's own self. These words are, no doubt, very attractive, but deep under them lies the danger in carrying out what they mean. You cannot expect to succeed even though you make an attempt in that line. So, give up your endeavours and follow me as ever before. You may trust me safely, for I bring peace unto you. To follow me is as easy as to squeeze a grape and in the end you will find harmony and peace. He asks of you to observe nature and study therefrom. All right; I also request you to do the same but in a different light. If you have eyes, see the sheep. How do they follow the bell-wether that goes ahead? So I tell you to follow the ancient customs and rules. It requires no thought at all. It cannot be said difficult in any way. The way is very smooth and easy. But you all know that his is rugged and difficult as he spurs you on to stand on your own legs and utter rude truths in the face of all opposition and outcries. What I am anxious to importune you with is that if a man of position or rank who represents the public, insists upon your doing or forbearing certain actions, you should not at all hesitate but simply yield to his request never minding the conscience and the sense of sincerity that may prick you deep within. This is the course you have to adopt if you wish to come in for wealth, name, rank, position, success or any such desirable thing in this world. My opponent compels you to leave all these matters out of consideration and points out at an attainment within your own heart which, he says, outweighs all these. I need hardly say that any such idea will never sprout in the brain of a sane man. Yet you all seem to appreciate his notions and denounce evil against me. When I set my eyes on you at first, I was under the impression that you all still stick to my principles, but now I fully realize that you only make game of my

words. You even seem to think that I am beside myself as if I prate some nonsense.

Well! gentlemen! No doubt I thought that you all will applaud my speech and embrace me as your ruler but to my utter disappointment I see that you have ere this been semi-gulfed by my enemy. I don't like, therefore, to degrade myself by directing my valuable counsel towards your self-conceited and unsympathetic attitude. You do not know that in what all disguises I will appear, but I understand full-well that art by which I am bold enough to approach or even face my enemy. Though he has reason as his test-stone, yet at times I can and will manage to make him overlook the same and give me room in his bosom. I challenge you all to follow his principles if you can, without giving me a quarter in the heart of your being. So long as my right hand—*fear*—is not cut off, I have nothing to fear nor can any expect to drive me out of the land. Beware of yourself when you do aught against my will, for then I fear you with fear. I am a well-wisher of you all, but you do not recognise me as such. When you are so very obstinate in your own way, I cannot do anything but to leave you to your own fate, yet I like not to close without making this last request, that you all should take a retrospective view of what I have said, with open heart and clear understanding. Then, you will see that you have insulted me in your insolence and wantonness instead of thanking me for my good-will and complaisance. But take care that you never put my statements to the test of reason. That will be somewhat like one's taking advice from his mortal enemy in matters of grave importance. Yourself can see the truth very well with blind faith. Try to act up to the advice set forth in the course of my speech. You need not fear anybody as long as you take shelter under my right hand. I have much hope in you, for this land of India has not, as yet, attracted my enemy's concentrated attention. Hoping that you all will, in future, be more conventional and conforming, don't laugh, I take leave of you. Good-bye—*Conformity-Man.*

# ESSENTIALS OF BUDDHISM.

## XIII.

## PALINGENESIS.

### Karmaphala.

When deeds are done, the doing passes away, but what is accomplished by them abides; just as when a man has written a letter, the writing has ceased but the letter remains. So also when the *skandhas* dissolve, the deeds remain to bear fruit in the future. Though the deeds bear fruit, still there is no transmigration. There is only a continuance of character, the real personality, beyond the dissolution of the body and mind in death. When a lamp is lit at a burning lamp, there is a kindling of the wick, but no transmigration of the flame. The mango that is planted rots in the ground, but it is reborn in the mangoes of the tree that grows from its seed. From the seed to the fruit there is no transmigration of a mango soul, but there is a reconstruction of its form, and the type in all its individual features is preserved in the new mangoes. Similarly, when a boy learns a verse from his teacher, the verse is reincarnated in the boy's mind, but there is no transmigration of the verse in the ordinary literal meaning of that word. So man reincarnates, and his peculiar Karma is born in new individuals. "What is reborn is name and form. But it is not the same name and form. By one name and form deeds are done, and by these deeds another name and form is reborn. One name and form finds its end in death, another that is reborn. But that other is the result of the first, and is therefore not thereby released from its evil deeds"* "Those groups which came into being in the past existence in dependence on *Karma*, perished then and there. But in dependence on the *Karma* of that existence other groups have come into being in this existence. Not a single element of being has come into this existence from a previous one.† The groups which have come into being in this existence in dependence on *Karma* will perish, and others will come into being in the next existence, but not a single element of being will go from this existence into the next. Moreover, just as the words of the teacher do not pass over into the mouth of the pupil who, nevertheless, repeats them; and just as the features of the face do not pass to the reflection in mirrors and the like and nevertheless in dependence on them does the image appear; and just as the flame does not pass over from the wick of one lamp to that of another and nevertheless the flame of the second lamp exists in dependence on that of the former: in exactly the same way not a single element of being passes over from a previous existence into the present existence, nor hence into the next existence; and yet in dependence on the groups, organs of sense, objects of sense, and sense-consciousness of the last existence were born those of this one, and from the present groups, organs of sense, objects of sense, and sense consciousness will be born the groups, organs of sense, objects of sense,



**Milindaprasna.*

†*Na kas chid dharmosmal lokat paralokam gacchati—Pitaputrasamagame* quoted in Prajnakara's commentary on the *Bodhicharyavatara.*

and sense-consciousness of the next existence."* Similarly, says the *Bodhicharyavatara* † : "*Aham eva tadapiti mithyayam parikalpana; anya-eva mrito yasmad anya eva prajayate.* That I am always the same person is a pure illusion. It is one that dies; it is another that is born." ‡

A particular man is not a discrete individual, but a converging centre of physical and psychical activities, of *samskaras* which have been impressed into him by heredity, example and education. It is by a process of evolution that *samskaras* come to be. There is no *samskara* which has come into being without a gradual becoming. The whole history of the development of an individual as observed in a higher organised animal is a continuous chain of reminiscences of the evolution of all those beings which form the ancestral series of that particular animal. The history of no individual begins with his birth, but has been endless ages in the making. The assumption that each human being starts life for himself and commences a development of his own, as if thousands of generations before had been in existence in vain, is in striking discord with the facts of daily experience. As Francis Galton says, "we must not permit ourselves to consider each human or other personality as something supernaturally added to the stock of nature, but rather as a segregation of what already existed under a new shape and as a regular consequence of new conditions. Neither must we be misled by the word 'individuality.' We may look upon each individual as something not wholly detached from its parent source—as a wave that has been lifted and shaped by normal conditions in an unknown and illimitable ocean." The great Roman poet Lucretius has given utterance to the same thought in the following striking lines :—

"Not from the blank inane emerged the soul:
A sacred treasury it is of dreams
And deeds that built the present from the past,
Adding thereto its own experiences.

*Buddhagosha's Vissuddhi Marga (Warren's translation).

† Chapter VIII, 98.

‡ Here and there in the Pitakas may be found passages which appear to suggest that the Buddha admitted the migration of an actual entity from one birth to another. But th fact that such statements occur in the popular discourses and in the parables (the *Jataka* tales) shows that the Blessed One was there speaking from the point of view of the ordinary man. In these popular discourses and parables the aim of the Master was to teach ordinary people in a simple way the truth of the relation between action and its fruit. But, as Pragnakaramati points out in his commentary on the 73rd verse of the *Bodhicharyavatara*, the Blessed One never wanted to imply that one and the same person is reborn.



Ancestral lives are seeing in mine eyes,
Their hearing listeneth within mine ears,
And in my hand their strength is plied again.
Speech came, a rich consignment from the past,
Each word aglow with wondrous spirit life,
Thus building up my soul of myriad souls."

No human being can completely sever himself from other human beings. Human beings form constituent units of society, not only by reason of the interdependence of their divers external functions, but also, and more radically still, by reason of their mental interdependence. Man cannot isolate his mental life from that of his fellow-men. His psychic life cannot even awaken without the psychic life of his fellow-men. Even when alone he is not wholly left to himself. He is ever subject to the influence of the community of which he is a member. He can sever his connection with one circle of men only by joining another. Even a hermit is not alone. He lives psychically in a union, conceived in his mind but none the less real, with an ideal society (of his gods, of his saints) which is formed after the model of real society. Indeed, it is exclusively through psychical interdependence that human minds depend upon one another for their very existence as such and for the possible efficiency of their functions; it is through this mutual dependence of their minds upon one another that men are civilized, social and ethical beings.

The belief in a substantial soul is a veritable hindrance to a correct understanding of mental life. He who regards independence of substance as a barrier between centres of psychic life can never come to recognise a mental life reaching beyond the individual, although its results are evident in all that man does in his association with his fellow-men—in language, science, art, religion and morals. Since men are physically separated from one another, it does not follow that they are also psychically separate from one another. The psychical life continues beyond each individual, because its real subjects are not individuals as such but the bonds uniting individuals. In the process of evolution the continuity of thought (*chittasamtana*) remains unbroken, like an extinct flame that has kindled another. It is the oneness arising from the continuity of thought that determines the connection between the doer of a deed and the enjoyer of its fruit. As the *Bodhicharyavatara** says, "*hetuman phalayogiti drisyate naisha sambhavah, samtanasyaikyam a'srity karta bhoktety desitam.* There exists no reason why the doer of a deed should

* Chapter IX, 73.

necessarily enjoy its fruit. The oneness arising from the continuity of thought alone determines the connection between the doer of a deed and the enjoyer of its fruit," It is thus the individual is preserved in new forms—*na cha so, na cha anno.* *

Say not 'I am', 'I was', or 'I shall be';
Think not ye pass from house to house of flesh
Like travellers who remember and forget
Ill-lodged or well lodged. Fresh
Issues upon the Universe that sum
Which is the lattermost of lives—Light of Asia, Book VIII.

All creatures are such as they are through past *samskaras*, and when they die their deeds shape new beings. In the slow process of evolution activities shape new personalities. What is called the person is but the living embodiment of past activities, physical and psychical. Past activities impress upon creatures the nature of their present existence, and activities in the present are slowly shaping their future existence. This is the law of palingenesis (*karmaphala*), the law of cause and effect in the psychic world. Huxley has described the same fact thus: "Every day experience familiarises us with facts which are grouped under the name heredity. Every one of us bears upon him obvious marks of his parentage, perhaps of remote relationship. More particularly the sum of tendencies to act in a certain way, which we call 'character' is often to be traced through a long series of progenitors and collaterals. So we may justly say that this 'character'—this moral and intellectual essence of a man—does veritably pass over from one fleshly tabernacle to another and does really transmigrate from generation to generation. In the newborn infant the character of the stock lies latent and the ego is little more than a bundle of potentialities. But, very early, these become actualities; from childhood to age they manifest themselves in idleness or brightness, weakness or strength, viciousness or uprightness, and with each feature modified by confluence with another character, if by nothing else, the character passes on to its incarnation in new bodies."

In much clearer language Frederic Harrison has stated the same truth as follows: "Do we then live after death? Of course we do. We *live.* Our bodies dissolve, but our lives continue. What is *we*? And what is *to live*? If to live is to eat and drink, to feel joy and pain, to be conscious of action and thought, we can not affirm anything about a state which, so far as we can see, supposes the absence of a nervous system. For my

* It is not he, yet is not another.



part, I do not pretend to know what consciousness can be in the absence of a nervous system, for I mean by consciousness an organic state relative to a nervous system. And so far as *we* means this state of consciousness, I have no means of forming a rational opinion on the question.

"Happily *we* are not nervous systems. Life is not an agitation of the nervous system. We act, we work, we teach, we inspire love in places where we are not, where we have never been, and in souls which we have not seen in the body. We are not as the beasts that perish. And the social nature of man is not bestial. The soul of man has a subtle faculty of incorporating itself with the souls of our fellow-men. We are immortal by virtue of the intricate organism of which we are part. Nervous system, digestive apparatus, and locomotive organs are essential as a basis of life, but in due course that life can be practically continued by the agency of other bodies than those in which it begins. It cannot be continued, so far as we can see, without other like bodies, natures and souls, such as ours, and therefore not in Dante's and Milton's paradise. The organism, man and woman, is mortal truly; but the organism, Humanity, is immortal. We know of nothing that can destroy it within the conditions of our solar sphere.

"A good life in the flesh becomes thus incorporated with the mighty organism, and becomes immortal with it. Not an act of ours, not a look, nor a thought, is utterly lost and wasted in space. For good or for evil it forms us, and our character and our work. It forms some other brother or sister near us for good or for bad. If it be strong and noble, it shapes many. If it be weak and evil, it is gradually expunged. It may not be remembered, not recorded and not distinguished. But it continues, eternally pulsating unknown through generations of Humanity. It may be a drop in the ocean of human life. But as surely as every drop which falls on an Alp will pass on ultimately into the ocean, so every human life, every act of life, every kind word, every good deed, every clear thought, lives in the life to come. We live, and we live for ever, the greatest and the feeblest. We do not continue to have nervous sensations; we do not eat and drink; we do not think or act, it may be, and we do not add to our work on earth. But *we live.* Our lives remain here and continue our work. The Humanity which nursed us as infants, trained us as children, and shaped our lives as men, prolongs that life in a collective eternity, when it has closed our eyes with reverent sorrow, and said in hope and love the last words over our bones. And it makes us as immortal as itself."

24

Death is dissolution, but the man who dies continues to live in his deeds. Our deeds, as George Eliot says, are like the children born to us; they live and act apart from our own will. Nay, children may be strangled, but deeds never. Wherever a man's words, thoughts, deeds have impressed themselves in other minds, there he has reincarnated. He that has no clear idea of death and does not master the fact that death everywhere consists in the dissolution of the groups (*skandhas*), comes, as Buddhaosha says, to a variety of conclusions, such as 'A living entity dies and transmigrates into another body'; and, similarly, he that has no clear idea of rebirth and does not master the fact that the appearance of the groups (*skandhas*) everywhere constitutes rebirth, he comes to a variety of conclusions, such as, 'A living entity is born and has obtained a new body? There is not a being that is born, acts, enjoys itself, suffers and dies, and is reborn to die again, but simply birth, action, enjoyment, suffering and death take place. The life-activities, the deeds alone are real; and these are preserved and nothing else. Therefore has it been said:

"No doer is there does the deed,
Nor is there one who feels the fruit;
Constituent parts alone roll on;
This view alone is orthodox.

"And thus the deed, and thus the fruit
Roll on and on, each from its cause;
As of the round of tree and seed,
No one can tell when they began.

"Nor is the time to be perceived
In future births when they shall cease.
The heretics perceive not this
And fail of mastery o'er themselves.

"'An ego', say they, 'doth exist,
Eternal, or that soon will cease';
Thus two-and-sixty heresies
They 'mongst themselves discordant hold.

"Bound in the bonds of heresy,
By passion's flood they 're borne along;
And borne along by passion's flood,
From misery find they no release.

"If once these facts he but perceive,
A man whose faith on Buddha rests



The subtle deep, and self-devoid
Dependence will then penetrate.

"Not in its fruit is found the deed,
Nor in the deed finds one the fruit;
Of each the other is devoid,
Yet there is no fruit without the deed.

"Just as no stone of fire is found
In jewel, cowdung, or the sun,
Nor separate from these exists,
Yet short of fuel no fire is known;

"Even so we ne'er within the deed
Can retribution's fruit descry,
Nor yet in any place without;
Nor can in fruit the deed be found.

"Deeds separate from their fruits exist
And fruits are separate from the deeds;
But consequent upon the deed
The fruit doth into being come.

"No god of heaven or Brahma-world
Doth cause the endless round of birth;
Constituent parts alone roll on
From cause and material sprung."

P. LAKSHMI NARASU.

# ARUNAGIRI NATHAR.

# அருணகிரிநாதர்.

(215=ம் பக்கத்தொடர்ச்சி)

## வில்லிபுத்தூராழ்வார் கலகம்.

அரசனும் வேதியரைக்கண்டு கரங்கூப்பி வேண்டியவாறாக உபசரித்தான். அவர் பற்பல அரசருழைச்சென்று தஞ்சாமர்த்தியங் காட்டிப் பெற்ற பிருதுகளை யெல்லாங் காட்டப்பெற்று மகிழ்ச்சியும் இறும்பூதுமெய்தினான். அசாமானியபுலமை பெருமை வாய்ந்த இவ்வந்தண சிகாமணிக்குத்தக்கதோ ரிடனமைத்து அவர்க்கும் அவரது பரிவாரங்கட்கும் வேண்டிய போஜன பதார்த்தங்களெல்லாம் அரண்மனையினின்றும் அனுப்பும்படி யாஞ்ஞாபித்தான். இன்னும் அவ்வப்பொழ்து அவர்க்குவேண்டிய கொண்டுவந்துதருதற்கும் பிறவுபசாரஞ்செய்தற்குமெனத் ;தக்க உத்தியோகஸ்தர் சிலரை யவ்விடத்து விட்டுவைத்தான். இதனையெல்லாம்கண்ட பாவலர் சிங்கம் கழிபேருவகை பூத்துத் தாம் வந்த காரணத்தை யரசனிடத்து விளம்பினர். அது கேட்ட மன்னவனுக்கு மிக்க மனவருத்தமுண்டாயிற்று. அஃதொருபுறமிருப்ப, முன்னோர் வழக்கமென்று சொல்லுமாற்றத்திற்குப்பயந்து 'நாட்டுமன்னர்க்கொத்தபடி யானடப்பல்' என்றான். புலவரும் இன்று அல்லது நாளை உன்னூர்க்கூட்டத்தோடு அப்புலவனையும் வைத்து என் கல்வித்திறம் அறிவாயாக என்றுசெல்லித் தம் விடுதிநோக்கிச்சென்றார். அரசனும் அவரைவழியனுப்பி மீண்டு ''ஓடுகை யேந்திப் பலியேற்றுண்டு ஒருவரையுந்துணைக்கொள்ளா விவனுக்கு இவ்விடுக்கண் நேர்ந்ததென்னோ'' என அருணகிரிநா,தரைக்குறித்துச் சிறிது போழ்து மயங்கினான்.

அப்புறம் தனது ஸம்ஸ்தானவித்வானைத் தனியாக அழைத்து, 'இப்பாவலன் தன்மையாது. நின்னறிவிற்றோன்றியவாறு உரை' யென்னலும், அவனும் 'நெடுநாளாக் கேள்வியுண்டு இவன் தமிழ்நாட்டில் அநேக புலவரோடு வாதாடி யவர்களெல்லாந் தூன்புறச்செவியறுத்து



வருபவன்' என்றான். 'இவ்வூர்ப்புலவன் தன்மை யென்ன' என்று அரசன் கேட்டலும் 'இவன் சொன்னயமாதிபலநயங்களும் பொருந்தக் கவிகள் செய்பவன்' என்றான். தோல்விவெற்றியைப்பற்றி நாம் சொல்லலாகாது. அது தெய்வபலத்தைப் பொறுத்தது என்றுங் கூறினான். 'உனது கல்வித்திறமெப்படி' யென அரசன் அவனையேகேட்ப 'பெருவேழங்களிரண்டு சமர்செய்யுங்கால் இடையிலகப்பட்ட கொதுகைப்போல்வேன் யான்' என்று உண்மைகூறினன். அரசனுக்கிதை யெல்லாங்கேட்க ஆனந்தமுண்டாயிற்று.

பின்னர் அரசன் அப்புலவனோடு சில அமைச்சர்களையும் அருணகிரிநாதரிடத்து அனுப்ப உத்தேசித்து 'நீங்கள் அருணகிரிநாதரிடத்துச் சென்று வணக்கத்தோடுஇங்கு நடந்தவற்றையெல்லாம் வகையாய்ச்சொல்லி, என்னாற்செய்யற்பாலது உண்டேல் அஃதின்னதெனத்தெரிந்துவருக' என்றுகூறி யவர்களைப்போகவிடுத்து தன்னரண்மனையுட்சென்றான். அரசனாஞ்ஞை சிரமேற்கொண்டு அன்னார் சிகரியிடத்துச்சென்று அரசன் கூறியதைக்கூற அந்தப்புண்ணியர் எப்பொழுதுஞ் சாந்தத்தில் நிலைபெற்றிருக்கும் நன்மனஞ் சிறிது கொதித்து 'எனக்கு என்று முதவி செய்யத் தக்கோனாகிய கந்தனுக்கும் அவன் தமையன் தந்தை தாய்க்கும் இன்னும் ஆலயத்துள் நிறைந்திருக்கும் பரிவாரதேவதைகட்கும் உபகாரங்கள் குறைவறச்செய்து ஓம்புகலாமல் பொதுவாயிருப்பனாயின் அதுவே யமையும்' என்று மொழிந்தனர்.

அவ்வாறே யவரெல்லாஞ்சென்று அரசனிடத்துரைக்க அவனும் மிகவியப்புற்று 'எல்லாங்கண்டறிவோம்' என அடுத்தநாள் ஆலயத்து ஆகமவிதிப்பிரகாரம் அபிஷேக அலங்கார நைவேத்யாதி ஸர்வோபசாரங்களுங் குறைவறச்செய்வித்து, சிகரிக்கேகி மெய்ப்புலவராகிய செந்தமிழ்ச் சந்த பாவலர் அருணகிரியார் முன்போல வெறுத்துரையாது உபசாரவார்த்தை கூறப்பெற்று, அவர் கூறியவற்றுக்கெல்லாம் தக்கமறுமொழி தான் பகர்ந்தான். அங்குக்கூடியிருந்த கூட்டமெல்லாம் சித்திரம் போலசையாது இயங்கலைகண்ட அரசன் தக்காரையனுப்பி இதுவே தருணமென்று சார்வபௌமருக்குணர்த்த அவரும் சரபமிருத்தலையுணராது களிறென்று மயங்கி முன்வரும் சிங்கம்போல விரைந்துவந்தார். அவர் வரும்போழ்து கண்டவர் அண்ணாமலையார் சிகரிக்காவற் கந்தனையும், அருணகிரி முனியையும், அரசனையும், சார்வபௌமக்கவிஞரையும், வினையையும், காலத்தையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு தத்தமக்குத்தோன்றியவாறே பலப்பல மொழிந்தனர்.

வந்தபுலவரை அரசனுமமைச்சரு முள்ளிட்டாரனைவரும் உபசரித்ததுபோலவே தவத்தால் மேம்பாடுற்ற அருணகிரியாரும் அந்தணர் என்னும் முறையையுத்தேசித்து உபசரித்தனர். வில்லிபுத்தூரரோ இவரை யருந்தவன் என்னும் முறையாலேனும் சிறிதும் மதியாது அதட்டிப் பேசி 'சந்தக்கவிகள் பலமொழிந்தனை யெனக்கேட்டு இங்கு வந்தேன். சாற்றுக' எனக்கூறலும் முனிவர் 'சாற்றுகின்றேன். தடையொன்றுமில்லை. ஆத்திரம் வேண்டாம்' என்று சொல்லி ''விகடபரிமள'' மென்னும் பாவைவிளம்பினர். கோடையிடி யிடித்ததென முழக்கத்தோடு கவிகூறிய தவப்புலவர் மற்றொருகவி தொடுத்துக்கொள்ளு முன்னமே பீதாம்பரம் பொன்னாபரணம் முதலியன அணிந்த வில்லிபுத்தூரர் 'இக்கவி நம்மடைப்பைக்காரன் ஜாடையினிற் சொல்லாநிற்பன்' எனச்சபையோரெல்லா மறியக்கூறி நாடோறுந் தலைக்கேறுந் தம்மாணவத்தை வெளியிட்டனர். சபையிலிருந்த அரசனுமிதனைக்கேட்டு 'இது கிரமமான வார்த்தை யன்றே' என்றனன். மயிலேறும் பெருமாட்கடிமையாகிய அருணகிரிமுனியும் கண்களில்நெருப்புப்பொறி பறக்கச் சினந்து அப்பாவலரை நோக்கி' வார்த்தையிவ்வாறு சொல்வதென்னு முறையறியாதானே! நீ என்ன கவிசொல்லவல்லாய். நீயுரைக்குங் கவிதையும் என்றுளதோ' என்று கூறியவரை யொருமசகமாக மதித்தார். அந்த மட்டில் அரசன் யானையெனவெழுந்து 'சீரியநீர் இவ்வண்ணம் போர்புரிதல் நன்றன்று. சந்தக் கவிகளில் நூறு ஒருவர்கூற மற்றவர் கேட்டுப் பயனுரைக்கவேண்டும்' எனச் சமாதான மொழி கூறினன்.

முன்னாளில் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் கலகந்தீர்த்த நிறைபுலமைக் கந்தக்கடவுள் அருகினின்று முறைகுன்றாமல் தன்னாவினாற் குழிப்பெடுத்துக் கொடுத்துச்சந்தத்தமிழ் பாடச்சொல்லி யன்னோர் தரங்காட்டிலன். மன்னவனால் இவ்வாறு வேண்டப்பெற்றார் இருவரும். அருணகிரிநாதர் பாட்டுரைக்க வாய்திறந்தனர். வந்தபுலவர் பின்னாலே பொருளுரைத்துவந்தார். அந்நூலிற்பாதிக்குமேலாய்விட்டது. அக்கந்தரந்தாதி யமகக்கவிகள் நூற்றிலைம்பத்துமூன்று ஆனதும் அருணகிரியார் கொஞ்சம் மனநொந்து முருகவேளை வேண்டினார். திதத்த என ஒருபாடல் வந்தது. வில்லிபுத்தூரரும் அருத்தஞ்சொல்லமாட்டாமல் மாழ்கிச்சோர்ந்தார். 'அந்தகன்போலப் பற்பலர் காதையறுத்த பாவம் வந்து சூழ்ந்ததுகொல் இந்நாள்' என்று சொல்லித் தம் ஆண்மைதீர்ந்தார். மன்னவன் முதலிய சபையோரனைவரும் இவர்காதை யறுத்தலே தகுதியென ஏகோபித்துக்கூறினர். அருணகிரிவள்ளலோ 'கொய்ததனால் என்ன பயன்? கொய்யவில்லையாயின் யான் கொடுத்த காதெனப்பெயர் இருக்கும்' என்று கரு



ணைமொழியியம்பினர். அம்மாற்றங்கேட்டவரெல்லாம் அதிசயித்தார். அந்தணர் சார்வபௌமரும் அகமகிழ்ந்தனர். கைவாளை அருணகிரியாரவரிடமிருந்து வாங்கிப்பிரபுட தேவனுக்களித்து நீ இதனைப்பேணிவருவாயாக' என்றனர். ஆங்கு நிறைந்திருந்தாரிற்பல்லோர் 'இவ்வேதியனைப் போல நம்முனிவர் தோல்வியுற்றிருப்பராயின் விடமாட்டான், செவியினை யறுத்தே விடுவன்' என்று தம்முட் கூடிக்கூடிப்பேசினர். பின்னர் வில்லிபுத்தூரர் அப்பாட்டொன்றிற்குமே யுரைகேட்டுத் தெளிந்துகொண்டு பின் வந்த பாட்டிற்கெல்லாம்பொருள் சொல்லிவிட்டு முடிவில் அருணேசன் என்னும் பெயரால் முனிவரைச்சுட்டி நீதில் கவிக்கடலேழுங் கடந்தவரென்றும் சிந்தைமகிழ்ந்தேமென்றும் கருத்துவைத்துச் சிறப்புப்பாயிரஞ் சொற்றனர்.

அருட்பேற்றினை நிரம்பப்பெற்றிருந்த அருணகிரிநாதர் தொடங்கிய பாடல் ஆனந்தம் விளைத்ததனை மனத்து அடக்கி வைத்துக்கொண்டே ஆணவத்தடிப்பினால் அவரையிகழ்ந்த படியால் வில்லிபுத்தூரர் தமக்கிருந்த இறுமாப்பினையும் வாளையும் இழந்தனர். அன்றியும் 'பொருகூறிப் புலமையில்லை' யென்னும் பழஞ்சொல்லும் அவர் புத்தியில் தோன்றா தொழிந்தது. ஆயினும் புலமைமிக்கோனாகலின் தோல்வியினை யேற்றுச் சிரங்குனிந்தான். அப்பெருந்தன்மை மிகவும் மதிக்கத்தக்கது.

இவ்விருவர்புலவரும் வண்ணக்கவி நலமுணர்ந்தோர் கூட்டத்து ஏற்றமுற்றோராயிருந்தும், இகலிக்கொண்டு வாதப்போர் புரியும் புலவர் வழக்கைத்தீர்ப்பது பாடலேயாகவும், வாளாயுதமும் அதற்குப்பொருத்தமாயிருந்திருக்கவும், வெண்டாமரைக் கிழத்தியாகிய நாமகள் சென்று அரசனாவிற்றங்கி வழக்குத்தீரும் விதத்தை யிவ்வாறாகவுரைத்து மாற்றிய தன்மையை யெண்ணிப்பார்த்தால் திருவருளின் செயலன்றிச் செயல்வேறில்லை யென்னும் உண்மையினை எளிதில் உணர்ந்துகொள்வார் அறிவுடையோர்.

இவ்வாத முடிந்த பிறகு வில்லிபுத்தூரரும் பொல்லான் என விளங்கிய பேயர் மறைய அருணகிரியார்க்குப்புகழ் உள்ளமட்டும் அழியாத புகழ் படைத்துத் தம்மூர்க்குச்சென்று வாழ்ந்திருந்தார்.

**S. Anavaratavinayakam Pillai.**

# KADAMBARI.

## காதம்பரிசாரம்.

(212=ம் பக்கத்தொடர்ச்சி.)

தன் சிநேகிதனை அவன் அறியாமல் திடீரென்று பார்க்கவேண்டுமென்று கருதி, தலையில் துணியைப் போட்டுகொண்டு கூடாரங்களின் பக்கமாய்க் குதிரைமீது வேகமாய்ச்சென்று வைசம்பாயனன்கூடாரமெங்கே என்றுகேட்டான். பெண்டிர்கள் அழுதுகொண்டு "ஐயா ஏன் இப்படி கேட்பீர், வைசம்பாயனன் இங்கே என்னமாய் இருப்பான்" என்றார்கள். மனதில் அச்சம்கொண்டு ஒன்றும் ஆலோசியாமல் தெரிந்தும் தெரியாததுமாய்ச் சைநியமிறங்கியிருக்கும் கூடாரங்களின் மத்திக்குச்சென்றான். இந்திராயுதன் என்ற குதிரையைக் கண்டு அடையாளம் தெரிந்து, வெகு சனங்கள் கூட்டி, சந்திராபீடன் குதிரையைவிட்டு இறங்கி, அடுத்தமரத்தண்டை வந்து, தாங்கள் வைசம்பாயனனைக்குறித்து சொல்லப்போகும் சரித்திரத்தை சாவதானமாய் கேட்கவேண்டுமென்று கோரி, என் நண்பன் மரித்துப் போனானென்ற பயம் வேண்டாமென்று தைரியப்படுத்தினார்கள்.

சந்திராபீடன் உடம்பு சுருக்கினதுபோலும் உள்ளே தரித்ததுபோலும் உடல் ஆயிரம் சுக்காய் பிளந்ததுபோலும் வருத்தமடைந்தான். இவ்வுலகம் எவ்வளவோ அழகானாலும், அவனில்லாமல் அழகு எங்கே, ஜன்மமெடுத்ததின் பலன் கையில் இருக்குமென்றுநினைத்து கள்வன் கொண்டுபோய் விட்டானே, இனி எவரோடு சல்லாபம் செய்வேன்? எவரோடு சுகமாய் இருப்பேன்? இனி உயிரினால்தான்என்ன? காதம்பரி வந்தால்தான் என்ன? மித்திர இரத்தினம் மற்றொருவன் எங்கே கிடைப்பான், அவனில்லாமல், தகப்பனாரையும், சுகநாஸனையும் என்னமாய்ப் பார்ப்பேன்? அவன் தாய் மனோரமை என்னசெய்வாள்? என்றுசொல்ல தான் மகாபாதகம் செய்ததாக எண்ணியதுபோல் முகம் பிளக்கிற்று. அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்.

உம்முடைய உத்திரவுபிரகாரம் சைநியத்தை வேகமாய் நடப்பிக்காமல் நீர்பிழிந்த இடத்தில் ஒருநாள் தங்கி மறுநாள்காலமேபுறப்பட்டான். அச்சோதம் (தெளிவு ஜலம்) என்ற தடாகம் வெகு புண்ணிய தீர்த்தம். புராணத்தில் பாடப்பட்டிருக்கிறது. அதில் ஸ்நானம்செய்து, நமஸ்கரித்து, கரையில் வீற்றிருக்கும் பவாநீபதியை தரிசித்துவரலாம். அந்த திவ்விய தேசத்தை எப்போ காணப்போகிறோம். இதுவரையில் சுவப்நத்தி



லும் கண்டிருப்பார்களா? என்றுசொல்லி கால்நடையாய் குளத்தண்டைக்குச் சென்றோம். தடாகத்தைச்சுற்றி இருக்கும் விநோதத்தைப்பார்த்தால் பகலில் நடுராத்திரிபோலும், நீர்கொண்ட நீலமேகம்போலும் காணப்பட்டது; அங்கிருந்த லதாமண்டபத்தை அவன் பார்த்து, வெகுநாளாய்க்காணாத தம்பியையோ, மகனையோ, சிநேகிதனையோகண்டவன்போலும், கண்கொட்டாது விழித்துக்கொண்டு சித்திரத்தில் எழுதிய படம்போல் அசையாது, தன் உடம்பில் சுவாதீனமற்று நின்றான். சும்மாகீழ் நோக்கின கண்ணும் கண்ணிலிருந்து தாரை தாரையாய் நீரும் அவன் பரிதாபஸ்திதியைப் பார்ப்பவர்க்கு அவனுடைய பண்டையைநாள் அனுபவம் அவன்மனதில் உத்தித்ததுபோலத் தோன்றிற்று. அதிக மனோகரமான பிரதேசத்தைப் பார்த்து களித்தவர்களுக்கு ஆநந்தம் அடங்காமல், பரவசமாய் இவ்வாறு மதிமயங்கிப் போவார்களோ என சம்சயம் உண்டாயிற்று. எழுந்திரும் ஐயா ஸ்நானத்துக்குப் போவோம், சைநியமோ உம்வரவை எதிர்பார்த்துக்காத்திருக்கிறது. ஊமைபோல், பேதைபோல், ஜடம்போல், பேசவறியாதவன்போல் இப்படியிருப்பதேன் என்று வெகுதரம் நாங்கள்கேட்டோம். நான் இருந்து அவரை அழைத்துவர பிரயத்தினப்பட்டும் பலிக்கவில்லை. "நான் என்னசெய்வேன். நினைவுவருவதுபோலிருக்கும். ஒன்றும் ஞாபகத்திற்குவராது. பார்ப்பதுபோல காணும் கண் மற்றொன்றையும் பாராது. அடியெடுத்துவைக்க என்னாலாகாது. என் தேகம், மூளையடித்தாற்போல் சலியாது, என்தோழன் சந்திராபீடன்பேரில் ஆணை நான் சொல்வது நிஜம் என்று, கெட்டுப்போனவஸ்துவைத்தேடுபவன்போல் தோன்றினான். அந்த இடத்தை விட்டால்தான் ஜீவிப்பது அரிது.

இன்ன காரணத்தால் அவன் அப்படி சக்தியற்றிருக்கிறானென்த்தெரியாதென்றும் சொல்லி மற்றவர்களை தம்வழி செல்லுமெனச்சொன்னான்; இவ்வாறு சுற்றுமிருந்தவர்கள் தெரிவித்தார்கள். சந்திராபீடன் இந்த விருத்தாந்தத்தைக் கேட்டு வெகு ஆச்சரியமடைந்து ஆலோசித்தான். "வைராக்கியத்துக்கு இது காலமில்லையே. படிப்புக்கு உரித்தபடி தேவ, பிதிரு, மனுஷியராகிய மூவர்க்குபட்ட கடனைதீர்க்காது எங்கு போனான்? இவன்பேரையும் பிரதிஷ்டையும் என்னையும் சிறத்துவதற்கு பிள்ளையா, பேரனா? சத்திரம், கிணறுதண்ணீர்ப்பந்தல், அரண்மனை, குளம், தோட்டம், முதலியவைகளால் பூமியை அலங்கரித்தவனல்லன். அறியாதபேரை திக்குயாவையும் பாவச்செய்துகொண்டானா? பெரியோர்களை, சுசுருஷைசெய்து சந்தோஷித்தானா? தன் பிரிய பந்துக்களுக்கு

உபகாரம்செய்தானா? சிநேகிதர்களுக்கு தனக்குசமான சம்பத்தை அளித்தானா, சாதுக்களை போஷித்தானா? தன்னை அடைந்தவர்களுக்கு ஆசைதீர சம்மானம்செய்தானா? இந்த ஜீவலோகசுகத்தை கண்டறிந்தானா? என இவ்வாறு இப்படி ஆலோசித்து துக்கித்தபோதிலும், வைசம்பாயனனைத்தேடித் தான் புறப்படுவதற்கு ஒருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள், அவனோடு காதம்பரி அண்டை போய்ச்சேரலாம் என்ற எண்ணத்தால் இந்ததுக்கமும், மருந்துபோல் பின்சுகத்தை அளிக்குமென சந்தோஷித்தான். வைசம்பாயனன் இருக்குமிடத்திலேயே,காதம்பரியும் இருக்கிறாள் என்று தைரியம் உண்டாயிற்று.

இந்த ஸ்திதியில், மறுபடியும் பட்டணத்துக்கு போனான். ஊரெங்கும் வைசம்பாயனன் சங்கதியைப்பற்றி விசனத்தோடு சொல்லிக்கொண்டிருந்தார்கள். பட்டணத்துக்கு தூரத்திலிருந்தே, அங்குமிங்கும், இரண்டுபேர்களாகக்கூடி கையைப்பிரித்துக்கொண்டு; உட்கார்ந்தவர்கள் சிலர், சுற்றிநிற்பவர்சிலர், தோன்றாது இரண்டு அடி முன்னும் பின்னும் வைத்துக்கொண்டிருப்பவர் சிலர், உயரப்பார்ப்போர் சிலர், கீழ்நோக்குவோர் சிலர், கண்ணீர் விடுவோர் சிலர், முகம்வெளுத்தவர் சிலர், கஷ்டம்பொருக்காமல் வாய்விட்டு அலறுவோர் சிலர், துக்கவேகத்தால் அழமாட்டாது மௌனம் சாதித்தோர் சிலர், இவ்வாறு முனிகளும், துறந்தவர்களும், துஷ்டர்களும் கூட, தாய் தந்தையர்போலும், உறவினர்போலும், வைசம்பாயனன் சங்கதியை விசாரிப்பவர்களும், சொல்பவர்களுமாயிருப்பதை சந்திராபீடன் கண்டான். தன் அரண்மனை வாசலுக்குப் போகவே, தன் தாய்தந்தையர் மந்திரிவீட்டிற்குபோயிருக்கின்றார்களென தெரிந்தது. தானும் அவ்விடத்திற்குச்சென்றான், மனோரமைபேதைபோல் கத்தினாள்.

யாரப்பா உனக்கு நடுகாட்டில் ஆகாரம் கொடுக்கிறார்கள், நித்திரை வரும்படி படுக்கைபோடுவார்கள்? உனக்கு பசிக்கும்போதும், தாகிக்கும்போதும், நித்திரைவரும்போதும் துக்கிப்போர் எவர்? என் மடியைவிட்டு உன்னோடு சுகத்தையும் துக்கத்தையும் சமானமாய் பங்கிட்டுக்கொள்ளும் உயிர்தோழியையும் அடைந்தவனல்லவே? நீயிருக்குமிடத்துக்கு என்னையும் அழைத்துப்போ. உன்னைப்பாராமல்இனிபிழைத்திரேன். என்னைக் குழந்தைப்பருவத்திலும் அவமானம் செய்தவனல்லவே? திடீரென்று என்மேல் என் இந்தநிஷ்டூரம் உனக்கு, உன் தாய்தந்தையரை இவ்வாறு கஷ்டப்படுத்துவதால் உனக்குவரும் சுகமென்னவோ? இந்த அழுகையைக்கேட்ட சந்திராபீடன் பரவசனானான். கொஞ்சம் தேர்த்திக்



கொண்டு, உடம்பு அசையாமல் மெதுவாய், மந்தரகிரிபோன்ற சுகநாஸனோடுகூட தந்தையண்டைசென்று, கடைந்தபிறகு சாந்தமடைந்த சமுத்திரம்போல் காணப்பட்ட அவரை வந்தனம் செய்தான். தகப்பனார் பெய்யும்மேகம்போல், உள்ளபூசையால் பேச நாவெழாது, முணுமுணுவென்று வைசம்பாயனுக்கு விபத்து உன்னாலேயே வந்ததென்று மகனைப் பார்த்துச்சொன்னார். இந்தவார்த்தையை கேட்டதும் துக்கத்தினாலும் கோபத்தினாலும் மழை ஆரம்பித்தாற்போல் முகம்கருத்து கண்கள் மின்னல்போல் சொலிக்க, உதடுபட தக்க, பதில்சொல்லும் சந்திரனிடத்தில் உஷ்ணமும்; நெருப்பினிடத்தில் குளிமையும், சூரியனிடத்தில் இருளும், இரவில் பகலில் சமுத்திரம் குன்றுவதும், பூமியை ஆதிசேஷன் சுமக்கேனென மறுப்பதும், நல்லோர் பிறர்க்குப் பாடுபடுவதை விட்டொழிவதும், இனத்தார் தூறுவதும் எப்பொழுது சகஜமாகுமோ அப்பொழுதே இளவரசன் குற்றத்துக்கு இடமாவான்- இவ்வாறுகுணமுடையோனை தந்தையோ தூறுவது நியாயமல்லவென்று சொல்லி தன்மகனை காற்றைப்போல், சலசித்தனாய் வளர்ந்து, இந்த தோஷத்துக்கு ஆளானான். இவ்வாறு தேகத்திலிருந்து. சிலவேளை பிறக்கும் பெரும்புழுக்களில் இவன் ஒருவன் குலத்துக்குக் கேடு, தேசத்திற்கு, மகாவியாதி போன்றவன். துஷ்டசர்ப்பத்தை ஒத்தவன், இவன் புத்தி பிறரைமோசம் செய்யும்பொருட்டே உதவிற்று, ஞானம் சம்பாதிக்கும்பொருட்டல்ல. இவன் படிப்பு இவனை ஏமாற்றுவதற்கல்லது சாந்தியடைவதற்கு உதவவில்லை. இவன் பராக்கிரமம் ஏழைகளை துன்பப்படுத்துவதற்கேயன்றி உபகாரத்துக்கல்ல. தாராளமாய்ச் செலவிடுவது இஷ்டமானதை சம்பாதித்துக்கொள்வதற்கேயல்லாது தருமத்தின் பொருட்டல்ல. தன் தாய் தானில்லாது ஜீவிக்கமுடியாதென்ற சங்கதி இவனுக்கு தோன்றவில்லை. வம்சவிருத்தியின்பொருட்டு தனக்குப்பிண்டம் அளிப்பானென்று பெற்றுவளர்த்த தகப்பனிடத்தில் அனுமதிபெறாமல் எல்லாம் துறப்பது கூடுமா என்ற சந்தேகம் இவன்மனதில் உதிக்கவில்லை. கிளிபோல்வளர்த்து பாடமும்இவனுக்கு சொல்லிவைத்தோம். மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் காண்பிக்கும் சிநேகம்கூட நிஷ்பலமாவதில்லை. வளர்ப்பவரிடத்திலும், தாய்தந்தையர்களிடத்திலும் அவைகளுக்குக்கூட விசுவாசம் இருக்கும். மேலுலகம்கீழுலகம் இரண்டையும். தோற்ற இவன்புத்தி அதோகதியை அடைந்தது எனச்சொல்லி முடித்தான்.

அரசன் இந்த வார்த்தைக்கு சற்றும் ஒப்பாது சொன்னான். பிராமணராகிய உமக்கு நான்புத்தி சொல்வது அமிருதத்தை பனிக்கட்டியால்

குளிரச்செய்வதற்கும் சமுத்திரத்தை மழையால் நிறைப்பதற்கும் எத்தனிப்பதாகும்; ஆயினும்பெரும்துக்கத்தினால் அதைரியமுள்ளோர் மனம்கூட அதிகமழையால் தெளிவான தடாகம் கலங்குவதுபோல் கலங்கிப்போய்விடும். அதைக்கொண்டு நான்பேசத் தொடங்குகிறேன். போய்வந்ததினால் என்னதான் நேரிட்டது. போய்வந்ததின் மோகத்தில் குணத்துக்கு ஆயிரம்கேடுகள் உண்டாகும் வைசம்பாயனனுக்குவந்த ஆபத்து என்மகன் குணக்கேடாலல்லாது உம்புத்திரனுடைய பிரியத்தால்வரவழைத்துக்கொண்டான் என்று எவ்வாறு சொல்வீர். எல்லாவற்றிற்கும் வைசம்பாயனனை வரவழைத்தால் பிறகு உசிதம்போல் செய்துகொள்ளலாம் என்றான். சந்திராபீடனும் மந்திரியை தன்னை வைசம்பாயனனை தேடி அழைத்துவரும்படி அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ள தந்தைதாயும் சம்மதித்து நாளொன்று பார்த்து புறப்படும்படி கட்டளையிட்டார்கள். ஜோசியனைக் கூப்பிட்டு, நாளைக்கு நல்லநாளென்று சொல்லும் எனராஜகுமாரன் கேட்டுக்கொண்டான். கிரகங்கள் இருக்கிறஸ்திதியை பார்த்தால் புறப்படுவது உசிதம் இல்லையாயினும் காலமென்பது அரசன் மனதைப்பொருத்தது. எப்பொழுது செய்யவேண்டுமென்று புத்திதோன்றுகிறதோ அதேஎல்லாகாரியங்களுக்கும் நல்லவேளை எனப் பதில் சொன்னான். அவ்வாறே மறுநாள்புறப்பட்டு தாய்தந்தையர்களிடத்திலும் மந்திரி மனைவியிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு இந்திரியபத்தன் மீது ஏறி சிப்பிராந்திக்கரையில் தனக்காக ஏற்பட்ட கூடாரத்தில் இறங்காமல் ஒரேவேகமாய் சென்றான். இரவு ஓரிடம்தங்கி விடியுமுன்மறுபடியும் புறப்பட்டு இரவும் பகலும், நித்திரை ஆகாரமின்றி காதம்பரியை தியானித்து பிரயாணம்செய்தான். பெரும்மழையால் இராப்பிரயாணம் அசாத்தியமாயிற்று.

**A. Srinivasa Iyer.**

---



## SOBHAMANI.

### சோபாமணி.

ஒவ்வொருகாலத்தில் மழை பொழியாதொழியவும், காற்றுவீசாது நீங்கவும், சூரியன் முதலிய ஒளிகள் விளக்கஞ்செய்யாது மறையவும் செய்பவர் யாவர்? அவர் தாமே. அவருடைய பரயசக்தியின்றி எப்பொருளும் எதனையும் இயற்றவல்லதாகாது. ''அவனன்றி யோரணுவு மசையாது'' கண்டாய் என்றிங்ஙனம் தேற்றலும், அப்பெண்மணி பின்வருமாறு அவ்வருட்பெருங்கடலான இறைவனை துதிப்பாளாயினள்: ''அகிலநாயகனே! ஆதிபந்த மில்லாதவனே! இனைத்தென்றறிவரிய பொருளே! ஈறிலின்ப மூர்த்தியே! உள்ளுவாருள்ளத் தூறுமொருதெள்ளமுதே! ஊனுமுயிருமானவனே! எய்ப்பில் வைப்பே! ஏத்துவாரிடர் கெடுக்கு மீசனே! ஐந்தவித்தவர்தம் அரும் பெறன்மணியே! ஒப்புயர்வற்ற நற்பொருளே! ஓதி யோதியுணருந்தொறு முணர்ச்சியுதவுமொண் சுடரே! ஔவியம் வித்தார்க் கரும்பெருஞ் செல்வமே! நினது கண்ணிடங்கொண்ட திருவருள் வெள்ளத்திலொரு சிறுதுளியையென்மீது சிதறவிடலாகாதோ?

கண்ணிகள்.

'கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே.'
'பாராயோ வென்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.'
'ஓயாதோ வென்கவலை யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.'
'உள்ள மறிவா யுழைப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.'
'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் பராபரமே.'
'எண்ணாத வெண்ணமெலா மெண்ணியெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.'
'துன்பக்கண் ணீரிற் றுளைந்தேற்குன் னானந்த
வின்பக்கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே.'
'நீங்காத வின்ப நிறைவே யெனையருளித்
தாங்காய்நீ யிந்தத் தருணந் தயாகரனே!

‘உன்னையே நற்றுணையா வுற்றடைந்தே னுள்ளமுவக்
தென்னைநீ காத்தருளா யெந்தாய் தயாகரனே!
‘வந்தித் துன்பாதம் வாழ்த்தி யடுத்தேனென்
சிந்தைப் பிணிதீர்ச் செய்யாய் தயாகரனே!”

என்றின்னவாறு பன்னிப்பரவி உள்கரைந்துரைத்து, வேந்தன் கட்டளையை எதிர்பார்த்திருக்கு மெல்லையில், கலாவான் விரைந்தோடிவந்து அவளது மட்கலம் அரசனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகிழ்ச்சியை உரைத்திடவே, அவளுக்குண்டான ஆனந்தத்தை அளந்துரைக்க யாராலாகும்? எழுதினும் அடங்காது மொழியினு மடங்காது. நடுக்கடலிற்றிசைதப்பி அலைந்தல்லற்படுவானொருவன் தற்செயலாய் ஒருதுறையைக் கண்டது போலவும், கைப்பொருளை யிழந்து கலங்குமொருவன் அதனை மீளவும் கைப்பெற்றாற்போலவும், கவலையாற் கலங்கி நின்ற சோபாமணி தனது கவலையொழியும் உபாயங் கையுறப்பெற்றாள், ‘கரைசெய்யவரியதொரு பேருவகைக்கடன் மூழ்கி’ ஆநந்தக்கண்ணீருகுத்தாள், உள்ளங்குளிர்ந்தாள், ஓடினாள், ஆடினாள், பாடினாள், தனக்குச் சந்தோஷங்கூறிய கலாவானது பாதத்து விழுந்தாள், எழுந்தாள், புகழ்ந்தாள், தன்னுடன் அங்குக் காத்திருந்த தன் காதல் நண்பனைக்கிட்டினாள், அவனுக்கு அக்களிப்பினை யுரைத்திட்டாள். அவனும் அக்களிப் பென்னும் அளக்கரிற்றிளைத்தெழுந்து, “தேமொழீ ! நின்பங்கில் இறைவன் செய்த திருவருட்டிறத்தை யென்சொல்வேன் ? ஆபத்பந்து, அநாதரக்ஷகன், அடைந்தாரைக்கைவிடான் என்று ஆன்றோர் கூறும் மொழித்திறத்தினது உண்மையைக் கண்டாயே.

கலிவிருத்தம்.

கவலை யாழியுட் பட்டுக் கலங்கிய
அவல நீங்கி யகமகிழ்ந் தார்ந்திவள்
தவல ருஞ்சுகந் தான்பெறச் செய்தனை
குவல யத்துன் குணஞ்சொல லாவதே”

என்றிங்ஙனம் உரையாடித்தன் காதலியுந் தானுங்களியாட்டயரா நிற்க, சோபாமணி தன் நண்பனைப் பிற்றைநாட்காலையில் மணஞ்செய்துகொண்டு அவர்களுடைய தந்தை தாயர் உறையும் ஸஹஸேநத்திற்குப் போகலாகுமென்று காவலனது கட்டளைகையுற, அதனைப்பெற்ற அவ்விருவரும் தமது வேண்டுகோள் முற்றும் ஈடேறப் பெற்றவராகிக் கொண்டடங்காத ஆநந்தவாரியிற் குளித்தெழுந்து, கலாவான்மாட்டும் அவன்



றன் தாய்மாட்டும் விடைபெற்றுத் தம்மூர்க்குச் செல்லப் புறப்படுங்காலையில், சடிதியில் மாடப்படிக்கட்டில் ஓராரவாரம் எழுந்தது கேட்டுத்திடுக்கிட்டனர்.

சிலர் தம்மை வீட்டினுள் விட்டிடுமாறு கலாவானுடைய வாயில் காப்போருடன் வீரங்காட்டி வாதுசெய்தனர். அப்பேரிரைச்சலைக்கேட்ட கலாவான் அஃதென்னை யென்றறியும் வண்ணம் வெளியேவந்திடலும் தடதடவென்று அக்கூடமுழுதும் போர்வீரர் நிறைந்துவிட்டனர். அவர்தம்முள் ஒருவன் கலாவானை முகநோக்கி, “அஹஸ்கலாவான் என்பான் நீயேயோ ?” என்று சீறிக்கேட்டனன்.

கலாவான்.—(சிறிதுங் கலங்காத தைரியத்தோடு) “யானே கண்டாய். என்னை எதன்பொருட்டு வினவுகின்றாய் ? இவ்வகாலத்தில் எம்மில்லத்தினுட்புக்கு ஏனிந்தப்பேராரவாரஞ் செய்கின்றீர்”

போர்வீரன்.—யாம் வேந்தனது ஆணையை மேற்கொண்டு ஈண்டிவ்விடம் போந்தோம். சோபாமணி என்னும் பெயரிய ஒரு சிறுமி இங்கிருக்கின்றனளன்றோ ?

கலாவான்.—ஆம் ; இருக்கின்றனள். அவளைச்சுட்டி ஏன் வினவுகின்றனை?

போர்வீரன்.—அன்னாள் இக்கணமே எம்முடன் வரற்பாலள். நீ எமக்குச்சிறை.

அவனை யாது கேட்பினும் அவன் “எமக்கு வேறொன்றும் தெரியாது; அரசன் அப்பெண்மணியினை மஹஸேநத்துக்குக் கொண்டுபோகவும், நின்னைப்பந்தகிருகம் என்னும் அரசர் சிறைச்சாலையி லடைக்கவும் கட்டளையிட்டுள்ளார். இதுவே யாம் அறிந்தது” என்று ஓரேவிடை பகர்ந்தான்.

கலாவான்.—(மிகச்சினந்து) எனது குற்றம் இன்னதென்று யான் அறிவதன்முன் எங்ஙனம் சிறையாவது ? என்றுரைத்து, தன் தாய் வருதல் கண்டு சீற்றத்தைமாற்றி, அவள் கூறியதன்மேல் இதுவும் விதியேயோ ? என்று வாய்திறவாது அப்போர்வீரன் கைவயப்பட்டான். அப்பொழுது அவன்தாய் அவனை நோக்கி, “குழந்தாய்! நீ குற்றமற்றவனாகுவை யென்றும், அரசன் உன்னைத் தண்டனைக்குத் தப்பச்செய்வானென்றும் நம்பியிருக்கின்றேன்” என்று சொல்லிவிட்டு, தன் கண்ணினின்று நீரைச்சிந்தாமல் வேந்தன் மாளிகைக்கண் சென்று, தன் மகனது தண்டனைக்குக் காரணமின்னதென்று அரசனிடம் நேரிற் கேட்டறியும்

பொருட்டு வெளியே சென்றிருந்த வேந்தன் மீண்டு வருமளவும் காத்திருந்தனள். கோமகன் குதிரைவிட்டிறங்கினவுடன் கலாவானின் தாய்க்கு முதலிற்காட்சியளித்தான். அப்பொழுது அவன் அவளைநோக்கி, "நும் புதல்வன் என்பாற் காட்டிய பேதைமையினும் நன்றிகொன்ற இழிதகைமையினும் நீர் தலையிட்டுக்கொண்டு துயருறுதொழிலீரென்று நம்புகின்றேன்" என்றுரைத்தலும், அவள் "என் மகன் நன்றிகொன்றவனென்றெண்ணுதல் தகாது.

'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்னும் அரியநீதியை அறிந்தொழுகும் இயல்புடையனே. ஆயினும், இளைஞனதலின் ஒருகாற் குணந்தவறிக் குற்றம்பட ஏதேனுஞ்செய்திருத்தல் கூடுமென்பது திண்ணம்" என்று கெம்பீரமாகச் சொல்லினள். அதுகேட்ட அரசன் "நன்று. இன்றுமாலை ஸமஸேநத்திலுள்ள வன்னச்சாலையில் என்னைச் சந்திப்பின் நும்புத்திரனது குற்றமின்னதென்று அறிவிப்பேன்" என்றறைந்தனன்.

அவ்வாறே அவள், குறித்தபொழுதில் ஸமஸேநத்தின் வன்னசாலையிற்போய் இறைமகன் வரவை எதிர்பார்த்திருந்தனள். பிறகு சிறிது நேரத்திற்குள் சடிதியில் அரசன் வந்தமையறிந்து அசைவற்று மௌனத்தோடு நின்றாள். அரசன் அவளது முகத்தை உற்றுநோக்கி, "அம்மா! நும்புத்திரன் செய்தகுற்றம் இன்னதென நீர் அறிந்திலீர்போலும்" என்றிங்ஙனஞ் சொல்லிக்கொண்டே இறைமகன் சோபாமணியென்னுஞ்சிறுமி இயற்றிய மட்கலத்தைக் கையிலெடுத்தான். அதனைத் தாய் பார்த்தவளல்லள்.

பின்னர், பிரதாபவேந்தன் அவளைநோக்கி, "இம்மட்கலத்தை நீர் இதற்குமுன் பார்த்திருக்கலாமே. இதன் அடிப்புறத்து வரைந்திருப்பதையும் பார்த்திருக்கக்கூடுமே" என வினவ, அவள் "ஆம், பார்த்ததுண்டு. அவ்வெழுத்துக்கள் என் மகன் எழுதியவை" என்றனள்.

அரசன்.—இவை நும்புதல்வன்கையினால் பொறிக்கப்பட்டவைதாமே?

கலாவான்தாய்.—ஆம், அந்த ஸஹநேப்பெண் அழகுபெற வன்னங்களெழுத அறிவாளேனும் எழுத்துக்கள் எழுதவறியாள். ஆதலின் அவளது வேண்டுகோட்கிணங்கி என் சிறுவனெழுதினன்.



அரசன்.—இதனை உற்றுநோக்குக இம்மொழிகள் புகழ்வனபோற்றோன்றி இகழ்வைக்குறித்து நிற்கின்றன.

கலாவான்தாய்.—என் சிறுவன் செய்த பிழை யாதாயினுமாகுக. அவன் எவரையும் பொய்ப்புகழ்ச்சி செய்பவனல்லன். அவன் அத்துணை இழிகுணமுடையனென மகாராஜா திருவுளம் பற்றத்தகாது. ஏனெனில், சின்னாள் முன்னர்த்தான் அவன் தமது திருவுளங் கன்றுமாறு உய்த்துணராது வஞ்சனையின்றி ஏதோ தகாமொழி கூறினனென்று அவனது குற்றத்தையெடுத்துக்காட்டி அதனைப் பொறுத்தருளினீர்கள். அவன் கவிபாடிப் பிழைப்பவனல்லன். துதிநிந்தையான இரண்டொருவரி வரையப்பட்டிருத்தலால் தமது சித்தங்கலங்கி அவனைச் சிறைப்படுத்தினீர்களென்று யான் நினைத்திலேன்.

அரசன்.—நீர் தாயாயினமையின் தநயனுக்குப் பரிந்துரைத்தல் தக்கதே. துதிநிந்தையாக இரண்டொருவரி யெழுதியதனிமித்தம் நும் மகனைச் சிறைப்படுத்தினேனல்லன். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பார்த்தாலே புலப்படுமே. இவ்வரிகளில் பழிமொழி மிகுந்திருத்தலால் பொறுத்தல் அரிதாயிற்று. சிறிது பொறுமையோடு இங்ஙனே எழுதியிருக்கும் இரண்டுவரிகளைப் படித்துவிட்டுப் பின்னர் நும்புத்திரன் பக்கற் பரிவினாற் கூறத்தகுவனவற்றைக் கூறுவீராயின் கேட்பேன். இதனைப்படிக்குமுன் ஒருவார்த்தை: யான் இவ்வழகிய மட்கலத்தைப் பாரிஸ் நகரத்தில் ஒரு சீமானுக்கு அனுப்பவிருந்தேன். அவரை நீரும் அறிந்திருத்தல்கூடும். இதனைக் கட்டியனுப்பும்படி ஒருவனுக்குக் கட்டளையிட்டேன். அவன் இக்கலத்தைத் துலக்கமுறத் துடைத்துக்கொண்டிருக்கையில் அடிப்புறத்து யாதோ பொறிக்கப்பட்டிருந்தமை யறிந்து அதனைப்படித்துப் பார்த்துவிட்டு என்பால் விரைந்தோடிவந்து அதனைக்காட்டினான். யான் அந்தப் புகழ்மொழியைப் படித்துப் பெருங்களிகொண்டதுமன்றி, இதனை இயற்றிய கவிஞனுக்கு யாது பரிசளிக்கலாம் என்று என் பேதைமையால் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், அம்மனிதன் இக்கலத்தின் ஒரு புறத்தைத் தேய்க்க அதன் மீது பூசியிருந்த நீலவர்ணம் திடீரென்று கலைந்துபோக அதனைக்கண்டு வியந்து என்னோடு சிலவார்த்தைகள்பேசி என தெண்ணத்தைக் குலைத்துவிட்டான். யான் இந்தக் கலத்தை அவன் கையினின்று வாங்கிப்பார்த்தேன். பார்த்தலும், பார்த்தவிடத்தின் மாத்திரம் நீலவர்ணம் பூசியிருந்தது. அதன்கண் 'பிரதாப வேந்தன் மகிமைக்குறி' என்றெழுதப்பட்டிருந்தது. அதனையடுத்துள்ள பதம் அப்பொழுது வன்னத்தின் மறைந்திருந்தது. அப்

பதம் இப்பொழுது, பாரும் அம்மா, நன்று விளங்குகின்றது என்று 'கொடியன்' என்ற பதத்தை அரசன் அவளுக்கு எடுத்துக்காட்டி, பார்த்தீரோ 'கொடியனாய பிரதாபவேந்தன் மகிமைக்கூறி' என வரையப்பட்டுளது. யான் கொடுங்கோன் மன்னனாயின் ஆகுக. தநயன் குற்றத்திற்குத் தாயைத்தண்டியேன். நம்முடைய ஏனையநண்பரோடு செவ்வாய்க்கிழமை மாலையில் நம்மில்லத்தின்கண் என்னைக்காண்பீர் என்று பகர்ந்தனன்.

றைப் பொருளென்றுணரு மறிவு கற்பித வறிவுமாம். ஆகையால் இப்பர
மாணுக்களைப் பரமாணுக்களென்றுணரு மறிவு யதார்த்த அறிவெனப்
படுமேயொழியக் கற்பித அறிவெனப் படாதென்றால், இதனால் அப்பரமா
ணுக்கள் சத்தெனப்படுமோ? அன்றி அசத்தெனப்படுமோ? சத்தெனப்படு
மெனின், சத்தெனப்படும் அவ்வணுக்கள் பிரத்தியட்சப் பொருளா?
அன்றி அப்பிரத்தியட்சப்பொருளா? அதிசூக்குமமாகிய கருவிகளைக்கொ
ண்டுணருங் கட்புலனுக்கே எட்டப்படாததாகையால் அப்பிரத்தியட்சப்
பொருள்களெனின், இப்பொருள்களை உண்டெனக் கூறுவது எந்தபிரமா
ணத்தாலெனப்படும்? அனுமானப் பிரமாணத்தாலெனின், அனுமானப்
பிரமாணமாவது: மறைந்திருக்கும் பொருளைக் குறியாலறிவதன்றோ?
ஆமெனின், அதற்கு உதாரணம் புகையைக்கண்டு வன்னி(நெருப்பு) உண்
டென்றறிவதுபோலு மன்றோ? ஆமெனின், இவ்வனுமானமும் எதார்த்
தந் தோற்றமென இருவகைத்தாயிருக்கின்றன வன்றோ? எங்ஙனமெனின்
ஓர் மலையின்கண் நேராகக்காணப்படும் புகையைக்கொண்டு கண்ணு
க்குப் புலப்படாதிருக்கும் வன்னியுண்டென்பது எதார்த்தானுமானமும்
மலையின்கண் நின்றெழும் வெண்மாசி முதலியவைகளைப் புகையென மய
ங்கி அதுகாரணமாக அம்மலை வன்னியுடைத்தென்பது தோற்றானுமான
முமாம். இவற்றுள் எதார்த்தானுமானத்தால் பொருள்சித்திக்குமே
யொழியத் தோற்ற அனுமானத்தாற் பொருள்சித்தியாது. இவைபோல்
எவ்வனுமானத்தால் பரமாணுக்களென்பவை அப்பிரத்தியட்ச இருப்பு
டைய பொருள்களென்று கூறுவது? எதார்த்தானுமானத்தாலெனின்,
பிரத்தியட்சமின்றி இயையாதனுமானமானதால், எந்தப்பிரத்தியட்சஉண்
மைப்பொருளைக்கண்டு ஷை பரமாணுக்களை உண்டெனக் கணித்ததெனப்
படும்? மண்ணின் மகத்துருவமாகிய இப்பூமி முதற் சூக்குமாணுக்களீறு
வாயுள்ள அணுமகத்துப் பேதங்களைக்கொண்டு கணித்ததெனின், இங்
ஙனமாகிய பெரிது சிறிது பேதங்கள் முன்ஞான்றே ஆராய்ச்சியால் காரிய
மாயும் அசத்தாயு முடிந்திருக்க அசத்தாகிற அணுமகத்துப் பேதங்
களைக்கொண்டு இவற்றிற்குமேல் முடிவாகிய பரமாணுக்க ளுண்டெனக்
கோடல் தோற்றானுமான மெனப்படுமேயொழிய எதார்த்தானுமான

மெனப்படுமா? படாதே. ஏனெனின், பொருளைப்பொருளாக அறிந்தனுமானிக்காது பொருளல்லவற்றைப் பொருளாக மயங்கி யனுமானித்ததினால் இஃது தோற்றானுமான மென்பதற்கு மறுப்பின்றாம். அன்றாகவே தோற்றானுமானத்தாற் பொருள் சித்தியாதென்பது அனுபவமானதால் பரமாணுக்க ளுண்டென்பதுங் காரணமென்பதும் மலடிமகன் உண்டென்பதுங் காரணமென்பதும் போலுமேயல்லாமல் உண்மையன்றாம். இதனால் பரமாணுக்களே நித்தியமென்றும் மற்றவைகள் அநித்தியமென்றுங் கூறுங் கூற்று மருளேயொழிய தெருளன்றென்று நன்கு வெளிப்பட்டது.

அன்றியும் பரமாணு விரண்டுகூடித் துவியணுகமும், துவியணுக மூன்றுகூடித் திரியணுகமும், திரியணுக நான்கு கூடிச்சதுரணுக முதலியவைகளாகத் தோன்றுவதால் ஒரு பரமாணுவோடு மற்றோர் பரமாணு கூடித் துவியணுகமாகவேண்டுமேயாகில் அதற்கியைந்த தசபுறங்களுள் யாதேனு மோர்புறத்திலன்றோ கூடவேண்டும்? ஆமெனின், கடம்போலப் பரமாணுவும் மேல்கீழ் பக்கங்களென்னும் அவயவத்தோடு கூடிய கடமானது காரியமாயும், அசத்தாயுமிருக்குமாறு அவயவத்தோடுகூடிய பரமாணுவுங் காரியமெனற்கும், அசத்தெனற்கும் மறுப்பென்னை யுளது? இன்றாகையால் இந்நியாயத்தாலும் பரமாணுக்கள் காரியமாயும், அசத்தாயு முடிகின்றது திண்ணமென்க.

---

அன்றியும பரமாணுவென்பது பொருளானால் அது சுயம்புப் பொருளா? அன்றி விகாரப்பொருளா? சுயம்பு பொருளென்றால், கண்டப்பட்டிருக்கும் பொருளா? அன்றியெங்கும் நிறைந்திருக்கும் பொருளா? கண்டப்பட்டிருக்கும் பொருளென்றால், புரமுற்றிருக்கும் பொருளா? அன்றிப் புறமற்றிருக்கும் பொருளா? புறமுற்றிருக்கும் பொருளென்றால், இரண்டொரு புற்முற்றிருக்கும் பொருளா? அன்றித்தசபுற முற்றிருக்கும் பொருளா? தசபுறமுற்றிருக்கும் பொருளென்றால்? அந்தத் தசபுறமும்யாது சூழ்ந்திருக்கின்ற தெனப்படும்? இல்லாமையென்னும் வெளியன்றோ? ஆமெனின், இவ்வணுபுறம் உற்றிருக்குமாறு உள்ளுமிடையு முற்றிருக்க வேண்டுமா? அன்றியற்றிருக்க வேண்டுமா? உள்ளுமிடையுமற்றே தானிருக்கவேண்டுமெனின், புறம் அற்றே தானிருப்பதாகக் கொள்ளுவோமே? இங்ஙனங்கொள்ளுவது ஞாய விரோதமென்றால், அங்ஙனங் கொள்ளுவது முற்றும் ஞாயவிரோத மென்பமே? அது கூடாதென்றால், இதுவுங் கூடாதென்பமே? இவையெல்லாங் கல்விச் சாதுரியமுஞ் சொற்சாது



ரியமே யல்லாமற் பயனின்றாமெனின், இங்ஙனங் கூறு நீர் கற்பத்திலாவது, வெளிப்பட்ட விடத்தாவது ஆத்மாவென்பதில்லை யென்றும் உள்ளது பஞ்சபூத பரமாணுக்களே யென்றும் இவற்றுள் ஒவ்வொரு பரமாணுக்களும் உள்ளும் இடையு மற்றுப் புறம்பு மாத்திர முற்றவைகளென்றுங் கண்டதேனுங் கேட்டதேனும் வார்த்தையாடினதேனும் உண்டா? இல்லையே அக்காலங்களில் நிகழ்த்தாதவைகளை இக்காலத்தில் நிகழ்த்துகிறபடியால் நீர் சொல்வது மாத்திரங் கல்விச்சாதுரியமுஞ் சொற்சாதுரியமு மாகாதோ? நாம் இவ்விதங்களாக மொழிவதால் நமது பிடிவாதம் நிலையுறுமோ? நிலையுறாதாகையால் பரமாணுவென்பது உள்ளுமிடையுமற்ற தெனப்படுமா? அன்றியுற்ற தெனப்படுமா? சுயம்பு பொருளானதாலுள்ளுமிடையு மற்றதென்றால், அப்பரமாணுவோடு நீர்ப்பொருளானது சேரின் அப்பரமாணுத்துணை நீரானது செல்லுமல்லவா? செல்லாதென்றால், நீர்ப்பொருளுக்கு நெகிழ்ச்சித்துவமிருப்பது யாதுக்கெனப்படும்? அந்த நெகிழ்ச்சித் துவமிருப்பது பிறவற்றில் வியாபித்தற்கன்றோ? ஆகையால் பரமாணுத்துணை நீர்ப்பொருள் வியாபிக்குமன்றோ? ஆமெனின், பரமாணுவின் கண்யாதிருக்கின்றதால் நீர் வியாபிக்கின்ற தெனப்படும்? இடையிடையே இடமிருக்கின்றதால் நீர்ப்பொரு ளணுவணுவாக அவ்வவ்விடைகடோறும் வியாபிக்கின்றதெனின், அவ்விடமன்றோ வெளியெனப்படுவது. ஆமெனின், பரமாணுவென்பது புறமுற்றிருக்குமாறு உள்ளுமிடையும் வெளி நிறைவுற்ற கற்பனைத்தோற்றமாய் முடிகின்றதே. இங்ஙனமிருக்க ஒவ்வோர் மட்பொருளணுவையுஞ் சுயம்பாகிய கெட்டிப் பொருளென்று மயங்கிக் கூறுவதென்னை? பரமாணுத்துணை இடமாகிய வெளியுண்டென்பதை, திருஷ்டாந்த வாயலாக விளக்கவேண்டுமெனின், நீர்ப்பொருளை உட்கொண்டிருந்த ஓர் கடத்தைப் புடைத்துப் பார்த்தெனப்படும்? ஈரமன்றோ? ஆமெனின், அவ்வீரமிருப்பானேன்? ஓடு முழுதும் வெளியிருக்கின்றதால் நீரானது வியாபித்ததற்கு இடங்கொடுக்கின்றதே யல்லாமல் சுயம்பாகிய கெட்டிப்பொருளாயிருந்தால் நீர் வியாபித்ததற்கு இடங்கொடுக்குமா? கொடாதே. இது நிற்க கடத்தின் புறத்தில் அக்கினி பரிசிக்குமாயின் கடத்தினகத்திலுஷ்ணந் தோன்றுகின்றதன்றோ? ஆமெனின், புறத்தில் பரிசித்த அக்கினியின் உட்டண சக்தி அகத்திற்றோன்றுவதற்குக் காரண மென்னவெனப்படும்? இடையில் ஓடானது சுயம்பாகிய கடினபதார்த்தமா யிருந்தால் அவ்வுட்டண சக்தியை அகத்திற் செல்லவொட்டாது தடுக்குமன்றோ? அங்ஙனமின்றி வெளிநிறைவுற்ற புரையுடமையா யிருக்கின்றதால் உட்டண சக்தியைத் தன்பால் நிறைவாகக் கொண்டதோடு அகத்திலும் வியாபிக்கச் செய்தது.

ஆகையால் கடமானது அகத்தும் புறத்தும் இடையும் வெளி நிறைவுற்ற கற்பனாத்தோற்ற மெனப்படுமா? அன்றிவேறெனப்படுமா? கற்பனா தோற்றந்தானெனின் இதுபோல் பரமாணுவென்பதும், அகத்தும் புறத்தும் இடையும் வெளி நிறைவுற்ற கற்பனாத்தோற்ற மென்பதற்குத் தடையின்றாம். இங்ஙனமே மற்ற அப்பாதி பூதங்களும் அவைகளின் காரியங்களும் வெளி நிறைவுற்ற கற்பனாத்தோற்றமா யிருக்கின்றதால் சர்வம்மித்தையென்று ஞானவான்களும் ஞானசாத்திரங்களுங் கோட்டிக்க இதனை யுணராது பிடிவாதத்தாலும் துவேஷ புத்தியாலுந் திரிபுணர்ச்சிக் கொண்டு இல்லாத பரமாணுக்களை உள்ளவை யென்றும் உள்ள ஆத்மாவை இல்லையென்றுஞ் சொல்லித் திரிவோரை நாமென்ன வென்னலாம்.

சர்வம் மித்தையாக முடிய ஆத்தமாவென்ப தொன்றுண்டோ வெனின் உலகமானது ஆராய்ச்சிக்கு முன்ஞான்று சத்தியமாயும், ஆராய்ச்சியீற்றில் மித்தையாயுந் தோன்றுகின்றதன்றோ? ஆமெனின், இத்தோற்றந் தனக்குத்தான் தோன்றுகின்றதோ? தனக்குத்தானென்றால், சடமுஞ் சூனியமுமாகையால் தனக்குத்தானெங்ஙனந் தோன்றும்? வேறு பொருளின்றே யெனின் ஆராய்ச்சிசெய்து தீர்ப்பு தந்ததியாதெனப்படும்? அஃதெட்டவில்லையேயெனின், அங்ஙனங்கூறுவது நீயோ? அன்றி வேறோ? நான்தானெனின், உன்னை நீ யில்லையென்னலாமா? கூடாதெனின், இதனால் நானெனல் மித்தையாகுமா? ஆகாதெனின், நானென்பதே ஆத்மாவாகையால் அஃது ஆராய்ச்சிக்கு முன்ஞான்றும் பின்ஞான்றும் இடைஞான்றும் மாறாதிருத்தலின் சத்தென்பதற்குத் தோடமென்னையுளது? ஆத்மா சத்தானாலெனக்குத் தோன்றாதென்னை யெனின்? உனக்குத் தோன்றாததா லில்லையென்னலாமோ? இது எதுபோலிருக்கின்றதென்றால், எனக்கு நாக்கேயில்லையென்று சொல்வதற்கு இணக்கமாயிருக்கின்றதே. இங்ஙனங்கூறியதியாது காரணம் பற்றியெனின், ''நாக்கில்லை'' எனச்சொல்வது நாக்கேயாக, 'எனக்கு நாக்கில்லை' யென்று சொல்வது எங்ஙனம் ஞாயவிரோதமாயிருக்கின்றதோ அங்ஙனமே ஆத்மா இல்லையென்பதும் ஞாயவிரோதமாயிருக்கின்றதே. எப்படியென்றால் ஆத்மா இல்லையென்பதை நீ அனுபவித்திருக்கிறாயா அன்றியில்லையா? அனுபவிக்கவில்லையெனின், இதனால் ஆத்மா உண்டென்றே சித்திக்கிறது. அனுபவித்ததாகச் சொல்லும் பட்சத்தில் எதனால் இல்லாமை அனுபவிக்கப்படுகின்றதோ அதுவே ஆத்மாவாகையால் அது இல்லாமைக்கு விலட்சணமாயிருக்க எப்படி ஆத்மா இல்லையென்று கூறலாம்? கூறுவது மருளே யொழியத் தெருனன்றாயிருக்க ஆத்மா எனக்குத் தோன்றாததா



லில்லையென்கின்றேன் என்னலாமா, இது விவேகிகள் கூறும் வசனமா? அல்லவே. தெரிந்து கொள்ளாத குற்றந் தன்பாலிருக்கக் கண்டுவிசனமுறாது, முடிபுணர்ந்த ஞானிகளையும் ஞானநூற்களையும் இகழ்ந்து வருவது தம்போன்ற பேதையர்கள் மூட மகிழ்ச்சிக் கொள்ளுவதற்கே யொழிய வேறின்றாம். அங்ஙனமாகிய ஞானிகளிருந்தாலாத்மாவை யெனக்கு விளக்கிவைப்பார்களாவெனின்; முடிபுதெரிந்தேனுனக்குத் தெரிவிக்கின்றேனென உன்னிடம் வருவார்களோ? இதென்ன விவேகருமெனப்படும்! அக்கினியுந் தடாகமுந் தம்பால் விழைந்ததிக அவாவாலடைந் தோர்க்கன்றோ குளிருந்தாகமும் விடாவுந் தணிக்கவேண்டி அக்கினியுந் தடாகமும் நம்பால் வருமா வராதே. இதுபோல் எஞ்ஞான்றும் அறிவுடையோர்க் கடிமை பூண்டு அடியற்ற பனைபோல் திருவடியில் விழுந்து அஞ்சலி கூப்பிய கரத்தனாய் நின்று திரிகரண குவிவோடுதோன்றாத விஷயங்களைப் பணிவாகக் கேட்டுத் தோன்றச்செய்து கொள்ளுவதை விட்டு அவர்கள் என்னிடத்து வந்து தெரிவிக்கார்களா என்னலாமா? இதென்ன விவேகமோ யாமறிகிலம்!

இது நிற்க உலகமுதல் பறமாணு முடிவாயுள்ளவைகளைக் காரணகாரிய வாத நெறித்தாக ஆராய்ச்சி செய்து சென்றதில் பரமாணு முடிவாயுள்ளவைகளெல்லாங் காரணகாரியமாகிய அசத்தென்றும், ஆத்மாவே காரணமாகிய சத்பதார்த்த மென்றுந் தேர்ந்ததாம். எது சத்தோ அது சிதானந்தத்தைத் தழுவியதும், எது அசத்தோ அது ஜடதுக்கத்தைத் தழுவியதுமாகையால் ஆத்மா சச்சிதானந்த பிரமமென்பதற்கு மறுப்பின்மையால், ஆத்மா சச்சிதானந்த பிரமமெனப் பசுமாத்தாணிப்பா நாட்டப்பட்டதென்க.

**Athuvithananthum.**

## POSTAL NOTICE.

### போஸ்டாபீசு நோட்டீஸ்.

போஸ்டாபீசு மூலமாக பணம்கட்டி கவர்ன்மென்ட்டு பத்திரம் வாங்குவதற்கு ஏற்பட்டுள்ள விதிகள்பிரகாரம் போஸ்டாபீசு ஸேவிங்ஸ் பாங்கி (Post Office Savings Bank) யில் பணம் கட்டுபவராகிலும் அல்லது வேறு யாராகிலும் ஒரு வருஷத்தில், ரூ. 100-க்காவது அல்லது ரூ. 1000-க்கு அதிகப்படாமல் எத்தனை நூறு ரூபாய்க்காவது, கவ

ர்ன்மென்ட்டுபத்திரம் வாங்கலாம். போஸ்டாபீசு மூலமாய் வாங்கப் படக்கூடிய ஷை பத்திரத்தின் மொத்தத் தொகையானது எக்காலத்தில் ரூபாய் 3000-க்கு மேற்படக்கூடாது.

2. 1904௵ ஆகஸ்டு௴ 1௳ முதற்கொண்டு இவ்விதிகளால் உண்டாகிற கட்டுப்பாடுகளைக் குறைப்பதற்கும், பணம்கட்டி கவர்ன்மென்டு பத்திரங்கள் வாங்க முன்னையைவிட அதிகச் சௌகரியங்களைத் தந்து அவைகளால் ஜனங்களுக்கு அதிக அனுகூலப்படும் பொருட்டு மேற்படி விதிகளைச் சீர் திருத்துவதற்கும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. புதிய விதிகளால் ஏற்படுத்தப்பட டிருக்கிற முக்கிய மாறுபாடுகளாவன—

(1) போஸ்டாபீசு மூலமாய்க் கவர்ன்மென்ட்டு பத்திரம் வாங்குவதற்கு, விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற அளவுகளுக்கு மேற்படாமல், ரூ. 10-க்கு குறையாமல் முழு ரூபாய்களாகக் கட்டலாம்.

(2) போஸ்டாபீசு மூலமாக வாங்கப்பட்டுள்ள கவர்ன்மெண்டு பத்திரங்களை வாங்கினதற்காவது, விற்பதற்காவது, பாது காப்புக்காவது, பாதுகாப்பினின்றும் கொடுப்பதற்காவது, யாதொரு கட்டணமும், கமிஷன் அல்லது எவ்விதத்தாகும் வசூல் செய்யப்படமாட்டாது.

(3) கம்ட்ரோலர் ஜெனரலின் (Comptroller General) பாதுகாப்பில் இருக்கும் வரைக்கும் இப்பேர்ப்பட்ட பத்திரங்களுக்கு ஏற்படும் வட்டியின் நிமித்தம் யாதொரு வரியும் வசூல் செய்யப்படமாட்டாது.

(4) போஸ்டாபீசு மூலமாய் வாங்கக்கூடிய பத்திரத்தின் மொத்தத்தொகை பெரியவனாய் (adult) இருந்தால் ரூ. 5000-வரைக்கும், சின்னவனாய் (minor) இருந்தால் ரூ. 4000-வரைக்கும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது.

3. புது விதிகளைப்பற்றி இன்னும் வேண்டிய விவரங்களை அவ்வவ் விடத்திலுள்ள போஸ்டாபீசுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| சிம்லா,<br>1904௵<br>மே௴ 30௳. | ஏ. யூ. பான்ஷா,<br>இந்தியா போஸ்டாபீஸின்<br>டைரெக்டர் ஜெனரல். |

---



# TIT BITS—IV.

## அதிமதுரம்—IV.

அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும் என்பது பழமொழி இடிமேலிடி விழுந்தாலும் ஆங்கிலர்கள் தமது ஷேக்ஸ்பியரை (Shakespeare) இழக்க மாத்திரம் இசையார்கள். அவருடைய சாதுர்யமொழிகளையும் அலங்கார விசேஷங்களையும் உண்ணும்போதும் உலாவும்போதும் எண்ணும்போதும் எழுதும்போதுமெல்லாம் வாயாரப் பேசிப்பேசி உடல் சிலிர்க்கவும் உயிர் மலர்க்கவும் ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்வார்கள். இந்தியா போனாலும் இவரையிழத்தல் ஈனமென்பார்கள்; இவர், உள்ள இடத்திலிருந்தே ஊரைச்சுற்றி வருவதும் நின்ற நிலையிலிருந்தே நினைப்பெல்லாம் தருவதும் விந்தை விந்தைபெரு விந்தையென்றே சிந்தைகளிப்பார்கள். ஆங்கிலர் இவ்வாறாக, கிரேக்கரோ (Greeks) ஹோமரைத் (Homer) தாங்கிப் பராக் கென்கிறார்கள். லத்தீன் (Latin) பாஷை செத்தேனு பாருமென்று மெத்த மகிழ்வுடன் சித்தங்களித்து வர்ஜில் (Virgil) என்பவர்க்கு அர்ச்சனை புரிகிறது. ஏக குடும்பமாய் நம்முடன் ஸ்நேகம் புரியும் திடமுள்ள வடநூலாரோ, காளிதாசனே, கவிபாடுவதில் யாளிபோன்றவன், அவனுக்கு மிஞ்சியா வேறொருவர் என்று பற்பலவாறு புகழ் கூறுகின்றனர். இஃது ஒரு டில்லி தர்பார்! இன்னிசைப்புலவராகும் மன்னவர் கூட்டம், மணி மகுடங்களோடும் அணி யற்புதங்களோடும், அலங்காரமாய் நாற்புறமும் துலங்காநிற்ப அரசனெனப் பெயர்வாய்ந்த அருமைத்தமிழும் சிரசிலொன்றுந் தாங்காது கந்தைசுற்றிக் காவடி தாங்கி கபோதி வீரராகவா என்று கலக்கமுற்றுச் செல்வதானால் என்ன பரிதாபம் விளைவிக்கும்!

* * * * *

இவ்வித அபாய நிலையிலிருந்து நம்மை உபாயமாய்த் தப்புவித்தவன், உம்பர் புகழும் கம்பனேயாவன். கம்பனே கவிச் சக்கரவர்த்தி; கம்பன் பாட்டே கற்றோர்க் கிதயம் களிப்புறப் பண்ணுவது; கம்பன் சூழ்ச்சியே கம்பசூத்ர மாவது; கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் யோக்கியதை யுடையது. கம்பராமாயணத்தைப்போல் ஆழ்ந்தபொருளும் அலங்காரச் சொற்களும், சாமியைப்போன்றே பூமியிலிருந்து வானகந்தாவி அதைப்போனகங் கொள்வதும் வேறெங்கும் காணவும் கிட்டாது, விளம்பவும் ஒட்டாது. அம்மம்ம! அளப்பொணாத அவனுடைய அறிவும் சொல்லொணாத அவன்றன் சுந்தரத்தொடர்களும் தந்திரவகை

களும், பாவிக்கமுடியாது மற்றவர் சேவிக்கவேண்டிய கற்பனாசக்தியின் பொற்பின் திறமும், யாம் அவ்வப்போது கண்டும் கேட்டும், அளவிலா ஆனந்த மடைகின்றோம். மலையை வர்ணிக்கும் மகானுபாவர் சமயச்சண்டையைச் சந்தியிலிழுப்பதும், மதிலும் யாறும் இவ்வகைத் தென்பார் கற்றறி மோழைகளின் கதையைப் பரப்புவதும் சரயுவின் சங்கதி சாக சமாய்ச் சொல்வார், தத்துவ உபதேசமாம் சத்தியங் கூறுவதும், இவைபோன்ற இன்னும் பற்பல அற்புதங்கள் அவனிடம் அனேகங் காணக்கிடைப்பன. புத்தகப்படிப்பில் மெத்தக் காலங் கழியாராயினும், கவித்திறத்தில் ஒப்புயர் வில்லாரெனப் புவியெங்கணும் புகழ் படைத்தவராதலின், 'கல்வியிற்பெரியன் கம்பன்' என்னப்பட்டார். சுருக்கமாகக் கூறுமிடத்து படிப்பினாலேயே வாராது பிறப்போடே தோன்றியவரகவி, கம்பன்.

## (A poet is born not made.)

* * * * *

வான்மீக முனிவர் வடமொழியில் இராமாயணம் செய்தனர், கம்பர் தென்மொழியிலியற்றினர், இவ்விருவரில் கவித்திறத்திலெவர் முந்தினவரென்பது ஒரு அருமையான கேள்வி. தமிழபிமானிகள் கம்பரையே விசேஷித்துக் கூறுவர்.

சமயாபிமானங் காரணமாகவோ அன்றிக் குலமுதன்மையின் கொள்கையை யனுசரித்தோ வடமொழியே திடமுளதென்பார் வேறு சிலர், கம்பன் கவிச்சக்கரவர்த்தியாயினும் வான்மீகிமுன் அவன் திறம் செல்லாதென்கிறார்கள். வடமொழி யுணர்ந்தார் தென்மொழியறிந்திலர் தென்மொழி தெரிந்தார் வடமொழியோர்ந்திலர், இரண்டுங்கற்றோர் சிலர் உண்மையைக் கூறாது ஓரஞ்சொல்லுவதே பாலும்பழமுமாக் கொண்டனர். அந்தோ நம்மனோர் கதி இவ்வண்ணமாக இவ்விஷயம் எவ்வாறு சீக்கிரத்தில் முடிவுக்கு வரும்? கவித்திறத்தைப் பற்றி மாத்திரம் ஆலோசிக்குங்கால், முன்னர் நூலியற்றினோர் வால்மீகரே யாதலின் அவரே மிக்க சாமர்த்திய முடையவர் என்று கூறுதல் ஒவ்வாது.

காலத்தினால் முதன்மையைக் கொண்டே மற்ற எல்லாவற்றிலும் முதன்மை கூற முயல்வது உலகப் பரிணமப்புக் கிரமத்தில் மனிதனுக்கு முந்தியது மர்க்கடமாதலின் அஃதே உயர்வென்னும் ஆபாசம்போலும், பிற்காலத்தில் தோன்றினதாலேயே கம்பன் மேன்மை யுற்றானெனக் கூறுதல், முற்காலத்திய காளிதாசனைவிடப் பிற்காலத்திய கட்டைவெட்டி பீடுற்றானென்பது போலாம். வான்மீகிமொழி பெயர்ப்பைக் கூடிய



வரைக்கும் யாம் பார்த்ததில், முனிவரர் அற்பசொற்பமானவரன்று என்றே ஏற்படுகிறது. கம்பன் கவித்திறம் கணிக்கலாகா அருமையுடையதென்பதும் அவனால் பண்ணிப்பதித்த பாக்களைப் பார்க்கப் பளிங்குபோல் விளக்குகிறது.

இனி சிற்சில விடங்களில் வன்மீகர் கம்பன் மீதுயர்ந்தும் வேறு சில விடங்களில் கம்பன் வன்மீகரை ஆட்டங்காட்டியு மிருப்பதாகத் தோன்றுகின்றமையின் இவர்க்குள் ஏற்றத்தாழ்வு கற்பிப்போர் இரண்டு நூல்களையும் நன்குணர்ந்தவராதலன்றியும், நனிமிகச்சுய அறிவு கைவந்தாராய், புத்தகப்பூச்சி அன்றிச் சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை நிலைமையை யுதறிக்கடந்து, தூய்மை யென்னும் பட்டணத்தில் வாய்மையாகிய கோட்டையில் முக்குற்றங் கடிந்த முற்றத்தின்கண் அந்தகாரம் போக்கி ஆனந்தங் கொடுக்கச் சந்திரனெழுந்து சுந்தரஞ்செய்போது ஒவ்வொரு சொல்லையும் ஊன்றி யூன்றிப் பார்க்க, உயர்வும் தாழ்வும் ஒரு வேளை ஏற்படினும் ஏற்படும்; அன்றி ராமனுக்கு ராமன் கிருஷ்ணனுக்கு கிருஷ்ணன் என்று விடியினும் விடியும். இஃதல்லாமலும், பலர்க்குப் பலவாறு முடிவு ஏற்படவும் கூடும். எஃதெவ்வாறாயினும், தமிழில் கம்பன் கவிச்சக்கரவர்த்தி யென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

* * * * *

பூதப்பொருளைப் பேசுவது போலேயே போதாப்பொருளுக்குச் சாதம் போடுவது கம்பனிடத்துள்ள அபூர்வ சக்திகளிலொன்று. இவ்விஷயத்தில் மகா மேதாவியான கம்பர்மேற் புகழ்படைத்தவர் இம்பரிற் கிடைக்கவேமாட்டார். மேலும், அவருடைய அலங்கார நடையும் அதியுன்னத அற்புதகதியும் ஆனந்த சாகரத்தில் அனைவரையும் அழுத்தும் அருமை வாய்ந்தன. பூவைக்கண்டார் புனலைக்கண்டார், மரத்தைக் கண்டார் மயிலைக்கண்டார், ஊரைக்கண்டார் உறவைக்கண்டார், மமலைக்கொண்டார் மனதைக்கண்டார் அங்கங்கே நின்று, அவருள்ளொருவிச்சென்று, வாகனந்தூக்கி வேகமாய்ச் செல்வோர் அதிகாரிகள் வீட்டருகில் 'ஆயக்கால்' போட்டு அரைமணிநேரம் காப்பதுபோல், நாழிகைக்கணக்காய் நாட்டியஞ்செய்து நாணயம் விளைத்த நல்லிசைப் புலவர், கதையின் அவசரத்தால், காதம் கடக்க வேண்டியதாயின், ஆட்டக்குதிரை ஓட்டம்பிடிப்பதுபோல் பாட்டுப்பாடி பதின் காதம்செல்வாரே! என்ன விந்தை.

* * * * *

முள்ளும் கல்லும் நாயும் நரியும் புலியும் கரடியும் பற்பல நெருங்கி உற்பாதம் விளைக்கும் காடு ஒன்றைக் கண்டு பிடித்தோம். அதன் பெயரே சமயச்சண்டை யென்பது. அல்லாசாமிப் பண்டிகையில் ஆட்டம் போடுவார் தம்மைத்தாமே அறிவினரென்று அகங்கரிப்பதுபோல், அகச்சமயிகளென்றும் புறச்சமயிகளென்றும், வாதிட்டுவழக்கிட்டு ஊர்ச்சண்டையை விலைக்கு வாங்கியும் வீட்டுச் சண்டையில் ஓட்டாண்டியாகியும் பாழாய்ப்போய் எத்தனைபேர் பரதேசி யாகிறார்களே! பரிதாபம், பரிதாபம்!! சாமானியர்கள் இவ்வண்ணம் ஏமாந்துபோனாலும், கல்வியுயர்ந்து வல்லமையுற்றோ ரனேகர் இழிவான் இவ்விஷயத்தில் பழியுறுகின்றார்கள். எட்டுத்திக்கும் புகழ்படைத்த ஒட்டக்கூத்த ரென்பார், 'சின்னூல் வழியா மறுச்சமயச் சிலுகில் சேராது' என்று கூறினராக, கம்பர்.

"அரனதிக னுலகளந்த அரயதிக
னென்றுரைக்கு மறிவிலார்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற்
புகலரிய பண்பிற் றாமால்
சுரநதியி னயலதுவான் றோய்குடுமிச்
சுடர்த்தொகையை தொழுதோர்க் கெல்லாம்
வரனதிகந் தருந்தகைய வருந்ததியா
நெடுமலையை வணங்கியப்பால்."

என்று மதச்சண்டையை அதப்படுத்த முயன்றதை அறியாதார் யாவரேயுளரா? மேற்கூறிய பாட்டிற்கு அனர்த்தப்பொருள் கூறுவார் அனேகருளர். "அரனதிகன்; அப்படியிருக்க, அரியதிக னென்றுரைக்கும் அறிவிலார்க்குப் பரகதி சென்றடைவரிய பரிசேபோல" என்று தம் அறியாமையைக் காட்டி ஆளாந்தப்படும் அற்பர்களும், "அரன் அதிகன்?" (அதாவது, சிவனா பெரியவன்) அல்ல, அரிதான் அதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்குப் பரகதி சென்றடைவரிய பரிசேபோல்" என்று பச்சைப் பொய்கூறிப் பல்லையிளிக்கும் பாமரர்களும் "அரன் அதிகன்; அரியதிகன்? (அதாவது, விஷ்ணுவா உயர்ந்தவன் என்றுரைக்கு மறிவிலார்க்கு" என்று அஞ்ஞானம் கூறும் அசடர்களும், அனேகர் மகிதலத்தை மிகக்குறைவு படுத்தினார்கள். மலைச்சிகரங்கள் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு கற்பிக்கவியலாது நின்றனவென்று உள்ளுறை பொருளாய் நின்ற உவமேயத்தைக்கொண்டு மேற்காட்டிய பொருள்களின் ஆபாசத்தை அனைவரும் நன்குணரக் கூடும்.

* * * * *



திருவருள்கொண்டு திருவாய்மொழி பாடிய குருபரன், கோதிலாக் குணக்குன்று, நம்மனோரனைவரையும் வாழ்வித்த நவையிலா ஞானத்தன், ஆகாயவீதியில் அச்சுதன் விழாவுக்கு நாதப்பிரம்மமே வேதந்தன்னையோதிவந்தாற்போன்ற காம்பீரப்பொலிவும், மனதையிழுத்து மாயஞ்செய்யும் மஹாவலிவும், சொற்சிறப்பும் பொருட்பெருக்கும், உத்தமக்கொள்கைகளும் உன்னதநிலைகளும், நன்றே விளங்க அன்றே புகன்ற அற்புதப் பெருந்தகை, ஸ்ரீசடகோபன், எம்மாழ்வார் பலருள்ளும் நம்மாழ்வார் நாமே யென்ன இம்மாநிலத்திற் றோன்றிய பெம்மான், ஞானதேசிகன் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழியைக் கற்றார் யாரே காழுருதிருப்பார், உணர்ந்தார் யாரோ ஊர்ச்சண்டைக்கென்று போர்க் கோலங் கொள்வார்! வைணவமதத்திற் றோன்றிய வள்ளலாரேனும், அவர், சமரசம் பேசிய சாந்தமூர்த்தி; அங்குமிங்கும் மதக்கொள்கையை விவரித்தாரேனும், அவர், எங்குமெப்போதும் உண்மையோதியே வன்மை பூண்டவர்; எச்சிற்றேவரென்று இகழ்வுதோன்ற ஒரோ விடங்களில் பராமுகங்காட்டியதாய்க் காணப்படினும், ஆங்காங்கே, அவர், ஆசைமீதூர அணைந்துக்கட்டி அணைந்துக்கட்டி அதிக நேசபாச விஸ்வாசத்தோடும், 'என் முக்கண்ணப்பா' 'என் மலைகள் கூறன்' என்று பற்பலவாறு 'கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோரநின்று' அவாவறச்சூழரியை யயனை யரனை யலற்றி யவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்." நாமமிடுவதே நேமமெனக் கொள்ளாது.

விஷ்ணுவைத் தொழுவதே வைஷ்ணவமென்றும் உண்மை யுணர்வதே உறுதிப்பாடென்றும் அறிந்து, உணர்ந்து, மகிழ்ந்து நடந்துபோதரும் ஞானிகள் யாவரே மோனத்தை விடுத்துப்பயனில் சண்டைக்கென்று பகலெல்லாங்கழிப்பார்? வாழைப்பழத்தை யுரித்துக்கொண்டே வண்ணமாடங்கள் பாடியும் தேங்காயரிந்துக் கொண்டே திவ்யப் பிரபந்தத்தையோதியும் நில்லாது, திருவாய்மொழியைத் திருத்தமா யறிந்தார். யாவரே, சமயச்சண்டையாற் கலகம் விளைப்பார்?

T. பக்தவத்ஸலம். பி. ஏ.

# Songs in praise of Sree Ramaswamigal of Narayanavanam.

## நாராயணவனம் ஸ்ரீராமஸ்வாமிகள் மீது இயற்றிய தோத்திரப் பாக்கள்.

---

வான்விளங்கு வண்ணத்த ராயிடினு
மன்னோர்மே லரசோச்சி யகில மெல்லாம்
வயங்குமொரு தனிக்குடைக்கீ ழாள்கின்ற
வகையெய்தி வாழ்ந்திடினும் வசையார் துச்சை
யூன்விளங்கு முடற்கருவி யுறுதிகொண்டே
யறிவாகு முலகூடே யுற்று நோக்க
வுன்னியுன்னி மெய்தளர்ந்து வுறுசலிப்பும்
மனவெறுப்பு மீதூர்ந்து வருத்தங் கண்டும்
தான்விளங்கும் நிலைவிளங்கும் தகைவிளங்குந்
தன்மமெனுந் தாய்விளங்கும் நாவாய்ப் பாய்போல்
தகும்பக்தி முக்தியெனுங் கரைசேர்க்குந்
தானறிந்துந் தான்மறந்துந் தெவிட்டா நல்ல
தேன்விளங்குந் துறைவிளங்கா திருத்தலடா
தென்றெமக்குன் திருவருட்கண் ணோக்கஞ் செய்வாய்
தெளிவமிர்த மழைக்கருணை பொழிகின்ற
நாரணநல் வனத்துறையு ஞானத் தேவே. (1)

வேதமுத லாகமங்கள் புராணங்கள்
விளம்புநவெல் லாமார்ந்து விளக்கம் வேண்டின்
விதியுகங்க ளீரிரண்டும் சாய்ந்தாலும்
வியன்முடிவு காண்டரிதாம் விண்ணோ ரேனும்
போதநெறி தாம்பெறுவான் புலனறிவே கைக்கொண்டோர்
பொருளிலக்கிற் பொருத்தங் காணார்
புத்தகங்க ளுரைப்பதுவும் பலபடியாம்
புகலதுவே யென்றிருப்பிற் புகல்வே றேதோ
வாதனைசெய் புறவேட வகைகளுமே யென்செய்யும்
வன்மமிலா வாய்மை பூண்டு
மனநிறைவு மருட்பெருக்கு மெக்காலு
மாயாத மெய்க்கருணை மாரி தூற்றும்



சாதனையே சாதனையென் றுளந்தேறச்
சற்குருவே கடைக்கண்ணாற் றானஞ் செய்வாய்
தக்கார்க்குந் தகவிலர்க்கு மொருபடியாய்ப்
பசிபோக்கி யருள்வீக்குந் தன்மத் தேவே. (2)

வேறு (சந்தம்).

ஞானம் யாது நல்ல பக்தி கருமம் யாது நவிலவோ
ஞான தேவ னொருவ னென்று மோனங் கொள்ளல் ஞானமாம்
ஆன பக்தி யன்பு மூட்டு மகமுந் தூய்மை யடையுமால்
ஆதல் பற்றி யைய னோக்கு மாறு மிஃதென் றோரலாம்
தான தன்ம மிதனி னின்று மெழுதல் செய்யுங் கருமமே
தவிர வேறு மானி டர்க்குத் தக்க நிழலு மில்லையால்
ஆன மூன்றி லன்பு பக்தி யதிக மான வமைவினை
லஃத ளித்துக் காத்தல் செய்க வருளின் மிக்க பெரியனே. (3)

வேறு (சந்தம்).

பொய்யெத்தனை வழுவெத்தனை செய்திட்டனை மனமே
புகலும்படி யுலகின்னியல் புகழையுணர்ந் திலையால்
மெய்யெத்தனை சொல்லித்தனை மேவித்தொழ மிளிரும்
மேன்மைப்படி வாய்ந்துற்றில குலகுக்கண மெல்லாம்
ஐயன்றுதி செய்யும்வகை யன்புத்துதி செய்யா
தரவக்கடல் முழுகிப்பெரு மவதிப்படல் சரியோ
துய்யன்னருள் பெற்றிங்கொளிர் தூயன்னுயிர் நேயன்
ஸ்வாமிப்பத மலர்வீழ்ந்திவண் பாவக்கடல் கடவாய். (4)

வேறு.

ஐயாநின் றிருவருள்தா னளித்திடுவா யிலையோ
ஆரமிர்தே யற்புதமே யானந்தக் குருவே
பையாரும் பாம்பணைமேற் பள்ளிகொண்டா னொருவன்
பலதூர மலையேறிப் பதுங்கிநின்றா னொருவன்
கையாருந் தத்துவங்க ளவன்பெருமை கணிக்கக்
கைதேறா தென்றுமனங் கலங்கிநிலை குலைந்த
மையாரு மலையடியின் மகிழ்ந்தெமக்கு மீங்கே
மாதவனே நல்லவர மோதிவினை மாய்ப்பாய். (5)

வேறு.

நவமணியை நவமணியி னுள்ளொளியை
ஞாயிறுதன் பேரொளியை நகைத்துவெயில்கால்

தவமணியைத் தவம்பூத்த முனிமணியைத்
தனிமணியைத் தன்னடைந்தோர் தொடக்க றுத்துப்
பவமணியைப் பவம்போக்குங் கண்மணியி
னுண்மணியைப் பரத்தாமன் றனொரு மணியுஞ்
சிவமணியு மொருமணியாய்ச் சிந்தைசெயுந்
திருமணியைக் குருமணியைச் சிந்தை செய்வாம். (6)

வேறு.

அன்பகிற் பெருமை யாரே யறையலாந் தகைமைத் தாவர்
பொன்மணிப் பொருளை யீட்டிப் புவியெலாம் புகழ் பரப்பி
மின்பெறு கலத்த ரேனு மிகையுறு தொழிவ ராயி
னென்பெறு மென்றுசெப்பி யிலகொளி விளக்கங் காட்டி. (7)

ஏழையே முய்யு மாறுன் றிருவருள் விளக்கங் கூட்டிக்
காழையே கடுத்த நெஞ்சுங் கனிவுறக் கனிந்த பெற்றி
மோழையே சொல்ல வல்லேன் முகமனிங் கொன்று மில்லை
மாழையே மாய்த்த மாட்சி மாதவ மகிப ரேறே (8)

மலர்தலை யுலகின் மன்னு மக்களும் வாய்மை பூண்டு
நிலவவு நிறைந்த நீதி நின்மலன் நியதி கண்டு
அலகிலா வின்பம் துய்க்க வளவின்ல லருடான் தந்தாய்
புலவர்தன் மொழிபோற் பூமி மாந்தருட் கடவுட் போல்வாய். (9)

வேறு.

காரணவ னத்துறையு நாதனடி மீதுமலர்த்
தாரதனைச் சூட்டி மனத் தாரதனை—யோர்பெறவே
பொங்கு புகழ்வாய்ந்த பூவைநகர் பொற்கரத்திற்
றங்கவருள் பெற்றுய்வே ன்றன். (10)

தானே தனக்கொத்தான் றன்பெருமை யாரறிவார்
வான்றோய் சிமய வளர்கிரிசேர்—கான்றன்னி
லெந்தை யிருடி யெழிலிணையை யெந்நாளும்
சிந்திப்பாய் நெஞ்சே தெளிந்து. (11)

☞ T. பக்தவத்ஸலம், பி. ஏ.

---



## IMPORTANT NOTICE.

Subscribers are kindly requested to remit their subscriptions in advance for the third volume of the Yathartha Bhaskaran by M. O. as otherwise the future issues will he sent to them perV.P.P.

### முக்கியமான அறிக்கை.

யதார்த்த பாஸ்கரன் சந்தாதாரர்கள் தங்கள் மூன்றுவது புத்தகத்தின் சந்தாவை கூடிய சீக்கிரம் மணியார்டர் மூலமாக அனுப்பக்கேட்டுக் கொள்ளுகிறோம். தவறும் பட்சத்தில் பின்சஞ்சிகைகள் வாலியுபேயபில் போஸ்ட் மூலமாக அனுப்பப்படும்.

---

## NEWS AND NOTES.
## வர்த்தமானக் குறிப்புகள்.

---

மதுரை டிஸ்டிரிக்டைச் சார்ந்த உசலாம்பட்டி சப்மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் சாமிநாதய்யர் அவர்கள்மேல் கொண்டு வரப்பட்ட பிராஸிகி யூஷன்.

1904௵ ஆகஸ்டு௴ 8௳ யன்று கோபால கிருஷ்ணயர் என்பார் திருட்டாகிய குற்றத்திற்காக இவர் முன்னிலையில் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார். ஆகஸ்டு௴ 10௳ வரைக்கும் குற்றவாளியை ஜெயிலில் வைத்து 10௳ யன்று உத்தபவனிச்சூர் என்னுமிடத்தில் விசாரணைக்குக் கொண்டு வரவேண்டுமென்று தாக்கீது பிறப்பித்து, அதேமாதிரி 10௳ விசாரித்து கோபால கிருஷ்ணய்யரைக் குற்றவாளியாக்கி மேலும் சிறையிலிருக்கும்படி தீர்ப்புண்டாயிற்று. இத்தீர்ப்பை ரத்துசெய்யும்படி இக்குற்றவாளி டெபுயிடி மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் அப்பீல் விசாரணைக்கு மனுவுகொடுத்துக் கொள்ளவே, கோபால கிருஷ்ணய்யர் ஜாமின் மேல் விடுதலையானார். விடுதலையாகவே, கோபால கிருஷ்ணய்யர் தன்னை விசாரணைசெய்த சப்மாஜிஸ்ட்ரேட்டு தன்னை துபாக்கிரமமாய்க் குற்றஞ்சாட்டி ஜெயிலுக்கு அனுப்பியதற்காக சப்மாஜிஸ்ட்ரேட் அவர்கள் பிராசிகியூஷன் செய்யும்படி உத்திரவு கொடுக்கவேண்டுமென்று மதுரை அட்டிஷனல் டிஸ்டிரிக்டு மாஜிஸ்ட்ரேட் எங் துரையவர்களுக்கு

மனுவு செய்துக்கொண்டார். துரையவர்கள் உடனே உசாரம் பட்டிக்குப் போய் விசாரித்து, சிலசாட்சிகள் சொன்னதைக் குறித்துக்கொண்டு, போர்டாருக்குத் தெரிவிக்கவே, போர்டார் பிராசிகியூஷனுக்கு உத்திரவு கொடுத்துவிட்டார்கள். முன்சொன்ன குற்றத்திற்காக பெரிய அசிஸ்டண்டு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் இந்த சப்மாஜிஸ்டிரேட்டை விசாரிக்க வேண்டுமென்றுதாக்கீது உண்டாயிற்று. இந்த உத்தியோகஸ்தர் விசாரித்து இவரைசெஷன் கோர்ட்டில் விசாரிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்தார். செஷன் கோர்ட்டில், மொர்பர்லிதுரையவர்கள் விசாரணை செய்து சப்மாஜிஸ்ட்ரேட்டை குற்றவாளியாக்க நியாயமில்லை யென்றும், இந்த கேசைசெஷனுக்கு அனுப்பினதற்கும் காரணமில்லை யென்றும் கூறினர். ம-௱-௱-ஸ்ரீ சுவாமிநாதய்யர் அனியாயமாய் அவர்மேல்கொண்டு வரப்பட்ட பிராசிகியூஷன் விஷயத்தில் ஜெயமடைந்ததைப் பற்றி நாம் அதிக சந்தோஷப்படுகிறோம்,

## யூனிவர்சிட்டி போர்ஜரி கேஸ்.

சென்ற வருஷம் குண்டூர் மிஷன்கலாசாலையில் படித்துவந்தகோட்டராஜு வெங்கிட்டராயுடு என்பவன் அவ்வருஷ பிரவேச பரீட்சைக்குப் போக தகுதியற்றவனென்று தன் உபாத்தியாயர்களால் தீர்மானிக்கப்பட, அதை அவன் ஒப்புக்கொள்ளாது தானாகப்பரீட்சைக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள நினைத்து, அவன்படித்த கலாசாலைத் தலைவரின் கையொப்பம்போல் பொய்க்கையொப்பஞ் செய்து விண்ணப்ப மனுப்பினான். இது யூனிவார்சிடி ரிஜிஸ்டிராருக்குத் தெரிந்து மாஜிஸ்டரேட்டிடம் பிரியாது செய்ய, அவர் விசாரணைசெய்து அப்பையனுக்கு நாலு மாதம் கடினகாவல் விதித்தார்.

## கடுங்காவலிலிருந்து தப்பிய ஓர் கொடுங்கைதி.

அம்பலகாரச் சாதியைச் சேர்ந்த மகாமுனி என்பவன் கன்னக்களவு செய்ததற்காக நான்கு வருஷம் கடினதண்டனை யடைந்து, திருச்சினாப்பள்ளி சென்றல் ஜெயிலி லடைபட்டிருந்தான். இவன் கையில் ஓர் கத்தி கிடைக்க அதைக்கொண்டு ஓர் இரவு தானடைபட்டிருந்த அறையின் கதவைத்துளைத்து அதின் வழியாக வெளிப்பட்டு, ஜெயில்முத்தத்தில் தான் வேலை செய்துவந்த கொட்டகைக்குப்போய் அதின் முகட்டிலிருந்து ஓர் பதின்மூன்றடி கம்பத்தைக் கிளப்பி, அக்கம்பத்தின் வழியாக ஜெயில் சுவர் ஏறிக்குதித்து ஓடிவிட்டான். இவன் ஊர் திருச்சிக்கடுத்த குளித்



தலை யாகையால் அங்கே போய் காவேரியாற்றின் செடியடர்ந்த படுகைகளில் பகலில் ஒளிந்துகொண்டும், இரவில் ஊருக்குள் பிரவேசித்து கொள்ளையடித்துக் கொண்டும், திரிகிறான். ஒரு இரவில் இவன் மகாதைரியத்துடன் குளித்தலை போலீஸ் ஸ்டேஷனுககுப்போய் அதின் முகட்டின்வழியாய் உட்புகுந்து, வெளியே பாராயிருந்துகொண்டிருக்க உள்ளேயுள்ள ஒரு துப்பாக்கியையும் அனேக தோட்டாக்களையும் எடுத்துக்கொண்டு வந்தவழி போய்விட்டான். இவனைப்பிடிக்க நூறு ரூபாய் இனாமளிப்பதாக விளம்பரம் செய்தும் இவனகப்படவில்லை. போலீஸ் சூப்பிரண்டாருக்கு இரண்டு மூன்று இன்ஸ்பெக்டர்கள், நூறு கான்ஸ்டேபில்கள் படுகைகளை வளைந்துதேடியும் இவனகப்படவில்லை. ஆனால் ஊரில் மாத்திரம் இவனால் களவு தினம் நடந்து கொண்டிருக்கிறது.

## புகைவண்டியாலுண்டாகிய ஓர் அகோரவிபத்து.

சில தினங்களுக்கு முன் அமெரிக்கா கண்டத்தின் ஐககிய மாகாணத்துதெனிசி என்னும் நாட்டில் இரண்டு ஜனம் நிறைந்த புகைவண்டிகள் எதிர் மார்க்கமாய் அதிவேகமாய் ஓடும்போது ஒன்றோடொன்று மோதியது. மோதியவுடன் இரண்டு என்ஜீன்களும் சின்னாபின்னப்பட்டுப்போயின. இரண்டு வண்டியிலுமிருந்த 65-பேர்மரித்தும் 120 பேர்படுகாயப்பட்டும் போயினர். கையிழந்தவரும், கால்வெட்டுண்டவரும், தலைவேறு உடல்வேறாய பிணங்களும், மரக்கட்டைகளால் ஊடுருவப்பட்ட சரீரங்களும் அனந்தம். எப்பக்கத்திலும் பயங்கர காட்சியாகவே யிருந்தது. இவ்விபத்தில் உயிர் பிழைத்த அந்நாட்டு கவர்னரது மனைவியும் மகளும் காயப்பட்டவருக்கு சமயோசித உதவி புரிந்தனரென்பது வியக்கத்தக்க விஷயமே. இதைக் கேள்வியுற்ற ஜனங்களும் அவ்விடத்திற்கு விரைந்தேகி பல உபகாரஞ்செய்தனர். சிலமணி நேரத்தில் 21 மயில் தூரத்திலுள்ள நாகஸ்விலென்னும் நகரத்திலிருந்து ஓர் புகைவண்டியில் வைத்தியர் முதலானோர் வந்து காயப்பட்டவரை வண்டியிலேற்றி வைத்தியசாலைக்கு கொண்டுபோய்ச் சேர்த்தனர்களாம்—T. S.

## THE RESULT OF A PRETENSION.

## வெளி வேஷத்தினாலுண்டான பேருபகாரம்.

ஓர் திருடன் ஓர் நாள் ஒரு குடியானவன் வீட்டின் கூரையின்பேரில் பழுத்திருந்த கொம்மட்டிப் பழத்தை அபகரிக்க எண்ணங்கொண்டு அங்கு இரவில் சென்றனன். அவ்வீட்டினருகாமையிலிருந்த மரத்தி

னோர் கிளையானது கூரையின்பேரில் வளைந்திருப்பதைக் கண்டு அதன் மேலேறிப் பழத்தைப் பறிக்கச் செல்லலும் அம்மரக்கிளை அவனுடைய பளுவைத் தாங்கமாட்டாமல் முறிந்து திருடனைக் கூரையின்பேரில் வீழ்த்தினது. அக்கூரையும் பழமையா யிருந்ததுபற்றி உடனே முறியவே திருடன் பழமுதலியவைகளுடன் வீட்டிற்குள் வீழ்ந்தனன். அங்கு ஓர் அறையில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த குடியானவனும், நோயாளியான அவன் மனைவியும் அடுத்த அறையிலுண்டான சத்தத்தைக் கேட்டுத் துயில்நீத்து ஓர் விளக்கேற்றிக்கொண்டு வந்து திடீரென்றோர் சத்தம் உண்டானதற்குக் காரணம் யாதென்று பார்க்கவந்தார்கள். அங்குச் சர்வாங்கமும் பஸ்மதூளனஞ் செய்து பஞ்சாக்ஷரத்தியானத்துடன் சமாதியிலிருப்பவரைப்போல் நடித்திருந்த ஓர் புருஷனைக் கண்டார்கள். திருடனானவன் அவ்வறைக்குள் விழுந்தவுடன் “பல்நாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுக்கொள்வான்” என்னும் உலகவழக்கிற் கிணங்க இன்று அகப்பட்டுக் கொண்டோமே யென்னும் ஏக்கங்கொண்டு இவ்வாபத்தினின்றும தப்பிப்போவதற்கான மார்க்கம் யாதென்று ஊகித்தலும், ஓர் யோசனை பிறந்து அருகாமையிலிருந்த அடுப்பின் சாம்பலை யெடுத்து தேகமாதியந்தமும் பூசிக்கொண்டு தியானபரனாக விருப்பவன்போலே கண்ணை மூடிக்கொண்டிருந்தனன். இவ்வேடத்தைக் கண்டு குடியானவனும் அவன் மனைவியும், ஓர் தேவபுருஷன் தங்களுக்கு அருள்புரிய எண்ணங்கொண்டு வந்ததாகக் கருதி அவனடியைப் பணிந்து அஞ்சலியஸ்த்தராகித் தங்களுக்கு நெடுங்காலமாகவுள்ள பிணி இன்றுடன் நீங்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். திருடன் தனக்கு நேர்ந்த அதிர்ஷ்டானுகூலத்தை நன்றாக உணர்ந்தவனாகிக் கண்ணை விழித்துப் பார்த்து “இஃது என்னுடைய உலகமா நீங்கள் என் பக்தர்களா” என்று ஆசங்கிக்கவே, பேதைமையுடைய குடியானவனும் அவன் மனைவியும் இவர் சிவனேயாமெனக் கருதி மேன்மேலும் அக்கபட சந்நியாசியை ஸ்தோத்திரஞ்செய்து தங்கள் குறையை முடிக்குமாறு வேண்டினர். வேண்டவே, அன்னோனும் இன்றோடே உங்கள் கவலைகள் யாவும் ஒழிந்துபோமென்று அவர்களுக்கு விபூதிப் பிரசாதமளித்து குடியானவன் பன்முறை வேண்டிக்கொண்டபடி கொம்மட்டிப்பழத்தை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு விரைவாயகன்றனன். தப்பிப் பிழைத்தோமென்று திருடனானவன் ஓடோடியும் வெகுதூரஞ்சென்று தனக்குவந்த ஆபத்து நீங்கினதென்று தனியாக ஓரிடத்திலுட்கார்ந்துகொண்டு தனக்கு நேர்ந்த ஆபத்தையும் அதினின்றும் விடுவித்த ஏதுவையும் சீர் தூக்கிப்பார்த்தான். ஓர் நிமிஷம் பூண்ட



கபடவேஷமானது தனக்கடுத்த ஆபத்தைத் தவிர்த்ததென்றால் தான் வீழ்நாளாகக் கழித்த வாழ்நாளையெல்லாம் நந்நாளாக்கி மெய்ப்பக்தி பூண்டிருந்தால் அமோகபலன் கிடைத்திருக்குமல்லவா ; அவ்வாறு செய்யாது தன் வாழ்நாளை அவமாக்கியதற்கு மிக்க துயரப்பட்டு இனியேனும் மெய்யடியார்களைச் சேவித்து சிவன்மாட்டு மெய்யன்பு செலுத்துவதே தகுதியாமென்று விரக்தி மேற்கொண்டவனாய், உலகவாழ்க்கையை நீத்து பரமாசிரியரைத்தேடிச் சென்றனன்.

இக்கதையால் நாம் அறியும் விஷயம் யாதெனின், கருவி கணங்களோய ஓர் நிமிஷமேனும் நிலைத்தால் அந்நிமிஷமே சன்மங்களாக நம்மையடுத்துவரும் கன்மங்கள் யாவும் யொழிந்துபோ மென்பதேயாம். “காகமானவை கோடி கூடிநின்றாலு மொரு கல்லின்முன் னெதிர் நிற்குமோ, கன்மமானவை கோடி முன்னேசெய் தாலுநின் கருணைப்பிரவாக அருளைத் தாகமாய் நாடினரை வாதிக்கவல்லவோ,” “கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணுநல்லோர் சொல்லுணரின் ஞானம் வந்துதோன்றும்” என்று பெரியாரும் பணித்திருக்கின்றனர். நண்பர்காள்! இவ்வுலகவாழ்க்கையானது மேன்மேலும் துக்கத்தை விளைவிக்க ஏதுவாயிருக்கிறதாகக் காண்கின்றோமல்லால் கிஞ்சிற்றேனும் நன்மையைப் பயப்பதற்கு ஏதுவாயிருப்பதாகக் காண்கின்றோமில்லை. அதனால் இவ்வுலகவாழ்க்கையைத் துச்சபுத்திசெய்து வெறுத்துத்துறப்பதே நலமாம். ஈண்டுத் துறவென்பது அகத்துறவு, புறத்துறவன்றாம். “அந்தக்கரணம் அடங்கத் துறப்பதுவே எந்தத்துறவினு நன்று” என்று மேலோரருளியதும் இங்கு அறியத்தக்கது. ஆதலால் “உடம்பின்பயனாவதெல்லாம் உடம்பினில் உத்தமனைக்காண்” என்று நம்மூதாட்டி கூறியபடி இத்தேகம் நீங்கு முன்னரே இச்சன்ம மெடுத்ததின் பயனை யடைவதே நலனாம். அப்படியன்றி அவமாகிய இவ்வுலக வாழ்க்கையிலுழன்று வீண்காலங் கழித்துவருவோமாயின், இவ்வரிய பிறவியெடுத்ததன் பயனை யடைவது கூடாதாகும். கூடாதாகவே, பிறப்பிறப்பாகிய சுழித்தலைப்பட்டு அலைவோ மென்பதற்கு யாதும் ஐயமின்றே. இவ்வாறான கதியை யடைவது மாக்கள தியல்பன்றி மக்கள தியல்பன்றே. “இக்கணத்திருந்த இம்மெய்யென்ற பொய்க்கூரை இனிவரு கணப்போதிருக்குமோ மரிக்குமோ” என்று வள்ளலார் அருளியபடி இத்தேகம் வீழ்வதற்கு முன் நாம் மேலான புருஷார்த்தத்தை யடைய முயல்வதே தகுதியாம். “எல்லார்க்குங் காலன் துறவீவன்=ஈயாமுன்=நல்லோர் துறப்பர்” என்றமேலோர் வாக்கியத்தையும் சதா சிந்தனை செய்து நற்கதியடைய முயல்வாராக.

**M. S. Mudaliar.**

THE REGISTRAR OF
REGISTERED
13 DEC 1904
MADRAS

# Yathartha Bhaskaran,

FOR

## God, Humanity and The Motherland.

Vol. III.] NOVEMBER, 1904. [No. 5.

## ESSENTIALS OF BUDDHISM.

### XIV.

### CAUSAL NEXUS.

### PRATITYA SAMUTPADA.

"*Karmajam lokavaichitryam*". All things are born of activities. Everything is in a state of continual transfomation. "*Na cha niro dhosti na cha bhavosti sarvada; ajatam aniruddham cha tasmad sarvam idam jagat*". There is neither creation nor destruction; there is neither beginning nor end. Yet nothing happens without cause and reason. "*Vicharena nasti kim chid ahetutah.*"

Every change is determined by a number of circumstances. The most striking of these circumstances is generally called its cause and the change itself is said to be the effect of that cause. Strictly speaking the cause (*pratyaya*) of any change is the totality of all the circumstances required for its occurrence. That in the cause which makes the effect possible is spoken of as the reason (*hetu*) of the change. When a seed changes into a plant, that in the seed which makes it become a plant of a particular kind is the reason of the change, while the totality of conditions, such as the soil, water, light, air, space, needed for its germination and growth, constitutes the cause. Similarly sentiency, the germ of consciousness (*vijnana bijam*), is the reason for the development of individuality (*namarupa*), while the union of parents, the womb of the mother, the potentialities derived from parents, vegetative and

animal activities, and the environment constitute the causes that produce a particular individuality.

No change occurs by itself. Every change stands in the relation of cause to some other change, and in the relation of an effect to a third change. All changes in the world depend more or less upon one another. This causal nexus, which is found every where in experience, is called in the Dharma by the technical name of *pratitya samutpada**. A correct understanding of this causal nexus, of the conditioned nature of all existence, which has neither beginning nor end, is all important in Budhism. *Pratitya samutpadam pasyanti te dharmam pasyanti*; *yo dharmam pasyati sa buddham pasyati.* He who has understood the chain of causation has understood the inner meaning of the Dharma, and he that has grasped the Dharma has perceived the essence of Buddhahood.

If every change has a cause, and that cause again a cause, is there then no limit to the series, is there no ultimate unchangeable or first cause? In experience we find no absolute beginning, we come across no change instituting a series of changes, which has not itself been preceded by some other change. The question of cause never even arises except where there is change, and the cause demanded is always another change. Hence it is meaningless to speak of a first cause. Science knows nothing of first causes. There is no branch of scientific investigation from which they can be inferred. Wherever we find their existence asserted, we find that we have reached a permanent or temporary limit to knowledge, or that we are inferring something outside the limits of sense experience, where knowledge and inference are meaningless. "A first cause with which as a creative act the series of changes should have begun originally, would be an uncaused change. The necessity of conceiving every change as effect which has its cause in a preceding change, makes such an uncaused change absolutely unthinkable."

Is there then no Isvara or God? If the world had been made by Isvara, there should be no change and destruction, there should be no such thing as sorrow or calamity, as right or wrong, for all things, pure and impure, must come from him. If sorrow and joy, love and hate, which spring up in all conscious beings, be the work of Isvara, he himself must be capable of sorrow and joy, love and hate, and if he has these,

* There are two applications of "pratitya samutpada: bahya" (objective) and "adhyatmika" (subjective). Each again is subdivided into two: "hetopanibandana" (limited by reasons) and "pratyaopanibandana" (limited by causes).



how can he be said to be perfect? If Isvara be the maker, and if all beings have to submit silently to their maker's power, what would be the utility of practising virtue? The doing of right or wrong would be the same, as all deeds are his making and must be the same with their maker. But if sorrow and suffering are attributed to another cause, then there would be something of which Isvara is not the cause Why, then, should not all that exists be uncaused too? Again, if Isvara be the maker, he acts with or without a purpose. If he acts with a purpose, he cannot be said to be all perfect, for a purpose necessarily implies the satisfaction of a want. If he acts without a purpose, he must be like the lunatic or the suckling babe. Besides, if Isvara be the maker, why should not people reverently submit to him, why should they offer supplications to him when sorely pressed by necessity? And why should they adore more than one Isvara?

Is not the world in which we live an orderly world where everything is governed by law? Do not laws imply a lawgiver? All the order which exists in the world arises from the simple fact that, when there are no disturbing causes, things remain the same. The observed grouping of things and sequence of events we speak of as the order of the world, which is the same as saying that the world is as it is and no more. Every law of nature merely describes the conditions on which a particular change is dependent. No natural law is the cause of the order in nature. A body falls to the ground not in consequence of the law of gravitation, but the law of gravitation is the precise statement of what happens when a body is left unsupported. A natural law does not command that something shall take place, but it merely states how something happens. When a law has been found to be true in all known cases, we naturally expect that it would apply to cases that might hereafter come to our knowledge. The greater the number of cases in which a law has been observed to hold good, the greater is the probability that it is universally true. If the sun has risen daily without fail during the last 5000 years (= 1826213 days), the odds in favour of its rising to-morrow are 1826214 to 1, and this amounts to saying that the rising of the sun to-morrow is practically certain. It is only in this sense that we speak of the uniformity of nature. We can only say that the laws of nature are practically universal but not theoretically so. This practical certainty is all that we are capable of obtaining, and is enough to serve as a guide in life. Theoretical certainty would imply perfect and infinite knowledge, but this evidently is beyond man's capacities. All attempts at extrapolation far beyond the region of experience, whether it be in space or in time,

must be affected with the greatest insecurity, for the probability of the results is *nil*.

Because the facts of this world can be summarily described by laws, because the world is such as we know it to be, does it follow that the world has been designed by Isvara? Because one finds a wound on his body, does it follow that it had been inflicted by an invisible ghost with an invisible sword? All that we could infer from the condition of the world is that there must be a cause. But the necessity of thought which compels us to affirm that the world had a cause compels us to postulate a cause of that cause, and so on *ad infinitum*, a first cause being, as we have already seen, even unthinkable. Further this so-called teleological or design argument involves a vicious circle. To explain certain observed relations between the parts of organisms, the so-called design, the idea of God is first introduced, and such natural design is then again employed to prove the existence of God, a procedure which surely is not consistent. Moreover, the concept of end or purpose is, as Kant has pointed out, not a principle of the knowledge of nature, but a mode in which the human mind judges of certain organic forms. Man thinks the organising character of nature as analogous to causality aiming at ends, but this cannot be presumed to offer an explanation of it. So the end is not the principle according to which these organic forms have been created, but merely a point of view which arises from our reflection about them. Properly speaking teleology belongs "only to the description of nature; it gives us no valid conclusion as to the origin and inner possibility of organic forms." If one should ask, as Coleridge did, whether material bodies could apply geometrical calculations to themselves, if material bodies could be the joint artists of their own combinations, we can only answer: under such and such conditions they do behave in such and such a way. Beyond this we know nothing. Further we may call to mind the words of the sceptical Philo: "Instead of admiring the order of natural beings, may it not happen that if we could penetrate into the intimate nature of bodies, we should clearly see why it was absolutely impossible they could ever admit of any other disposition."

If the heavens above do not declare the glory of God, does not the moral law within derive its sanction from the belief that Isvâra has ordained it, and that he will distribute to men, according to their deeds, rewards and punishments in a life beyond the grave? No doubt the observance of the laws of morality is of supreme importance to mankind, but it has nothing to do either with a belief in a future life or in Isvara.



He who thinks that the world would be a worthless place without immortality is on the same level as the child who thinks that "grown up" life to be worth having, must be a life of continual play and no work. Nor can he be called truly moral who does not think it worth his while to be virtuous, unless he can look forward to remuneration hereafter for not having lived like a beast.

As for the belief in God, what connection can it have with morality? Morality has sprung from those human relationships in which the individual finds himself compelled to live and act. It has its roots in the individual's needs, both physical and mental, which other human beings can satisfy and in the sympathies which answer to those needs. That man should be truthful, just, merciful, loving and kind to his neighbours, that he should practice virtue and avoid vice, are injunctions which obtain their validity, not because there is Isvara, but because human society would become impossible if they were set at nought. On the other hand the observance of these laws produces the highest, most durable and most widely spread forms of human bliss. Only a monster or a savage will dare to say that, if there be no Isvara, it is right or permissible for any man, apart from the terrors of civil law, to commit murder, theft and adultery as freely as he pleases. On the other hand the moral character of Isvara varies with the ethical standards of his worshippers. As man advances to higher stages of morality his earlier conceptions of the moral character of Isvara no longer satisfy him and are accordingly criticised and reconstructed to meet the demands of his new ideals. The history of religious thought proves this beyond doubt. Hence instead of saying that Isvara is the creator, we ought to say that man has created his idea of Isvara, including its moral elements. As Xenophanes has said, if lions could have pictured a god, they would have pictured him in the form of a lion; the horses like a horse; the oxen like an ox. "An honest god is the noblest work of man."

How can we deny the existence of God, when most people who have existed heretofore have believed in a god of some sort? When we examine this argument *ex consensu gentium*, we easily see its hollowness. Granting that God's existence is a matter of general belief, does it establish any probability that God exists? It cannot, for many things, now admitted to be errors, have in the past been matters of general belief. Such, for example, is the belief that the sun went round the earth. Ignorance of science and fallacious reasoning have in the past been the main props of the belief in God. With the growth of scientific knowledge

and the recognition of the fallacies underlying natural theology the belief in God is becoming less general. Again, though there might be a wide-spread belief in God, God does not mean the same thing for all. Just consider the phases through which the idea of god has passed in the development of such a small people as the Jews. The God of Samuel orders the slaughter of infants, but the tender mercies of the God of the Psalmist are over all his works. The God of the Patriarchs is always repenting, while the God of the Apostles is the same yesterday, to-day and for ever without any variablenes or shadow of turning. The God of the Old Testament walks in the garden in the cool of the day, but the God of the New Testament cannot be seen by man. The God of Leviticus is punctilious about the sacrificial furniture and utensils, but the God of the Acts cannot dwell in temples. The God of Exodus is merciful only to those who love him, whereas the God of Jesus is kind unto the unthankful and the evil. Not only has the idea of God been different at different times with one and the same people, but it has never been the same for any two persons. No wonder that Wesley told Whitfield: "Your god is my devil." Temperament, training, surroundings are determinative factors in an individual's idea of God. At best the argument from general belief can only prove that in worshipping God a man only yearns towards his utmost possible conception as regards the unknown. This is well illustrated by the fact that the most ignorant of mankind have the most concrete idea of God, who is to them one like themselves, with immensely magnified powers, whereas the more cultured a man is and the more facts he knows, the less definite is his idea of God. While the savage sees his gods in stocks and stones, the philosopher considers a god comprehended as no god.

The so-called historical proofs for the existence of God are from their very nature fallacious. What they attempt to establish is the existence of miracles. If by a miracle is meant an event which had no natural cause, history cannot accept such events. For all historical evidence rests on inferences from effect to cause, and we can infer from effect to cause only on the assumption that we can find the complete causes of events in the course of nature. If miracles were possible, we should never be able to say that a particular thing was the cause of any other. Hence no historical proof can by any possibility show that an event, which happened, was in reality a miracle. But if by miracle is meant only a great and wonderful work, then a man's abilityto perform astonishing feats does not prove that he knows the truth or tells it. Apart from miracles historical proofs can only show that somebody said something



but they cannot establish the truth of his statements, which has to be tested on quite other grounds. Hence neither history nor science can apodeictically establish the existence of God. As Professor James says in his *Varieties of Religious Experience*, all arguments for God but follow "the combined suggestions of the facts and of our feeling. They prove nothing rigorously. They only corroborate our pre-existent partialities. . . . If you have a god already whom you believe in, these arguments confirm you. If you are atheistic, they fail to set you right." Similarly says Kant: "I cannot, indeed, agree with the opinion to which some excellent and thoughtful men, even while fully conscious of the weakness of all the arguments hitherto relied on, have often given expression, that we may hope some day to discover demonstrative proof of the two cardinal principles of pure reason (?) that there is a god and a future life; on the contrary, I am satisfied that nothing of the kind will ever be attained."

If the world has not been created by Isvara, may not all existence be a manifestation of the Absolute, the Unconditioned, the Unknowable behind all appearances? If by the Absolute is meant something out of relation to all known things, its existence cannot be established by any reasoning. How can we know that any thing unrelated to other things exists at all? The whole universe, as we know it, is a system of relations; we know nothing that is, or can be, unrelated. How can that which depends on nothing and is related to nothing produce things which are related to one another and depend for their existence on one another? Again, the Absolute is either one or many. If it be only one, how can it be the cause of the different things which originate, as we know, from different causes? If there be as many different absolutes as there are things, how can the latter be related to one another? If the Absolute pervades all things and fills all space, then it cannot also make them, for there is nothing to make. Further, if the Absolute is devoid of all qualities (*nirguna*), all things arising from it ought likewise to be devoid of qualities. But in reality all things in the world are circumscribed throughout by qualities. Hence the Absolute cannot be the cause. If the Absolute is considered to be different from the qualities, how does it continually create the things possessing such qualities and manifest itself in them? Again, if the Absolute be unchangeable, all things should be unchangeable too, for the effect cannot differ in nature from the cause. But all things in the world undergo change and decay. How then can the Absolute be unchangeable? Moreover, if the Absolute which pervades all is the cause of everything, why should we seek liberation? We

ourselves possess this Absolute and must patiently endure every suffering and sorrow, as the Absolute will always be creating all kinds of evil.

The Absolute owes its origin to the erroneous assumption that every concept has a distinct counterpart in reality, and that the higher concepts exist prior to the lower concepts, and contain the latter by implication in them. A simple reference to the process of conception reveals the absurdity of this assumption. In our experience there is nothing more original than sensation. What we speak of as reality is connected with sensation. We know that sensations arise, but we can form no idea of how they arise, as every idea has sensations for its content and its presupposition. A primary datum of sensation is the consciousness of difference. Without this no act of sensation would even be possible. The recognition of identity amid difference is the basis of all discursive or ratiocinative thought. While we perceive objects as different, we conceive them as identical by directing our attention to their points of agreement. Thus objects are classified into groups, those attributes which belong to the objects in common serving as the basis of classification. When the number of objects to be classified is large, and some of them have more attributes in common than others, they are arranged in a series of groups. First all those objects which have the greatest number of attributes in common, are grouped so as to form what is called a species; the species are then collected and distributed into a higher group or genus having a small number of common attributes, and so forth. The totality of attributes pertaining to a class is termed a *concept*. Thus out of complexes of sensations which constitute reality, we build up in thought our concepts. By the omission or rejection of the differentiating attributes and by ideally conjoining the common characters, we form the higher or more extensive concepts, from the lower, or less extensive ones. There is nothing in this process of abstraction from which it can be inferred that the rejected attributes are contained or implied in those that are retained and combined to form the higher concepts. It is this error of regarding the higher concepts as giving birth to the lower concepts, coupled with the fancy that the highest concepts, such as existence, being, substance, matter, energy, consciousness, which include the attributes common to all things, form the invariable substrata of the variable characters by which things are distinguished from one another; that has been the prolific mother of metaphysical speculation concernig the unknown. For subjective reasons man is inclined to overestimate the value of the unknown and prefer it to the known. His practical dissatisfaction with reality, that is to



say, with the senseworld, has inspired him to invent a metaphysical supra-sensible reality. Out of what is abstracted from sense experience, out of what is really less than the deliverance of the senses, the metaphysician constructs a transcendent existence. "For," as Kant says, "when the explanation of natural phenomena happens to be difficult, we have constantly at hand a transcendental ground of explanation which lifts us above the necessity of investigating Nature." And feeling himself unable to clutch his fanciful creation, the metaphysician employs fantastic means to realise his vain hopes.

In different ages and climes different methods have been employed to get into touch with the transcendental or supernatural. These methods may be roughly grouped into three principal classes. The first class comprises all those cases in which some supernatural being, whether it be God, his messenger, or some angel or demon, appears before the favoured person, and reveals directly, by visible signs or articulate sounds, what he was elected to reveal. In the second are included those cases in which an individual is mysteriously possessed and overpowered by some supernatural agent, who makes revelations through the obsessed individual. The chief feature of the third class is the condition of trance or ecstacy, in which the subject, withdrawn from things of sense, enters into direct connection with God, or the Absolute, or other spiritual agencies, and discerns the transcendental truths of a world which is inaccessible to the ordinary means of apprehension by sense and understanding. For the cultured man of modern civilized countries the first two methods appear too crude for acceptance. But the third, the method of ecstatic intuition, still finds favour with many, and in recent times attempts have even been made to prop it up by some new psychological discoveries.

What is this ecstatic intuition? It is the abstraction of the mind from the body in order to enter into direct communion with God, overcoming the ordinary limitations of individuality, and become one with the Brahman or Absolute. The mode of operation is generally as follows: By prolonged and intense concentration of thought into one channel, the concentration being often aided by fixing the gaze on a particular object, the suitably disposed mind is eventually thrown into a state in which sense and reason are suspended, individual consciousness is lost in a tansport, which is felt as an absorption into the infinite, and the enraptured subject learns by immediate intuition ineffable truths which could never have been found by the slow steps of discursive reason. Like the

drunken consciousness and other forms of the so-called mystic consciousness, ecstatic intuition also possesses the four characteristics of ineffability, transient duration, a sense of passivity and a transcendent insight. But between this method and the first two methods there is no essential fundamental difference. In both cases certain extraordinary conditions of the organism, which cannot always be distinguished from morbid states, are the special occasions and conduits of a stream of influx from the transcendental world into man. "Whatever its inner essence, the spiritual ecstacy in which a person is carried *out of himself* by divine action has all the outward and visible characters of the ecstacy in which he is *beside himself* through morbid action." If a naturalistic hypothesis is enough to explain the latter, why should we have recourse to a transcendental hypothesis to account for the former? Why should the latter be regarded as a lower manifestation of the *subliminal self*, and therefore considered as falling within the resources of the personal subject, while the former is supposed to be due to the entrance of higher spiritual agencies into this subconscious region? The existence of a subliminal process, that is, of an organised system of conditions formed in and through bygone conscious experience, which, though not themselves present to consciousness, determine the onward flow of thought in every moment of its course, need not be doubted. It presupposes no other source of material for psychic evolution than earthly experience and no forms or laws of mental process other than those recognized by ordinary psychology. It does not in the least imply "a subliminal self" which exists independently of psychical phenomena and serves as the medium of communication with departed spirits. Granting that telepathy, clairvoyance, and so forth really occur, it does not follow that the mental life in each one of us can be split into two primarily distinct and discontinuous streams of personal consciousness, one mainly connected with an earthly and the other with an unearthly environment.

It is claimed that the mystical states of consciousness possess "the right to be absolutely authoritative over the individuals to whom they come," and that as such they "break down the authority of the rationalistic consciousness" based solely upon the understanding of the senses, and show it to be only one kind of consciousness, opening out the possibility of other orders of truth. No one will deny the absolute authority over the subject of what is merely given, namely, visions, voices, entrancing feelings, and volitional attitudes. Nor need we contradict the mystic when he speaks of elation, of freedom, of illumination, of union, or of the increased moral courage and vigour resulting from the so-called higher mystical states. On their merely subjective side these experiences of the mystic are invulnerable and absolute, and as such they are not amenable to any criticism. But considered from the point of view of causal relations the matter becomes different. When the ecstatic's feelings are said to be due to God's descent into him, or to imply the existence of a world of spiritual beings, we are going beyond what is merely presented into the field of rationalistic elaboration. We are no longer in the region of the mystic consciousness, but have trespassed into the domain of rational consciousness, and therefore become amenable to its criticism. The experiences of all mystics are inevitably vitiated by their subjective character. No one can feel sure, not even the participant himself, that the transcendental or supernatural element in it is objective reality and not subjective illusion. Nor can the mystic demand from others an absolute and unwavering faith in the intuition of ecstatic feeling." The multiplication of witnesses, even when they agree, can add nothing whatever to the strength of the evidence so long as they all hang to the same weak link; a chain however, much lengthened by a multitude of links, is not stronger than the weakest link, and the weak or wanting link in the present case is the proof of the chain's attachment to the supernatural. If, on the one hand, the reality of the connection be in the nature of the case unprovable, as it certainly is, a great deal is done, on the other hand, in question or disproof of it, if it be shown that the extraordinary experience which is deemed supernatural does not really lie outside the natural laws of psychical activity, but is entirely explicable in accordance with them. In that case the assumption of supernatural intervention is entirely superfluous and gratuitous; it is the invocation of an unknown cause to make a mysterious show of doing that which is known as a cause ready at hand to do simply." *



In all mystic states there is a withdrawal of the individual entirely as a conscious, and to a large extent, as an active being, from his external life of relation. His consciousness is absorbed in a purely internal strain of activity, which is comparable to nothing in ordinary experience, and is therefore not capable of being recalled to memory when he has returned to his life of relation. No wonder, then, that he regards as supernatural what appears so much outside the range of normal experience and beyond the compass of thought and speech. No wonder, too, that its rapture seems to him a foretaste of that final beatitude which consists in the ab-

* Maudsley's "Natural Causes and Supernatural Seemings."

sorption of self in the Absolute. But what can be the logical issue of this? In plain language the so called consciousness (*sakshatkara, samyagdarsana*) appertaining to the supreme goal of the mystic can be nothing else than absolute unconsciousness.

Neither in the worship of Isvara, the deified embodiment of egoism, nor in the convulsive straining after an absorption into the Absolute, nor in vain speculations of profitless subtleties about the origin of things can the means be found which will lead to enlightenment and perfection. Only by close and faithful converse with nature and human nature can one perceive the noble eight fold path, the solid basis of the Blessed One's fruitful *cat dharma* which leads onward to the blissful temple of narvani,

A temple neither Pagod, nor Mosque, nor Church,
But loftier, simpler, always opendoored,
To every breath from heaven, where Truth and Peace
And Love and Justice dwell for ever and ever.

P. LAKSHMINARASU

---

## The Shepherd and the Philosopher,

BY

(JOHN GAY.)

Remote from cities lived a swain,
Unvex'd with all the cares of gain;
His head was silver'd o'er with age,
And long experience made him sage;
In summer's heat and winter's cold,
He fed his flock and penn'd the fold;
His hours in cheerful labour flew,
Nor envy nor ambition knew:
His wisdom and his honest fame
Through all the country raised his name.



## இடையனும் கலைஞனும்.

(ஜான்கே என்னும் ஆங்கிலகவி இயற்றிய
முகவுரை மொழிபெயர்ப்பு.)

ஊதியச் சிந்தனை ஏதும் இல்லாமல்
நகரிகட் கப்பால் தகர்பல மேய்க்கும்
இடையன் ஒருவன் இருந்தனன். தலைஎலாம்
வெள்ளிய நரையுண்ட விருத்தாப் பியனவன்.
அநுபவ முதிர்ச்சியால் அறிஞனாயினன்.
கோடைகால வேடைப் பொழுதிலும்
கார் காலத்துக் கடுங்குளிரதனிலும்
ஆடுகள் தமைமேய்த் தவன்கிடைமறிப்பன்.
களிப்புறுதொழிலிற் கழித்தனன் காலம்.
அழுக்காறதிஅவா அவனேதும் அறியான்.
புந்தியும் அவன்றன் புரையிலாப் புகழும்
பாரினில் எங்கும் பரப்பின அவன் பெயர்.

A deep philosopher (whose rules
Of moral life were drawn from Schools)
The Shepherd's homely cottage Sought,
And thus explored his reach of thought:
"Whence is thy learning? Hath thy toil
O'er books consumed the midnight oil?
Hast thou old Greece and Rome Survey'd,
And the vast sense of Plato weigh'd?
Hath Socretes thy soul refined,
And hast thou fathom'd Tully's mind?
Or, like the wise Ulysses thrown,
By various fates, on realms unknown,
Hast thou through many cities stray'd,
Their customs, laws, and manners weigh'd?"

பள்ளியினின்றே பல் வகைத்தாய
நீதிசாஸ்திரமுறை நிரம்பக் கற்ற
வித்தகன் ஒருவன், இத்தகை இடையனின்

புன்குடில்புக்குப் பின்வரும் விதமாய்
அவன்றன் அறிவை அளவிடலாயினன்.
“ இத்துணைக் கல்வியும் யாங்குப் பெற்றனை ?
எண்ணெய்ச் செலவில் எண்ணரும் நூல்கள்
நடுநிசியினும்நீ நன்றுகற்றனையோ ?
பண்டைக் கிரீஸ் ரோம் பார்த்துநீ பின்னும்
பிளேடோ பெருமதிபேணி ஆய்ந்தனையோ ?
மற்று நின்றன் மனக்களிம் பகற்றியோன்
சாக்கிரட்டீஸோ ? தல்லி தன்னுடை
நுட்பக் கருத்தெலாம் நுழைந்துகண்டனையோ ?
யூகமுள்ள யூலிஸிஸ் போன்று
சிறிதுமுன்பறியாச் சீமைகள்தோறும்
விதிமோசத்தால் விடுக்கப்பெற்று
மார்க்கம் ஓரீஇப்பல மாநகர் போந்து
நாணுமாக்கள் நடை, உடை, பாவனை,
விதி, அறிந்தனையோ விளம்புதி ”

The Shepherd modestly replied,—
“ I never the paths of learning tried;
Nor have I roam'd in foreign parts
To read mankind, their laws and arts;
For man is practised in disguise,
He cheats the most discerning eyes:
Who by that search shall wiser grow,
When we **ourselves** can never know?
The little knowledge I have gain'd,
Was all from simple Nature drain'd;
Hence my life's maxims took their rise,
Hence grew my settled hate to vice.

என்ன, விநயத்துடனே விளம்பினன் இடையன்.
,‘ எழுத்துவாசனையே எனக்கிலை சிறிதும்.
மானிடர் இயல்பும் மற்றவர் நியமமும்
வித்தையும் அறியயான் வேற்றிடம் செலஇலை.
நுட்பம் ஆய்குநர்தம் கட்புலன்களையும்
மாரீசம் பயில் மானிடன் ஏய்ப்பன்.
நம்மை நாமே நன் கறியோமோ



ஆயின், பிறர்குணம் ஆராய்வதனால்
அறிவில் முதிர்ந்தோர் ஆகுவர் எவரே ?
அற்ப சொற்பமாய் என்அறிவும்
சிருட்டியினின்றே திரட்டியவைதாம்.
ஓதிய ஈதினின்றே உதித்த என்
மூவா வாழ்வின் முறைமையும் விதியும்
தீச்செயல்களை யான் தீர வெறுத்ததும்
இன்னதினின்றே என்பதும் அறிக:

“ The daily labours of the bee
Awake my soul to industry.
Who can observe the careful ant
And not provide for future want ?
My dog (the trustiest of his kind)
With gratitude inflames my mind:
I mark his true, his faithful way,
And in my service copy Tray.
In constancy and nuptial love,
I learn my duty from the dove.
The hen, who from the chilly air,
With pious wing, protects her care,
And every fowl that flies at large
Instructs me in a parent's charge. ;”

“ தேனீ தன்னின் தினசரி உழைப்பினை
உலையா முயற்சி உளனுக்கியதால்
எண்ணித் துணியும் எறும்பினைக்கண்டும்
பின்னை வேண்டுவ இன்னந்தேடா
திருக்க யாரால் இயலும் தன்னினம்
தனில் மிக நம்பத் தகும் என் நாயே
நன்றி என்னும் நற் சுடரினை என்
உள்ளந் தன்னில் ஒளிரச் செய்தது
திரேயின் பக்தியும் சிரத்தையும்பார்த்து
விசுவாசத்துடன் வேலையைச்செய்வேன்.
கபோதத் திருந்து கடிமணக் காதலும்
பத்தினி விரதமும் பண்புறக் கற்றேன்
குளிர்காற்றடிமாவண்ணம் குஞ்சினை

அன்பாதரவுடன் அணைத்துத் தன்னுடை
செட்டையிற் காக்கும் பெட்டைக் கோழியும்
உயரப்பறக்கும் ஒவ்வொரு பறவையும்
பெற்றோர் கடன் எனைப் பேணச் செய்தன."

" From Nature too, I take my rule,
To shun contempt and redicule.
I never, with important air,
In conversation overbear.
Can gave and formal pass for wise,
When men the solemn owl despise?
My tongue within my lips I rein,
For who talks much, must talk in vain.
We from the wordy torrent fly;
Who listens to the chatt'ring pye ?
Nor would I, with felonious sleight,
By Stealth invade my neighbour's right.
Rapacious animals we hate:
Kites, hawks, and wolves, deserve their fate.
Do not we just abhorrence find
Against the toad and serpent kind?
But Envy, Calumny, and Spite,
Bear stronger venom in their bite.
Thus every object of creation
Can furnish hints to contemplation
And from the most minute and mean,
A virtuous mind can morals glean."

" இகழ்ச்சி குறைகள் அகற்ற வேண்டியவும்
பிரகிருதி யினின்றே பெற்றனன் அதனால்
விஞ்சிய கர்வம் மேலுறக் கொண்டே
எவரையும் என்றும் எடுத்தெறிந்துரையேன்.
ஆழ்ந்தசிந்தையதாய் அபிநயம்செய்யும்
ஆந்தையை இழியா மாந்தரும் உளரோ ?
உண்மை யில்லா ஒப்பாசாரக்
கபடியை ஞானியாக் கருதுவர்எவரே ?
வெகுபேச்செல்லாம் வெறும் பேச்சாகும்
ஆதலின் என் நா அடக்கி ஆண்டிடுவேன்.



சொற்பொழிவென்னும் சோனையிற்றப்புவம்.
காகம் கரைதலைக் கருதுவர் எவரோ?
சூழ்ச்சியுளங் கொடுதுரோக சிந்தையனாய்
அயலான் உரிமையை அபகரிப் பதுமிலை
கொள்ளைக்குணமே குடிகொண்டிருக்கும்
விலங்கு களிடத்து வெறுப்புடையோம் நாம்:
கோநாய் பருந்தும் கொடிய வல்லூறும்
சங்காரஞ்செயப் படுவது சரியே.
பாம்பைத்தேரையைப் பார்த்தமாத்திரத்தில்
வெறுப்புக் கொள்வது வெகுசரியன்றோ ?
வன்கண் குறளை வன்சொல்நீண் டுழியோ
நல்லபாம்பினும் இவை நஞ்சுடைத் தாமால்.
இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும்
சிந்திப்பதற்காம் சிலகுறிப் புடையது.
சற்குண முடையோர் சற்றும் பயனிலா
அற்பப் பொருளினும் அறநெறிகாண்பர்" என்
றின்னணம் உரைப்ப இயம்புவன்கலைஞன்:

" Thy fame is just," the Sage replies,
" Thy virtue proves thee truly wise.
Pride often guides the author's pen;
Books as affected are as men:
But he who studies Nature's laws,
From certain truth his maxims draws;
And those, without our schools, suffice
To make men moral, good, and wise."

" கியாதி நினக்குக் கிடைத்ததுசரியே
உண்மையில் நீஓர் உரவோன் எனற்குன்
உத்தமகுணங்களே ஒருதனிச் சான்றாம்
இறுமாப் புறலால் இல்லாவிஷயமும்
நூலாசிரியர் நுவல்வர். ஆதலின்,
மாயப்பிலுக்குள மானிடர் போன்றே
புத்தகங்களுமே போலித் தன்மைய.
*பகுதி விதிகளைப் படிப்பவன் எவனும்
† உள்ளபடியே உண்மையை ஓர்ந்து

* பகுதி = பிரகிருதி, † உள்ளபடி = இருக்கிறபடியே = ஐயந்திரிபற.

தக்க நன்னெறிகளைத் தான்கிரகித்திடுவன்.
பிரகிருதியினிற் பெற்றஇவ்விதிகள்
பாடசாலைப் பயிற்சியில் லாமலே
மானிடன் றன்னைமாசறு நடையில்
வல்லோனாக்கவும் நல்லோனாக்கவும்
புத்திமானாக்கவும் போதிய" என்றே.

**M. GOPALAKRISHNA AIYAR,**
*President, Manavar Sendamil Sangam &*
*Assistant Master, A. M. High School, Madura.*

---

## ARUNAGIRI NATHAR.

## அருணகிரி நாதர்.

(232-ம் பக்கத் தொடர்ச்சி.)

### சம்பந்தாண்டான் விகாதம்.

மன்னவர் பலர் வந்து வணங்குஞ் சிறப்பினை யடைந்தோனாகியும்,
மந்திரங்களில் மிக வல்லவனாகியும், அருக சமயத்தைச் சார்ந்தவனாகி
யும் உள்ளானொரு புலவன் அருணகிரிக்கு இழுக்குண்டாகும்படி யங்குக்
குடிகொண்டிருந்தான். இத்தன்மைத் தென்று சொல்லுதற்கரிய தமிழ்
மொழியின் சாரத்தைச் சிறிது மேற்கவொட்டாத அழுக்கு நிறைந்த
மனத்தோடு அண்டகோள மளாவிய அகம்பாவத்தையுடைய இவன்
பெயர் சம்பந்தாண்டான். தனக்கன்றி மற்றையர்க்குப புகழ்ச்சி வந்த
தென்று கேட்ட மாத்திரத்தே மனமழுங்கும் இத்தீயோன் பற்றற்ற
முனிவரானும் செஞ்சொற் பாவலரானும் ஒருங்கே கடியப்பட்டவன். ஆயி
னும் முற்செனனங்களிற் செய்திருந்த புண்ணிய வசத்தால் தேவியினது
திருவருள் பெற்று விளங்கினான். பேரும் பெரும்போரா யமைந்திருந்தது.
உள்ளியை யெடுத்து இதற்குப் பெயர் மருக்கொழுந்தென்று சொல்லி
வாசனை மிகுதியுடைய சவ்வாதினையதன் மேற்பூசி வாசனை யேற்றிவைத்
தல்போல, சைவசமய குரவனாகிய சம்பந்தப்பிரான் பெயரும் பராசக்திய
ருளும் இச்சமணனுக்குப் பொருந்தும்படி பிரமா விதித்துவைத்தான்.
சமணசமயத்தானாகிய இவன் முன்னாளிலே தன் மதத்தின ரெல்லாரையும்
கழுவிலேற்றிச் சைவத்தினைக் காத்த பெருமானது அரும்பெயரைக்



கொள்ளுதல் ஆட்டுக்குட்டி வேங்கையின் பெயரைக் கொள்ளுதலையே மா
னும். தன்னுடைய கணவனைவிட்டு நீங்கி வேறொருவனைச் சேர்ந்து
அவனாற் பிள்ளையும் பெற்றாள் பழைய மங்கல நாணையே தரித்துக்கொண்
டாற்போல, சாக்தமதத்தைச் சேர்ந்து சில அனுபவங்கள் பெற்றுக்
களிப்படைந்தானாயினும் சம்பந்தாண்டான் தான்முன்னனுஷ்டித்தசமண
மார்க்க முறைப்படியே நடித்துவந்தான். அறங்களை முயன்று செய்யா
மல் பேய்க்குப்படைத்து வழிபாடு செய்வோன் பொற்குவியலை யடைந்
தாற்போல, பெரியோர்களை யவமதித்துக் கர்வித்துத் தீமையே புரியு
மிவன் தேவியினது அருள்பெற்று தன்னைக் கண்டோரெல்லாரும் நடுக்க
முறும்படி விளங்கினான். சிவபிரான் பாகத்திற் றிகழும் பராதேவிக்கு
இனியதொண்டு என்றும் இவன் செய்திலன். ஆதலால் மலங்களினீங்கு
மெய்யை யுணரும் பாக்கிய மிவனுக்குக் கிடைக்கவில்லை. தேவி நேர்
வந்து தரிசனம் தரும்படி யிவள் வருந்திச் செபித்த மந்திரப்பலன் மட்டு
மே யிவனுக்குச்சித்தித்தது. எத்தனையோ பேறுகளை யளிக்கும் கரு
ணையும் சாமர்த்தியமும் வாய்ந்த பராசக்தியின் அருள் விலாசத்தையறியு
மாற்றல் வாய்க்கப்பெறாத இவன் இவ்வளவுதான் எவனுக்கும் அடைய
இருப்பதென்று மயங்கி அளவிலானந்த மடைந்தான். புதிய அமிர்தத்
தை வேண்டும்போது உதவும் பாற்கடலைப் பூனை காணுமாயின் அத்
தனையும் குடிக்குமுன் திருப்தியடைந்து விடுதல் சகஜந்தானே.

இன்னதன்மையனாகிய சம்பந்தாண்டான் அவ்வூர்க்கரசனால் மதிக்
கப்படும் பெருமையடைந்தும் தன்னலத்தையே யெப்போதும் கருதும் புன்
குணத்தையுடையான். ஆதலான், அருஞ்சிறப்பெய்திய வில்லிபுத்தூ
ராழ்வார் மெச்சும் திறத்தோடுகூடி யொருவன் கோயிலின் முன்னமர்ந்
துளான் என்று யாவரு மெடுத்துச்சொல்லும் புகழ்மொழியைக் கேட்
டுத் துக்கமடைந்தான். தினந்தோறும் அரசனிடத்துச்சென்று அருண
கிரி முனிவரைப்பற்றி மனத்தா னினைக்கவு மாகாதவண்ணம் இகழ்ந்
துரைத்தலே யிவனுக்கு வழக்கமாயிற்று. அம்முனிவர் மேகம்போல்
கவிபொழிவதையும், வெல்லப்பட்டோரை வாளாற் காதையறுக்கும் கொ
டிய வழக்கத்தை நீக்கி வாளைவாங்கித் தன்னிடத்துக் கொடுத்துவிட்ட
தையும் எண்ணி யெண்ணிப்பார்த்த அரசன் 'இத்துறவிக்கும் இவனுக்
கும் பகையுண்டு போலும்' என்று நிச்சயித்தான். நிச்சயித்தும் தாக்ஷி
ண்யம் கருதிச் சிலநாள் தலையசைத்துக் கேட்டுக்கொண்டே யிருந்தான்.
சம்பந்தாண்டான் பொறாமை யுற்றவனென்று தீர்மானித்தும் தேவீவரப்
பிரசாதம் பெற்றவனென்று அஞ்சி யொன்றுஞ் சொல்லாமல் பொதுவா
யிருந்துவைத்தான். அந்நற்கருத்தினையோர்கலாத சமணன் [illegible]

600 009

யுஞ் சாமர்த்தியம் சிறிதுபெற்ற கள்வனுடைய அந்தரங்க எண்ணத்தையுணர்கலாது மஹா தபசியெனக்கொண்டாய். தெய்வத்தன்மை யுளதேல் காட்டுமாறு சொல்" என்றான். அதற்கு அரசன் "எனக்கு நீவிர் இருவீரும் வேண்டியவரே. எவரைத் தாழ்ந்தவரென் றுரைப்பேன்?" என்று விடை பகர்ந்தான். சம்பந்தாண்டானோ, "அது நெறியன்று. உயர்ச்சி தாழ்ச்சி யறிந்துகொள்ளுதல் மன்னர்குலத்துக் கடுத்த தருமமேயாகும். இன்னமும் எத்தனை பேரோ உன்முன் எதிர்ப்படுவர். அவரெல்லா முயர்ந்தோர் தாம் என்று அவர்க்கெல்லாம் அடிமைபோன்று அடங்கல் உனக்கழகாகுமோ? உன்குலந்தான் உன்னை மதிக்குமோ? உலகந்தான் மதிக்குமோ?" என்பதாதிய வசனங்களால் அரசனை நெருக்கிப் பிடித்தான். அரசனும் தப்ப வழியொன்றுங் காணாய் மந்திரியை நோக்கிக் கோயிற்குச் சென்று முனிவரிடத்து இதனை யெல்லா முரைக்குமாறு சொன்னான். மந்திரியும் முனிவர் முன் நின்று அதிவிநயத்தோடு அரசன் தடுமாற்றத்தையும் சம்பந்தாண்டான் செருக்கினாற் புகன்றவற்றையும் ஸவிஸ்தாரமாக எடுத்துரைத்தான். அருணகிரியாரும் அவ்வுரைகளைக் கேட்டு "எம் கடவுளாகிய வேலவற்கு இதுதான் குறிப்பிட்ட இடமோ? இப்பூவுலகில் எண்ணிலடங்காத மலைகளுள. அவற்றுளொன்றிற் போய்த் தங்குவோம். எம்மை யடுக்கும் தொண்டரும் அங்கே வந்து துதித்து உய்வர்" என்று மனமழிந்து சொல்ல அமைச்சன் சகியானாகி அழுது கெஞ்சி "எனக்குக் கேடு இதில் ஒன்றுமில்லை. ஆயினும் இவ்வுரையை அரசனிடத்து உரைப்பேனாயின் அவன் என்னைத் தொலைத்தல் திண்ணம்" என்று இரந்தனன். முனிவரும் இரங்கி, செவ்வேளைக் காட்ட இசைந்து நாளுந்தலமுங் குறித்தார். அதுகேட்ட அமைச்சனும் ஆனந்தக் கடலுளாழ்ந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அரசன் சபைக்கெய்தி நடந்தவண்ண முரைத்தான். அத்தனையுங்கேட்டு அங்கிருந்த சம்பந்தாண்டான் சொல்லுவான் "அவன் வேற்குமரனை யழைக்குமத்தினத்தின்முன் நான் நீ உவகையோடு உமாதேவியைக் காணும்படிசெய்வேன்" இவ்விரண்டு வாக்குறுதிகளையுங்கேட்ட அரசன் "இருவரையுந் தரிசிக்கும் புண்ணியம் நமக்கு உண்டுகொல்லோ" எனக்களிப்பு மையமு மடைந்தான்.

S. ANAVARATA VINAYAKAM PILLAI.



# THE LIFE OF ELIALWAR.

## இளையாழ்வார் வைபவச்சுருக்கம்.

ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்டத்தில் திருமாமணி மண்டபத்தில் "சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கும், நீர்பூத்த திருமகளும் நிலமகளும் அடிவருடச், சிறைப்பறவைப் புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப, நறைப்படலைத் துழாய் மார்பின் நாயிறுபோன் மணிவிளங்க அரியதானவர்க் கடிந்த ஐம்படையும் புடை" தாங்கி, ஆரகே யூராதி யணிகளையும், உலகுக்கோர் நாயகமென்றுணர்த்தும "கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடி"யையும் உடையவராய், அனந்த கருடர்முதலிய நித்தியரும் மற்றையமுக்தரும் "வாயினாற் பாடியும் மனத்தினாற் சிந்தித்தும்" ஆனந்தப்படுவது போலாது, இந்நிலவுலகில் ஆன்மாக்கள் தமக்காட்செய்யாதே "உண்டியே யுடையே யுகந்தோடி" பவக்கடலுள் வீழ்ந்து படுவதைக் கண்டு திருவுள்ளங்கொண்டு, புவியில் இராமகிருஷ்ணாதி யவதாரங்களை யெடுத்தும் அவர்கள் தன்னை அறிந்துய்யத் தவறியதை யுணர்ந்து, "தீபகங்காட்டிப் பறவை பிடிப்பார்போல" ஆழ்வார்களாகப் பரிசனங்களை அவதரிப்பித்தும் பிரஜைகள் வழிப்படாது வேதங்கட்கும் அபார்த்தம் முதலிய செப்பப்புகுந்ததால், அவற்றைத் தடுத்து உண்மைப்பொருளை நிலைநிறுத்தத் தன்னை நீங்காத திருவனந்தாழ்வானை உலகுதிக்க நியமித்தருளினார்.

அவர் உலகை உய்விப்பான், ஆதிகேசவப் பெருமான் திருவிழாக்கொண்டருளும் பூதபுரி என்னும் ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்ரீகேசவசோமயாஜி என்றபிராம்மணோத்தமருக்கு ஸ்ரீபூமிப்பிராட்டி என்பவரின் கர்ப்பத்தில், கலி 4118-க்குமேல் பிங்கலவருஷம், சித்திரைமாதம், பன்னிரண்டாந்தேதி, சுக்கிலபக்ஷம், வெள்ளிக்கிழமை, திருவாதிரையில் கடகலக்கினத்தில் திருவவதாரம் செய்தருளினர். இதனை யறிந்த அவர் அம்மான், திருமலை நம்பி என்பார், அச்சிசுவைக் கடாக்ஷித்தருளி இளைய பெருமாளென்னும் லக்ஷமணனுக்குரிய லக்ஷணங்கள் மலியப்பெற்றதால் இளையாழ்வார் என்று திருநாமமிட்டு ஆசீர்வதித்துத் தன்னூடு சென்றார்.

அச்சேய் வளர்பிறைச் சந்திரன்போல் விருத்தியடைந்து பதினாறு பிராயத்துள் சகல கலையும் உணர்ந்து கிரகமுறைகொண்டு கச்சிக்கரு

குள்ள திருப்புட்குழியில் யாதவப்பிரகாசன் என்னும் ஏகதண்ட சன்னியாசியிடம் பூர்வபக்ஷ வேதாந்தம் கற்பான்சென்று, அங்குத் தனக்குப் பின்வந்த மழலைமங்கலத்துக் கமல நயனப்பட்டருக்குப் பெரிய பிராட்டியிடம் அவதரித்த கோவிந்தன் என்பாரோடு கற்றுவருங்கால், அச்சன்னியாசி வேதத்தில் ஒரு பதத்தினுக்கு அபார்த்தஞ் செய்ததைப் பொறுது இளையாழ்வார் கிலேசிக்க, இதனையறிந்த யாதவன், இவ்விளைஞன் வைணவப்பற்றுடையான் என்று தீர்மானித்து, அவனறியாதபடி தமதும்ற்றைச் சீடரோடு ஆலோசித்து அவரைக் கங்கையின் மணிகர்ணிகையில் மரணமுண்டாக்க நினைத்து, அங்ஙனமே புறப்படுவாராயினர்.

மார்க்கத்தில் தனியே சந்தித்த தம்பிளைய கோவிந்த பட்டரால் அவர் கருத்தறிந்த இளையாழ்வார், தந்திரமாய் அவரை விட்டுவிலகி, விந்தியாடவிப் பெருங்காட்டில் துணையின்றி வழிதப்பிப் பிறகு ஒரு வேடுவன் வேடுவச்சியால் கச்சிப்பதி யடைந்தபின், அத்துணைவரைக் காணாததாலும், தன்னைவெகு சீக்கிரத்தில் கச்சி நகர் சேர்த்ததாலும் அன்னாரப்பரம் பொருளென்றேதெரிந்து, வில்லியுருவில் அவர் விரும்பியாங்கு, அங்குற்ற சாலைக்கிணற்றினின்றும் திருமஞ்சனம் செய்வித்து வந்தார்.

பின்னர் திரும்பிக காஞ்சி யடைந்து யாதவப்பிரகாசனால் வேண்டப் பெற்று, அவரிடமே சேர்ந்து, தம்பிளையோன் மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்யும்போது லிங்கங்கையில் ஒட்டிக்கொண்டதால் அதைப் பிரதிஷ்டைபண்ணிப் பூசிக்கச் சென்றிருப்பதைக் கேட்டுத் துயரமுற்றும் வெளிக்காண்பியாது கற்றுவந்தார்.

பல்லோரால் இவ்விருத்தாந்தமறிந்த வைணவமகச்சித்தாந்தியான யமுனைத்துறைவர் என்னும் ஸ்ரீ ஆளவந்தார் இவ்வத்திகிரி வந்து, பேரருளாளனுக்குத் திருவாலவட்ட கைங்கரியம் நடாத்தும் திருக்கச்சிநம்பியால் இளையாழ்வாரின்னாரெனத் தெரிந்தும் அவரிடம் சம்பாஷிக்கச் சமயமிலாது கச்சிப்பெருமானிடம் இவ்விளையாழ்வாரே வைணவமதப்பிரவர்த்தகராம்படி வரம்பெறறுத் தமது நிலயமான திருவரங்கஞ் சென்றனர்.

ஒருநாள் அந்நாட்டரசன் மகளைப் பிரமரக்ஷசு பிடித்துக்கொண்டு பல மந்திரவாதிகளாலும் விடுபடாமல், இவ்யாதவப் பிரகாசனாலும் போகாமல் இளையாழ்வாரால் போனதுகண்டு ஊரார், அழகினாலும் அவதாரத்தினாலும் இளைய பெருமாளென்னும் லக்ஷ்மணரது குணங்கொண்ட இவர் இராமானுஜனே என்று கொண்டாடினார்கள்.



பின்பொருநாள் யாதவன் வேறொரு பதத்தினுக்கு அபார்த்தஞ் செய்தபோது அதை மறுத்ததால் அங்கிருந்தும் விலக்கப்பட்டு இளையாழ்வார் தனித்திருக்குங்கால், திருவரங்கத்தில் யாமுனாசாரியார் திருமேனி தளர்ந்ததால், இளையாழ்வானைத் தரிசிக்க விரும்புகிறாரென்று அவரனுப்பிய பெரிய நம்பிகளாற்றெரிந்த இராமானுஜன் அக்கணமே பயணப்பட்டு கோயிலேற வெழுந்தருள, அங்கே திருக்கரம்பன் துறையில், திருநாட்டுக் கெழுந்தருளின ஸ்ரீ ஆளவந்தாரது திவ்ய விக்கிரஹத்தைப் பெரிய திரளுடன் கூடித் துக்கிதமுகராய்த் திருப்பள்ளிப் படுத்திக் கொண்டிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியைக்கண்டு, சந்தேகித்து, அருகுசென்று சோகித்துத் தேறி, அந்தச் சரம விக்கிரஹத்தைப் பாதாதி கேசம்சேவிக்குமளவில்நிமிர்ந்திருக்கும் மூன்றுவிரல்களின் காரணந் தெரிந்து, அம்மூன்றெண்ணங்களையும் பேரருளாளனது அருளால் முடிக்கிறேனென்று உறுதிகொடுக்க, அவ்விரல்கண் மடங்கியபின், அவ்விக்கிரஹத்தைத் திருப்பள்ளிப்படுத்தி, அவப்ரதஸ்நானஞ்செய்து, யாவரும் இவரே தரிசனப் பிரவர்த்தகரென்று கொண்டாடும்படி பெருமாள் கோயிலேற வெழுந்தருளினார்.

பேரருளாளனுக்குத் திருவாலவட்ட கைங்கரியஞ் செய்து வரும் திருக்கச்சி நம்பியால் விண்ணப்பிக்கப்பட்ட அருளாளன் இளையாழ்வாருக்கு அருளிச் செய்த ஆறுவார்த்தைகளின் முக்கியமானதான "பெரிய நம்பி திருவடிகளிலாசிரயிப்பது" என்பதைத் தலைக்கட்டக் கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு வழிவசமாய் ஸ்ரீ மதுராந்தகத்தில் வந்து சேர்ந்து, இளையாழ்வானைத் தரிசனப் பிரவர்த்தகராம்படி செய்தருளியழைத்து வரும்படிக் கோயில் ஸ்ரீவைஷ்ணவர் கேட்டுக் கொண்டபடியதைச் சாதிக்கத் தம் திருத்தேவியோடு பெருமாள் கோயிலுக்குப் பயணப்பட்டுவந்த பெரிய நம்பிகளை அங்கே கண்டு வணங்கிப் பேரருளாளர் நியமனத்தை விண்ணப்பஞ் செய்து, சிஷ்யமுறையாக அடியேனுக்கு இதோபதேசம் செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவரது விரைவைக் கண்டு நம்பிகளும் அங்கேயே மந்திரோபதேசம் செய்தருளினர்.

பின்னர் இருவருமாய்ப் பெருமாள் கோவில் சென்று பெரிய நம்பிகளுக்குத் திருமாளிகையேற்படுத்தி, அங்கே திருகச்சிநம்பி முதலானவருடைய சல்லாபத்தோடு பெரியநம்பியிடம் இராமானுஜன் சித்தாந்த முதலிய யாவும் கற்றிருந்தார்.

பின் ஒருநாள் இராமானுஜன் நீராடி மாளிகை வருகையில் பெரிய
நம்பி இல்லாமைகண்டு அயலுளாரை விசாரித்து, அவரால் தன் தேவி
யானேர்ந்த குற்றமென்றுணர்ந்து முன்னமே இரண்டு பிழைகளும்
செய்திருப்பதால் வெறுத்து அவளைப் பிறந்தகமனுப்பி இல்லறம் நீங்கி,
'அனந்தஸரஸ்' என்னும் பொய்கையில்நீராடிப்பேரருளாளனையே திருக்
கச்சிநம்பியின் புருஷகாரத்தால் ஆசாரியனுக்கொண்டு திரிதண்டகாஷா
யந்தரித்துத் துறவியாய் மடத்தில் எழுந்தருளினர்.

இங்ஙனமிளையாழ்வார் எதிராஜனென்று வேறுபெயருடையராய்த்
துறவற மேற்கொண்டு ஒழுகுகிறரென்று கேள்விப்பட்ட முதலியாண்
டானும் கூரத்தாழ்வானும் வந்து நம்பிர்ராமானுஜமுனி திருவடிகளில்
ஆசிரயித்து நிற்க அவரும் அவர்களுக்குப் பஞ்சசமஸ்காரம் முதலிய
வருளி, தாயின் நற்புத்தியைக் கேட்டுத் தம்மைப் பணிந்த யாத
வனையும் கடாக்ஷித்துத் திரிதண்டம் முதலிய அளித்து, அவர்க்குக்
கோவிந்தஜீயர் என்ற திருநாமமுங் கொடுத்து, தங்கோவிந்த
பட்டரைச் சைவத்தினின்றும் நல்வழிப் படுத்தி யருளல் வேண்டு
மெனத் திருமலைநம்பிக் கறிவித்து, திருவரங்கப் பெருமாளரையரோடு
பேரருளாளனது நியமனத்தால் பெரியகோவில் சென்று, ஆங்கு நம்பெரு
மாளாக்கினையால் உபய விபூதியையும் தாமே உடையவர்,' என்று பிர
சித்தராய் பூர்வாச்சிரம அம்மான் திருமலை நம்பியால் கோவிந்தபட்டர்
சைவத்தினின்றும மீட்கப்பட்டார் என்பதைக் கேள்வியுற்றுக் குதூ
ஹலித்து சதுர்த்தாச்சிரமவிதியைச் சிரமமின்றிச் சரிவர நடத்திவந்தார்.

ஆங்குப்பெரிய நம்பிகளால் சித்தாந்தங்களைத் தெரிந்தவராய் இரகஸ்
யார்த்தங்களை யறியத் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் பதினெண்முறை
சென்று அவ்வர்த்தங்களை யுணர்ந்து அதனை யுலகறியச் செய்து,
எம்பெருமானர் என்ற திருநாமமும் திருக்கோட்டியூர் நம்பிகளால்
அடையப்பெற்றவராய், அவ்வர்த்தங்களைத் தம்மை யாசிரயித்தார்க்கு
மன்றி யேனையார்க்கும் வெளியிட்டு வாழ்ந்திருந்தார்.

இன்னுட்கழித்த பின்னுல் யதிராஜன் திவ்யதேச யாத்திரையாய்ப்
புறப்பட்டுப் பல ஸ்தலங்களுக்குஞ்சென்று, ஆங்காங்கு உத்ஸவங்கண்ட
ருளப்பெறும் மூர்த்திகளை மங்களாசாஸனித்து, புறமதஸ்தரைக் கண்
டித்து, திருநாராயணபுரம் சென்று அங்கு நின்றும் மகம்மதியரால்
அபகரிக்கப்பட்டிருந்த ஸ்ரீராமப்பிரிய ரென்னும்செல்வப்பிள்ளையை வர
வழைத்துத் தந்து, திருமலைசென்று எம்பிரானருளால் சைவவைணவ



சம்வாத சம்சயத்தினைத் தீர்த்து, தம்மை வாதத்தினுக் கழைத்த
சமணமதத்தினர் ஆயிரவரை திரைக்குள் ஆயிரம் பணமுடியுடையாதி
சேடனுக விருந்து வாதித்துவென்று, தான் ஆதிசேஷனவதாரம் என்ப
தையும் நிரூபித்து, தோற்றவரைத் தமக்குச் சீடராக்கி, வேதங்கட்கு
ஸ்ரீபாஷியம் செய்ததால் ஸ்ரீபாஷியகார ரென்று திருநாமமும் பெற்று,
இப்படியில் இப்படியாய் ஆசார்ய சிஷ்யக்கிரமத்தையும், பரத்வசாத
னத்தையும், சரணுகதியின் திறத்தினையும், பெரிய வீடு சேரும் மார்க்
கத்தையும் பிரகாசிப்பித்தருளி உலகை வாழ்வித்தருள் வாராயினர்.

ஒருநாள் கந்தாடை முதலியாண்டான் ஸ்ரீபாஷியகாரரது விக்கிர
ஹம் எழுந்தருளப் பண்ணவேண்டும் என்ன அவரும் உவந்து அப்படியே
யாகுகவென, அங்ஙனமே தக்கச் சிற்பியால் செய்து வரப்பட்ட அவ்விக்
கிரஹத்தினை அணைத்துத் தழுவிக்கொண்டுப் புஷ்யமாதத்தில் புஷ்ய
நக்ஷத்திரத்தில் பிரதிஷ்டை செய்யக் கட்டளையிட்டனர்.

அன்று முதல் இராமாநுஜனுக்குத் திருமேனி தளர்ந்து வர அவ
ரும் எம்பிரான் திருவடிகளையும் தம்முடிக் கணியாகச் சூடியவனையே
பலபடிநினைத்துத் திருமணி வடம் முதலியன தரித்துக்கொண்டு மங்கல
வாத்தியம் முழுங்க ஆசாரியர்கள் திருவடிகளைத் தியானித்த வண்ணம்
திருநாட்டை யலங்கரித்தார்.

அத்திரு நாடென்னும் பெருநாட்டில் நித்திய சூரியனை தொழுதுவந்
தெதிர் சென்று,

"வந்தவ ரெதிர்கொள்ள மாமணி மண்டபத்து
அந்தமில் பேரின்பத் தடியரோடு"

ஸாரூப்பியம்பெற்று அப்பரமபத நாதனுக்குக் கழிபெரு மகிழ்ச்சி
யோடு நித்திய கைங்கரியஞ் செய்துகொண்டே வீற்றிருப்பாராயினர்.

M. V. GOVINDACHARIAR.

---

## SOBHAMANI.

## சோபாமணி.

238-ம் பக்கத்தொடர்ச்சி.

தன் நண்பன் குற்றமற்றவனென்று ரூபிக்கத்தனக்கு உபாயம் யாதும்
புலப்படாவிடினும் குற்றஞ்செய்திருப்பா னென்னுமளவில் கலாவான்

நம்பினானிலன். அதனால் அவன் வீண் யோசனையிலும் ஆழ்துயரத்திலும் காலம் போக்காமல் மட்கலத்தைக் கட்டியனுப்பும் மனிதன்பால் அக்கணமே ஓடினான். ஓடி அவனை மிகு தந்திரமாகப் பல கேள்விகள் கேட்டு உண்மையுணர்ந்து சோபாமணிக்காக கலாவான் இரண்டு வரி எழுதியபொழுது அவனுடன் வேறெவரேனும் இருந்தனர்களோ வென்று அறியுமாறு பரலீன் நகரத்துச் சீனாமட்கலத் தொழிற்சாலைக்குச் சென்றனன். இங்ஙனம் பல்லிடங்களிலும் உழன்று சங்கதிகளை உள்ளவாறே யுணர்ந்து கலாவான் குற்றவாளியல்ல வென்பதைத் தன்னுள் துணிவுகொண்டனன்.

அரசவள்ளல் கலாவானின் தாய் வீட்டிற்கு வருவதாகக் குறித்த நாள் செவ்வாய்க்கிழமை யன்றோ? ஏந்தல் அவ்விடமெய்து தன்முன் அப்பெருமாட்டியும் ஏனையோரும் கூட இருந்து கலாவானின் ஊழினை நினைந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது "குற்றவாளிக்கு அவன்செய்த குற்றத்தை எடுத்துக்காட்டாது தண்டியாத அரசாட்சியில்வாழும் உயிர்களின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். விசாரணையின்றி ஒருவன்மேற் குற்றம் சுமத்தாததும், குற்றஞ்செய்தவனுக்கு அவனது குற்றத்தை யெடுத்துக்காட்டி யன்றுத்தண்டனை விதியாததும் குற்ற விசாரணை செய்யுமளவில் யாவருமறியப் பகிரங்கமாக விசாரிப்பதும் அங்ஙனம் விசாரிக்குமிடத்தும் குற்றவாளியின் தேயத்தார் முன்னும் பிரபுக்கள் முன்னும் அவனோடொத்த நிலையினர் முன்னும் நீதி விசாரணை நிகழ்த்தப்படல் வேண்டுமென்னும் ஒழுங்கினையுடையதுமான அரசு முறையில் வாழும் மன்பதையின் சுகமேசுகம்" என்றிவ்விதமாக ஆங்கில யாத்திரிகன், தமது நியாயவிசாரணை முறையினையே மேலாக வெடுத்துச் சிறப்பித்துப்பேசும் சமையத்து எப்பொழுதும் வருகிற வழக்கம்போல் ஏந்தல் அவ்விடத்தெய்தினன். ஆண்டுக் கூடியிருந்ததோ ரனைவரும் ஆங்கிலன் வாயைக் கண் ஆணியிட்டு ஆர்வமுடன் பார்த்துக்கொண்டிருந்தனரே யன்றி அரையன் ஆங்கடைந்து தம்முள் அவனுமொருகேட்போனாகி யிருந்தமையை யறிந்தாரிலர்.

ஆங்கிலன் தனதுரையினை முடிக்குந் தருணத்துக் கலாவானின் தாய் "என் புதல்வனும் அத்தகைக்குரிய விசாரணைக்குட்படும் பாக்கியத்தை யடையுமாறு ஆண்டவரருள் புரிக" என மிக்கதோராதாரத்தோடுரைத்தலும், "அங்ஙனமே அச்சிரேஷ்டர் அருள்புரியின் யானும் என் ஆருயிர் நண்பனுக்குப் பரிந்து நியாயவாதஞ் செய்யும் பேறடைவேன்" என ஆபதத்ரன் கழறினன்.



இவ்வாறிவர்கள் உரையாடா நிற்புழி "அதன்கண் ஒரு சங்கதி" என அரசன் அறைந்தனன். அதனைக் கேட்டலும் அனைவரும் திடுக்கிட்டனர்.

அரசன்.—"நன்று; அங்ஙனமே நீயுன் ஆருயிர் நண்பனுக்குப் பரிந்து நியாயவாதஞ் செய்யலாம். உனது வேண்டுகோளுக்கு இணங்குவாம். ஆனால் ஒரு சங்கதி. உன்னண்பன் குற்றவாளி யல்லவென்று நீதியதிபர் ஒப்புமாறு நிரூபிக்கத் தவறுவையாயின் அவனுக்கு கிடைக்குந் தண்டனையில் நினக்கும் ஒருபாக முரித்து என்று நினைத்திடு. பந்தநகரச் சாலையில் ஓராண்டு இருக்க அவனுக்குச் சிக்ஷை விதிக்கப்பட்டுளது. நீயின்று மேற்கொள்ளும் கக்ஷியைத் தாபிக்கத்தவறுவாயேல் அச்சிறைச் சாலையில் அவனுக்குத் துணையாவாய். நாம் அறிவீனராவேல் அபாயத்திற் கேதுவாம்; அறிவீனரோடு நட்பாடல் அதனினுங் கொடியதோ ரபாயமாகும். 'ஸம்ஸர் கஜாதோஷ குணபவந்தி' 'நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்' என்பன கேட்டிலையோ கலாவான் தன்னோடொத்த மனிதரால் விசாரணை செய்யப்படுதலில் எனக்கு ஆக்ஷேபமிலது அங்ஙனம் விசாரிப்போரும் பன்னிருவராயிருக்க; அவர்க்கு (வேண்டுமாயின்) பஞ்சாயத்து என்று பெயரும் வைத்துகொள்க. இவற்றில் எனக்கு எத்துணையும் இடர்ப்பாடில்லை. நமது வாதங்களைச் செய்ய நாமே ஒரு நியாயவாதியை நியமித்துக்கொள்ளலாம். நீயோ கலாவானுக்கு நியாயவாதியாய் நிற்கின்றனை. நியாயத்தை நாட்டுந் திறத்தில் காட்டின நிபந்தனை நீ யறிவாயே. அதன்கண் நினக்கேதேனும் ஆக்ஷேப முளதோ?"

ஆபதத்ரன்.=மிகநன்று; அங்ஙனமே ஆகுக தாம் கூறிய நிபந்தனையில் எனக்கும் எட்டுணையும் இன்னலில்லை. பந்தநகரில் சிறைப்பட்டு இருக்கும் என் சிநேகனைக் கண்டு பேசும்படிமட்டும் கட்டளை யளிக்க வேண்டும்.

அரசன்.—நீ கூறும் இந்நிபந்தனை உடம்படிக்கையிற் சேர்ந்ததன்றே. புதிதாயினும் இதற்கும் உடன்படுகின்றோம். குற்றவாளியைக் கண்டு பேசும்படி ஐந்துநாழிகைக் காலம் தந்திருக்கின்றனம். அவனைக் கண்டு நீ சம்பாஷித்தபிறகு அவனைப்பற்றி நீ கொண்டுள்ள கருத்து மாறுமாயின் யாம் நிபந்தனையை நிறைவேற்றத் தவறோம். அது கொண்டு எம்மைக் குறைகூறவொண்ணாது. ஆபதத்ரன் அத்துணையே தனக்குச் சாலுமென்றான். கலாவானின் தாயும் மற்றும் ஆண்டுக் கூடியிருந்தோரும் அரசனது பெருந்தகைமையினையும் ஆபதத்ரன் தன் நண்பன் திறத்

துச் செய்யப்புகுந்த கைம்மாறு வேண்டாத பேருதவியினையும் வியந்து புகழ்ந்தனர்.

பர்லீன் நகரத்திலும் போதஸ்தான நகரத்திலும் ஆங்காங்குக் கூடும் அவைகளில் சனங்கள் கலாவானினது விதியைக் கதையாகப பிரசங்கித்து வந்ததுமன்றி அரையனது அரண்மனைப் புலவரும் மன்னவன் மனத்தில் ஊன்றுமாறு அதனைக் குறித்து ஆக்ஷேப சமாதானங்கள் பன்னிப்பகர்ந்து கொண்டிருந்தனர். அவ்வாங்கில யாத்திரிகனும் கலாவானின் செய்திகளை யறிந்து அவன் விதி இங்ஙனமாயிற்றே யென மனம் வருந்தினன். பிரதாபமன்னன் தன்னைக் குறித்து அந்நியர்தன் பெருமைக்குப் புறம்பாகப்பேசினால் அதனைப் பொருள் செய்யான்.

அவ்விஷயங்களை யெழுதி வெளியிடின் மட்டும் அவன் சம்மதியான். ஆபதத்ரன் பந்தநகரச் சிறைச்சாலையில் கலாவானைக்கண்டு பேசியபின்னரே அரசனுடன் தான் செய்துகொண்ட பிரதிக்கினைக்குப் பின்னிடாதிருக்க அவனுக்குத் துணி வுண்டாயிற்று. கலாவானோ தன் திறத்தில் தன் மித்திரன் வேந்தனோடு செய்து கொண்ட சூளினையறிந்து துணுக்குற்றான்.

K. S. GOPALACHARIAR.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**ஆனரபிள் கே. வெங்கடராவ்:**—நம்முடைய இராஜதானி சட்ட நிர்ணய சபையாரிலொருவராகிய ஆனரபில் கே. வெங்கடராவ் என்பவர் தம்முடைய குமாரனை பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கும்படி இங்கிலாந்து தேசத்திற்குக்கொண்டு போய் விடப்போனவர், ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா கண்டங்களிலுள்ள முக்கிய தேசங்களையும், பிரதானபட்டணங்களையும் ஆசியா கண்டத்தில் சீனா, ஜப்பான், சியாம் முதலிய தேசங்களையும் இரண்டாமுறை பார்த்து தன் சுதேசமாகிய பல்லாரிக்குச் சில நாட்களுக்கு முன்திரும்பினார். இவரைச் சபைத்தலைவராயுடைய அவ்வூர் சன்மார்க்க சமாஜத்தார் இவரை எதிர்கொண்டழைத்து ஊர்கோலம் செய்து கொண்டுவந்தார்கள். இவர் தான்செய்த யாத்திரையைப்பற்றி ஓர் உபன்னியாசம் செய்தார். அதில் தான் பல தேசங்களிற் கண்ட விநோதங்களைப்பற்றி விவகரித்தார். அமெரிக்கர் சொற்பகாலத்தில் ஏராளமான விருத்தி யடைந்திருக்கிறார்களென்றும், சேன்ட்லூயி என்னும் நகரத்தில் இப்பொழுது நடந்துவரும் கண்காட்சி சாலையில் தான்கண்ட அதிசயங்களையும் சொன்னார். சிறு தேசத்தவராகிய ஜப்பானியர்



பெருமிராஜியத்தாராகிய ருஷியரோடு இதுவரையும் கெலிப்புடனே சண்டை செய்வதின்காரணம் அவர்களுள் சுதேசாபிமானமும் தன் இராஜாங்கத்தாரிடம் உண்மையும் பூராவாக நிறைந்திருக்கிறதென்றும், நமது இந்துக்கள் முன்னுக்கு வர விரும்பி தங்களுடைய விருத்திக்கு விரோதமான வழக்கங்களையும், வீணான கெர்வத்தையும், இதர அசந்தர்ப்பங்களையும், விட்டு விலகவேண்டுமென்றும் வற்புறுத்தினர். இவர் கூறிய உண்மைகள் நம்மனதில் ஏற்கத்தக்கவை.

சென்னை பீபிள்ஸ்பார்க்கில் வருஷாந்தரம் நடத்தப்படும் வேடிக்கை சந்தை (The People's Park Fair)—இச்சந்தை இவ்வருடங்கூடுவது சந்தேகமாகவிருந்தது. இப்பொழுது சவுத் இண்டியன் அத்லேடிக் அசோசியேஷன் என்னும் சங்கத்தவர் தாங்களே இதை நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். சந்தை டிசம்பர்மீ 26, 27, 28, 29, 30, 31, தேதிகளிற் கூடும்.

சென்னை கவர்ன்மெண்டு கலாசாலைக்கு முதல் தலைவராக அனேகவருஷ காலமிருந்து, பிறகு இந்த இராஜதானிக்கு வித்யாவிஷயத்தலைவராக (The Director of Public Instruction) உத்தியோகம் பாாத்துவந்த கனம் பௌவல் (Powell) துரை என்பவர் சென்ற நவம்பர்மீ 10உ சீமையில் முதிர்ந்த 85-வயதில் காலவியோகமானார்.

1901 வருஷத்தில் ஜனக்கணக்கின்படி இவ்விந்து தேசத்தில் 52லட்சம் பரதேசிகளும், பிச்சைக்காரர்களும், யாசகத்தால் ஜீவனம்செய்கிறவர்களுமிருப்பதாகத் தெரிய வருகிறது. இவர்கள் போஷணைக்கு மாதம் 3-ரூபா விழுக்காடு வருஷத்திற்கு 18கோடி ரூபாய் ஜனங்கள் செலவிடுகிறார்கள். இவைகளில் பெரும்பான்மையோர் தருமத்திற்குப் பாத்திரர்களல்ல. இவ்வளவு பெரும்பொருளை ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும் கைத்தொழிற் பயிற்சி நேர்ப்பிப்பதிலும், செலவழித்தால் எவ்வளவு சமீபத்தில் இத்தேசம் சீர் திருத்தமடையுமென்று ஒருபத்திரிகை கூறுகின்றது.

மைசூர் மஹாராஜா அவர்கள் தமக்கையும், கர்னல் தேசராஜ் என்பவருடைய பத்தினியுமாகிய கிருஷ்ண ஜம்மணி என்னும் இராஜகுமாரத்தி நவம்பர்மீ 22உ காலஞ்சென்றார்கள். இதற்காக நாம் அதிகம் துக்கிக்கிறோம்.

T. S.

REGISTERED 25 JAN 1905 REGISTRAR OF BOOKS MADRAS.


# Yathartha Bhaskaran,

FOR

God, Humanity and The Motherland.

Vol. III.] DECEMBER, 1904. [No. 6.


## THE UNITY OF GOOD AND EVIL.

The primitive man knew not anything but what the outer world suggested to him through his senses. He cared not to create things by imagination. He did not dwell upon wants which nature could not satisfy then and there, and his instinct created in him only such wants that met with sure supplies. He had no relish for the sensual pleasures, and never indulged in them. As he had not created any artificial taste, he was quite satisfied with answering the different calls of nature. So, he lived, as it were, without tasting the forbidden fruit. His life was full of joy, and the world he lived in, a heaven of bliss. Good and evil he knew not, and so, he was, as it were, one with God.

When reason began to dawn upon man, he began to create distinctions among all the things that fell within his sphere and to multiply his love for good and his hate for evil. Thus raising innumerable walls of division between things he began to give free scope to his innate propensities for loving as well as hating. No man of reason will deny that it is this loving and hating that causes so much distress and sorrow in the world now. With the help of reason, man has been creating artificial tastes in different directions, and has gone so far as to find the world full of miseries. Now, he might have understood that happiness recedes as fast as he, actuated by the impulses of love and hate, proceeds to hunt after it.

If so, are we to think that it is to the retrogression or downfall of the human race that the activities latent in the primitive man are now being aroused? Is that the world is worse now than it was once? No, my readers, no. It is in its full wake only now. Then it was

in slumber. Though the man whose mental and bodily activities are suspended for a while during deep sleep, has so many cares latent in his mind as to crush him under their weight, he seems, to all intents and purposes, to have attained to that blissful state from whence he does not condescend to open his eyes and enjoy the entertainments which his friends enjoy in the presence of his *body*. But, in fact, the friends who seem to be active and consequently seem to undergo great difficulties might, perhaps, have shifted their load of cares to some unknown corner of their mind and been able to divert their attention from them so that they might not lose the opportunity of witnessing the agreeable entertainments, while the man that sleeps might have sunk in sleep for want of fortitude to withstand the tempest of his mental atmosphere. Further, we see that the taste of the well-ripe green mango is pungent and disagreeable when compared to the half-ripe one. From this, it does not follow that the former lacks the development that the latter has. In this manner we may see throughout nature that what is either disagreeable or repelling, according to our scale of judgment need not necessarily be lacking development. Just so is the relation of the modern man to the primitive man. The primitive man was the modern man involved, nay, the perfect man involved; and the modern man, nay, the perfect man is the primitive man evolved. The former was man in his infancy, and the latter is man in his youth.

Though we cannot say positively why man comes into existence in the order of things, we can presume this much that he has not come purposelessly and that the law of nature will not act against its principles in the case of man alone, because he is man. Perfectation is the aim of nature which will not give up its endeavours in bringing about that state because of so many complexities and complications it has to pay its attention to, in effecting the purpose.

Man is not doomed to die hopelessly—to die an eternal death. To die is to be born again, and to be born is to die again. Man in his evolution breaks off so many mantles and puts on so many which, in the eyes of the *All-Wise*, suits him best for the time and purpose. The *Perfect* is the sum and substance of the universe, and every thing that is manifest is imperfect and is progressing on and on till it becomes perfect and one with the only *Being* of the universe. Man is not an exception to this. He is moving on and on, and will be doing so till at last he finds not *himself* as a separate individuality. On his way toward perfection he meets with such difficulties and troubles as are seen at present, nay, more.



They seem to resist and arrest his progress only to make him exercise and develop his spiritual faculties so that he might stand as firm as a rock in the midst of the waves of desires, and when he has acquired self-mastery, the acme of character-building, he might smoothly and calmly pass over them in spite of the roughness of cares and worries in the sea of life.

In the midst of all his calamities, heart-burnings, distress, and sorrow, man has not left his aim of happiness. Always the has his eyes cast on it. By hook or by crook he wants to hit the mark. Is it not in search of that, that he roves about the world, rends the rock, and swims the sea? He has recourse to all sorts of mechanical processes to gain what he so eagerly desires. But, after all, to his great disappointment, he meets everywhere only with its opposite. He bends all his energy to effect a purpose or gain a thing wherein he believes that the eternal happiness which he has ever been seeking for lies in repose, but when he succeeds in his efforts or comes in possession of the thing desired, he sees that the happiness which he wrongly presumed to be there, has receded so far back as the water in the mirage recedes when a traveller proceeds to approach it. Thus, like a rolling stone, he gathers nothing unless and until he, being taught by experience, holds back his outflowing tendency, and discerns, with the internal eye, the real order of things in the world.

Good and evil and all other correlative terms have no meaning in themselves when they are detached from the self-interest of the man who speaks of them, but they have much to do with those who know not the subtle laws of nature. To be plain, where self reigns supreme; where the idea of separate consciousness, of separate interest, of separate welfare predominates; there the idea of good and evil stings with pain and sorrow; and where the *Universal Self* reigns supreme; where the idea of being a part of the *Universal Consciousness*, the idea of universal interest, of universal welfare, predominates, there the idea of unity showers in gentle drops of pleasure and joy.

The good and evil of one does not at all respect another. What is one man's food is another man's poison. We may safely say that in the ordinary sense there is no good or evil universal; but individual ones are as numerous as there are human beings. The word "evil" I use here in its full sense which comprehends both badness and wickedness. Certain occurrences, certain things, certain qualities of animals and things; certain actions of animals and the properties of things; all these

we call good, and some others we call bad or evil. Each of the five wits and reason have so many goods and evils as there are varieties in the manifest things, and this multiplied by the number of living beings make up the total number of goods and evils. When there is so much scope for the display of love and hate it is no wonder that man is begirt with distress and sorrow. But should he introspect the matter a little, he would plainly see "there is no god dare wrong a worm."

It is the unbelief in the care of the *All-Perfect* and the thirst after self-interest that form the solid basis of the eye of evil with which people pollute and contaminate all divine and holy things. If the eyes of man be ever on the alert to make headway in the line of spiritual progress, he cannot but interpret what he calls evils as the angels that give him now and then a lift from the concrete and material things that pull him down to the hell. Man does not know that the *Law of Compensation* rules the world. If a man is benefited by the material thing, he suffers as much loss in the spritual acquirements whereas the one who is crushed by poverty and other miserable circumstances gains as much and makes a speedy progress on the moral and spiritual side. O Evils! Ye are the fire wherewith the Lord purifieth the unclean hearts of men.

The thoughts of good and evil being the play-ground of love and hate, and the two forces of love and hate—attraction and repulsion—being the main forces that toss man between the two extremes of pleasure and pain no man can ever dream of keeping up the balance; the state of being unshaken by the battering billows of the world; the state of enjoying the eternal sweet happiness that falleth not to the lot of either superstitious and bigotted religionists or the self-conceited unbelievers of God. The idea of good and evil might have, most probably, originated from that of God and of Devil. As the Christians superstitiously believe in the existence of Devil, the great antagonist of God, they seem to think that the Devil is the originator of all evils. Other theists thinking that God is chafed at the outrageous and wicked actions of His children, find the easy solution of the problem in attributing all the evils to the wilful and wanton command of God as if He takes pleasure in the sufferings of His children. Generally, no theist ever believes that what he calls evils are for his own good and that none could make any progress but for them.

Love and hate ever feed upon good and evil, and unless and until man knows what good and evil are in reality, the wild rushes of love and hate will never cease, and the normal state of man never be regained. So, we shall try to understand how we have to look at things that carry, in the ordinary dialect, the names of good and evil.



What is good? and what is evil? Is it not that what is conducive or beneficial to a useful end or purpose is good? and is it not that what is injurious or pernicious to a useful end or purpose is evil? If so, the next question is what is the useful end or purpose that a man should aim at? As we have said afore, though the purpose of man's creation is beyond our comprehension, yet we have a clue wherewith we may solve the problem. If I ask you what for the man in the street pedals his bicycle so fast or the farmer on the farm is busy with his plough in the hot sun, you will say something, like this, that because the former goes to meet a departing friend and the latter wants to get his livelihood. All right. What will you say if I ask you what is the motive or impulse in every man that causes him to act in multitudinous directions? You say desire. Yes; you are right. I hope that you clearly understand that it is the desire of something or other that causes every man to act, and but for that none will make a move. This universal impetus—desire, is of two kinds. One is respecting self-interest and the other respects the others. The desire that arises from self-interest can not but beget distress and sorrow when it does not fall in with fulfilment, but the other desire which concerns others', that is, the public's, arising from the sense of duty has not in it that stinging property which engenders distress or sorrow.

If we pause a little and ponder over the matter, we will find that it is want—want of anything, that gives rise to desire. Is it not that but what is imperfect and nothing else is in need of anything? So, we see that want indicates imperfectness, and where there is no want, there is perfection. All but very few have some want or other, which shows that they are susceptible of amends and development. It is only when one becomes perfect in his state that he wants nothing. This is the state of happiness. Though men seem to hanker and hunt after wordly things—the toys of the elders, still, they do that not because they will be quite satisfied with them but because they cannot help succumbing to the propelling force of their inmost heart to seek after that happiness "that passeth all understanding." So man in his present evolved state is ever active in the lines of discoveries, inventions, and reforms. The more man's appetite for eternal happiness is whetted—the more his thirst after real knowledge is excited, the more does he make his researches in the without, the more does he, to his great disappoint-

ment, discover, invent, and reform. But, after all, when the *self-refulgent Light* within dawns upon him, he has a clearer perception of the real state of things and begins to gallop on his way towards perfection.

It is evident that man, in fact, aims only at happiness, though he inadvertently is ever casting his eyes on material things. Because we see man in pursuit of worldly objects, can we say that he is doomed only to run after those shadows and die at last a heart-broken death. To think so is profane and demoralizing, and, in the eyes of the wise, will betray the shallowness and hallowness of the cranium which forms the resultant effect of God's grace. Now, if I am permitted to take happiness—the eternal happiness, as the aim of man, we have to interpret the meanings of good and evil as follows:—Whatever is conducive or beneficial in procuring the eternal happiness to man is good, and the opposite, evil.

As we have observed afore, perfectation is the aim of nature, and this it effects by so many changes and trials. Man in his deep sleep is devoid of pain and pleasure, but while he is in his full wake in the waking state or in his half-wake in the dreaming state, experiences the alternation of pain and pleasure. When the imperfect mind comes to play from its deep slumber, it comes but with love and hate. Peradventure it may not come out at all if it is not accompanied by them. It is *self*, or the self-conscious mind that forms the backbone of love and hate. But for that, there would have been no play at all of love and hate, and if there were any, it would have been smooth and plastic without any room for friction and rub, and would have thereby accelerated the joy of mankind. If at all we would like to name anything in the world as devil, we should not find any other thing more fitted to bear that name than this great monster and benevolent reformer—self; great monster because its ways are rigorous and painful, and exciting sympathy; benevolent reformer because only through its manifold, dexterous, and terror striking darings and shrinkings perfection is attained by man. All these teachings and the like will befit only those in whom the self is in its declining state and the *Universal Self* or the *God Consciousness* sets in to take possession of the throne within. To others these are rubbish and trash. So these are intended only for those whom these attract by the *Law of Attraction.* Those who are in the *self-plane* are, as it were, decoyed from the right path, and it is only when they are drawn by the heels through thick and thin that they awake from the self-hypnotized slumber and rush out of the wild in quest of the right and straight path



that leads to their destination. Till they acquire sufficient amount of knowledge from experience to turn from the *self-plane*, they cannot and should not be disturbed and their steps too are quite in keeping with the *Laws of Nature.*

Now, turning to the point we left, we see that it is *self* that intrudes into man's chamber of happiness and brings on him distress and sorrow. It limits man and makes the body all in all. It limits his thoughts, his deeds, and his actions, and makes all of them self-centered. By this *self*, he seems, so to speak, to have been clapped to prison. It is only in proportion to the unfoldment of the self that man becomes free and perfect, and enjoys happiness. So we may safely define good and evil thus: those that tend to lend a helping hand in the unfoldment of man are good, and those that impede his progress on that line are evil. To be plain, those that self rejoices in are evil, and those that help man a great deal to the destruction of self are good. Whatever gives life and force to self is detrimental to the attainment of eternal happiness and speedy perfection, and so, it is evil. Whatever strikes a blow, much better, a death blow on the head of the self, and makes man thereby near the long-seeking happiness and perfection is good. By keeping with this view, we understand that the multitude depicts evil on the face of real good and good on the face of evil. Being drawn down to the material things and quite ignorant of the sublime ones, they cannot form any idea of the realities. They distribute good and evil among the things that fall within their sphere. But we may see plainly how they have been making mad rushes downward instead of upward. So it is why Emerson said "whoso would be a man must be a non-conformist! To heed the public opinion, to conform to the customs and rules of the public, to make a good name in the public cannot but discover, to the eyes of the wise, one's degenerated and down-fallen state. What is still more strange and deteriorating is that they lead a life full of hypocrisy and dissimulation. None can jump out of himself and so every one being unable to resist the impulses from within yields to them in secret while he puts on an air of rectitude in society. It is the putting on of this mask that prevents the free play of *Life* in man and stunts his growth. Humanity may be classified as passing through three stages, not to speak of innumerable classifications that can be made in each. They are the dormant or the dull state of self, the state of self being in its zenith, and the selfless or the self-annihilated state. Order is the nature of things, and so no man can hope to get into the higher state without being drilled and fully developed in the lower one. Man gets his best only

when he plays his part full and well. Instead of that, to suppress his inclinations—the divine impulses within—and go under disguise are nothing but rushing headlong in the wrong direction which will eventually produce nothing beneficial. Those who stand in the middle plane should develop that state well; should give free vent to the play of self. Then comes its downfall naturally, without efforts. But on the other hand those who suppress self-inclinations, wrongly hoping that thereby they can gain the sympathy of the public or that they can enter into the *kingdom of heaven* are quite wrong in their view. They enter but last into the *gates of heaven.* Did not Jesus say something like this that the harlots and sinners go into the kingdom of God before the religious who succeed in being good?

Now, leaving out of consideration the view of the public on the question of good and evil and standing on our point of view on the matter, we have to analyse it a little. According to our sense, the evils are what are detrimental to spiritual progress or, in other words, what all pleases self. But in the strict sense of the word 'evil' this interpretation will not hold good; for, in fact, as we have already found the part of self also should have its full play and it is only after that, spirit dawns within and takes the lead. We cannot, therefore, say that what assists self in its development and maturation is evil. Good is evil when it is viewed from that just above it, and evil is good when it is viewed from that just below it. So good becomes evil and evil becomes good according as we change our stand point. To the deep and penetrating insight of the wise, all is good and good alone. The source of all things, all manifest things, being the *All-Good*, from whence can evil come into existence? All tends to produce good either directly or indirectly. All are undergoing rigorous training under strict guidance of the in-dwelling *Spirit* which brings on such hard experiences and crushing defeats as are quite conducive to the health and growth of the soul. But for the ignorance of the multitude that all these take place under the command and supervision of the *All-Wise*, there would have been no hope of improvement or progress for them; they would not mount to the topmost summit of the mount of egotism which unless they do, there is no downfall to the self. Now the circle of their sight being very much limited they wrestle hard and fast with the belief that what falls within their view is all in all. This blindman's buff won't do. Man should awake in *God-Consciousness* and find the wisdom of *Nature* in all its ways. Then he will find that everything is good not only in producing beneficial results, but also in being, as it is, a part of the whole.



All manifest things, all chances or incidents, the impingement of one upon another, all these are hieroglyphic marks that discover to the seeing eyes some divine and holy secrets—marks, which the ordinary eyes cannot decipher but take and interpret as they are. Duping is the first art that *Nature* employs to stir the dormant faculties of man. It is when man understands the cunning art of *Nature* that he gets the glimpses of realities now and then. Then he makes his solemn march straight towards his destination without lending his ears to the alluring counsels of the senses. So long as man is led away by his senses, he cannot see the *All-Good* everywhere, but will only be excited and pinched by good and evil alternately. It is only in that man in whom the self has begun to follow its declining course, springs the sagacity of feeling where the shoe pinches, and, therefore, only he is able to go straight to the cause and remove it. All others cannot help going wide of the mark to meet such experiences as will drive and force them to the point. Thus we see that even the thought of good and evil is good, as it serves some purpose in bringing about the ultimate good. I recollect a story in the *Mahabharata*—one of the well-known epic poems of the Hindu religion of which the well-renowned "*Bhagavat Gita*" forms a portion—which I think will clearly bring out the tenor of good and evil. When on one occasion several rajahs, nobles and gentries were present in the *Raja Sabha*, Krishna or somebody, in order to test *Dharmaputra* and *Duryodhana* put them the question that among the gathered, who all were good and who all bad or evil. *Duryodhana* carefully looking into the face of each and everybody that was present there selected some of them as good and the others as evil. But Dharmaputra said that he could not find there any man who was not good. It is the self-interest and self-denial that make all the difference of good and evil. The great man sees not distinctions. He at once goes to the womb of things and finds all as one there. He sees his infinite wisdom of the *All-Father* and finds every bit of *His* act good and well. He mourns not, grieves not, kicks not, but simply submits to the *Divine Laws* just as a faithful son implicitly obeys the commands of his wise father. When wisdom rules the universe, where is the room for foolish acts and their concomitant evils?

Thus, my readers, see the unity of good and evil. Refuse to see anything but good. When you cannot imagine or guess the good that has to ensue from what you think as evils, confer with the elders—elders that are not white with grey hairs but those who are well versed in the *Laws of Nature* and the secrets of chances. They are the interpreters of the unseen here to the blind mortals. Let

not confusions and perplexities hinder you from the right understanding of this. Order is the first *Law of Nature* and therefore they are not, in reality, confusions and perplexities, but order. All chances are but in accord with the *Laws of Nature*. The thought of evil has upset the people and they are ever wide-awake lest they should fall in the hands of evil. You, the advanced, mind them not. Imitate not the course of the world if you want to become real man. The multitude are mad with selfishness, and so the path you tread on is quite a different one from theirs. See good, and nothing but good in everything, everything that falls to your lot, be it what it may. God never gives a man anything which does not do him the greatest good possible. So, whatever goes to you is good; whatever goes to anybody is good. Nothing but good exists. In the same light understand that whatever action proceeds from you is good and good alone; whatever proceeds from others is also good and good alone. In the scale of your reason place not anything, and try to call it by some name or other. Fling open the doors of your heart so that *Spirit* may enter and rule. Bid farewell to the self, and lo! here enters *Spirit*. The world of evil vanishes at once and in its stead that of good lies in repose. All distress and sorrow disappear instantaneously and there is nothing but joy, joy here, joy there, joy everywhere. See, the worldly man envies at you. The same devil, evil, is following him like the shadow. So then, I repeat to you once again, Refuse to see anything but good. Think that all is good. Meditate all is good, Let good enter your thought, word and deed. Let it circulate through your blood and form your whole being. Let thy motto be "All is good and nothing but good there is or was or will be." The *All-Good* is all, and, therefore, all is good. Mind this, I say once again, think of this, and meditate upon this.

> "Reason, alas! It does not know itself:
> But man, vain man! would with his short lin'd plummet
> Fathom the vast abyss of *Heavenly Justice*."

**SWAMI VALLINAYAKAM.**

---

## THE GODLESS EDUCATION.

For nearly half a century India has been slowly and steadily imbibing the spirit of the western civilisation. Modern science and modern thought have been leavening the Hindu society and a spirit of



unrest has been created. The old ways of life are rapidly becoming unsuited to the present environments, and the national ideals themselves are either changing or are becoming unsettled. In short, in this stage of transition, it may not be a violent stretch of the truth to say, that the Hindu society is on its trial. No wonder then that those who think that they are competent to guide and lead come forward with their pet theories to solve the most complex of all problems the problem of Indian social evolution. It seems to be agreed that the Indians are yet far below the stage when they can be said to form a living nationality, every section of which will *sincerely* feel the weal or the woe of the other. A lofty ideal in life, a lively sense of duty, a vigorous feeling of patriotism, a manly sense of self-respect are not the conspicuous traits of the average Hindu. He is no doubt a very nice fellow in all personal and private concerns. But he has not felt the stirring sentiments of a well regulated national life.

There is now a vague but loud cry that if the Indian youths are given religious instruction in schools and colleges they will be given an ideal education. It is argued that the present system of education breeds rank scepticism and that the youths are growing in irreverence and are losing their old national ideals. How far such an assumption is based on truth it will be very difficult to decide. Granting that the assumption is true —and it may be so to a large extent—are the advocates of religious instruction assured that the growth of scepticism will be arrested by a few religious pundits expatiating the horrors of the *Garuda Purana* or indulging in the sublime casuistry of the philosophic Upanishads? What is it that they will teach in the name of religion? It is unfortunate that the learned advocates of religious instruction do not clearly state what they intend teaching in the name of religion. A few "platform speakers" glibly ask an audience of "shabashwallahs," "Does not our noble religion contain aught that is common to all religious sects, and why not teach them?" They mean that the common factors of the various religions can be collected together and taught systematically. But a little reflection will point out that such an attempt will be highly impracticable. Mrs. Annie Besant has tried this experiment and her publications are objected to as leaning more towards one sect of philosophy. In every community there will be a large number of bigots (earnest believers, if you please), who will find in trifles stupendous heresies. Again Hinduism is a conglomerate of various religions from the lowest forms of fetishism to the highest flights of the Vedantic philosophy. Besides these—the religions of the Sastras, the Puranas, the Ithihasas, and the Vedas—the Hindus have

become the slaves of customs which are looked upon as fundamental tenets of religion. If any schoolmaster should dogmatically render violence to these dearly cherished superstitions he will be thrusting his head into a hornets' nest. Fierce animosities would be aroused and instead of laying foundations for the formation of a sturdy Indian nationality we will be killing what little good may arise out of other causes. Again think what merit will be attached to your religion if you wish to make it a handmaid to your social advancement. Are you not to believe in it, because it is truth? Is that to become a means to an end? The remedies to social evils do not lie in religious instruction. They should be sought in a healthy home life and a sound liberal education. India has had enough of strife in the past. Call it not forth again in the name of religion. Peace and concord should be her watchwords in the future. How strange, when the nations of the west are perfecting their arts and industries the Indians should be busying themselves in raking up the seeds of national discord! Are there no means for you to give religious instruction outside the four walls of a school room? The panacea for developing a sturdy Indian nationality may not lie in the imparting of *religious instruction in schools and colleges.*

**C. GOVINDA RAU.**

---



## KADAMBARI SARAM.

(11*th Instalment.*)

பிரயாணத்தில் முக்கால் பாகம் கஷ்டப்பட்டு சந்திராபீடன் வந்துவிட்டான். வழியில் மேகநாதனைக் கண்டு அவனை, வைசம்பாயனன் சங்கதி என்ன என்று வினவ அவன் ஒன்றுஞ் சொல்லாமையால், அச்சோத ஏரிக்கு நேரேசென்றான். வெட்கத்தால், வைசம்பாயனன், ஒருவேளை ஒளிந்துவிடுவானோ, எனநினைத்து, நாற்புரத்திலும், மனிதர்களை காவல்வைத்து, கொடிகளிலும் செடிகளிலும், கற்களிலும் தேடினான். இருப்பதாக ஜாடையொன்றும் காணவில்லை. வைசம்பாயனனைக்காணாது அடியெடுக்க மனம் ஓடவில்லை. காதம்பரீயைக் காணாது விசேஷகாலம் பிராணன் தங்காது எனத்தெரிந்து, எல்லாவற்றிற்கும், மகாசுவேதை அண்டைபோய், அவனை விசாரிப்போமெனத் தீர்மானித்து, தன் சைந்நியத்தை பின்னே நிறுத்திவிட்டு, தானும் பாம்புச்சட்டைபோல், இலகுவாயும் மேகம் ஒழிந்தபின் சந்திரகைபோல் மனோகரமாயுமுள்ள ஆடைகள் உடுத்து, மகாசுவேதையின் ஆச்சிரமம் சென்றான். அவன் குகையின் வாசலில், வெண்மையான கல்லின்மீது தலையைக் குனிந்துகொண்டு கண்ணீர் சொரிய, அடங்காத கோபத்தால் அவயவமெல்லாம் அசங்க, பெரும்புசலில் அடிபட்ட கொடிபோலிருக்க, தரளிகை அவனைப்பிடித்துக்கொண்டிருந்தாள். என் வரவைக்கண்டு சந்தோஷிப்பவனும். இவ்வாறு துயரப்படுவதால் காதம்பரீக்கு ஏதோ ஆபத்து நேரிட்டிருக்கும் எனச் சந்தித்து அயலில் ஓர் மூலையில் உட்கார்ந்து, தரளிகையை என்ன காரணமென வினவினான். அவள் ஒன்றும்பேசாது, மகாசுவேதை முகமே பார்த்து நின்றாள்.

மகாசுவேதையே, துக்கத்தால் வார்த்தை வராமல், தொண்டை அடைக்க, பதில் சொன்னாள். முன்னொருதரம், வெட்கங்கெட்டு, உயிரில் பேராசைகொண்ட எனக்கு துக்கத்தால் இடிபடப்பட மனங்கல்லாயிற்று. ஆன்தா லல்லவோ, சுகசங்கதிகேட்க உரித்தான உன்செவியில் என் துயரங்களையெல்லாம் ஊதினேன். மற்றும் ஓர் விபத்தைப்பற்றி இப்பொழுது சொல்லுகிறேன் கேளும். நீர் ஹேமகூடத்தைவிட்டு புறப்பட்டுப் போனதாக, கேயூரகனிடத்தில் கேட்டதுமுதல், நான்விசனமுற்று பிறகும், தபசுசெய்ய, இந்தக்குளத்தண்டை வந்துவிட்டேன். என் வீட்டுக்கு அதிதியாய் வந்து உமக்காவது என் பிராணத்தோழிக்காவது, இருவரும் கோரின பாணிக்கிரகணத்தை இசைக்கமாட்டாது உபகாரம் செய்தவனல்ல. நான் இங்கே வந்தபிறகு உம்மைப்போன்ற ஒரு பிராமணச்சிறுவன், மதியற்றவன்போலும், கண்ணும் கண்ணீருமாய், உதடு

அசைய, கெட்டுப்போன வஸ்துவை தேடுபவன்போல் அங்குமிங்கும்பொட்டைப்பார்வை பார்த்துக்கொண்டு நின்றான். அவன் என்னிடத்திற்கு வந்து, முன்பின் பார்த்திராத போதிலும், வெகு பழக்கமுள்ளவன் போலும், ஆழ்ந்த முதிர்ந்த சிநேகமுடையவன்போலும், ஞாபகம் செய்துகொண்டவன்போலும், பார்வைக்கு துக்கிப்பவன்போலிருந்தும் உள்ளத்தில் ஆநந்திப்பவன்போலும், என்னுருவத்தைகுடிப்பவன்போலும், ஆகர்ஷிப்பவன்போலும், உள்புகுவான்போலும் காதண்டை வரைக்கும்நீண்டு நீர் நிறைந்து; மலர்ந்த கண்களால் இமைகொட்டாது என்னைப் பார்த்துச்சொன்னான்; 'அழகியபெண்ணே, பிறப்புக்கும், வயதுக்கும், உருவத்துக்கும் உரித்தபடி நடந்துகொண்டால் அல்லாது உலகநிந்தைக்குஆளாவார்கள். மல்லிகைமாலையைப்போல், ஸரமோரமானதாயும், அணியத்தகுந்ததாயுமுள்ள உன்தேகம் இந்த கடும்தவத்தால் வாடுகிறதே. குரூபியும் உலகசுகங்களை அனுபவித்து, பரலோகசிந்தை மேலிட்டு, பிறகே இவ்விதமாய் தவம்செய்தால் அது சோபிக்கும் உன்னழகுக்குத்தகாது உன்மெல்லிய தேகத்துக்கு இந்தத்தவம் தாமரைப்பூவின் மீது பெய்த பனிக்கு ஒப்பாகும். உன்னைப்போன்ற அற்புத வடிவுடையவர்களே, உலகசுகத்தை அசட்டைப் பண்ணுவார்களானால், மன்மதன் புஷ்பங்களால் பாணம் தொடுத்து, வில்வளைத்து நிற்பதனால் என்னபயன்? சந்திரன் உதயமாவானேன் ? குமுதமும், நீலோத் பலமும், „ தாமரையும் மலர்ந்து, ஆவதென்ன ? வஸந்த காலம், வருஷம் தப்பாது, வருவதேன் ? மழைக்காலத்து ஆடம்பரங்கள் யாவையும் வீணே. தோட்டங்கள், தென்னல், ஆற்றிலிருக்கும் அழகியமணல்மேடுகள் பிரயோஜன மற்றவை." அவள் சொன்னவார்த்தைகளொன்றும், நான்கவனியாமல், நீர் யார், ஏன் இப்படிப் பேசுவீர் என்று கூட கேட்காமல் வேறோரிடம் சென்றேன். அர்ச்சனைக்கு புஷ்பங்களைக் கொய்துகொண்டு தரளிகையைக் கூப்பிட்டு, இங்கே ஒரு பிராமணன் கெட்ட எண்ணத்தோடு திரிகிறான். இனி அவன் இங்கே வராதபடி செய். என்றும் அப்படிப் பிடிவாதமாய் திரும்பி வருவானானால் அநர்த்தம் நேரிடும் என்று, தெரிவிக்கச் சொன்னேன். அவனோ எவ்வளவு தடுத்தாலும், அண்டாத அன்பினாலோ. கொடும் விதியின் செயலாலோ. வருவதை நிறுத்த வில்லை. சில நாள் சென்றபிறகு, ஓர் இரவு தரளிகை நித்திரைபோக, எனக்கு, தூக்கம் வராது இந்தகல்லின்மீது படுத்தேன். ஆம்பல் வாசனையுள்ள காற்று ஓடையிலிழுந்து மெல்ல மெல்ல வீசிற்று. சந்திரனும், தன்னுடைய, வன்னம் வைக்கும் கூர்ச்சம்போன்ற கிரணங்களால், நாற்றிசையும் வெள்ளையடித்தான். அகிலலோகத்துக்கு ஆநந்தத்தைப் பொழியும் சந்திரன்என் இருதய நேசனையும் எனக்கு ஒரு வேளை ஒப்பிக்க லாகாதா என நினைத்



தேன். புண்டரீகனுடைய திருநாமத்தை நினைத்து, அற்புதவடிவுடைய பெரியோர் அளித்த வாக்கும் என் அதிருஷ்டம் வீணாயிற்றே. உயிர்பிழைத்திரு என்று தைரியம் சொன்னவர், மறுபடியும், தரிசனம் கொடுக்கவில்லையே, இங்கிருந்து எடுத்துப் போகப்பட்ட புண்டரீகன்தான் என்னசெய்வார், உயிரோடு வானம் சென்ற கபிஞ்சலன் தான் செய்தி அனுப்பித்தானா, என்று இவ்வாறு ஆலோசித்துக் கொண்டு விழித்து இருந்தேன். அப்பொழுது, திசையெங்கும் கரைபுரண்டு ஓடும் சந்திரகை வெள்ளத்தில் மிதந்து, பெருமூச்சால் முன் தள்ளப்பட்டு, அன்புக் கடலை தாண்டுவான்போல் இருகரங்களை நீட்டிக்கொண்டு என்னண்டைக்கு அந்தப்பிராமண சிறுவன் அணுகினான். ஒருவேளை இவன் என்னை வெறியில் தொடுவானாகில், இந்த பாபிதேகத்தைத் விட்டுவிட வேண்டுமே. இத்தனை நாள். புண்டரீகனை திரும்பிப்பார்ப்போமென்ற ஆசையால் எவ்வளவேனும் இஷ்டமில்லா விடினும், பிராணனை காப்பாற்றி வந்தது வீணாகி விடுமே. இவ்வாறு நான் ஆலோசித்து கொண்டு நிற்க, அவன் என்னண்டை வந்து "சந்திரமுகி, என்னை சந்திரனும் மன்மதனும் ஒன்று கூடி கொல்ல எத்தனிக்கிறார்கள். உன்னைச் சரணமடைந்தேன். என் பிராணன் உன்கையி லிருக்கிறது. நானோ கதியற்றவன். சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவது தபசுசெய்வோருக்கு தருமமல்லவர், நீ அப்படிச் செய்யாவிட்டால், இதோ மன்மதபாணங்களுக்கும், சந்திரகிரணங்களுக்கும் இரையாய் இறக்கிறேன்." என்று சொன்னான். இதைக் கேட்டதும், என்தலையிலிருந்து அக்கினி வெளிப்பட்டது, ஆகிலும் உடம்பெல்லாம் எரிய கண்ணில் தளும்பும் நீர்த்துளியாகிய நெருப்புப் பொறியால், அவனைப் பொசிக்குவன் போலும், உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையில் உடல் நடுநடுங்க, ஆவேசம் வந்தவன்போல கோபத்தால் கடூரமான மொழிகள் சொன்னேன். "அடேபாபீ, என்னைப்பார்த்து இந்த வார்த்தைச் சொல்லும்போது, உன் தலையில் இடிவிழயில்லையா? உன்நாவு ஆயிரம் துண்டமாய் பிளக்க வில்லையா? உன்வாய்குளரவில்லையா? அட்சரம்மறக்கவில்லையா? ஸகலலோக சுபாசுபங்களுக்கு சாட்சிகளான ஐந்து மகாபூதங்களும் இல்லைஎன்று நம்புகிறேன். இருந்தால் இம்மாதிரிசொன்ன உன்னை அக்கினி பிடிச்சாம்பலாக்காமல் விட்டாரா? வாயுகொண்டு போகாமலிருப்பாரா? வருணன் உன்னை அமுக்கவில்லையா? பூமிதேவி பாதாளத்தில் அமுத்தாமல் போனாளா? ஆகாயம் உன்னை உருவில்லாமல் செய்யாதா? சட்டதிட்டமுள்ள இந்த உலகத்தில் வியவஸ்தை அற்று நீ எங்கிருந்து பிறந்தாய் ? மிருகஜாதியைப்போல் மனம்போன போக்கெல்லாம் திரிகிறாய்."

**A. SRINIVASA IYER.**

# THE LIFE OF SAKIZHAR.

## சேக்கிழார்.

வெண்பா.

பெந்தமெலாம் போக்கும் பெரியபுரா ணந்தந்த
எந்தைபிரான் சேக்கிழா ரிவ்வுலகில்=வந்திலரேல்
நாயன்மார் கீர்த்தியெங்கே நல்லதமிழ் வேதமெங்கே
தூயசிவ பத்தியெங்கே சொல்.

அநபாய சோழமகாராஜன் தமது சமஸ்தான வித்துவான்கள் அனேகர் தம்மைச் சூழ்ந்திருக்க வொரு அரியாசனத்தி லொரு நாள் அமர்ந்திருந்தனன். அவ்வமயம்,

"வேழ முடைத்து மலைநாடு மேதக்கச்
சோழ வளநாடு சோறுடைத்து=பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து"

எனப் பூலோக சரஸ்வதியாகிய ஔவை பிராட்டியார் அருளிச்செய்த வெண்பாவானது பிரஸ்தாபிக்கப்பட்டது. கேட்ட அரசன் வியப்படைந்து இஃதென்னை? சான்றோர்கட்கு இருப்பிடம் தொண்டைமண்டலந்தானோ? பரிட்சித்துப் பார்ப்போமெனக் கருதித் தமது வித்துவான்களுடன் நெடுநேரம் ஆலோசித்து, ஞாலத்திலும், கடலிலும், மலையிலும், மிகப்பெரியது யாது? என வினாக்களை யெழுதி யொரு திருமுகம் தொண்டைமண்டலத்தரசனிடமனுப்பி விடைகேட்டனன். அது கண்ட தொண்டைமான் பார்வையிட்டுத் தம்மிடத்துள்ள ஆஸ்தான வித்துவான்களுட் சிறந்த குன்றத்தூர் முதலியாரிடங் கொடுத்துச் சீக்கிரத்தில் விடையெழுதித் தரும்படி யொருகாலவரை யேற்படுத்தினன். முதலியார் அதனை நோக்கித் தானுந் தனக்குச் சிநேகிதமாயுள்ள பலவித்துவான்களுமாகக் கூடிப் பலநாள் ஆலோசித்தும் விடை தோன்றாமையின் மிக வியசனமடைந்து, அரசன் ஏற்படுத்திய காலவரை நெருங்கினமையின் பயமுற்று உணவு முதலியவுங்கொள்ளக் கருதாது ஏக்கமுற்றிருக்கையில், அம்முதலியார் மூத்தபுத்திரர் அருண்மொழித்தேவர் என்பவர் தனது பிதாவின் வருத்தத்தைக் கண்டு தான் வித்தியார்த்தியாகையால் நேரே கேட்க வஞ்சித் தனது தாயார் மூலமாக அரசன் திருமுகத்தினை வாங்கிப் படித்துப்பார்த்து,



காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
நன்மை கடலிற் பெரிது.

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ தேவர் திருக்குறளில் மூன்று திருக்குறள்களை அரசன் கேட்ட மூன்று வினாக்களுக்கும் விடையாக வெழுதியதாய் மூலமாகத் தந்தையிடங் கொடுத்தனர். தந்தை வாங்கிப் பார்வையிட்டு அளவிலாமகிழ்ச்சி யடைந்து தனது அருமைப் புத்திரனை யணைத்து முத்தமிட்டு அறிவின் வியாபகத்தினை மெச்சி வியந்து பாராட்டி வேந்தனிடத்து விரைவிற சென்று தெரிவித்தார். தொண்டை நாட்டரசன் அதைச் அநபாயனுக் கனுப்பிவைத்தனள். சோழன் கண்டு களிகூர்ந்து தக்கவிடை கொடுத்த அவ்விடத்துவ சிகாமணியைத் தம்மிட மனுபபும்படி அனேகமான பரிசுகளுடன், பல்லக்குக் கொடுத்தனுப்பினன். அதைக்கண்ட தொண்டைமான் தமது ஆஸ்தான வித்துவானாகிய குன்றத்தூர் முதலியாரைச் சோழனிடம் போகும்படி உத்திரவு கொடுக்க, அதற்கு அவர் தனது புத்திரன் அருண்மொழித் தேவர் விடைகொடுத்தவராகலின் அவரை யனுப்பிவித்தார். சோழராஜன் அவ்வருண்மொழித்தேவர் பாலியத்திலேயே வாய்ந்திருக்கும் வித்தை, புத்தி, யுக்தி, சாமர்த்தியங் கட்டு மிக் வியப்படைந்து, அவரைத் தமது முதன் மந்திரியாக வமைத்துக் கொண்டு அன்புடனாதரித்து உத்தமச் சோழப் பல்லவன் என்று முயர்பட்டமு மளித்தனன். இவ்வருண்மொழித் தேவர் தொண்டை மண்டலத்து நாலாறு தோட்டத்துப் புலியூர்க் தோட்டம் குன்றத்தூர் நாட்டுச் சேக்கிழார் குடியில் ஓர் சிறந்த இரத்தினம் போல விளங்கினராதலின் இவரைச் சேக்கிழார் எனவே யாரு மழைப்பாராயினர்.

இச்சேக்கிழார் அநபாய சோழனுக்கு அமைச்சனாக அமரவும் அவ்வமைச்சுக் குரிய தொழிலில் மிக வல்லவராயினார். அவர் அரசாங்கத்திற்குரிய தொழில் செய்யும்போது அதற்கு வேண்டுஞ் சாதனங்களும், அதற்கேற்ற காலமும், அது சய்யும் விதமும், அவ்விதத்திலே செய்யப்படும் அரியதொழில்களும், பொருந்த வெண்ண வல்லவர். தொழில் செய்யுமிடத்து அசைவில்லாமையும், குகுகளைக் காத்தலும், நீதி நூல்களைக்கற்று விதிவிலக்குகளை யறிதலும், முயற்சியும் முன்சொல்லப்பட்ட அங்கங்களோந்துடனே திருந்தவுடையவர், போர்வந்வ விடத்துப் பகைவர்க்குத் துணையாயினாரை அவரை விட்டுப் பிரிக்க வேண்டினால் பிரித்தலும், தம்

மிடத்தோரை இடைபிரியாமற் கொடையினாலும் இன் சொல்லினாலும் நாத்துக் கொள்ளுதலும், தம்மை விட்டும் தமரை விடமும் பிரிந்தவரைப் பொருத்தலிலும் வல்லவர். ஒரு காரியச் செய்கை பலவிதமாகத் தோன்றினால் அவற்றுள் ஆவதை ஆராய்ந்தறிதலும் அது செய்யும்போது பலிக்கும் விதம், காடிச்செய்தலும், சிலரைப்பிரித்தல் பொருத்தல் செய்தலிலே அவர்க்கு இதுவே நம்பத்தக்கதென்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலிலும் வல்லவர். அரசனாகவே செய்யப்படும் அறங்களைத் தெரிந்து தனக்கு ஏற்ற கல்வியாலே நிறைந்தமைந்த சொல்லையுடையவராகி எந்நாளிலும், தொழில் செய்யுந் திறங்களை யறிந்து ஆலோசனை செய்வர். அறிந்து சொல்லினவரது அறிவையும் அழித்து தானும் அறியானேயாயினும் அக்குற்றநோக்கிக் கைவிடாமல் அரசனுக்கு உறுதியானவைகளைச்சொல்லுவர். இத்தகைய குணாதிசயங்களைச் சேக்கிழாரிடத்து நிகழக்கண்டு அநபாயன் மிகவிசுவாசித்து அவரைச் சிறிதுநேரமும் விட்டுப்பிரியாது வாழ்ந்து வந்தனன். அச்சேக்கிழார் அச்சோழநாட்டுத் திருகாரகேச்சுரமென்னுந் தலத்தில் அளவானது நிறையப்பெற்று தமது ஊராகிய தொண்டைமண்டலத்துக் குன்றத்தூரில் மடவளாகத்தையேற்படுத்தி, அதனுள் திருக்கோயிலொன்றைப் பிரதிஷ்டை செய்து, அநபாய சோழனுடைய திருநாரகேச்சுரம் போல ஈதுந் திருநாகேச்சுரமெனவே திருப்பெயரிட்டு, அததிருநாகேச்சுரத்தில் நித்திய பூசையும், அதற்கங்கமான திருவிழாவுமாகிய, நித்திய பூசையுமேற்படுத்தி, அநபாய சோழனுக் குரிய செங்கோலினை இமசேது பரியந்தம் நடாத்திவந்தனர்.

அக்காலத்தில், சமணர்கள் ஒருகாவியமாக வேற்படுத்தி வழங்கச் செய்த, வேதவிரோதமும், வேதசாரப் போலியுமான அர்த்தங்களும் பிறவும் உட்பொருளாகக் கொண்ட சிந்தாமணியென்னு கசாலினை உண்மையென்று கருதிச் சிலர்கற்றுக்கொண்டு, கொல்லினைக் குத்தியுண்ணாமல் உமியைக் குத்திக் கைவருந்தியும், கறவைப் பசுவிருக்க மலட்டுப் பசுவைக் கறந்து மனந்தளர்ந்தும், குளிர்ந்த மலர்ச்சோலை வழியிருக்கப் பள்ளத்தில் விழுந்து அதிலுள்ள சேற்றைப் பூசிக்கொண்டும். கரும்பிருக்க இரும்பைத்தின்றும், தீபமிருக்க மின்மினிப் பூச்சியைத் தீயென்று கருதிக் காய்ந்தும் வீண்படுதல்போல நொந்தார்கள், அநபாய சோழனும் இக்காப்பியத்தினைப் பலவாறாகப் பாராட்டிக் கேட்டுக்கொண்டிருக்கச் சேக்கிழார் அறிந்து சோழனை நோக்கி, அரசனே! சமணர்களுடைய பொய்மையாகிய சரித்திர மிது. இம்மைக்கு மறுமைக்கு முதவாது, இன்னாற் காமச் சுவையை இலம் பகந்தோறு மிகுத்துரைக்குஞ் சிந்தாமணியிற் குறித்துள்ள சீவகன் கழிகாமக் கடலில் முழுகி அறிவு புறம்



போன சச்சந்த மன்னன் தமோகுண விருத்தியிற் பிறந்தமேன்மையில் கான்முளை. செல்கதி பிழைத்திங் கோல்கியமானிடன், பழவினை கோயிற் பரிபவமுற்றுத் தெளிவிலச்சணந்தி பாற்சிலகலை தேர்ந்தவன். தன்னின் நலமுடையவனும் சதஞ்சனன்றாள் பின்னர் வழிபட்டு வரம்பெறு பீடிலான். மடங்குறுஞ் செவ்வியில் தன்னிலைமாறி உடம்பு வெவ்வேறு கொள் இடம்ப நல்குரவினள். பகற்சூறையாகும் பழித்தொழில் வாழ்க்கராம் எளியவேட்டுவரையும் கைதவம்பழுத்த கட்டியக்காரனும் மெய்வலியிலானையும்வென்றி கொள்வீரன். தத்தைமுதலாக இலக்கணையீறாக மனைவியர் கட்டியிருப்பவும் தேசிகப்பாவையாம் நாடகப்பரத்தை காமம் விரும்பும் ஏமமில்தூர்த்தன். ஏமாங்கதநாட்டிடஞ் லசிவாண்ட சாமானியனுமோர் சிறுமன்னன். கந்தக்கடன்ளரு நந்தட்டனென்றுஞ் செட்டி நாய்கன்றன் னொருசேட்டன். அருகந்தர் சில்லோர் ஆசையிற் கட்டிப் பாடநின்ற நாடகமானிடன். பொய்த்தவம் பொய்யாப்பொருந்து ஞானம் இத்தரையெய்தி ஏதிலருகன் பாதம்போற்றிப் பழிபடுவீதசோகமென் சூனியகதியுறுந் தொழும்பன். இந்தச்சிசீமச்றுனை வகன் சரிதங் கேட்டுப்பாராட்டுந் தகுதியுடையதோ? இம்மைக்குமறுமைக்கும் உறுதி பயனைக்கொடுப்பது தெய்வச்சரித்திரமன்றோ என்றனர்.

அனபாயசோழன்கேட்டு,மந்திரியே! சிந்தாமணி அவலமான தாய்ப் பிரயோசனமற்ற வீண்கதையாகில், இருமைப் பயன்களைக் கொடுக்கத் தகுந்த தெய்வகதை என்பதுயாது? அதைக்கற்றுணர்ந்த திறமையுடையவர் யாவர்? அக்கதையை இவ்வுலகத்திற் சொன்னவர்கள் யாவர்? கேட்டவர்கள் யாவர்? தவநெறியைக் கூறுங்கதையோ? அல்லது தவத்தைச்செய்து பேறுபெற்றாரது சரித்திரமோ? அதை முறையாகச்சொல்லுமென்று கேட்டான். சேக்கிழார் குரிசில் சொல்லுவாராயினர். உலகத்தின்கண் முதல்வனுடைய அடியார்களது பெருமையினைச் சொல்லுவதற்குத் திருவாரூர்த்தியாகப் பெருமான் தில்லைவாழ்ந்தணரென்று முதலடி எடுத்துக்கொடுத்தருளத் திருக்காவலூர்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதினொரு திருப்பாட்டாகப் பாடியருளியத் திருத்தொண்டத் தொகைக்குத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் பொருளருளிச்செய்ய நம்பியாண்டார் நம்பி கலித்துறைத் திருவந்தாதியைச் செய்தனர். இத்திருவந்தாதியை திருமுறைகண்ட சோழராகிய அபயகுல சேகரனும், சிவாலயதேவர் முதலாயுள்ள அறிஞர்களும் அன்புடன் பாராட்டிக்கொண்டுவந்தனர் என்னவும், அந்தத் தெய்வத் தன்மையுள்ள சாஸ்திரத்தினை முறையாகச் சொல்லவேண்டுமென்று அநபாயன் சொல்லக்கேட்டுச் சேக்கிழார் தில்லைவாழந்தனர் முதலாகத் திருநீலகண்டத் துப்பாணரீ

ருகக் கூறியத் திருத்தொண்டத் தொகைப்பதிகத்திற்கு வகைநூலாகிய நம்பியாண்டார் கூப்பி திருவந்தாதித் தொடர்பினை விரிவாயெடுத்துச் சொல்ல, அதனைச் சோழன்கேட்டு முதல்வன் றிருவருளை நோக்கி அதிசயித்து அடிமைத் தொண்டினைச்செய்து நித்தியானந்த போகப் பேற்றினை யடைந்து செல்லத்தக்க முத்திநெறியினை நினைந்து மனமுருகிச் சேக்கிழார் திருமுகத்தை நோக்கிக் கூறுகின்றான். அந்தந்த அடியார்கள் அவதரித்த நாடுகளும் அவர்களிருந்த ஊர்களும், அவர்கள் வந்துதித்த திருமரபுகளும், திருநாமங்களும், வைதிக செந்நெறியாகிய சமயத்தில் செய்துகொண்டிருந்த திருத்தொண்டும், திருத்தொண்டத் தொகையருளிச் செய்ததற்கு முற்காலத்திலும் பிற்காலத்திலும் முதல்வன் றிருவடிக்கீழ்ச்சிறந்த பரமுத்தியைப் பெற்றவர்களும், சீவன்முத்தராயிருப்பவர்களும், இனிப் பிறப்பவர்களும், அம் முத்திபெற்ற அடியார்களை யடைந்து திருவருளைப் பெற்றவர்களும், அவர்களிடத்துப் பகைகொண்டு கதியடைந்தவர்களும், அவர்கட்குப் பகைகொண்டவராய் நரகமடைந்தவர்களும், இல்லற நெறிக்கணின்று முத்தியடைந்தவர்களும், துறவறத்திலிருந்து முத்தியடைந்தவர்களும், பிரமசாரிகளாகவேயிருந்து அருள் பெற்றவர்களும், முத்திநெறியினை ஞானாசாரியரது திருவருளாலடைந்து பெற்றவர்களும், பதிபூசையைச் செய்து பரமுத்தி யடைந்தவர்களும், திருவேடமே யுண்மைப் பொருளென மனத்திற் கொண்டு முதல்வனடிக் கீழ்பொருந்தச் சென்றவர்களும் ஆகிய இவர்கள். அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியார்.

---

## ARUNAGIRI NATHAR.

### அருணகிரி நாதர்.

(302—ம் பக்கத் தொடர்ச்சி)

### சம்பந் தாண்டான் விகாதம்

அரசன் கந்தக் கடவுட் கடிமையாகிய அருணகிரி முனிவர் குறித்த பதினாறுகால்மண்டபத்து ஈசானதிக்கிலுள்ள தூணையடுத்தும் அமணப் புலவன் குறித்ததலத்தும் அழகுபெறப் பந்தரிடுவித்து குண்டமுதலியவும் அமைக்குமாறு ஆஞ்ஞாபித்து இவ்வாறே வேண்டுவனயாவும் செய்தும் கவற்சி மிகுதியால் கண்ணுறங்கலின்றி இடைநின்ற சின்னாளும் பன்னாளாக் கழித்திருக்குஞ் சமயம் குறிப்பிட்டிருந்த தினம் வந்தது. வருதலும் சம்பந்தாண்டான் ஆகமவிதிப்படி அம்பிகையினது அருளுருவத்தினை



மனத்திலிருத்தி ஹோமாதி ஸகலகிரியைகளும் நடத்தி 'இந்தவேளையில் அரசனுமறியும் வண்ணம்வந்து தரிசனந்தந்தருள்' எனமிகவும் வேண்டியுரைத்து தேவியினது மூலமந்திரமாகிய விஞ்சையினைத் தழும்பேறவுரைத்த நாவினாற் சிலமுறை யுச்சரித்து நின்றான். அதே தினத்தில் அருணகிரிமுனிவரும் குமாரதெய்வத்தை மிகவும் ஏத்தி 'இன்று அவன் மொழிப்படி தேவிவாராதிருக்க அருள்புரிய மாட்டுவையோ' என பக்தியோடிருந்தனர். தன்னுற்ற பக்தன் வேண்டுதலும் குமாரன் எழுந்து அம்பிகையென்னுந்தன் தாய்மடிமீதுசென்று வீற்றிருந்து தேவிக்கு உவப்பு விளைக்கும் பலவித ஆடல்கள் பயின்று கொண்டிருந்தனன். தேவியும் தன்னைவருந்தி யழைப்பவனிடத்துச் சூக்குமவுருக்கொடுசென்று 'என் மதலையால் தடைப்பட்டேன். இன்று பிறர்காணவருதல் எனக்கியலாது' என்றுரைத்தாள். இதைக் கேட்டுச்சமணன் மிக்க துயரமுற்றவனாய் அரசனிடம் தன்குறையை நாணத்தோடு கூறினன். அரசனுக்கும் சந்தேகமுண்டாயிற்று. இன்று ஒன்றுபொய்த்தது நாளை என்னாமோ என்றெண்ணினான். சிலர்சமணன் திருடன் என்றனர். சிலர் அவன் சொல்லியதுண்மையே என்றனர். ஆயின் அருணகிரியார் தவம் உயர்ந்ததன்றோ என்றனர்சிலர். அதுநாளைப்பார்ப்போமென்றனர் இன்னும்சிலர். சம்பந்தாண்டனுக்கோ அவமானம்பொறுக்க முடியவில்லை. அதனால்கோபமுமிகுந்து பலவாறெல்லாம் உரைத்தான். பின்னும் வீடுபோய்ச்சேர்ந்ததும் தேவியை வணங்கி 'என்பகைவன் சொல்லியவண்ணம் குகன் வராதிருக்குமாறு நாளையருள்செய்ய வேண்டுவதுன்கடன்' எனமிகவும் வேண்டிக்கொண்டு ஷோடசோபசாரமும் பொருந்தப்பூஜை யியற்றினான்.

அன்றிரவெல்லாம் அருணையூரார் தூங்காது இதுவே பேச்சாயிருந்தனர். மறுநாட்காலை கதிரவனும் தூணில்வேலவன் தோன்றுங்காட்சியைக்காண அருகர் யாவர்தாம் என்றுபார்க்க வருபவன்போல் கீழ்த்திசையிலுதித்தான். மன்னனாதிமாந்தரெல்லாம் வந்துகூடினர். கோபுரத்து முனிவரும் ஸ்நானஞ்செய்து நீறணிந்து பூஜாமண்டபம்புகுந்து எழுவகைத்திரை யிடுவித்து குமாரதந்திரப்படி கிரியைகளெல்லாம் இயற்றினர். முந்தினநாள் தன்னைப்போகவிட்டாது தடுத்ததை எண்ணியதேவி முருகனைப்பற்றி மடியிலிருத்தி வலிதிற்பாலூட்டித் தடைசெய்துகொண்டிருந்தாள். ஷடக்ஷரஜபஞ் செய்துகொண்டிருந்த முனிவரர் தமதுஞானக்கண்ணினால் இதனைக்கண்டனர். மயிலை வேண்டினர். மனமிகவுருகி ஒருவகுப்புஞ் சொல்லித்துதிசெய்து 'வேலவனையிப்போது நீ கொணர்தியேல் உயிர் வைத்திருப்பேன். இதுபொய்யல.' என்றிரந்தனர். கயிலைச்சாரலிற்றிரிதரு மயிலிதனையுணர்ந்து தேவிமுன்னர்ச்சென்று நீலகண்ட

மும் ஸர்ப்பபரணமும் காட்டிநடம்புரிந்தது. தேவியும் எழுந்து சிவன்பாற்சென்றனள். முருகனை மடியிலிருத்தின மாத்திரத்தே தன்காரியம் சித்தித்தது என்றெண்ணியிருந்த சமணன் இப்பொழுது வாளாதிருந்தனன். குமரனும் உமையவள் மடியைவிட்டு மயிலின்மீதேறினான். ஏறிய வக்கணமே தூணிடைநின்றான். முனிவரும் மிகவுமேங்கி 'வேண்டிய போதெல்லாம் எதிர்வருபவன் இன்றுமிக்க கஷ்டந்தந்தனை' என்றனர். ஆயினும் குமரன்சொல்லிய சமாதானத்தினால் ஆயாசந்தீர்ந்தனர். தீர்ந்ததும் திரையைநீக்கி வெளியேவந்தனர். சலிப்பினாலும் வெருட்சியாலும் பற்பலர்விலகிப்போயினர். பிரபுடதேவராசனுக் கருகிருந்தார்சிலர் அங்குவீசிய ஒளிசகியாராய் அவசமுற்றனர். இவர்கட்கிடையில் ரத்நகிரீடத்தின்மேற் குவித்தகையினனாய் அடங்காத ஆனந்தத்துளழுந்தியவனாய் அரசன் நிற்றலைக்கண்டு அருணகிரியார் இவன் தவம் நன்றாயிருந்தது என்று சந்தோஷித்தார். ஆயினும் அவர்சொல்வார் 'அரசனே! வேலவன் கொண்டிருக்குங் கோலத்தினது காட்சி நின்பார்வைக் கடங்காது. என் பார்வைக்கு அடங்குங் காரணத்தால் அதுவே உனக்குமமையுமென்றல் பொருந்தாது. பின்பார்வைக்கு ஒரு கண்வைத்துக்கொண்டு மற்றொரு கண்ணால்பார்.' என்றமொழியைக்கேட்கு முன்னம் உட்சென்று இருகண்ணாலும் பார்த்தான். ஆசையைநீக்க யாவரேவல்லார்? உடனேயிரண்டுகண்களும் போய்விட்டன. ஆயினும் முதற்பார்த்த பார்வை மனதிற்பதிந்திருந்ததினால் உள்ளங் களிப்புக் கடலிற்றிளைத்துக்கொண்டிருந்தது. முனிவரர் இதனையறிந்து கடவுளைப்பிரார்த்திக்க அரசன் இருகண்களையும்பெற்றான். அப்போது அரசன் அருணகிரியாரை நோக்கி இனிச்செய்ய வேண்டியதியாது என்றனன். அவரும் இத்தூணையொட்டி ஒருதிருக் கோயிலமைத்து கோபுரம் மதில் ஆயிரக்கால் மண்டபமென்றிவையு மமைக்க என்றனர். இவ்வார்த்தையினை முகமலர்ச்சியோடேற்ற அரசன் 'சம்பந்தாண்டான் இனி இவ்வூரிலிரான். அப்படிச் சபதம்செய்துள்ளான். வானம்தோண்டத் தொடங்கல்வேண்டும். மதிள்க்குள் அவன் மனையிருத்தலுந்தவறு. அவன்குடியிருந்த இடத்தை என்னசெய்யலாம்' என்றுகேட்டான். அதனைக்கேட்ட முனிவரர் 'அவனையவமதிக்கவேண்டாம் அவனும் தேவியினது பக்தனேயாவன். அவனிருந்தவிடத்தே ஒரு வாவியெடுத்தல் நலம்' என்றனர். இதன்பின் முனிவர்தாம் வசிக்கும் கோபுரநோக்கிச் சென்றனர்.

அரசனும் அரண்மனை புகுந்ததும் திரவியத்தை வாரிக்கொடுத்து சிற்பம் வல்லாரைக்கொண்டு திருப்பணிகள் விரைவினியற்றுமாறு மந்திரிகட்குக்கட்டளையிட்டான். வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. அமணனும்



துணுக்கமடைந்தான். உலகமெல்லாம் அருணகிரி முனிவரை வாழ்த்தியது. தானெய்தியதோல்வியை யாருமறிந்திருந்தும் சம்பந்தாண்டான் அரசனிடத்துச்சென்று 'இஃதென்னவித்தை செய்தான். பொன்னையெல்லாம் வாரியிறைக்கின்றனை? தூணினுக்குக்கோவில் கட்டுவார் புவியிலுண்டோ? நல்லதைச்சொன்னேன். அப்புறம் உன்னிஷ்டம்' என்றனன். அரசனோ 'எனக்குச்சந்தேகமில்லை. உனக்குளதேல் போய்த்தெளிந்துகொள்க' என்று விடையளித்தனன். அவன் அருணகிரியாரிருக்குமிடஞ்சென்று நிந்தைமொழி பலகூறலும் அவர்முன்வந்தார். 'நன்று! நீர் விண்ணுலகஞ்சென்று பாரிஜாதமலரைக் கொண்டுவாரும் பார்ப்போம்' என்றான். அரசனும் மத்தியஸ்தனாயிருந்தான். முனிவர் அரசனைநோக்கி 'குமரனன்பர் வல்லமையறியா இவ்வம்பன் மொழியைக்கேட்டு நீயும் கற்பகமலர் கொணர்தியெனச் சொல்லுவையோ? இவன்சொல்லிய சபதம் மறந்தனையோ' என்றார். வேந்தன் நடுநடுங்கி 'எனக்கொன்றுமையமில்லை உன்னருளைப்பெற்றும் இச்சங்கடம் தீரவில்லை' யென்றனன். அருணகிரியாரோ 'கற்பகமலர் கொணர்ந்து காட்டுவேன். இவனையப்புறப்படுத்தி வாவியெடுத்துக் குமரனுக் கபிஷேகாதியியற்றுக' என்றனர். சமணன் அடங்காச்சினத்தனாய் 'இவன் எவ்வளவு வேண்டினும் நானிங்கிரேன். மலர்கொணரு நாள்மட்டும் வந்துபோக விருப்புடையேன்' என்றனன். அருணகிரியார்க்கும் ஆக்ஷேபனையொன்றுமில்லாதாக அரசனனுமதியளித்தனன். அந்தக்ஷணத்தே சமணன் ஊரைவிட்டோடினான். ஆறு மாசங்கழியுமுன் வேலைகளெல்லாந் தீர்ந்தன. பிரதிஷ்டை முடிந்தது. பிரபுடதேவன் பெயரமைத்துத் திருப்புகழும் பாடப்பட்டது. இனிக்கற்பகமலர் கொணர்வேன் என்றுகூறி முனிவர் ஒருதினமுஞ்சுட்டினர். மலைமேலிட்டதீபம்போல அச்செய்தி எங்கும்பரவியது. அத்தினத்தில் சம்பந்தாண்டானும் தன்பகை முடிக்கக்கருதி அருணையூரில் வந்துதங்கினன்.

**S. ANAVARATAVINAYAKAM PILLAI**

## THE WRECK OF THE S. S. "SECUNDRA."

### செகண்டிராவென்னும் நீராவிக்கப்பலின் சேதம்.

பிரிடிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பனியாருக்குச் சொந்தமாகிய 'செகன்டிரா' வென்னும் புகைக்கப்பல் டிசம்பர்மீ 10-ம் தேதியாகிய வெள்ளிக்கிழமை, இரவு 7-மணிக்கு, இலங்கைத் தீவைச் சேர்ந்த காலி (Galle) யென்னும் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டு கொஞ்சதூரம் செல்ல, ஜலத்தி லமிழ்ந்திருந்த ஒரு பாறையில் திடீரென்று

மோதி, ஒருபாகம் பிளவுண்டது. பிளவின் வழியாக ஜலம் உட்செல்ல, கப்பல் தலை முன்னதாக ஜலத்தி லமிழ ஆரம்பம் செய்தது. அதிலிருந்த கப்பல் உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் ஸ்தானத்தில் நின்று கப்பலைக் காப்பாற்ற தங்களாற் கூடிய முயற்சி செய்தார்கள்; மால்தீவர்களும் கப்பலோட்டிகளுமோ பெருந் திகிலடைந்து, கீழ்ப்படிதல் மறந்து, இங்கு மங்கும் நிதானமற்று ஓட ஆரம்பித்தார்கள். சிலர் பிராண பயம் ஒருபக்க மிருக்க தங்கள் சொத்துக்களை தங்கள் தேகத்தில் பத்திரப்படுத்தத் தலைப்பட்டார்கள்; சிலர்கப்பல்வேகமாக அமிழ்கிறதைக் கண்டு கப்பற் கயிறுகளில் தொத்தி பலமாகப் பிடித்துக்கொண்டு உயிர் பிழைக்க எத்தனித்தார்கள்; சிற்சிலர் புத்திக்கு ஒன்றும் தோன்றாமல் நின்றவிடத்தில் நின்று கடவுளையும் காட்டேரியையும் கூப்பிட ஆரம்பித்தார்கள். இப்படியிருக்க, கப்பல்மாலுமி தன் மனோதைரியத்தைக் கைவிடாது கப்பலிலுள்ள வத்தைகளைக் கீழிறக்க முயற்சி செய்தான். வெள்ளம் மேலிட்டு அதி தீவிரமாகக் கப்பல் முழுகியதால் அவன் முயற்சி சித்தியாகவில்லை. அப்பொழுது கப்பலி லிருந்தவர்கள் பலபாஷைகளி லிட்ட கூக்குரலும், உள்ளே புகுந்துவரும் ஜலத்தின் இரைச்சலும், கப்பல் உத்தியோகஸ்தர்களின் உரத்த சப்தமும், நீராவிப்பெட்டி வெடித்து அதினின்றும் அடைபட்ட ஆவி சுற்று முள்ளவர்களைச் சுட்டுக் கொண்டு கிளம்பிய சப்தமும், சுற்றிலு முள்ள கன இருட்டும், பொதுவா யுண்டான பெருங் குழப்பங்களும் வார்த்தைகளாற் சொல்லி முடியாது.

கப்பல் திடீரென்று பெருஞ்சத்தத்தோடு ஜலத்தி லமிழ்ந்தி பாய்மர மாத்திரம் கொஞ்சம் நீர்மட்டத்திற்கு மேல் நின்றது. மாலுமியும், கப்பல் துறைமுகத்திற்கு வழி காட்ட வந்த வழி காட்டியும் அந்தப்பாய் மரத்தினுனியிற் கட்டியிருந்த கம்பியைப்பிடித்துக்கொண்டு தண்ணீரில் மிதந்தார்கள். இவர்களைச் சுற்றிலும் 10 அல்லது 12 கப்பலோட்டிகள் மிதக்கும் சமான்களைப் பிடித்துக் கொண்டு மிதந்தார்கள். அங்கிருந்த ஒவ்வொருவரும் காயமடைந்தவர்களா யிருந்தார்கள். அலையானது அதிகமும்முரமாக விருந்தபடியால், அதின்வேகத்தில் மாலுமி தன்பிடிப்பை நாலைந்து தடவை யிழந்து திரும்ப கைப்பற்றினான். இவ்விதமாக கப்பல் உத்தியோகஸ்தர்களும், இஞ்சினீயர்களும், லஸ்கர்களும் $7\frac{1}{4}$-மணி முதல் 12-மணிவரை ஜலத்தி லிருந்தார்கள்.

இவ்விதம் இவர்கள் உயிருக்குத் தத்தளித்துக் கொண்டிருக்கும் பொழுது அனேக செம்படவர்கள் மீன்பிடிக்க தங்கள் படகுகளில் அவ்வழியாகச் சென்றார்கள். அவர் இவர்களைக்கண்டும் யாதொரு ஒத்தா



சையும் செய்யவில்லை. தண்ணீரில் மிதந்துகொண்டிருந்த ஐரோப்பியர்களும் லஸ்கர்களும் அவர்களைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டு தங்கள் உயிரைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டும், அக்கொடூர நெஞ்சச் செம்படவர் அதற்கு நகைத்துப் பரிகாசஞ் செய்து, ''என்ன கொடுப்பாய்'' என்று கேட்டு சும்மா போய்விட்டார்கள். மிதந்து கொண்டிருந்த கப்பலுத்தியோகஸ்தர்களி லொருவன் அதிகமாகக் களைத்துப்போய் நீரில் அமிழும் சமயத்தில், அவனைச் சுற்றி மிதந்துகொண் டிருந்தவர்கள் தாங்கள் களைத்திருந்தும், அவனைப் பிடித்து அமிழ்ந்தாதபடி தாங்கினார்கள். ஐரோப்பியர்களி லொருவன் தன்னை ஜலத்தி லிருந்து எடுத்துக் கொண்டால் ரூபா 1000 கொடுப்பதாகச் சொல்லியும் அச்செம்படவர்கள் செவிகொடுக்கவில்லை. மிதந்துகொண்டிருந்த லஸ்கர்கள் அவர்களைத் தங்கள் வாயில்வந்தபடியெல்லாம் திட்டினார்கள்.

இது நிற்க, கப்பலுக்கு வழிகாட்டிவந்த படகொன்று சமீபத்தில் மிதந்துகொண்டிருந்தது. அதில் தண்ணீரில் விழுந்த லஸ்கர்களும்போய் தொத்த அதுவுங்கவிழ்ந்து அதிலுள்ள லஸ்கர்களும் ஜலத்தில் விழுந்தார்கள். ஆனால் இவர்கள் கவிழ்ந்த படகைப் பிடித்துக்கொண்டு கப்பல் லஸ்கர்களிடமிருந்து எவ்விதமாகவோ தப்பி, அலையின் துணையால் மெதுவாகக் கரைவந்து சேர்ந்தார்கள். சேர்ந்ததும் தங்கள் களைப்பைப் பாராமல் ஓடோடியும் போய் துறைமுகத் தலைவனிடம் கப்பலுக்கு நேர்ந்த அபாயத்தையும், அதிலிருந்தவர்ளிருக்கும் ஸ்திதியையும் தெரிவித்தார்கள். உடனே அவன் ஒரு பெரியவத்தையிலேறி கப்பல் முழுகிய விடஞ் சென்றான்.

இதற்குள் 9=மணியாயிற்று. அந்தக் கன இருட்டில் கப்பல் எவ்விடத்தில் முழுகியதென்று தெரிந்து கொள்வது கஷ்டமாக விருந்தது. சத்தம் போட்டு நாலாபக்கமுங் கூப்பிட இங்குமங்கும் பதில் சப்தம் வந்தது. சப்தம் வந்தவிடங்கள் பக்கமெல்லாம் படகைக் கொண்டுபோய் லஸ்கர்களை ஒவ்வொருவராகப் பொறுக்கினார்கள். இன்னும் கப்ப லமிழ்ந்திய விடம் போய்ச்சேரவில்லை. படகுக்காரர்கள் உரத்த சத்தம் போட்டுக் கொண்டேசெல்ல கடைசியில் கப்பலண்டைவந்து சேர்ந்தார்கள். மிதந்து கொண்டிருந்த மற்றவர்களையும் பொறுக்கினார்கள். படகு கரைவந்து சேர 11 மணியாயிற்று. இரண்டு ஐரோப்பியர்கள் காணப்படவில்லை. லஸ்கர்களிலும் மற்றவர்களிலும் எவ்வளவு சேதமோ தெரியவில்லை. அடுத்த தினம் மூன்றுசுதேசிகளினுடைய பிணம் கரையி லொதுங்கின.

செகண்டிரா வென்னுங் கப்பலானது எட்டு நிமிஷத்திற்குள் வீணாய் விட்டது. கப்பல் கொஞ்சம் பழையதாகையால் அதின் விலைமதிப்பு 12,000 பவுன், அதாவது 1,80,000 ரூபாய். சில மாதங்களுக்குமுன் ஜப்பானியர் அதை 15,000 பவுனுக்கு விலைக்குக் கேட்டார்கள்.

T. P. S. NAGARATNAM PILLAI.

# SUBHATRA.

## சுபத்திரை.

### முதலங்கம்—முதற்காட்சி.

இடம்—துவரையில் பலதேவன் மாடம்.

காலம்—காலை.

பாத்திரங்கள்—சுபத்திரை, சுமதிகை, அர்ச்சுனன்.

பிரவேசம்—அர்ச்சுனன்:

அர்ச்சுனன்—(தனக்குள்) என் முன்னோனுக் துருபதன் மகளும் இருந்துழி, அந்தணர் துயர் நீப்பான் சென்றதால், உயர்முனி நாரதர் உரைத்தாங்கு ஓராண்டு தீர்த்தயாத்திரை ஏகுவானிவ்வுருக் கொண்டனன். அறங்களினிறுதியாமிது பரமானந்தம் பயக்கும் பான்மையது அவ்வறங்கொண்டார் வதியுளோ—

விரிதருகுவளையும் விரை மென்றாமரைப்
பரிபுர மொலிதரு பாதப் பாவையர்
அரிதமர் விழிகளுங் கரமுமண்மிய
வருவிருந்தோம் பிடுமாண்பு கொண்டது

அமுதமென் குதலையர் அதரமன்னவும்
குமுத மென்மலர் செறி கொள்ளை கொண்டது
தமிழினேரிய செந்தேறல் தாங்கிய
உமிழுறு மரத்தமு முள்ளினுற்றது
கிள்ளையங் குதலையர் கிளர்ந்தவார் செவி
வள்ளையங் கொடிபடர் வரிசை வாய்த்தது
கள்ளமென்னோக்கினைக் கண்டகெண்டைகள்
துள்ளிவீழலையிடைச் சுரித்தன் மேயது

ஆமையுஞ் சங்கமும் அடர்வாரற்களும்
நேமியும் புள்ளுமங் நேர்ந்த மங்கைமார்
காமுறு மவயவம் காணக் காணுறுந்
தோமறு சலத்தமிழ்ந் தொளித்தலுற்றது.

இதனாலன்றே பெரும்பாலார் இவ்வுருமேற்கொணடு வனங்களிலுறைகின்றனர். இதுவே பேரின்ப மென்பது போலும். இவ்வுருக்கொடு ஒன்பான்றிங்களா யாத்திரைத் தோழரோடு பஃறேயந் திரிந்தனனாயினும், துவரைமன்னன் பலராமன் தனதுடன் பிறந்தாளை யரவுயர்த்தோனுக் களிப்பான் அறுதியிட்டிருப்பதாய்ச் செவியுற்று, அவ்வணங்கரசின் மேலுற்றவவாப் பெருக்கால் உடன்வந்தோரை விலகி இந்நகர்க்கண் தனிப் போந்தேன். கண்ணன் எனக்களித்த கட்டுரையென்? அண்ணன்கொண்ட உறுதியென்? எவையும் நகர் சென்றாயின் நனிவிளங்குறும். செல்வாம்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினுமப் பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு" ஆதலின்.



(உண்ணுழைந்து) யார் வாயிலின்கண்?

வாயிற் கர்வலன்—(கரங்குவித்து) பெருந்தவத்தீர்! யாதுகட்டளை?

அர்ச்சுனன்—நலமோங்குக! அன்ப! இஃதெவர் உறையுள்; அரையனதோ? அன்னானியாவள்? என்னனையாரைப் பாலிக்குமியல்பினனோ? சிறிதுவிளங்கத் தெரிவிப்பாய்.

வாயிற் காவலன்—ஏ பகவன்! ஸ்ரீமான் பலதேவரது பெருமனையிது. அடிகள் ஏகத் தடையன்று. அதிதியர்க்குத் தடை யேது? செல்க.

அர்ச்சுனன்—(உட்சென்று, காதம்பரி மணமுகந்து) மதுமணம் பலராமனை நினைவுறுத்துகின்றது. இஃதன்னனது அரண்மனையே, இங்குத் தாழ்ப்பது தகுதியன்று. அப்பெருமன் உளன்போலும். மீள்வல். (என நடிக்க, அந்தரத்தினின்றும்) மகான்! விலகல்! விலகல்! கடிகை யொன்று பொறுத்தருள்க. இறைவன் சோதரி சுபத்திரை ஆதித்தியத்துடன் வருகின்றனள். இறைவன் அருள் புரிவன் நினக்கு. தாமதிக்க. (என்று எழுந்தது. அர்ச்சுனன் தனக்குள்) நன்று! நன்று!! கும்பிடப்போனது குறுக்கிட்டதென்பா. அஃது என்மாட்டு உண்மையாயிற்று. என் பாக்கியம் என் பாக்கியம்? இவ்வாக்கியம் எழுந்தது மிக்க சிலாக்கியம். இவண் தாமதிப்பபோம் சிறிது.

சுபத்திரை சுமதிகையுடன் வருதல்.

சுபத்திரை—ஆரிங்கு அதிதி யென்பார்? அன்னாரிங்கிப் போழ்தத்து நன்குபசரிக்கப் பெறுவர். ஆ! காண்கின்றிலேன். சுமதிகா! எங்குற்றனை, ஆதித்தியம் பெறுவார் நம்மைச் சோதித்திருப்பர் போலும். எங்குற்றார்? நீ அறிவையோ?

அர்ச்சுனன்—(கண்டுகளித்தானாய்த்தனக்குள்) ஆ ஹா! அதிர்ஷ்ட பூர்வமிது, சௌந்தர் யாதிசயம்.

கண்களிக்க வுளங்களிக்கக் கருத்துவகைக் கடற்படிய
விண்களிக்க மடநல்லாள் மெய்யுருவ மிதுவாமால்
மண்களிக்க மெய்வாழ்க்கை யுயிர் களிப்பவருநாளில்
பண்களிக்குமுயர் சீர்த்திப் பார்த்திவ ரெற்கிணையேயோ-

உடுக்குலங்களொரு கோடியுடன் மருவிப் பணிபடிந்து
தடக்ககனமதிற்ற வழுந்தனி மதியினியல் காட்டிப்
புடைத்தருவின் புதுமலர்கள் புடை கதுவப்படர் கொடியின்
இடைத்தமியள்குணமுணர்ந்தேனி கல்முடித்தேன் தனிவேலை.

நேரிழை நுண்ணிடை யாளித் திருவினைகாண நான் தன்யனானேன். (புறத்து) இதோ இங்குற்றனன் (என்று நகர்ந்து செல்கின்றான்.)

சுபத்திரை—(கண்டு தனக்குள்)

தினகரனை முழுமதியைத் திருநிலத்தைத் திரண்டமயிர்ச்சீய வேற்றைக்
கனவொளியிற் குளிரளியிற்கதிப் பொறையிற் கடுமறத்திற் கவர்ந்திட்டா
கனைகடலைக்கருமுகிலைக் கழைவிலியைக்கதிக்கு முரட்டறுகட்சீற்ற[னைக்
முனையடையின் முழுக்கொடையின் முதுவனப்பின் முரணழிக்கு மூர்த்தி

குலவரைகடிரண்டன் னகுவவுத்தோணெடிய கரக் குரிசிறன்னைச் [யானை
சலவரையிலொன்னலரைத் தனிக்கதிரோன் பனியவிக்குந்தகையுளானைக்
குலமணியிலொரு மணிபோற் கூவேந்தர் குழுவிடையே குலவுவானை
நிலவலயம் பெற்றதுமென் நீடவத்தின் வழக்கதுவோ நினைதறேற்றேன்.

அம்ம! இன்னார் பிக்ஷுகரல்லர், மற்றியாரோ மதனவுருவுடைக் கடவுள் மண்ணுளார் பொருளைக் கவர்வான் விண்ணினின்றுமிம் மண்ணினின்றார்போலும். (வெளிப்பட) ஏ! மஹானுபாவ! ஆதித்தியம் பெறுவீராக. (என்று மண்ணோக்கிய முகத்தோடு நடுங்கிய கரத்தினளாயளிக்கின்றனள்.)

அர்ச்சுனன்—(புறஞ்சினங்கொண்டு) ஏ! அதிதி பூஜையறியாத பேதாய்! என்னிது? தவத்தோனை யசட்டைசெய்து ஆதித்தியம் புரிகின்றனை? என்னை? இதனையே தொழிலாகக் கொண்டு திரிவானென்று நினைத்தனை போலும் என்னை. அங்ஙனன்று. இம் மண்ணுளாரது கருத்தறியவந்தோனென என்னை மதித்தி.

சுபத்திரை—(அஞ்சி) ஆ! சுமதிகா! என்னேடி! இவர் இவ்வண்ணம் புகல்கின்றனர். ஆற்றற் பாலதோ இவர் சீற்றம். இத்துறந்தார் பெண் பிறந்தார் குணம் மறந்தார் போலும். அறந்தாங்குங் குணமுடைச் சிறந்தோரலரோ? நாம் சற்றுங்கண்டியவர் சினமாற்றற்குரியேம்.

சுமதிகை—அடி கேள்!—குலகன்னிகைகள் ஆடவர் முகத்தினைத் தொடர்பு மாத்திரையானன்றி நோக்காரன்றே? இது நீவிரறிந்ததன்றோ? கொள்ளவேண்டு மாதித்தியம். சீற்றந்தமக் கேற்றதாமோ சாற்றுவீர்.

அர்ச்சுனன்— அவ்வண்ணமே யாகுக. அன்றெனப்படிசெய்கவிப்போது. யான் கொள்வல்.

சுமதிகை—(சுபத்திரையை நோக்கி) தோழி! இம்மஹான் வெய்யோன் கதிர்படும் நீரனையார். உளத்தாற் சினந்தாரலர். அகனோடு முகனமர்ந்து ஆதித்தியம் புரிதி.

(சுபத்திரை அஞ்சலி செய்து நடுங்கி நிற்க.)

அர்ச்சுனன்—சுமதிகா! திண்ணமாய் நடுங்கின வண்ணமுற்றனள் இப் பண்ணமைந்த மொழியினாள், என்னை? அணங்கு உள்வலியால் தன் ஆடை யலைத்து மண்ணினை நோக்கிய கண்ணினையால் தன் ஆகமளக்கின்றனள். ஓது மாது? ஏது யாது.

சுமதிகை—மாதவர் பெரும! மிக்கச்சங் கொண்டார்க்குத் துணையுற்றுஞ் சிறிதுறுவ துலகிவல்பன்றே? இதுவே நிமித்தம்.

அர்ச்சுனன்—(சுபத்திரையை நோக்கி) அச்சத்தாலலையுண்ட நவ்வி நோக்கியீர்! நும் கடைக்கணோக்கினாற் கடுஞ்சொற்றுறந்தேன். நகை முகமலர்ச்சியோடு அளிப்பாய், இச்சை கொடு பிச்சை கொடு இப்பச்சை மேனிக்கு,

(வாங்கியபின் வனமேகல்.) யாவரும் மறைதல்.

M. V. GOVIDNA CHARIAR.

Yathartha Bhaskaran,

FOR

God, Humanity and The Motherland.

Vol. III.] MARCH, 1905. [No. 9.

## Conceptions of Human Life, Old and New.

HUMAN life on this earth has been regarded by our ancients as a sort of bondage, a penalty we have to pay for some unknown sins in the past incarnation. The world with its glowing beauty is only the Circe's cup, the syren's music tempting us to our misery and ruin; the human relationships, human sympathy and love are only the chains that secure us to our delusion and ignorance; noble desires and aspirations to battle successfully with life are only so many drags to hinder our soul's upward movement into heaven. The whole Hindu literature and philosophy is saturated with this deep-brooding pessimism. It has wrought itself into the life and thought of the nation, it has sapped the foundations of national life and vigour. People gave up honest and strenuous efforts after improvement at the first disappointment or failure, for nothing could help them to defy the inexorable *Karma* of their past incarnation; they became the slaves of circumstances and in the passion of blank despair let every passing thing play with their life as it chose and drifted hopelessly along the current that carried them. Even the gentle feelings of sympathy, love and compassion were left out of account as each one had to work out the *Karma* for himself. Selfish indolence found a congenial home and moral responsibility sickened and died. The duties of life were undertaken in a spirit of cheerless resignation more as a burden imposed, than as a delightful task. Under such a tyranny of mental oppression for ages, India, the earliest civilized country in the world, now lies crippled craving for the sympathy and help of the other more fortunate countries in the world!

2. But can we not take a different view of this world and our life in it? Does it not satisfy our rational and ethical nature to view the universe as a great School-House, where we have to learn many a beautiful lesson and get the degree of perfect manhood and womanhood to enable

us hereafter to sit with the worthy citizens of the great Republic of Heaven? Why should we think of God only as a stern Magistrate that demands "tooth for tooth, eye for eye," and leaves the wretched criminal to himself? Does it insult our ethical nature to conceive of Him as our Father, who punishes His children in love. God does punish the guilty child, but at the same time he does not forsake him. The child is taken unto the Father's bosom, the hand that inflicted the blow applies the healing balm; the paternal care and anxiety now reproves, now counsels in tenderness and sweetness. The Great Father brings us into existence, assigns us each his place in the universe and perfects us by discipline and education in this world.

3. Look at the world from this standpoint and see if the theory does not fit into it.

4. This beautiful planet, which we call earth, was called into existence after countless ages of preparation to make it an abode worthy of the children of the Almighty Father. The whole physical universe, instead of being an ugly prison-house for the convict soul, appears to be a glorious palace full of beauty and joy to minister to the wants of mankind, the great household of God. The majestic mountains, the solemn sea, the playing winds and waves, the glistening forests and gardens, the laughing flowers diffusing sweet aroma around, the feathered minstrels of the grove filling the air with their untutored music, the noon-tide splendour of the Sun—the great cook of the universe that prepares food for the countless millions of God's children, the refulgence of the Moon—the tender nurse that allays the heat and dust of the day and puts God's children to slumber, the midnight heavens—the chapel of the sky lit with myriad lamps—that enchant the adoring gaze of the devotee, the soft dew and the gentle rain—the distilled drops of God's love—that bring life to nature after every winter—all, all, declare that this world is full of beauty and joy and bring glad tidings of His infinite love and goodness.

5. Next look at yourself and see what God has done for you. His love cherished you in your mother's womb when your parents did not know you. And at your advent what a splendid reception was provided for you! The anxious father standing on his tip-toe to catch the first note of your voice, the mother prepared to surrender her very life for you, the kind relatives and friends vying with each other to do every little service you required—Ah! which mighty monarch of this world commanded and got a similar service of love from his subjects? As you grew up your food, physical and spiritual, was provided for you day



by day. The mother's face beaming with reverent adoration was the first book of religion you learnt to read, and from her prayerful countenance you drank in the spirit of reverence and devotion with the sweet milk of love. In the divine wisdom, God has provided for you the healthy and bracing discipline of home-life. Mutual confidence and little acts of forbearance and self-sacrifice rub away the angularities of life and make your character smooth and pleasant. The great strength and nobility of character, *i. e.*, the perfect manhood must come, in the first place, from the sanctuary of a home. It is both a refining, elevating as well as a cherishing institution in our life. The tenderness of the mother, the active vigilance of the father, the sweet affection of brothers and sisters, the self-surrendering devotion of your wife, the trusting innocence of your children, the helpful sympathy of your friends, all have contributed to make you what you are, and in a sense, each was an angel teaching you some good lesson in your education. Then comes your public life where every person and every incident has something to teach you. The recorded human experience in the past, and the contemporary life in the present, reveal both the weakness and the strength of your life. This earthly life brings out all the latent forces of your nature and enables you, according to your exertions, to realize the ideal.

Can anything be more pleasant, more enjoyable more elevating than the intense delight, joy, nay blessedness, of seeing ourselves progressing day by day in knowledge, love and holiness?

6. But what about Pain, Sin and Misery that exist in this world and ache the eyes and hearts of all observers?

7. I think we should in all fairness, characterize that the ills and woes of this life mostly, if not all, are of our *own* making and we must thank ourselves for them. In spite of our inward monitor, call it Conscience, call it the voice of God, we are often indulging, under the imperious sway of appetites and passions, in unholy pleasures. With the spirit of false self sufficiency, and pride and wantonness, we defy the laws of God, which cannot be bent to subserve our unholy ends. The correcting retribution cannot be withheld; the surgeon's knife must inevitably probe the diseased part and remove the filth to restore purity and soundness once more. The pain is therefore inflicted only for the purpose of making future pleasure possible. Again, through love of ease or through sheer ignorance, we do not make use of the powers and faculties with which we are endowed and acquire knowledge of the universe. The great Teacher, who does

not reveal himself without our taking any pains, educates his children by allowing them to exert for themselves and to profit by every failure and disappointment. In the struggle for growth, for wisdom, for enlightenment, some suffering is inevitable. Does not the child stumble, fall and often hurt its legs before it gains the powers to run and dance? And do you think it a heavy price for the child to pay for the great joy of locomotion, without which it would be worse than a plant or a stone? Even so, the little suffering, which is the inevitable consequence of imperfection struggling unto perfection, is not a heavy price to pay for the acquisition of knowledge, love and purity, in fact for the recognition of our divine nature.

8. But why should we look upon human suffering as an evil? Pain always acts as a sentinel to warn us of danger. Whenever you feel any pain in your body, you know at once that some part of it is in danger and try to set it right by some medicine or other. If fire should only cook our food and not pain our bodies when it touches them, how many children and men would have been easily consumed without their becoming conscious of it! The office of Pain in this world is a noble one. It has urged men towards civilization. How many machines have now been invented all for the sake of minimising human labour and pain. It is and has been guiding men to rise above circumstances, to be strong in the warfare with elements, to conqueer and subdue Nature. Its twin sister Sorrow is not less helpful in this work of perfecting humanity. When man forgets himself in his pride, sorrow serves as a wholesome medicine to restore the lost spirit of humility and dependence. In other cases it acts as a great Inspirer to magnanimous deeds. It is only sorrow for humanity that made Gautama leave his royalty and home and become a Buddha, and Jesus, surrender his life and become a Christ. Even in humbler individuals, we see its ministry. Sorrow draws heart to heart, kindles sympathy, unites even enemies and makes mankind a great brotherhood.

9. God has not been unmindful of the weakness and frailty of this human life. The tender hand of God is ever working in various ways for the happiness of his children. Happiness is a state of the mind and does not reside in outward things. In spite of the great differences in the external conditions of life, the human mind is so peculiarly organised that it can enjoy an equal amount of happiness. What a rich man feels when he achieves a profit of a lakh of rupees, or a philosopher when he formulates a new theory, or the poet when he gets a new vision of some



great ideal of life, is also open to the poor man when he gets a profit of a rupee, to the husbandman when he discovers a new method of manuring or to a mechanic when he comes upon a new power to work his wheel. When some sorrow or heavy bereavement overtakes us, we seem to be entirely crushed under its weight. The anguish and intensity of sorrow though seemingly unbearable on the first day of its visit, is gradually lessened until it is lost in oblivion. On the death of a dearly loved parent, brother, or friend, to how many did it not seem that life was no more possible for them? But how many have survived such bereavement and regained their mental equilibrium and capacity for enjoyment! And so if suffering is inevitable in his system of Government, his love and care are also active in furnishing antidotes and compensations in certain principles of human nature.

10. The tree that bears the most beautiful flowers has its roots in filthy, dank and dismal ground. Who could have thought that the ugly roots feeding on dirt were the source of great beauty and loveliness. As in the physical, so in the spiritual world we see most noble and holy purposes served by things base. The greedy merchant travelling from place to place for love of gain brings in the products of many lands, and his selfishness is turned by mysterious providence into reaal ministry for the physical wants of man. The political liberty of the West was born in the cruel and bloody guillotine of the French Revolution; the strength and beauty of Christianity has its source in the terrible cross. In the great march of Evolution, each step appears to be good when compared with the one next below it, and appears to be evil when compared with the one above it. Even in our own lives, those things which we bemoaned as evil once now appear to be the best things that God could have given. Emerson who shared one old clock in the house with his brother in dreary winter nights of America, lived to exclaim that his poverty was his salvation. We may therefore, say with Browning—"God is in heaven and all is right with the world.

11. Let us all in hopeful trust, in firm faith, in loving obedience, undertake our several duties cheerfully and devoutly, without any doleful murmur and any impious doubt and try to extend the kingdom of God on earth. May the Father of all spirits help each one in his noble endeavours!

**V. P. Raj.**

உன்னை ஸ்மரித்தாலே, மனிதன் பரிசுத்தமாவான் (உன் மனதுக்கு இணங்கி நடந்து மற்றும் உன்னை வழிபட்டால்) பெரும்பயன் தெரிந்தே இருக்கிறது. சமுத்திரத்தின் இரத்தினங்கள்போலும், சூரியன் ஒளிபோலும், எட்டாத உன் நடவடிக்கைகள் வர்ணிக்கமாளாது. நீ அடையாதது ஒன்றுமில்லை; உனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை; ஜன்மமெடுத்து உலகத்தின்க்ஷேமத்தின்பொருட்டே உழைக்கின்றாய். உன் மகிமையையுரைத்து நிறுத்துகிறோமென்றால் சொல்லிமுடியாமையாலும், தேகசிரமத்தினாலுமேயல்லாது, இவ்வளவுதான் சொல்லி முடித்தோமென்றல்ல. தேவர்கள் செய்த துதியால் கண்ணனும் களித்தான். பரமனைத் துதிப்பது எங்கே? உள்ளபடி சொல்வதேயாம். கருணையோடு சுகமாயென விசாரித்த கடவுளிடம், பிரளயகாலம் வருமுன்னமே கரைகடந்த அரக்கர் கடலால் படும் பயத்தை உரைத்தார்கள்.

கடலோரத்தில் இருக்கும் மலைக்குகைகளில் பிரதிஒலி ஒலிக்ககடலோசையை மிஞ்சினகுரலோடு கண்ணன் திருவாய்மலர்ந்து அருளினார். மூன்றுலகமும் தவிப்பதை நான் அறிவேன். அக்கினிக்கு காற்று கூப்பிடா துணைசெய்கிறது; என்னுடைய கடமையை நான் செய்வதற்கு பிறர் வேண்டிக்கொள்வானேன். (இந்த இராவணன், 9 தலைகளை முக்கண்ணனுக்கு அர்ச்சனைசெய்தான். பத்தாவது தலையை என் சக்கிராயுதத்திற்கு என்று வைத்திருக்கிறான்போலும். சந்தனமரம் தன்னைச் சுற்றியிருக்கும் பாம்பைப் பொருப்பதுபோல், இந்ததுஷ்டனுடைய கொழுப்பை பிரமனளித்தவரனுக்காகப்பொறுத்தேன். தேவர்களால்சாவில்லையென்றுமாத்திரம் வரன்பெற்றான். மனிதனை மதித்தானல்லன். தசரதன் வயிற்றில்பிறந்து பாணங்களால் தாமரைபோன்ற இவன் தலைகளை கொய்து, போர்க்களத்துக்குப் பூசையிடுவிக்கிறேன். தேவர்களே! இனி உங்களுக்கு மனிதரிடும் பலிகளை அரக்கர் மாயவேஷம்பூண்டு தீண்டார்கள். புண்ணியம் செய்தோர் ஆகாயத்தில் விமானங்களேறிச் செல்லும்போது, இராவணனுடைய புஷ்பகவிமானம் எங்கு கண்ணில்தென்படுமோ என்று மேகங்களில் ஒளிந்து மனங்கலங்கவேண்டாம்; இராவணன் சிறைபிடித்துப்போன தேவஸ்திரீகளை (அந்த பாதகன்) பலாத்காரமாய் மயிரைப்பிடித்து தீண்டாதிருக்கும்படி போட்டத் தலைமுடிகளை இனி அவிழ்க்கலாம். இராவணனாகிற இடையூறினால், (மழையற்று) வாடிவதங்கின தேவர்களாகிய பயிரின் மீது, வாக்கினால் கிருஷ்ணன் மேகம்போல் அமிருதத்தை பொழிந்து மறைந்தான். இந்திரன் முதலியவர்கள் தங்கள் காரியத்தில் முயன்ற கட



வுளை, காற்றைத் (தன் அம்சங்களாகிய) புஷ்பங்களால் மரங்கள் பின்தொடர்வதுபோல் பின்தொடர்ந்து, சில அம்சங்கள் (சுக்கிரீவன் முதலியவர்களால்) ஆவிர்ப்பவித்தார்கள்.

புத்திரகாமேஷ்டி (புத்திரன் வேண்டுமென்ற தசரதன் செய்த யாகம்) முடிந்தபின் அக்கினியிலிருந்தும் பிரம்மனால் அனுப்பப்பட்ட ஒரு புருஷன் தூக்கமாட்டாமல் தோள்களினால் தங்கக்குடத்தில் பரமான்னம்ஏந்திக்கொண்டு, அனைவரும் ஆச்சரியப்பட உதயமானான். (14 உலகங்களையும் தன்னிலடக்கிய) ஆதிபுருஷன் அம்சம் பாயஸத்தில் இருக்கும்போது அவன்தான் எப்படி சுமப்பான்? மூன்று உலகத்தையும் படைத்த கடவுளே இவர் வயிற்றில் பிறக்கவிரும்பினார் என்றால் தசரதன் குணங்கள் துர்லபமென்று சொல்லவும்வேண்டுமோ. இந்திரன் கடலின்சாரமாகிய அமிருதத்தை பெற்றுகொண்டதுபோல், பகவானுடைய தேஜஸாகிய அன்னத்தை அரசன் பெற்றுகொண்டு தன் பெரியமனைவிக்கும் பிரியமுள்ள கைகேயிக்கும் பங்கிட்டுகொடுத்தார். சூரியன் இளம்வெயிலை ஆகாயத்திற்கும் பூமிக்கும் பங்கிடுவதுபோலும், அவ்விருவரும் சுமித்திரைக்கு கொடுக்கவேண்டுமென்று விரும்பினார். அவர்களும் கணவன் மனதை அறிந்து, இருவருக்கும் நேசமுள்ள சுமித்திரைக்கு தம்தம்பாகத்தில் ஏகதேசம்கொடுத்தார்கள். உலகத்தின் நன்மைக்காக ராஜஸ்திரீகள் மூவரும் தெய்வத்தையே கர்ப்பம் தரித்தார்கள். பயிர்கள் கதிர் காண்பதற்கு முன்னிருப்பதுபோல் கர்ப்பம் தரித்த ராணிகள், சற்று வெளுத்திருந்தார்கள்.

தேவிகள் சங்குசக்கிரம தரித்த சிற்றுருவமுடையவர்கள், தம்மை காத்துக்கொண்டிருந்தார்ப்போலும். தங்கஇரக்கைகளால் ஆகாயத்தை சோதிமயமாய் அடித்து வேகத்தில் தன்பின்னர் மேகங்களை இழுத்துவரும் கருடன்மீது சவாரி செய்தார்போலும், தாமரையைக் கையில் ஏந்தி மாரில் கௌஸ்துபம்தரித்து இருக்கும் லட்சுமி தம்மை உபசரித்தாள்போலும் அகாயகவகையில் ஸ்நாநம்செய்து பிரமரிஷிகள் எழுவரும் வேதத்தை ஓதிக்கொண்டு தம்மை ஸேவித்தார்போலும் கனாக்கண்டார்கள். இதைக்கேட்ட அரசன் ஜகத்குருக்கும் தான் குருவானதுகண்டு பெருமை பாராட்டினான். கடவுள் ஒருவரானாலும் தெளிவான ஜலத்தில் சந்திரன் பிரதிபிம்பம் அனேகம் காண்பதுபோல், அந்த தேவிகளின் குட்சிகளில் வேறுவேறாய் வசித்தார். மூத்தவள் சோதிபோல் இருளைப்போக்கும் ராமனைப்பெற்றாள். அவள் அழகிய உருவத்தால் ஜகத்துக்கு முதல் மங்களமான ராமன்என்ற பெயரை தகப்பன் இட்டார். ரகுவம்சமத்து விளக்கான அளவற்ற ஒளியுள்ள ராமன் சோதியில் அறையிலுள்ள தீபம் பிரகாசிக்கவில்லை (வெளுத்து நின்றன.) தாயின் அண்டை ராமன் படுத்திருக்க தாய்

இலையுதிர்காலத்து அருவிபோல் குன்றினாள். தனம் உள்ளவனுக்கு விநயம் அழகைகொடுப்பதுபோல் கைகேயி குணசீலனான பரதனால் விளங்கினாள் நல்லபடிப்பால் விநயமும், ஞானமும் பெறுவதுபோல் சுமித்திரை லட்சுமணனையும், சத்துருக்நர்களையும் பெற்றாள். உலகமும் பஞ்சம் முதலிய குறைவு அற்று க்ஷேமமாயிருந்தது. புவியில் அவதரித்த கடவுளோடு சுவர்க்கமும் கூடவந்தார்போலிருந்தது. நான்கு மூர்த்திகளும் உதயமானதும், இராவணனால் தேவர்கள் நடுங்கிவந்த திக்குகள் நான்கும் புழுதியில்லாமல் வீசினகாற்றால் பயம்தெளிந்து மூச்சுவிட்டனபோலும் தோன்றிற்று.

அக்கினிபுகையற விளங்கினான்; சூரியன் பிரசன்னமாய் பிரகாசித்தான். அரக்கனால் பீடிக்கப்பட்டிருந்த இருவர் துக்கமும் நீங்கினதுபோலும், அந்தக்ஷணத்தில் இராவணன் கிரீடத்திலிருந்து இரத்தினங்கள் கீழேவிழுந்து சிதறின. அவனிடத்தில் லட்சுமி கண்ணீர்விட்டாள்போலும். குழந்தைகள் பிறந்ததும், முதல்முதல் தேவவாத்தியம் ஒலித்தது. கற்பகவிருட்சத்தின் புஷ்பங்கள்விழ அவைகளாலேயே வீட்டிற்கு முதல் முதல் அலங்காரம் செய்தார்கள். குழந்தைகள் பால்காரிகளிடத்தில் பால் குடித்து நாளுக்குநாள் வளர்ந்தார்கள். தகப்பன் ஆநந்தமும் நாடோறும் பெருகிற்று. சுபாவமாய் காந்தியுள்ள அக்கினி அவிசு இட்டால் இன்னும் விளங்குவதுபோல், சகஜமாயுள்ள குணம் பயிற்சியால் இன்னும் வளர்ந்தது. அந்நியோந்நியம் சிநேகமாயிருந்த அண்ணன் தம்பிகள். களங்கமற்ற இரகுகுலத்தை ருதுக்களும், (ஒன்றுகூடி) நந்தனவனத்தைச் சோபிப்பதுபோல், சோபித்தார்கள்; அண்ணன் தம்பிகளுக்கு எல்லோரிடத்திலும் பிரீதி சமமாயினும், ராமனும் லட்சுமணனும் எப்படி ஜோடியானார்களோ அவ்வாறே, அந்த இரண்டுஜதைகளுடைய ஒத்துமை அக்கினிவாயுவின் சிநேகம்போலும், சந்திரசமுத்திரத்தின் நன்புபோலும் எப்போதும் கெடவில்லை. இந்த சிறுவர்கள் தம் யோக்கியதையினாலும், வணக்கத்தினாலும், கோடைக்காலமுடிவில், கருத்த மேகங்கள்நிறைந்து மப்புபோட்ட தினங்கள், ஜனங்களை சந்தோஷிப்பதுபோல், (பார்ப்போர்) மனதைக் கவர்ந்தார்கள். அவர்கள் தருமம், அர்த்தம், காமம், மோட்சமென்று நான்கும் உருவமெடுத்தாபோலிருந்தார்கள்; குணம்நிறைந்த 4 குமாரர்களும் இரத்தினம்நிறைந்த நான்குசமுத்திரங்கள்போல் அரசனைகளிப்புறச்செய்தார்கள். ஐராவதம், அசுரர் கத்திகளைமுறித்தவர்க்கு தந்தங்களாலும், நீதி நான்கு உபாயங்களாலும், விஷ்ணு நாலு புஜங்களாலும் விளங்குவதுபோல் தசரதனும் நான்கு புத்திரர்களால் விளங்கினான்.

**A. Srinivasa Iyer.**



ஓம் நமோ பகவதே ஸ்ரீராமகிருஷ்ணாய:

# THE COSMOS.

# உலகம்.

## பகிரண்டம்.

## (MACROCOSM.)

(349-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு, காரியமானது ஒருபொழுதும் காரணத்தினின்றும் வேறுபட்டதாகாதெனக் காண்கிறோம். காரியமே ஸ்தூலரூபத்திற் காரணமாவது. இதற்கப்புறம் நாம் அறிந்துகொள்வது யாதெனில், செடிகள், பிராணிகள் மனிதர்கள் என்று நாம்சொல்லும் சிறிய ரூப விசேஷங்கள்யாவும் எண்ணிறந்ததடவைகளாய் மாறிமாறி ஏற்றமும்தாழ்வும் எய்துவன என்பதே. மரம் சிதைவுற்று வித்தாகி, மீண்டும் மற்றொருமரமாகி, பின்னும் பிறிதொருவித்தாகும். இவ்விதம் திரும்பத்திரும்ப வித்தாகவும் மரமாகவும் மாறிமாறி ஆகும். இம்மாறுதலுக்குமுடிவென்பதேகிடையாது. நீர்த்துளியானது மலையினின்றும் உருண்டு திரும்பவும் சமுத்திரம் போய்ச்சேர்ந்து, பின்னர் நீராவி உருப்பெற்று மீண்டும் மலைமீதடைந்து திரும்பவும் நதிக்கே வந்தடைகிறது. இவ்வித ஏற்ற இறக்கத்துடனேயே காலசக்கரம் சுழன்றுவருகிறது. சமஸ்த ஜீவன்களைப்பற்றிய உண்மையும் இஃதே. நாம் காண்பனவாயும் உணர்வனவாயும் கேட்பனவாயும் சிந்திப்பனவாயும் உள்ள யாவற்றின் உண்மையும் இஃதேயாம். நம் அறிவின் வரம்பிற்குட்பட்ட எதுவும் மனிதசரீரத்தில் சுவாஸம் இழுத்தலும் விடுதலும் நிகழ்வதுபோலவே நிகழ்ந்துவருகின்றன. சிருஷ்டி முழுதுமே ஓர் அலை எழும்புவதும், ஓர் அலை கீழேபோவதும், மீண்டும் எழும்புவதும்மீண்டும் கீழேபோவதுமாய் இருக்கிறது. மேடிடும் அலைக்குப் பள்ளமும், மடுவிடும் அலைக்கு மேடும்உண்டு. இப்பிரபஞ்சம் முழுதும்ஒரேசீராய்இருப்பதால்இதேவிதி அமைந்து தீரவேண்டும். ஆதலால், இப்பிரபஞ்சம் முழுதும் அதன் காரணங்களாகிய சூரியசந்திர நட்சத்திரங்கள், பூமிகள், மனது, சரீரம் முதலியவற்றில்போய் லயமடையவேண்டுமென்றும், இப்பிரபஞ்சத்தில்உள்ளயாவும்

உருமாறி சூக்ஷ்மகாரணங்களாய் மறைந்து நசிக்கும் என்றும் நாம் காண்கிறோம். ஆனால்அவை அவற்றின் காரணங்களிலேயே சூக்ஷ்மஉருப்பெற்று இருக்கும். அவற்றினின்றும் அவை வெளிப்பட்டு மீண்டும்ஒருமுறைசந்திர சூரிய பூமி நக்ஷத்திரங்களைத் தோற்றுவிக்கும்

இவ் வேற்றத் தாழ்வைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் இன்னும் ஒன்றுளது. வித்து மரத்தினின்றும் வருகிறது. ஆயினும், அது உடனே மரமாய்விடுகிறதில்லை. அதற்கு ஓய்வுகாலம், அல்லது அதன் செயல்கள் நுட்பமான கட்புலனுக்கும் அதர்சனமாய் இருக்கக்கூடியகாலம் இருந்தே தீரவேண்டும். இவ்வித்து மண்ணுக்கடியில் இருந்து சிறிதுகாலம் வேலைசெய்யவேண்டி யிருக்கிறது. அஃதென்னவெனில், அது சிதைவுற்றுச் சீரழியும். இச்சீரழிவினின்றே அதற்கு மீண்டும் சீரிய தோற்றம் ஏற்படுகிறது. ஆதலால் இப்பிரபஞ்சமுழுதுமே அதர்சனமாயும் வெளிப்படாமலும், சிருஷ்டிக்கு ஆரம்பமாயுள்ள ஒழுங்கின்மையாகிய இச்சூக்ஷ்மரூபத்திலேயே இருந்து வேலைசெய்யவேண்டி யிருக்கிறது. இதன் பின்னரேதான் புதுத்தோற்றம் (சிருஷ்டி) ஏற்படுகிறது. இப்பிரபஞ்ச சாகரத்தின் தரங்கமானது, சூக்ஷ்மரூபத்துடன் சிறிது காலமிருந்து ஸ்தூலரூபத்துடன் ஒருமுறை வெளிப்பட எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வளவுகாலத்திற்குத்தான் சமஸ்கிருதத்தில் "கல்பம்" என்று பெயர். இப்பிரபஞ்சம் முழுதும் பிரம்மாண்டம்முதல், அதற்குள்ளடங்கிய தனித்தனி அணுவரை வெளிப்பட எத்தனையோ கல்பங்கள் செல்லும். ஒவ்வொன்றின் தோற்றமும் மறைவும் இப்படியேதான். இதற்கப்புறம், முக்கியமாய் தற்காலத்திற்கான ஓர் அதி முக்கிய கேள்வி பிறக்கிறது. இச்சூக்ஷ்மரூபங்கள் மெல்லமெல்ல வெளிப்பட்டு வரவர ஸ்தூலமாகிவருவதை நாம் காண்கின்றோம். காரணமே காரியம் என்றும், காரணம் காரியமே வேறுருக்கொண்டதென்றும் நமக்குத் தெரிந்திருக்கிறது. ஆதலால் இப்பிரபஞ்சம் முழுதும் சூனியத்தினின்றும் உண்டாயிருக்கமுடியாது. காரணமின்றிக் காரியம் இல்லை. இம்மட்டோ? அக்காரணமும் அக்காரியத்திலேயே சூக்ஷ்மரூபத்துடன் இருக்கும்.

ஆதலால், இப்பிரபஞ்சத்தின் உறபத்தியாங்கு? முன்னமேயே சூக்ஷ்மரூபத்திலிருந்த இப்பிரபஞ்சத்தினின்றே. மனிதன் எதனின்றும் தோன்றினான்? தனது முந்திய சூக்ஷ்மரூபத்தினின்றே. மரமுண்டானது எங்கிருந்து? வித்தினின்றே. முழுமரமும் வித்திலேயே இருந்திருக்கிறது. அது அங்கிருந்து வெளிப்பட்டுத் தோன்றுகிறது. அவ்வாறே இப்பிரபஞ்சம்முழுதும் ஏற்கனவே சூக்ஷ்மரூபத்திலிருந்த இதே பிரபஞ்சத்தினின்று



தான் தோன்றியிருக்கிறது. இப்பொழுது அதர்சனமாய் இல்லாமல் வெளிப்பட்டிருக்கிறது. மீண்டும் அது சூக்ஷ்மரூபமெய்திப் பின்னும் வெளிப்பட்டுத் தோன்றும். சூக்ஷ்மரூபங்கள் மெல்லமெல்ல தமக்கு ஏற்பட்ட அளவு எய்துமட்டும் வரவர ஸ்தூலரூபமடைவதையும், அவ்வளவு எய்திய பின்னர் அவை மீண்டும் சூக்ஷ்மரூபம் அடைவதையும் கண்டோம். இவ்வாறு யாதானுமொன்று அதன் சூக்ஷ்மரூபத்தினின்றும் வெளிப்பட்டுக் கூறுநிலைமட்டும் மாறி வரவர ஸ்தூலித்தலைத்தான் தற்காலத்தில் நாம் "ஆவிர்ப்பவம்" (Evolution) என்கிறோம். இது சத்தியமே. உள்ளபடியே உண்மையே. இதனை நாமே நமது ஜீவகாலத்தில் காண்கிறோம். பகுத்தறிவுள்ள மனிதன்எவனுக்கும் இவ்வாவிர்ப்பவவாதிகளுடன் எவ்வித சர்ச்சனையும்இராது. ஆயினும் நாம் மற்றுமொருவிஷயம் அறியவேண்டி யிருக்கிறது. ஒருபடி நாம் அப்பால் செல்லவேண்டி யிருக்கிறது. அதுதான் யாது? ஆவிர்ப்பவத்திற்கு முந்தி அந்தர்கதம் (Iuvolution) என்பது ஒன்று உண்டு என்பதேயாம். மரத்துக்கு மூலம் வித்து; ஆனால் இவ்வித்திற்குமூலம் மற்றொருமரமே. பெருமரத்தின் நுண்ணியஉருவித்தே ஆகும். அவ்வித்துக்குள் அதர்சனமாய் மறைந்து கிடக்கும் சூக்ஷ்மரூபமே மற்றோர்பெருமரம். முழுமரமும் அவ்வித்தின்கண் உள்ளதேயாகும். சூனியத்தினின்று எம்மரமும் உண்டாகாது. அன்றியும், மரம் வித்தினின்றும் தோன்றுவதும் அவ்வவ் வித்துக்கள் அந்தந்த மரங்களையேயன்றி பிறமரங்களை உற்பத்தி செய்வதில்லையென்றும் காண்கிறோம். ஆதலால் மரத்துக்கு மூலம் வித்தெனவும் அவ்வித்தைத் தவிர வேறு எதுவும் இல்லையென்றும், முழுமரமும் அவ்வித்தின் கண்ணேயே இருந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. மனிதவர்க்கம் முழுதுமே ஒரே பிண்ட (Protoplasm) த்திலேயே இருந்து மெல்ல மெல்ல வெளிப்படுகிறது. இப்பிரபஞ்சம் முழுதும் அதன் அதிசூக்ஷ்ம ரூபத்திலேயே இருந்திருக்கிறது. ஒவ்வொன்றுமே அதனதன் காரணமாகிய சூக்ஷ்ம ரூபத்திலேயே இருந்திருக்கிறது. ஆதலால், வரவர ஸ்தூல உருக்கொண்டு கண்ணுக்குப் புலப்படக் கூடிய தன்மையாகிய "ஆவிர்ப்பவம்" என்னப்பட்டது உண்மையாய் நிகழ்வதே. இதுமுற்றும் மெய்யே. ஆயினும், ஆவிர்ப்பவம் ஒவ்வொன்றற்கும் முற்பட்டு அந்தர்கதம் இருந்துகொண்டே இருக்கும். ஆதலால், எந்த நுண்ணிய அறை (Cell) பிற்பட்டுப் பெரியதாய்த்தோன்றும் மனிதனாகிறதோ, அதேதான் ஸ்தூலத்தில் பெரிதாய்த்தோன்றும் அம்மனிதனை சூக்ஷ்மத்தில் அடக்கிக்கொண்டிருப்பதாகும். இவ்விஷயம் தெளிவாய் அறிவமேல் ஆவிர்ப்பவாதிகளுடன் நமக்குச் சர்ச்சனையே இல்லை. அவர்கள் இவ்விஷயத்தை சரியென ஏற்றுக்கொள்வார்களேயானால், அன்னோர் மதநாசம் செய்வதைவிட்டு மத பரிபாலிகர்களாய் இருப்பர் என்று போகப்போக நமக்குத் தெரியவரும்.

சூனியத்தினின்றும் யாதாயினும் ஒன்றுதோன்றுதல் என்ற பொருளில் சிருஷ்டிப்பு என்பதே முடியாது என்று நாம் சொல்லிவந்தவரை அறிந்தோம். ஒவ்வொன்றும் நித்தியமாய் உள்ளது. ஒவ்வொன்றும் இனியும் சந்ததமும் இருந்தே தீரும் அதன் இயக்கம் மட்டும் மாறிமாறி ஏற்றத் தாழ்வடையும். அதாவது சூக்ஷமரூபமடைந்து ஸ்தூலிக்கும். இப்பிரகிருதி முழுதும் அந்தர்கதித்தும் ஆவிர்ப்பவித்துமே வருகிறது. ஆதலால், இப் பிரபஞ்சத்தில் காணும் நானாவிதப் பொருள்களும் ஒரு காலத்தில் சூக்ஷமமாய் இருந்து மறுபடியும் அதே சூஷ்மரூபத்தை அடைய நானாவிதமாகக் காணப்படுவன. உதாரணமாக, ஒரு சிறு செடியின் வாழ்வை ஆராய்வோம். ஒரு செடிதான் செடியாய் இயைவதற்கான விஷயங்கள் அதனிடத்தில் இரண்டுஉள. அவை வளர்ந்துதோன்றலும் நசித்துப்படலுமாம். இவைகளே செடியின் வாழ்வை ஒன்றுபடுத்துவன. ஆதலால் எண்ணிறந்த வளையங்கள்கொண்ட ஜீவசங்கலியில் செடிவாழ்வை ஓர் வளையமாகக்கொண்டு, பிண்டம் (Protoplasm?) முதல் பூரணத்துவம் அடைந்த மனிதன் ஈறாக உள்ள சகல வர்க்கங்களையும் ஓரே ஜீவனாக நாம் கொள்ளலாம். ஆவிர்ப்பவாதிகள் சொல்லுகிற பிரகாரம் மனிதன் ஒருவனையும் நானா உருக்கொண்ட குரங்குகளும் கீழ்தரப் பிராணிகளும் ஏனைய வளையங்களுமாகும். அதன் தொடக்கமாகிய அதி அற்பமான அணுவிற்கு மீண்டும் சென்று, முழு வர்க்கங்களையும் ஓரே ஜீவனாகக் கொண்டு, இப்பொழுது நாம் அறிந்துகொண்டவிதியை அது சம்பந்தமாய் உபயோகப்படுத்திப் பார்ப்போமேல் இவண் உள்ள ஒவ்வொரு ஆவிர்ப்பவமும் முன்பு மறைநிலையிலிருந்த அந்தர்கதமே என்றும், இவ்வர்க்கம் முழுதும் கீழ்தர ஜீவன் முதல் பூரணத்துவமுற்ற மனிதன் ஈறாகவுள்ள உயர்தர ஜீவன்வரை பிறிதொன்றன் அந்தர்கதமே என்றும் அறிவோம். எதன் அந்தர்கதம் இது என்பதே கேள்வி. அந்தர்கதிக்கப்பட்டதெது? கடவுளைப்பற்றி நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் தவறானது என ஆவிர்ப்பவாதி கூறுவன். ஏன்? ஏனெனில், அறிவால் தோற்றுவிக்கப்பட்டது உலகம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனாலோ எவ்வளவோ பிற்பட்டேதான் அறிவு வருவதைப் பிரதிதினமும் நாம் காண்கிறோம். மனிதனிடத்திலும் உயர்தரப் பிராணிகளிடத்தும் அறிவினைக்காண்கின்றோம். ஆனால் இவ்வறிவு வந்ததற்குமுன்னும் எத்தனையோ வருஷகாலமாய் இப்பிரபஞ்சம் இருந்துவருகிறது. பயப்படவேண்டாம் உங்கள்சித்தாந்தத்தை உபயோகித்துப் பாருங்கள்.

**M. GOPALAKRISHNA AIYAR,**
SECY, VIVEKANANDA UNION &
PRESIDENT, MANAVAR SENDAMIL SANGAM, **MADURA.**



## ARUNAGIRI NATHAR.

## அருணகிரிநாதர்.

(334-ம் பக்கத் தொடர்ச்சி.)

### பாரிசாதம்.

நற்குணங்கள் நிரம்பிய பிரபுடதேவராஜனிடத்தில் சொல்லியபடி பாரிஜாதப்புஷ்பத்தைக் கொண்டுவரவேண்டுமே யென்ற எண்ணம் மனத்திலுதித்தலும் அருணகிரியார் தன்னுடம்பைக் கோபுரமேனிலையில் வைத்துவிட்டு பொன்வர்ணக்கிளியுருத்தாங்கிப் பொன்னுலக நோக்கிப் பறந்துபோயினர். அப்படிப்போம்போழுது கிளியினத்தைச்சேர்ந்த பலகிளிகளும் உடன்பறந்துசென்றன. சென்றும் அதனோடுபறக்கமுடியாமலங்கங்கே நின்றுவிட்டன.

அருணகிரியார் கிளியுருவந்தாங்கிச்சென்ற செய்தியை உமையாளுணர்ந்த சம்பந்தாண்டான் அரசன் ஸமூகத்திற்கேகி 'இன்று கற்பகமலர் கொண்டுவருவல் என்று சென்றவன் அடைந்த கதியறிந்தையோ? அவன் சொல்லும் பொய்த்து உயிருமிழந்தனன்' என்று மொழிந்து அவன் உடல் இன்ன இடத்தில் கிடந்து நாறுகின்றது என இடத்தையுஞ் சுட்டினான். இம்மாற்றங்கேட்ட அரசன் நடுநடுங்கி 'தொண்டில்மேம்பட்ட தூயமுனி வன்சொல் பண்டுபோலப் பலிக்குமென்று நினைத்தேன். வினைப்பயனை வெல்லலாகுமோ' என இரங்கிக்கண்ணீர் சொரிந்தான். அக்காலை அமணத்தனும் முன்வந்து 'இவன் எவ்வண்ணம் இறந்தான்? இவனுக்கு நஞ்சு அளித்தார் யாவர்? இந்திரலோகத்திற்குச் சென்று வரும் ஆற்றல் தன்பாலில்லையென்பதை வாய்விட்டுச்சொல்லிக்கொள்ள நாணியோ பாவி இறந்துபட்டான், என்பது முதலாயவசனங்களால் அரசனைநோக்கியும் அங்கிருந்தாரைநோக்கியும் பற்பல பகர்ந்தான். தன்தாயிடத்துப்பக்தி பூண்டுளன் என்ற உரிமைகருதியோ வேறெக்காரணத்தாலோ குகக்கடவுளும் வாளாதிருந்துவைத்தான்.

கோயிலிற் பூஜை தடைபட்டதனால் எல்லாருந்திரண்டுசென்று அருணகிரியாருடலைக் கொண்டுபோய் எரியிலிட்டனர். இங்கு நடந்ததிதுவாக, சுவர்க்கத்தின்கட்சென்ற கிளியுலாவிக் கொண்டிருப்பதைக்கண்ட தேவர் அதிசயித்து அதன் பாலனாக அதுவும் செந்தமிழ்ப்பாடல் பொழிந்தது. பாட்டைவைத்து இது குமரனுக்கடிமைபூண்ட தெனவறிந்து இந்திரன் கொலுமண்டபத்தை யணுகி நடந்த சங்கதியுரைத்தனர். இந்திரனும் ஞானதிருஷ்டியால் இது வேறுவேடம் தரித்து வந்த தவத்தோனெனத் தேர்ந்தனன். தேர்ந்தவன் கிளியிருந்த இடத்தைநாடிச்சென்று உபசரித்த

மைத்தான். அதுவும் இவன்கையில் வந்தமர்ந்தது. பின்னர் கிளியின்பெரு
மைகளையோர்ந்து சிரமிசைவைத்துப் போற்றினன். சசி முதலியோரும்
உளம் பூரித்தார்கள். தேவரெல்லாம் அதுகிளியென்னும் எண்ணத்தையே
மறந்து உண்மையை நாடி யதற்கு அமிர்தமூட்டினர். அக்காலத்துக்கிளி
காதனும் இந்திரனைநோக்கி, பாரிஜாதமலரொன்று கொடுத்து என்னை
விரைவிலனுப்புக' என்றனன். கற்பகநிழலிலேயே எப்பொழுதுந் தங்கலா
மே யென்றனன் இந்திரன். காரியம் வேறென்று க்காட்டியதின்பேரில் மல
ரைக் கொடுத்தனுப்பிவிட்டான்.

கிளி இந்நிலத்தை நோக்கிய அக்கணமே உடலெரிந்த விஷயம் புத்தி
யில்பட்டது. அப்பொழுது மனஞ் சிறிதழுங்கிற்றாயினும் இதுநடந்தது
கந்தன் சம்மதத்தின் மேற்றானே என்னுமுறுதியையெண்ணி மனந்தேறி
னது மன்றிச் சந்தோஷிக்கவுஞ் செய்தது. கொண்டமட்டில் திருப்தியெய்
துவதே மேலோர் செய்கையன்றோ? உவகையோடு பைங்கிளி அருணை
யூரையடுத்துவருதலும் கற்பகமலர்வாசனை யேற்கமுடியாமல் ஊராரெல்
லாம் உன்மத்தராயினர். சிங்காதனத்தின்மீது மந்திரிமார் சூழக் கொலு
வீற்றிருந்த பிரபுடதேவனும் கிளி தன் முன்வருவதை நோக்கிக் கொண்
டிருந்து அது 'இதோ கற்பகமலர்' என்று பாரிஜாதத்தைத் தரப்பெற்ற
னன். பெறும்பொழுதே கிளி 'இனி யென்கடன் தீர்ந்தது' என்று மொ
ழிந்ததையுங் கேட்டான். அரசனுக்கு அடங்காவியசனம்வந்து ஐயகோ
என அலறிக்கீழ் வீழ்ந்துபுரண்டான். அருணைமுனிவன் கிளியுருத் தாங்
கியோ வந்தானென்று மனமுளைந்து 'தேவ! உன்மேனியை என்வசம் ஒப்
பித்துப் போகலாகாதா? சிகரியில்லைத்துச் சென்றனையே? வஞ்சகர்
மொழிக்கிணங்கி அதனைத் தீக்கிரையாக்கினனே. தமியேனை க்ஷமித்
தருள்' என்று வேண்டினன். தனக்கு முனிவர் இறந்துகிடந்தார் எனக்
கூறிய பேதைகளை நோக்கியச்செய்தியையார்பாற்கேட்டனர் எனவினவிய
பொழுது அமணன் சூது வெளிப்பட்டது. அரசனுக்குக் கோபமூண்டு
வாளை வீசியெழுந்து இப்பொழுதே அவனையழிப்பேனென்று குதித்தான்.
அப்பொழுது சுகவடிவாயிருந்த முனிபுங்கவன் சொல்வான் 'எனக்கு இவ்
வுடலும் அந்நியம் அவ்வுடலும் அந்நியம். அதைவிட இதைச் சுமத்தல்
எளிதில் ஆவது. குமரனை யவ்வுடலோடுதொழச் சென்றால் பலபேர் நடு
வணின்றுதொழ வேண்டும். இதனோடுசென்றால் நேரேகையிற் பேறாயிருக்
கலாம். அன்றியும் இவ்வுடலுக்குத் தேவர் அமிர்தம் ஊட்டியிருத்தலால்
பிணியாதிசற்றுமணுகாது. இவ்வுடலு மிதனினங்களும் நல்லுணவையே
யருந்துமியல்பை யுடையன. அவ்வுடலோ டிதுவரையிருந்தது ஈசுரச்
செயலாமெனில் இந்நாள் காரியமிப்படி யமைந்ததும் ஈசுரச்செயல்தானே



இந்தவாய்கொடு கீதம் இயம்பிடின் ஏற்காது போகுமோ? நித்தநித்தம்
எத்தனையோ மானுடர் உயிர்துறக்கின்றனரே. வேண்டுமாயின் அவற்
றுள் ஓரியாக்கையை எனதாக் கொள்ளேனோ? ஆதலால் அரசனே மனம்
வருந்தல்.' என்றுகூறித் தன் இச்சைவழிப்பறந்து சென்றான்.

அரசனுக்கு வயிற்றெரிச்சல் மண்டியது. தன் தலைவிதியை நொந்
துகொண்டான். அமணனைக் குறித்து வசைபடுமொழிகள் கூறத்துணிந்
தான். உலகமும் அவ்வாறே செய்தது. அமணனுக்கு மனம் பொறுக்க
வில்லை. உக்கிரகாளியை யுபாஸித்தான். அரசனை யடியோடு கெடுக்க
வோ அருணைநகர்ச் சிறப்பை யழிக்கவோ தமிழ்க்கிளியினைத் தடியவோ
தன்னைப் பழிக்குமாந்தரை விழுங்கவோ காளியை வரவழைத்தலை யுன்
னிப் பூஜைசெய்யப் புகுந்தவன் செய்யத்தகாத செயல்கள் சிலவும் புரிந்
தான். இதனையறிந்த குமரக்கடவுள் 'அம்பிகைபேரால் சத்துருசங்
காரத் திருப்புகழுரை' யெனக் கிளியிடத்துரைக்க 'உனக்கலாற் கவிகூ
றேன்' எனக் கிளிமறுமொழி புகன்றது. பின்னும் அவசியத்தையுன்னி
'இவள் மகன் இவன்' எனக்கவி சாற்றியது. ஆயிரந்தலை யிரண்டாயிரங்
கரத்தோடு யாளிமீதேறிப் பல்படைகள்சூழப் பத்திரகாளி சமணன்முன்
தோன்றி அதட்டினள். அவன் பணிந்திலனாய்ச் சிறிதே திடுக்குற்றான்.
பத்திரகாளி கோபந்தணியாளாய் அவன்மீது பாய்ந்து உயிரை வாங்கி
னாள். மாம்ஸமதுவாதி நிவேதித்துப் பூசிப்போர் கதி யிதுவேயாகும்.
இவனிறந்தது கேட்டதும் உலகமெங்கணும் ஆனந்தமே மலிந்தது. பிர
புடதேவன் செவியி லிச்செய்தியேட்டியது. அவன் ஆனந்தபரவசனாய்க்
குகப்பெருமானுக்கு அபிஷேக அலங்காரகதிசெய்து வழிபட்டான். பின்
னர்க் கோபுரத்தியிலிற் கிளியினைக் கண்டு நடந்ததுகூறி மகிழ்ந்தான்.
அதுவும் அவரவர்க்கமைத்தபடி வருதல் தப்பாது என்றுசொல்லி அவ்வர
சனோடுவந்த பாவலனைமுகம் பார்த்துத்தான் உமை மவன்எனச் சொல்லிய
திருப்புகழைக் கூறிற்று. அவனும் ஆவலோடு எழுதிக்கொண்டான்.
இனியும் வந்து யான் சொல்லும்பாட்டுக்களை யெழுதிக்கொள்க என்று
விரும்பியது. பாவலனும் மனமுவந்து சம்மதித்தான்.

இவ்வாறு சிலநாட்கழிய அரசனும் தன்பாலனிடத்து அரசுரிமை
யை யளித்துத் துறக்கமெய்தினன். மாதவர்க்கும் கற்றோர்க்கும் நன்
மை செய்தலிற் பின்வாங்காதிருந்த தன்மையானும், திருப்புகழ்க் கிளி
யைத் தினந்தோறுஞ் சென்று பணிந்துவரு மியல்பினாலும் தாதையினும்
பிள்ளை சீரியனென்னும் பெயர் வாங்கினான்.

S. ANAVARATAVINAYAKAM PILLAI.

# STRANGE JAPANESE CUSTOMS.

(*Continued from page 367*)

## ஜப்பானியருடைய விநோத வழக்கங்கள்

(367=ம் பக்கத்தொடர்ச்சி)

---

ஜப்பானியர்களுடைய விவாகம்:—ஒரு பிள்ளைக்கு விவாகம் செய்யத் தகுந்த வயது வந்தவுடனே தகுந்த மணமகன் அல்லது மணமகளைத் தேடுவது பெற்றோர்களுடைய கடமை. இது இந்துக்களுடைய வழக்கத்தை ஒருவாறு ஒத்திருக்கிறது. ஆனால் ஜப்பானியர்க்குள் பெற்றோர்கள் தாங்களே நேரில் மாப்பிள்ளை அல்லது பெண்ணைத் தெரிந்துகொள்ளாமல் ஒரு மத்தியஸ்தனை உபயோகப்படுத்துவார்கள். இவன் சாதாரணமாய் குடும்பஸ்தனாயுள்ள ஒரு குடும்ப சிநேகிதனாய் இருப்பான். கலியாணம் செய்து கொடுக்கவேண்டியது ஒரு பெண்ணாய் இருக்கும் பட்சத்தில், இவன், தக்கமாப்பிள்ளை யொருவனைத்தெரிந்து பெண்ணின் பெற்றோர்களுக்கு அறிவிப்பான். அதின்மேல் ஒரு சடங்குநடத்தப்படுகிறது. அந்த சடங்கில் கலியாணம்செய்துகொள்ள வேண்டிய இருவரும் ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ளுகிறார்கள். சிறுவனுக்கு பெண்மேல் பிடித்தமில்லையாகில், அல்லது பெண் அச்சிறுவனைக் கலியாணம் செய்துகொள்ள ஆக்ஷேபிக்கும் பட்சத்தில், கலியாண ஏற்பாடு அதோடே நின்று விடுகிறது. அப்படிக்கில்லாமல், இருவரும் ஒருவருக்கொருவர் ஆக்ஷேபிக்காவிடில், அல்லது இருவர்களுடைய பெற்றோர்கள் அந்த சம்பந்தம் நன்மையைத் தருமென்று கருதும் பட்சத்தில், மேல் நடபடிக்கைகள் நடக்கின்றன. ஒருவருக்கொருவர் வஸ்திரம், பணம், மீன், அல்லது ஒருவித புசிக்க தகுந்த கடற்பாசி இவைகளை சீர்மாத்திக்கொள்ளுவார்கள். இவ்விதமாகச் சீர்மாத்தப்படுவது இந்துக்களுக்குள் நிச்சயதாம்பூலம் செய்வதை யொக்கும். இப்படி சீர்மாற்றியபின் இரண்டு தரத்தாரும் பின்னிடக்கூடாது. இதன் பிறகு கலியாணத்திற்கு ஒரு நல்ல தினம் குறிக்கிறார்கள். இந்த தினத்தில் பெண்ணை முற்றிலும் வெள்ளை உடுப்பால் உடுத்துகிறார்கள். இந்துக்களுக்குள்ளும் ஐரோப்பியருக்குள்ளும் கருப்பு நிறம் துக்க நிறமாக எண்ணப்படுகிறதுபோல, ஜப்பானியருக்குள் வெள்ளை நிறம் துக்க நிறம். மணமகளை வெள்ளையில் உடுத்துவதின் அருத்தமென்னவென்றால், அவள் தான்பிறந்த குடும்பத்திற்குசெத்துப்போனவள்பாவனை ஆய்விட்டா



ளென்றும், அவள் தன் கணவன் வீட்டைவிட்டு பிணமாகத்தவிர வேறுவிதமாக வெளிப்படமாட்டாளென்றுமே. இரவானவுடனே மத்தியஸ்தனும் அவன் மனையாளும் பெண்ணை புருஷன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவார்கள்.

பெண் புருஷன் வீட்டிற்கு வந்தவுடனே கலியாண சடங்கு ஆரம்பிக்கிறது. இது ஒரு விருந்தை யொத்தது. இதில் முக்கியமான சடங்கு என்னவென்றால் மணமகனும் மணமகளும் மூன்று விதமான கோப்பைகளிலிருந்து மும்மூன்று தரம் சாகியென்னும் பானம் அருந்த வேண்டும். மணமகள் தன்னுடைய வெள்ளையுடுப்பை நீக்கி புருஷன் கொடுக்கும் வேறுடுப்பைத் தரித்துக்கொள்ளுவாள். ஆனால் மேற்சொல்லிய சடங்குப்படி குடித்தபிறகு, விருந்தாளிகள் இருக்கும்பொழுதே, அறைக்குள் சென்று தன் பெற்றோர்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்த பல நிறமுள்ள உடுப்பைத் தரித்துக்கொள்ளுவாள்.

மற்றொரு அறையில் மணமகனும் தன் உடுப்பை மாற்றுவான். பிறகு இருவரும் விருந்தினர்களோடுவந்து சேருவார்கள். விருந்து முடிந்த உடனே மத்தியஸ்தனும் அவன் மனைவியும் மாப்பிள்ளையையும் பெண்ணையும் அவர்கள் கலியாண அறைக்குக் கொண்டுபோய் விடுவார்கள். அவ்விடத்தில் மறுபடியும் ஒன்பது தடவை கோப்பைகளிலிருந்து சாகி குடிப்பார்கள். அதோடு கலியாண சடங்கு முடிகிறது.

மத்தியஸ்தன் அவர்கள் ஆயிசுகால பரியந்தம் அவர்களுக்கு ஒரு பிதாவைப் போலிருந்து வருகிறான். அவர்களுக்குள் விவாதமுண்டானால் அவனிடத்தில் சொல்லி அவன் தீர்மானத்தின்படி நடப்பார்கள். ஒருவரைவிட்டு ஒருவர் விலகவேண்டியிருந்தாலும் அவன் மூலமாகவே நடக்கவேண்டும். பெண்சாதி அதிகமாகப் பேசுகிறாள் என்ற காரணத்திற்காக புருஷன் அவளை விவாகசம்பந்தத்திலிருந்து நீக்கிவிடலாம்.

ஜப்பானியர் புகைக்குடித்தல்:—ஜப்பானியர் புகைக்குடிப்பார்கள்; ஆனால் அவர்கள் குடிக்கும் மாதிரி விநோதம். அவர்கள் புகைக் குடிக்கும் சுங்கான் சாதாரண அங்குலித்திராணத்திற்கு கால்வாசிப் பிரமாணமுள்ளதாக இருக்கும்; குழாயும் வாய்ப்பிடிப்பும் மூங்கிலால் செய்திருக்கும். புகை இலையைச் சன்னமாக அரிந்து அதைச் சிறு உருண்டைகளாக உருட்டுவார்கள். அந்த உருண்டையை சுங்கானில் போட்டு நெருப்புவைத்துக் குடிப்பார்கள். அந்த உருண்டையிலுள்ள புகை இலை இரண்டு மூன்று இழுப்புக்குத்தான் காணும். ஆனதும், சுங்கானிலுள்ள சாம்பலைக் கொட்டிவிட்டு, மறுபடியும் இன்னமொரு உருண்டை

உருட்டிப் போட்டு குடிப்பார்கள். அவர்களுக்கு வேலையில்லாமற் போனால், இவ்விதமாக, மணிக்கணக்காய் புகை இலையை உருட்டிக்கொண்டும் குடித்துக்கொண்டு மிருப்பதை நாம் காணலாம். பெண்களும் ஆண்களைப் போல புகை இலை குடிப்பார்கள்.

ஜப்பானியருடைய சப்தமில்லாத வாத்தியம்:—ஜப்பானியருடைய சங்கீதம் ஐரோப்பியருடைய காதிற்கு இன்பத்தைத்தராது. அவர்களுடைய மதத்தைச் சேர்ந்த சில உற்சவங்களில் சில விநோதமானசடங்கு நடத்துவார்கள். இதில் தந்தியுள்ள வாத்தியங்களையும் ஊதுகிற வாத்தியங்களையும் உபயோகப்படுத்துவார்கள். ஆனால் அந்த வாத்தியங்களின் தொனி அனுசாரமானகாதுகளில் விழக்கூடாதாகையாலும், அவ்விடமிருப்பவர்களிற் சிலர் பாபிஷ்டிகளாயிருக்கலாமாகையாலும், வாத்தியங்களிலிருந்து யாதொரு தொனியும் உண்டாகாமலே, அவைகளை வாசிப்பதுபோலநடித்து, அதற்குண்டான சயிக்கினைகளைச்செய்வார்கள்.

மல்யுத்தம்:—ஜப்பானில் மல்யுத்தம்செய்பவன் ஜனங்களுடைய பிரியன். அத்தேசத்தில் மல்யுத்தம் செய்வதே தொழிலாக வுள்ளவர்கள் 500 பேருக்குமேலுண்டு. முக்கியமான மல்யுத்தங்கள் வருஷத்திற்கு இருமுறை டோகியோ என்னும் நகரத்தில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தடவையும் பத்துநாள்வரைக்கும் நடக்கும். இப்படி குஸ்திபிடிப்பவர்களிலனேகர் ஆறு அடிக்குமேல் உயரமும் 200 பவுனுக்குமேல் நிறையுமுள்ளவர்களா யிருப்பார்கள்.

மல்யுத்தம் செய்யும் களம் வட்டவடிவாய், 24 அடி குறுக்களவுள்ளதாயிருக்கும். இதைச்சுற்றிலும் அடையாளமாக வைக்கோலாற் செய்த மணற் பைகளை வைப்பார்கள். இந்த வளயத்திற்கு வெளியே நான்குமூலைகளிலும்நான்குகம்பங்களைநிறுத்தி அவ்விடங்களில் 'நான்கு மூத்தவர்களை' வைப்பார்கள். அவர்கள் மல்யுத்தத்தில் தேர்ந்தவர்களாயிருந்து வயது முதிர்ந்ததால் அத்தொழிலை நீக்கியவர்களாயிருப்பார்கள். குஸ்திசெய்யும் களம் அல்லது கோதாவுக்குள் குஸ்திசெய்யப்போகிற இருவரும், ஒருமத்தியஸ்தகாரனும் மாத்திரந்தானிருப்பார்கள். குஸ்தி செய்பவர்கள் இடுப்பில்மாத்திரந்தான் துணியிருக்கும். அவர்கள் குஸ்தியில், எவன் எதிராளியை கோதாவிற்கு வெளியில் தள்ளுகிறானோ அவன்தான் ஜயவான்.

இக்குஸ்திகாலங்களில் ஜனங்களுக்குள்ளிருக்கும் ஆரவாரமும் உற்சாகமும் வெகு அதிகம். ஜயமடைந்தவனிடத்தில் தங்கள் சந்தோஷத்தைக் காட்ட அவனுக்குத் தங்கள் உடுப்புகளைக் கழட்டி எறிவார்கள். பிறகு



அவனுக்குபணத்தைக்கொடுத்துவிட்டு உடுப்புகளை மீட்டுக்கொள்வார்கள். அனேகவிடங்களிலுள்ளதுபோல ஜப்பானில் மல்லகஜெட்டிகள் குடிவெறிக்காரர்களும், வீண்சண்டை போடுகிறவர்களும், வீண்வம்பு இழுப்பவர்களுமான போக்கிரிகளாக இல்லாமல், மிக சாந்தமுள்ளவர்களாகவும், நன்னடக்கை யோக்கிதாபட்சமுள்ளவர்களாகவுமிருப்பார்கள். ஜப்பானில் மல்யுத்தக்காரர்களில் எவனாவது தண்டனையடைந்தானென்பது இதுவரையும் கிடையாது.

மீன்பிடித்தல்:—நம்முடைய தேசத்திலும், ஐரோப்பாவிலும் தூண்டிலைக்கொண்டு மீன்பிடிப்பார்கள். தூண்டிலானது மீனைத்துரத்திக்கொண்டுபோய்பிடிக்குமானால், எவ்வளவு மீன் பிடிக்கலாம்! ஜப்பானியமீன் பிடிப்பவர்கள் தூண்டிக்கயிற்றின் கடைசியில் மீன் முள்ளிருப்பதற்குப் பதிலாக ஒருபரவையிருக்கும். இந்தப்பட்சிகள் கார் மோரான்ட் என்னும் ஓர்வித நீர்வாத்துகள்.

இவைகள் சுபாவமாய் தண்ணீரில் முக்குளித்து மீன்களைப் பிடித்துத்தின்று ஜீவிக்கும்பட்சிகள். ஜப்பானியர் இவைகளைப் பிடித்துப் பழக்குபவர்களிடம் கொடுக்க, அவர்கள் இவைகளைப்பழக்கி இவைகழுத்தில் நெறுக்கமானவளையம் ஒன்றை மாட்டுவார்கள். அவ்வளையத்தால் பட்சிகள் சிறுமீன்களை விழுங்கலாமே யொழிய, பெருமீன்களை விழுங்கமுடியாது.

இவ்விதமாக பழகினபட்சிகள் அனேகம் உள்ளவர்கள் நால்வர் சேர்ந்து மீன்வேட்டையாடப் புறப்படுவார்கள். ஒருவன் படகை நடத்துவான்; ஒருவன் ஒரு மூங்கிற்கோலால் சப்தம்செய்து பட்சிகளை வேலை செய்யும்படி தூண்டிக்கொண்டிருப்பான்; மற்றிருவரும் பட்சிகளைத் தண்ணீரில் விடுவதும் அவைகளைத் திரும்ப இழுப்பதுமாக விருப்பார்கள். அவர்கள் வேட்டைக்குக் குறிக்கும்காலம் இரவாகவிருக்கும். மீன்எவ்விடத்தில் அதிகமாக சஞ்சரிக்குமென்று அவர்களுக்குத் தெரிகிறதோ அவ்விடம் தங்கள் படகை நடத்தி, படகின் முன்பாகத்தில் பெரிய நெருப்பை வளர்ப்பார்கள். அதின் சுவாலையைக் கண்டு கடலிலுள்ள மீன்கள் படகண்டை வருகின்றன. அப்பொழுது இப்பட்சிகளைத் தண்ணீரில் விடுவார்கள். இவைகள் மீனைப்பிடித்தவுடனே கழுத்து வளயத்தில் கட்டியிருக்கும் கயிற்றால் இழுத்து மீனைப் பிடுங்கிக்கொண்டு மறுபடியும் பட்சிகளைத் தண்ணீரில் விடுவார்கள். இவ்விதமாக சொற்பநேரத்தில் படகை நிறப்பிவிடுவார்கள்.

நாடகம்:—ஜப்பானியருக்கு முக்கிய வேடிக்கைகள் அவர்களுடைய நாடகங்களும், குஸ்திசண்டைகளும், காத்தாடிகள் பறக்கவிடுவ

துமே. அவர்களுடைய நாடகசாலைகளில் நாடகமாடும் மேடையானது சுற்றி நகரக்கூடியதாயிருக்கும். நாடகமாடுமிடத்தின் சிங்காரங்கள் ஐரோப்பியருடைய நாடக சாலைகளிலுள்ளவை போலவே யிருக்கும். ஆனால் அவர்களுக்குக் காந்தவெளிச்சத்தின் காட்சி கிடையாது. நம்முடைய சுதேச நாடக சாலைகளிலுங்கூட முக்கியமான தருணங்களில் காந்தவெளிச்சத்திற்குப் பதிலாக மகத்தாப்பு வெளிச்சத்தை உபயோகப்படுத்துவார்கள். ஜப்பானியரோ இதுவுங்கூட உபயோகப்படுத்துகிறதில்லை. அப்படிக்கொத்த முக்கிய சந்தர்ப்பங்களில் தலைமுதல் கால்வரை கறுப்புப் போர்வை போர்த்திய ஒருவன்கையில் ஒரு மூங்கிற்கோலில் கட்டிய மெழுகுவத்திவிளக்கைப்பிடித்துக்கொண்டு ஆடுபவர்கள்முகத்தைக்காண்பிப்பான். புதிதாக ஜப்பானிய நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு ஒருவன் இப்படி நடுவே ஓடிக்கொண்டுதிரிவது வெகு சள்ளையாயிருக்கும். நாடகத்தின் ஒரு அங்கம் முடியும் சமயத்தில் அதுமுடிகிறதென்று ஜனங்களுக்கு சொல்வதற்குஅடையாளமாக ஒருவன் இரண்டுகட்டைகளைக்கொண்டு கலகலவென்றுசப்தம் செய்வான். திரைவிழுந்தவுடனே, நாடகசாலையிலுள்ள சிறுவர்ளெல்லாம்நாடகமாடும்மேடையிலேறிக்கொண்டுவிளையாடுவார்கள்; அடுத்த அங்கம் ஆரம்பிப்பதாக முன்போல கலகலவென்று கட்டை சப்தம் கேட்டவுடனே மேடையை விட்டு ஓடிப்போய்விடுவார்கள்! ஜப்பானிய நாடகங்கள் காலை எட்டுமணிக்கு ஆரம்பித்து இரவு ஏழுமணி வரைக்கும் நடக்கும்.

காத்தாடி:—ஜப்பானியருக்குக் காத்தாடி பறக்கவிடுவதில் வெகு உற்சாகம். சிறுவர்களும் பெரியவர்களும் இந்தவிளையாட்டில் வெகு பிரியப்படுவார்கள். அவர்கள் விடும்காத்தாடிகள் ஒரு சதுரஅடிமுதல் முப்பத்தாறு சதுரஅடிவரை விலாசமுள்ளவைகளாயிருக்கும். காத்தாடிகளைப்பறக்கவிடும் கயிறு தலைப்பிலிருந்து நாலுகெஜம் வரைக்கும் கண்ணாடிப்பொடி சேர்த்து அரைக்கப்பட்ட பசையால் பூசப்பட்டிருக்கும். இது எதற்காகவென்றால் காத்தாடிவிடுவதில் ஒருவருக்கொருவர் போட்டியுண்டானபொழுது எதிரிகளின் காத்தாடிகளை அறுப்பதற்காக. யாதாமொரு காத்தாடி யறுபட்டால் அதை எவன் எடுக்கிறானோ அவனுக்கு அது சொந்தமாய் விடுகிறது. இப்படி அறுபடும் காத்தாடிகளைப் பிடிப்பதற்கு கூட்டங்கூட்டமாய் மனிதர்களும் பையன்களும் மூங்கிக் கிளைகள் முதலானவைகளை எடுத்துக்கொண்டு திரிவார்கள். சில சமயங்களில் அறுபட்ட காத்தாடிகளைப்பற்றி கட்சிகளுண்டாகி சண்டைகளும் நடக்கும். ஒரு சமயத்தில் இவ்விதமாக ஏற்பட்ட இரண்டு கட்சிக்காரர்களுக்குள் நடந்த சண்டையினால் ஒருபட்டணமே பாழாயிற்று.



ஜப்பானிய பத்திரிகைகள்:—ஜப்பானிய பத்திரிகைகளில் துரைத்தனத்தாருடைய நடவடிக்கைகளைப்பற்றி விரோதமாக ஏதாவது எழுதப்பட்டிருந்தால் உடனே நியாயாதிபதி பத்திராதிபரையும், பத்திரிகை பிரசுரஞ் செய்பவரையும், முக்கிய அச்சுத் தலைவரையும் தன்முன்னிலைக்குத் தருவிப்பார். அவர்கள் ஏன் அப்படி எழுதினார்களென்று விஜாரணைசெய்து அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புவார். அவர்களை ஜெயிலுக்கு அனுப்பும் உத்திரவானது வெகுவினோதமாய் இருக்கும். "தங்களுடைய கனமான பத்திரிகையைக்கனம்பொருந்திய தாங்கள் மகா கனத்தோடு இனிப்பிரசுரம் செய்யாதிருங்கள். கனம் பொருந்திய பத்திராதிபரே, கனம் பொருந்திய பிரசுரம் செய்பவரே, கனம்பொருந்திய முக்கிய அச்சுதலைவரே, கனம் பொருந்திய ஜெயிலுக்குள் பிரவேசியுங்கள்" என்றிருக்கும். ஜப்பானில் பத்திரிகைகள் துரைத்தனத்தாருக்கு எதிராகப்பேசி ஜெயிலுக்குபோவது சாதாரணமாகையால், அனேக பத்திரிகைகளில் ஜெயில் பத்திராதிபர் என்று ஒருவனை நியமித்து வைத்திருப்பது வழக்கம். அவன் பேருக்குத் தான் பத்திராதிபன். பத்திரிகைக்கு துரைத்தனத்தாரால் சங்கடமுண்டானபொழுது "கனம்பொருந்திய ஜெயிலுக்குள்" போகவேண்டியது அவனுடைய வேலை.

பூகம்பங்கள்:—ஜப்பானில் பூகம்பம் சம்பவிப்பது வெகு சாதாரணம். வருஷத்திற்கு 700, 800 தடவை, அதாவது சராசரி ஒரு நாளைக்கு இரண்டுதடவை, பூமி அதிரும். இதுபற்றியே ஜப்பானியர்கள் தங்கள் வீடுகளை அஸ்திவார மின்றியும், அதிக உயர மில்லாமலும், செங்கல் சுண்ணாம்பின்றி பலகைகளாலும், கட்டுகிறார்கள். இதைப்பற்றி நாம் முன்னமேயே சொல்லி இருக்கிறோம். பூமி அசைவதற்கு அவர்கள் சொல்லும் கதை ஒன்றுண்டு. என்னவென்றால், தங்கள்தேசத்தை ஒரு பிரமாண்டமச்சம் தாங்கிக்கொண்டிருப்பதாகவும், அதன் தலையின்மேல் ஒரு கோவில்இருப்பதாகவும், அதிலிருக்கும் சுவாமி தன்பாதத்தால் அந்தமச்சத்தின்மூக்கை பலமாக அழுத்திக்கொண்டிருப்பதாகவும், அந்த சுவாமி பலத்தைக்கொஞ்சம் குறைத்தாலாவது, அல்லது தான் இருக்கும் சாயலை மாற்றினாலாவது, கீழே இருக்கும் மீன் அசைவதாகவும், அதினால் பூமி அசைவதாகவும், சொல்லுவார்கள். இது தூரத்து நாட்டுப்புறங்களில் கல்வியறிவில்லாதவர்களுடைய அபிப்பிராயமேதவிர கல்வியறிந்த ஜப்பானியர்களுடைய நம்பிக்கை யன்று.

இவ்விதமாகவே 'அனேக இயல்பாயுள்ள விஷயங்களுக்குக் காரணமளிக்க ஜப்பானியருக்குள் வேடிக்கையான பல கதைகளுண்டு. நாய்கள் பேசாததற்கு ஒரு காரணம் செல்லுவார்கள். பூர்வகாலத்தில் நாய்கள்

பேசிக்கொண் டிருந்தனவாம். ஒருநாள் ஒரு நாயானது தன் எஜமானுக்கு நல்ல வேட்டை காண்பிப்பதாக மோசவார்த்தைகள் பேசி, அவனை காட்டிற்குள் வெகுதூரம் கூட்டிக்கொண்டுபோய், அவ்விடத்தில் கரடிகளுள்ள புதாரில் விட, கரடிகள் அவனைப்பட்சித்துவிட்டன. பிறகு நாயானது மனுஷ உருவமெடுத்துத் தன் எஜமான் வீட்டிற்குவந்து தன் எஜமானச்சியிடம் அவள்கணவனைக்கரடிகள் புசித்துவிட்டதாகவும், அவன்சாகும்போது தன்னை தன் எஜமானிச்சையைக் கலியாணம் செய்துகொள்ளும்படியாகச் சொன்னதாகவும் பொய் சொல்லிற்று. எஜமானச்சிக்கு நாய் பொய் சொல்கிறதென்று பரிஷ்காரமாகத் தெரிந்தது. நாயானது தன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி அவளையடிக்கடி தொந்திரவு செய்தபடியால் அவளுக்குக் கோபம் பிறந்து அதின் வாயில் மண்ணையள்ளிப்போட்டாள். அதினால் அந்த நாய்க்குப் பேசக்கூடாமற் போய்விட்டது. அதுமுதற்கொண்டு நாய்களுக்கு பேசும் சக்தி போய்விட்டது என்பார்கள். இதுபோல் அனேக கதைகளுண்டு.

ஜெபச்சக்கரம்:—ஜப்பானியருக்கு 80,00,000 தேவர்களிருப்பதாகச் சொல்லுகிறார்கள்! ஆனால் இது நம்முடைய 33 கோடி தேவர்களுக்குக் குறைவுதான்! இத்தனை கடவுள்களுக்குப் பிரார்த்தனை செலுத்துவது அதிக கஷ்டம். அதுபற்றித் தெருக்களெல்லாம் அங்கங்கே பிரார்த்தனைகள் எழுதியுள்ள உயர்ந்த ஸ்தம்பங்கள் நாட்டப்பட்டிருக்கும். இவைகளுக்கு ஒரு சிறு சக்கரம் மாட்டியிருக்கும். அந்தச் சக்கரத்தைத் திருப்பினால் ஸ்தம்பம் முழுதும் சுற்றும். வழியால் போகிறவன் எவனும் சக்கரத்தை ஒருசுத்து சுற்றலாம். ஸ்தம்பம் ஒருதரம் சுழன்றால் ஒருதரம் ஜபம் செய்ததாகக் கணக்கு. இது நம்மவர்கள் ஒரு கோவிற்பக்கம் போகும்போது ஒரு கும்பிடு போட்டுவிட்டுப்போவதுபோல. ஜனங்கள் கரடியை ஆராதனை செய்வார்கள். சூரியன், சந்திரன், அக்கினி, வாயு, ஜலம் முதலியவைகளையும் வணங்குவார்கள்.

ஜப்பானியருடைய சில எதிரிடைகள்:—ஜப்பானியர் அனேககாரியங்களை மற்ற ஜாதியார் செய்வதற்கு எதிரிடையாகச்செய்வார்கள். உதாரணமாக,பலகைகளை இழைப்பதில் நாம் செய்வதுபோல இழைப்புளியை கீழிருந்து மேலே தள்ளுவதற்குப் பதிலாக, மேலிருந்து கீழே இழுப்பார்கள். மரம் அறுப்பதில் இரம்பத்தை மேலிருந்து கீழே இழுப்பதற்குப் பதிலாக கீழிருந்து மேலே இழுப்பார்கள். அதின் பற்கள் நம்முடைய இரம்பத்தின் பற்களுக்கு எதிரிடையாகவிருக்கும். அவர்களுடைய எழுத்துக்கள் மேலிருந்து கீழே ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதப்பட்டிருக்கும். லாயத்தில் குதிரைகளை நாம் தலைவைக்கிற பக்கத்தில் பின்பக்கத்தை



வைத்துக் கட்டுவார்கள். அவர்களுடைய பூட்டுகளும் ஸ்குரூ ஆணிகளும் நம்முடையவைகளுக்கு எதிரிடையாகத் திரும்பும். கருமான் துருத்தியைக் காலால் ஊதுவான். ஒருவன் தங்களுக்குக் கெடுதிசெய்தால் அவனுக்குத் தங்களால் கெடுதிசெய்ய முடியாவிட்டால், தங்களைத் தானே கொன்றுகொள்வார்கள்.

ஜப்பானியருக்குள் உபசர்பணம்:—ஜப்பானில் சிலபாகங்களில் நாம் முன்கூறியபடி மத்தியஸ்தனொருவன் இல்லாதபடியே ஒரு வாலிபன் தனக்குகந்த மனையாட்டியைத் தெரிந்துகொள்ளலாம். கலியாணத்திற்குப் பக்குவமான பெண் ஒரு வீட்டிலிருக்கும்பட்சத்தில் அவ்வீட்டார் வீட்டிற்கு வெளியே தாழ்வாரத்தில் ஒரு காலியான பூந்தொட்டியைத் தொங்கவிட்டு வைத்திருப்பார்கள். அவ்வீட்டுப்பெண்ணை வெளியே போகவரக்கண்ட வாலிபன் அவளைத்தனக்கு மனையாட்டியாக்க விரும்பும்பட்சத்தில் நல்ல புஷ்பச் செடிகளில் ஒன்றை வீட்டிலுள்ளவர்கள் யாவருங்காணாமல் அந்தத்தொட்டியில் நட்டுவிட்டுப் போவான். அவனைக் கலியாணம் செய்துகொள்ள அந்தப் பெண்ணுக்குப் பிரியமிருக்கும் பட்சத்திலும், பெற்றோர்களுக்குசம்மதமிருக்கும் பட்சத்திலும் நாள்தோறும் செடிக்குத்தண்ணீர் வார்த்துபாதுகாத்து வருவார்கள்; அல்லாவிடில் அதைப் பிடுங்கி எறிந்துவிடுவார்கள். இதினால் வாலிபன் தன்னை ஏற்றுக்கொண்டதும் கொள்ளாததும் லகுவில் தெரிந்துகொள்ளலாம்.

ஜப்பானியரின் பேர்கள்:—ஜப்பானியருக்குள் விநோதமான பேர்களுண்டு. "புலி," "கரடி," "சிவிங்கி," என்பதுபோன்ற பேர்கள் ஆண்களுக்குள் சாதாரணம். பெண்களுடைய பேர்கள் இன்பமாயிருக்கும். "பழம்," "பனி," "சூரிய ஒளி," "வசந்தம்," "ஆபரணம்," "கொடி இடையாள்," என்பவைகள் போல்வன பெண்களுடைய பெயர்.

ஜப்பானியர்க்குள் தற்கொலை:—ஜப்பானியர்க்குள் சாதாரணமாய்த் தற்கொலை புரிந்துகொள்ளும் விதத்திற்கு "ஹர-கிரி" என்று பெயர். அது வயிற்றில் கத்தியால் குத்தி குடலைச்சரித்துக்கொள்வது. முற்காலத்தில் எவனாவது போர்வீரன் பெருங்குற்றம் செய்துவிட்டால் அவனை சாதாரண கொலையாளி கையில் ஒப்புவிப்பதற்குப் பதிலாக இராஜாங்கத்தாரே அவனை ஹர-கிரி செய்துகொள்ளுமபடி உத்திரவு கொடுப்பார்கள். இது மரியாதையான சாவென்று ஜப்பானியருக்குள் எண்ணப்படுகிறது. இப்பொழுது ஹரகிரி எவரும் செய்துகொள்ளக் கூடாதென்று ஜப்பானிய துரைத்தனத்தார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

ஜப்பானிய உடை:—ஜப்பானியருடைய உடுப்பு பலவிதமும், பலவித்தியாசங்களு முள்ளன. பொதுவாய் ஆண்கள் இடுப்பில் ஒரு மஸ்லின் துணி கட்டிக்கொள்வார்கள். அதின்மேல் பருத்திநூல் அல்லது பட்டால் செய்த ஒருசொக்காய் போட்டுக் கொள்வார்கள். குளிர்காலத்தில் இதின்கீழ் ஒரு சொக்காய் போட்டுக்கொள்வார்கள். எல்லாவற்றிற்குமேல் ஒரு நீண்ட அங்கி தரித்துக்கொள்வார்கள். அதை இடுப்பைச்சுற்றி ஒரு துண்டால் கட்டிக்கொள்வார்கள். அவர்கள் தலையில் ஒன்றும் தரிக்கிறதில்லை. காலில் மரத்தால் அல்லது வைக்கோலால் செய்த பாதரட்சை தரிப்பார்கள்.

ஸ்திரீகளுடைய உடுப்பு ஆண்பிள்ளைகளுடைய உடுப்பை ஒத்திருக்கும். ஆகையால் அன்னிய தேசத்தவர்களுக்கு, இது ஆண், இது பெண் என்று தெரிந்துகொள்வது அடிக்கடி கஷ்டமாக விருக்கும். ஒரு ஜப்பானிய ஸ்திரீயினுடைய உடுப்பு 20 பவுன் வரைக்கும் விலையுள்ளதா யிருக்கலாம். சாதாரணமாய்த் தரிக்கும் உடுப்புகள் 4 பவுன் விலையுள்ளதாகும். ஒரு கூலியாளின் உடுப்பு அரைப்பவுன் விலைபெறும்.—"*N*"

# Yathartha Bhaskaran,

FOR

## God, Humanity and The Motherland.

**Vol. III.] MAY & JUNE, 1905. [Nos. 11 & 12.**

### NOTICE.

The close of the third year, has brought with it the pleasure of thanking the Patrons (India and Burmah) for the great kindness and sympathy they have shewn during the past year, in the conduct of this journal.

We take this opportunity of expressing our sincere and deepfelt gratitude to the following gentlemen for the valuable contributions they have been sending us during the past year.

1. M.R.Ry. Prof. P. Lakshmi Narasu Naidu Garu, B.A.
2. ,, C. K. Govinda Rau Avergal, B.A.
3. ,, T. S. Pichu Aiyangar Avergal, B.A., L.T.
4. ,, M. Gurusawmy Mudaliar Avergal, B.A.
5. ,, V. P. Raj Avergal, B.A.
6. ,, P. Parthasarathy Nayagar Avergal, B.A., L.T.
7. ,, Swami Vallinayagam Avergal.
8. ,, Pandit K. S. Gopala Chariar Avergal.
9. ,, S. Anavarata Venayakam Pillai Avergal, M.A., L.T.
10. ,, T. Bakthavachellam Pillai Avergal, B.A.
11. ,, M. Gopalakrishnier Avergal.
12. ,, Puvai Kalyanasundra Mudaliar Avergal.
13. ,, M. V. Govinda Chariar Avergal.
14. ,, T. P. S. Nagaratnam Pillai Avergal.
15. ,, P. Shunmugam Pillai Avergal.
16. ,, Athuvithananthan vergal.
17. The Late M.R.Ry. Srinivasa Iyer Avergal, B.A., B.L.

CHINTADRIPET, **T. Sivapatha Mudalir,**
*30th June* 1905. *Manager.*

## Our Social Work.

Hinduism takes a deeply pessimistic view of our earthly life. The idea that life is a penalty and all human activity is swayed by a mysterious *karma* of the past incarnation is sufficient to stifle all progress and to fill the mind with blank despair. But fortunately we see a change now in our view of this life. Our earthly life is now taken as a discipline and a necessary preparation for the future glory of the human spirit. The sorrows and troubles are the inevitable accompaniments of imperfect childhood striving after perfect manhood. The body is not a storehouse of evil propensities but a sacred temple of the divine spark that dwells within, or the beautiful instrument of the soul, with which it works out its mission and its destiny. There is nothing evil or bad in the creation of God. The so-called evil passions and appetites are not evil in themselves, they become evil only by misuse or abuse. Anger, given to us for self-protection against oppression and iniquity, degenerates into madness and becomes a positive evil when left uncurbed in its developmentinto malice, hatred or vengeance. And so on with the other passions. When they are kept under proper control and discipline they are our best servants, and there is nothing evil in them. This body as a divine gift should be well cherished and should be kept pure as the sanctuary of the soul. Unfortunately in India, purity and piety have become associated with asceticism and the needs of the body have been much neglected. Asceticism is not a great help either in piety or purity. A soldier who deserts his post of duty is a faithless traitor and he who deserts his post of social duty in this great civil fight of life is a traitor to God and brother man. Neither does asceticism conduce to purity of life. So to his annihilate self and sense against the cravings of the flesh is almost unnatural and what is unnatural, we may safely say,is against the will of God,for all natural laws are the manifestations of the Divine Will. I think it is temperance—I use the word in a larger sense—that is most conducive to the purity of life. Temperance in eating saves the bitter dose of physic and secures us physical health and vigour, so temperance in all concerns of our life saves many bitter regrets and many a burning tear in the end.

2. For the richest enjoyments of the great gifts of heart and mind, we must remain in society and Home is the proper field for enjoyment. Not only for enjoyment, for the necessary discipline of life too. Home is the best school where the virtues that adorn a man's life are cultivated. It is there that a man learns mutual forbearance, tolerance, sympathy,



patience, endurance, self-sacrifice and love. These are generated, exercised and perfected in that sanctuary. Without proper homes neither perfect manhood nor perfect womanhood is possible. Hence it is our first and imperative duty to keep our homes what they ought to be. And a home cannot be a home when its presiding personage is ignorant, uneducated, superstitious and has her being in total mental gloom. One that rocks the cradle it is said, rules the world. It is true, it cannot but be so. The first impression that a child takes are from its mother, the first book that a child learns is the expression of its mother's countenance. As it draws the nourishing milk from her bosom,it drinks in at the same time the chief traits of her character and conduct, her whole spirit in fact. Take history and you will find the best generals statesmen, poets, philosophers, philanthropists, divines owe their greatness to some distinguishing feature in their mothers' characters. Yes, it is the woman that rules the world. The destiny of man is inseparably bound up with that of woman; both must rise or both must sink. Both Adam and Eve must remain in paradise or both must go out of it. If Eve is driven out alone she will very soon find her way to get Adam drive himself out.

3. There is another fact to which I wish to draw your special attention. While man by his wisdom and stern justice guides this world, it is the woman who sustains the world with her love and tenderness. She, as poet Scot describes, is the ministering angel on earth. Have you ever seen a man employed in the office of a nurse in any hospital? No, you will not find any. It is her divine office and her special privilege. Why, just think for a moment about our life In our infancy and childhood, the tender love of a mother feeds us, in our manhood the devoted self-sacrificing love of the wife cherishes us, and in our declining years, stricken with infirmity and disease, the affectionate ministrations of our daughters and grand-daughters sustain the drooping soul and waft it gently in peace to the feet of God.

4. And now,I ask you Are you justified in keeping her in ignorance and darkness? Do you wish to convert those angelic beings by neglect, disrespect and cruelty into hideous friends? The woman's is a more passionate nature than man's. The feelings play there with a greater intensity and drive her to mighty achievements if properly educated or to most woeful wreck of life if misdirected. If you do not care for her, she will wreak a terrible vengeance, and already has she done so. India's physical, social and even spiritual degeneracy is due partly to the result of the tyranny of larger bones and stronger muscles.

5. Now is the time for work. We should exert all our powers in raising her to her proper level. She must be educated, respected, honoured and loved. But there are yet some who say that education only puffeth them with false pride and makes them unmindful of their domestic duties and avocations, and quote one or two unfortunate instances as a great argument in their favour. I beg leave to remind such men that the mistake lies not in education, but the imperfect training we mistake for a sound education It is neither education nor reformation that destroys all the simple habits of the oriental wife. The object of right education and right reform should be the attainment of a beautiful blending of the simplicity of an oriental wife with the enlightenment, culture, and helpfulness of an English wife. That is what we want now and for which we have to work.

6. There are some acts of cruelty which we are every day perpetrating. It is that of early marriages and unequal marriages. The child has as her birth-right and special privilege a right to enjoy till a certain age all the innocent pleasures of childhood, and we are robbing her of them by curtailing her liberties and yoking her to the duties of a wife too soon, and if she gets a child, to the duties of a parent, too soon. And as a result of early marriage, if she unfortunately happens to become a widow, we relentlessly and mercilessly consign her for no fault of hers to the tomb of—shall I say—living death. Human heart and human conscience clearly revolt against it, and strange, very strange, that they should be powerless against the demands of imperious custom and caste. Was woman made for customs and castes? But with regard to the males the custom and caste seem to be different. A man—not a creature of different flesh and blood—may, if he becomes a widower, marry once, twice, thrice and twenty times, and even with one foot in the grave, decrepit and old, he may take a sweet girl of 7 or 8 years to be a wife. And what is the result? The young wife naturally loathes his company. The young eyes can see no beauty, no charm, in the old wrinkled face, and the young burning heart feels no throb for the dead, passionless, cold heart of the old man. Can the old man hope to have a home? Yes, he has a home of stone walls, and if he has nothing else with it he must thank himself for it. Such are our customs.

7. It is high time now that we should begin to work to remove the thousand and one evils which now harass us on every side. The best way to begin is to begin at home. Love your wife and chil ren well, as a true husband and a true father should do. If you can respect your wife and if you can love and be faithful to her, it is not likely that you



will go astray, and the time-honoured, temple-sanctified prostitution, the standing disgrace of the Hindu society, will gradually die out. There is prostitution in this land because there are faithless husbands, there are cunning widowers, who while shirking the responsibilities of a married life, yet would seek ilicit gratification for their passion. These encourage prostitution and bring disgrace on the community. We cannot remove all these evils at once. There is no Hercules now to clean these Augean stables all at once. But we must work and work and work unceasingly and to the best of our abilities. The philosophy of Vedanta does not and cannot help us, the philosophy of the Brahma Samaj, the philosophy of work and self-helpfulness, is what we require. We should teach ourselves and our children four things: the first is *sincerity of life*, as no amount of mere intellectual brilliancy can ever atone for a false heart and a life of duplicity; the second is the *purity of life*, without which life is a total failure; the third is *self-sacrifice*, without which we will degenerate into the level of brutes; and the fourth is *self-helpfulness*, without which we will be disgraceful burden on society. Armed with these we shall work for truth, liberty and righteousness as the earnest and the unflinching soldiers of God. We shall walk the land with patience, fortitude and faith and make ourselves, when the call comes, worthy of the company of saints and heroes in the mansions of eternal glory.

V. P. RAJ.

## "THE LION, THE TIGER AND THE TRAVELLER."*

### சிங்கமும், புலியும், பிரயாணியும்.

ஆகா ரத்திற் காக அலைந்திடும்
வரிப்புலி ஒன்று, தான் வழியினிற் கண்ட
பாட்டை சாரிமேற் பாய்ந்து வீழ்த் தியது.
குப்புற் றவனையோர் கோளரி கண்டு
பேரா சையெனும் பேய்பிடித் துள்ள
கொடும்புலி யின்மேற் குபீரெனப் பாய்ந்தது.
ஏகமா இரண்டும் எழுப்பிய முழக்கால்
எங்கும் காடெலாம் எதிர் ஒலி ஒலித்தன.
உகிரும் பல்லும் உதிரம் உகுத்தன.
முடிவில் அரியின் மூவா வலிக்குத்
தோற்றுச் செத்தது துத்தியார் எதிரி.
செறி மயிர்ச் சடையுடை இறையை அம் மனிதன்
மண்டியிட் டுயிர்தா மன்றாடினன். அதைத்
தரும வீரச் சிங்கமும் தந்தது.
இருவரும் பின்னர் இதன்குகை சென்றதும்
அரிமா தன்னுடை அதிதியை நோக்கிப்
பின்வரும் விதமாய் பேசலுற் றதுவே :—
"நிகரில் என் வலியினை நிராகரித் துரைக்கும்
வீரத் தனமுள விலங்கெதே யுளது?
நேரிற் கண்டனை நிகழ்ந்த போரினை.
ஆதலின் என்னுடை ஆற்றலும் உரிமையும்
ஓதநீ ஆகுவை ஒருதனிச் சான்று.
தமதுழை நின்றும் தாம்துரத் துண்டே
அழிபசி வருத்தும்என் அடிமைகள் தொலையில்
தடுமா றித்திரிந் தலைந்திடும் தனியாய்
இக்கா னகத்தில் இருந்தர சாள்வேன்.
எல்லைக் கடங்கா இவ்வனம் எனதே.
கரடிகள் ஓநாய் கள்முத லான
விலங்கினம் யாவும்தம் விஞ்சிய குருதியால்
அரசுழை செந்நிறம் ஆக்கியாங் குள்ளனி.

---

* இது ஜான் கே என்னும் ஆங்கில மகாகவி இயற்றிய "The Lion, the Tiger and the Traveller" என்னும் கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு.



இருபுறக் தன்னினும் இருக்கு இப் பிணங்களும்
நிலமெலாம் வெளிறும் அந் நீள் எலும் பனைத்தும் என்
முந்திய வீரமும் செய்கையும் மொழியுமே.
இத்தாடைக்குள் எத்துணைவீழ்ந்துள?"
என்றிவை புகலலும் இயம்புவன் மனிதன் :—"யான்
கண்ட நின் னுடைவலி காட்டுத்தனமுள
விலங்கினம் வெருட்டும். மெய்மையே. ஆயினும்
நின்போல் தைரிய நிருபன் இன்னதுபோல்
பொய்க்காட் சியினிற் புகழ்ச்சிகொள் வானோ?
கள்வர்தாம் அயலார் உரிமையைக் கவர்வர்.
அன்பிற நரியன் ஆகக் கடவை.
நீதி வரம்பினுட் படுக நின் வலி
அதிகா ரப்பிரியர் ஆகிய வீரர், தாம்
பாழ்படுத் தியபல நிலங்களைப் பற்றியும்,
மடிய வீழ்த்திய மன்னுயிர்த் தொகுதியைப்
பற்றியும், பெருமை பாராட் டுவதெலாம்
ஈனப் புகழ்ச்சியே ஆகும். ஏனெனிலோ
கொள்ளைக் காரரும் கொலைபுரி வதனால்
ஆற்றல் எய்துவர். அறிவுடை அரசரோ
அன்பருள் மனங்கொண் டாளுகை புரிவர்.
என் பாற் காட்டிய இன்னிய கருணையே
அரசர்க்குரிய அறநெறியாகும்
எல்லாம் வல்ல இறைவனை,போன்று
துன்புறு வோர்க்குத் துணைநின் றுதவவே
எவரினும் இறை நினக் கிவ்வலி தந்த" தென்
றிவ்விதம் புகல, இயம்பும் விலங்கிறை :—
"தெரித்தஇச் சங்கதி தெளிவாய் உள்ளது.
போலிப் பெருமையால் பொய்நெறி புக்கதென்
இளமைப் பருவம். ஏனெனில் அடிமைத்
தனமுள என்பரி ஜனத்தொகையாகிய
மாமிசம் புசிக்கும் மாக்கள் என் ஆட்சியில்
இச்சக ராகவே இருக்கின் றூர்களால்.
நீ மிக நன்றாய் நியாயமுத் தரித்தனை.
ஆயினும் நண்ப! நீ அரண்மனைக்கண்
என்றே யாயினும் சென்றிருந் தனையோ?
ஏனெனில் என்னுடை இச்சகக் கள்வர்கள்
மனுக்குலம் புரக்கும் மன்னிய வீரரும்
என்போல் ஆள்வர் என் றிசைந்தனர்" எனவே.

M. GOPALAKISTNA AIYAR,
President, Manavar Sendamil Sangam,
&
Secy., Vivekananda Union, Madura

## An Elegy—On the demise of SURYANARAYANA SASTRIAR. B.A.

*Head Tamil Pandit, Christian College, Madras.*

காலஞ் சென்ற

பிரஹ்ம ஸ்ரீ

### வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் B. A.

அவர்களின் பிரிவாற்றாது பாடிய

## அரங்கன் மாலை.

1. சீரிய செந் தமிழோடுவான் சமயமெனும் கற்பயிரும் செழிக்கு மாறு
மாரி யென வரு "பரிதி மாற் கலைஞ" னென வோதும் மறைவல் [லோனே!
ஆரிய கோ விந்தசிவன் திருமதலாய்! அமரருல கடைந்த தென்னே?
கூரிய நன் மதியுடையாய்! சூரிய நாராயணனே! கூறாய் கூறாய்.

2. தழல் விரிக்கும் கண்ணுதனற் றமிழ் மணக்கும் தென்மதுரைத் [தலத்தைச் சார்ந்த
எழில் விரிக்கும் விளாச்சேரி இடம்விளங்க இனிதுதித்த இறையே! [கற்றைக்
குழல் விரித்துன் கொம்பனையாள் கூவியழக் குதலைமொழிக் குமர [ரோடு
சுழல் மனத்த ராய்த்தமிழோர் தாயலறச் சென்ற தென்னே?
சொல்லாய் சொல்லாய்.

3. முன்னாளிற் குறுமுனியார் வகுத்துரைத்த முத்தமிழும் முறையி [னோர்ந் தோய்!
பின்னேயுங் கற்றுணர ஒன்றுமிலை ஆதலினாற் பெரியோர் போற்ற
அந்நாளம் முனிவரர்க்கிம் முதுமொழியை அறிவுறுத்த ஆசானைப்
பொன்னார்-செஞ் சடைப் பெருமான் வாய் மொழியாக் கேட்டுணரப் [போனாய் கொல்லோ?

வேறு.

4. என்றுமிவ் வுலகில் யாரும் எள்ளிடும் கரும்பொன் றன்னைப்
பன்னரும் பைம் பொனாக்கும் பரிசன வேதி போன்றே
இன்றமிழ்ப் பெருமை யோரா திழிப்பவர் மடத்தைச் செற்ற
தன்றியும் அவரை ஆசு கவிஞரா யாக்கும் வல்லோய்!

5. மெய்யுடை யரிய கேள்வி மேலவ! தெளிந்த நூலோர்
ஐய! ஆங் கிலத்தைப் போன்றே அற்புத மாகப் பற்பல்
செய்யுளும் வசன நூலும் செந்தமிழ் நடையிற் செய்தோய்!
பொய்யுடம் பதனைநீக்கிப் புகழுடம் பெய்தினாயோ?



வேறு.

6. நாவலவர் வீற்றிருந்து கேட்ப ஓர் பா
நம் பரனே நின்று சொலச் செய்த சங்கம்
மேவிய எம் மதுரையின் மா ணவர் சங் கத்தே
விருப்புற்றே "தமிழ் மொழியின் வரலா" றெல்லாம்
பாவலவர்க் கிறை பாண்டித் துரை யின் முன்னே
பகர் "இரவி யரிப்புல" வோய் பௌவம் போர்த்த
பூவலயம் தன்னிலுனைக் காணு வண்ணம்
புகழுடையாய்! எங்கொளித்தாய்? புகலுவாயே.

7. தண்ணளியில் லாது கனம் ஸ்டூவர்ட் அந்நாள்
தமிழ்ப் பயிரை வேர் களைந்து வெந்நீருற்றக்
கண்ணி, அதற் காவனயோ சிக்கும் போதே
கண்டிடவா தேதூங்கு வோரைத் தட்டி
"எண்ணியநற் றமிழுலகீர்! அன்னையை இவ்வா
றெள்ளுத லொவ் வாதெனமே இடித்துக்கூறல்
மண்ணுலகில் நம் கடமை. மௌனத்தாலே
வரும் கெடுதி." என உரைத்த மதியாய் மிக்கோய்!

8. நன்மதியோய்! நீ நவின்ற சின்னாட் கெல்லாம்
நலங்கிளரும் சர்வ கலா சாலைச் சங்கம்
புன்மொழியாப் பைந்தமிழைப் புறம்பே தள்ளிப்
பூவுலகோர் தம் மனத்தைப் புழுங்கச் செய்ய
தென் மொழி ஓர் "உயர்தனிச்செம் மொழி" யாமாறு
"செந்தமிழ்க்" கண் நீ தெளிவாய்த் தெரித்த தோர்ந்தேம்.
நின் மொழியே நன்மொழியா நிலைப்ப தோர
நிலைத்திலேயே நீணிலத்தில் நேசர் வாழ்வே.

வேறு.

9. ஓதவரும் புகழுடையாய்! உத்தமனே! உயர் "ஞான
போதினி" யாம் செஞ்சுடராற் பூவுலகத் திருள் போக்கி
மேதினியோ ரைப்பெரிதும் மகிழ்விக்கும் மேதக்கோய்
காதலுறும் எமைநீங்கிக் கடிதகலல் கணிப்பேயோ?

வேறு.

10. முன்னாளை இம் மூதூர்புரி முழுமாதவ முனையே!
இந்நாள் தமிழ்க் குறுமோர்குறை இல்லாதற வொழிய
நன்னாடக நூல்கள்பல நல்கிப் புகழ் மல்கிப்
பொன்னாட்டை சீர்மிக்குறு புலவர்க்கரியேறே!

வெண்பா.

11. ஏனை யவரெவரும் எய்தாப் புகழுடையோய்!
"மானவிஜய" மெனும் மா நூலைத்—தேனெனவே
ஒன்னார் தமக்குதவும் உத்தமனே யாமுனையிங்
கெந்நாளிற் காண்போ மினி?

12. சோப கிருது வென்னும் தோமில் வருடத்துப்
பாபந் தவிரைப் பசிதன்னில்—நீ பயணம்
செய் தேதி பத்துடனே சேரேழாகும் மதிநாள்
நைதுயர மேபயக்கும் நாள்.

M. GOPALAKRISHNA AIYAR,
**President, Manavar Sendamil Sangam,**
AND
*Asst. Master, A. M. High School,*
**MADURA.**

## FROM SADI'S GULISTAN.

### ஸாதி முனிவர் நீதி கதைகள்.

எஹிப்து தேசத்திலே உயர்குலத்துப் பிறந்தாராய் வாலிபர் இருவரிருந்தனர். அவருள் ஒருவன் அறிவை விர்த்தி பண்ணுதலிலேயே தன்காலத்தை யெல்லாங் கழித்தான். மற்றவன் பணம் சம்பாதித்தலையே தன் வாழ்க்கைத் தொழிலாக்கொண்டான். காலக்கிரமத்தில், முந்தியவன் தன் காலத்தில் உயர்வொப்பில்லாத ஞானபண்டிதனாயினான். பிந்தியவன் எஹிப்து தேசத்து அரசனாயினான். அப்பொழுது செல்வத்தாலுயர்ந்த அரசன் ஞானத்தால் மேம்பட்ட தன் சகோதரனை இகழ்ச்சிக் குறிப்புத்தோன்ற நோக்கி "எனக்கு ஒரு அரசு கிடைத்தது. நீ முன் இருந்தபடியே வறியனாயிருக்கின்றாய்" என்றனன். அதற்கவன் "சகோதர!" எல்லாம் வல்ல கடவுளின் கருணாதிசயத்தை என்னென்றுரைப்பேன். எங்கணும் கடவுளருளே செழிப்பதாக! முனிவர்க்கெல்லாம் கொழுகொம்பாகிய ஞானத்தை நான் எய்தப்பெற்றேனே! உனக்கு எஹிப்து அரசுரிமையாகிய சம்பத்துத்தானே கிடைத்தது. இது சாமானியரும் அடைப்யபடுவதேயன்றோ? மேலும் நான் மனிதர் பயமின்றிக் காலினால் மிதித்துத்தள்ளும் பிள்ளைப்பூச்சியைப் போன்றுளேன். நான் தேள்போல என் கொடுக்கால் அவரைக் கொட்டினேனென ஒருநாளும் அவர் குறைகூறார். என்னோடுடற்பிறப்பாகிய ஈசுவரசிருஷ்டிகளில் ஒன்றுக்கும் தீங்கிழைக்காதிருக்கும் பாக்கியத்தை எனக்குக் கருணையிலீந்த இறைவனருளை வாழ்த்துதற்கு என்னொருநாப் போதுமோ?" என விடைபகர்ந்தான்.

*   *   *

கோரஸன் நகரத்துத் துருக்க ஸந்நியாஸிகள் இருவர் ஒருவர்க்கொருவர் துணையாய் ஒரு யாத்திரை போய்க்கொண்டிருந்தனர். அவருள் ஒருவர் மிதபோஜனம்கொண்டு உடம்பைக்காப்பவர். ஓரிரவுவிட்டு மற்றைய இரவுதான் அவர் உணவுகொள்வர். மற்றொரு ஸந்நியாசியோ போஜனப்பிரியர். பேராகாரமாகிய உடம்பைத்தாங்குபவர். அவர்க்கு மூன்றுமுறை ஆகாரம் கொள்ளாவிட்டால் சரிப்படுவதில்லை. இவ்விருவர் ஸந்



நியாசிகளும்பிரயாணஞ்செய்துகொண்டிருக்கும்பொழுது ஒரு நகரத்தைச் சேர்ந்தனர். நகரவாசலை யடையுமுன்னம் இவர்கள் மாறுவேஷம்பூண்டு வந்த வேவுகாரர்களென்று சந்தேகித்த காவலாளர்கள் இவர்களைப் பிடித்து ஓரிடத்தில் சிறைவைத்து அச்சிறைச்சாலை வாசலை மறைக்குமாறு மண்சுவரும் வளர்த்துவிட்டார்கள். ஒரு பக்ஷம் இவர்கள் சிறைச்சாலையில் கழித்தபிறகு நகரத்தார்க்கு உண்மை தெரியவந்தது. இவர்கள் ஏழைச்சந்நியாஸிகள், ஒருபாவமுமறியார் என்று தீர்மானித்துக் காவலாளர்க்குச் சந்நியாஸிகளை விடுவிக்குமாறு உத்தரவளிக்கப்பட்டது. சுவரை யிடித்துக் கதவைத்திறந்து பார்த்தபொழுது பலவானாகிய போஜனப்பிரியன் இறந்துகிடந்தான். அற்பாஹாரி பிழைத்திருந்ததுமன்றி தேகசௌக்கிய முடையவனாயுங் காணப்பட்டான். இக்காட்சியைக் கண்டோரெல்லாம் ஆச்சரியமெய்தினர். அப்பொழுது அக்கூட்டத்தில் நின்ற ஒரு ஞானி சொல்வான்: இதிலென்ன ஆச்சரியமிருக்கின்றது. இதற்கு நேர்மாறாக நடந்திருந்தால் ஆச்சரியந்தான். ஏனெனில் இறந்துகிடக்கின்றவன் ஒரு பெருந் தீனிக்காரன். உண்டியில்லாமையை யாற்றுதற்கு வேண்டிய பலமில்லாமல் இறந்துகிடக்கின்றான். மற்றவன் எப்பொழுதும் மிதமாகச் சாப்பிட்டுவந்தவன். வழக்கப்படி பொறுமையைக் கையாடியதனால் பிழைத்துக்கொண்டான். எவனொருவன் வழக்கமாய் மிதாஹாரியாயிருக்கின்றானோ அவனுக்குத் துன்பம் வருமாயின் அதினின்றும் அநாயாஸமாய் நீங்குவன். தன் உடலின் ஸ்திதியைக் கவனியாது கண்டமட்டும் தின்று வழக்கமானவன் துன்பத்துக்குள்ளாவானாயின் அவனுக்குச் சீக்கிரம் நாசம் வருதல் தப்பாது.

*   *   *

ஒரு கவி திருடர் கூட்டத்தின் தலைவனைக்கண்டு அவன்மீது ஒரு பாட்டுப்பாடினான். தலைவனும் கவிக்கு வெகுமதியாக "இவனைத் துணியை உரிந்துகொண்டு ஊரைவிட்டுத் துரத்துக" என்று ஆஞ்ஞாபித்தான். நிர்வாணியான கவி குளிர்தாங்கமாட்டாது உடல் நடுநடுங்கப் போய்க்கொண்டிருக்கையில் ஊர் நாய்கள் குலைத்துக்கொண்டு அவனைத்தொடர்ந்தன. நாய்களை யடித்துத்துரத்த எண்ணிக் கீழேகுனிந்து ஒரு கல்லை எடுக்க எத்தனித்தான் கவி. தரை பனியால் நன்றாக உறைந்திருந்ததால் கவிக்கு இன்னசெய்வதென்று தோன்றவில்லை. உடனே அவன் "இவ்வூர்க்காரரென்ன கெட்டபோக்கிரிகளாயிருக்கின்றார்கள். நாய்களையும் அவிழ்த்துவிட்டு கல்லுகளையும் கட்டிவிட்டார்கள்." என்று வெறுப்போடு புகன்றான். இதைத் தன் ஜன்னலிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த திருடர் தலைவன் கவியினுடைய சாதுர்ய வார்த்தைக்காக அகமகிழ்ந்து அவனையருகே அழைத்து "சிறந்தபண்டிதனே! உனக்கு வேண்டிய வரமொன்றைக்கேள்" என்று கருணையோடு சொல்லினன். கவியோ "நீ கொடுக்கலாம் என்று நிச்சயமாகச் சொல்வாயாயின் என் ஆடைகளைக் கொடுத்தால் போதும். என்னைச் சும்மாபோகவிட்டால் அதுவே ஆயிரம் வரங்கட்குச் சமமாம். "மாந்தர் மற்றையோரிடத்துத் தானத்தை யபேக்ஷிக்கின்றனர். யான் உன்னிடத்துத் தானமொன்றையும் விரும்பவில்லை. தீங்குசெய்யாதிருப்பாயாயின் அமையும்" என்று

பதிலளித்தான். திருடர் தலைவனுக்கு மனம்இரங்கியது. கவியினுடைய ஆடைகளைத் திருப்பிக்கொடுத்ததோடு உயர்ந்த கம்பளமொன்றும் கொஞ்சம் பணமும் வெகுமதியாகக் கொடுத்தான்.

* * *

நேத்ரரோகத்தால் வருந்திக்கொண்டிருந்த ஒருவன் சிகிற்சை செய்து கொள்ளக்கருதி அசுவவைத்தியனொருவனைச் சார்ந்து, 'என் ரோகத்திற்கு ஏதாவது வைத்தியஞ்செய்யவேண்டும்' என்றான். அசுவவைத்தியனோ தான் நாற்கால் மிருகங்களுக்குச்செய்யும் பிரயோகங்களை இவன் விஷயத்திலும் காண்பித்தான். இவனுக்குக் கண்கள் குருடாயின. இவ்விருவர்க்குள்ளும் வாதம்உண்டாகி நீதிபதியிடத்துப்போய் முறையிட்டனர். நீதிபதியும் 'இம்மனிதனுக்கு மீட்சியில்லை. குதிரைகளுக்கும் கழுதைகளுக்கும் வைத்தியஞ்செய்பவனிடத்துப்போய் மருந்து போட்டுக்கொள்ள இவன் ஒரு கழுதைதானே!' என்று தீர்ப்புச்செய்தார். இச்சிறு கதையால் நாம் அறிவதென்ன? ஒரு முக்கியமான விஷயத்தைச் செய்யவேண்டிய அவசியம் நேர்ந்தபொழுது அநுபவமில்லாதவனொருவனிடத்து அவ்விஷயத்தை யொப்பித்தால் அவமானமொன்றுமோ சம்பவிப்பது, நல்லோர் அவனை அறிவில்லாத பேதையென்றிகழ்வர்." புத்திசாலியாயிருப்பவன் தெள்ளிய அறிவைப்பெற்றவன் முக்கியமானகாரியங்களை அற்பசாமர்த்தியமுடையாரிடத்து ஒப்பிக்கமாட்டான். பாய்முடைபவன் கைக்கோளன்தான்; எனினும் அவனைப்பட்டு நெய்யுமிடத்து நியமிப்பரோ?"

* * *

நியாயபாரங்கதரொருவர்க்கு அவலக்ஷணத்தில் பேர்போன பெண்ணொன்றிருந்தனள். குழந்தைப் பருவமுதிர்ந்து மணஞ்செய்யும் பருவத்தை யடைந்தாள். அவள்பிதா கொடுப்பதாகச்சொல்லியஸ்திரீதனம், செல்வம் எவ்வளவு பெரிதாயினும் யாவரும் அவளைக் கைப்பற்ற விரும்பவில்லை. இயற்கையில் அழகில்லாத பெண்ணின்மீது ஆபரணங்களைச்சொரிந்தபோதிலும் அது அவலக்ஷணத்தைத்தானே அதிகப்படுத்திக்காட்டும். கடைசியாக ஒருகுருடனைத் தேடிக்கண்டு அப்பெண்ணுக்கு விவாகஞ்செய்து முடித்தனர். கொஞ்சக்காலத்திற்கெல்லாம் இலங்கையிலிருந்து பேர்போனவைத்தியன் ஒருவன் வந்தானாம். அவனுக்குக்குருட்டினை நீக்குஞ்சாமர்த்தியம் உண்டாம். அண்டையயலார் நியாயவாதியிடத்து வந்து "தங்கள் மாப்பிள்ளைக்கு வைத்தியஞ் செய்து கொள்ளலாமே" என்றார்கள். அவர், "எனக்கு அவ்விஷயத்தில் இஷ்டமில்லை. ஏனென்றால் வைத்தியன் சாமர்த்தியத்தால் இவன்கண்கள் செவ்வையாகக்கூடும், அப்பொழுது என் பெண்கதி என்னவது? "அவலக்ஷண கன்னிகைக்கு அந்தகனே கணவன்."

* * *

புத்திசாலியான வாலிபனொருவன் சர்வசாஸ்த்ரங்களிலும் கலைஞானங்களிலும் பயின்று மிக்க பண்டிதனாயினான். அவ்வளவு கல்விக்குத்தக்க அடக்கமும் பெற்றிருந்தான். பண்டிதர்கூடிய சபைகளுக்கு அடிக்கடி அவன்போவதுண்டு, ஆயினும் ஒருசமயமாவது அவன்வாயைத்திறந்



திருப்பதேயில்லை. ஒருநாள் அவன் பிதா அவனைநோக்கி, "மகனே, வாதத்தில்பேசும் விஷயத்தைக் குறித்து உன் அபிப்பிராயத்தை நீயும் ஏன் சொல்லக் கூடாது" என்று கேட்டான். அதற்கு மறுமொழியாக மகனும், "எங்கே எனக்குத்தெரியர்த விஷயத்தைக் குறித்துக்கேட்டு என்னை அவமானப்படுத்தி விடுவார்களோ என்றஞ்சுகின்றேன்" என்றான். மேலும் ஒருபெரியோர் தன் பாதரக்ஷைக்கு ஆணியடித்துக் கொண்டிருந்தார். குதிரைச் சேவகன் ஒருவன் அவரைத் துணியைப் பிடித்துப் பற்றிக்கொண்டு 'வாரும், வாரும், என்குதிரைக்கு லாடந்தைக்கவேண்டும்' என்று நிர்ப்பந்தித்தான். ஆதலால் வாயை மூடிக்கொண்டு அமைதியாயிருக்கும்வரை ஒருவம்புமில்லை, வாயைத்திறந்துவிட்டால் தொல்லைதான்.

S. ANAVARATAVINAYAKAM PILLAI.

## இராமாயண சாஸ்திரி கதை.

முன்னொருகாலத்தில் தென்சேசத்தில் திருமழபாடியென்னும் சிவஸ்தலத்தில் திருநீலகண்டசாஸ்திரி யென்னுமோர் புரோகிதனிருந்தான். அவன் மிகவும் ஏழையாதலால் வெகுநாளாய்ப் பிரமச்சாரியாயிருந்து கடைசியாய் அறுபதுவயது ஆனபின்பு சஷ்டி பூர்த்தி செய்வதோடு ஒரு எளிய பிராமணப்பெண்ணைத் தான் யாசகஞ்செய்து சம்பாதித்த திரவியமெல்லாங்கொடுத்து மணமியற்றினான். பின்பு கொஞ்சக்காலத்திற்கெல்லாம் தெய்வகடாக்ஷத்தால் ஓர் ஆண் பிள்ளை பிறந்தது. அவ்விருத்தப் பிராமணன் தன்னைப் புத்தென்னும் நரகத்தினின்றும் மீட்பதற்குப் புத்திர சம்பத்து உண்டாயிற்றென்று ஆனந்தபரவசமாகி, சுபதினம்பார்த்து, அப்பிள்ளைக்கு சிவநேசசாஸ்திரியென்று நாமகரணமிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அக்குழந்தையை வளர்த்து வந்தான். அந்தப்பிள்ளையின் ஜாதகத்தைப்பார்க்க, அதிககல்வியும் ஐஸ்வரியமுமுண்டாகு மென்றும், பிதுர்ஸ்தானம் பலத்திருப்பதால் தனக்கும் தன்மனைவிக்கும் சீக்கிரத்தில் முடிவுநேரிடாதென்றும் அறிந்து மிகச்சந்தோஷமாய் யாசகமெடுத்து ஜீவனம் செய்துகொண்டிருந்தான். இப்படியிருக்க, "நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்கும்" என்பதற்கேற்க, அக்குழந்தைக்கு ஐந்துவயதானவுடனே, திருநீலகண்டசாஸ்திரியேதோ ஒரு காரணத்தால் தேகவியோகமானான். அவன்மனைவி அதிபால்யத்தில் விதவையானதைக் குறித்து வெகுவாகத் துயரப்பட்டு, யாதொரு ஆதரவு மின்றித் தன்மகனாகிய சிவநேசசாஸ்திரியை யழைத்துக்கொண்டு, அவ்வூருக்கருகாமையிலுள்ள பஞ்சநதக்ஷேத்திரமாகிய திருவையாறு என்னுமூருக்குவந்து, அங்கிருந்த ஓர் தருமப்பாடசாலையில் தன் புத்திரனைக் கல்வி கற்கும்படிவிட்டுத் தானொரு வீட்டில் வேலைசெய்து ஜீவனம் பண்ணிக்கொண்டு வந்தாள்.

இப்படியிருக்குங்காலத்தில் அவ்வாலிபனும் அதிகபுத்தி சாதுரியமாய் சமஸ்கிருதபாஷையையும் தமிழ்ப்பாஷையும் நன்றாயெழுதவாசிக்கக் கற்றுக்கொண்டு பதினைந்து வயதிற்குள் புராணமுதலானவை பிரசங்கம் செய்யும் சமர்த்துடையவனானான். பின்பு இவ்வாலிபன் கல்விகற்பதைநிறுத்திவிட்டுத் தானும் தன் தாயும் தனியேயிருக்கவேண்டுமென்னும் அபேட்சையினால், அன்றுமுதல் பாரதம் இராமாயணம் முதலிய கதைகளை இராவேளைகளில் ஒரு கோவில் வாசலில் உட்கார்ந்து அங்கு வருகிற பெண்பிள்ளைகளுக்கும், கல்வியறிவில்லா முழுமூடர்களுக்குஞ் சொல்லி, அவர்கள் கொடுக்கிற சொற்பவரும்படியைக்கொண்டு ஜீவனம் பண்ணிக்கொண்டு வந்தான். இஃதன்றியும் ஐப்பசிமாதத்தில் துலாஸ்நானம் செய்யும்படி காவேரியாற்றுக்குப் போகிறவர்கள் கேட்கும்படியவர்களுக்குத் துலாக்காவேரிபுராணமுஞ் சொல்லுவது வழக்கம். அப்படிச்சொல்லும்போது ஸ்நானத்திற்குப்போகிற பெண்கள், அரிசி காய்கறி பதார்த்தங்கள் கொண்டுவந்து இப்பிராமணச் சிறுவன் தனக்கருகாமையில் விரித்து வைத்திருக்கும் வஸ்திரத்தில் போடுவதுண்டு. அப்பதார்த்தங்களையெடுத்துக்கொண்டுபோய்த் தன் தாயிடங்கொடுக்க, அவள் அவைகளை வாங்கி வெவ்வேறாய்ப் பொறுக்கி பாகம் பண்ணுவாள்.

இப்படித்தினந்தோறும் அவன் கொண்டுவருகிற அரிசி காய்கறி பதார்த்தங்களை வெவ்வேறாய்ப் பிரிப்பது அவளுக்கு மிகவுங்கஷ்டமாயிருந்தபடியால், ஒரு நாள் தன்மகனைப்பார்த்து "அப்பா, குழந்தாய், நீ புராணம் சொல்லும்போது காய்கறி பதார்த்தங்கள் கொண்டுவந்து போடுகிற புண்ணியவான்களை வெவ்வேறாய்ப் போடச்சொல்லக்கூடாதா? அவைகளை வெவ்வேறாய்ப் பிரிப்பதிலேயே எனக்குப் பொழுதெல்லாம் கழிந்து விடுகிறதே" என்றாள். இதைக்கேட்ட அப்பிராமணச் சிறுவன் அப்படியேயாகட்டுமென்று தன் தாய்க்குச் சொல்லி, மறுநாட்காலையிலெழுந்து, காவேரிக்குச் சமீபத்தில் தான் புராணம் சொல்லும் இடத்திற்குப்போய்த் தன் ஆசனத்திலுட்கார்ந்து தனக்கெதிரே தன் வஸ்திரத்தை விரித்து, ஜனங்கள் ஸ்நானத்திற்கு வருகிற சமயம்பார்த்து புராணத்தைக் கையிலெடுத்துக்கொண்டு "இப்படியாகக் காவேரியம்மாள் மேற்கேயிருந்து கிழக்கேவருகிற காலத்தில் தன்னிருபக்கத்திலும், படுகைகளிலும், வயல்களிலுமுள்ள, பாகல் அவரை, புடலை, கத்தரிமுதலிய செடி கொடிகளையும், நெல், கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானியப்பயிர்களையும் அழித்து நாசமாக்கிக்கொண்டு வருகிறாளாம். ஏன் அப்படி வருகிறாளென்றாலோ, அவைகள் முன்ஜென்மத்தில் பாகற்காயை பாகற்காயோடு போடாமலும், புடலங்காயை புடலங்காயோடு போடாமலும், அரிசியை அரிசியோடு போடாமலும், பிராமணனுக்கு வருத்தத்தை யுண்டு பண்ணின பாவிகளுடையவைகளாம். ஆகையால், ஓ ஜனங்களே! நீங்கள் அரிசியை அரிசியோடுபோடுங்கள், கத்தரிக்காயை கத்தரிக்காயோடு போடுங்கள்" என்று புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது போல் வாசித்தான். இதைச் செவியுற்ற அறிவீனர்களாகிய ஜனங்கள் அவன்சொல்லியது உண்மையெனநம்பி, அவ்வாறே காய்கறி பதார்த்தங்



களை வெவ்வேறாய்ப்போட்டார்கள். அவைகளையெடுத்துக்கொண்டுபோய்த் தன் தாயிடத்திற்கொடுத்துத் தான் செய்த தந்திரத்தைச் சொல்ல, அவள் அதைக்கேட்டு மகிழ்ந்து, தன்புத்திரன் சாமர்த்தியத்தை வியந்து, "அப்பா, என் அருமைக்குழந்தாய்! கண்ணைக் கொடுத்ததெய்வம் மதியைக்கொடுக்காதா! நீ சிறுவயதிலேயே உன் தகப்பனை யிழந்தாயானாலும் நீ அதிசூட்சும புத்தியுள்ளவனாயிருத்தல் கடவுளுடைய கிருபைதான்" என்றுசொல்லித் தன்மகனை மார்போடணைத்து முத்தமிட்டு ஆனந்தமடைந்தாள். தன் தாய் சொல்லியதைக்கேட்டு பூரிப்படைந்து, அதுமுதல் தனக்கு ஆகவேண்டியகாரியங்களை யெல்லாம் புராணத்திலிருப்பது போலவே வாசித்து ஜனங்களை யேமாற்றுவதில் கைதேர்ந்தவனானான்.

இப்படியிருக்கு நாளில் ஒருநாள் பிரசங்கம்செய்யும்பொழுது பிராமணர்களைப்பற்றி வெகுவாய்ப்புகழ்ந்து பேசிப், பிராமணர்களுக்குதவி செய்பவர்கள் ஒரு அற்ப உதவிசெய்த போதிலும் கோடீஸ்வரராவார்கள்; அவர்கள் செய்த பாவமெல்லாம் அடியோடு தீப்புகுந்த காடுபோல் அழிந்து போகும்; பிராமணர்களுக்கு ஒருவேளை போஜனத்திற்கு வழி பண்ணினவர்களுக்குப் பிரமஹத்தி முதலிய மகாபாதகங்களைச் செய்த போதிலும், நரகமே யில்லையென்று பிரசங்கித்தான். இதை கேட்டுக்கொண்டிருந்த ஒரு திருடன், நல்லது, நாம் வெகு காலமாய்த்திருடுவதனாலேயே ஜீவனம் செய்துகொண்டு வருகிறோமே; இன்னும் திருட்டுத்தொழிலே நமக்கு ஜீவனமாயிருக்கிறதே; நாம் செய்த பாவத்தையெல்லாம் போக்கவெகு சுலபமானவழி இப்புராணிகர்சொல்லுகிறாரே யென்று தனக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு, அவன் கையிலிருந்தபணம் சில வழிந்து விட்டபடியாலும், அவன் பிறவூராகையாலும், கடன்வாங்க அவனுக்குப்பழக்கமானவர்கள் அவ்வூரில் இல்லாததினாலும், அன்றிரவில் ஊரடங்கியபின் அக்கிரகாரத்திற்குப்போய் ஒரு சிறு வீடிருக்கக்கண்டு, அதிற் கன்னமிட்டுள்ளே நுழைந்து அங்குள்ள சொத்துக்களையெல்லாம் கைப்பற்றி வெளியே ஓடித் தப்பிவிட்டான். அவன் கன்னமிட்ட வீடு அப்புராணிகன் வீடாதலால், அப்பிராமணன் பொழுதுவிடிந்தபின் வீட்டிற் களவுபோயிருப்பதைக் கண்டு ஏக்கமுற்று, நாம் எத்தனையோபெயரை ஏய்த்தோமோ, இப்பொழுது கள்வன் நம்மை ஏய்த்துவிட்டானேயென்று துக்கப்பட்டு, ஆயினும் நம்முடைய புராணமும், அதைக் கேட்பதற்குப் பேதைப் பெண்களும் உள்ளவரையில் நமக்கு யாதொரு குறைவுமில்லையென்று தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, மறுநாட்காலையில் வழக்கம்போலவே தன் புராணத்தை யெடுத்துப்போய் தன்னிருப்பிடத்திலிருந்து வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்தத் திருடனும் அவனிடத்திற்போய், அவன் பிராமணனுக் குதவிசெய்தால் பாவமெல்லாம் பறந்தோடும் என்று சொல்லுகிற சமயத்தில், தான் அன்றிரவு திருடின சொத்துக்களில் பொன்கட்டிய உத்திராட்சம் ஒன்றை யப்பிராமணன் விரித்திருந்த வஸ்திரத்திற் போட்டான். அதைக்கண்ட பௌராணிகன் திடுக்கிட்டு ஓகோ இது நம்முடையதல்லவா! நமதுவீட்டில் இராத்திரி களவுசெய்தவன் இவனாய்த்தானிருக்கவேண்டுமென்று எண்ணி

''அப்பா இதேது? திருட்டுச்சொத்தாய்த் தோன்றுகிறதே! பிராமணன் சொத்தை யபகரிப்பவர்கள் இரௌரவ நரகத்தை யடைவார்கள் என்று சாத்திர மிருக்கின்றதே'' யென்றான். அதற்கு அந்தக்கள்வன் அந்நரக பயத்தை விலக்குவதற்காகவே உமக்கு இந்த உருத்திராட்சத்தைத் தானஞ்செய்தேன்; ஏனெனில், பிராமணனுக்கு அற்ப உபகாரம் பண்ணினாலும் பண்ணினவர்களுக்கு யாதொரு நரகபயமு மில்லை யென்று புராணத்தில் வாசித்தீரே'' என்று சொன்னான். பிராமணன் புராணத்தி லிருப்பதை விட்டுப் பேராசையினால் பொய் சொன்னதினாலல்லவோ நமக்கிக்கதி நேரிட்டது; ஆயினும் தண்டப்பிரயோகம் செய்யாமல் சொத்தை மட்டும் கவர்ந்தனனே யென்று மனதைச் சற்றுத் தேற்றிக்கொண்டு இனி அவ்வூரிலிருக்கலாகாது என்று தன் தாயை யழைத்துக்கொண்டு வடக்கே சென்னைநகரை நோக்கிச் சென்றான்.

இவ்வாறு வருகிற வழியால் அனேக ஊர்களுக்குப்போய் அங்கே இராமாயணம் பாரதம் முதலிய புராணங்களைப் பிரசங்கித்து யாசகம் செய்து கடைசியாய்ச் சென்னை நகருக்கு வந்து அவ்விடத்திற் பெரிய தனக் காரர்கள் யாரென்றறிந்து அவர்களிடத்திற்போய்த், தான் தென்தேசத்துப் பௌராணிகனென்றும், இராமாயணம் பாரதம் முதலிய புராணப் பிரசங்கத்தில் கைதேர்ந்தவனென்றும் சொன்னான். அதைக் கேட்டு அவர்கள் மகிழ்ந்து தென்தேசத்திலிருந்து இராமாயண சாஸ்திரியார் வந்திருக்கிறாரென்று ஊரெங்குக் தெரிவித்து, அனேக கனவான்கள் வீட்டில் காலக்ஷேபம் செய்யும்படி யேற்பாடு பண்ணி, இவனுக்காக அனேக சமாராதனை முதலியவைகளெல்லாம் செய்து, அவனைக் கனப்படுத்தினார்கள்.

இவ்வாறு சிலநாட் கழிந்தபின்பு, சாஸ்திரி யாவருக்கும் பொதுவான ஒரு இடத்தில் இராமாயணக் கதையை பிரசங்கிக்க வேண்டுமென்று அபேட்சைகொண்டு, ஓர் பெரிய வீட்டுத் தெருப்புறத்தில் மேடைபோட்டு, அதில் பலவிதமான அலங்காரங்களெல்லாம் செய்து, இராமர்படம் ஒன்றைவைத்து, அதற்குச்சமீபத்தில் சாஸ்திரியாருக்கோர் ஆசனமும், பக்கத்தில் புஸ்தகம் வாசிப்போனுக்கோர் ஆசனமும் போட்டு, இராமாயணக்கதையை நல்ல சுபதினம் பார்த்து ஆரம்பித்தான்.

அன்றுமுதல் சென்னைநகர் முழுதும் இராமாயண சாஸ்திரியார் பெயர் பரவியது. தினந்தோறும் அவன் பிரசங்கத்தைக்கேட்க அனேக பெண்களும் ஆண்களும் கூட்டம் கூட்டமாய் வந்து கேட்டு மகிழ்ந்து, அவனுக்கு தட்சணையாக விசேஷ திரவியங்களையும் அரிசி பருப்பு முதலியவைகளையுங் கொடுத்து, அவனுக்கு நமஸ்காரம் செய்வார்கள் அவனுக்கு வரும்படி ஜாஸ்தியாக வர ஆரம்பித்தது.

இந்தப்பிரகாரம் நாள்தோறும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வரும்பொழுது, ஒருதினக்கூலிக்காரனும் ஆதிமுதல் மிக விசுவாசத்துடன் இவ்விராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டு, அப்பிராமணன சொல்லுவதெல்லாம் உண்மையென்றே நினைத்துத் தினந்தோறும் தவறாமல் வந்து கேட்பது வழக்கம். ஒருநாள் இராமயணத்தில், அயோத்தியா